அகிலத்திரட்டு
அம்மானை.

இஃது

சாஸ்தாங்கோவில்விளை ஊர்

பொ. முத்துக்குட்டி சுவாமியவர்களால்

இயற்றப்பெற்று

ஷை யூர்

மு. ச. பால்வர்ணநாதன் சுவாமியார்,

மகன்

பா. தங்கையா நாடார்

இவர்களால் அச்சிலியற்றப்பெற்றது.

[Registered]

1128

கலைமகள் பிரஸ், வடக்கன்குளம்.

ஸ்ரீ அய்யா துணை.

முகவுரை

இதனை சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில், ஆயிரத்தி யெட்டாவது ஆண்டு எனது பாட்டன் பொ. முத்துக்குட்டி சுவாமி மனு அவதாரமாயிருந்தார். அதற்குமேல் அவர் திருச்செந்தூர் சென்று சமுத்திரத்துக்குள் மூன்று நாளிருந்து விஞ்சை பெற்று உடன் நாராயண சுவாமியெனப் புவியில் வந்துதித்தார். உடன் பூவண்டன்தோப்பில் ஆறு வருஷம் தவமிருந்து தண்ணீரும், மண்ணும் ஈந்து சகலமான நோய்களும் தீர்த்து, சான்றோருக்குப் புத்திசொல்லி, மன்னன் சோதனைகளித்து, சப்தமாதர்களை மணம் முடித்து, பேய் பிசாசுகளுக்குக் கொடுத்த வாக்கை வாங்கி, பேயை எரித்து, முன்னால் ஆறு யுகம் முடித்து, கலியுகத்தில் வைகுண்ட சுவாமி செய்த அற்புதத் திருவிளையாடல்களைப்பற்றி எழுதவென்றால் விரிவாகுமென்று சுருக்கமாக விளக்கினேன். ஷை இந்த அகிலத்திரட்டு நூல் உற்பத்தி விபரம் ஆயிரத்தி பதினெட்டாவது ஆண்டு கார்த்திகை மாசம் இருபத்தியேழாம் உ இரவு நாராயண சுவாமி அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அகிலத்திரட்டை அரும் பிரயாசையுடன் பெரும் பொருள் செலவிட்டு நாராயண சுவாமி உத்தரவைப்பெற்று, ஏட்டிலிருப்பதுபோல் சுத்தப் பதிப்பாக அச்சுப் பிழையில்லாமல் ஏட்டிலிருக்கிற காவியத்தில் ஒன்றாவது குறைபடாமல் சகல ஏட்டு பிரதிகளினத்தையும் பரிசோதனை செய்து, பால்வர்ணநாதன் சுவாமியாரால் பிழை பார்த்து அச்சிலியற்றியது. ஷை நாராயண சுவாமி பூலோகத்தில் வந்துதித்து அவர் செய்த திருவிளையாடல்களைப் பற்றி ஆகம சா[illegible] ஒன்று ஏற்பட்டிருக்கிறதாக அறிந்தவர்கள் பெரும் சொற்பமாக இருக்கிறார்கள். ஆதலால் இந்த ஆகமத்தை எல்லோரும் பிரமல் எளிதாக வாசிக்கறியும்பொருட்டு இரண்டு பாகமாக அச்சிட்டு இருக்கிறேன். ஆகலால் இந்த ஆகமத்தை அரி பக்தர்கள் எல்லோ[illegible] வாங்கி வாசித்தும், கேட்டும், வருங்காலம், சென்றகாலம் நிகழ் என்ற மூன்று காலத்தில் நடக்கிற சகல சங்கதிகளையும் அறிந்து [illegible] ஐஸ்வரியத்துடன் இஷ்ட சித்திகளைப் பெற்று, பின் அழியாத வைகுண்ட பதவி அடைவீர்களென்று சுவாமி உத்தரவு.

இப்படிக்கு, இதை எழுதிய,

மு. ச. பால்வர்ணநாதன் சுவாமியார்

இந்த அகிலத்திரட்டை வாசிக்கிறபொழுது, ஸ்நானம் செ[illegible] புலால் உணவை நீக்கி, தாம்பூலம் தரிக்காமல், பரிசுத்தமான இடத்தில் வைத்து வாசிக்க வேண்டும். இந்த அகிலத்திரட்டை பரிசுத்தமான இடத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தப் புஸ்தகம் வாங்கப் பிரியப்படுவோர்
கீழே காணும் விலாசத்திற்கு எழுதவும்

பொ. மு. ச. பால்வர்ணநாதன் சுவாமியார்
மகன், தங்கையா நாடார்,
சாஸ்தாங்கோவில்விளை ஊர்,
மைலாடிப் போஸ்டு.

22—9—1127. (தாமரைகுளம் அஞ்சல்) நாகர்கோவில்.

அய்யா துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் சாக்ஷாத் ஸ்ரீமன் நாராயண சுவாமி அவர்கள் மனு அவதாரமாக பூவண்டன் கோப்பில் வந்துதித்து, ஏழு அம்மையார்களை மணம் முடித்தார். அதில் முதல் அம்மையாருடைய பேர் ஞானதான சாஸ்திரக் கன்னி. அந்த அம்மையாருக்கு சடயாண்டியென்று ஒரு புதல்வன் பிறந்தார். அவருடைய சேஷ்ட புதல்வர் பொ. மு. ச. பால்வர்ணநாதன் சுவாமி அவர்களால் பிழை திருத்தப்பெற்றும், ஷை பால்வர்ணநாதன் சுவாமியார் தல்வர் தங்கையா நாடார் பொருளுதவியின் பேரில் இரண்டு ாகமாக அச்சியிலேற்றி இருக்கிறது. இந்நூலை வேறு யாராது என்னுடைய உத்தரவில்லாமல் அச்சிடவோ, இதில் டங்கிய அம்சங்களை வேறுபடுத்தி அச்சிடுவோராகில், ?7-வது வருஷத்தில் 25-வது ஆக்ட்டின் 20-வது பிரிவு து உட்பிரிவின்படி யான் கோரும் நஷ்டத்திற்கு ஜவாப்தாரி வதுடன், கிரிமினல்க்கும், தெய்வ சிட்சைக்கும் பாத்தியமாவார்கள் என்பதை இதன் மூலமாய்த் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு

பா. தங்கையா நாடார்

அய்யா துணை

சாற்றுக்கவி.

பரப்பொருளாய்நிறைந்த நாராயணரைப்போற்றி
பார்பெரியநாரணனார் தன்கதையைப்பாட
காரணமாய்க்கார்மேகம் எங்கும்தானாய்த்தோன்ற
கண்மணியினடுவான கருணை தன்னைப்போற்றி
காரணமாய்கலி தன்னில்வந்துதித்த
நாரணனை அனுதினமும் அறிவாய்போற்றி
அகாரமென்னும்மறையபாறுசாஸ்திரத்தை மனதிலுன்னி
மகத்தானமறையோனை போற்றிசெய்து
அரும்பொருள் ஆகமத்தை அருள்பெற்றோதினேனே
கார்மேகவண்ணனது கருணைபூத்துமன்றநான்கின்முன்னைமேவ
பரம்பூத்தநாரணனும் ஓர்வடிவமானேன்
தசமூன்றும்ஒன்றும்ஒன்றாய் பூத்துவைகுண்டமோர்வடிவு
மானேன்.
செயல்பூத்ததிருவருள் செய்திங்குநின்றாய்
பார்பூத்தசேரவளநாட்டில்மேவும் மனுபூத்தபூவண்டன்தோப்
பிலுதித்தாய்
நின்னருள்பூத்த பால்வர்ணசுவாமியானும்
கரம்பூத்தமலர்க்கொண்டே கருத்தில்வையும்
காரணமாய்நிறைந்தகுரு மலர்தாள்போற்றி
புகலுகிறேன் அகிலரத்தின சுருக்கந்தன்னை
நாரணர்தன் அருளைப்பெற்று
சீர்பெறவேசெக சோதிதன்னருளினாலே
செகத்திலுள்ளமனுவோர்க்கும் அன்புள்ளோர்க்கும்
எளிதிலுரை அறிவதற்காய் இயற்றினேன்
புஸ்தகத்தில் இன்னூல் நவின்றிட்டேன் நாரணர்
தன்னருளைப்போற்றி தங்கையா நாடார்
பொருளீந்துரை பகர்ந்தேனின்னூல்

நாராயணசுவாமி துணை.

அகிலத் திரட்டு அம்மானை.

முதற்பாகம்.

ஏரணியுமாயோன் இவ்வுலகில் தவசுபண்ணி
காரணம்போல்செய்தகதை கட்டுரைக்க பூரணமாய்
ஆராய்ந்துபாட அடியேன்சொல் தமிழ்க்குதவி
நாராயணர்பாதம்நாவினில் பாண்டவர்தமக்காய்த்தோன்றி
பகைதனைமுடித்துமாயோன் வென்றிமகலியன்வந்த
விசனத்தால்கைலையேகிச் சான்றவர்தமக்காயிந்த்
தாரணியில்வந்தநியாயம் ஆண்டவர் அருளிச்செய்ய
அம்மானையெழுதலுற்றேன் சிவமேசிவமேசிவமணியே
தெய்வமுதலேசிதம்பரமே தவமேதவமேதவக்கொழுந்தே
தாண்டவசங்காரத்தியே யெங்களுடபவமேபவமே
பலநாளுஞ்செய்த பவமறுத்துன்னகமேவைத்
தெங்களையாழ்க்கொள்ளுவாய் சிவசிவசிவசிவ
அரகரா அரகரா அலையிலேதுயிலாதிவராகவா
ஆயிரத்தெட்டாண்டினிலோர்பிள்ளை சிலையிலேபொன்மகர
வயிற்றினுள்செல்லப்பேற்று திரிச்சம்பதிதனில்
மலையிலேபொன்மகரப்பாலை உமிழ்ந்துபின்னுற்றதெச்சணம்
மீதிலிருந்துதான் உலகில்சோதனைபார்த்தவர்
வையந்தரின்உவமைசொல்ல உகத்தர்மமாகுமே
திருமொழிசீதையாள்க்கு சினதலம்
புகழுமெங்கும்ஒருபிள்ளை உருவாய்த்தோன்றி
யிகபரசோதனைகள்பார்த்து திருமுடிசூடிதர்மசீமையில்
செங்கோலேந்தி ஒருமொழியதற்குள்ளாண்ட
உவமையையுரைக்கலுற்றார்.——அய்யா துணை

நடை

சிவமேசிவமே சிவமேசிவமணியே
தவமேதவமே தவமேதவப்பொருளே
சீரானகன்னி செய்குமரிநன்னாட்டில்
பாரானதெட்சணமே பரமனுறுதலத்தில்
பேர்மேனிமாயன் பிறந்துதவம்புரிந்து
ஓர்மேனிச்சாதி ஒக்கவரவழைத்து
நன்னியாய்நாளாறு நாலுபத்தெட்டஇலேய்
தண்ணீரால்தீர்த்த தர்மதுதானதையும்
செய்திருந்தன்மை தீங்குகலிக்கண்டிருந்து
வயதுமுகிந்தகலி மாளவந்தவாறுகளும்

முன்னுக்குரோணி முச்சூரனுடல் துணித்து
பின்னிரணியனை பிழந்துயிரு கூறாக்கி
ஈரஞ்சுசென்னி இராட்சதனையுஞ் செயித்து
வீரஞ்செய்மூர்க்கர் விடைதவிர்த்தே துவாரா
தேசாதிதேசர் சென்னிகவிழ்ந்தே பணியும்
தீசாதியான திரியோதனன் முதலாய்
அவ்யுகத்திலுள்ள அனைவோரையும்வருத்தி
எவ்வுகமுங்காணா தேசக்கண்டமேகி
பொல்லாதநீசன பொருளறியாமாபாவி
கல்லாதகட்டன் கடக்கலியுகத்தில்
வம்பாலனியாயம் மகாதேவ கொண்டேகி
அம்பாரிமக்களுக் காகயிரக்கமதாய்
அறுகரத்தோன்வாழும் ஆழிக்கரையாண்டி
நூறுகரத்தோனை நாராயணமூர்த்தி
உருவெடுத்துநாமும் உலகமேழுந்தழைக்க
திருவெடுத்தகோலஞ் சிவனாரருள்புரிய
ஈசனருள்புரிய இறையோனருள்புரிய
மாயனருள்புரிய மாதுமருள்புரிய
பூமாதுநாமாது புவிமாதுபோர்மாது
நாமா லட்சிமியும நன்றாயருள்புரிய
சரசுபதிமாதே தண்டாளமாமணியே
அரசுக்கினிதிருத்தும் ஆத்தாளே அம்பிகையே
ஈரேழுலகும இரட்சித்தவுத்தமியே
பாரேழுமாளந்த பரமேசுரித்தாயே
பத்துசிரசுடைய பாவிதனைச் செயிக்க
மத்துநிகரான வாய்த்ததசரதர்க்கு
சேயாயுதிக்கச் செடமெடுத்ததுபோலே
மாயாதிகுச்சமனுவாய் கலியுகத்தில்
பிறந்துவாறேன்மேல் பெரியதவம்புரிந்து
சிறந்தகுழலாள் சீதைசிறையதுபோல்
இருந்த சொரூபமதும் இமகூச்சவற்பதமும்
மருந்தாகத்தண்ணீர்மண் வைத்தியங்கள்செய்ததுவும்
தர்மவைத்தியமாய் தாரணியிலுள்ளோர்க்கு
கர்மமதுதீரக் கணக்கெடுத்துப்பார்த்ததுவும்
ஏகாபுரிக்கணக்கும யேழுயுகக்கணக்கும்
மகாளிமக்கள் வைகுண்டர்பாதமதை
கண்டுதொழுததுவும் கைகெட்டிச்சேவிப்பதுவும்
தொண்டராகச்சான்றோர் சூழ்ந்துநின்றவாறதுவும்
பண்டாரவேசம பத்தினியாள்பெற்றமக்கள்
கொண்டாடிநன்றாய்க் குளித்துத்துவைத்ததுவும்
கண்டுமாபாவி கலைத்து அடித்ததுவும்
சாணாரினத்தில் சுவாமிவந்தாரென்றவரை
வீணாட்டமாக வீறுசெய்தநாயமதும்
மனிதரோசுவாமி வம்பென்றுதாடித்து

தனுவறியாப்பாவி தடியிரும்பிலிட்டதுவும்
அன்புபார்த்தெடுத்து ஆளடிமைகொண்டதுவும்
வம்பையழித்துயுகம் வைகுண்டந்தானாகி
எல்லாயிடும்பும் இறையுமிகத்தவிர்த்து
சொல்லொன்றால்நாதன் தொல்புவியையாண்டதுவும்
நாலுமூணுகணக்கு நடுத்தீர்க்கநாமமதும்
மேலெதிரியில்லாமல் வினையில்லாதாண்டதுவும்
இன்னாள்விபரமெல்லாம் யெடுத்துவியாகாரரும்
முன்னாள்மொழிந்த முறைநூல்ப்படியாலே
நாரணரும்வந்து நடத்தும்வளமைதன்னை
காரணமாயெழுதிக் கதையாய்ப்படித்தோர்க்கு
ஒய்யாரமாக உள்வினைநோய் தீருமென்று
அய்யாவுமிக்கதயை அருளுகிறான்போரே
பேயையெரித்தும் புதுமைமிகச்செய்ததுவும்
ஆயர்குலத்தை ஆளாக்கிக்கொண்டதுவும்
சான்றோர்குலத்தை தற்காத்துக்கொண்டதுவும்
நீண்டபுகழ் தர்மம் நிறுத்தி அரசாண்டதுவும்
பத்தும்பெரிய பாலருக்காகவேண்டி
சத்தளியும்பாவி தடியிரும்பிலுமிருந்து
படுத்தினபாடெல்லாம் பாலருக்காகப்பொறுத்து
உடுத்ததுணிகளைந்து ஒருதுகிலைத்தானவருத்தி
தேவஸ்திரீகளையுஞ் சேர்த்தெடுத்துப்பாலருக்காய்
பாவக்கலியுகத்தில் பாராத்தியங்கள்பட்டு
நாலுபிறவி நானிலத்திலேபிறந்து
பாலுகுடித்தாண்டி பறுபதத்தின்மேல்தாண்டி
மனுக்கண்காணாமல் மறைந்தொருமூன்றுநாளாய்
தானுந்தவமதுவாய் சாயூச்சியமேபுரிந்து
நல்லோரையெழுப்பி நாலுவரமுங்கொடுத்து
பொல்லாரைநரகில் போட்டுக்கதவடைத்து
வானமிடியால் மலைகளிழகிடவும்
காளமதுநாடாய் கண்டதுவுஞ்சூரியனும்
தெக்குவடக்காய்ச் திசைமாறிநின்றிடவும்
ஒக்கவேநாதன் உரைக்கிறான்போரே
அய்யாவுரைக்க அன்போர்கள் தங்கள்முன்னே
மெய்யாயெழுதி விதிப்பேறென்பதெல்லாம்
ஆனைநடைகண்டு அன்றில்நடையதாக்கும்
சேனைசரிவதென்னச் சிற்றெறும்புபற்றியென்ன
குயில்கூவக்கண்டு கூகைக்குரலாமோ
மயிலாடக்கண்டு வான்கோழியாடினதேன்
மடந்தைதீதனிக்கள் வைத்தரசமறிந்து
கடந்தைதாடேற்றுங் கதைபோலேயானடியேன்
நாலுமூணுயுகமும் நடுத்தீர்க்கவந்தபிரான்
மேலொன்றிருக்கத்தனை யெழுதுவேனென்றதொக்கும்
எம்பிரானை இறையோனருள்புரிய

தம்பிரான் சொல்லத் தமியேனெழுதுகிறேன்
எழுதுவேனென்றதெல்லாம் ஈசனருள் செயலால்.
பழுதொன்றும்வாராமல் பரமேசொரிகாக்க
ஈசன்மகனே இயல்வாய்யிக்கதைக்கு
தோசமகலச் சூழாமல்வல்வினைகள்
காலைக்கிரகங் கர்மசஞ்சலமானதும்
வாலைக்குருவே வாராமலேயாளும்

தெச்சணுபுதுமை

காருமடியேன் கௌவைவினை தீர
வாருமடியேன் மனதுள் குடிகொள்ளவே
தர்மயுகமாக்கித் தாரணியையாளுதற்கு
கர்மக்கலியில் கடவுளார்வந்தகதை
சாகாதிருக்கும் தர்ம அன்புள்ளோர்முன்
வாகாகத் தர்ம அம்மானை தான்வகுத்தார்
வகுத்தபரமனுக்கும் மாதாபிதாவுக்கும்
தொகுத்தகுருவதுக்குந் தோத்திரந்தோத்திரமே
தோத்திரமென்று சுவாமிதனைத் தொழுது
இராத்திரிதூக்கம் நாணைத்திருக்கையிலே
ஆண்டான ஆண்டு ஆயிரத்துப்பதினொன்றில்
கண்டானைக்கண்டேன் கார்த்திகைமாதமதில்
தெய்தியிருபத்தேழில் சிறந்தவெள்ளிநாளையிலே
சுருதியுடனித்திரையில் சுபக்கியானலக்கனமதில்.
நாதனென்றனில் நலமாகவந்திருந்து
சீதமுடனெழுப்பிச் சொன்னாரேகாரணத்தை
காப்பிலொருசீர் கனிவாய்மிகத்திறந்து
தார்ப்பிரியமாகச் சாத்திரெம்பெருமாள்
மகனேயிவ்வாய்மொழியை வகுத்தெங்காண்டமதுக்கு
உகமேமாறிய உரைநீமுதல்க்காப்பாய்
அதின்மேல்நடப்புன் னுள்ளேயகமிருந்து
சரிசமதாய்நான்வகுப்பேன் தானெழுது காண்டமதை
நானுரைக்க நீயெழுதி நாடுபதினாலறிய
யானுரைக்க நீயெழுதி அன்போர்கள் தங்கள்முன்னே
வாசிக்கக்கேட்டு மகிழ்ந்திருந்த அன்போர்க்கு
பூசித்துநின்ற பூரணங்கள்கிட்டுமடா
பழித்தோர் நகைத்தோர் பதிலெதிரியாய்ப்பறைந்தோர்
களித்தோர்வறுமைகண்டு கடுநரகம்புக்கிடுவார்
மலடியுமிக்கதையை மாவிருப்பத்தோடிணங்கி
குலமளந்தோனை நாடி தான்கேள்ப்பாளாமாகில்
என்றனை பார்பதியாளீஸ்பரியுந் தன்றனை
உன்றனை மதலை யுடனேகிடைக்குமடா
குட்டமதுகொண்டோர் குணமாவைத்துக்கேட்பீரால்
திட்டமதுசொன்னோம் தீருந்திருவாணை
நாராயணரும் நல்லதிருச்செந்தூரில்

பாரோர்கள்மெய்க்கப் பள்ளிகொண்டங்கிருந்து
ஆண்டாயிரத்து அவென்றலக்கமதில்
நலைருனமாசி நாளான காலையிலே
சான்றோர்வளரும் தாமரையூர் நல்பதியில்
மூன்றுனசோதி யுறைந்திருந்தெதச்சணத்தில்
வந்திருந்தநல்ப்பதியின் வளமைகேளம்மானே
மூவாதிமூவருறைந்திருக்கும் தெச்சணமே

சீமையினியல்பு.

தேவாதிதேவர் திருக்கூட்டத்தெச்சணமே
வேதப்புரோசி விளங்கிருந்த தெச்சணமே
நாதாந்தவேதம் நாடுகின்ற தெச்சணமே
அகத்திசுரரும் அமர்ந்திருக்கும் தெச்சணமே
மகத்தானமாமுனிவர் வாழுகின்ற தெச்சணமே
தாணுமால் வேதன்றுமிருக்கும் தெச்சணமே
ஆறுவஞ்சேர்காளி யமர்ந்திருக்கும் தெச்சணமே
தோசமிகுகர்மம் துலைக்குகின்ற தெச்சணமே
நீசவினைதீர நீராடும் தெச்சணமே
மாதுகுமரி மகிழ்ந்திருக்கும் தெச்சணமே
பாறுபடவு பரிந்துநிற்கும் தெச்சணமே
ஆனைபடைகள் அலங்கரிக்கும் தெச்சணமே
சேனைபடைத்தளங்கள் சேருகின்ற தெச்சணமே
ஆகமக்கூத்து ஆடுகின்ற தெச்சணமே
பார்வதியாள்வந்து பரிந்திருந்த தெச்சணமே
சீர்பதியையீசன் செய்திருந்த தெச்சணமே
மாயனுய்த்தோன்றி வந்திருந்த தெச்சணமே
ஆயனூர்க்கூத்தாடுகின்ற தெச்சணமே
தெச்சணத்தின் புதுமை செப்பமுடியாது
அச்சமில்லாப்பூமி அடவுகேளம்மானே.

விருத்தம்

கச்சணிதனத்தாளோடு கரமிடத்தண்ணலீசர்
பச்சமால் முனிவர்தேவர் பதுமலக்கமலதேவி
நிச்சயமானகன்னி நிறைந்திடும் பூமியான
தெச்சணபுதுமைசொல்லிச் சீமையினியல்புஞ் சொல்வாம்

நடை

பின்னைமலர்காவில் பொறிவண்டியல்பாட
அன்னமது குதித்தாராடுஞ் சோலைகளும்
கன்னல்கதலி கரும்பு பலர்ச்சுளையும்
என்னேரமும்பெருகி யிலங்கிநிற்குஞ் சோலைகளும்
எங்கெங்கும் நாதமிடுகின்ற பேரொலியும்
பொங்குங்கதிரோன் பூமேல்குடை நிறைய
நந்தாவனம் பூத்து நகரிமணம்வீச
செந்தாமரைபூத்துச் செலம்பு மணம்வீச

அரகராவென்று அபயமிடுமொலியும்
சிவசிவாவென்று துதிக்கின்ற பேரொலியும்
மடியில்பணம்போட்டும் மார்குத்தும் பேரொலியும்

சீமையின் தர்மநீதம்

முடியும்மடியில்லா முதலோனைப் போற்றொலியும்
முத்தாலேபாண்டி முதல்மடவா ராடொலியும்
மத்தாலேமோரு மடமடென்ற பேரொலியும்
சமுத்திரத்துமுத்து தான்கரையில் சேருவதும்
குமுத்திரளாய்ப்பெண்கள் குரவையிடுமொலியும்
சங்கீதமேளந் தாரேறும் வாலையமும்
மங்களகீதம் வகுக்குகின்ற வாலையமும்
காரணவேதக் கல்விமொழியாலமும்
வாரணத்தின்மீதில் வரும் பவனியாரபமும்
மாவேறிவீதி வரும் பவனிவீதிகளும்
கூரையிலேமுத்துக்குலை சாய்க்கும் கன்னல்களும்
பாதையிலே பார்ப்பார்க்கு பைம்பொன்னளிப்பாரும்
அன்னமிடுசாலைகள் தோராலயங்கள் வைப்பாரும்
சொர்ணமளித்து சொருசுபெற நிப்பாரும்
சிவனே சிவனேயெனச் சிவகருத்தாய் நிப்பாரும்
தவமே பெரிதெனவே தவநிலைகள் செய்வாரும்
கோவிந்தாவென்று குருபூசை செய்வாரும்
நாவிந்தையாக நால்வேதம் பார்ப்பாரும்
மாரிபொழியு மாதமொன்று மூன்றுதரம்
ஏரிபெருகி யோடிக்க மள்ளரெல்லாம்
நாத்துநடும்பரசி நளினமிகச் சொல்லொலியும்
கூத்துவொலியுங் குருபூசை தன்னொலியும்
எப்பாலெல்லாம்புகழும் யேகாபதியதுபோல்
தப்பாதெச்சணத்தின் றன்மையிதம்மானை.

விருத்தம்

காமனை எரித்தயீசன் சுளவிணை மறவாவண்ணம்
பூமணை குழலாள்கன்னி பொருந்திடும் நகரியான
சீமையின்குணமுஞ்சொல்லிச் சிறந்திடும் பூமிதன்னில்
நேமவர்தர்மஞாய நிலைதனைநிகழ்த்துவாரே

நடை

ஆதிப்பொருளை யனுதினமுந்தர்ந்தேக்கி
சோதியுடநீதஞ் சொல்லுவேனம்மானை
தெய்வமனுநீதம் தேசராசநீதம்
மெய்யருந்துமநீதம் விளம்புவேனம்மானை
ஆயிரத்தெட்டுவான திருப்பதிக்கும்
வாயிதமாய்ப்பூசை வருப்பு முடங்காது
கோயில் கிணறு குளங்கரைகளானதையும்

தெய்வநீதம்.

தேய்வுவராதே சேருமதில்கோட்டைகளும்
எளியோர் வலியோரென்றெண்ணி மிகப்பாராமல்
களிகூரநனூய்க் கண்டவழக்கேயுரைப்பார்
அன்னமடம்வைத் தகங்களிகூர
என்னேரம் பிச்சை இடுவார் எளியோர்க்கு
பந்தலிட்டுத்தண்ணீர் பக்தர் தமக்களிப்பார்
எந்தயிரவும் இருந்து பிச்சையீவாரும்
ஆறிலொருகடமை அசையாமல் தான்வேண்டி
தேறியேசோழன் சிமையரசாண்டிருந்தான்
சிவாயநமவென்ற சிவவேதமல்லாது
சுவாயமாய்ச்சொல்ல கருத்தறிய மாட்டார்கள்
ஆறிலொருகடமை அதுதரவே மாட்டோமென்று
மாறெவர்சொன்னால் மன்னன்மறுத்தே தகேளான்
பன்னிரண்டு ஆண்டு பரிவாய் இறையிறுத்தால்
பின்னரண்டாண்டு பொறுக்கிறை தாருமென்பார்
இவ்வகையாய்சோழன் ராஜியத்தை ஆண்டிருந்தான்
அவ்வகையாய்ச்சோழன் ஆண்டிருக்கும் நாளையிலே
மெய்யறிவுகொண்ட மேலான் பதத்தெளிவோன்
தெய்வத்திருநிலைமை செப்புவேனம்மானை

விருத்தம்

இவ்வகையர்கச் சோழனிருந்து ராஜியத்தையாள
கவ்வைகளில்லாவண்ணம கலியுகம் வாழும்நாளில்
செவ்வகை திருவேயான திருவுளக்கிருபைகூர்ந்து
தெய்வமெய்நீதம்வந்த செய்தியை செலுத்துவாரே

நடை

வாரமதில்லாமல் மன்னன் அதிசோழன்
நீதமாய்பூமி நிறுத்திமரசாளுகையில்
கண்டுவேதாவும் கமலத்திருமகளும்
நின்றுதெய்வரும் நாராயணரும்மெச்சி
அன்றந்தமாமுனிவர் எல்லோரும்தான்கூடி
சென்றுசிவனார் திருப்பாதம் தெண்டனிட்டு
சாகாதிருக்கும் சமூலத்திருப்பொருளே
ஏகாபரனே எங்கும்நிறைந்தோனே
மூலப்பொருளே முதல்பொருளே காரணமே
சாலப்பொருளே தவத்தோரரும்பொருளே
காரணரேவேதா நாடிப்பெரும்பேரில்
காரணரே நீருங்கரைல் கம்பமானேரே
ஆலமுகருந்தி யாவையுமிகவுரித்து
கோலத்திருக்கழுத்தில் கோர்வையாயிட்டோனே
ஆனைதனையுரித்து அங்கமெல்லாம்புனைந்து

மாதேனந்தியகரனே மழுவேந்தியசிவனே
கோனேனந்திருகிரியில் குடியிருக்குங்கோவே
தானேயிருக்குந் தவமேதவப்பொருளே
ஆதியாய்நின்ற அதியதிருமுதலே
சோதியே சோழன் சொல்நெறியைக் கேளுமையா
வாடிவந்தபச்சினுக்கு வாளாலவனுடம்பை
தேடிவந்தவேடனுக்கு துடையரிந்தீந்தவன்காண்
ஆறிலொருகடமை அவன்வேண்டிற்றுனனவே
மாறியவன்புவியோர் மனதில்கவலைகளில்லை
கோவில்சிவாலயங்கள் குளங்கூபம்வாவிகளும்
சேவித்தனுதினமுஞ் செய்வானைதானதர்மம்
ஆதலால்சோழன் அரசாளுஞ்சீமையிலே
நீதமாய்த்தெய்வம் நிலைநிறுத்தவேணுமையா
என்றுமிகத்தேவர் இறஞ்சித்தொழுதிடவே
கண்டிருந்தயீசர் கரியமாலோடுரைப்பார்
நல்லதுகாண மாயவரே நாட்டைமிகக்காக்க
வல்லவனேபூமா தேவிதனைவருத்தும்
வருணன்றனையழைநீ மாதமும்மாரிபெய்ய
கருணைக்குடைவிரிக்க கங்குல்தனையழையும்
வாசியதுபூவாய் வளங்கவாவழையும்
தோசிமறலியையும் சொல்லிவிலக்கிடுநீ
குருபூசைசெய்யுங் கூட்டமதில்ச்சிவமாய்
திருவீற்றிருக்கச் செய்திடுநீகோலமது
நித்திராதேவி நித்தமந்தப்பூமியிலே
மத்திபமாய்க்காக்க வையென்றுரீசுரரும்
நினைத்தோர்க்குறுதி நினைவிலறிவுதோன்றி
எனைத்தோத்திரங்கள் இளகாமல்வையுமென்றார்
பன்றியோடேகடுவாய் பாவித்திருந்திடவும்
அன்றிலோடேகுயிலும் அன்புற்றிருந்திடவும்
கிரியும்பாம்பும் கிளைபோல்குழைந்திடவும்
வாரிகுளம்போல் வரம்பிலேநின்றிடவும்
இட்டவிரைகளிரெட்டுக் கண்டிடவும்
பட்டிமுயலும் பண்புற்றிருந்திடவும்
பசுவும்புலியும்வொருபக்கம் நீருண்டிடவும்
கசுவுங்கரைபுரள கரும்புமுத்தீன்றிடவும்
சாஸ்திரவேதஞ் சமையம்வழுகாமல்

மனுநீதம்

சூத்திரமாகத் துல்லியப்படுத்திடவும்
மனுவோர்தழைத்து மக்களொருகோடிபெற்று
இனிதாகநாமு மிறவாதிருக்கவென்றும்
சந்திரசூரியர்கள் தட்டுமிகமாறுமல்
இந்திரருந்தேவரிறஞ்சித் தொழுதிடவும்
தானதவங்கள் தப்பிமிகப்போகாமல்

ஈனமில்லாமலித் தெய்வநீதமெல்லாம்
மானம்நிறுத்திவையென்றுரீசுரரும்

விருத்தம்

இப்படித்தெய்வநீத ஈசுரரிதுவேகூற
செப்படிமறவாவண்ணந் திருமருகோனுஞ்செய்தார்
அப்படித்தவருநீத அம்புவிதனிலேவாழ
மல்ப்பணிகுழலார்தங்கள் மனுனெறிவகுத்தார்தானே

நடை

தெய்வநிலைமை செப்பியபின்றேசமதில்
நெய்நீதப்பெண்கள் நிலைமைகேளம்மானே
கணவன்மொழியக் கலவுமொழிபேசாத
துணைவிநிலைமை சொல்லுவேனம்மானே
கல்க்கதவுபோலே கற்புமனக்கதவு
தொல்க்கதவுஞானத் திறவுகோலம்மானே
அன்பாகப்பெற்ற அன்னைபிதாவதுக்கும்
முன்பானசோதி முறைபோலுறவாடி
போற்றியேநித்தம் பூசித்தனுதினமும்
சாற்றியசொல்லைத் தவருமலேமொழிவாள
அரசன்றுயில ஆராட்டிவோராட்டி
காமானது கடவிக் கால்தடவிநின்றிடுவாள்
துயின்றதறிந்து துஞ்சுவாள்மங்கையரும்
மயன்ற்றவொருச்சாமம் மங்கையெழுந்திருந்து
முகத்துநீரிட்டு நான்முகத்தோனையுந்தொழுது
அகத்துத்தெருமுத்த மலங்காரமாய்ப்பெருக்கி
பகுத்தாகநித்தம் பாரிப்பார்பெண்ணோர்கள்
மனுநீதஞ்சொல்லி வகுக்கமுடியாது
கனியானபெண்கள் கற்புநிலைமாறுமல்
வழியானசாதி வளமைகேளம்மானே
சான்றோர்முதலாய்ச் சக்கிலியன்வரையும்
உண்டானசாதி வொக்கவொருயினம்போல்
தங்கள் தங்கள்நிலைமை தப்பிமிகப்போகாமல்
திங்கள்மும்மாரி சிறந்தோங்கியேவாள
செல்வம்பெருகச் சிவநிலமைமாறுமல்
அல்வல்தினஞ்செய் தன்புற்றிருந்தனராம்
தான்பெரிதென்று தப்புமிகச்செய்யாமல்
வான்பெரிதென்று மகிழ்ந்திருந்தாரம்மானே
ஒருவர்க்கொருவ ருழியங்கள்செய்யாமல்

கைலை வளம்

கருதல்சிவன்பேரில் கருத்தாயிருந்தனராம்
செய்யும்வழக்குச் சிவன்பேரிலல்லாது
வையம்வழக்கு வாராதேயிருந்தார்
அடிபணியவென்று அலச்சல்மிகச்செய்யாமல்

சூடிபொருந்திவாழ்ந்து குடியிருந்தாரம்மானை
சேயினுடஆட்டுச் செவிசேட்டிருப்பதல்லவேல்
பேயினுடஆட்டோர் பூதரபிரமதிருந்தார்
இந்தப்படிமனுவோ ரெல்லாமிருந்துவொரு
விந்துக்கொடிபோல் வீற்றிருந்தாரம்மானை

விருத்தம்

இப்படித்தெய்வ இராச்சியநீதமும்
மல்ப்படித்தேச மனுவுடநீதமும
நல்ப்புடன்றேசம் நாடிவாழ்வதை
கல்ப்புரீசர் கண்டுமகிழ்ந்தனர்

நடை

முத்தானசிமை மூன்றுநீதத்தோடு
பத்தாசைமாகப் பண்பாய்த்தழைத்திடவே
நாலானவேதம் நல்லகலியுகமாய்
மேலாம்பரமாய் விளங்கியிருந்திடவே
தேவருரையும் திருக்கயிலை தன்வளமை
பாவலர்கள்முன்னே பாடினாரம்மானை
ஈசருரையும் மிரத்தினகிரிதனிலே
வாசவனுந்தேவர் மறையோரும் வீற்றிருக்க
பொன்னம்பலநாதர் பொருந்திருக்குமண்டபமும்
கின்னரர்கள்வேதம் கிளர்த்துகின்றமண்டபமும்
வேதப்புரோகி விளங்குகின்றமண்டமும்
சீதவுமையாள் சிறந்திலங்குமண்டபமும்
நீதத்திருமால் நிறைந்திலங்குமண்டபமும்
ஆதவனுஞ்சந்திரனும் அவதரிக்குமண்டபமும்
வேதாவுருத்திரனும வீற்றிருக்குமண்டபமும்
ஆருமறிந்து அளவிடக்கூடாத
பாருபடைத்த பரமேசுரனை
விசுவாசமேலோர் விமலனடிவணங்கி
வசுவாசுதேமன் வந்துமிகவணங்க
மறைவேதசாஸ்திரங்கள் வந்துமலரோனடிவணங்க
இறவாததேவ ரிறஞ்சிமிகவணங்க
யமதர்மராசனெப்போதும் வந்துநிற்க
பூகமழும்வேதம் புரோகிதர்வந்துதெண்டனிட
காமதேவன்முதலாய்க் கணக்கர்மிகுமுனிவர்
நாமநெடியோன்பதத்தை நாடோறும்போற்றிநிற்க
தலைவனிருக்குந் தங்கத்திருக்கயிலை
நிலைமையெடுத்துரைக்க நிலையாதுவம்மானை

விருத்தம்

ஆறுசெஞ்சடைசூடியவய்யனார்
அமர்ந்துவாழுங்கயிலை வளமதை
வாறுவாறு வகுக்கமுடிந்திடா
மகிழுங்குண்டவளஞ் சொல்லிடப்புறம்

கூறக்கூறக்குறைறவில்லைக்காணுமே
கொன்றைசூடிய அண்டர்திருப்பதம்
வேறுவேறு விளம்பவேகேளுங்கோ
மெய்யுள்ளோராகிய வேதஅன்பரே

நடை

கயிலைவளமை கட்டுரைக்கக்கூடாது
அகிலம்வளமை யருளுகிறேனம்மானை
தேவாதிதேவர் திருக்கூட்டமாயிருக்க
மூவாதிமூவர் மிக்கவொருமிக்கவொரு
சிங்காசனத்தில் சிறந்திருக்கும்வேளையிலே
மங்காததேவி மாதுதிரு லட்சுமியாள்
ஈரேழுலகு மிரட்சித்த வுத்தமியாள்
பாரேழும்படைத்த பரம திருலட்சுமியாள்
நன்றுமெழுந்திருந்து நாராயணர் பதத்தை
தெண்டனிட்டு லட்சிமியும் செப்புவாளம்மானை
தேவரீரென்னைத் திருகல்யாணமுகித்து
கோவரிகுண்டக் குடியிருப்பிலேயிருத்தி
போகுவதென்ன புதுமையெனக்கறிய
தேவரீர் நீர்தான் செப்பிடீரெனவுரைத்தாள
பின்னுமந்த லெட்சுமியாள் பெருமாள்தனைத்தொழுது
என்றுமிருக்க யிறவாதிருப்போனே
ஆதியால்சூட்ச மளவெடுக்கக்கூடாத
நாதியாய்நின்ற நாராயணப்பொருளே
தேவாதிக்கெல்லாம் திருமுதல்லாய்நின்றோனே
மூவாதிக்கெல்லாம் முதன்மையாய் நின்றோனே
உமக்குயெதிரி யுலகமதிலுண்டோகாண்
தமக்கெதிரிவந்த தன்மை மிகவுரையும்
யுகத்துக்குகம்பிறந் துலகிடத்திலேயிருக்க
அகத்துவந்ஞாயம் அருளுமென்றாளம்மானை
என்றுதிருவும் ஈதுரைக்கமாயவரும்
நன்றுநன்றென்று நாராயணருரைப்பார்
சத்திசிவமுந் தானுதித்த காலமதில்
எத்திசையும் நாமிருபேர் பிறப்பதிலும்
ருத்திரருமயே சுரருதித்த நாளதிலும்
பத்தியுள்ளதேவர் பரநாதர் நாளதிலும்
வானோர்கள்தெய்வார் மறைவேத-சாஸ்த்திரமும்
ஈனமாய்ச்சண்டனிவன் பிறந்த நாளதிலும்
ஆதித்தன்வாயு வண்டபிண்டந் தோன்றியபின்
ஈதுத்தகாலம் ராச்சியமொன்றுண்டு கண்டாய்
அவ்வுகத்தைதக்கண் டாதிபிரமா மகிழ்ந்து
இவ்வுகத்துநாம் மென்னவிடுவோமென்று
மாலும்பிரமாவும் மாயாதிருப்போனும்
ஆலோசித்து ஆகமத்தைதத்தான்பார்த்து
நீடியயுகமெனவே நியமித்துறுதிகொண்டு

தேடியமுப்பொருளும் செப்பினர்காணம்மானை
அவ்வுகத்தைதாசனுர்ப்பரித்த காலமதில்
இவ்வுகத்துக்காரை இருத்துவோமென்றுசொல்லி
எல்லோருங்கூடி யிதமித்தாரம்மானை
தில்லையாரீசன் திருவேள்விதான் வளர்க்க
நல்லையாவேள்வி நன்ருய்வளர்த்திடவே
பிறந்தான்கூரொணி பெரியமலைபோலே
அறந்தானறியா அனியாயக்கேடனுமாய்
பிண்டம்நிறையும் பொல்லாதான் தன்னுடம்பு
அண்டமமைய அவன் பிறந்தானம்மானை
முகங்கண்களெல்லாம் முதுகு பிறமேலாட
நகக்கரங்கள்கோடி கால்களொருகோடி
தவங்களறியாச் சண்டித்தடிமோடன்
குரோணியவனுயரங்கோடி நாலுமுழமாய்
கைலைகிடுகிடென்னுங் கால்மாறி வைக்கயிலே
அயிலங்கிடுகிடென்னும் அவனெழுந்தாலம்மானை
இப்படியேகுரோணி என்றவொரு அசுரன்
மெப்படியேநீடிய யுகத்திலிருந்தான்காண்
இருந்துசிலநாள் இவன்றூங்கித்தான்விழித்து
அருந்தும்பசியால் வனுயர்ந்து பார்ப்பளவில்
பாருகங்காணுன் பலபேருடல்காணுன
வாருதிரைநீரை வாரிவிழுங்கினன்காண்
கடல்நீரத்தனையுங் கடைவாய் நனையாமல்
குடலெல்லாமெத்தக் கொதிக்குதெனவெகுண்டு
அகிலமுழுங்க ஆர்ப்பரித்து நிர்ப்பளவில்
கைலைதனைக்கண்டு கண்கள்மிகக்கொண்டாடி
ஆவியெடுத்து அவன்விழுங்குமப்போது
தாவிக்குதித்துத் தப்பினூர் மாயவரும்
மாயவரும்வோடி மண்ணுலகம்புகுந்து
தூயவாநமங்கே சிவனை மிகநினைத்து
தவசிருந்தார்காண் தாமோதரனும்
தவசுதனிலீசன் சன்னியாசி போலேவந்து
ஆருநீயிந்த ஆழவனந்தனிலே
ஏதுநீ தவசு யெனைநினைந்தவாறேது
என்றுசன்ஞசி இதுவுரைக்க மாயவரும்
பண்டுபட்டபாட்டைப் பகர்ந்தாரவரோடே
கைலையுமலோகங் கரைக்கண்டர் சத்திவரை
அகிலமதைக்குரோணி யசுரனென்றமாபாவி
விழுங்கினன்நானும் உபாயமாய்த் தப்பிவந்தேன்.
பளிங்குமலைநாதன் பாரத்தேவாதிமுதல்
பண்டுபோல்நாளும் பதியிலிருந்திடவே
என்றுங்கைலை இலங்கியிருந்திடவும்
முன்றுசெய்தபாவி முகமுமவனுடம்பும்
துண்டாறதாக தொல்புவியிலிட்டிடவும்

கண்டகண்டமாய்ப்போடக் கடியவரமெனக்கு
தண்டமிழீர்சீரும் தரவேதவசிருந்தேன்
என்றுதிருமா லெடுத்துரைக்கவேயீசர்
மன்றுதனையழந்த மாலோடுரைக்கலுற்ரூர்
கேளாய்நீவிஷ்ணுவே கேடன்குறோணிதனை
தூளாக்கியாறு துண்டமதுவாக்கி
விட்டெறிந்தால் அவனுதிரம் மேலுமொருயுகத்தில்
கெட்டுக்கிழையாய்க் கொடியசூரக்குலமாய்
பிறக்குமவனுதிரம் பொல்லாதான்றனுடம்பு
துண்டமொன்றுதானும் தொல்புவியிலேகடிய
குண்டோமசாலியனாய்க் குவலயத்திலேபிறப்பான்
அப்படியேகுரோணி அவனுதிரமானதுவும்
இப்படியேயாறு யுகத்துக்கவனுடம்பு
வந்துபிறப்பான்காண் மாத்தாணுயுந்தனுக்கு
யுகத்துக்குகமே உத்தமனாய் நீபிறந்து
அகத்துக்கவன்பிறப்பாறு யுகமதிலும்
உண்டுமவன் சீவனுயிரழிவு வந்து அன்னாள்
பண்டுநடுக்கேட்டுப் பாவியவனுயிரை
கொன்றுபோட்டே நரகக்குழிதாக்க நாள்வருங்காண்
என்றுவிடைகொடுத்தார் ஈசுரர்காணம்மானை
அன்றுவிடைவேண்டி அதிகதிருமாலும்
குன்றுபோல்வந்த கொடியபடுபாவி
குறோணிதனைச்செயிக்க கோபம்வெகுண்டெழுந்து
சுரோணிதவேதன் துடியாய் நடந்தனராம்
நாகத்தணைகடந்த நாராயணமூர்த்தி
வேகத்தால் குறோணிதனை வெட்டிப்பிழக்கலுற்ரூர்
வெட்டினாராறு மிகுதுண்டமம்மானை
துண்டமதாறுந் தொல்புவியிலேபோட்டு
பிண்டமதைச்சுமந்து போட்டனர்காணம்மானை
அந்தக்குறோணி அவனுதிரமானதையும்
கொந்துகொந்தாக குளம்போலே குண்டுவெட்டி
உதிரமதைவிட்டு உயர்ந்தபீடம்போட்டு
சதிர்யுகமெனவே தான்வகுத்தாரோர்பீடத்தை
அவ்வுகத்திலேயுதிரம் அசுரர்க்குலமாகி
முவ்வுகத்துப்பாவி முடிந்தவொரு துண்டமதை
குண்டோமசாலி என்வேகொடியவனாய
பண்டோர்குறோணி பாதக ஆறுதுண்டமதில்
வந்துபிறந்தான் சதிரவையகத்திலம்மானை
முந்துபிறந்த முழுமோசமான்திலும்
மந்துமுகமாய் மாபாவிதன்னுயிரை
நானூறுயிரமுழங்கள் நாடுமவனகரங்கள்
முன்னூறு கால்கை வேள்கள்துதிபோலே
உடைதோளுடம்பு உருவறியாமாபாவி
படைத்தோனையறியான் பாரியென்றுந்தானறியான்

அட்டைபோலேசுருண்டு அம்மிபோலேகிடப்பான்
மட்டைபோலேதிரிவான் வயிறுமிகப்பசித்தால்
அன்னுகத்திலுள்ள அசுரக்குலங்களையும்
தன்வயிற்றுக்கிட்டு தடிபோலுருண்டிடுவான்
இப்படியேநாளுமிவன் குலங்களானதெல்லாம்
அப்படியேதின்றவன் பசிகளாற்றாமல்
அய்யையோவென்றலறினன் காணம்மானை
மெய்யையனை விறுமாவதுகேட்டு

சதிரயுகம் குண்டோமசாலி பாடு

சிவனைத்தொழுது சொல்லுவாரம்மானை
தவமேதவப்பொருளே தாண்டவசங்காரவனே
எவனெவொருத்தனிட்ட சத்தமானதிலே
தவலோகமெல்லாந் தானலேவதேதெனவே
மாயனதுகேட்க வகுப்பாரங்கீசுரரும்
ஆயனேநீயுமறியலேயோ ஞாயமது
குண்டோமசாலி கொடியமாபாவியனாய்
பண்டோர்குரோணி பாதகன்றன் றுண்டமதாய்
பிறந்தானவனும் பேருதிரத்தன்கிழையாய்
இறந்தாரவர்களிரிரையாய் அவன்றனக்கு
ஆனபசிகள் ஆற்றாமலேயவனும்
வானமது அலேய வாய்விட்டான்கண்டாயோ
என்றுசிவனுரீதுரைக்க மாயவரும்
அன்றுமகர்மால்லக் குண்டோமசாலினுக்கு
இறையாகத்தேவர்களை யேற்றநாங்கிலாக்கி
வரையானதைத்தூண்டி மறையைக்கயிறுக்கி
வாயுவைத்தோணி வருணன்றனைநிரப்பாய்
தேயமதைச்சூளத் திரைகடலேத்தான்வருத்தி
ஓடையாய்ச்சதிர யுகம்வழியேதானேவி
தேடரிமாயன் திருவோணிதானேறி
மூவாதிமூவ ரோணிதனைத்தள்ளிவர
காவாலிமாயன் கன்னியிலேதூண்டலிட
சதிர்யுகமாழுஞ் சண்டித்தடிமூடன்
எதிரேவருமாற்றில் இரையைமிகக்கண்டாவி
நாடிப்பசிதீர நல்லயிரையாகுமென்று
ஓடிவந்துபாவி யுழுங்கினென் றூண்டல்தனை
தூண்டலுழுங்கிச் சுரண்டிமிகக்கொழுகி
மாண்டனன்காண்பாவி வலியமலேபோலே
பாவிமடிய பரமேசுரனுரும்
தாவிச்சலத்தால் சதிரயுகம்ழித்தார்
சதுரயுகமழியத் தானவர்களெல்லோரும்
மதுரமொழியீசன் மலரடியைத்தான்பூண்டு
தேவர்மறையோர் தெய்வேந்திரன்முதலாய்
மூவர்களும் வந்து முதலோனடிப்பணிந்து

பரமனைநீரும் படைத்தயுகம்ரண்டதிலும்
வரமேதுங்கேட்டு வாழ்ந்தவரைக்கண்டிலமே
அந்தசந்தமில்லா தாணுவங்கள் தானுமில்லா
இந்தவகைச்சாதி இல்லாமலீசுரரே
பிறந்தாலவனும் பெரியோனடிவணங்கி
வரந்தாருமென்று வாளாயுதத்தோடே
வலுவும்பெலமும் வாய்த்தசூரப்படையும்

நெடுயுகம், தில்லைமல்லாலன் மல்லோசி வாகனன்பாடு

கொலுவும்பெரிய குவிந்தமதில்கோட்டைகளும்
கெட்டுக்கிளை பாணிக்கிரணமதுவுடனே
நாட்டுப்பயிரால் நாளும்பசிதீர்ந்து
இருந்துபொறுக்க இராச்சியமொன் றுண்டாக்கும்
வருந்திமகாதேவர் மலரோனடிவ்வணங்கி
ஆதிசிவனுமதிக சந்தோசமதாய்
வேதியரைத்தான்வருத்தி விளம்புவாரீசுரரும்
மாலும்பிரமாவும் வாய்த்த பரமேசுரரும்
நாலுமறையோரும் நடுவர்மிகக்கூடி
மூன்னுள்ளதுண்டமொன்றை ரண்டாக்கிவைத்து
பின்னேபிறப்புப் பிரமாவுருப்படைக்க
சிவாயப்பொருள்தான் சீவநிலைகொடுக்க
உபாயப்பொருள்தான் உல்லாசமேகொடுக்க
முண்டமிருபேரும் உருவாயுருவெடுத்து
தெண்டமதுகொண்டார் சிவனைமிகப்போற்றி
அப்போதுமாயன் ஆதியடிவணங்கி
இப்பொழுதீசுரரே இவர்களிருபேர்க்கும்
என்னபேர்தானு இடுவோமெனவுரைக்க
வன்னப்பரமேசுரனார் வகுத்துரைப்பார்
திறந்தான்பெருகுந் திருமாலே நீர்கேளும்
பிறந்தவசுரருக்குப் பேரிடவேணுமென்றால்
மாயனேநானுமொரு உபாயம்வகும்பேன்கேள்
ஆயனேநீயுமதுகேட்க வேணுமென்றார்
அண்டபிண்டங்காண ஆதிகயிலாசமதில்
தெண்டனிட்டு நிஸ்டைசெய்கிறான் சுருதிமுனி
இந்தமுனியடுக்க இவர்கள்ரண்டுபேரைவிட்டு
அந்தமுனி தவத்தை அழிக்கவேசொல்லிடுவோம்
என்றுசிவமுரைக்க எல்லோருஞ்சம்மதித்து
அன்றுபிறந்த அசுரர்களைத்தானேவ
போறானேசூரன் பொருப்பொருநூறானதுபோல்
வர்ரானேசூரன் வர்ய்களிருகாதவழி
சூரருட்கைகள் தொண்ணூற்றிரஞ்சதுவும்
மூரன்கால்நூறு உயர்ந்த சிரசன்பதுவும
கண்கள்ஒருநூறு வெண்டாளமிருகலமே
துங்கணங்களாகச் சூரரடங்தேறி

கண்கவிழ்ந்துயோகங் கருத்துருத்தாய் நிற்குகின்ற
வண்கவுழ்ந்த மாமுனியை வாரியெடுத்தவர்கள்
அலைமேலெறிய ஆர்ப்பரிக்குமளவில்
கலைமேல்ப்பரந்த கடியமுனிபகர்வான்
ஏனடாயென்னை இருந்த தவசழித்து
வீணடாசெய்தாய் விழலாயறமோடா
என்னையடுத்து இக்கடல்மேல் போட்டாலும்
உன்னையறுக்க ஓர் அம்பாயுருவெடுத்து
பங்கயக்கண்மாயன் பக்கமதில்நான்சேர்ந்து
உங்களிருபேரை ஊருடுவநானறுத்து
இந்தக்கடலி லெடுத்துஉங்களையெறிந்து
உங்களுடலூரை வொக்ககரிக்காடாக்கி
நானும் வைகுண்டம் நற்பேருபெற்றிருப்பேன்
வானுதிருவாணையென்று மாமுனியுஞ்சாபமிட்டான்
உடனேமுனியை உயத்தியெடுத்தேசூரர்
கடல்மேலெறிந்தார் கர்மவிதிப்படியே
அந்தமுனியும் அரனாருளாலே
மந்திரபுரக்கணையாய் வாரியலைக்குள்ளிருந்தான்
சுருதிமுனிதனையுந் தோயமதில்விட்டெறிந்து
உறுதிகுடிசூரர் ஓடிவந்தேகயிலை
ஈசன்தனைத்தொழுது இறைஞ்சிநின்றாரம்மானை

விருத்தம்

சுருதிமுனியுட கெட்டைதொலைத்தவர்
கருதியசூரர் கைலைமேவியே
பருதீகுடும் பரமனைப்போற்றியே
வருதிகேட்டு வருந்தினர்சூரரே

நடை

சுருதிமுனிதவத்தை தொலைத்தேயவன்றனையும்
பொருகிக்கடல்மீதில் போட்டெறிந்து வந்தவர்கள்
ஈசன்தனைத்தொழுது எற்றவரங்கேட்டதினல்
வாசமுள்ளயீசன் மாதுமையைத்தானோக்கி
தூயவளே மாயவளே சூரரிருவருக்கும்
நேயமுள்ளதோர்வரங்கள் நீகொடுக்கவேணுமென்றார்
வரங்கொடுக்கவென்று மறையோனதிசயித்து
சிரசன்பதோனுடைய சீர்சூரனைநோக்கி
ஏதுவரமுங்களுக்கு இப்போதுதாவேணுமென்றார்
தீதுகுடிகொண்ட சிரசு அம்பதோனுரைப்பான்
மாவரேதேவர்களே மன்றயவரே மூவர்களே
ஆதவரேஎங்களுக்கதிய வரம்வேணுமென்றான்
அம்புவியிலுள்ள அஸ்திரங்கள்வாளாலும்
தம்பிரானாலுந் தாண்டமுடியாதவரம்
வானமதுபூமி மலைகளதுமூன்றிலுள்ள

தானவனாய் வாழுகின்ற தங்களாலெங்களையும்
கொல்லத்துலையாத கொடியவரமதுவும்
மல்லுக்குபாயமதும் வலுவும்பலமதுவும்
ஏவலாய்வாறோர் என்னைத்தொழுது நின்றிடவும்
தவறாமலிந்தவரம் தாவேணுமென்றுரைத்தார்
உடனேசிவனார் கூற்றவசுரருக்கு
அடமாயவன்கேட்ட அவ்வரங்கள் தான்கொடுத்து
நீசனிருக்கநெடிய யுகமவகுத்து
பாசனுக்குப்பேரு பகர்ந்தேவிடைகொடுத்தார்
விடைவேண்டிபபாவி விமலன்றனைத்தொழுது
மடைப்பாவியான மல்லேரசிவாகனனும்
தில்லைமலாலனுமாய் சேர்ந்தங்கிருபேரும்
வல்லசிவன்வகுத்த வையத்தில்வந்தனராம்
வந்தார்சிவன்வகுத்த வையத்திலம்மானை
அந்தவசுரர் அவரிருக்குமன்னாளில்
உதிரமதுசூரர் ஒக்கவுதித்தெழுந்து
செதிர்சூரப்படையாய்ச் சேர்ந்தங்கிருந்தனராம்
இப்படியேசூரர் இவர்சேர்க்கைதன்னுடனே
அப்படியே அந்தயுகம் ஆண்டிருந்தாரம்மானை
ஆண்டிருந்தசூரன் அவனிருக்கமேடைகளும்
தாண்டிருந்தவானத் தடாகவுயரமதே
சூரப்படைகள் தொழுதுவடி பணிந்து
பாதகனுக்குநித்தம் பணிந்தேவல் செய்திடுவார்
ஊழியங்கள் செய்து உற்றுயிறையிறுத்து
பாளையங்களாக்கப் பணிந்திருந்தாரம்மானை
சூரன்கொடுமுடியைச் சூட்டியரசாண்டு
பாரமுள்ளகோட்டை பண்ணினானம்மானை
இப்படியேசூரனிவன் வாழுமன்னாளில்
முப்படியேசூரன் ஊழிவிதிப்படியால்
இறப்பதறியாமல் எரியைமிகக்கண்டாவி
உற்பொசிக்கச் சென்ற விட்டிலிறந்தாற்போல்
தப்பிதமயன்சந்திகள் மந்திரிமார்
முன்பிலுள்ளசூரர் முடுக்கமதைக்கண்டாவி
நம்பிபதமறந்து நாம்தாம்பெரிதெனவே
கெம்பினான்சூரன் கெட்டானம்மானை
சூரனவன்செய்த துட்டம்பொறுக்காமல்
வீரமுள்ளதேவர் விரைந்தேமுறையமிட
தேவர்முறையஞ் சிவனார்மிகக்கேட்டு
காவலாய்நித்தங் கைக்குள்ளிருக்குகின்ற
பெண்ணமுதைப்பார்த்து புகல்வாரங்கீசுரரும்
கண்ணேமணியே கருத்திலுள்ளானவளே
பூலோகந்தன்னிலுள்ள புருடராயுதத்தாலும்
மேலோகம்வாழும் விமலராயுதத்தாலும்
மலைமேலேவாழும் மாமுனிவர்தன்னாலும்

அலையாவரம் அச்சூரனுக்கேகொடுத்தோம்
தரியாமுடுக்கந் தான்பொறுக்காத்தேவரெல்லாம்
அரியோயெனமுறையே மனோகம்பொறுக்கரிதே
என்றீசர்சொல்ல இயல்கன்னியேதுரைப்பாள்
மலைலோகம்மேலோகம வையமதிலாகாடடால்
அலைமேல்றுயிலுமொரு ஆண்டிவுண்டுகண்டீரே
முன்னேயச்சூரனுக்கு முற்சாபமிட்டதொரு
வன்னச்சுருதிமுனி மந்திரபுரக்கணையாய்
வளர்ந்திருப்பான்காண் மாயருடபக்கலிலே
கிளர்ந்தமொழிகேட்டு கிருபைகூர்ந்தேயீசர்
மாலைவரவழைத்து வழப்பமெல்லாமுரைக்க
சாலப்பொருளுஞ் சயமதித்தாங்காரமுடன்
அலையில்வளர்ந்த அதிகணையெடுத்து
சிலையேத்தியம்பைச் சிரித்துமிகத்தொடுக்க
அம்புபகையாலும் அதிமால்பகையாலும்
பம்யழித்துச்சூரனார் பர்ப்பமபோல்தானாக்கி
சூரிருவருட சிரசைமிகவறுத்து
வாரிதனில்விட்டெறிந்து வாளிதனையாடி
மலரோனடிவணங்கி வைகுண்டம் கேட்டிடவே
பலமானகுண்டப்ப பதவிமிககொடுத்தார்
அவ்யுகத்தைமாயன் அன்றழித்தீசரிடம்
செவ்வாகனின்று செப்பினாரீசருடன்
இன்னமொருயுகத்தை இப்போபடைக்கவென்று
மன்னனையதிருமால் மனமேமிகமகிழ்ந்து
சொன்னவுடனீசரும் தொன்னூல் மறைதேர்ந்து
முன்னேகுறோணி முடிந்ததுண்டமாறதிலே
ஓரிரண்டுதுண்டமுகமாய்ப் பிறந்தழிந்து
ஈரிண்டுதுண்டமிருக்கிதுகாண் மாயவரே
நேர்முறையைபபார்க்கில் நெடியயுகங்கழிந்தால்
மேலுகந்தானிங்கே மிகுத்தகிறேதாயுகந்தான்
இருக்குதுகாணென்று ஈசருரைத்திடவே
மருக்கிதழும்வாயார் மனமகிழ்ந்துகொண்டாடி
துண்டமொன்றைரண்டாய் தூயவனார்தான்வகிர்ந்து
மண்டலங்கள்மெய்க்க வாணாள்கொடுத்தருளி
சிங்கமுகசூரனென்னும் திரள்சூரர்பர்ப்பனென்றும்
வங்கணமாய்ப்பிண்டம் வகுத்தனர்காணம்மானை
சூரனுடசிரசு தொளாயிரத்து நூறதுவும்
போரார்க்கால்கைகள் பொருபபெடுக்கும் மார்பிலமும்
சூரன்சுரோணிதத்தைச் சுக்தலங்கள்தானாக்கி
ஊரேநீப்பாவென்றுற்ற விடைகொடுத்தார்
விடைவேண்டிச்சூரன் வேண்டும்படையோடே
திடமாகபூமி செலுத்தியரசாண்டிருந்தான்
வரம்வேண்டவென்று மலரோனடிவணக்கி
திரமானவோம்மிட்டுச் செப்புக்குடம்நிறுத்தி

நின்றதவத்தில் நெடியோனைக்காணாமல்
அன்றந்தச்சூரன் அக்கினியில்விழுந்தான்
சூரபர்ப்பன்விழவே சிங்கமுகவாகனனும்
பாரமுள்ளதன்சிரசைப் பறித்தெறிந்தானக்கினியில்
ஆனதாலீசுரரும் அம்மையுமயாளிரங்கி
இனமாஞ்சூரனுக்கேதுவரம் வேணுமென்றார்
ஈசனுரைக்கயேற்றஅந்த சூரனுந்தான்
பாசமுடன் செத்தபர்ப்பனென்ற சூரனையும்
எழுப்பித்தரவேணும் யாங்கள்மிகக்கேட்டவரம்
மழுப்பில்லாவண்ணம் வரமருள்வீரென்றுரைத்தான்
சூரனிவன்கேட்கச் சிவனாரகமகிழ்ந்து
பாரமுள்ளவோம பர்ப்பமதைத்தான்பிடித்து
சிவஞானவேதஞ் சிந்திப்பாரப்பொழுது
பவமானசூரர் பர்ப்பன்பிறந்தனனும்
இறந்துபிறந்தனர்க்கிழையோன் அவன்றனக்கும
சிறந்தபுகழீசர் செப்புவாரப்பொழுது
சூரனையுங்களுக்குத் தோற்றமுள்ளபோர்வரங்கள்
வீரரேகேளுமென்று வேதனிவையுரைக்க
அன்னாளில்சூரன் அகமகிழ்ந்துகொண்டாடி
உன்னாலும்ஐந்துமுக முள்ளவர்கள் தன்னாலும்
உலகத்தில்பண்ணிவைத்த உத்தவாயுதத்தாலும்
இலகுமன்னராலும் இந்திரனார் தன்னாலும
கொல்லத்துலையாத கொடியவரமதுவும்
வல்லவனேநீயும் வாழுங்கைலயுதும்
தேவர்தேவேந்திரனும திருக்கணனிமாமறையும்
ஏவலாயுன்னுடைய லோகமதிலுள்ளவர்கள்
முழுதுமெனக்கு ஊழியங்களசெய்திடவும்
பழுதில்லாதிந்தவரம் பரமனேநீர்தாருமென்றான்
தாருமென்றுசூரன் தன்மையுடன்கேட்க
ஆருமொப்பில்லா ஆதியகமகிழ்ந்து
கேட்டவரமுழுதுங் கெட்டியாயுங்களுக்கு
தாட்டியமாயிப்போ தந்தோமெனவுரைந்தார்
வரங்கொடுத்தீசர் மலைகைலைக்கேகாமல்
பரமவுமையாளைப் பையவெடுத்தணைத்து
அலைமேலேயாயன் அருகிலேபோயிருந்து
மலைமேல்சூரன் வாய்த்ததென்றவ்வரங்கள்
கயிலைமுழுதுங் காவலிட்டுத்தேவரையும்
அகிலமுழுதும் அடக்கியரசாண்டனனே
அப்படியேசூரன் அரசாண்டிருக்கையிலே
முப்படியேவிட்டகுறை முடிவாகும் நாளையிலே
தேவரையும் வானவரைத் தெய்வேந்திரன்வரையும்
மூவரையும்பாவி முட்டுப்படுத்தினனே
ஆனதால்தேவர் அரிக்கே முறையமிட
ஈனமில்லாதாயன் எடுத்தார்ஒருவேசம்

ஈசனிடஞ்சென்று இயம்பினாரெம்பெருமாள
வாசமுள்ளயீசுரரே மாபாவிசூரருக்கு
ஏதுவரங்களீந்தீர்காணென்றுரைக்க
தாதுகரமணிந்த தாமன் பின்னேது சொல்வார்
வையகத்திலுள்ள வலுவாயுதத்தாலும்
தெய்வலோகத்தில் சிறந்தமன்னர் தனாலும்
அஞ்சுமுகத்தாலும் அழியாதவனுயிரும்
தஞ்சலிடவானோர் தையல்தெய்வக்கன்னிமுதல்
அகிலமுழுதும் அடக்கிவரங்கொடுத்தோதாம
கயிலைமுழுதுங் கமண்டலங்களேழுமுதல்
என்றுவேதாவும் இவையுரைககமாலோனும்
நின்றுதியங்கிநெஞ்சமது புண்ணாகி
பேயனுக்கென்னுடைய பிறபபைககொடுத்தல்லவோ
தேயமதில்யானும் திரிந்தலையக்காரணந்தான
என்றுதிருமாலிது சதயஞ்சொல்லியவர்
நின்றந்தசூரர் இருவர்தனனைக்கொல்லவே
ஆறுமுகமாய் ஆயனனளவிடவே
கூறிடவேசத்திதனைக் கொண்டார்வேலாயுதமாய்
நல்லசிவனாரை நந்திசுரராக்கி
வல்லபிலமுள்ள வாய்த்திகெட்டிலுள்ள
பாலரைவீரர்களாய்ப் பண்ணினாரெம்பெருமாள்
வாலமுள்ளசன்னாசி மாரைபடைருப்படையாய்
கந்தனெனநாமங் கனத்தசடையாண்யுமாய்
கொந்துகொந்தாய் பிறைக்கூறைமிகவணிந்து
வேலுமிகப்பிடித்து வெண்ணீறுமேதரித்து
நாலுரண்டுசிரசில் நல்லருத்திராச்சமிட்டு
பத்துரண்டுகாதில் பைம்பொனாச்செம்பணிந்து
முத்திரிகளிட்டுக்கந்தப பொக்கணங்கள்தோழிலிட்டு
சன்னாசிபோலே தானடந்தெம்பெருமாள்
நன்னாதானவெனவே நாலஞ்சிகவிதான்பாடி
வந்துஒருமலைமேல் வாய்த்தகூடாரமிட்டு
சந்துமிகச்சொல்லி தான்விட்டார்சூரனுக்கு
சூரனிடத்தில் தூதாகிசென்றேகி
பாரமுள்ளகையிலை பருவதந்தேவருட
சிறைகளகற்றிவானோர் தேவரையும்நீயனுப்பி
இறவாதயாகச் சீமையரசாளுமென்று
இப்படியே ஆகாட்டால் இன்றுகழித்தெட்டாம்நாள்
அப்படியேயுந்தனுக்கும் ஆனகந்தசுவாமியர்க்கும்
சண்டையென்று தான்கூறிவாவெனவே
அண்டர்பிரான்தூது அனுப்பினாரம்மானை
தூதனமிகநடந்து சிவனைசெயலெனவே
காதமொன்றுதான்கடந்து கண்டானேசூரனையும்
கந்தசுவாமி கருத்தாயுரைத்ததெல்லாம்
அந்தவசுரனுக் கத்தூதன்றுரைத்தான

சூரனேகேள்கந்த சுவாமியருளென்றுரைக்க
ஏராதபாவி இகழ்த்திணைப்போது
தூதன்யென்றோன் போகாமல்தொடர்ந்துமிகப்பிடித்து
பாதப்பெருவிலங்கில் பாவிவையென்றுரைத்தான்
ஆரடாநீதான் அறியாயோயென்பலங்கள்
பாரடாவுந்தன் கந்தன்படுகிறதை
ஈசுரனுமெந்தனுக்கிருந்த இடமுமருளி
மாயனிடம்பேயலையில் வாழ்ந்ததுநீகண்டிலையோ
எமலோகம்வான இந்திரலோகயவரையும்
நவகோழுநானல்லவோ நாட்டமறிந்திலையோ
முப்பத்துமுக்கோடி உற்றதேவாதிகளுந்
நாற்பத்துநாற்கோடிரிசி நமக்கென்றறிந்திலையோ
அறியாதவனேகாண் ஆண்டிக்குத்தூதுவந்தாய்
சிறியனென்றிராதே எனசிரசுடம்புகண்டிலையோ
உந்தனுடகந்த னுயரமதுநானறிவேன்
ஆனதாலென்னுடைய ஆங்காரமத்தனையும்
கானகத்தில்வாழும் கந்தனுக்கேயுரைநீ
என்றுமதமாயிவனபேச தூதனுந்தான்
அன்றுவச்சூரனுக்கு அறையாமலேதுரைப்பான்
நீயோதானெங்கள் நிமலன்தனக்கெதிரி
பேயோரிநாய்நரிகள் பிய்த்துப்பிடுங்கியுன்னை
கண்டயிடத்தில் கழுக்கள்மிகப்பிடுங்கி
கொண்டோடித்தின்ன வேலாயுதங்கொண்டுவந்தார்
தேவர்சிறையுந் தெய்வமடவார்சிறையும்
மூவர்சிறையும் மும்முடுக்கமுந்தீர்த்து
உன்னுடையசேனை உற்றபடையழித்து
நின்னுடையகோட்டை நீறுபொடியாக்கி
அரசாள்வாரெங்கள் ஆறுமுகவேலவனார்
என்றேதானதூதனிவை உரைக்கச்சூரனுந்தான்
அன்றேமனது உளந்துணிந்தேதுரைப்பான்
ஆனாலறிவோம் ஆண்டிதனையுமிங்கே
போனாலென்னோடே போருசெய்யவேவிடுநீ
சூரனிவையுரைக்கச் சூலாயுதப்பெருமாள்
தூதன்மிகநடந்து சொன்னான்சுவாமியர்க்கு
சுவாமிமிகமகிழ்ந்து சூரன்றனையறுக்க
காமிவேலாயுதத்தைக் கையிலெடுத்தாரம்மானை
வேலாயுதமெடுத்து வேதப்படைசூழ
சூலாயுதப்பெருமாள் துடியாய்நடக்கலுற்றார்
கந்தனார்வேசங் கலநதிருந்தமாயவரும்
வந்தார்காண்சூரன் வலுவிளந்தானம்மானை
சூரனவன்கண்டு தோசப்படையணிந்து
மூரன்படைக்கு முன்னேநடக்கலுற்றான்
கண்டாரீராறு கரத்தோனமகிழ்ந்து
பண்டாரவேசம் பண்பாய்யெடுத்திருக்கி

முன்னே வருஞ்சூரன் முகத்தை யவர்பார்த்து
பின்னே சுவாமி புத்திமிகவுரைப்பார்
வம்பிலிறவாதே வாழ்விழந்து போகாதே
தம்பி தமையன் தளங்களிழவாதே
பர்ப்பக்கிரீடப் பவுசுயிழவாதே
அற்பமிந்தவாழ்வு அநியாயம்விட்டுவிடு
காரணமீதில்லாமல் கவலையில்லாவாழ்ந்திருந்து
மரணம்வந்துஜீவன் மாண்டுபோகும்போது
நன்மையதுகூட நாடுமேயல்லாது
தின்மைவராது தேவரையும்விட்டுவிடு
தீர்ச்சையுடன்புத்தி செவ்வேநெறிட்டுவொரு
மோச்சமதுதேட முடுக்கமதைவிட்டுவிடு
இத்தனையும்நாதன் எடுத்துமிகவுரைக்க
புத்திகெட்டபாவி போர்சூரனதுரைப்பான்
இரந்துதிரிகின்ற இரப்பனுக்குள்ளபுத்தி
பரந்தபுவியாளும் பாரமுடிக்காவலர்க்கு
ஏர்க்குமோஞானம் இரப்போருக்கல்லாது
ஆர்க்குமேசெல்லாது ஆண்டிவுனஞாயமதை
சண்டைக்குவாவெனவே தானகூறித்தூதுவிட்ட
பண்டாரமென்ற படைக்காரனும்நீயோ
எனனுடையசேனை எல்லாமிகவழித்து
என்னையும்நாய்நரிக் கிடுவேனென்றதுநீயோ
என்றேவச்சூரன் இயம்பிமிகநகைத்து
பண்டாரத்தோடே படையெடுத்தானம்மானே
சூரனுடபடைகள் துண்டுதுண்டாய்விழவே
வீரர்களும்வந்து வெட்டினாரம்மானை
வெட்டதிறல்செத்தார் மிகுசூரக்குலங்கள்
பட்டார்களென்று பார்சூரன்தானகேட்டு
வந்தேயெதிர்த்தான்காண மாயாண்டிதன்னோடே
இன்றுவந்துவாய்த்ததென்று எம்பெருமாள்மகிழ்ந்து
வேலாயுதத்தை விறுமாபதந்சேவித்து
மேலாம்பரனார் விமலனருளாலே
எறிந்தார்காண்சூரன் இறந்தானேமண்மீதில்
பறிந்தேகவேலாயுதமும் பால்க்கடலில் மூழ்கியதே
சூரன்மடிந்து துடித்துயிர்போகுகையில்
வீரமுள்ளநாதன் விண்ணவன்முன்னில்வந்து
சொன்னமொழியெல்லாஞ் சூச்சமாய்க்கேளாமல்
இன்னிலமேல்ப்பாவி இறந்தாயேயம்பாலே
நாட்டமுடனுரைத்த நல்லமொழிகேளாமல்
கோட்டையுமுன்னுடைய குஞ்சரமுந்தோற்றாயே
தந்துவிட்டசொல்படிக்கு தந்தராசாளாமல்
விந்துக்குலங்களற்று வீணேமாண்டாயே
மாளாவரங்கள் மகாகோடிகறந்ருமென்று
பாழாகமாண்டாயே பண்டாரக்கையாலே

என்றந்த ஆதி இத்தலையின்தான்கூற
முந்துபிறந்த முப்பிறப்புச்சூரமதாய்
என்னையோகொல்ல இரப்பனுவேலுவது
உன்னையோகொல்ல ஒட்டுவேனோநான் துணிந்தால்
வேலாயுதத்தாலே வென்றுகொன்றதல்லாது
ஏலாதுன்னாலே இளப்பமிகப்பேசாதே
என்றானே சூரன் எம்பெருமாள்கோபமுடன்
கொன்றாரேசூரன் குறவுயிரை அம்மானை

விருத்தம்

சூரனைத்துணிந்தசக்தி சூலமுங்கடலில்மூழ்கி
வீரமால்பதத்தைத்போற்றி விளமபுவாள்சத்திமாது
மூரனைச்செயிக்கமுன்னே மூர்ச்சூலமாய்சபித்தசாபம்
தீரவேணுமென்று திருப்பதம் வணங்கிநின்றாள்

நடை

ஆதியேனாதி ஆதித்திருவுளமே
சோதியேஎன்னுடைய சூல்சாபந்தீரும்
என்றுவுமையாள் எடுத்துமிகவுரைக்க
நன்றெனவேயந்த நாராயணருரைப்பார்
சாபமதுதீர சாந்திமிகவளர்த்தார்

அவ்வுகத்தில் இரணியன் பாடு

தாபமுடன்மாயன சாந்தியதுவளர்க்க
அம்மைஉமையாளின ஆனசாபந்தீர்த்து
செம்மையுடனகயிலை சென்றனர்காணம்மானை
சத்திசாபந்தீர்த்துத் தவலோகமேயனுப்பி
சத்தியாய்ச்சூரனையுஞ் சங்காரஞ்செய்துஅந்த
சூரனார்தன்னைத் தீயோன்தனக்களித்து
வீரசூரன்றனையும் மேலுமந்தயுகத்தில்
பாரஇரணியனாய்ப் படைத்தார்காணம்மானை
சூரன்இரணியனாய் தோன்றினான் அவ்யுகத்தில்
மாயனொருகோலம் மகவாயுருவெடுத்து
வாயினடையில்வைத்து மாபாவிசூரனையும்
நெஞ்சையவர்நகத்தால் நேரேபிளந்துவைத்து
வஞ்சகனோடேமாயன் மிகவுரைத்து
சூரபர்ப்பனாகத் தோன்றினனன்றெனில்
ஊரிரப்பனாகஉருவாக நான்தோனறி
கொன்னேனென்று கூறினேனபோது
அந்நேரம்நீதான் ஆண்டியல்லகொன்றதென்றாய்
வேலாயுதத்தாலே வென்றாய்நீயல்லாது
ஏலாதுன்னாலே என்றன்றுபேசினையே
ஆயுதங்களம்பு அஸ்திரம்வாளில்லாமல்
வாயிதமாயென்னகத்தால் வகிர்ந்தேதநானுன்வயிற்றை
என்றுமாயனுரைக்க ஏதுரைப்பான்சூரன்
பத்துமலையைப் பாரநகமாய்ப்பதித்து
இத்தலத்திலென்னை இறக்கவைத்தாயல்லாது

ஏலாதுன்றாலே இந்தமொழிபேசாதே
மாலானவேதன் மனதுகோபம்வெகுண்டு
உன்னையின்னமிந்த உலகில்பிறவிசெய்து
கொன்றாலேவிடுவேன் கிறேதாயுகம்வைத்து
திகைந்தல்லோபோச்சு கிறேதாயுகம்பிறந்தால்
முப்பிறவிதுண்ட உயிர்ப்பிறவிசெய்கையிலே
இப்பிறவிதன்னிலிசைந்த மொழிகேள்ப்பேறுன்
என்று இரணியனை இரணச்சங்காரமிட்டு
அன்றுகிறேதாயுகம் அழித்தாரம்மானை
அந்தக்கிறேதா யுகமழித்தன்றளில்
கந்தத்திருவேசம் கலந்திருந்தமாயவனார்
செந்தூர்ப்பதியில்ச் சேர்ந்திருந்தாரம்மானை
அந்தப்பதியில் அலங்கரித்தநாள்கழித்து
ஆதிகயிலை அரனாரிடத்தில்வந்து
வேதியருயநன்றாய் விளம்புவாரம்மானை
சூரப்பர்ப்பனென்ற சூரக்குலங்களைத்துணித்து
வீரம்பறைந்ததினால் மேலுமந்தயுகத்தில்
கொன்றுகிறேதா குவலயமுறைஎழித்து
முன்னுகலந்திருந்த ஆறுமுகவேசம்

கிரேதாயுகத்தில் ராவணன் பாடு.

செந்தூருவாரித் திரைமடக்கில்வாழ்ந்தீரென்று
வந்தோங்காணையா மலர்பாதந்தெண்டனிட
என்றேதானாதி ஈசரோடேதுரைப்பார்
அன்றேதன்ஈசர் அருளுவாராயருக்கு
முன்னேகுறோணி முடிந்ததுண்டாறதிலே
இனனுமூனுதுண்டு இருக்குதுகாண்மாயவரே
என்றீசர்சொல்ல எல்லோருந்தான்கூடி
அனறிருந்ததுண்டம் அதிலொருதுண்டமதை
உருவாய்ப்படைத்து உயிர்கொடுத்துமவ்வளவில்
அருகேயிருந்த அச்சுதருமேதுரைப்பார்
முன்னேஇவனும் முற்பிறப்பானதிலே
என்றோடேபேசி எதிர்த்தான்காண்ஈசுரரே
ஆனதாலிப்பிறப் அரக்கனிவன்றனக்கு
ஈனமில்லாச்சிரசு ஈரஞ்சாய்ப்படையும்
பத்துச்சிரசும் பத்துரணடுகண்காதும்
தத்துவங்களோடே தான்படையுமென்றுரைத்தார்
மாயனுரைக்க மறையோனகமகிழ்ந்து
வாய்ச்சிரசுபத்தாய் வகுத்தார்காணம்மானை
கூடப்பிறக்க குண்டிலிட்டரத்தமதை
வாடவரக்கர்குலமாய்ப் பிறவிசெய்தார்
அப்போபடைக்கும் அவ்வளவில்மாயவனார்
மெய்ப்பானமேனிதனில் வியர்வைதனையுருட்டி
விபீசணனென்று மெய்யுருவந்தானாக்கி

கவுசலமாயரக்கன் தம்பியெனக்கருத்தாய்
கூடியிருந்து அறக்கன்குறியறிந்து
வேடிக்கையாக வீத்திரென்றுதானுரைத்தார்
பத்துத்தலையான் பாவியரக்கனவன்
மற்றுநிகரெவ்வா வாய்த்தபரமேசுரரை
வணங்கித்தவம்வேண்ட மனதில்ப்பிரியமுற்று
இணங்கியேசர்ப தம் இறைஞ்சிநிற்றன்ஈசுரரை
தவத்தருமைகண்டு தலைபத்தரக்கனுக்கு
சிவத்தலைவரானோர் செப்புவாரம்மானை
காதுரண்டுபத்து கண்ணிருபதுள்ளோனே
ஏதுவரம்வேணும் இப்போதுசொல்லுமென்றார்
அப்போதுஈசுரரை அரக்கனவன்வணங்கி
இப்போதுஈசுரரே யான்கேள்க்குமவ்வரங்கள்
தருவோமெனவே தந்திமுகன்பேரில்
உருவாயெனக்கு உறுதிசெப்புமென்றுரைத்தான்
அப்படியேயீசர் ஆணையிட்டுத்தான்கொடுக்க
சொல்படிகேட்டேயரக்கன் சொல்லுவானப்போது
மூன்றுலோகத்திலுள்ள முனிவர்தேவாதிகளும்
வேண்டும்பலவாயுதமும் விதவிதமாய் அம்புகளும்
வீரியமாய்நானிருக்கும் விடடகோட்டைசுத்தியந்த
சூரியனுஞ்சந்திரனுஞ் சுற்றியதுபோயிடவும்
சிவனொருகோடி செய்யவரந்தரவும்
புவனம்படைக்கும் பிரமாவொருகோடி
உமையாளொருகோடி உற்றவரந்தரவும்
இமையோரரக்கோடி இப்படியேயுள்ளவரம்
மூணரைக்கோடி உள்ளவரமத்தனையும்
தாணரேயந்தனுக்கு தாருமென்றானம்மானை
துடுக்கனிவன்கேட்ட சுத்தவரமத்தனையும்
கொடுக்குமளவில் குன்றெடுக்கும் தன்தேவி
அலைமேல்துயிலும் அச்சுதனார் தன்தேவி
சிலைவேலெடுத்து செயிக்கவல்லான்தேவி
அலங்காரமாகி அன்றயப்பொழுதிலே
கலங்காதான்தேவி கையிலையுமையாளருகே
மணிமேடைதன்னில் மகிழ்ந்திருக்குமவ்வளவில்
கெணியாமலேயரக்கன் கெடுவதறியாமல்
அம்மைதனைக்கண்டு அயர்ந்துமுகஞ்சோர்ந்து
கர்மவிதியால்க் கைமறந்துநின்றனனே
நின்றவுணர்வை நெடியசிவமறிந்து
அன்றந்தரக்கனுக்கு ஆதிவரங்கொடுத்து
கேட்டவரங்கள் கெட்டியாய்த்தான்கொடுத்து
நாட்டமுடன்சீதை நகையாலழிவையென்று
இரக்கமில்லான்கேட்ட ஏற்றவரங்களெல்லாம்
அரக்கனவன்றனக்காதி மிகக்கொடுத்தார்
ஆதிகொடுத்த அவ்வரங்களத்தனையும்

நீதியில்லான் வேண்டி நெடியோன் றனைவணங்கி
கொண்டுபோகும்போது குன்றிறுத்தமாயவரும்
கண்டுமறித்து கவுசலமிட்டே மாயன்
அரைக்கோடிவரமாய் ஆக்கிவிட்டார்மாயவரும்
சரக்கோடிமூணுந் தான்தோற்றுப்போயினனே

விருத்தம்

ஆதியைத்தொழுதுபோற்றி அரக்கனும்வரமும்வேண்டி
சீரியசீதையாலே சிவனுக்கிடறும்பெற்று
வாரியமூணுகோடி வரமதுதோற்றுப்பின்னும்
சூரியன்மூன்றுலோகம் முழுதுமேயடக்கியாண்டான்

நடை

முக்கோடிவரத்தை உச்சிக்கொண்டார்மாயவனார்
அக்கரைக்கோடி அரக்கன்வரங்கொண்டேகி
தேவரையும்மூவரையுந் தெய்வேந்திரன்தனையும்
நால்வரையும் வேலைகொண்டு நாடாண்டானம்மானை
வாசுஅரக்கன் மணிமேடைதாராட்டால்
வீசுவேன்வாளால் வெட்டுவேன்பாருவென்பான்
வருணனவன்மேடை வந்துதெளியாதிருந்தால்
மரணம்வரும்வரையும் வல்விலங்கில்வைப்பேனென்பான்
சந்திரருஞ்சூரியருஞ் சாய்ந்துமிகப்போகாட்டால்
சந்துசந்தாகச் சரத்தாலறுப்பேனென்பான
தெய்வமடவார்கள் திருக்கவரிவீசாட்டால்
கைவரைந்துகெட்டிக் கடுவிலங்கில்வைப்பேனென்பான்
நாலுமறையும் நல்லஆறுசாஸ்திரமும்
பாலுக்குடஞ்சுமந்து பணிந்துமுன்னில்லாட்டால்
அஸ்திரத்தால்வாங்கு அம்மிதனில்வைத்தரைத்து
நெற்றிதனில்கொட்டிடுவேன் நிச்சயமென்பானரக்கன்
வானவர்களெல்லாம் மலரெடுத்துதன்காலில்
தானமதுமண்ணி தாழ்ந்துநில்லாதேயிருந்தால்
சாகும்வரைக்கும் தடியிரும்பிலிட்டவனை
வேகும்படிக்கு வேள்விதனிலிட்டிடுவேன்
மாமறலிமூவர் வந்தென்சொல்கேளாட்டால்
காமனையும்ஈசன் கண்ணாலெரித்ததுபோல்
என்னுடையகண்ணால் எமனையுங்காலனையும்
துன்னுடையவல்ல தூதனையும்நானெரிப்பேன்
இவ்வுகத்திலுள்ள ராசாதிராசரெல்லாம்
முவ்வுகமுங்கர்ப்பமிங்கே முன்னடித்தாராட்டால்
நெருப்பெடுத்திட்டிடுவேன் நேரேகொண்டுவாராட்டால்
எரிப்பேனோர்அம்பால் ராசாதிராசனையும்
இப்படியேபாவி இந்திரலோகம்வரையும்
அப்படியே அரக்கன் அடக்கியரசாண்டிருந்தான்
அப்படியேஅரக்கன் ஆண்டிருக்குமன்னாளில்
முப்படியேவிட்டகுறை முடிவாகுநாளையிலே

தேவரிஷிதேவர் தினம்சேவல்செய்திடவே
மூவாதிமூவர் ஊழியங்கள்செய்திடவே
மூர்க்கமதால்பாவி ஊழியங்கள்கொண்டதினால்
பொறுக்கமுடியாமல் பூலோகத்தாரெல்லாரும்
தெய்வஸ்திரீயும் தேவரிஷிதேவர்களும்
அய்யாதிருமாலுக்கு அபயமபயமிட
அபயமிடும்மொலியை அச்சுதருந்தானமர்த்தி
கபயமிடுவேதன் கயிலையதிற்றானேகி
ஆதிபரமன் அடியைமிகப்போற்றி
சோதித்திருமால் சொல்லுவாரம்மானை
பத்துத்தலையுடைய பாவியரக்கனுக்கு
மற்றும்பலகோடி வரங்கள்மிகயீந்ததினால்
தேவரையும்மூவரையும் தெய்வேந்திரன்வரையும்
நால்வரையும்வேலைகொண்டு நீட்டாண்டானம்மானை
ஆனதால்தேவர் அரிக்குமுறையமிட
ஈனமில்லாதேகேட்டு இருக்கமுடியுதில்லை
பள்ளியுறக்கம் பரிவாய்வருகுதில்லை
தள்ளினால்தேவரையும் தற்காப்பாராருமில்லை
என்னவசமாய் எடுப்போஞ்சொரூபமது
தன்னிகரில்லாதவனே சாற்றுவீரென்றனராம்
மாயனுக்குரைக்க மறையோன்மகிழ்ந்து
தூயவருமங்கே சொல்லுவாரம்மானை
பாவியரக்கனுக்கு பண்டுநாமீந்தவரம்
தாவிப்பறிக்கத் தானாகதென்னாலே
என்றரனார்சொல்ல எம்பெருமாளச்சுதரும்
அன்றெம்பெருமாள் ஆலோசனையாகி
என்னைமகவாய் யெடுக்கத்தசரதரும்
முன்னைவரங்கேட்டு உலகிலவனிருக்க
அன்னுகத்திலுள்ள வீரசன்தின்கரனும்
பொன்னுதிருவை பிள்ளையெனவந்தெடுக்க
நெட்டையாயரசர் நெடுநாள்தவசிருக்க
சட்டமதைப்பார்த்துத் தானனுப்புமீசரரே
பின்னும்பெருமாள் பெரியோனைப்பார்த்துரைப்பார்
முன்னுமுறையாய் முன்றப்படியேதவரையும்
வானரமாய்ப்பூமியிலே வந்துபிறந்திருக்க
தானவரேயிப்போ தான்படைக்கவேணுமென்றார்
ஏவலாய்யெந்தனக்கு இப்பிறப்பானதிலே
பள்ளிகொண்டுநானிருந்த பாம்புராசன்றனையும்
வெள்ளிமணிமெத்தைதன்னையும் வீற்றிருக்குமாசனமும்
இம்மூன்றுபேரும் என்னோடுடன்பிறக்க
சமூலப்பொருளே தான்படைக்கவேணுமென்றார்
மாயனுரைக்க மறையோன்மகிழ்ந்து
தூயவருமந்தப்படியே தெளிந்திருக்க
படைக்கும்பொழுதில் பரதேவரெல்லோரும்

அடைக்கலமேமாயன் அடியெனத்தெண்டனிட்டார்
தெண்டனிட்டுத்தேவரெல்லாம் செப்புவாரம்மானை
மண்டலமெங்கும் மயமாய்நிறைந்தோனே
எங்களைலோகமதில் இப்போபடைபபீரால்
மங்களமாயுள்ள வலுவும்பிலமதுவும்
ஆயனுக்குநாங்கள் அடிபணிந்தேவல்செய்ய
நேயனேநீரும்நெறியாய்ப் படையுமென்றார்
ஈசர்மகிழ்ந்து இப்படியேதான்படைக்க
வாசத்தசரதரும் வந்துதினகரனும்
மகவாசையுற்று மகாபரனைத்தாநோக்கி
அகபாசமற்று அதிகத்தவமிருந்து
நாதனறிந்து நல்மறையைத்தான்பார்த்து
பாதகனரக்கன் பத்துச்சிரத்தானை
தேவர்துயரமறத் திருமால்தசரதற்கு
மூவருடன்கூடி உலகமதிலேபிறக்க
அரக்கர்குலமறவே அம்மைசீதாலட்சுமியை
இரக்கம்போலுள்ள ஏற்றதினகருக்கு
மகவாய்ப்பிறக்க மறைதான்விதித்தபடி
செகமீதில்ஞான சிருஷ்டிசிவமயமாய்
இப்படியேவேதத்து எழுத்தின்படியாலே
அப்படியேயீசர் அமைக்கத்துணிந்தனராம்
உடனேதசரதர்க்கு உற்றதிருமாலை
திடமாய்ப்பிரவிசெய்ய எனத்துணிந்தார்
அப்போதுராமர் அய்யாதிருமாலை
இப்போதுபடைக்க ஈசுரனார்சம்மதிக்க
படைக்கும்பொழுது பரமசிவனனார்
நடக்குந்திருமால் நாதனைப்பார்த்தேதுரைப்பார்
அவ்வுலகிலென்னை அதிகதசரதர்க்கு
இவ்வுலகுவிட்டங் கென்னைப்பிறவிசெய்ய
வந்தவிபரம் வகைவகையாயீசுரரே
எந்தனக்குத்தானமைத் தெனையனுப்புமென்றார்
மாயனதுகேட்க்க மறையோனகமகிழ்ந்து
தூயவருமங்கே சொல்லுகிறாரம்மானை
பரலோகமென்ற பைம்பொன்கையிலையதில்
சாலோகந்தன்னில் தானிருந்தமாமுனிவர்
துசுவீசுமாமுனியுஞ் சுதசீலமாமுனியும்
விசுவாசமாயிருந்து விசாரமதிட்டனராம்
வாருந்துசுவீசு மாமுனியேநீகேளும்
நீரும்நாமுமகூடி நீனிலத்தில்போயிருந்து
நானுமொருபெண்மதலை நல்லமகவாக
தானுமோராண்மதலை தலைவன்றனைவாங்கி
சமமந்தமாகித் தானிருந்துநாடாண்டு
உம்மந்தமான உதவிபெறவேணுமென்று
இருபேருமிருந்தெனை நினைந்துமாமுனிவர்

உருவேதத்திவேள்வி ஓமமதுவளர்க்க
இந்தபபடியே இவர்களிருமாமுனியும்
எந்தன் றனேநோக்கி யிருந்தார் தவசுகண்டீர்
அல்லாமல்பின்னும் அரக்கன்ராவணன் றனக்கு
கொல்லாமல்க்கொல்ல ஒருகுருமுனிவன் சாபமுண்டு
அரக்கன்வரம்வேண்டி அவன்போருமவ்வளவில்
இரக்கமாய்மாமுனியும் இருந்தான் தவசியிலே
தவசுநிலேபாராமல் தலேபத்த அரக்கனுந்தான்
பவிசுமதமாய்ப் படுவதறியாமல்
முனியையவன்காலால் ஒத்திறைனழ்மானே
அனியாயப்பாவி அரக்கனவன் றனக்கு
கூறினன்மாமுனியுங் கொள்ளேகொண்டசாபமது
துர்றிஸசாபத் துல்லியத்தைநீர்கேளும்
மாலேமிகப்போற்றி வாய்த்ததவம்நிக்கையிலே
காலெடுத்துவொத்திேேய கள்ளாவுன் றனக்கு
இந்தத்தவசுதனி ஈசுரரைத்தானினைந்து
உந்தன் றனேயறுக்க ஒருராமபாணமது
வந்துபிறந்திடவும் மாயனைதயெடுத்து
துறுவாசமாமுனிவன் தசரதராய்ப்பூமிதனில்
பிறந்துயிருந்திடவும் பின்னுஞ்சுகசீலன்
மாமுனியுந்திகாராய் வந்துபிறந்திடவும்
வேமுனிக்குலச்சுமியும் வில்லோடுதித்திடவும்
இராமபாணத்தோடே இராமர் தசரதர்க்கு
முராகமத்தினபடியே உலகிலுதித்திடவும்
பாணமதுதன்னாலும் பத்தினி தன்கர்ப்பாலும்
நாணமதுகெட்டரக்கா உன்னல்ல தலேபத்திழந்து
சேனேதளமிழந்து சிரசிழந்துவாழ்விழந்து
வானரங்கள்வந்துன் வையகத்தைசுட்டழித்து
உன்சடலமெல்லா முழுத்துப்புழுப்புழுத்து
சஞ்சலப்பட்டுச் சண்டாளாநீமடிவாய்
வேண்டுவேன் தவசு விமலன் தனேநோக்கி
ஆண்டுபன்னிரண்டா யவன் றவசுநின் றனனே
நின்றதவத்தில் நிலமையறிந்துமையாள்
அன்றைக்குவந்தருளி ஞமாயிமையும்
உரைத்தமொழிகேட்டு உத்தமுனி தனக்கு
துரைத்தனமாயித்தனேயுஞ் சொல்லிவிடைகொடுத்தேன்
இப்படியேமாமுனிக் கிங்கிருக்குமிவ்வரங்கள்
அப்படியே தூசுவீசு மாமுனியுஞ்சுகசீல
மாமுனியும்நம்மை வருந்திநெட்டைசெய்யுகிறான்
அல்லாமல்தேவாதி யபயம்பொறுக்கரிது
எல்லாமிதுகண்டிப் பிறவிசெய்தோமென்றார்
நல்லதுகாணென்று நல்லதிருலெட்சுமியை
வன்னமுள்ளபெட்டகத்தில் வைத்தார்காணீசுரரும்
இராமபாணமதையும் நன்றாய்ப்பிறவிசெய்ய

சீராமசிறியம்பகனுஞ் சிவனும்யகமகிழ்ந்து
என்னவிதமா யிதுபிறவிசெயவோமென்று
பொன்னம்பலத்தோர் புத்திநொந்துதானிருந்தார்
ஈசுரருமப்போ இரத்தநக்கிரிதனிலே
ஈசுபரனும் வேள்வியதுவளர்க்க
வேள்விவளர்த்து விமலனுருவேற்ற
ஆவித்திருமால் அப்போதுபாயமதாய்
திருக்கணைக்காலில் செய்யநரம்புருகி
கருக்கணமாய்ராம பாணக்கணையெனவே
உறுதிகொண்டுவேள்விதனில் விட்டெறிந்தாரம்மானை
பிறுதிகொண்டுலட்சுமியும் பிலத்ததிருக்கரத்தில்
சுண்டுவிரலில் துய்யநரம்புருகி
வேண்டும்பெரிய வீரவில்லீதெனவே
ஆருமிந்தவில்லை அமபேற்றக்கூடாமல்
ஸ்ரீராமரேற்றச் சிந்தித்தாளம்மானை
உடனேயதுவில்லாய் ஓமமதிலேபிறக்க
திடமாகராமர் திருக்கணங்காலுள்நரம்பு
பாணமதுவேள்விதனில் பரிவாய்ப்பிறந்திடவே
தாணரும்வானோரும் சங்கத்தோருங்காண
எல்லோருங்கண்டிது கணமாயமெனவே
வல்லோர்களான வாய்த்ததேவாதியெல்லாம்
சங்கடங்கள்தீர்ந்துதென்று சந்தோசங்கொண்டாட
அங்கணங்களான அலகைமிகக்கூத்தாட
இராமபாணத்தாலே ராவணசூரனையும்
ஸ்ரீராமர்சென்று தென்னிலங்கைதனிலுள்ள
அரக்கர்குலமறுப்பார் அச்சுதனென்றுசொல்லி
இரக்கமுள்ளதேவர் இரங்கிமிகக்கொண்டாட
வில்லோடுடன்பிறந்த வீரலெட்சுமியெனவே
வில்லோர்களாராலும் வந்ததிந்தவில்லதையும்
வளைத்தோர்க்குநல்ல மாலைசூட்டலாமெனவே
தனைத்தசுகசீலத் தாட்டிகமாமுனியும்
தினகரராய்ப்பூமியிலே செய்துவைத்தலட்சுமியை
மனகரமாய்ப்பூமியிலே வைத்தபெட்டகத்தோடே
வில்லோடேபிறக்க விமலனருளினராம்
நல்லதுசுவீசு மாமுனியைநாடதிலே
தெசரதாய்த் தோன்றவைத்துதேசாதிராசனுக்கு
விசைமாலைராமருமாய் வீரக்கணையோடே
கூடிப்பிறக்க குன்றெடுத்தார்தாண்துயிலும்
நீட அரவணையை நீதலட்சுமணராக்கி
தலையணைமெத்தைதனையும் சத்துருபரதனுமாய்
நிலைவரமாமீசன் நெறியாய்ப்பிறவிசெய்ய
தேவரையும்வானரமாய்ச் சிவனார்பிறவிசெய்ய
மூவரையும்பிறவி உள்ளதெல்லாஞ்செய்திடவே
கொடுமுடியாய்ப்பிறந்த கோளிலங்கைப்பாவிகளை

முடியடிவேரில்லாமல் முழுதுமறுப்பதற்கு
வேண்டும்பிறவியெல்லாம விமலனருளிமிக
தாண்டவசங்காரம் தானிதென்றாம்மானை

விருத்தம்

இராவணன் தன்னைக்கொல்ல ராமடாணங்களோடே
சீராமராய்மாயன்றானும் தசரதன் றனக்குத்தோன்ற
வீராகனமாதுசீதை வில்லுடனுதிக்கத்தேவர்
மாமரக்குலங்களாகி வந்தனர்புவியின்மீதே

நடை

ஸ்ரீராமராசய்ராவணனைச் செயிக்கவொருவிதமாய்
ராமபாணத்தோடே நாட்டில்ப்பிறந்தனராம்
தென்னிலங்கைதான்முடிய சீதைசிறையிருக்க
பொன்னதியவில்லோடுடன் பிறந்தாள்பொனமாது
தேவரெல்லாம்வானரமாய்த் தென்னிலங்கைசுட்டழிக்க
பூவர்சுருமுனிவர் பேரவிசுவகர்மனெனும்
வானரத்துக்கேற்ற மந்திரிதானாக
தானவரையுமனுப்பித தரணிதனிலெம்பெருமாள்
இலட்சுமணரெனவே ஏற்றசத்துருபரதன
கச்சியுடன்மாயன் கணையோடுடன்பிறந்தார்
இப்படியேராவணனுக் கெல்லோருமபகையாய்
முப்படியேயுள்ள முறைநூல்படியாலே
வந்துபிறந்தார்காண் மாயவருமம்மானை
இப்படியேராமர் ஏற்றதசரதர்க்கு
அப்படியேபிறந்தங்கிருந்தாரம்மானை
சீதைவளரத் திருவில்லுந்தான்வளர
கோதைதருழல்சீதை கோமான்மிகவளர
சீராமர்பிறப்போர் சிறப்பாய்வளர்ந்திடவே
இராமர்குலங்கள் இரகசியமாய்வளர
அரக்கன்கொடுமை அண்டமளவேவளர
சீதைவளர்ந்து திருவில்லுந்தான்வளர
மாதைமணமிடவே மாதாமனதிலுற்று
தன்புருசனோடே தையல்நின்றேதுசொல்வாள்
அம்பும்வில்லும்வளர ஆயுளையும்வளர
பக்குவங்களாகச்சே பைங்கிளிக்குமாலையிட
ஒக்குவதென்ன உரைப்பீரெனனுத்தமரே
என்றுமடமாதேற்றித் தினகரரை
நின்றுவணங்கி நேரிளையுஞ்சொல்கையிலே
வில்லுவளைத்தல்லவோ மெல்லிமணஞ்சூடுவது
வல்லகலைக்கோட்டு மாமுனியைத்தானவருத்தி
இன்னபடியீதென்றெடுத்துரைக்க மாமுனியும்
அன்னப்பொழுதில் அருளுவான்மாமுனியும்
பூராசமான புவியன்பத்தாறிலுள்ள
இராசாதிராசரெல்லாம் இப்போவரவழைத்து
வில்லைவளைத்தவர்க்கு மெல்லிமணஞ்சூட்டுமென்று

சொல்லியேமாமுனியுந் தசரதனுர்கண்மணியை
கண்டுநின்றுமாமுனியுங் கண்ணனுர்க்கேதுரைப்பான்
பண்டுஉனக்குப் பரமசிவனுரும
வில்வளைத்துமாலையிட வ் நியில்வைத்திருக்க
செல்லந்தமன்னன் தினக ஞர்கண் மகளக்கு
இன்றுகலியாணம் இப்போதங்குசெனருல்
பண்டுவமைத்த பலனுனக்குகிட்டுமிப்போ
என்றுகலைக்கொட்டு மாமுனியுந்தானேகி
சென்ருன்தினகரரின் செல்விமணந்தனிலே
அனறன்பத்தாறு அரசருக்கும்ஆளனுப்பி
தேசாதிதேசர் திசைவெனறமனரெல்லாம்
மேசாதியாரேருரும் மேவுந்தெய்வேந்திரனும்
இராவணசூரன ஆராமர்முதலானவரும்
இராமகுலச்சாதி நல்லமன ரர்வந்தனராம்
வில்லைவளைத்து வில்லைநாண்பூட்டாமல்
முல்லைமனரெல்லாமமுகம் வாடிப்போயிருந்தார்
இராமரெடுத்து இராமசரமேற்றி
ஸ்ரீராமர்மணஞ்செய்தார் சீதைதிருமாதை
மணமுகித்துவாஞேர் மங்களக்கீதத்துடனே
துணைவர்தலைவரோடு சென்ராரயோத்தியிலே
அய்யோத்தியாபுரியில் ஆனதம்பிமாரோடு
கையேத்துவந்த கன்னிதிருவோடும்
வாழ்ந்திருக்கும்நாளில் மாதாகைகேசியம்மை
தாழ்ந்தமொழிசொல்வதிஞல் தம்பிபரதனையும்
நாடாளவைத்து நல்லஸ்ரீராமருந்தான்
கூடயிருதம்பியோடும் குழல்சீதைமாதோடும்
நாடிநடந்தார் நல்லவனவாசமதில்
வாடிவந்துகானகத்தில் வாழ்ந்திருக்கும்நாளையிலே
இலட்சுமணரும் இனியகனிதான்பறிக்க
கச்சியுடன்நடந்து காட்டில்மிகப்போக
சூர்ப்பனகைமகனுந் துய்யதவசுநிற்க
ஆர்ப்பரவாயீசர் ஆகாசத்தேவழியே
வாளையனுப்பினர்காண் வாய்த்தபரமேஸ்வரரின்
தாமையவர்போற்றி தாமனந்தலட்சுமணன்
கண்டந்தவாளை கைநீட்டித்தான்பிடித்து
துண்டாகஆலைத் துஞ்சிவிழவெட்டினர்காண்
பட்டந்தஆலும் படபடெனச்சாய்ந்திடவே
வெட்டந்தவீழ்ந்தான் மீண்டுதிரம்பாய்ந்ததுவே
அரக்கனருய்கண்டு அலறிவெகுண்டெழுந்து
இரக்கமில்லாச்சூர்ப்பனகை லட்சுமணரைத்தேடி
நாடியெனைத்தாவுமென்று நாணமில்லாதேயுரைத்தான்
தேடிச்ஸ்ரீராமர் சீர்பாதங்கண்டணுகி
என்பாரியிங்கே இருக்கஒருபேர்கள்
தன்பாரிதன்னை தான்விரும்பேன்போடியென்ருர்

போடிநீயென்ற புத்திதனைக்கேட்டரக்கி
தேடியேலட்சுமணரைச் சேரவுறவாடிநின்றாள்
உறவாடிநின்ற வொயிலையவரறிந்து
பறபோடியென்று பம்பத்தனமூக்கரிந்தார்
மூக்கும்முலையும் முகமும்வடிவிழந்து
நாக்குரைக்காவாடி நாணங்கெட்டதீயரக்கி
தன்னுடனேகூடித் தமயனெனப்பிறந்த
மன்னன்ராவணன்றனக்கு வகையாயுரைக்கலுற்றாள்
காட்டிலொருபெண் கமலத்திருமகள்போல்
நாட்டிலொவ்வாக்கன்னி நான்கண்டதில்லையண்ணே
உந்தனுக்காகுமென்று உற்றவளைநான்பிடித்தேன்
எந்தனுடமூக்கரிந்தோர் இருவருண்டல்லாது
மற்றவர்களங்கே வாழ்ந்திருக்கக்கண்டதில்லை
கற்றொருவர்காணோது கையிலம்புகாணாது
மருவனைய அண்ணே உன்வாய்த்தவிரலதிலே
ஒரு இறைக்கேயுண்டு உற்றவர்தன்னுயரம்
என்றந்தரக்கி ஈனம்பலதுரைக்க
அன்றந்தராவணனும் ஆகாசத்தேரேறி
பிச்சைக்கென்யே புறப்பட்டான்காடதிலே
அச்சமில்லா லட்சும்ணரானதிருராமருமாய்
மானின்பிறகே மனம்வைத்துநின்றிடவே
வானின்செயலால் வானவர்கள்பார்த்திருக்க
நாராயணர்தேவி நல்லதிருலட்சுமியை
ஏராதபாவி லெச்சைகெட்டதீயரக்கன்
தேரிலேஅம்மைதனைத் திருடிக்கொண்டேகினனும்
பாரிலேயுள்ள பட்சிபறவைகளும்
கண்டுபதறிக் கதறிமிகஅழுவே
அண்டர்முனிதேவர் எல்லோருந்தானழுவே
மான்வேட்டையாடி மாரீசனையறுத்து
தான்வேடடையாடுந் தகையாலேதம்பியுடன்
வந்தாரிலட்சுமியாள் வாழ்ந்திருக்குமண்டபத்தில்
பந்தார்குழலனையப் பாவையரைக்காணுமல்
கலங்கிமிகவாடி கண்ணீர்மிகச்சொரிய
மலங்கியேலட்சுமணர் மண்ணில்புரண்டழுதார்
என்னேமணியே எனைப்பெற்றமாதாவே
பொன்னேயமுதே பெற்றவளேஎன்றழுதார்
இராமர்முகம்வாடி நாயகியைத்தான்தேடி
ஸ்ரீராமர்மிகக்கலங்கிச் சிநேகமுடனழுதார்
அன்னமயிலோடும் அன்றில்குயிலோடும்
புன்னைமலரோடும் புலம்பிமிகவழுதார்
வண்ணமுள்ளயானை வாய்த்தசிங்கத்தோடும்
பெண்ணமுதைக்கண்டிரோ பிதற்றிமிகக்கேள்ப்பார்
இப்படியேராம ரிளையபெருமாளும்
அப்படியேசொல்லி அழுதழுதுதான்வாடி

சோலைமரத்தின்கீழ் சேர்ந்துமுகம்வாடி
மாலவருந்தம்பி மடிமேல்துயின்றிருக்க
அஞ்சனையாள்பெற்ற அனுமனதில்வந்தடைய
சுக்கிரீபனுஞ்சாம்புவனும் சுத்தமுள்ளவீரர்களும்
ஒக்கவொருமுகமாய் உடையோன்பதமடைய
கெருடனைமிகமதித்துக் கேலியிட்டஞாயமதும்
திருடன்கொடிய தீயர்விராவணனும
அம்மைதனைக்கொண்டு அவன்கோட்டையானதிலே
செயமையில்லாப்பாவி சிறையில்வைத்தஞாயமது
எல்லாமறிந்து எம்பெருமாள்கோபமுடன்
வெல்லத்துணிந்தார் மிகுபடைகள்தானதிரட்டி
எழுபதுவெள்ள யெற்றவானரங்களையும
முழுதும்வருத்தி ஒப்பமிட்டெம்பெருமாள்
விசுவகம்மாளனையும விரைவாய் அருகழைத்து
விசுவாசுமைந்தனை வாய்த்தஅனுமனையும
அனுமனறனையேவி ஆனமலையெடுத்து
துனுமனுடனே தோயக்கடலதுக்குள்
கோட்டையதிடுக் குக்குழித்தங்கேகி

திரேதாயுகத்தில் ராவணன்பாடு

ஒட்டறைவிட்டார் உற்றவனுமனையும்
பூட்டமுடன்வாயு புத்திரன்றன்மகிழ்ந்து
நாட்டமுடனிலங்கை நாடாளும்பாதகனை
கண்டுமுடுக்கி கருத்தழியத்தான்பேசி
கொண்டுஇலங்கை குப்பையிடத்திக்கொளுத்தி
மால்கொடுத்தவாழி மாதுகையில்கொடுத்து
வால்கொண்டுவீசி வனங்காவுதானழித்து
கேதாரமாமலையும் கீர்த்தியுடன்குதித்து
பாதாரமெனறு பணிந்தானேராமனையும்
அரக்கராவணபேசும் ஆங்காரமத்தனையும்
இரக்கமுள்ளஎம்பெருமாள் எழுந்தார்படைக்கெனவே
படைக்குஇவர்நடக்க பார்த்துவிபூசணனும்
அடைக்கலமெனறு அவர்பாதஞ்சேர்ந்தான்காண்
சேர்ந்தவுடனே திருமால்மனமகிழ்ந்து
ஓர்ந்தபடையோடு உடன்யுத்தஞ்செயதிடவே
அரக்கன்படையும் அச்சுதனார்தனபடையும்
இரக்கமதில்லா இருபெருஞ்சண்டையிட்டார்
படைபொருதிவெல்லாமல் பத்துச்சிரத்தோனும்
கடகரியுந்தோற்று கையிழந்தானமனை
பத்துத்தலையும் பார்மீதிலத்துவிழ
மற்றுமிகரொவ்வா மாயத்திருநெடுமால்
அரக்கனுடவுயி ரங்குமிங்குமிற்கையிலே
இரக்கமுடனின்றங்கு கதுரைத்தாரம்மானை
கேளாயரோவணா கிரேதாயுகந்தனிலே

பாளாய் இரணியனாய்ப் பாரில்பிறந்திருந்தாய்
உன்னிடுக்கம்கண்டு உன்புதல்வனாகி
தன்னடுக்கல்வந்துணையுஞ் சங்காரஞ்செய்தேனன்
மகனாய்ப்பிறந்து வதைத்தேனன்பாரறிய
பகைகாரனென்று பண்புமிகக்கூடி
அப்போதுநீயும் அன்றுரைத்தவார்த்தையினால்
இப்போதுன்குலங்கள் எல்லாஞ்சரமறுத்து
நாணமில்லாதுன்னிலங்கை நகரிதீயாலழித்து
பாணமொன்றாலுன்னை படஎய்தேன்கண்டாயே
அல்லாமலுந்தனக்கு அங்கமொருநூறு
எல்லாரும்வெல்லா ஈசன்கயிலையதும்
எடுத்தபிலமுமுண்டே ஈரஞ்சுசென்னியுண்டே
கடுத்தபலமுள்ள கலாள்க்கள்போரவுண்டே
இந்திரனைவென்ற ஏற்றபுதல்வருண்டே
சந்திரசூரியருந் தன்னிடத்திலுண்டல்லவோ
மூனுலோகத்தாரும் உந்தனுக்குண்டல்லவோ
ஆணுவங்கள்பேசினையே அம்பொன்றில்மாண்டதென்ன
கோலுபோலேஉயர்ந்த கொடும்பாவிநீகேளு
நாலுமுளமல்லவோ நல்லதலையொன்றல்லவே
என்கைவாழி எடுத்துவிடத்தாங்காமல்
உன்கைகாலற்று உயிரழிந்துமாண்டாயே
பத்துமலைபோல் பருந்தலைகள்பெற்றதெல்லாம்
இத்தலத்தில்கண்டிலனே என்கையால்மாண்டாயே
மாண்டாய்நீயென்று வசைகூறக்கண்டரக்கன்
எண்டாமழுப்புகிறாய் இராமனேகொல்லுவது
தமபியெனபிறந்து சத்துருபோல்தான்சமைந்து
என்பிலங்களெல்லாம் எடுத்துரைத்தானுந்தனுக்கு
ஆனதாலென்னுடைய அடையாளம்பார்த்துலெக்காய்
ஊனமுடனெய்தாய் உயிரழிந்தேனல்லாது
நீயோடாஎன்பலங்கள் நிலைபார்த்துக்கொல்லுவது
பேயாநீபோடா புலம்பாதேஎன்னிடத்தில்
அப்போதுமாயன் அதிகசீற்றத்தோடே
ஒப்பொன்றில்லாதார் உரைப்பார்காணம்மானே

விருத்தம்

உன்னுடையதம்பியாலே உயிர்நிலையறிந்துயானும்
எனனுடையசரத்தால்கொன்றேன் என்றியம்பிய அரக்கா
பின்னுகப்பிறப்புதன்னில் பிறப்புநூறேடுங்கூடி [வுன்னை
அன்னுகந்தனனில்தோன்ற அருளுவேனுன்னைநானே

விருத்தம்

என்னொருதம்பியாலே என்னையுங்கொன்றாயென்று
தன்னொருமதத்தால் நீயுஞ்சாற்றியவாக்காவுன்னை
பின்னொருயுகத்தில்நூறு பிறப்புடனபிறவிசெய்து
இன்னொருஆளின்கையால் இறந்திடச்செய்வேனுன்னை

நடை

என்னுடைய தம்பியாலே நீஎன்னுயிரை
உன்னுடைய அம்பால் உயிரழிந்தேனல்லாது
என்னைநீகொல்ல ஏலாதென உரைத்தாய்
உன்னைநானிப்போ ஒருபிறவிசெய்யுகிறேன்
என்றுசொல்லிமாயன் எண்ணவொண்ணுக்கோபமுடன்
அன்றுகயிலை அரனிடத்தில்சென்றிருந்து
முன்னுள்ள துண்டம் ஓரிரண்டுள்ளதிலே
ஒன்றொருதுண்டம் ஒருநூறுபங்குவைத்து
துவாரயுகம்வகுத்து துரியோதனனெனவே
கிறேதாயுகமழித்துக் கீழுலகில்தோணவைத்தார்
பாவிபிறக்க பச்சமால்தான்கூட
தாவிப்பிறந்த தம்பியர்மூவரையும்
விபூசணனும்நல்ல வெத்திச்சாம்புவனையும்
அவ்வரையும்பூமி அதிலேபிறவிசெய்தார்
மொய்குழலான மெல்லிதுரூபதையாய்
அம்மைதிருகுளலில் அமர்ந்திருந்தபொற்சடையை
நன்மைவிபூசணர்க்கு நல்மகளாக்கிவைத்து
அரக்கர்குலமறுத்து அம்மையெழுந்தருளி
இரக்கர்புரமேகி இருக்குமந்தநாளையிலே
தோழியாய்முன்னிருந்த துய்யதிருச்சடையை
நாழிகைதன்னில் நாதன்பிறவிசெய்தார்
பின்னுமந்தமாயன் பெரியோனடிவணங்கி
நின்றுகரங்குவித்து நெடியோனுரைத்தனராம்
எழுபதுவெள்ள ஏற்றவானரங்களுடன
முழுதும்இலங்கை முடித்துநான்நிற்கையிலே
என்படைகளான எழுபதுவெள்ளமதிலும
உன்படைகளெல்லாம் உயிரழிந்தாரெனவே
ஆராய்ந்துஎன்படையை அளவிட்டுநிற்கையிலே
தோராதமன்னன் துடியானசேவகன்றன்
ஒருவன்தனைக்காணேன உடனேமறலிதனை
வருகஅழைத்து வகையேதெனக்கேள்க்க
நானில்லையென்றே நமனறன்மிகவுரைக்க
ஏனில்லையென்று இறுக்கிநான்கேள்க்கையிலே
அய்யாவேஉம்முடைய ஆளானவீரனைத்தான்
கையாலமுள்ளகும்ப கர்னனொருசமரில்
பிடித்துநசுக்கி பிசைந்துதிலகமிட்டான்
அடுத்துநின்றுபார்த்து அரக்கனவனுயிரை
கொண்டேகினானும் கொடுநரகில்வைத்திருக்கு
எனறேதானமறலி இத்தனையுஞ்சொன்னான்காண்
ஆனதால்கும்ப கர்ணனவன்தனையும்
ஈனமுள்ளகஞ்சன் எனப்படையும்இவ்வுகத்தில்
என்றேதான்மாயன் இதுரைக்கயீசுரரும்

அன்றேதான் கும்பனையும் அப்படியே தான்படைத்தார்
செந்தமிழ்சேர்மாயன் சிவனுரையும்பணிந்து
எந்தனக்கேற்ற ஈரஞ்சாயிரமடைவ்
கன்னியராயெனக்கு கவரியிடநீர்படையும்
பன்னீர்குணம்போல் மைம்பொன்னிறத்தக்கவாராய்
ஆயர்குலத்தில் அநேகமடவாரை
பாயமுறவாடிருக்கப் படைப்பீர்காணீசுரரே
லட்சுமியைப்பூமா தேவியெனவகுவும்
கச்சியாயென்னைக் கருணையுடன்படையும்
தாயாகப்பெண்கள் தான்படைக்கவேணுமென்றார்
படைத்தசடமதுக்குப் பரமனுயிர்கொடுக்க
சடத்தைதமிகயெழுப்பித் தானனுப்பிஈசுரரும்
துவராயுகமெனவே தொன்முறையெத்தான்பார்த்து
தவறுவண்ணம் தான்படைத்தாரெல்லோரும்
அப்படியேஈசர் அன்றுபடைத்தபடி
இப்படியேவந்திவர்கள் பிறந்தனராம்
முன்னுள்ளபீடத்து உதிரமெல்லாமெழுந்து
அன்றுள்ளபாவி அவனகூடத்தானிருக்க
அரக்கராவணனும் அதிகதுரியோதனனாய்
மூர்க்கன்பிறப்போர் ஒருநூறுபேரோடு
வந்துபிறந்தான் வையகத்திலம்மானை
சந்துபயில்மாயன் தன்னோடுடன்பிறந்த
தம்பிபரதன் சத்துருக்கன்லட்சுமணன்
நம்பிவிபூசணனும் நல்லதொருசாம்புவனும்
ஐவரும்பூமிதனில் அப்போதுதோன்றினராம்
தெய்வதிருச்சடையும் தேவிதுரோபதையாய்
ஐவருடதேவியென்று ஆயிழையுந்தோன்றினளாம்
கும்பகர்னனென்ற கொடும்பாவிகஞ்சனுமாய்
வம்பகனாய்வந்து மதுரைதனில்பிறந்தான்
இப்படியேஐபேரும் ஏற்றரியநூற்றுவரும்
அப்படியேபங்கு வகைபாதியாய்ப்பிறந்தார்
இராச்சியத்திலுள்ள இறைதானமுள்ளதெல்லாம்
தராச்சியமாய்ப்பாதியெனத் தங்கள்சிலநாடாண்டார்
கஞ்சனவன்பிறந்து கடியகொடியவனாய்
வஞ்சகனைப்பெற்ற மாதாபிதாக்களையும்
சிறையதிலேவைத்து தேசமதைத்தானாண்டு
இறைமிகுதிவேண்டி இராச்சியத்தை ஆண்டனனே
ஆனதினாலே அவர்கள் புவியிலுள்ளோர்கள்
ஈனதுன்பமாகி இருந்தார்பயமடைந்து
தேவரையும்வானவரையும் தெய்வேந்திரன்வரையும்
மூவரையும்சற்று முனியாமலேபாவி
தெய்வமடவாரைத் திருக்கவரிவீசிடவே
வைப்பேன்பிடித்து வாவெனவே ஆள்விடுவான்
வருணனுடன்வாயுவையும் வலுவிலங்கிலேபோட்டு

அருணமுதலாய் அந்திவரும்வரையும்
வேலையவனகொண்டு விடுவான் அவன்றொழிலாய்
மாலினினையான மறையைமிகநினையான்
ஆலையங்களகோவில் அழிந்தமடங்கள்வையான்
சாலையங்கள்செய்யான் தர்மசிந்தனைகள்செய்யான்
அந்தணர்க்குதாயான அன்னதானங்களிடான்
பந்தலிட்டுத்தண்ணீர் பக்தர்தனக்கீயான்
ஆவுதனையடைத்து அதற்கிரைகள்போடாமல்
கோவுகளைக்கொல்வான் கொடும்பாவிநெட்டூரன்
கண்டவழக்குரையான் கைக்கூலிகேட்டடிப்பான்
சண்டனைக்கண்டாருவெனபான் தனைப்பாவித்திருப்பான்
எம்மைப்படைக்க ஏலுமோமாமறொருருவர்
நம்மைப்படைத்தது நான்தானெனவுரைப்பான்
இப்படியகஞ்சன் எதிரியில்லையெனறுசொல்லி
அப்படியேசொல்லி ஆண்டானகாணம்புவியில்
மேலோகந்தன்னில் மிகுந்ததெய்வக்கன்னியரில்
வானலோகமான வாய்த்தகன்னிதெய்வதியும்
ரோகணியாளென்னும் நுதல்மடவாரண்டுபேரும்
புரோகணியமான பொய்கைநீராடி
அக்காளுந்தங்கையுமாய அவர்களிருமாமயிலும்
மிக்கானபடடுடுத்து மேவிவழிவரவே
மாயனசிறுமதலை வடிவெடுததுத்தானழவே
ஆயனுட காலம் அறியாமல்மங்கையர்கள
தெய்வகியும்பார்த்துச் செப்புவாளதங்கையுடன்
நெய்கிதியக்கன்னி நெடியவிழிரோகணியே
இனறுஅழுது இதில்கிடக்கும் ஆண்மதலை
பொன்னுலபூமியிலும் பெண்ணேநானகண்டதில்லை
காலில்சிவசங்கரமும் கையில்மால்சக்கரமும்
மேலில்சத்திசக்கரமும் விழிசாசுச்சக்கரமும்
வாயுடகவான வடிவுமிகபபோலே
ஆயும்பலகல்வி ஆராய்ந்தவச்சுதர்போல்
கணகொளளாக்காட்சி கைமதலைதன்னழகு
விண்கொள்ளாக்காச்சி மெல்லியரே இம்மதலை
இம்மதலைதன்னை எடுத்துநாம்தாலாட்டி
பொன்மதலைதனைனப் போட்டுவைத்துபபோவோம்நாம்
என்றுசொல்லிமாதர் இருபேருஞ்சம்மதித்து
வண்டுசுத்துமெல்லி வந்தெடுத்தாரமமானை
மதலைதனையெடுத்து மார்போடுதானணைத்து
குதலைமொழிஅமர்த்திக் கோதையிருமாமயிலும்
கைலையதுக்கேகி கரைக்கண்டர்பாதமதில்
கைலையமாமயிலார் வந்தார்காணம்மானை
வந்தமடவார்கள மார்பில் அழுதிழுகி
அந்தபபரமேசுரனார் அவரறிந்து
கன்னியரேயுங்கள கற்பு ஒகன்றதென்ன

மின்னித்தனங்கள் மெல்லியுடலானதென்ன
பச்சநிறமேனி பால்வீச்சுவீசுதென்ன
அச்சமில்லாக்கொங்கை அயர்ந்துஉடல்வாடினதேன்
ஏதெனவேசொல்லுமென்று ஈசுரனார்தான்கேட்க
சூதகமாய்நின்ற தோகைபோல்வாடிநின்றார்

விருத்தம்

வாடியேமடவார்தானும் மார்பதில்துயிலைமூடி
கோடியையயர்ந்து ஏங்கிக்குருவைதப்பாரவண்ணம்
நாடியேதாழ்ந்துபெண்கள் நாணியேயநின்றதன்மை
தேடியேமாயன்செய்த செயலெனஅறிந்தாரீசர்

விருத்தம்

அறிந்தார்மாயன்சேயாகி அழுதேயிரங்குங்குரலதினால்
செறிந்தார்குழலாரிவர்கள்சென்று சேர்த்தேயெடுத்து
வணைத்ததுவும்
பறிந்தேயிவர்கள்நாணினதும் பால்தான்தனத்தில்பாய்ந்
ததும்
அறிந்தேகன்னிஇருவரையும் அழித்தேபிறவிசெய்
தனராம்

விருத்தம்

பிறவியதுதான்செய்யவென்று பெரியோனுரைக்கப்
பெண்ணார்கள்
அலறியழுதுமுகம்வாடி அரனாரடியைமிகப்போற்றி
திறவிமுதலேதிரவியமே சிவமேஉமதுசியலைவிட்டு
இறவியானலெங்களுக்கு இனிமேல்பிறவிவேண்டாமே

விருத்தம்

வேண்டாமெனவேமெல்லியர்கள் விமலனடியைமிகப்
போற்றி
மாண்டாரெலும்பைமார்பணியும் மறையோன்பின்னும்
மகிழ்ந்துரைப்பார்
தூண்டாச்சுடரோன்திருமாலைச் சேயென்றெடுத்த
செய்கையினால்
ஆண்டாருனக்குமகனாகி அதினமேல்பதவியுங்களுக்கே

நடை

மெல்லியரேயுங்கள் மெய்வரம்புதப்பினதேன்
சொல்லவதுவாச்சு சீமையிலே அம்மானை
என்றேஅரனார் இருகன்னியோடுரைக்க
அன்றேமடவார் ஆதிதனைநோக்கி
ஆதியோனாதி ஆனந்தமெய்ப்பொருளே
சோதியேஅனாதிச் சொரூபத்திருவிளக்கே
அல்லாயப்பகலாய் ஆரிருளாய்நிற்போனே
வல்லாய்ப்புவியை வார்த்தையொன்றால்படைத்த
ஆதிப்பொருளே அனாதித்திருவிளமே

சோதிப்பொருளே சொல்லொணாதோவியமே
எட்டாப்பொருளே எளியோர்க்கெளியோனே
முட்டாதசெல்வ முதலேமுழுமணியே
கண்ணுண்மணியே கருத்திலுண்ணோவியமே
பெண்ணுமாணாகிப் பிறப்பில்லாநின்றோனே
இறப்புபபிறப்பில்லா எளியோர்க்கெளியோனே
பிறப்புஇறப்பில்லா பேசமுடியாதவனே
கருவிதொண்ணூத்தாறுங் காவலைந்துபேருடனே
உருவுபிடித்து உயிர்ப்பிறவிசெய்தோனே
மூவருமுந்தன முடிகாணமாட்டாமல்
தேவருந்தேடி திரிந்தலையவைத்தோனே
மௌவ்வொவ்வாகி வருந்தியவ்வுமொவ்வாகி
செவ்வவ்வாய்நின்ற சிவனேசிவமணியே
மாயமெடுத்த மகவானகோலமதை
நேயமறியாமல் நெறிதவறிப்போனதினால்
பின்னேநீரெங்களையும் பிறவிசெய்யவேணடாங்காண்
என்னேரங்கயிலை இப்பூமியானதிலே
தெய்வப்பசுப்போல் தேவரீரெங்களையும்
மெய்யறிவுகூடிமிகப் படையும்மேலோனே
அல்லாதேபோனால் அடியார்களெங்களையும்
இல்லாதேசெயயும் இனிப்பிறவிவேண்டாங்காண்
அம்மையுடையாளருகே மிகஇருந்து
உம்மையுமபோற்றி உம்ஊழியங்கள்செய்து
பூவுலகில்நாங்கள் பெண்ணாய்ப்பிறந்ததுண்டால்
பாவிகள்க்குவேலை பண்ணிமுடியாதே
பூவுமுடித்துப் பூமேடையுமபெருக்கி
நாவுலகுமெய்க்க நல்லகவிதான்பாடி
தம்புறுவீணை சத்தக்குழலுடனே
இன்புருகராக இசைந்தமுறைதாணிகள்த்தி
நரசெனமம்வாழும அசுரக்குலங்களிலே
அரசேநீரெங்களையும் அழுந்தபபடையாதேயும்
இப்படியேகன்னி இரங்கியழுதிடவே
அப்படியேகனனி அவர்கழுக்காதியுமே
சொல்லுவார்வேதச் சுடரோன்அதிசயித்து
நல்லதுகாண்பெண்ணே நமமைரண்டுஞ்சொல்லாதே
மாயன்துவாரா வையகத்தில்போயப்பிறக்க
உபாயமாயுங்களையும் முறைதாய்தாணுக்க
நாமிமன்னசெய்வோம் நவ்விமால்செய்ததற்கு
போமென்னசர் பிறவிசெய்தாரமமானே
வாயுமகாதேவன் வடிவென்றயிச்சையினால்
ஆசையாலுங்களுக்கு அவனேபுருசனென்றார்
சங்குசாங்கொண்ட தம்பியென்றஇச்சையினால்
அங்குபகவதியும் அச்சுதருமுங்களுக்கு
மதலையெனவந்துதிபபார் வையமதுகொண்டாட

விலங்குசிறையும் மிகுசிறையுமுங்களுக்கு
மலங்குவதுமெத்த மாச்சலுண்டாகியபின்
ஸ்ரீகிருஷ்ணனாய்த் திருமாலுதித்திடவே
குறுக்கிட்டதோசக் கொடுமைமிகத்தீர்ந்து
பின்னேபதவி பேறுண்டுமுங்களுக்கு
மின்னேரொளியை விமலன்பிறவிசெய்தார்
பிறவியான்செய்ய பிறந்தார்காண்பூமியிலே
திறவியதுவிட்டுத் தெய்வகியும்ரோகணியும்
மதுரைதனில்வந்து மாபாவிகஞ்சனுக்கு
இருதையலாரும் ஏற்றபிறப்பெனவே
கூடப்பிறந்தால்க் கொடியதோசமெனவே
தேசவொருராசன் சிறுவியெனப்பிறந்தார்
பிறந்ததான்கஞ்சனுக்கு பிறப்பெனவேபேசும்வளம்
இப்படியேகஞ்சன் இவர்களிருதங்கையையும்
அப்படியேகூட்டி அவன்வேட்டையாடிவர
மாமுனிவன்றன்றனக்கு வாய்த்திருந்தமாம்பழத்தை
தாமுணிந்துகஞ்சன் தானக்கனிபறித்து
தங்கையருக்கீந்தான் சையோகமுனியறிந்து
மங்கையர்க்குவந்த மகனாலழிவையென்று
மாயவினைவலினால் மாமுனியுமப்போது
பாயமுள்ளகஞ்சனுக்குப் படுசாபமிட்டனனே
சாபமதுகஞ்சன் தானறியாவண்ணமுந்தான்
பாவமேநாடோறும் பண்ணிவரும்நாளையிலே
வேதியனைத்தான்வருத்தி மிகுத்தகேடுள்ளகஞ்சன்
சோதிருள்சங்கேள்க்கத் தொடர்ந்தான்காணம்மானை
அப்போதுசோதிரிசி அன்றுமுனிசாபமதால்
எப்பொழுதானாலும் இடுக்கம்வருமென்றுரைத்தான்
சோதிருசங்கேட்டுத் துக்கமுற்றுக்கஞ்சனுந்தான்
வேதியனை அனுப்பி மிகுத்தகேடுள்ளகஞ்சன்
கலியாணஞ்செய்யக் கருத்தல்லவென்றுசொல்லி
வலியானகஞ்சன் வைத்திருந்தானம்மானை
அந்தச்செய்தி அறிந்தந்தநாரதரும்
வந்துகஞ்சன்றனக்கு வளப்பமெல்லாஞ்சொல்லலுற்றார்
கேளாய்நீகஞ்சா கீர்த்தியுள்ளசாஸ்திரங்கள்
வாழாதமங்கையரை வைத்திருந்தால்ராச்சியத்தில்
தர்மந்தலைகெடுங்காண் சாத்திரத்துக்கோராது
வானம்வந்துசிக்கும் மாரியதுபெய்யாது
கோத்திரத்துக்கோராது குடும்பந்தழையாது
சூத்திரநோய்கள் சுற்றுமடாவக்குடும்பம்
மானம்வரமபுகெட்டு மனுநீதிதானழிந்து
ஊனமடாவக்குடும்பம் உலகத்துக்கோராது
கோட்டையழியும் குளங்கரைகள்தானழியும்
நாட்டையழிக்குமடா நல்லகன்னிகாவல்வைத்தால்
பொன்னனைசீதை பிலத்தகர்ப்பானதினால்

கண்ணுலா இலங்கை கரிந்ததுவுங்கண்டிலேயோ
இப்படியேவேதம் இயம்பியிருப்பதினால்
அப்படியேயென்றார் அவர்களிருபேரையும
காவலிட்டுவைத்தால்க் கர்ப்பதினாலுந்தனுக்கு
பாவமுவந்துசுற்றும பலிக்குமடா வதமது
ஆனதால்பெண்கள் அவர்களிருபேரையுந்தான்
மானமுள்ளமன்னனுக்கு மணஞ்செய்துதானகொடுத்து
கெர்ப்பமதுண்டாகிக் கிழேபிறக்கையிலே
அபபோநீகொன்றாலும் ஆனாலுமபாரமில்லை
என றந்தநாரதரும் இத்தனையுந் தானகூற
நன றுமொழியெனவே நவ்விபேகருகனுந்தான்
எனக்குப்படிப்புரைத்த எ றறவசு தவன்
தனக்கு இவர்களையும தானகூடடவேணுமென்றான்
வணுமென றுசிடடோட விருமபிவசுதேவனுந்தான்
வானுபங்களோடே வந்தான்மதுரையிலே
தெய்வகியைரோகணியைச் சிறபபாயலங்கரித்து
வைபாகமுளள வசுதேவனையுமொபபுவித்து
சங்கீததந்தோடே தையல்ரண்டுபேர்களையும
மங்களத்தோடே வசுதேவனதாலிவைத்து
கடடிக்கைகபபிடித்துக் கனகசிதனத்தோடே
கோட்டிதிமிர்த்தாதும் குழலோடேவீற்றிருந்தார்
வாழ்ந்திருந்துபெண்கள் வயிறுவளருகையில்
ஆயந்தறிந்துகஞ்சன் அருவலைவல்வைத்தனனோ
தெய்வகியாரு மழுது சிந்தைமுகம வாடிருபபாள்
மெய்யன்வசுதேவன மிகக்கலங்கிததானிருப்பான்
மங்கைரோகணியும் வாடியழுதிருபபாள்
சங்கையுள்ளதேவர்களும் தையல்தெய்வகனிகளும்
எல்லோருங்கூக்குரல் இடுக்கமதுதனனால
அல்லல் றுமெத்த அறமெலிந்தாரமமானே
அப்படியெசெய்யும் இடுக்கமதுகாததாமல்
அப்படியேமாயனுக் கபயம்அமரரிட
நிலகுதேவய காயை நீர்தேவியார்கூடி
தலந்தேவிமண்ணுக்கே முறயமிட
தேவாதிதேவர் தேவிமுறையாற்றால்
மூவாதிமுத்தன முனித்தார்காண்பளியது
கண்டுதேவாதிகளும கன்னிபுலிகளும
ஆதியாதி அய்யாநாராயணரே
சோதியேவத சுடரசுடரொளியே
பக்தாருகக்தர் பாரந்தீத்தார்க்கேகத்தானே
சித்தர்க்குச்சித்தர் செயலொதத்தார்க்கேகத் தானே
மூவர்க்கறைதி முழுமணியாயகினனீரோமோ
தேவர்க்குநல்ல சிநகமாயகின்றீரோ
கிடடவராக்குக்கிட்டாத கிருஷ்ணராம்பதத்தை
கடடவருமட்டாமக் கருணைசா கடல

உச்சிச்சுழியே உம்மென்றெழுத்தோனே
அச்சிச்சுளியே அம்மென்றெழுத்தோனே
அஞ்செழுத்துமூன்றெழுத்து ஆதியாவென்றெழுத்தும்
நெஞ்செழுத்தும் எட்டெழுத்துமானீயாகிநின்றோனே
என்றொருபத்தொன்னிரண்டு இவ்வேநடுவாக
ஒன்றெழுத்தாய்நின்ற உடையபெருமாளே
தண்டாளத்தானாகித் தருவைந்துபேராகி
மண்டலத்தூறலுமாய மாயமுமாய்நின்றோனே
போக்குவரத்துப் புகுந்திரண்டுகால்வீட்டில்
நாக்கிரண்டுபேசி நடுநின்றநாராணரே
அல்லாய்ப்பகலாய் ஆணாகிப்பெண்ணாகி
எல்லார்க்குஞ்சீவன் ஈயுகின்றபெம்மானே
பட்சிபறவைபல சீவசெந்துமுதல்
இச்சையுடன்சேய்நடபியல் கணக்குச்சேர்ப்போனே
ஒருபிறப்பிலும்மை உள்க்கொள்ளாப்பேர்களையும்
கருவிலமாயேழு பிறபபிலுங்கைகேளபபோனே
ஆறுபிறப்பில அரியேஉன்னைப்போற்றாமல்
தாறுமிகப்பேகித் தொழாதபேராணலும்
ஏழாம்பிறப்பிலுமுமை எள்ளளவுதானினைத்தால்
வாழலாமெனறவர்க்கு வைகுண்டமீய்ந்தோனே
இப்படியேஏழு பிறபபதிலும்உம்மையுமே
அப்படியேவாராணுவு அவர்நினையாதிருந்தால்
குட்டங்குறநோய் கொடியகன்னப்பித்துடனே
கட்டம்வந்துசாகக் கழுத்தில்கண்டமாலையுடன்
• தீராக்கருவங்குந் தீண்செல்லாவாய்வுகளும
காதானதுகேளா கண்ணேகுருடாகும்
புத்திவித்தையந்து பேருறுபபுமில்லாமல்
முத்திகெட்டபுத்தி முளுக்கிரிகைதாபிடித்து
பிள்ளையத்துவாழ்வுமத்துப பெஞ்சாதிதானுமத்து
தள்ளையற்றுவீடுமற்றுச் சபபாவிபோலாகி
மானிலத்தோரெல்லாம் மாபாவிஎன்றுசொல்லி
வானிருத்துமாண்டு மறலிஉயிர்கொள்கையிலே
நாய்நரிகள்சென்று நாதியத்தான்தனுடலை
தேசமதுகாணத் திசைநாலும்பிசசெறிந்து
காக்கைவிடக்கைக் கண்டஇடம்கொண்டுஇன்ன
போக்கடித்துப்பின்னும் பொல்லாதான்தனுடலை
மறலிகொடுவாச்சே வலியதண்டாலடித்து
குறளிமிகக்காட்டிக் கொடும்பாவிதனுயிரை
நரகக்குழியதிலே நல்மறலிதள்ளிடவே
ஈரநமக்கென்று எட்டிப்புழுப்பிடித்து
அச்சுதரைநினையான் அய்யர்வைவதனினையான்
கச்சிமனதுடைய காமாச்சியைநினையான்
வள்ளிக்குந்தேவ மாலைருக்காகாமல்
கொள்ளிக்குப்பிள்ளையில்லாக் கொடும்பாவியென்றுசொல்லி

கவ்வியிழுத்துக் கடித்துப்புழுப்பொசிக்கும்
என்றுநீரெழுதி இராச்சியங்கள்தானறிய
அன்றுபறைசாற்றி அருளிவைத்தவச்சுதரே
வானமதுபூமியிலே மடமடனவீழாமல்
தானவனேஉன்விரலால் தாங்கிவைத்தபெம்மானே
வாரிவரமபைவிட்டு வையகத்தில்ச்சொல்லாமல்
காரியமாய்ப்பள்ளி கடலில்துயினறேனே
மானம்வரம்பு மகிமைகெட்டுப்போகாமல்
ஊனமில்லாதேயுறும் பொருளாய்நின்றேனே
சீவனுள்ளசெந்துகள்க்குத் தினந்தோறுமேபுசிப்பு
தாவமுடனீயுகின்ற தர்மத்திறவானே
வலியோரெளியோர்க்கு மண்ணோருஞ்செந்துகள்க்கும்
கலிதீரஞாயங் கண்டுரைக்கும்பெம்மானே
சீவசெந்துக்கெல்லாஞ் சீவனுமாய்நின்றேனே
பாவபுண்ணியமாய்ப் பாராகினறேனே
கண்ணாகிமூக்குக் கருணாகராகி
மண்ணாகிவேத மறையாகினறேனே
சாத்திரமும்நீயாய்ச் சந்திரனும்நீயாகி
சூத்திரமும்நீயாய்ச் சூழியாகின்றேனே
நச்சேத்திரமாகி நாள்க்கிரகம்நீயாகி
இச்சேத்திரமா இருக்கினறபெமமானே
மெய்யனுக்குமெய்யாய் மேவியிருப்போனே
பொய்யனுக்குபபொய்யாய் பொருந்தியிருப்போனே
இமசூட்சமாகி எங்கும்நிறைந்தோனே
நமசூட்சமான நாராயணப்பொருளே
செல்வத்திதுவாய்ச்செவ்வாகினறேனே
கல்வித்தமிழாய்க் கனபொருளாய்நின்றேனே
அண்டபிண்டமாகி அநேகமாய்நின்றேனே
கண்டயிடமுங் கண்ணுக்குள்ளானேனே
ஈசர்கொடுத்த வதுவரமானாலும்
வேசமிட்டுவெல்ல மிகுபொருளாய்நின்றேனே
நடக்க இருக்க நடத்துவதும்நீயல்லவோ
திடக்கமயக்கஞ் செய்வதுநீயல்லவோ
ஆருமொருவர் அளவிடக்கூடாமல்
மேருபோலாகி விண்வளர்ந்துநிற்போனே
எண்ணத்துலையா வதுசொரூபமது
கண்ணிமைக்குமுன்னே கனகோடிசெய்வோனே
மூவராலுஞ்சொரூபம் உள்ளறியக்கூடாத
தேவராலுந்தெரியாத திருவுருவங்கொள்வோனே
ஆயனேஎங்கள் ஆதிநாராயணரே
மாயனைகஞ்சன் வலிமைதனைமாற்றுமையா
பாவமாய்க்கஞ்சன் பலநாளாயெங்களையும்
ஏவல்தான்கொண்ட இடுக்கமதைமாற்றுமையா
ஊழியங்கள்செய்து உடம்பெல்லாமநோகுதையா

ஆழியடைத்த அச்சுரேளன்றுரைத்தார்
வாணனென்றகஞ்சன் மாபாவியேதுவினால்
நாணமதுகெட்டு நாடுவிட்டுப்போனோங்காண்
நரபாலனென்ற நன்றிகெட்டகஞ்சனுந்தான்
வரம்பானதுகுழறி மானமதுகெட்டோமே
இத்தனையுங்காத்து இரஞ்சிக்கவேணுமையா
முத்தியுள்ளதேவர் முறையபயமிட
பூமாதேவி புலம்பிமுறையமிட
நாமாதுலெட்சுமியும் நன்றாய்முறையமிட
நாராயணர்பதத்தை நாயகியுந்தெண்டனிட
சீராலட்சுமியும் செப்பினர்காணம்மானை
என்னைப்போல்பெண்ணல்லவோ இவள்தானிடுமுறையம்
வன்னமுள்ளமாலே மனதிரங்கிக்காருமையா
உடனேதானுதி ஓலமிட்டதேவருக்கு
திடமானபூமா தேவிக்குஞ்செபபலுற்றார்
வந்துபிறப்பேன்காண் மாபாரதம்முடிக்க
நந்திகுலம்வாழ நாம்பிறப்போம்கண்டீரே
சாரமில்லாக்கஞ்சன் தனைவதைத்துப்பூமியுட
பாரமதுதீர்ப்போம் பாரதமும்முத்திவிப்போம்
துவாராயுகத்தில் துரியோதனன்முதலாய்
தவருதவம்பன் சராசந்தன்வரையும்
அவ்வுகத்திலுள்ள அனியாயமுமடக்கி
செவ்வுகத்தமன்னவர்க்குச் சினேகமதுசெய்வதற்கும்
உங்களுக்குநல்ல உதவிமிகச்செய்வதற்கும்
அங்குவந்துதோன்றி ஆயருடன்வளர்வேன்
போங்களென்றுபூமா தேவியையுந்தேவரையும்
சங்குவண்ணமாலோன் தானேவிடைகொடுத்தார்
விடைவேண்டித்தேவர் மேதினியில்தான்போக
படைவீரரான பச்சமால்தானெழுந்து
ஆதிகயிலை அரனிடத்தில்வந்திருந்து
சோதிமணிதான் சொல்லுவாரம்மானை
வாணநரபாலனென்ற மாபாவிகஞ்சனினால்
நாணமதுகெட்டோமென்றே நாடித்தேவரெல்லாம்
பூமாதேவிமுதல் பொறுக்கமிகக்கூடாமல்
ஆமா அரியே ஆதிமுறயமென்றார்
முறயம்பொறுக்காமல் முடுகிஇங்குவந்தேனென்று
மறைவேதமாமணியும் மகிழ்ந்துரைத்தாரம்மானை
அதுகேட்டீசர் அட்சுதர்க்கேதுரைப்பார்
இதுகாண்மிகக்கேட்டிருக் கிதுகாண்இம்முறையம்
ஆனதால்க்கஞ்சன் அவனைமுதல்கொல்லவே
ஏனமதுபாருமென்று எடுத்துரைத்தாரீசுரரும்
பாருமென்றீசர் பச்சமாலோடுரைக்க
ஆறுமிகவொவ்வா அச்சுதருமேதுரைப்பார்
மேருதனில்முன்னாள் வியாகர்மொழிப்படி

பாருபார தமுதலாய்ப் பார தப்போர்தான்வரையும்
நாராயணராய் நாட்டில்மிகபிறந்து
வீரனபார்ததன் மிருதேரை ஓட்டிவித்து
சத்தபிலமுள்ள சராசந்தன்வரையும்
மற்றவரோடாறு வலியபலக்காரரையும்
கொல்லவகைகூறி குருநிலைய த்தானுரைத்து
வெல்லபிறப்பாரென வியாசர்மொழிந்தபடி
அல்லாமல்பினனும் ஆனதெய்வரோகணியும்
நல்லமகவான நாராயணர்நமக்கு
மகவாயுதிப்பேனென்று மகாபரனர்சொன்னபடி
தவமாயிருந்து தவிக்கிறுள்தெய்வகியும்
இபபடியேயுளள எழுத்தின்படியாலே
அபபடியேஎன்னை அனுப்புமென்றாம்மானை

விருத்தம்

முன்னேமொழிந்தபடி முறைநூல்தவறிப்போகாமல்
தன்னைமதலையென வெடுக்கத் தவமாயிருந்ததெய்வகிக்கு
சொனனமொழியுந்தவருமல் துயறமறவேதேவருக்கும்
எனனைபிறவிசெய்தனுப்பும் இறவாதிருக்கும்பெம்மானே

நடை

முன்னேவியாசர்மொழிந்த மொழிமாருமல்
என்னை அந்தபூமியிலே இபபோபிறவிசெய்யும்
செந்தமிழ்சேர்மாயன் சிவனுரையும்பணிந்து
எந்தனுக்கேற்ற ஈரஞ்சாயிரமமடவை
கனனியராய்எந்தனுக்கு கவரியிடநீர்படையும்
பன்னீர்க்குணம்போல் பைம்பொன்னிறத்தக்கவராய்
ஆயர்குலத்தில் அனேகமடவாரை
பாயமுறவாடிருக்கப் படைப்பீர்காணீசுரரே
உருப்பிணியாயலட்சுமியை உலகில்பிறவிசெய்யும்
கரும்பினியதெய்வக் கைலாசமாமணியே
சத்தபிலமுள்ள தத்துவத்தார்தங்களையும்
மெத்தவரம்பெற்ற மிகு அசுரர்தங்களையும்
எல்லோரையும் இப்பிறவி இதிலேவதைத்திடவே
அல்லோரையும்பிறவி ஆக்கிவையுமென்றுரைத்தார்
எந்தனுக்குநல்ல ஏற்றகிளைபோலே
விந்துவழிக்குலம்போல் மிகுவாய்ப்படையுமென்றார்
இப்படியேமாயன் இசையவந்தாசுரரும்
அப்படியேபிறவி அமைக்கத்துணிந்தனராம்
துணிந்த ரேமாயன் தொகுத்ததெல்லாமாராய்ந்து
அணிந்தாரமார்பன வகைபபடியேசெய்யலுற்றார்
தெயவகியாள்வயிற்றில் திருமால்பிறந்திடவே
ஐவருக்குறுதியிட அச்சுதருந்தோன்றுவராம்
கலக்கமுடன்விலங்கில் கவிழ்ந்திருந்தமாதுவுட
மலக்கமதுதீர மலரோன்பிறக்கலுற்றார்

ஐவருக்குபகாரம் அன்பாகச்செய்திடவே
தெய்வதிக்கும்ரோகணிக்கும் சிவகெதிகளீவதற்கும்
கஞ்சனுடவலுமைக் கட்டழித்துக்கொல்வதற்கும்
விஞ்சைவரம்பெற்று வீறுசெய்யும்பேர்களேயும்
சத்தபிலமுள்ள தத்துவங்கள்ளுளோரை
தத்தியாய்வீமனேயுந் தன்னுளாயாக்கிவிட்டு
கொல்வதற்குந்தேவருட கூமுறயந்தீர்ப்பதற்கும்
வெல்வதற்கும்பூமியுட விதனமதைமாற்றுதற்கும்
முன்னேவியாசர் மொழிந்தமுறைப்படியே
தன்னிகரில்லாத தையல்தெய்வகிவயிற்றில்
பிறக்கிருரென்று பெரியோர்கள்கொண்டாட
இறக்கிருர்போல்லாதார் என்றுமிகக்கொண்டாட
முன்பெற்றபிள்ளை முழுதுமவன்கொன்றதினுல்
வன்பற்றமாது மக்கையுந்தெய்வதியும்
மெத்தமயங்கி முனனம்விதிதன்னைநொந்து
கர்த்தன்செயலோ கரியமால்தன்செயலோ
என்னறந்தக்கன்னி இருபேருந்தான்புலம்பி
விண்டுசெல்லாத விதனமிகவடைந்து
அழுதுகரைந்து அவளிருக்கும்வேளையிலே
பழுதிலாதாயன் பாவைவயிற்றிலுற்றுர்
பகவதியுமங்கே பாவைஅயோதைவயிற்றில்
சுகபதியுமங்கே தோன்றினள்காணம்மானே
மாயனந்தெய்வதியாள் வயிற்றிலுற்றதவ்வளவில்
தேசமெல்லாம்நன்ருய் செழித்ததுகாணம்மானே
கெர்ப்பமுற்றுதெய்வதியாள் கெஞ்சுகவாயஞ்சுகமும்
நாபமதாய்த்தேகம் நாட்டமுடன்கோட்டியுமாய்
பத்துமாதந்திகைந்து பாலன்பிறந்திடவே



சுற்றுமதில்காவல்வைத்து துடியோர்வலுவிழுந்து
வசுதேவன்காலில்விட்ட வாய்த்தவிலங்குமத்து
விசுவாசமாகருட விலங்கதுதானுமத்து
தாள்திறந்துநேரந் தான்விடியுமுன்ணுக
கண்டாளேதெய்வதியும் கனத்தமதலைதன்னை
கொண்டாடித்தானெடுத்துக் கூறுவாரம்மானே
கண்ணனேசீவகனே கரியமுகில்மாயவனே
வண்ணனேதெய்வேந்திரனே மறையவனேதாயவனே
ஐயோநான்முன்பெற்ற அதிகமதலையெல்லாம்
மெய்யோதானிம்மதலைக் கொவ்வாதுமேதினியே
என்றுபிரியமுற்று ஏற்றமதலைதன்னை

அன்றுகொடுத்து அனுப்பினாள் அயோதையிடம்
கொண்டுவசுதேவன் அயோதைகுடிலேகி
கண்டுவயோதை கன்னியங்கேபெற்றிருந்து
பெண்மதலைதன்னைப் பூராயமாயெடுத்து
ஆண்மதலைதன்னை அயோதையிடமிருத்தி
வந்துவசுதேவன் மங்கைகையில்கொடுத்து
புத்திமிகநொந்து போயிருந்தானம்மானை
அந்தியிராவிடிந்து அலைகதிரோன்தோன்றியபின்
கந்தமணசுள்ள கஞ்சனவன்றனக்கு
ஒற்றாளாய்த்தூதன் ஒருவன்மிகவோடி
பெற்றாளுன்தங்கை பிள்ளையெனவுரைத்தான்
கேட்டாயோகஞ்சன் கெறுவிதமாயத்தானெழுந்து
பூட்டாரநெஞ்சன் பிள்ளைதனைவந்தெடுத்து
தூக்கிநிலத்தில் இண்ணாவேதானடிக்க
ஆக்கிரமத்தாலே அவன்தூக்கயேலாமல்
சோருறவேகஞ்சன் துடியிழந்துநிற்கையிலே
பாரழந்தோன்தங்கை பகவதியுமேதுசொல்வாள்
என்னையெடுத்து ஈடுசெய்யாதேகெடுவாய்
உன்னைவதைக்க உற்றவயங்கள் அச்சுதரும்
ஆயர்பாடிதன்னில் அண்ணர்வளருகிறார்
போய்ப்பாரெனவே போனாள்பகவதியும
கேட்டந்தக்கஞ்சன் இலேசமிகவாகி
வீட்டிற்குப்போயிருந்து விசாரமுற்றானம்மானை

விருத்தம்

அய்யோமுனிதான்சபித்தபடி ஆயர்பதியில்போகறியேன்
மெய்யோதளருதுடல்மெலியு மெல்லிமொழிந்தவிசளமதால்
கையோசலித்துக்காலயர்ந்து காலவிதியால்கருத்தயர்ந்து
பையோராளைத்தானழைத்துப்பார்க்கவிடுத்தான்கஞ்சனுமே

நடை

அய்யோமறையோன் அன்றுசபித்தபடி
சையோஇடையர் தன்பதியில்போகறியேன்
தங்கைவயிற்றில் செனித்தபிள்ளையானதுண்டால்
பங்கம்வரும்எந்தனுக்குப் பதறுதடாஎன்னுடம்பு
என்றுமனங்கருகி இயலழிந்தகஞ்சனுந்தான
அன்றொருதூதனையும் அனுப்பினனகாணம்மானை
வாராய்நீதூதா மற்றொருவரறியாமல்
பாராய்நீதூதா அயோதைபதியேகி
என்றந்ததூதனையும் ஏகவிட்டான்கஞ்சனுமே
நன்றுநன்றுஎன்று நடந்தானேதூதனுந்தான்
தூதன்மிகநடந்து தோகைஅயோதைமனையில்
புகுந்தந்தப்பிள்ளை பொற்றொட்டிலிலேகிடக்க
கண்டந்தத்தூதன் கஞ்சனுக்குநஞ்செனவே
விண்டுபறையாமல் விரைவாகப்போயினனே

போயந்தத்தூதன் பெறையுள்ளகஞ்சனுக்கு
வாயயர்ந்துசிநதை மறுகியசொல்லறுபறுன்
காமனேசிவகனே கண்ணனேசந்திரனே
மாமதனேசூரியனே மறையவனேயிறையவனே
நாமத்திறவானே நாராயணன்றனே
சோமத்திருவிழமோ தெய்வேவநிரனானே
ஈசனேவாசவனே இந்திரனேசந்திரனே
மாயனேவுன்னை வதைக்கவந்தமத்தானே
ஆசேசயெனக்கு அளவிடவுங்கூடுதில்லே
பேரோ அயோதை புதல்வனைககாணுதில்லே
தெய்வதியாள்தேகச் திருச்சுவடுதாணுகொஞ்சம்
மெய்பதியனை விஷ்ணுபபோல்முச்சிவடு
என்றந்தக்கஞ்சனுக்கு இத்தூதன்சொல்லிடவே
அன்றவனைக்கேட்டு அயர்ந்திருந்தானம்மானை
என்செய்வோமென்று இருக்குமந்தாளையிலே
முன்செறியும்பூத மூரிதனையேவியவன்
கொல்லவேவிட்டான குழந்தைதனை அம்மானை
வல்லபிலமுள்ள மாபூதம்பட்டபின்பு
பின்னுமேதான பில அரக்கரையேவி
கொன்றுவாவென்றான் குழந்தைதனை அம்மானை
கொல்லவந்தபேரைக் கொனறதுதானக்குழந்தை
வெல்லவிட்டபேரிழந்து மெலிந்திருந்தான்கஞ்சனுமே
ஆயர்குடியில் அரியோன்மிகவளர்ந்து
மாயன்விளையாடி மடந்தையராடுங்கூடி
வென்றுபால்வெண்ணை மிகப்போசித்துக்காடதிலே
கன்றுபசுமேய்த்துக் காளியன்றனைவதைத்து
கஞ்சனுடஏவலினல்க் காட்டில்வந்தசூரரையும்
துஞ்சுவிடக்கொன்று தொலைத்தனர்காணமமானை
ஆயர்க்குவந்த ஆபத்து அத்தனையும்
போயகற்றிநந்தன் பிள்ளையெனவேபிறந்தார்
மதுரைதனில்வாழும் மாபாவிகஞ்சனுக்கு
இறுதிவரும்போது ஏதுசெய்தான்கஞ்சனுமே
நந்திஇடயன்பாலன் சல்லஸ்ரீகிருஷ்ணனை
இந்திடத்தில்கொண்டுவர ஏவிவிட்டானரானே
கஞ்சனுடதூதன கண்ணர்ஸ்ரீகிருஷ்ணரை
அஞ்சலெனறுகண்டு அழைத்தாரும்மைக்கஞ்சனென்றான்
அந்தவிசனம் அரிந்தரியோன்மகிழ்ந்து
வந்தவிசனம் வாய்த்ததென்றெம்பெருமாள்
கூடச்சிலபேரைக் குக்களிக்கத்தான்கூட்டி
இடவியென்ற எக்காளசத்தமுடன்
குஞ்சரமும்பரியுங் குரவைத்தொனியுடனே
கஞ்சனரசரனும் கனமதுரைசென்றனரே
நாட்டமுடன்அயோதை நல்லமகன்வந்தேனென்று
கேட்டவிசனம் கெட்டியெனக்கஞ்சனுந்தான்

இங்கேநான்சென்றே ஏத்தவனைக்கொல்லவென்று
சங்கையத்தகோடி தத்திபடையுடனே
கொல்லவிட்டகஞ்சன் குதிரை உதளம்படையும்
எல்லாந்திருமால் இறக்கவைத்தாரம்மானை
கஞ்சன்படைகள் கட்டழிந்துபோ வுடன

கஞ்சன்பாடு

வஞ்சகனும்வந்து மாயனுடனெதித்தான்
மாயனுடபோரும வஞ்சக்கஞ்சன்போரும்
தேசமெல்லாமதிரச் சென்றெதுத்தாரம்மானை
மாயனுக்குக்கஞ்சனை மாட்டாமல்க்கிழ்விழுந்து
உபாயமிட்டுக்கஞ்சன் மார்பிலேதானிருந்து
கஞ்சன்குடலைக் கண்ணியறத்தானெபிடுங்கி
வெஞ்சினத்தால்மாயன் விட்டெறிந்தார்திக்கதிலே
கஞ்சனையுங்கொன்று கர்ம மதுசெய்தவரும
தஞ்சமிட்டதேவருட தனனிடுக்கமுமாற்றி
மாதாபிதாவுடைய வன்சிறையுந்தான்மாற்றி
சீரானஉக்கிர சேனனையும்ஆளவைத்து
அவரவர்க்குநல்ல ஆனபுத்திசொல்லிமிக
எவரெவர்க்கும்நல்லா இருமென்றுசொல்லியவர்
திரும்பிவருமவேளையிலே தீரன்சராசந்தனவன
எந்தனமருமகனை இவனேதான்கொனறதென்று
வந்தனனேமாயனுடன் வாதாடியுத்தமிட
அபபோதுமாயன ஆராய்ந்துதான்பார்த்து
இப்போதிவனை ஈடுசெயயக்கூடாது
சத்தபலமல்லோ சராசந்தனவந்தனுக்கு
கொத்தவலீமனல்லோ கொல்லவகையுண்டுமென்று
இதுவேளைதப்பமெனறு எம்பெருமாள்தானடந்து
சேதுவோடுகூடிச் செகலதுக்குளெகிரே?
கடலுக்குள்வந்து காத்தமதிலிட்டவரும்
திடமுடனேமாயன துவரம்பதியிருந்தார்

விருத்தம்

பூதனைச்சகடனேடுப் பின்னுள்ளவரக்கர்தம்மை
சூதனையெல்லாங்கொன்று சுத்தமாய்மதுரைபுக்கி
நீதமேயில்லாக்கஞ்சன் நெஞ்சையும்பிளந்துகொன்று
கூதவன்துபரயன்பதியில் குணமுடனிருந்தாரன்றே

நடை

கஞ்சனையும்மற்றுமுள்ள காலவுணர்தங்களையும்
வஞ்சகமாயுள்ள வாணாசுரபாலனையும்
இம்முதலாயுள்ள ஏற்றவரக்கரையும்
அமமுதலாயுள்ளவரை அரியோனறுத்தனராம்
சத்தபிலமுள்ள தத்துவத்தார்தங்களையும்
விக்ககனார்கொல்ல மேல்நினைத்தாரம்மானை
கஞ்சன்வலிமைக் கட்டழித்துத்தேவருக்கு

அஞ்சலருளி ஆழிக்குள் வீற்றிருந்தார்
வாரிக்குள் கோட்டை வளைந்துமணி மடைவைத்து
வீரக்குருநாதன் வீற்றிருந்தாரம்மானை
மாயன் துவரம் பதிவாழ்ந்து தானிருக்க
நாயனுக்குவந்த நல்லவுருப்பிணியை
விதியை அறியாமல் மேலும் மாருராசனுக்கு
திருமாங்கிலியஞ் சேர்க்கத்துணிந்தனராம்
அப்போதுநாரதரும் அரியோனடிபணிந்து
இப்போதுஉந்தனக் கிசைந்தவுருப்பிணியை
பாணிக்கிரணம் பண்ணப்பறையடித்தார்
நானிதையுங்கேட்டு நாடியுரைத்தேனென்றார்
அம்முனிவன் சொல்ல அரியோன் மிகக்கேட்டு
இம்முனிவன் போக இசைந்தார்காணம்மானை
மோகத்திருமாலே முக்கோடிபொன்னாதுக்கு
வேகத்தாலுண்டுபண்ணி விரைவாய்கொடுநடந்தார்
முழுத்திருமாலேதன்னை மொய்குழலாள்கன்னியுட
கழுத்திலேயிட்டுக் காமக்கண்ணீட்டிடவே
மாயனுக்குமோகம் மாதுக்குமும்மோகம்
தேசமெல்லாமோகஞ் சென்றதுகாணம்மானை
முன்னாலேகேட்டு முகூர்த்தமிட்டபேர்களையும்
அன்றைநாளைகொன்று அவன்படையுந்தானறுத்து
உருப்பிணிக்குத்தேவரெல்லாம் ஓலமிடமாலையிட்டு
விருப்புகழ்ந்தமாயன் விமானமதிலேறி
மனேன்மணியையுங்கூட்டி மாயன்படையுடனே
விநோகைமால்தானும் விரைவாய்நடைநடந்து
கடலுக்குள்சென்றிருந்தார் காயாம்புமேகவண்ணர்
இப்படியேமுன்னாம் இசைந்திருந்தபெண்ணையெல்லாம்
அப்படியேமாலையிட்டு அமர்ந்திருந்தாரம்மானை

விருத்தம்

ஆயர்குடியில்வளர்ந்துவெண்ணை அருந்திமுறைமாதரை
யணைந்து
தீயன்கொடியகஞ்சனையுந் திருக்கியறுத்துயசுரரையும்
உபாயமுடனேகொலையடக்கி உருப்பிணிமுதலாய்பெண்களை
தேசம்புகழமணமுகித்துத் துவரம்பதியிலிருந்தனரே [யும்

நடை

உருப்பிணிமுதலாய் ஒத்துவந்தபெண்களையும்
இருப்பொருத்தமபூட்டிச் செகலுக்குள்வீற்றிருந்தார்
கஞ்சனிடுக்கங்கள் களித்தந்தகாரணரும்
பஞ்சவர்க்குநன்மைசெய்யப பார்த்தனர்காணம்மானை
பிறந்ததிரியோதனனும் பிறவியொருநூற்றுவரும்
சிறந்தபுகழ்ஐபேருந் தேசமதில்வாழ்ந்து
அவரவர்க்குத்தக்க ஆர்க்முள்ளவித்தைகற்று
எவரெவரும்மெய்க்க இவர்வளர்ந்தாரம்மானை

வளர்ந்துநிமிர்ந்து வரும்வேளையானதிலே
இழந்துருகிவாடும் இசைகெட்ட மாடாவி
துடியாய்மனுவளக்குச் சொல்லித்துரியோதனனும்
முதுமையினைக்கூடி உலகாண்டானம்மானை
பாவியிருந்து பாராண்டசீமையிலே
கோவுகள்க்குநீர் குடிக்கக்கிடையாது
தர்மரவ்வீமன் விசையன்சகாதேவனை
நன்மைபரிநகுலனை நாடானநாடதுதான்
குருநாடெனவே கூறுவரானகரு
திருநாடுதன்னுடைய சிறப்புக்கேளம்மானை
துரியோதனனதி செலுத்தும்அஸ்தினாபுரத்தில்
பரிவெட்டகமும் பலமிருகமானதுவும
பசியால்த்தகையால் பச்சிபறவைமுதல்
விசையாய்த்தருநகரில் மேவித்தகையாறிவரும்
அஸ்தினாபுரத்தில் அரசேதெசியாவரெல்லாம்
பத்தியாயுள்ள பஞ்சவர்களாண்டிருக்கும்
குருநாடுதன்னில்க் குழாங்கொண்டிருந்தனராம்
திருநாட்டுக்கொவ்வுஞ் சிறந்தகுருநாடு
ஒருநாடுமந்தக் குருநாட்டுக்கொவ்வாது
பருநாடுபத்தியுள்ள பஞ்சவர்களனோடு
தேவருமவரனவரும் தெய்வத்திருமாலும்
மூவருமநன்றாய் உகந்தகுருநாடு
ஆளியேயாடுசிங்கம் ஆனைருஞ்சுப்புள்ளரும்
வெளிசமாயுள்ள வெகுஐந்துதலையரவம
வெள்ளானைவெள்ளை மிருதசாரையானதுவும்
துள்ளாடிநித்தம் துலங்கிவருமனனோடு
அன்னுடுநாடு அரநாட்டுக்கீடாகும்
பொன்னுடுநாடு புத்தியுளளார்தன்னுடு
அரனருளைப்பெற்றிருக்கும் அய்வருடனன்னுடு
இரவலர்க்குதாயும் எற்றதர்மர்தன்னுடு
மாயனருள்பெற்ற மனனவர்கள்தன்னுடு
தாய்நாடுவான தமிழக்குருநன்னாட்டில்
மெய்யில்லாமன்னனுக்கு மேதினியில்பேர்பாதி
பொய்யில்லாததர்மருக்குப் பூபாதியாகவேதான
ஆண்டார்சிலநாள் ஆளுக்கோர்பங்காக
தாணடவராயர் தண்மையாலம்மானை
இப்படியேஆண்டு இருக்குமந்நாளையிலே
முப்படியேவிட்டகுறை முடிவாகுமநாளையிலே
வணங்காமுடியுடைய மன்னனாந்துரியோதனனும்
இணங்காமல்பிணங்கி ஏதுசெயதாரம்மானை
தலைவீதம்பங்கு தான்வைப்பவண்ணமுந்தான
நிலைபரிந்துவிட்டோமா நினைவுசற்றுமில்லாமல்
இனியவன்பூமிதனை யாம்பறித்து அய்வரையும்
தனியேவனத்தில் தானனுப்பிராச்சியத்தை

அடக்கியரசாள்வேனென்று அவன்நினைந்துமாபாவி
உடக்கிச்சூதுபொரு தோட்டிவைத்தான்ஐவரையும்
பாவிதுரியோதனனும் பஞ்சவரையும்விரட்டி
சோவிதமாய்நாட்டைச் சுற்றியரசாண்டிருந்தான்
வனவாசந்தனனில் வந்திருந்துஐபேரும்
இளமானதுபோல் இருந்தார்குகையதிலே
அப்போதுவேத வியாகரவரறிந்து
செப்போடுவொத்த திருமாலருகேகி
மாயவரேபஞ்சவர்க்கு வாரமதாய்த்தானிருந்து
தீயதுரியோதனனைச் செயிக்கவந்தபெம்மானே
பஞ்சவரைமாபாவி பழுதுசூதாடிவென்று
வஞ்சகமாய்ப்பாவி வனத்தில்துரத்திவிட்டான்
அய்பேரும்பத்தினியும் அன்னைபிதாவுடனே
பைப்போலலறிப் பசித்திருந்துவாடுகிறார்
அன்றுமகாமேர்பில் அடியேனுரைத்தபடி
இனறுபாரதமும்முடிக்க எழுந்தருளும்நாளாச்சு
என்றுமுனிதான் எடுத்துரைக்கமாயவரும்
அன்றுதிருமால் ஐபேரிடமேகி
வேதவியாகாரும் வேயூதும்வாயனும்
சீதகுணத்தர்மர்முன்னே சென்றனர்காணம்மானே
நாராயணர்வரவே நல்லதர்மாதிகளும்
பாரானதையாண்டோன் பதம்பூண்டாரம்மானே
கால்பிடித்துத்தர்மர் கண்ணர்பதந்தொழவே
மால்பிடித்துத்தர்மரையும மார்போடுறவணைத்து
பதருதேபாண்டவரே பத்தியுள்ளபஞ்சவரே
கதருதேஐவரையும் காத்தருள்வோமென்றுரைத்தார்
அப்போதுதர்மர் அச்சுதரையுமபோற்றி
இப்போதுஎங்களுக்கு ஏற்றபசிதீர
சூரியபாண்டந்தனை யழைத்துச்சுத்தமனே
ஆரியமான அன்னமருளுமெனறார்
அப்போதுமாயவனார் ஆதிதனைநினைத்து
மெய்ப்பாளபாண்டம் மிகவருத்திவோரரியும்
கையாலெடுத்துக் களைத்ததர்மர்கைகொடுக்க
அய்யாயிரங்கோடி ஆள்க்கள்மிகவந்தாலும்
என்பேரிதான் எனைநினைந்துபாண்டமதில்
அன்பரேநீரை அதுநிறையவிட்டவுடன்
என்பேரியை எடுத்ததிலிட்டதுண்டால்
அன்பாகயெல்லோர்க்கும் அமுதாய்வளருமென்றார்
இத்தனையுஞ்சொல்லி எந்தாரேயன்பருக்கு
சித்திரம்போல்வேண்டி தெளிந்திருந்தாரம்மானே
மாயனுஞ்சொல்லி மண்டபத்திற்போயினபின்
தூயவியாகருஞ் சொல்லுவார்தர்மருடன்
பஞ்சவரேஉங்களுக்கு பச்சமாலின்றுமுதல்
தஞ்சமென்றுசொல்லித் தான்போனார்மாமுனியும்

மாமுனியும்போக வனத்திலந்து பேரும்
ஓமுனியே தஞ்சமென்று உகந்திருந்தாரம்மானை
பாவிதுரியோதனனும் பஞ்சவரைக்கொல்லவென்று
ஆவியவனசெய்த அனியாயமத்தனையும்
ஒக்கவொருமிக்க உரைக்கக்கேள் வொண்ணுதலே
நஞ்சைக்கலந்து நல்லதயிரென்றீந்தான்
அஞ்சலென்றுமாயன் அதுகாத்தாரம்மானை
பாதாளம்வெட்டிப் பார்வீமனையோட்டி
நீதாளமான நெடியோனதுகாத்தார்
கன்னிதனில்ப்பாவி கழுநாட்டியைவரையும்
கொன்றுவிடவைத்தான் குனறெடுத்தார்காத்தார்
அரவலையும்விட்டு அருள்வீமனையும்வதைத்தான்
விரைவுடனேமாயன் விசந்தீர்த்துக்காத்தனரே
தண்ணீரில்நஞ்சைவிட்டுச் சதித்தானே ஐவரையும்
மண்ணீரேழுமளந்த மாயனதுகாத்தார்
பூதமதையேவிப் போன்றவைத்தானமாபாவி
நீதத்திருமால் நிலைநிலுத்திக்காத்தனரே
இப்படியேபாவி இடறுசெய்தஞாயமெல்லாம்
அப்படியேமாயன் காத்தாண்டனரே அவ்வரையும்
பாவியவன்செய்ததெல்லாம் பலியாமலேபேர்க்கு
சோவிதமாயன் துணைசெய்தாரம்மானை
பின்னுமங்கபஞ்சவர்க்கு பெரும்பாவிசொன்னபடி
பனிரண்டாண்டு பரிவாய்க்கழித்தபின்பு
மாயன்தூதுபோனார் வஞ்சமில்லாபஞ்சவர்க்கு
தீயதுரியோதனனுந் திருமாலைப்பாராமல்
தாள்போறபுத்தி தானுரைத்துப்பஞ்சவர்க்கு
வாழ்பெறப்பூமி வாரென்றார்வாமனுமே
எள்போலிடங்காண் ஈயேனென்றுரைத்தான்
மாயனையும்பாவி வாப்போவெனபேசி
ஈயேனெனவுரைத்த இயல்புகேட்டெம்பெருமாள்
கர்னன்பிலமுங் கடியவிதுரன்பிலமும்
மன்னன்சிறுவீஸ்மர் வாழுந்துரோணன்பிலமும்
தென்னன்திரியோதனன் பிலமுந்தானழித்து
வன்னவிசயனுக்கு வாளிபலகொடுத்து
வீமனுக்குநல்ல விசைதண்டாயுதங்கொடுத்து
தாமன்சகாதேவனுக்கு சத்திசூலங்கொடுத்து
நகுலனுக்காயிதமும் நல்லபரிகொடுத்து
புகலானதர்மருக்குப் பொறுமைஅரிகொடுத்து
மங்கைதுரோபதைக்கு வாய்த்தகனல்கொடுத்து
செங்கையில்பாரதத்தை சேவித்தார்மாயவரும்
மாயருடகையில் வளர்ந்ததிருமுடியில்
ஓசையிடவொன் றெருத்துதேபாரதப்போர்
ஐபேருடபடையும் அரவக்கொடியோன்படையும்
கைப்போரும்வில்ப்போரும் கணையோடுவாள்ப்போரும்

அம்புபோருங்கருவி நச்சுப்போரும்பொருது
சர்னன்சகுனி கனத்தவலுசல்லியனும்
மன்னன்சிறுவீஷ்மர் வாய்த்ததுரோணர்முதல்
சராசந்தன்வரையு' சத்தியக்கீசனும
பூராசவீமன் பெலியிட்டானம்மானே
இத்தனைபேர்மாண்டால் இருப்பாரோநூற்றுவரும்
அத்தனைபேரை அறுத்தானருச்சுனனும்
திரியோதனன்படைகள் சேரமடிந்தபின்பு
விரிமாறுதாவி வெளியில்வந்தான்மாபாவி
தம்பிபடைகள் தலைவர்புதல்வர்முதல்
வம்பிலிறந்தார்சே வாழ்வதேதனென்றுசொல்லி
எல்லாரிறந்திடிலும் எண்ணமில்லையென்றிடலாம்
வெல்லாரும்வெல்லா விசகர்னன்மாண்டதிறல்
இருப்பதோபூவுலகில் இறப்பதுவேநன்றெனவே
விருப்பமுள்ளகர்ணனைக்தாண வெற்றிகொண்டஅர்ச்சுனனை
இன்றுகொல்லவேணுமென்றெழுந்தான் படைக்கெனவே
அன்றுபாலதானதிந்து அருச்சுதனைத்தானழைத்தார்
இத்தனைநாளும் என்னபோர்செய்தாய்நீ
அதிலுன்மேல் அரவக்கொடியோனும்
வாருன்படைக்கெனவே வாள்வீமனையழைத்து
உந்தனுக்கல்ல உறுவேட்டையின்றடவா
எந்தனுக்கின்றுமுதல் இளைப்பாறலாமடவா
வண்ணமகள்தனக்கு மயிர்முடித்தலின்றடவா
எண்ணமற்றுதர்மர் இருப்பதுவுமின்றடவா
என்றந்தவீமனுக் கிசைந்தபோர்க்கோலமிட்டு
வண்டுசுற்றுமார்பனுக்கு வரிசைமிகக்கொடுத்து
வீமனுடதண்டதுக்கு விசைமால்விசைகொடுத்து
போமெனவேவீமனுக்குப் போர்க்குவிடைகொடுத்து
விசையன்டரிகுலன் வெற்றிச்சகாதேவனை
இசையொத்ததர்மரையும் இனறகலங்கில்லுமென்று
வீமனையுங்கூட்டி வெளியில்அரிவந்திடவே
காமக்கனல்மீறிக் கரியோனெழுந்ததுபோல்
வந்தானேபாவி வணங்காமுடியோனும்
சந்தானமான தமிழ்வீமன்ருன்மாறி
எதிர்த்தாரிருவர் எனக்கெனக்கென்றேதான்
செதுத்த ன்வலுமை செய்வதுகேளம்மானே
மண்விண்ணதிரும் வானமதுதானதிரும்
திண்திண்ணெனப்பூமி தெய்தோமெனவதிரும்
மலைகளசைந்து மடமடெனவோசையிடும்
கலைகள்கரிகள் கதறிமிகவோடும்
அலைகள்சிதறி அங்குமிங்கோடிடவே
இலைகளுதிர்ந்து இடிந்துவிழும்மாமரங்கள்
தூளெழும்பிச்சூரியனைத் தோன்றுமலைமறைக்க
வேளெழும்பிக்காட்டில் விழுந்தலறிஓடிடவே

தவமுனிவர்செட்டை தானழிந்து தட்டழிந்து
திசைமாறித் திக்கில் திரிந்தலைந்து போயினரே
வேதாசிவனும் வெம்மருண்டு தானபதற
நாதாந்தமேர்தும் நல்மறையோன தானபதற
துரியோதனன்போருஞ் சுத்தவீமன போரும்
எரியேரடெரிதான் எதிர்த்துப்பொருதாப்போல்
ஒண்ணுக்கொண்ணு விலகிப்புறஞ்சாயாமல்
மண்ணும்விண்ணுமதிர மணடியுத்தமிட்டான்
திரியோதனனடிக்க துடிவீமன் சாயாமல்
மரியாதைவீமன் மாறியவனடிக்க
அடிக்கயவனபிடிபபான் அபபடியேசண்டையிட்டு
சாயாவிதத்தை தானறிந்திருபேரும்
வாயால்சபதம் வகுத்தேபொருவோமென்று
கட்டாளகள்ளன் கசடன்வெகுநெடும்பன்
துட்டாளனான துரியோதனனுரைப்பான்
இத்தனை நேரம் இருபேரும்சண்டையிட்டு
புத்தியில்லாவண்ணம் பொருதோமேவம்பதினல்
உனபலமுமுன்னுடைய உயிர்ப்பலமும்நீயுறைத்தால்
எனபலமுமென்னுடே இயமபுகிறேனென்றுரைத்தான்
அப்போதுவீமன் அவனிலமைஅத்தனையும்
தப்பாமலேயுரைத்தான சகலோரறிந்திடவே

திரியோதனன் பாடு

கேட்டுத்திரியோதனனுங் கெளுநீயென்பலங்கள்
தீட்டுகிறேனென்னிடது செய்யபுறமென்றுரைத்தான்
கள்ளனகவுசலமாய்க் கபடுரைத்தஞாயமெல்லாம்
எள்ளளவுபோலே இசையாதவீமனுக்கு
மெய்யுரைதத என்று மேலான பார்வீமன்
கையாரத்தண்டால்க் கனக்கவடித்தனனே
அடிக்கவேவீமன் அசையாமல்மற்றொனும்
திடக்கமுடனே செனறவ்வீமன மேரில்
மாறியவனடிக்க வாட்டமுற்றுப்போர்வீரன்
தேறியேமாயவரைச் சிந்தைதனில்நினைக்க
திலர்தமுள்ளமாயன் செயவீமனை நோக்கி
வலதுதுடைதனிலே மாயன்கண்காட்டிடவே
அடித்தானேவீமன் அதுதானகுறியெனவே
துடித்தான்கிடாய்போலத் துரியோதனனவிழுந்து
மூடத்தமாமரம்போல் முறிந்துகிழ்த்தான்விழுந்து
கூடத்தவுயிர்போல் உலேந்துவீழ்ந்தனனே
அப்போதுமாயன் அவக்கொடியோனிடத்தில்
தப்பாமல்வார்த்தையொன்று தான்கேள்க்கப்போயினரே
முன்னேபிறப்பில் முடிஇனங்கையாணடிருந்தாய்
தென்னனிராவணனாய்ச் சிரசுபத்தாயிருந்தாய்
அப்போதுநீதான் அநியாயஞ்செய்ததினல்

செப்போடுவொத்த ஸ்ரீராமனாய்நான்தோன்றி
பத்துச்சிரசறுத்து பார்மீதிலேகிடத்தி
உத்துஒருவசனம் உரைத்ததேதனுனுன்னிடத்தில்
தம்பியாலென்னைச் சரமறுத்தாயல்லாது
எம்பிராணன்வதைக்க ஏலாதுவென்றனையே
தம்பியொருநூற்றேடே தான்படைத்துடனேயுந்தான்
கொம்பிலேராரனை விட்டுக் கொன்றேனைவுன்னையென்றார்
எனறுரைக்கப்பாவி இகழ்த்துவானப்போது
தண்டுகொண்டேயடித்த தமிழ்வீமனல்லாது
இன்றுன்னுலேலாது இடையாபோவென்றனனே
அப்போதுமாலும் அதிககோபம்வெகுண்டு
துப்புரைகள்தான்கேட்ட தீயனுக்கங்கேதுரைப்பார்
உனையின்னமிந்த உலகிலொருபிறவி
சின்னபின்னமாகச் சிரகொன்றதாய்படைத்து
அறிவுபுத்தியோடு ஆணுபங்கள் தன்னோடும்
செறியுங்கலையோடுங் சிறப்போடுந்தான்படைத்து
என்பேரிலன்பு இருக்கவொருசாஸ்திரமும்
தன்போதமறியத் தான்படைப்பேன் கண்டாயே
முன்னையுனக்கு உற்றபிறப்பாறதிலும்
என்னைநினைப்பு எள்ளளவுங்கம்பவில்லை
ஏழாம்பிறப்பில் என்னைநினையாதிருந்தால்
பாளரவாய்மேலும் பகையில்லையெந்தனுக்கு
என்றுதிருமால்இயம்ப துரியோதனனும்
அன்றவனைக்கொன்று அய்வரையுந்தான்வருத்தி
கர்மச்சடங்கு கழிக்கவிடைகொடுத்தார்
தர்மமுள்ளகர்ணனுக்கு சாஸ்திரத்திலுள்ளமுறை
எல்லாச்சடங்கும் இருவருக்கும்நூற்றுவர்க்கும்
உல்லாசமுள்ளதர்மர் ஒக்கமுறைசெய்தனராம்
முறைசெய்துகர்ணனுக்கு முத்திமோக்ஷங்கொடுக்க
மறைதேர்ந்தமாயன் வந்தாரவனருகே
அப்போதுவேத வியாசரவரங்குவந்து
செப்போடுவொத்த திருமாலோடேதுரைப்பார்
பாவியோடுகூடி படைசெய்துகர்னனுட

கர்ணனுக்கு மோச்சமீதல்

ஆவிக்குமோக்ஷமருளுவதோ டாயவரே
என்றுரைக்கவியாசர் எடுத்துரைப்பாரெப்பெருமாள்
நன்றுநன்றுமாமுனியே நானுரைக்கக்கேட்டருளாய்
தொண்டுபண்ணிநின்ற துய்யவானரங்களிலே
வல்லபிலமுள்ள வாலியிவன்முற்பிறவி
நல்லவனாய்முன்னே நாட்டிலிருக்கையிலே
ராவணனோடேகூடி ராமசரத்தாலிறந்தான்
ஸ்ரீராமனாய்நானிருந்து, செயித்தவிதமறிந்து
வந்துபணிந்தானே வாலியவனென்காலில்

நன்றியுள்ளமாலே நானுன்னேவலனாய்
முன்னேநீர்அமுர்தம் உவரிதனில்கடைய
என்னேவொருபுறத்தாய் யேவல்கொண்டமாயவரே
பத்துத்தலையுள்ள பாவியந்தராவணனை
கொத்திச்சிறமறுத்துக் கொல்லேனோநானடியேன்
என்றந்தவாலி இறஞ்சிநின்றுனெனையுமே
அன்றுவாலிதனக்கு அருளினதுநீரேகளு
எனக்கேவலாக இப்பிறவிநீபிறந்து
தனக்கேராப்பாவிதனைச் சங்காரங்கொண்டதிறல்
இனிமேலவனோடிருந்தென் சொல்கேள்க்கவைத்து
கனியானமோச்ச கயிலாசமேதருவேன்
என்றவனையழைத்து இப்பிறவிஅய்வரிடம்
முந்தியுதித்து முதல்ப்பிறவிசெய்தவனை
அரவக்கொடியோனிடத்தில் அனுப்பிவைத்து
இரவலர்க்குமீந்து என்புத்தியுள்ளிருத்தி
அன்னைபிதாசொல்லசராமல் அய்பேருக்கு
தன்னேஒருகணைமேல் விடேனென்றஉத்தமன்காண்
ஆனதால்முன்னே அருளிவைத்தசொல்ப்படிக்கு
மானமாய்மோக்ஷம் வகுத்தேனிவனுக்கென்றார்
நல்லதுதானென்று நல்முனிவன்தான்மகிழ்ந்தான்
எல்லைவைத்தபாரதப்போர் இன்றுமுடிந்துதென்று
கொண்டாடிஐபேருங் குருமுனியைத்தெண்டனிட்டு
வண்டாடும்வண்ணமகள் மயிர்முடித்துநீராடி
ஐபேரும்பத்தினியும் அச்சுதரையும்போற்றி
மெய்பாகமான வியாகரரையுங்குவித்து
ஆண்டார்கள்சீமை அட்சுதனார்உண்டெனவே
பாண்டவர்கள்நன்றாய் மாராளும்காளையிலே
வைகுண்டமேக மனதிலுற்றெமபெருமாள்
பொய்கொண்டவேசம் பொருந்திப்பொருப்பேறி
ஆங்காரமோகத் அம்புக்கணுவாலே
ஓங்காரமாமுனிவன் விடையேற்றுத்தான்மெலிந்து
பஞ்சவர்க்குள்ள பாரப்பிலன்களையும்
துஞ்சிவிடவாங்கித் தோற்றமுள்ள அய்வருக்கு
மேஃநடப்புள்ள விசளமெல்லாம்தானுரைத்து
நூல்நடந்துவாருமென்று மோக்ஷத்திறவோனும்
சீரங்கமாபதியில் செல்கின்றவப்பொழுது
சாரங்கர்செய்த தன்மைசேளம்மானை
அரிகோணமாமலையில் அயோதவமுர்தகெங்கை
பரிகோணமாமலையின் பகுத்துரைக்க்கூடாது
தேன்கமுகுமாங்கமுகு தென்னங்கமுகுகளும்

சான்றோர் பிறப்பு

வான்கமுகுவாழை வழுவிலாநர்க்கமுகும்
சோலைமாமுஞ் சுகசோபலமரமும்

ஆலமரமும் அகில் தேக்குமாமரமும்
புன்னைமரமும் புஷ்பமலர்க்காவும்
தென்னமரமுஞ் செஞ்சந்தனமரமும்
மாவுபலமரமும் வாய்த்தபலாமரமும்
தாவுமரத்தின் தன்மைசொல்லக்கூடாது
சோலையிலேவீத்திருக்குஞ் சீர்பறவையின்பெருமை
தூலமின்னதென்று சொல்லத்துலையாது
பார்பதியும்ஈஸ்பரனும் பாவித்திருப்பதுபோல்
தேர்பதியுமேடைகளும் சிங்காசனங்காணும்
அலையில்த்துயில்வோர் அங்கிருந்தபாவனைபோல்
நிலையில்முனிவோர் நிர்ப்பதெண்ணக்கூடாது
கைலையிதென்று கண்ணுனமாமுனிவர்
ஒயிலாகக்கூடி உவந்திருப்பதவ்வனத்தில்
வைகுண்டங்காண வந்தார்மியெல்லோரும்
மெய்குண்டங்கண்டமென்று இருப்பாரவ்வனத்தில்
அப்படியேசல்ல அயோக அமுர்தவனம்
இப்படியேநன்றாய் இயல்மாயிருப்பதுதான்
பட்டாபுரங்கிளக்குப் பூங்காவுநெர்மேக்கு
வட்டமுள்ளஸ்ரீரங்கம் வடக்குவனந்தெக்காக
தெக்கேதிரிகோணஞ் செங்காவுநேர்வடக்கு
மிக்கவனகமேக்கு மிருத்தவனம்நேர்கிழக்கு
இவ்வெல்கைசூழ்ந்த வயோக அமுர்தவனம்
அவ்வனத்திலுள்ள அமுர்தகெங்கையானதிலே
குளித்துவிளையாடி கூடந்தனிலிறங்கி
களித்துமகிழ்ந்து கையில்நீர்தான்திரட்டி
ஈசருடமுடியிலிட்டுக் கரங்குவித்து
வாசமுடன்கைலை வாழ்ந்திருக்கும்மாமடவார்
மரகதவல்லி வள்ளிசலிகையெனும்
சரகதக்கன்னி சரிதைஅரிமடவும்
ஏழுமடவும் எண்ணெண்ணுமிப்படியே
நாளுமுறையாய்நடத்திவருமநாளையிலே
மாலறிந்துகன்னிமுன்னே வந்தார்சன்னுசியென
ஏலறிந்துகன்னி இவரல்லசரென்று
சாய்ந்துவிலகித் தையல்நல்லார்போகுகையில்
ஆய்ந்துதெளிந்த அச்சுதருமுனனேகி
பலகாளுமீசுரர்க்குப் பாவையரேநீங்களுந்தான்
செலந்திரட்டிமேல்முடியில் செய்தீரனுஷ்ட்டானம்
இனியெனக்குநீங்கள் எல்லோருமிக்கவந்து
கனிநீர்தனையுமென்றலையில் கவிழுமென்றுமெம்பெருமாள்
அப்போதுகன்னி எல்லாருமேதுரைப்பார்
எப்போதுந்தாஞய் இருப்பவர்க்கல்லாது
மாயவர்க்குமற்றுமுள்ள மயேசுரர்தன்தனக்கும்
மாயமுள்ளவானவர்கோன் மறைமுனிவர்தன்தனக்கும்
எருதேறிநித்தம் இறவாதிருக்கின்ற

ஒருவனுக்கேயல்லா தாளியங்கள்வேறில்லையே
கேட்டுச்ஸ்ரீகிருஷ்ணருங் கிளிமொழியேயடேதுரைப்பார்
ஓட்டிலிறந்துண்ண ஊர்வழியே தான்திரியும்
ஆண்டிக்கேயல்லா அரவணையிலே துயிலும்
காண்டீபனுக்கேவல் கருதோமெனவுரைத்தார்
கோதையரேகெங்கை இனிச்சுருட்டுவதைப்பார்ப்பமென
ஆகட்டென்று அட்சுதருங்கோபமுற்று
மேலோகமாயிருக்கும் வேதயேழுவுகத்தில்
சாலோகமான சத்திபரலோகமதில்
ஆதிரூபமில்லாத ஆகாசுசத்தியொன்று
சிரூரூபமான சிவலோகமானதிலே
மெய்கொண்டவாஞர் வித்தொன்றுதானதுவும்
வைகுண்டலோகமதில் வாய்த்ததர்மியானதிலே
தர்மியொருவித்துத் தானெடுத்துவேதாவின்
சென்மித்தெடுத்தார் சிவரிசியொன்றதிலே
தபோதனராய்ச்சண்டன் தன்னுகத்தில்வாழுவரில்
சகோதரராயென்று தானெடுத்தாரம்மானை
சொக்கலோகமதிலே ஸ்ரீராமர்தன்றனக்கு
பக்குவங்களாகப் பணிவிடைகள்செய்வோரில்
நல்லகுலமான நயனவித்தொன்றெடுத்து
வெல்லமாகோன்வாழும் வெற்றித்தெய்வலோகமதில்
சத்தியுள்ளவித்தொன்று தானெடுத்தாரம்மானை
இப்படியேமேலோக மேழுயுகமதிலும்
அப்படியேயுள்ள ஆர்க்கமுள்ளவித்தேழு
எடுத்துத்திருமால் இருதயத்திலேயடக்கி
கொடுத்துநின்றதாதாவைக் குவித்துப்பதம்போற்றி
கன்னியுடகர்ப்பதுக்குக் கருத்தேதுசெய்வோமென்று
உன்னிமனதில் ஒருமித்துப்பார்த்தனரே
பார்த்தனரேகர்ப்பதுக்குப் பக்குவம்வேறில்லையென்று
தீத்தழலாய்ப்போகத் திருவுருவங்கொண்டனரே
பிரமாவுபதேசம் பிறப்புவுருவேத்தி
சூரமாய்வருணன் குளிரத்தொழிந்திடவே
காமத்தணலாய்க் கருமேனியானதிலே
வேமக்கனல்போல் விளிகொழிந்திட்டெரிய
சாந்தணியுங்கன்னி தையல்தெய்வமாமணிகள்
கூந்தல்விரித்துக் கூபந்தனிலிறங்கி
அரிவோமெனவே ஆடிக்கரையேறி
தரிமோனவே சலக்கரையைவிட்டவர்கள்
உயரவரவே உள்ளுதறத்துள்ளல்கொண்டு
அயாக்கால்கர அங்கமெல்லாந்தொங்கலிட
கிடுகிடெனத் தேகங்கிழிமொழிவாய்க்கொட்டிடவே
திடுதிடெனவக்கினியைத் திரைபோல்வழையலுற்ருர்
கன்னியேழுபேருங் கனலைமிகவாவ
உன்னித்திருமால் ஓங்காரமோகமதால்

மங்கையேழுபேர்க்கும் வயிற்றிலுற்றதம்மானே
சங்குவண்ணமாலோன் சச்சுருவங்கொண்டனரே
உடனேஸ்திரீகளுள் தரித்தபிள்ளைகளை
தடமலைபெற்று சஞ்சலித்துமாமடவர்
வெருவிப்பயந்து விழிமடவாரெல்லோரும்
கருவிதொண்ணுத்தாறுங் கலங்கியேதானோடி
துயிலையெடுத்துடுத்து சுருட்டினார்கங்கை தனை
கையில்ச்சலந்தான் கட்டித்திரளாமல்
கலங்கியழுது கண்ணீர்மிகச்சொரிந்து
மலங்கியழுது மண்ணிலவர்புரண்டு
அய்யோபொருளை அறியாமல்விட்டோமே
மெய்யோடேகுத்தி விழுந்தழுதார்அம்மானை

விருத்தம்

கனலைத்துணையாமென்றுவிக் கர்ப்பையிளந்தோங்
கன்னியரே
புனலைத்திரட்டப்பிலனின்றி புத்தியழிந்தோம்பூவையரே
அனலைத்தரித்தவரன்முன்னே அங்கேசென்றால்பங்கம்
வரும்
இனத்தைதப்பிரிந்தமானதுபோல் இருப்போம்வனத்தி
லென்றனரே

நடை

கன்னியர்கள்மேனி கனிந்துமினுமினுத்து
மின்னித்தனங்கள் மிகுபால்சுரந்திடவே
கற்புக்குழறிக் கைலையுகமானதற்கு
அற்புதவேளகங்கை அவர்நினைப்பில்லாமல்
எல்லோருமிக்க ஈசுரரைத்தானினைந்து
வல்லோனேயென்று வரம்பெறவேநின்றனராம்
நின்றார்தவத்தினிலமை கேளம்மானை
இன்றெங்கள்கற்பை ஈடளித்தமாமுனிவர்
வந்தெங்கள்தன்னை மாலையிடவேணுமென்று
பந்துதனமின்னார் பாவையேழுபேரும்
ஈசுரரேதஞ்சமென்று இருந்தார்தவசதிலே
மாசுவொன்றில்லா மாதர்எழுபேரும்
தெக்குமுகமாய்த் தேவியேழுபேரும்
மிக்கத்தவசு மிகப்புரிந்தாரம்மானை
கற்பழித்தெங்களுடன் கன்னிதிரளாமல்வைத்தோர்
பொற்பாதமுண்டெனவே பூவைதவசிருந்தார்
பாலிழுகிநல்லமுர்தம் பாலாறுய்வோடிடவே
காலிளகாவண்ணங் கடுந்தவசுசெய்தனரே
பிள்ளையேழுபேரும் பெற்றுப்பெருகிடவும்
கள்ளஞ்செய்தமாமுனிவர் கைப்பிடிக்சவெங்களையும்
மக்களையுமெங்களையும் மாமுனிவர்வந்தெடுத்து
ஒக்கவொருமித்து ' உலகாளவைத்திடவும்

நின்றார் தவசு நேரிளைமாரெல்லோரும்
நன்றானமாமடவார் நாடித்தவசிருக்க
பிறந்தபிள்ளை புதுமைகேளன்போரே
அறந்தழைக்கும் நாராயணர்மகவாகியதோர்
சான்றோர்பிறந்திடவுந் தரணியரசாண்டிடவும
வேண்டும்பெரிய விருதுவகைபெற்றதுவும்
அய்யாவுரைக்க அடியோனதையெழுதி
மெய்யானபோத மேலோர்கள்முன்பதிலே
அன்பானயிந்த அகிலத்திரட்டம்மானை
தன்போதமாயிருந்து தாழ்மையுடன்கேட்டவர்க்கு
கற்மமுதல்ச்சஞ்சலங்கள் களியுமென்றாரெம்பெருமாள்
உண்மையுள்ளலட்சுமிக்கு உபதேசமாயுரைத்தார்
இப்படியேபிள்ளைதனை ஈன்றபின்புகன்னியர்கள்
அப்படியேசென் றவர்போய் தவசிருக்க
பிள்ளைகளைப்போட்டு புண்ணியனார்போகாமல்
வள்ளலந்தமாலும் மதலைதனையெடுத்து
ஆரிடத்திலிம்மதலை அடைக்கலமாய்வைப்போமென்று
விசாரித்துநன்றாய் விசாரமுற்றாரம்மானை
தெய்வேந்திரன்பசுக்கள் திரைமெய்க்கண்டவரும்
கையதிலேசிங்குழலைக் கனிவாயில்வைத்திருத்தி
நிரைவாவெனவே நியமித்தங்கூடிடவே
அரைகோடியிலப்பசுக்கள் அங்கொன்றுமில்லாமல்
அங்குவந்துமாயனுடன் அழைத்ததென்னக்கேட்டிடுமாம்
சங்குதனில்பாலுமிழ்ந்து தாருமென்றாரெம்பெருமாள்
பாலுமிழ்ந்தாவு பலநாளும்பாலருக்கு
நாலொருநாள்மட்டும் நடந்துவரும்வேளையிலே
கன்றுக்குப்பால் காணாமல்மேய்ப்போர்கள்
ஏதென்றெனப்பார்த்தியல் பறிந்துவானவர்கோன்
தானறியச்சொல்லிச் சண்டையிடவந்தனனே
வந்தவனுக்கெதிராய் மாமுனிவன்சூலமதை
இந்தாபாரென்று எறிந்தாரவன்பயந்து
ஆரோவெனப்பயந் அய்ராவதத்தோனும்
போரொல்கிப்போனான் பொன்னுலோகமதிலே
நல்லதெனமாமுனிவன் நளினமுடன்மகிழ்ந்து

காளி வரவு

செல்மகவான சிறுவர்தனைவளர்க்க
மாகாளியென்ற வடபத்திரகாளி
ஓகாளியென்ற உயர்ந்தபிலக்காரி
பெண்ணல்லப்போர்க்குப் புருடர்மிகப்போராது
விண்ணவரும்மண்ணவரும் விறுமாவும்போறாது
அப்படியேதுட்ட ஆங்காரமாகாளி
இப்படியேநன்றாய் இவளிருக்கும்நாளையிலே
ஆணொருவர்தன்னால் அழியாவரங்கள்பெற்ற

தாரொருவன் றனையுஞ் சத்தியுமை தனையும்
கெணியாவரங்கள்பெற்றுக் கீழுமேலுமடக்கி
துணிவாகத்தேவர்களைத் தாளிபடமேவல்கொண்டு
தேட்டமுடனேழு செகல்கடந்தப்புறத்தில்
கோட்டயிட்டுக் குறும்புசெய்தாண்டனனே
தேவர்கள்சென்று சிவனார்க்கபயமிட
மூவருமொத்திருந்து முழுதும்விசாரமிட்டார்
ஆனாலே தக்கனையும் அழிக்கவகையில்லையிங்கே
பூணாரம்பூண்ட புட்டபுரக்காளி
காளிபடையுங் கமண்டலத்தில்சென்றதுண்டால்
தாளிபடத்தக்கன் சிரசறுப்பாளென்றுமிக
மாலுரைக்கஈசுரரும் மறையோரும்சம்மதித்து
வேலுகந்தகாளிதனை விளித்தார்காணம்மானை
உடனறிந்துமாகாளி உடையோன்பதம்பணிந்து
வடவக்கினிமுகத்தாள் வருத்தினதேனென்னையென்றாள்
தக்கன் தலையறுத்து சங்காரஞ்செய்திடவே
மிக்கநீபோவென்று விடைகொடுத்தார்ஈசுரரும்
விடைவேண்டிக்காளி விமலனடிபோற்றி
படைக்காரிபின்னுமொன்று பரமனோடேகேட்டாள்
என்னோடுதவி இயல்படையாய்த்தான்வரவே
வன்னபுதல்வர் வகிருமென்றாள்மாகாளி
அப்போதுஈசுரரும் ஆங்காரியைநோக்கி
கர்ப்போடுவொத்த கன்னியேயுந்தனுக்கு
தரித்துப்பிறக்கத் தகாதேமாகாளி
மரித்துப்பிறக்காத மாகாளியேயுனக்கு
விடையாவொருவசனம் விரிக்கக்கேளொண்ணுதலே
படைக்காகப்பாலர் பச்சமால்தாவெனவே
தவசுமிகப்புரிந்தால் சங்குசரத்தாமன்
விபுசுதனில்ப்பிறந்த வீரரேழுபேர்களையும்
உன்னையழைத்து உன்கையிலேதான்தருவார்
முன்னேதவசு மிகப்புரியபோவெனவே
அரனார்விடையும் அருளிமிகக்கொடுக்க
பரமாண்தேவி பச்சைமால்தந்தனைத்தான்
நினைத்துத்தவசு நெடுநாளாய்நின்றிடவே
அனைத்துயிருங்காக்கும் அச்சுதருந்தானறிந்து
மக்களேழுபேர்களையும் மாகாளிகைகொடுக்க
கொக்கரித்துக்காளி கொண்டாடித்தான்மகிழ்ந்து
வாங்குமளவில் மாமுனியைத்தானோக்கி
தாங்கிநின்றுபோத்த அடிதாழ்ந்துஏதுசொல்வாள்
வேதமுனியே வித்தைதக்கருத்தேதானே
மாதவங்கள்கற்ற மாமுனியேயிம்மதலை
ஆனோர்க்குநாமம் அருளிநீர்தாருமென்றார்
வானோர்கள்போற்றும் மாமுனியையும்மகிழ்ந்து
உள்ளதுதானென்று உடனேமனமகிழ்ந்து

வள்ளல்சிவனாரிந்து மறைவேதனையழைத்து
முப்பத்துமுக்கோடி முனிவரவர் தங்களையும்
நாற்பத்துநாற்கோடி நல்லரிசிகளையும்
தேவர்முதலாய்த் தெய்வேந்திரன்வரையும்
மூவராறுவர் முதலோரையும்வருத்தி
கிணநாதர்வேதா கிம்புருடரையும்வருத்தி
குணமான தந்திக் குமாரனையும்வருத்தி
சத்தியுமையுஞ் சரசுபதிபார்ப்தியும்
எத்திசையும்வாறோர் எல்லோரையும்வருத்தி
சங்கமதுகூடிச் சாத்திரங்கள் தானோதி
மங்களவாத்தியங்கள் மடமடெனநின்றதிர
இப்படியேசங்கம் எல்லோருந்தான்கூடி

சான்றோர்க்குப் பேரிடுதல்

அப்படியேதானிருக்க அருளுவார்அச்சுதரும்
பிறந்தபிள்ளையேழுக்கும் பேரிடவேணுமென்று
அறந்தழைக்குமீசர்முன் அவர்வைத்தாரம்மானை
அப்போதுஈசுரரும் அன்பாயகமகிழ்ந்து
இப்போதுமாயவரே எல்லோருக்குமபொதுவாய்
நீர்தானேநாமம் இட்டாலதுபோதும்
பார்தானளந்த பால்வண்ணனென்றுரைத்தார்
கார்வண்ணருங்கேட்டுக் கரைக்கண்டரோடுரைத்தார்
தார்வணரேமுதல்பேர் தாமுரைக்கவேணுமென்றார்
நல்லதுதானென்று நாட்டமுற்றாரீசுரரும்
வல்லவனேஉன்றாத விந்தில்வந்துதோன்றினதால்
தோணுப்பொருளைத் துடர்ந்துகண்டமன்னவர்க்கு
சாணாரெனநாமஞ் சாற்றினாரீசுரரும்
முதல்பேர்தானீசர் மொழிந்தபுன்புவேதாவும்
மதமானவிந்து மாயமுனிசேயதற்கு
சான்றோரெனநாமஞ் சாற்றினார்வேதாவும்
ஆண்டாரிதுவுரைக்க அச்சுதரும்பின்சொல்வார்
நாடாள்வாரென்று நாமமிட்டார்பாலருக்கு
தாடாண்மையுள்ள சத்தியங்கேதுரைப்பாள்
அண்ணர்விநோதமதில் அவதரித்தபிள்ளைகள்கு
வண்ணமுள்ளபேரு வாழ்த்திவிடைகொடுப்பாள்
எங்கும்புகழ்பெற்று ராசபட்டந்தான்சூடும்
சங்குமன்னரென்று தானுரைத்தாள்சத்தியுமை
பேறுபெற்றபாலரென்று பிதனமுடன்மகிழ்ந்து
பார்வதிநாமம் பகருவாளம்மானை
சென்றயிடம்வென்று சீமைகெட்டித்தானாண்டு
மண்டலங்கடோறும் வரிசைபெற்றுவாழ்ந்திருக்கும்
பொர்ப்பமுடிமன்னரென பேரிட்டாள்பார்வதியும்
கர்பகத்துக்கொத்த கன்னிசரசுபதி
வெள்ளானைவேந்தரென்று வெண்டாமரையுரைத்தாள்

பிள்ளையார் தானும் பிரியமுடன் மகிழ்ந்து
உள்ளபடிநாமம் உரைக்கிறாரன போரே
நன்றான வீர நகுலவேந்தனெனவே
அன்றானை முகத்தோன் அருளினர் காணம் மானே
சண்முகனுந் தான் மகிழ்ந்து தவலோக மன்னரென்று
விண்ணுலகமும் மெய்க்க விளம்பினர் காணம் மானே
வானோர்கள் வேத யாமுனியோர் தான் மகிழ்ந்து
தானனமாயவனார் தான் பெற்றபாலருக்கு
தர்மகுலமன்னரென்று சாத்திரம் மானே
கர்மமில்லாதேவர் கரியமால்பாலருக்கு
மெய்யுடையபாலர் மென்மேலுமவாழ்ந்திருக்க
தெய்வகுலமன்னரென்று திருநாமமிட்டனரே
வீரியமாய்சூரியனுங் வெற்றிமால்பாலருக்கு
சூரியகுலவேந்தரென்று சொன்னார் காணம் மானே
வாசவனுந் தான் மகிழ்ந்து மாயனுடபாலருக்கு
வீசைவிசைய வேந்தரென்றுநாமமிட்டார
இப்படியேநாமம் இவர்மொழிந்ததின் பிறகு
கர்ப்புடையசன்னாசி கருத்தாகவேயுரைப்பார்
நாட்டுக்குடைய நாதனுடகண்மணிக்கு
காட்டுராசனெனவே கருத்தாகநாமமிட்டார்
இப்படியேசர்முதல் எல்லோரும் நாமமிட்டு
அப்படியேபிள்ளைக் கவரவரேகாபபணிந்து
சத்தியுமையுஞ் சரசுபதிபார்பதியும்
எத்திசையுமெய்க்க எடுத்துத்தாராட்டுவாராம்
அமிர்தமதுசேனையிட்டு எல்லோருந்தான் மகிழ
குமர் தவாய்சொல்லுடையார் குரவையிட்டுத்தான் மகிழ்ந்து
அண்டர்முனிவோர்கள் அல்லோரும்பார்த்திருக்க
தண்டாமரைமாது தாலாட்டவுத்தரித்தாள்

சரஸ்வதி தாலாட்டு

வைகுண்டக்கண்ணே வரம்பெற்றமாதவமோ
கைகண்டவித்தைக் கருத்தறிந்தவுத்தமரோ
தங்கமுடிபெற்றவனே சங்குமுடிகாவலனே
வங்கம்நிசங்கண்ட மங்காதசான்றவரோ
சிங்கமுகத்தண்டிகையும் சிலம்புனைந்தரத்தினமும்
சங்கக்கொடிவிருது சங்குரெட்டைபெற்றவனே
முத்துச்சிலாப முதலாளியானவனே
கொத்துமுங்கையாபரணம் கொடிவிருதுபெற்றவனே
மூலப்பொருள்கண்ட முதச்சாதியானவனே
தாலம்பாலுண்டு தானிருக்கும் மன்னவனே
நடைகாவணங்களிட்டு நல்லதீவெட்டியுடன்
படையோடேவீத்திருக்கும் பாரமுடிமன்னவரோ
வெள்ளானைமேலே வீதிவலஞ்சுத்திவந்து
துள்ளாடிச்சிங்காசனம் வீத்திருப்பவரோ

பூதமதுபந்தம்பிடித்து முன்னே தான்வரவே
நாதம்ரெட்டைஊதி நாடாளும்மன்னவரோ
எக்காளமூதி இடம்மடம்மானவுடன்
மிக்கானசீமையெங்கும் மேவிவரும்மன்னவரோ
வாரணங்கள்கட்டி வையகத்தைத்தாளுண்டு
தோரணங்கள்நாட்டிவைத்த தெய்வத்திருசான்றவரோ
தர்மமுடிபெற்றவரோ சாஸ்த்திரத்துக்கொத்தவரோ
கர்மமதில்லாமல் களிகூர்ந்திருப்பவரோ
உடக்கூறுசத்தி உயிரோடுஇத்துவந்த
சடக்கூறுமூலச் சட்டமதுகொண்டவரோ
கல்விக்குகந்த கருணைகரரானவரோ
செல்விக்குகந்த சேமமதுகொண்டவரோ
தேவருக்கும்வானவர்க்கும் திருப்பதிகளாவதற்கும்
மூவர்க்குமுதவிசெய்து உதித்துவந்தகர்ப்பகமோ
சென்றவிடமெல்லாஞ் சிறப்புவெகுமானமுடன்
மண்டலங்கள்மெய்க்க வாழுகின்றசான்றவரோ
சாணருக்குள்ளே சர்வதுமேயடக்கி
கோணுதமாயன் குருக்கொடுத்தீன்றகண்ணே
அறிவுஞானத்தோடு ஆதிப்பிறவியோடு
செறியுங்கலையோடுஞ் செடமெடுத்தசான்றவரே
துட்டனென்றபேரைச் சூரசங்காரமிட்டு
கோட்டமிட்டுக்கோட்டை கொடிவிருதுபெற்றகண்ணே
ஆண்டிருக்கும்மன்னவரோ அச்சுதரினபாலகரோ
தாண்டிவரம்பெற்று தாணியரசாண்டவரோ
பாண்டவரோ ஆண்டவரோ பால்வண்ணர்பெற்றெடுத்த
சான்றவரோ ராராரோ தழைத்திருக்காராரோ

விருத்தம்

தங்கமணியேநவமணியே சலத்தில்விளைந்ததாளமுதே
சிங்கமுடிகள்பெற்றவரோ சீமையடக்கியாண்டவரோ
துங்கவரிசைபெற்றவரோ திருமால்விந்திலுதித்தவரோ
சங்கமகிழ்வாராராரோ சான்றோர்வளர ராராரோ

நடை

சந்தோசமாக சரஸ்பதிதாலாட்டி
வெந்தோசமெல்லாம் விலகவேநீராட்டி
வைகுண்டமூர்த்தி மாமுனிதன்கைகொடுக்க
மைகொண்டவேதன் மதலைதனைவாங்கி
ஈசர்முதலாய் எல்லோருங்கூடியிருந்து
வாசமுள்ளபிள்ளைகள்தான் வளரத்திருவமுர்தம்
சேனைமிகவூட்டுதற்கும் செல்வமுண்டாவதற்கும்
வானத்தமிர்தம் வருத்திமிகாயவென்று
கைலைதனிலிருக்கும் கண்ணனைபேர்களுக்கும்
அகிலமதில்பாயும் ஆகாயவூறலதை
வருத்திக்கொடுக்கவென்று மாயவரும்ஈசுரரும்

பொருத்தமுள்ளவானோரை போய்வேண்டிவாருமென்றார்
அப்படியேவானோர் ஆகாயமீதேறி
செப்பமுடன்அமுர்தஞ் சென்றவர்கள்பார்க்கையிலே
ஆருருபமில்லாத ஆகாயமேல்வழியே
பாயுமளவில் பலசாஸ்திரங்கள்கற்ற
வீயுமறைவேதியனும் விழிநுதலாள்கன்னியரும்
அமுர்தமதையெல்லாம் அள்ளித்தலைமேலும்
குமுர்தமுடன்குடித்துக் கொழுத்துமிகப்பானைவைத்து
தேகமதுநிமிர்ந்து தேவியரும்மன்னவனும்
ஆகமதுகூர்ந்து அலங்கரித்துநிர்ப்பளவில்
வானோர்கள்பார்த்து வாய்த்தமுர்தங்காணமல்
ஏனோயிதுமாயமென எண்ணிமிகப்பார்ப்பளவில்
கொண்டாடிநின்ற கூர்மறையவன்றனையும்
பெண்டாட்டியான பெண்ணதையும்வானோர்கள்
பிடித்துமிகயிழுத்து பின்னுமுன்னுந்தள்ளிமிக
அடித்துச்சிவன்முன்னே அச்சுதரும்பார்த்திருக்க
கொண்டுவந்துவிட்டுக் கூறுவார்வானோர்கள்
பண்டுமுதலின்றுவரைப் பாய்ந்தஅமுர்தமெல்லாம்
உண்டிகொண்டுதேகம் உரத்துமிகப்பாழைவைத்து
வண்டுறுக்கிமிக்க வலுப்பேசினானெனவே
சொல்லிடவேவானோர் திருமாலதுகேட்டு
நல்லதுதானென்று நாடிச்சிவனோடுரைக்க
அப்போதுநல்ல ஆதிசிவமுறைப்பார்
எப்போதும்பாலர் இவருண்ண அமுர்தமெல்லாம்
கொடுக்குபடியாய்க் குருக்கவையுமெனறுரைத்தார்
அடுக்கநின்றதேவர் அதுகேட்டுச்சீக்கிரமாய்
மறையோனையும்மாதுவையும் வந்தெடுத்துச்சாபமிட
இறையவரைப்பார்த்து ஏதுரைப்பான்மறையோன்
இப்போதுயிட்ட இச்சாபமானதுதான்
எப்போதுநீங்குமென்றே கேட்டான்மாமறையோன்
நீசகுலமறுத்து நெடியதிருமாலும்
மாசில்லாத்தர்ம வையகத்தையாளுதற்கு
அன்புசேகரிக்க அங்குவருவார்கள்கண்டீர்
வம்புமாழும்போது மாறும்உங்கள்சாபமென்றார்
உடனேமறையோனும் ஓவியமுமுள்ளதென்று
தடமேல்நின்று தாலமெனவேவளர்ந்தார்
வளர்ந்தஅமுர்தமதை மக்களேழுபேர்களுக்கும்
பழந்தமுர்க்காயோடு பலவகையுந்தானுண்டு
அமுர்தமதைநீங்கள் ஆக்கிரகந்தானடக்கி
குமுர்தமுடன்நீங்கள் குடித்திருங்கோவென்றுசொல்லி
உங்களுக்குப்பாலமுர்தம் ஊறுகல்லாலித்தாலம்
எங்களுக்குஇத்தாலம் இசையாதுகண்டீரே
பாலருக்குஇந்தவரம் பரமயுகத்தோர்கொடுத்து
ஞாலமுள்ளகாளி நாயகியைத்தானழைத்து

பாலரையுங்காளி பண்டாரகவாங்குகையில்
ஆலமுர்தம்உண்ட அச்சுதரு மதுரைபபார்
அடவுபதிமொட்டும் அலங்காரவர்மமதும்
கடகரியின்றொழிலுங் கந்து த்தின்றொழிலும்
மாவேறுந்தொழிலும வாழ்வீசுந்தொழிலும
பாவேறும்பாட்டும பழமறைநூலானதும்
அடவுமேலான அதிகபலமானதையதும்
திடமுமிகவருத்திச் சஞ்ஜிதிபதியாக்கி
எல்லாவிதத்தொழிலும் இசைவா ராகமதும்
நல்லாவருத்தி நாட்டமுடனேகொடுத்து
உயிர்ச்சேதம்வாராமல் ஒன்று பாலெனமகவை
நெய்ச்சீதமபோலே நீவளத்துத்தாமெனவே
பல்லாமலென்மகவை யாரொருதராகுலும்
கொல்லாமல்க்காக்கக் கூடுமமாட்டன்றோலே
அனபானகாளி தற்றேதுசொல்லலுற்றுள
என்பாலகர்தனையும் ஈடுசெயயயிங்கொருவர்
உண்டோகாணிந்த உலகிலெ ாக்கெதிரி
என்றேறதானகாளி இப்படிச்செசொல்லியபின்
பாலரையுந்தானெடுத்துப் பரமசிவனருளால்
கோலமுளளமாயன் கொடுததரொருவார்த்தைசொல்லி
சீலமுள்ளகாளிஎன் சித்திரப்பாலருக்கு
மதலைதாக்கோர்தீங்கு வந்தேதயுண்டாறல்
குதலையரேயுந்தறுக்குக் கொடுஞ்சிறதானெக்குமென்று
சொல்லியேகாளிகையில் சிறுவரையுந்தான்கொடுத்து
வல்லபிலமுள்ள மாடுதனிலேறியையும்
வேதாவும்நல்லநெற்றி விழியுடையாளதன்தனையும்
மாதாவுமான வாய்த்தசர சாதியையும்
தேவர்முதல்வானவரை சிட்டர்முனிவோர்களையும்
மூவர்களையுங்கயிலை ஊரேபோயெனறனுப்பி
காளியையும்பிள்ளைகளை கருத்தாய்வளர்த்திடென்று
ஆளியடைத்த அச்சுதருந்தானடந்து
ஸ்ரீரங்கமாபதியில் சென்றிருந்தாரம்மானை
சாரங்கர்ஸ்ரீரங்கம் தான்வந்தாரென்றுசொல்லி
ஸ்ரீரங்கமெல்லாஞ் செழித்துமிகவாழுந்து
பாரெங்கும்மெச்சிப் பரந்ததுகாணம்மானை
அப்படியே அச்சுதரும் அப்பதியிலேயிருக்க
எப்படியும்ஸ்ரீரங்கம் இனிதழைக்குமென்றுமிக
தேவர்முதலாய் முப்பத்துமுக்கோடி
மதவர்முதலாய்ச் சிந்தைகளித்தேயிருந்தார்
ஸ்ரீரங்கமான திருப்பதியின்வளமை
சாரங்கராயர் தானுரைத்தாரம்மானை
மாரியதுமூன்று வருஷிக்கத்தாள்பொழிந்து
ஏரிபெருகி ஏற்றசெந்நெல்தான் விளைந்து
படியொன்றுகோட்டைபோன்றாய் பழுக்கவருஞ்செந்நெல்லது

கரும்புமுத்தீனுங் கசுவுங்கரைபுரளும்
அரும்புவனமும் அகில்தேக்குமாமரமும்
கோவுஞ்ஸ்ரீரங்கரெனக் கூப்பிடுங்காணச்சுதரை
மாவுஞ்ஸ்ரீரங்கரென வந்தழைக்குமச்சுதரை
மயில்குயில்மான்கலையும் வாய்த்தவணில்பட்சிகளும்
ஒயிலாகஅச்சுதரை உள்ளாக்கியாடிவரும்
அவ்வூரிலுள்ள அந்தணர்களெல்லோரும்
கவ்வைவேறில்லாமல் கரியமால்தம்தனக்கு
பூசைமுறைவைத்துப் பிராமணர்கள்சூழ்ந்துவர
ஆசையுடன்அச்சுதரும் அங்கேயினிதிருந்தார்
ஸ்ரீரங்கமாபதியில் சென்றிருக்குமப்போது
சாரங்கர்பெற்ற சான்றோர்களின்பெருமை
சொல்லுகிறாரெங்கள் திருமால்காணமமானை
நல்லதுதானென்று நாடித்திருகேள்க்க
அன்பான சான்றோர்க் கானமாகாளியம்மை
தன்பாலர்போலே தான்வளர்த்துவித்தைகளும்
வ்ருத்திக்கொடுத்து மண்ணமன்னர்தானாக்கி
கருத்திலுர்க்காளி கண்ணானமக்களுக்கு
வேண்டும்பணிகளெல்லாம் விதவிதமாய்த்தானெடுத்து
பூண்டந்தமக்களையும் பூத்தானமாய்வளர்த்தாள்
மிக்கநல்லபிள்ளை வீரரெனவாகுகையில்
தக்கனென்றசூரன் தன்பேரில்மாகாளி
படைக்குயெழுந்தருளி பாலரையுந்தான்கூட்டி
நடைக்குவதிகமுள்ள நாயகியும்பாலருக்கும்
போர்க்கோலமிட்டுப் புட்டாபுரங்கடந்து
ஆர்க்கமுள்ளகாளி அலகைபடையுடனே
சான்றோரைவிட்டுத் தக்கனையுந்தான்வதைத்து
மூன்றோரைநெஞ்சில்வைத்து ஓங்காரமாகாளி
தக்கனையுங்கொன்று சான்றோரவர்தனக்கு
மிக்கவரிசை மிகக்கொடுத்துமாகாளி
புட்டர்புரத்தில் பூதகணஞ்சூழ்ந்துநிற்க
கட்டாதகாளி கமலத்தில்வீத்திருந்தாள்
அப்போதுநல்ல ஆர்க்கமுள்ளபாலருக்கு
இப்போதுமாலையிட ஏழுபேர்க்கும்வேணுமென்று
பார்த்துவிசாரித்துப் பத்திரமாகாளி
நால்திசையும்பார்த்து நாரதமாமுனியை
அழைத்துநல்லமாகாளி அந்தமுனியோடுரைப்பாள்
விழைத்துநல்லபுத்தி விபரமிட்டுச்சொல்லுகின்ற
மாமுனியேஎந்தன் மக்களேழுபேர்களுக்கும்
நீமுயன்றுபெண்ணேழு நிச்சயிக்கவேணுமென்று
நல்லதுதானென்று நாரதமாமுனிவன்
வல்லவகையாலுன் மக்களுக்குப்பெண்ணேழு
பார்த்துவருவேனென்று பகர்ந்துமுனிபோயினனே
சாற்றுமொழிகேட்டுத் தானேகுமாமுனிவன்

நீதமுள்ளநல்ல நிருபதிராசனுந்தான்
பெற்றமதலைதனைப் பெண்கேள்க்கப்போயினனே
மாமுனிவன்கேள்க்க மன்னனதிசயித்து
தான்மகிழ்ந்தேதா தானுரைப்பானம்மானே
நல்லமுனியே நானுரைக்கநீகேளு
செல்லமகவுந்தேவிக்கும் எந்தனக்கும்
இல்லாமலனேகநாள் இருந்தோந்தவமாக
நல்லானைசர் நாட்டமுடனிரங்கி
ஆண்பிள்ளையுந்தனக்கு ஆகமத்திலில்லையென்று
பெண்பிள்ளையேழு பிறக்குமென்றுசொன்னார்காண்
அப்போதீசுரரை அடியேன்மிகப்பார்த்து
இப்போதுஎந்தனக் கிரணமுடிவாகுகையில்
கொள்ளிவைக்கப்பிள்ளை ஒன்றுகொடுவுமென்றேன்
தெள்ளிமையாயீசர் செப்புமொழிநீர்கேளும்
தெய்வச்சான்றோராய்ச் சித்திரமாகாளி
கையதுக்குள்வந்துன் கன்னியேழுபேர்களையும்
மாலையிட்டுந்தனக்கு வருமாபத்தையெல்லாம்
மேவலாய்க்காத்து மேதினியோர்தானறிய
உந்தனுக்குநல்ல உதவிமிகச்செய்வதற்கு
வந்திருப்பாரென்று வகுத்தாரீசுரரும்
ஆனதாற்பெண்ணேழு அவர்க்கேதானல்லாது
வானமுனியே மற்றெவர்க்குமாகாதே
என்றுநிருபதனும் ஏற்றமுனியோடுரைக்க
நன்றுநன்றென்று நாரதருஞ்சம்மதித்து
மன்னவனேகேளு மாகாளிதன்னிடத்தில்
சொன்னபிள்ளையேழுஞ் சிறந்திருக்கிறொனவே
அந்தமன்னரான ஆண்பிள்ளைகளானோர்கள்
இந்தமுகூர்த்தம் யானகேட்கவந்தேனென
சொல்லமுனிமன்னவனுஞ் சோபிதமாய்மகிழ்ந்து
நல்லமுகூர்த்தம் நாளிட்டானம்மானை
நாளிட்டுநாரதரும் நல்லமாகாளியுட
தாளிணையைப்போற்றித் தானுரைத்தாரம்மானை
மாகாளியுந்தனுட மக்களேழுபேர்களுக்கும்
வாகானமன்னன் வாய்த்தநிருபனுட
மக்களேழுபெண்களையும் மாலைமணஞ்சூட்டுதற்கு
மிக்கநாளிட்டு மேவிவந்தேன்மெல்லியரே
என்றுமுனிசொல்ல ஏற்றமாகாளிசொல்வாள்
நன்றுநல்லமாமுனியே நான்வளர்த்தகண்மணிகள்
தெய்வப்பிறவியல்லோ திசைவென்றசான்றோர்கள்
பேசிவந்தபெண்ணுக்கு பிறவியென்னமாமுனியே
உய்த்துவந்தபெண்ணேழு உற்பவஞ்சொல்மாமுனியே
அப்போதுபெண்ணோர் ஆதிப்பிறவியெல்லாம்
செப்புகிறேனென்று சிவகாளிதனைத்தெண்டனிட்டு
கேளாய்நீயென்று கிருபையுடனேதுரைப்பான்

நாளானநாளையிலே நல்லதெய்வலோகமதில்
தெய்வேந்திரனார்க்குச் சொல்லேவல்செய்திருந்த
நெய்நொடியகன்னி நேரிழைமாரெல்லோரும்
வேலையினனதென்று விரிக்கக்கேளுமாகாளி
மாலையிலுங்காலையிலும் வாசவர்கோனானுக்கும்
பூவெடுத்திட்டுப் பூசைபுனக்காரமிட்டு
கோவெடுத்தராசனுக்குக் குஞ்சமிடவாடிநிதம்
ஏவல்புரியுகின்ற ராசதெய்வக்கன்னியர்கள்
நாவுலகுமெய்க்க நடந்துவரும்நாளையிலே
பூவுலகுமன்னர்களைப் பூத்தானமாகவெண்ணி
பவினியகன்னி பஞ்சமதுவேருகி
பூவெடுக்கக்கன்னி போகாமல்வாட்டமதாய்
ஆவடுங்கங்கொண்டவர்களொருப்போலே
காய்ச்சல்குளிரெனவே கவ்வையுற்றுதானிருக்க
மாச்சல்தனையறிந்தான் மகவானப்போது
ஆனதால்வேதாவின் அண்டைஅவனணுகி
தீனம்வந்ததேதெனவே தேவியர்க்குவேதாவே
வேதாதெளிந்து விரித்துரைத்தாரப்போது
சூதானமான சேதாகையேழுபேரும்
பூலோகமன்னருக்குப் பிரியமுற்றுமையல்கொண்டு
காலோயுதென்றுக் கவ்வையுற்றதல்லாது
வேறில்லையென்று வேதாவிதுவுரைக்க
தெறிமேவாசகர்கோன் தேவியேழுபேர்களையும்
அப்படியேபூவுலகில் அமையுமென்றார்வேதாவை
இப்படியேதான்வந்து இவர்பிறந்தாரென்றுமுனி
சொல்லச்சிவகாமி சிரித்துமனமகிழ்ந்து
நல்லதிதுமாமுனியை நல்முகூர்த்தம்பார்த்துரைநீ
உடனேமாமுனியும் உகர்ந்தமுகூர்த்தமென்று
திடமேநிருபனுக்குச் செய்திசொல்லஆளுமிட்டு
நாளைமுகூர்த்தமென்று நாலிசையுந்தானறிய
கோளையில்லாமன்னர் குலதெய்வச்சான்றோர்க்கு
முகூர்த்தமென்றுசாத்தி மூவுலகுந்தானறிய
பக்குவமாய்நல்ல பந்தலிட்டாரம்மானை
வைரக்கால்நாட்டி வைரவளைகளிட்டு
துயரமுள்ளதங்கத் தூண்கள்மிகநாட்டி
முத்துநிறைத்து முதுபவளவன்னியிட்டு
கொத்துச்சரப்பணியைக் கோர்மலையாய்த்தூக்கி
மேர்க்கட்டிகட்டி மேடைபொன்னுலேயிட்டு
கல்க்கட்டிபட்டுக் கனமாய்அலங்கரித்து
வாழைக்கரும்பு வகைவகையாய்நாட்டிமிக
நாளைமணமென்று நாட்டுக்குபபாக்குவைத்து
வெடிபூவாணம் மிகுத்தகம்பச்சக்கரமும்
திடிமனுடன்மேளஞ் சேவித்தார்பந்தலுக்குள்
வாச்சியங்கள இன்னதென்ன வகைசொல்லக்கூடாது

நாச்சியார்மாகாளி நாயகியுங்கொண்டாடி
பாலருக்கேற்ற பணியெல்லாந் தான்பூட்டி
சாலமுள்ளசிங்கத் தண்டிகையில் தானிருத்தி
பட்டணபபிரவேசம் பகல்மூன் றிராமூன்று
இட்டமுடன்பூதம் எடுத்துமிகச்சுற்றிவர
மண்டபத்துள்வைத்து மாபூதஞ்சூழ்ந்துநிற்க
தெண்டனிட்டுமன்னர் தேசாதிசூழ்ந்துநிற்க
பதினெட்டுவாத்தியமும் பட்டணமெங்குமுழங்க
ததிமீ தாமெனவே தம்புருசாரங்கிகெம்ப
பந்தமதுபிடித்துப் பலபூதஞ்சூழ்ந்துநிற்க
நந்திகோபால நாராணர்மகிழ்ந்து
மைந்தருக்கின்று மணமுண்டுயென்றுசொல்லி
வைந்தபலதேவர்களை வாருமென்று அழைத்து
பாலர்முகூர்த்தம் பார்க்கப்போமென்றுசொல்லி
சீலமுடனனுப்பிச் ஸ்ரீரங்கமேயிருந்தசர்
தேவர்தேவர்புகழ திசைவென்றசான்றோர்க்கு
மூவர்களும்வந்து உதவிசெய் தாரம்மானே
நல்லமுகூர்த்தம் நாள்ப்பார்த்துச்சான்றோர்கள்
எல்லாச்சடங்கும் இயற்றுவித் தாரம்மானே
சடங்குமுகித்துச் சான்றோரையொப்பமிட்டு
தடங்கொண்டமன்னரைத் தண்டிகையின்மீதேற்றி
அரசர்மிகச்சூழ அணியீட்டிமாள்க்கள்வர
விரைவாகக்காளி வித்தகலையேறிவர
அரம்பையர்களாடிவர அயிராபதன்வரவே
வரம்பெரியதேவர் மலர்மாரிதூவிடவே
ஆலாத்தியேந்தி அணியணியாய்த் தான்வரவே
மூலத்திகன்னி மோகினியாள் தன்னுடனே
பூதமதாடிப் பிடாரியதுசூழ்ந்துவர
நாதம்ரெட்டையூதி நடந்தார்மாப்பிள்ளைகொண்டு
விருதில்பெரிய வீரதெய்வச்சான்றோரில்
நிருபன்மகளை நியமித்துமாலையிட
வீரியமாய்நல்ல விவாகமிடவாருமென்று
பூரியலில்ச்சொல்லிப் பேர்கள்சிலருந்த
இப்படியேவாத்தியங்கள் இசைந்திசைந்தேயூதி
அப்படியேரிருப அரசன்மகள்தனையும்
மாலைமணமிட்டு வாழவந் தாரம்மானே
வாலையதுவான மாகாளிவாழுகின்ற
மண்டபத்துள்வந்து மகிழ்ந்திருந் தாரம்மானே
தண்டமிழுங்கன்னி சான்றோர்களானோர்க்கு
கோட்டையுமிட்டுக் குமாரரையும்பெண்ணதையும்
நாட்டிமையாய்ச்சான்றோருக்குந் தாந்தரமேமாளிகையும்
வைத்துக்கொடுத்தாள் வாழ்ந்தார்சான்றோர்கள்
மெய்துப்புவிகொண்டாட மெல்லியர் தங்களுங்கு

பாலருக்குப் பாலர் பிறப்பு

வயிற்றில்கெர்ப்பமாகி மதலைபெற்றாரம்மானை
நெய்தெளியக்கன்னி நேரிழைமாரெல்லோரும்
இப்படியேகன்னி எல்லோருமொருக
அப்படியேமதலைபெற்று அகமகிழ்ந்தாரம்மானை
பாலருக்குப்பாலர் பதிவாயமிகவளர
சீலமுள்ளவித்தை சிறக்கவரவருத்தி
எமத்திறைவாராக எங்கும்புகழ்ந்திடவே
சமர்த்தரேவே தலையெடுத்தாரம்மானை
முத்துவியாபாரம் முதல்யாபாரமுதல்
பத்தரைமாத்துப் பைம்பொன்யாபாரமுதல்
மாணிக்கயாபாரம் வைரப்பொன்யாபாரம்
ஆணிப்பொன்யாபாரம் அழகுகச்சையாபாரம்
கப்பல்யாபாரங் கறிமிளகுயாபாரம்
ஒப்பமுள்ளயாபாரம் ஒக்கமிகச்செய்தனராம்
காலமதேறித் தைரியபபால்வாங்கி
மேலுள்ளசான்றோர் மிகுதியர்யாண்டிருந்தார்
நெய்த்தொழிலும் வில்த்தொழிலும்நெறநவிதத்தொழிலும்
மெய்த்தொழில்கள்கற்று மேலோரெனவளர்ந்தார்
சோழனையறிந்துத் தெய்வச்சான்றோர்களுக்கு
வேழம்பலகொடுத்து மிகுகர்ப்பமுங்கொடுத்து
நல்லமன்னரென்று நாடிமகிழ்ந்திருந்தார்
செல்லமன்னரான தெய்வச்சான்றோர்களுக்கு
படிக்கல்லெழுதி ஆயிரம்பொன்கொடுத்து
முடிக்குமுடிசோழன் முத்துமுடியுங்கொடுத்து
வீரவிருதுகளும் வேழம்பரிகொடுத்து
பாரமுள்ளசீமைதனில் பங்குமிகக்கொடுத்து
ஆழமுள்ளசான்றோர் அரசாண்டாரம்மானை
சோழனுடனெதிர்த்துச் சூதுசெய்தமன்னரையும்
வேழமுடிமன்னர் வெற்றிகொண்டிருந்தார்
வெட்டாதபடையை வெட்டிவிருதுபெற்று
அட்டாளதேசம் அடக்கிஅரசாண்டிருந்தார்
இப்படியேசான்றோர் இராச்சியத்தையாண்டிருக்க
அப்படியேசீமை அவர்க்குள்ளேயாக்கிவைத்து
தர்மமுடன்பூமி தாளாண்டிருக்கையிலே
வர்மம்வந்தநாயம் வகுக்கக்கேளொண்ணுதலே
ஸ்ரீரங்கமானதிலே ஸ்ரீரங்கநாதருந்தான்
பாரெங்குமெய்க்க பள்ளிகொண்டிருக்கையிலே
நாட்டுக்குக்கேடு நாள்ப்பிடித்தசெய்திதன்னை
கூட்டுக்கிளியே கூர்மையுடனேகேளு
முன்னேகுரோணி முடிந்ததுண்டமாறதிலே
ஒன்றாகேளஞ்சு துண்டவனிதனில்பிறந்து
ஆதிதனைநினைத்து மறாமல் அவ்வுயிர்கள்

நீதிகெட்டமோச நேசனைப்போல் ருறகி
முபபிறவியோடாறு முதல்வோனைப்போற்றுமல்
அப்பிறவியாறு அழித்ததின்மேலாயினையே
குருமுனிவனை கூர்மையுள்ளமாமுனிவன்
அருமுனிவனை ஆதிமுனியைநோக்கி
சிவனெனவேபோற்றிச் சொல்லுவான்மாமுனிவன்
தவமேதவப்பொருளே தாண்டவசங்காரவனே

விருத்தம்

முன்னேபிறந்தகுரோணி கனை மூவிரண்டாகவுடல்பிளந்து
தன்னையுயிரோடஞ்செய்து சாமிதனை நினையாத்ததினால்
வன்னத்திருமால்துஜையடக்கி வந்தார்சடலமிழந்துகுண்டம்
இன்னமபிறப்பொன் றுண்டல்லவோ இறந்தகுரோணிய
வன்றலக்கே

நடை

வாசமுள்ளநேசர் மற்றொருப்பில்லாதவனே
ஈசனேநானுமொன் று இயம்புகிறேன்கேளுமையா
குரோணியவனுடலைக் கூர்மையுடனேபிளந்து
சுரோணிதமாயன் தொல்புவியில்விட்டெறிய
அஞ்சுதரமுயிர் வுவனிதனிலேபிறந்து
பிஞ்சுமதிசூடும் பிஞ்ஞகனைப்போற்றுமல்
மாயனையுமெண்ணுமல் மதமாயிருந்ததினால்
ஆயனந்தச்சூரரையும அழித்தார்கணிசுரரே
முச்சூரடோறு யுகமுமுயிரழித்து
அச்சூர தடும்பம் அறுத்தந்தமாயவரும்
கொண்டிருந்தபொயச்சடலக் கூட்டைமிகக்களைந்து
ஆண்டிருந்தகுண்டம தவரடைந்தாரம்மானே
முச்சூரன் கண்டம் ஒன்றுன்டுராசுரரே
அச்சூரன்பிறவி ஆரொருவர்தீர்ப்பாரோவே
ஆறுயுகத்தில் அமையுமெனறார்மாமுனியும்
வீறுகசுரரே விண்ணப்பஞ்செய்தினுரை
நல்லதுதானென்று நாட்டமுற்றுரசுரரும்
வல்லவனேமாமுனியே மாயன்வரவேண்டாமோ
என்றுநல்லாசர் இயப்பமுனிசொல்லுவான்
நன்றுநன்றுமாயவர்க்கு நாலுரண்டேசாம்பிறவி
பிறக்கத்தவசு புரியப்போய்க்கீழுலகில்
உறக்கமெஞ்ஞான ஒளியிருக்கிறுரெனவே
தேவமுனிசொல்ல சிவனுரைகமகிழ்ந்து
கோவுகத்திலுள்ள அருவசிஸ்டர்தங்களையும்
தெய்வலோகத்திலுள்ள தேவரையுந்தான்வருத்தி
வைகுந்தலோகத்திலுள்ள வாய்த்ததற்மீதங்களையும்
கிணாதர்கிம்புருடர் கிங்கிலியரையும்வருத்தி
இணையாகமேலோகத் தெல்லோரையும்வருத்தி
சத்திமறையுஞ் சாஸ்திரத்தையும்வருத்தி

அத்திமுகவனையும் ஆனவகும்பனையும்
சங்கமறையவருத்தி தான்கேள்ப்பாரீசுரரும்
இங்குண்டோமாலும் மெங்கிருப்பதுண்டெனவே
எல்லோருங்கூடி இதமித்துச்சொல்லுமென்றார்
அல்லோருங்கேள்க்க அரன்சொன்னாரம்மானை
வேழுமொத்ததேவரெல்லாம் மேகவண்ணரிங்கேயில்லை
கீழுலகில்மாண்டு கிடக்கிறாரென்றுசொல்லி
ஒன்பதாம்பிறவி ஒடுங்கியவர்பிறக்க
இன்பமறக்கீழுலகில் இறந்துகிடக்கிறாரெனவே
எல்லோருஞ்சொல்ல ஈசுரருமநல்லதென்று
அல்லோருங்கேள்க்க அவரேதுபின்சொல்வார்
முன்னேபிறந்த முண்டகரன்றன்னுயிரை
தன்றோடாறுபிறவி தான்செய்தோமசுரரென
ஆறுபிறவியிலும் அசுரரெனவேபிறந்து
வீறுடனேநம்மை விரும்பவும்நாம்கண்டிலமே
இப்போதவன்றனக்கே ஏழாம்பிறவியிது
அப்போதுநாமை அவனிலையாதிருந்தால்
இல்லையேமல்ப்பிறவி பிறப்பமுடிவாகுமல்லோ
நல்லபிறவியதாய் நம்மைத்துதிக்கப்புத்தியதும்
அழகுசவுந்தரிய அலங்காரமெய்யறிவும்
குளவுமிகப்புத்தி கூர்மையலங்காரமுடன்
மேலுமாலாறு முடித்தயுகங்கழித்து
நாலுமுளமொன்றுத்தே நல்லோரசுரர்களை
கொன்றுகாவவ்வசுரர் கூறுதற்குச்சொல்லுமுண்டோ
இன்னமிந்தமாயன் எடுத்தவுருப்போலே
படைத்துநாம்வைத்தால் பலருமொழிவேறில்லையே
நடத்துவதேசுதெனவே நவிலுமென்றார்தேவர்களை
அப்போதுதேவர்களும் ஆனமறைவேதியரும்
எப்போதுமிறவாதிருக்கும் முனிவர்களும்
நல்லதுதானென்று நாடியகமகிழ்ந்து
வல்லபிறவி வகுக்கத்துணிந்தாராம்
பிறவிவகுக்கவென்று பெரியோனகமகிழ்ந்து
திறவிமுதலோன் தெளிந்துநிற்குமவேளையிலே
துண்டமதுபிண்டமதைத் துளைத்துக்கால்மேல்நீட்டி
மண்டைகீழ்க்கால்மேலாய் வந்துதித்தானம்மானை
எல்லோருங்கண்டு இதுகளமாயமெனவே
அல்லோரும்வந்து ஆதியோடேயுரைக்க
உடனேசிவமும் உள்ளமிகக்களித்து
திடமேதான்பேர்ந்து எழுந்தருளீசுரரும்
அதிசயத்தைப்பார்ப்போமென்று அவரேகும்வேளையிலே
எசிராகநின்றுநந்தி எதுரைப்பாரம்மானை
மூவருந்தேவர்களும் மூர்த்திகளுங்காணாத
தேவரீரெழுந்தருளித் திசைநோக்கிவந்ததென்ன

நந்தி வரவு

அப்போதுநந்தியுடன் ஆதிமிகவுரைபபார்
இப்போதோர் அற்புதமாய் இருக்குதென்றுசொல்லாரும்
வானோனுக்கிக்காலும் மலர்நோக்கிச்சிரசும
தானமதுமாறித் தலைகீழாய்நிற்பதுவும்
பார்த்துவரலாமெனவே மையநட்கொண் டவென்றார்
சாற்றுமொழிகேட்டுநந்தி தானுரைப்பா ராமமானே
அங்கல்லத்தானம் அழிந்ததுகாணீசுரரே
இங்குநான்கண்டேன் எழுந்தருளிவந்ததினால்
தலந்தானிழுகித் தான்வந்ததாலேதான்
குலந்தானழியுங் குசல்பிறக்குமிராச்சியத்தில்
வரம்பழியுமாறி மனுநீதங்குன் றுமைபா
பரம்பெரியவேதம் பழுதுவருங்கண் டீரே
என்றங்கமாமுனிவர் ஈசரையுங்கூட்டி
குன்றுபொனனை கிரிமேவித்தானிருந்தார்
நடந்தபுதுமையென்ன நாம்வருந்திப்பார்க்கவென்று
திடங்கெளிந்தமாமுனிவன் செப்பவேயீசரும
சாத்திரவேதச் சதுர்மறையைத்தானவருத்தி
சித்திரபுத்திரரைச் சீக்கிரத்திலேயழைத்து
வந்தபுதுமை வகையென்னநம்கணக்கா
யுந்தக்கணக்கை எடுத்துரைநீஎன்றன ரம்
அப்போதுஈசுரரை அன்போடுறவணங்கி
செப்போடுவொத்த சித்திரருஞ்செப்பலு ற்றார்
சாஸ்திரத்திலுற்ற தண்மைமிகக்கேளும்
சீத்துவமாகச் சித்திரருஞ்செப்பலுற்றார்
முன்பிறந்ததோருணி டலாறுதுண்டசில
தன்பிறவியோடாறு தான்பிறந்தானுத்திரமாய்
மண்தானுடம்பு வந்துதித்தோன்ற. கது
விண்தானுடம்பு விலாசக்குருவோடு
சலந்தானுடம்புக்குறுதி வைதரியங்கள
வலந்தானிழுகி வன்னியோடுங்கூடி
கலந்துதிரண்ட கட்டைமுண்டமாமத்துக்கு
பிலந்தாக்குவாயு பிராணன்க ணம்மானே
முப்பனியோடாறு முயிரழித்தபாயனுக்கு
இப்போதுவந்த இவன்றன்கொடிதுவையா
மாயனொலிமுழுமாய் மனுச்சிங்கமுகமாய்
மாயமாய்நம்மை வதைத்தானேயென் றுசொல்லி
அன்றுயனெடுத்த அளவாயுநம்வெடுத்து
சென்றவனுடைய திறத்தைநாம்பார்ப்போமென்று
வேகத்தால்துண்டம் வெடித்ததுராணிபபுதுமை
ஏகந்தானுளும் ஈசனேயென்றுசொல்லி
இப்படியேசித்திரரும் எடுத்துரை சொர்
அப்படியேவந்தவனுக் க பு

கரணமுதல்நடப்பும் கட்டாகநீ தேர்ந்து
மரணமுதல்நடப்பும் வகுத்துரைநீ கணக்கா
அப்போதுசித்திரரும் ஆதியருள்நெஞ்சில்வைத்து
பொற்பாதமுண்டெனவே புதல்வாரியங்கணக்கா
அப்பனும் அம்மை அடக்கிமிகப்பெருமல்
கொப்புளித்துத்தானாய்க் குருத்துவந்தீசனுக்கு
தத்துவந்தொண்ணூத்தாறுந் தடிக்குணந்தான்
புத்திபுலனைந்தும் பொய்பூண்டபூதமுமாய்
சத்துருக்கள்சுண்கால் தலையும்வெறுநீசம்
உற்றுணர்ந்துபாராத உடலுமவன்காலும்
மாயக்காயமதுக்கு வருசமொருநூறிருப்பு
தோயநாயத்துளிர் துகைபத்துநூறாயிரந்தான்
வாழ்வுவந்துசேர்க்கை வருசம்பதினாலு
தாள்வுதசநரம்பு சனித்தமுப்பத்தோராண்டில்
ஆர்க்களலும்பு அடைக்குமநரம்புடனே
மூர்க்கத்தசையும் முதினாரப்புனலுடம்பும்
மண்தண்ணீரோடே வகைக்காகாப்பண்டமது
விண்பாந்தவீடு வெளிவாயிலோட்டலுமாய்
ஓட்டமடத்துக்கு ஒன்பதுகொந்துடனே
வீட்டைப்பிரித்தால் விறகுக்குமாகாது
விசையிட்டுவாட்டும் வித்தாரப்பாவையிலும்
பசையில்லாப்பாவையிது பச்சியொன்றோடிவரும்
பச்சிக்குக்காயம் பகைத்துக்கிட்டமுட்டுகையில்
குச்சியைக்கீழ்ப்போட்டுக் குதித்தோடுமக்குருவி
இக்குருவிக்கூடு இவண்மணியம்ஈசுரரே
அக்குருவியேகும் அவ்வளவுமின்னீசன்
பண்ணுகிறநீசம் பரமனுக்குமோராது
கண்ணிமைக்குமுன்னே கனவுருட்டிச்செய்திடுவான்
இப்படியேயுள்ள இயல்வும் அவன்னினைவும்
அப்படியேநீசம் அடைந்தமனவீடு
உள்ளவனாய்வந்து உருவெடுத்தானாகையினால்
எள்ளளவுநன்றி இருக்காதுஈசுரரே
எனறுகணக்கர் எடுத்துரைக்கஈசுரரும்
அன்றவன்றனக்கு ஆளனுப்பித்தான்வருத்தி
ஆரைவிடுவோமென்று ஆராய்ந்துஈசுரரும்
சூரமுள்ளகாலன் தூதனைமன்றனையும்
துட்டமுள்ளபூதக் கிங்கிலியர்துக்கையையும்
மொட்டைக்குறளிகளையும் முக்கோடிக்கூளியையும்
விட்டழைத்துவாருமென்று விடைகொடுத்தார்ஈசுரரும்
துட்டக்குணத்தோர் துடியாய்மிகநடந்து
கொட்டங்கிழாக குருத்துநின்றபாதகனை
ஈசரழைத்தார் எழுந்திருந்துவாவெனவே
நீசன்றனையழைக்க நெழிந்தியுருண்டவனும்
பிரண்டுருளப்பிண்டம் பிசைபிசைந்துதான்மலங்க

நீசன் பிறப்பு

மருண்டவிழியால் மாகமதுகலங்கி
மண்ணைவிட்டுயர மண்டைவரமாட்டாமல்
விண்ணெல்லாமெத்த வெம்மருண்டுதம்மானை
கைலைகிடுகிடெங்கும் கண்டபேர்தான்பதற
அகிலங்கிடுகிடெங்கும் அழைக்கவந்தோர்தான்பதற
அரனாரிடத்தில் அவர்கள்சிலரோடி
சிரமானதுவெயில் செல்லவரமாட்டாமல்
பூமிகலங்கிப் பொறுக்கமிகக்கூடாமல்
சாமியந்தநீசன் தானவரவேமாச்சலுண்டு
என்றந்ததூதர் இப்படியேசொல்லிடவே
அன்றுசிவனார் அதற்கென்னசெய்வோமென்று
தம்மாலேயாகுந் தந்துதெழிந்தெடுத்து
கம்மாளன்வேலையினால் கவ்வைவொன்றுவேண்டிவந்து
குத்திப்புறத்தே கோதிவையுமென்றுசொல்லி
எத்திசையுர் நந்தீசுரனார்கைக்கொடுத்து
வேண்டியவந்தநந்தி விரைவாயவர்நடந்து
ஊண்டிநின்றாசனையும் ஒருகௌவையால்கோதி
வெளியிலேவைக்க வெப்பெடுத்தபாதாளம்
பளீரெனவேவந்து பொருந்தியதேயம்மானை
பூமிதனில்வெடித்த பொல்லாதநீசனையும்
சுவாமிமுன்பானதிலே சுறண்டியதனாலிழுத்து
கொண்டுவந்துவிட்டார் குருநாதர்முன்பதிலே
கண்டந்தாசர் கனமாய்விசேசமுற்று
உந்தனக்குவேணுமென்று உசந்ததெல்லாமிப்போது
எந்தனிடங்கேளென்று ஈசுரனார்தானுரைக்க
உடனேயவனும் உள்ளமிகக்களித்து
விடமேதான்பூண்டு விதிக்கந்தைதகானுடுத்து
மேலெல்லாங்குப்பை மிகப்பூசியர்னையுட
தோலிலிருப்பவனோ சொன்னதெல்லாந்தாறதொதகன்
என்றுகளிப்பாய் ஈசுரரையன்னீசன்
அன்றுமொழிய அமரரதையறிந்து
பொல்லாதநீசா பொருளறியமாட்டாமல்
எல்லோரைப்போலே ஏசாதேசுரரை
லோகம்படைத்தவர்காண் உறுபொருளாய்நிற்பவர்காண்
ஏகப்நிறைந்தவர்காண் இறவாதிருப்பவர்காண்
பச்சிப்பறவை பலஜீவசெந்துகள்க்கும்
நிச்சயமாய்ப்பொசிப்பு நிதமுமழிப்பவர்காண்
மாயவனும்நான்முகனும் மீறையுமிகக்காணாமல்
தேயவாறுங்காணத் திட்டிக்கவல்லவர்காண்
இத்தனையும்நீசனுக்கு இயம்ப அமரர்களும்
புத்திக்குநட்பும் போதாமல்பின்சொல்லுவான்
ஆனால்தான்தேவர்களே அப்படிநீரொப்பினீரே

தானுயிருந்து சருவதுமுண்டாக்கிவைத்த
ஆனாலெனதுடைய அளவிலளவாக
மானொருகுழலை வகுக்கச்சொல்பார்ப்போங்காண்
என்றந்தநீசன் இழிவாகச்சொல்லிடவே
அன்றந்தஈசர் அவறறிந்தேதுரைப்பார்
நல்லதுநீகேட்டதுதா நாம்படைத்துதாறோமென்று
வல்லபரமேசுரனார் வகையேதெனப்பார்த்து
உந்தனுக்குநேரே வொத்தபலம்போலே
அந்தமுடன்பிறந்தால் ஆகுமோவென்றுரைத்தார்
அப்போதுமாநீசன் அரனார்தனைநோக்கி
ஒப்பமாகாதென்பலத்தில் ஒன்றிலரைப்பலமாய்
அழகிலதிகமுமாய் ஆங்காரம்பாதியுமாய்
குழகியவாயழகாய் குரும்பத்தனத்தழகாய்
மேனியழகாய் விழியழகாய்வீச்சழகாய்
யோனியழகாய் யொடுங்குமிடையழகாய்
கரமழகாய்க்காலழகாய்க் கண்ணழகாய்ப்பல்லழகாய்
சரக்கூடுமுன்னழகாய் தலைக்கண்டம்பின்னழகாய்
துடையழகாய்விரலழகாய்ச் சொல்லழகாய்ப்பல்லழகாய்
நடையழகாய்வீச்சழகாய். நல்லகுழலழகாய்
இடையழகாய்மேனி இறுக்கத்துடன்யழகாய்
உடையழகாய்த்தேகம் ஓங்காரத்தொங்கலுமாய்
அழகுக்குயேற்ற அத்தர்மணத்தோடு
களபகஸ்தூரி கம்மென்றவாசனைபோல்
மூவர்தேவர்களையும் மோகமயமயக்க
சீவனதுகொடுத்து இட்டித்துத்தாருமென்றான்
அப்போதுஈசுரனார் அகமகிழ்ந்துகொண்டாடி
இப்பொழுதுகேட்டதற்கு என்செய்வோமென்றுசொல்லி
அருகில்சிவனார் ரகமதிலேவீத்திருக்கும்
திருவுக்குநன்றாய்த் தெரிவித்தாரம்மானை
கேட்டமாநீசனுக்குக் கீர்த்தியொன்னமாமயிலே
தேட்டமுடனிப்போ செப்பென்றெனவுரைத்தார்
அப்போதுசத்தி ஆதியடிவணங்கி
ஒப்பொன்றில்லாத உடையபெருமாளே
பாதியாய்நீசனையும் பகிர்ந்தேயவனுடம்பில்
விதியாமிடது விலாவிலொருவெலும்பை

நீசனுக்குப் பெண்பிறப்பு

தட்டிக்கழற்றிச் சச்சுருவந்தானாக்கி
இட்டித்துநீசனுக்குச் சிணங்கொடுவும்ஈசுரரே
என்றுவுமையாளிப்படியே சொன்னவுடன்
அன்றந்தநீசன் அரையிலேசாரக்கையிட்டு
இருக்கக்கிள்கட்டி எழுந்திருநீயென்றவுடன்
பொதுக்கெனவேயிட்டது புறத்திலொருயெலும்பை
தெறிக்கவதையுஞ் சிவனார்மிகப்பார்த்து

வெற்றிகொண்டநீசன் விலாவில்வெடித்ததினால்
நீசன்பலத்தில் நேர்பாதியாகுமென்று
வாசமடவாய்வரவே மதன்றனைநினைத்தார்
மதனையாணினைக்க மாணீசன்றன்னெலும்பை
வதனமடமாதாய் வந்ததுவேயம்மானை
நீசன்நினைத்த நினைவுபோலம்மடவை
பாசகலைதூவ பகட்டிவிளித்தாள்மருட்டி
மும்மடங்காய்மோக முருகுழல்சரிய
கம்மடங்கத்தோசங் கரைபுரளத்தான்பிறந்தாள்
கண்டானேமாணீசன் கண்கொள்ளாக்காட்சியுடன்
அண்டாலைழச்சென்று ஆவிமுகத்தோடணைத்து
நன்றாகதர்மம் நாள்தோறுஞ்செய்துண்டம்
கண்டாரைப்போலே கட்டினான்மங்கையரை
மங்கையரைநீசன் வாயாரமுத்தமிட்டு
கொங்கைதனைக்கண்டு கொண்டாடிஆசையுற்று
எடுப்பானவளை இடுப்பிலேவைத்திடுவான்
படுப்பமோவென்று பாய்விரிக்கநின்றிடுவான்
பெண்ணோடுறவாடிப் பேதலித்துஅன்னீசன்
மண்ணோடுமண்ணும் மருவுவதுபோல்மருவி
ஆசையவள்பேரில் அங்கமெல்லாந்தானுருகி
நீசனவள்பேரில் நினைவாகநின்றதல்லால்
படைத்தருளிவைத்த பரமனையுமெண்ணாமல்
தடதவெட்னப்பெண்ணைத் தானெடுத்துமுத்திடுவான்
அப்போதுதேவர் அமரர்களும்பார்த்தவனை
இப்போதுன்விழி ஏக்கும்படியாக
பெண்படைத்துத்தந்த பெரியோனைத்தான்வணங்கி
மண்பரந்தமன்னா வரங்கேழுயென்றனராம்
என்றபொழுது இயல்வுகெட்டமாணீசன்
அன்றந்தாசர் அடிவணங்கியேதுசொல்வான்
எந்தனக்கேற்ற இளபயிலையுண்டாக்கி
தந்தருளுங்கோரவே சருவதயாபரனே
இனியெனக்கேற்ற இயல்வரங்களானதெல்லாம்
கனியிதழும்வாயானே கையில்த்தரவேணுமென்றான்
அப்படியேயாசர் அவனைமுகம்நோக்கி
இப்படியேயுந்தனக்கு ஏதுவரம்வேணுமென்றார்
என்றபொழுது இயல்கெட்டமாணீசன்
தெண்டனிட்டாசர் திருவடியைத்தான்பூண்டு
கேட்பான்வரங்கள் கீழும்மேலும்நடுங்க
வீழ்ப்பாரங்கெட்ட விசைகெட்டமாணீசன்
மாயவனார்தன்னுடைய வாய்த்தமுடிதனையும்
தூயவனார்சக்கரமுஞ் சூதமுடன்தாருமென்றான்
அரனுடையவெண்ணீர் அந்தணாரினதன்பிறப்பும்
வரமுடையசத்தி வலக்கூறுந்தாருமென்றான்
சிவமூலஞ்சத்தி திருமூலமானதுவும்

தைமூலம்வேதாவின் தன்னுடையமூலமதும்
பாலுடையமூலம் வாய்த்தலச்சுமிமூலம்
மேலுடையதெய்வ விதமூலமுந்தாரும்
கர்லனின்மூலம் காமாச்சிதன்மூலம்
வாலசரசோதி மாகாளிதன்மூலம்
கிணபதியுன்மூலங் கிங்கிலியர்மூலம்
துணைபதிபஞ்ன சுப்பிரமண்ணியர்மூலமதும்
ஆயிரத்தெட்டு அண்டம்நிறைமூலமெல்லாம்
வாயிதக்கண்ணே வரமாகத்தாருமென்றான்
அல்லாமல்பின்னும் ஆன்னீசன்கேட்டவரம்
பொல்லாதவித்தை புகலக்கேளொண்ணுதலே.
கூடுவிட்டுக்கூடு குதிக்கக்கருவதுவும்
நாடுபாடாக்கி நகரிகொள்ளையாக்கிடவும்
துயில்வோர்போலுலகம் துஞ்சவைத்துக்கொள்ளைகொண்டு
அயதிமோகினிக்கருவும் அரசேநீர்தாருமென்றான
ஆவடக்குமோகினியும் அழைக்கவெகுமோகினியும்
நாவடக்குமோகினியும் நருளழைக்கும்மோகினியும்
ஆண்பெண்பிரிக்க அதிகவெகுமாறணமும்
கோண்பிரித்துக்கெட்டி குடியலைக்குமாறண்மும்
கொல்லவுச்சாடணமும் குடிகெடுக்கமாறணமும்
தொல்லைவருத்தி சோலிசெய்யுட்சாடணமும்
லோகமதுவாளாமல் உள்ளமுங்கித்தாழ்நதிடவும்
ஏகத்தம்பனமும் இதின்கருவுந்தாரும்
கொட்டிக்கலைக்கக் கூறுடையசல்லியமும்
ஒட்டியமுந்தாரும் உள்ளகருவுந்தாரும்
பூசைமுறையும் புவனசக்கரமுடனே
தீச்சைவிதிமுறையும் * சிவவிதியுந்தாருமையா
சலமேல்கனல்மேல் தானிருக்குமோடிகளும்
கலைமேல்குடைபிடிக்க கருவதுவுந்தாரும்
மிருகம்தைவருத்தி வேலையதுகொண்டிடவும்
இருக்கமுள்ளவாதை எனக்குவிட்டுத்தாருமையா
அட்டகருமமெட்டு அடக்கிவரந்தாருமையா
மொட்டைக்குறள்களையும் முன்னேவலாய்த்தாரும்
மந்திரசாலம் மாய்மாலத்தந்திரமும்
இந்திரசாலம் எனக்கருளுமென்றுரைத்தான்
நேர்வுகிரகம் நுழையாமலெந்தனக்கு
தாவுருகெவனக்குளிகை தாருமென்றார்மாணீசன்
வந்தபிணிதீர்க்க வைத்தியவாகடமும்
தந்துதந்தாகப்பல சாஸ்த்திரமுந்தாரும்
மூவருடவடிவும் உதித்துவுந்தமுப்பிறப்பும்
தேவருடபிறப்பும் தெளிந்தெடுத்துத்தாருமென்றான்
பறக்குங்குளிகை பரனை அழைக்குங்குளிகை
மறைக்குங்குளிகை மாலைவருத்துங்குளிகை
சாலக்குளிகை சத்திவருத்துங்குளிகை

வாலைக்குளிகை மறையவருத்துங்குளிகை
காளிதனைவருத்திக் கைககுள்விடுங்குளிகை
கூளிகணத்தைவருத்திக் கொண்டுவரும்நற்குளிகை
தேவரையும்வானவரைச் சென்றழைக்குங்குளிகை
மூவரையும்வருந்தி ஓடிவரும்நற்குளிகை
பழிசெய்தால்வெல்ல பாரத்தொழில்கள்முதல்
சுழிவரைகள்தானறிய சூதானமாயத்தாரும்
மருட்டுவிதமும் மாஞாலக்குண்டணியும்
உருட்டுங்கொடிய உரம்பேசியமதமும்
வாள்வெடிகளாயுதங்கள் வாய்தடுக்கத்தந்திரமும்
வேழவருத்திவேலைகொள்ள விசையடக்குந்தந்திரமும்
துட்டமிருகம் தூறுவிசங்கொண்டதெல்லாம்
கெட்டுக்குள்கெட்டி கீழ்ப்படியத்தந்திரமும்
கட்டுச்சுருக்குங் கடியபலவித்தைகளும்
நட்டுமுட்டுள்ள நவனிதியவஸ்துக்களும்
தந்திந்தப்பெண்ணுடனே சார்ந்துவிளையாடிருந்து
விந்துசனங்கள் மிகுவாகத்தானுதித்து
கிளையோடேவாழ்வு கெறுவிதமாயாண்டு
வழையானமாதை மறவாமலெப்போதும்
புத்திக்கருத்தும் பெண்பேரிலெந்தனுக்கு
சற்றும்நிகழாமல் தாரும்வரமென்றுரைத்தான்
அப்படியேயுள்ளவரம் அன்னீசனுக்கருள
எப்படித்தானென்று எண்ணினாரீசரும்
எண்ணியேயீசர் ஏந்திளையாள்சத்தியுடன்
புண்ணியநாதன் புகலுற்றார் அம்மானை
முப்பத்திரண்டறமும் முகித்திருந்தவொண்ணுதலே
செப்புத்தனத்தழகும் செவ்வேகருங்குயிலே
வின்னோதகீசன் விபரிதமாய்க்கேட்டதற்கு
இன்னவிதமென்று இயம்புநீபெண்மயிலே
அப்போதுசத்தி ஆதியடிவணங்கி

அகத்தீஸர் பிறப்பு

நற்போதும்மறவா நல்லகன்னியேதுரைப்பாள்
சாஸ்த்திரமும்வித்தைகளும் தந்திரமாய்க்கேட்டதினால்
சூத்திரச்சுத்தனென்று சுறுக்காயுண்டாக்குமெனறாள்
உடனேதானீசர் உள்ளங்களிகூர்ந்து
திடமாய்த்தானீசர் சிந்தைதனிலுத்தரித்து
அகத்தீசனென்று ஆதிமனத்துள்ளிருந்து
செகத்தோர்கள்காணச் சித்தாதிதானாகி
சாத்திரமும்வித்தை சமூலக்கருவுடனே
சூத்திரச்சித்தாதி தோன்றினன்காணம்மானை
எல்லோருங்கண்டு இவராகுமென்றுசொல்லி
அல்லோரும்மெச்சி அகமகிழ்ந்துகொண்டாட
நல்லதென்றீசர் நன்முனியைத்தானோக்கி

வல்லகவியோடு வந்துதித்தசாஸ்த்திரியே
என்னென்ன சாஸ்த்திரங்கள் ஏதுக்காகுனாலும்
இன்றுநிற்குப் நீசனுக்கு ஈந்துகொடுவுமென்றார்
அப்போதகத்தீசர் ஆதிமறைமுதலாய்
மைப்போடும்வித்தை மாஞாலவச்சரமும்
கொடுத்தோமெனவே கூறினார் மாமுனியும்
கடுத்தமுள்ளநீசன் கையதிலேதான் வேண்டி
நிக்கவெபின்னும் நிகழ்த்துவான் மாமுனியும்
அக்கறுகுரூடும் ஆதிமுதலந்தம்வரை
வசமாகும்வித்தை மரணம்வராவித்தைதகளும்
நிசமாக்கும்வித்தையெல்லாம் நீசனுக்கேகொடுத்தோம்
கொல்லவேமெத்தக் கோபத்தால்நீசனையும்
வெல்லவகையில்லையல்லோ விடையேறும்ஈசுரரே
இன்னீசன்லோகமதில் இருந்தாளும்நாளையிலே
அன்னீதமல்லால் அறம்மறியமாட்டானே
செய்வதெல்லாம்பாவச் சிந்தனையேயல்லாது
மெய்வரம்புசற்றும் மிகவறியமாட்டானே
அல்லாமல்பின்னும் அச்சுதனார்சக்கறமும்
பொல்லாதான்கொண்டு பேசுகிறான் மால்கிரீடமும்
இவ்வரிசைரண்டும் இவனிடத்திலேயிருந்தால்
எவ்வொருதரால்வதைக்க ஏலாதுநீசனையும்
என்றந்த அகத்தீசர் இப்படியேதான்கூற
அன்றுஸ்ரீரங்கர் ஆண்டிவுருத்தாகி
தலைவிரிததுக்கந்தை சற்றேறக்கலைபூண்டு
சிலையில்லாவெங்கையால் சென்றாரேநீசனிடம்
நீசனிடத்தில் நெடுமால்தான் முன்னேகி
வாசமுடன்வார்த்தை வழுத்தினாரம்மானை
ஈசனிடத்தில் இறஞ்சிவரம்பெற்றதிலே
தேசயிரப்பனுக்குச் சிறுகாயென்றுரைத்தார்
தாராதேபோனால்ச் சாபமிடுவேனுனக்கு
பாராய்நீயென்று பகட்டினாரெம்பெருமாள்
அப்போதுநீசன் ஆண்டிதனைப்பார்த்து
இப்போதுபோடா இரப்பனோடேதுசண்டை
மாயன்வரவேணும் வலுப்பார்த்துவிட்டிடுவேன்
பேயனுடனெனக்குப் பேச்சென்னநீபோடா
என்றந்தநீசன் இவ்வழமைகூறிடவே
அன்றுபரதேசி அவனோடங்கேதுரைப்பார்
பிச்சைக்காரன்றனக்குப் பிலமில்லையென்றோநீ
அச்சமதில்லாமல் அடமாயிதுவுரைத்தாய்
பண்டாரந்தன்பலமும் பழிநீசாவுன்பலமும்
சண்டையிட்டுப்பார்த்தால் தான்தெரியும்மாநீசா
என்றுபண்டாரம் இதுவுரைக்க அந்நீசன்
குன்றுதரந்தெடுத்த கோபாலரோடுரைப்பான்
ஆள்படைகளில்லாமல் ஆயுதங்களில்லாமல்

வேழ்படைகளில்லாமல் வெட்டவாளிங்குமில்லை
தடியில்லைசக்கரமுந் தானில்லையென் கையிலே
முடிவிரித்துக்கந்தை உடுத்தவனோடுயுத்தமிட்டால்
ஆண்மையில்லையென்தனக் காயினை வாரேசுவாரே
தாண்மைமொழிப்பேசாதே தலைவிரித்தபேயாநீ
மூவர்முதலாய் முப்பத்துமுக்கோடி
தேவரையும்வெலைகொள்ளச் சிவமூலம்பெற்றிருக்க
ஒன்றில்லாப்பேயனோடு யுத்தமிட்டாலெந்தனையும்
நன்றினியபெண்கள் நகைப்பார்நீயபபுறம்போ
என்றந்தநீசன் இயம்பத்திருமாலும்
நன்றுநன்றுநீசா நானுரைக்கநீகேளு
பண்டாரத்தோடே படையெடுத்தாலாண்மையில்லை
என்றேதானிப்போது இயம்பினையேமாநீசா
பண்டாரமென்றும் பைத்தியக்காரனென்றும்
ஒண்டியாய்வந்தவனோடு யுத்தமிடமாட்டேனென்றும்
பிச்சைக்காரனெனவும் பெரியஇரபபனென்றும்
கச்சையில்லானென்றும் கணைகம்பில்லாதானென்றும்
இப்படியேபண்டாரம் என்றிருக்கும்பேர்களுக்கு
எப்படியும்வம்புசெய்வ தில்லையென்றுண்மையுடன்
சத்தியமாகத்தானுரைநீ பார்ப்போமென்றார்
புத்தியில்லாநீசன் புகலுவான்பின்னாலே
பண்டாரமென்றும் பரதேசியானவரை
தண்டாளக்கந்தை தலைவிரித்த ஆண்டிகளை
அட்டியதுசெய்யேன் அவரோடேசண்டையிடேன்
முட்டியேவம்பு ஒருநாளுஞ்செய்வதில்லை
என்றான்காணீசன் என்பெருமாள்தானுரைப்பார்
நன்றுகயிப்படியே நட்டிசெய்யமாட்டேனென்று
ஆணையிட்டுத்தாவென்று அருளினாரெம்பெருமாள்
வீண்படனீசன் விளம்புவானப்போது
ஆரார்கள்பேரில் ஆணையிடவேணுமென்று
பேராகச்சொல்லு பிச்சையெடுப்போனேயென்றான்
அப்போதுபண்டாரம் அகமகிழ்ந்துகொண்டாடி
இப்போதுநீதான் ஈசர்தனைவணங்கி
வேண்டியேபோற வெகுவரங்கள்பேரதிலும்
பெண்டவள்பேரதிலும் பிலமர்கவிப்போது
ஆண்டிபரதேசி ஆகிவந்தபேர்களையும்
வீண்டிறடுசெயயேனெனவே நீயாணையிட்டால்
ஆணைக்கிறடுசெய்து ஆண்டிகளைச்சில்லமிட்டால்
வீணேபோமென்வரங்கள் வீட்டுப்பெண்டார்கள்முதல்
பெண்டோற்றுநானும் பெற்றவசமுந்தோற்று
மண்டோற்றுவாழ்வு மக்கள்கிளைதோற்று
சேனைதளந்தோற்று சீமையரசுதோற்று
ஆனைபடைதோற்று அரசுமேடைதோற்று
என்னுயிருந்தோற்று என்கிளையோடோநானும்

வன்னரகில்போவோமென்றே வாக்குரைத்திடுநீ
அப்போதுநீசன் ஆண்டியுரைத்தபடி
எப்போதுமறவேன் இதைமறந்துவம்புசெய்தால்
சொன்னபடியெல்லாம் தோற்றிறந்தென்னுயிரும்
வன்னரகில்போவேனென்று ஆணையிட்டான்மாநீசன்
நல்லதுதானென்று நாட்டமுற்றுச்சன்னாசி
வல்லபலமுள்ள மாநீசாநீகேளு
மந்திரங்களாலே மகாகோடிஆயுதங்கள்
தந்திரங்களாலே தான்வருத்தலாகிடுமே
அப்படியேயொத்த அச்சரங்கள்தானிருக்க
இப்படியேஆயுதத்தை எடுத்துச்சுமப்பதென்ன
நீகேட்டசக்கரத்தை நிமலவர்தந்தாரே
தொனிகெட்டவெற்றிரும்பைச் சுமவென்றுதந்தாரோ
இரும்பைச்சுமந்தால் இல்லைகாணென்றுபயன்
தரும்பொருள்போலுள்ள சம்பாத்தியந்தாறேன்
மண்டலங்கள்தேசம் வாழ்வுகளுண்டாவதற்கு
கண்டார்கள்மெய்க்க கனகதிரவியம்போல்
தருகிறேனுந்தனக்குத் தான்வேண்டுநீயெனவே
பருமுறுக்காமாண்டி பகர்ந்தாரேநீசனுக்கு
அப்போதுநீசன் அகமகிழ்ந்துகொண்டாடி
இப்படியேதாருமென்று ஈன்றுனேசக்கரத்தை
சக்கரத்தைவேண்டி சங்குசரத்தாமன
மிக்கப்பணமாக்கி மிகுத்தசக்கிராயுதத்தை
சபிக்கவேமாயன் சக்கிராயுதங்கேள்க்கும்
நீசனிடத்தில் என்னைப்பணமாக்கி
ஈயுநீரேசுவாமி இப்போதுசாபமிட்டு
இப்போதிடுஞ்சாபம் எப்போதுதீருமென்று
அப்போதுசக்கரமும் ஆண்டியைப்போற்றிடவே
கலிமாறும்போது கடருமெனருருன்சாபம்
வலியானசக்கரமும் வாய்த்தபணமாகியதே
பணமாகிக்கீழே பறந்துகுதித்திடவே
குணமானநீசன் எட்டியதான்பிடித்து
கண்ணில்மிகவொத்திக் காரிகையாள்கைகொடுப்பான்
பெண்ணேநமக்குப் பிலங்கள்வந்துவாய்த்துதடி
என்றுபிரியமுற்று ஈசுரரைத்தான்வணங்கி
மன்றுதனில்போக வரந்தாருமென்றுரைத்தார்
அப்போதுதன்னில் ஆண்டியவரங்குசென்று
இப்போதிங்கேவைத்து இவன்றன்மொழிந்ததெல்லாம்
தப்பாமலாகமத்தில் தானெழுதிவையுமென்றார்
ஆகமத்திற்பதித்து ஆண்டார்துரிசமுடன்
நாகரீகநாதன் நடந்தார்ஸ்ரீரங்கமதில்
நீசனையுமோரோபோ வென்றுநிபலனுந்தான்
ஈயுகிறபோது ஏதுரைப்பாள்சத்தியுமே
வன்னச்சிவனாரே / மாபாவிகேட்டவரம்

என்னென்னவாயமதமாய் இருக்குதுகாணுத்தமனே
வலியாதமாதே மானீசன்கேட்டதுதான்
கலியுகம்போலிருக்குக் கண்ணமுதேயென்றுரைத்தார்
சிவவாய்திறந்து செப்பக்கலியுகயாய்
இதமானதேவர் எழுதிறாகமத்தில்

விருத்தம்

கலியுகமெனச்சிவங் கருதிடத்தேவர்கள்
பொலிவுடனசேர்த்தனர் புராணமீதிலே
சறிவுடனீசனுந் தாணியில்போர்ந்திட
வலியுள்ளமாயன் ஸ்ரீரங்கமேவினார்

நடை

மாயனுக்காணை மானீசனிட்டதெல்லாம்
தூயபெருங்கணக்கில் தொகுத்தெழுதிவைத்தனராம்
நீசக்கலியன் நிறைவோன்பதம்போற்றி
தேசமதில்வரவே சென்றான்காணம்மானை
கலியன்கலிச்சிக் கட்டாய்வருகையிலே
சிலிரெனவேலோகந் திணுக்கிடவேயம்மானை
தர்மமாய்ப்பூமி தாண்டிருக்கும்நாளையிலே
வர்மமாய்னீசன் வரவேகண்டபபுவியில்
நல்லபறவை நல்மிருகமூர்வனமும்
வல்லவகைனீதம் மாற்றக்கேளன்பேர்ரே
வெள்ளானைவெள்ளை வேங்கையோடுவெண்கடுவாய்
தள்ளாதசர்ப்பந் தலையைந்துகொண்டதுவும்
வெள்ளன்னம்வெண்குயில்கள் வெண்புறுவெள்ளைமயில்
கள்ளமிலாவெண்சாரை கடியபலவெண்கருடன்
நல்லஅனுமன் நாடுங்காண்டாமிருகம்
வல்லவெண்ணரிகள் வளர்ந்துவரும்வெண்காகம்
ஆளியோடுசிங்கம் ஆனைருஞ்சிப்புள்ளும்
வேளிசைவெணகலைமான் வெண்புள்ளுவெண்ணணிகள்
மிருகமதில்வெள்ளைகொண்ட மேல்மிருகமானதெல்லாம்
அறியவேகுண்ட மதுநோக்கிப்போயிடவே
பால்நிறமான பட்சிபறவைகளும்
மேலாம்பராணர்குண்டம் மிகநோக்கிநாடிடவே
வெண்சாரையைந்துதலை விஷஅரவமானதெல்லாம்
துஞ்சாதநாதன் துணைதேடிநாடிடுமாம்
முன்னிருந்தசாஸ்த்திரமும் முறையும்பஞ்சாங்கமதும்
பின்வந்தனீசனினால் போகவழிதேடிடுமாம்
நீசனுக்குமுன்னிருந்த நீதநெறிமானுபங்கள்
போய்அகல்வோமென்று புத்திதனிலெண்ணிடுமாம்
முன்னிருந்தரத்தினங்கள் முத்துவைடூரியங்கள்
பன்னுமறைசாஸ்த்திரமும் பாதையதுகொண்டிடுமாம்
சங்குசமூலஞ் சலக்கண்சலத்தில்விழ
பொங்குநவரத்தினமும் போகவழிதேடிடுமாம்

கடல்விளை வெல்லாங் கண்காணாதோடுமாம்
தடவரையிலுள்ள தங்கமதுமண்கோர்க்க
சிலைகள்பதிகள் தெய்வத்திருச்சமூலம்
அலையுள்ளும்பூமி அதனுள்ளும்போய்மறைய
மாரிமறைய மலர்க்கண்மிகமறைய
ஏரிபாளாக எண்ணினதேதம்மானை
கர்மக்கலியதனால் கடல்கோபித்தேயடிக்க
தர்மந்தலைகவுந்து தானிருந்துதம்மானை
தர்மமெய்நீதமதுந் தாரணியிலூர்வனமும்
பொறுமையுடைய பெரியமிருகமதும்
நாகமணிதங்கமணி நவரத்தினமாமணியும்
தாகமுள்ளமுத்து சாத்திரமாமறையும்
நீதத்தோரெல்லாம் நீலவண்ணர்சங்குடனே
பாதத்திருக்குண்டம் பாதையதுதேடுபாம்
நடந்தோர்களெல்லாம் நாடிவழிவரவே
கடந்தார்கள்வல்லக் கலியைவிட்டுக்காடதிலே
காடதிலேசெல்லக் கனத்தபஞ்சபாண்டவர்கள்
வாடலுடலாய் வைகுண்டந்தானேக
கண்டாரே தர்மர் கடந்துநின்றநீதமதை
பண்டாரத்தர்மர் பகர்ந்தாரதினோடு
நாட்டிலுள்ளநீதமெல்லாந் நடந்துபர்ணாதேசென்றார்
வீட்டிலுறுதியுள்ள மேல்வீடுகாண்பதற்கு
போவேனோ தர்மம் போனதினால்நாயடியேன்
சேர்வேனோ குண்டஞ் செய் தர்மமில்லையென்றால்
என்றுரைக்கப்பாண்டவர்கள் இயல்தர்மமேதுரைக்கும்
பொன்றுவந்துலோகம் பொய்பூண்டதானதினால்
எங்களுக்கங்கே இருந்தாலாகாதெனவே
செங்கண்மாலாயனையுந் தேடியேபோறேனென்றார்
அப்போதுபாண்டவர்கள் அன்பரிய்ப்பதம்பணிந்து
இப்போதுஉங்களையும் இழந்துவிட்டிங்கிருந்தால்
கர்மக்கலிமூழ்கிக் காண்பதேதுகுண்டமதை
தர்மத்தோடங்கே தான்வருவோங்கண்டீரே
தர்மமும்நீதமதும் தாட்டிகப்பாண்டவரும்
வர்மமில்லாக்குண்ட வழிநோக்கிச்செல்லுகையில்
மேலானமாமிருகம் வேதாக்காராவுகளும்
நாலானவோர்தலையும் நல்லஅரவமதும்
வெண்பச்சியான மேலானபட்சிகளும்
இன்டச்சியெல்லாம் எங்கினிபோவோமென்று
கதறியழுதுகனைத்துநின்றார் காடதிலே
பதறியழுது பறவைமிருகமோடு
நிற்குமளவில் நீலவண்ணர்தாமறிந்து
பக்குவப்பிராயப் பண்டாரமாகிவந்து
ஏதுகாணீங்கள் / இந்தவனவாசமதில்
ஓதிக்கரைய உங்கள்விதியானதென்ன

செப்போடுவொத்த திருமால்தனைப்பார்த்து
அப்போதுயெல்லாம் அழுதழுதே துசொல்லும்
நீசக்கலியன் நீனிலத்தில்வந்ததிறல்
தேசந்திலெங்களுக்குச் செல்லவிருப்பில்லையையா
என்றுரைக்கச்சன்ஞசி யேதுரைப்பாரன்போரே
பாண்டவரைத்தர்மமதைப் பாரநீதமதையும்
ஆண்டவைகுண்டம் அடையப்போவென்றுரைத்தார்
தெய்வக்காரரைவைச் சிறந்தவெள்ளாளைகளை
மெய்வரம்புகொண்ட மிருத்தமிருகமெல்லாம்
கும்பக்குருமலையில்கூடியே நீங்களெல்லாம்
சாம்பசதாசிவத்தைத் தாள்போற்றிஉள்ளிருத்தி
நீசன்றனையறுத்து நீதயுகந்தானுள
வாசமுடனேவரவே வரம்வேண்டநில்லுமென்று
ஐந்தலைநாகமதை அந்தமுனிதானழைத்து
உந்தனக்குச்செய்தி உரைக்கிறேன்கேளெனவே
அலைமுகத்தில்நூற்தொன்று ஆழம்வரைக்கீழே
நிலைதனிலேநின்று நெடியோனையுள்ளிருத்தி
கலியைஅழித்துக் கடியதர்மமாகவேதான்
வலியயுகமாழுதற்கு வைகுண்டர்வாவெனவே
நிற்பாய்தவசு நீபோவெனவனுப்பி
சர்ப்பந்துக்காக சங்குவெள்ளைச்சாரைதனை
பர்ப்பக்கிரிதனிலே பைம்பொன்னிறப்பொய்கையிலே
வம்மையழித்து வாய்த்ததர்மாரச்சியத்தில்
அன்பரோடேயரசு ஆளத்திருமால்வரவே
வேணுமென்றுநெட்டை விரும்பிச்செய்யென்றேதான்
ஆணுவராதன் அதற்குவிடைகொடுத்தார்
அன்னப்பச்சியான அதிகப்பறவைகளும்
பொன்னம்பலகிரியில்ப் போய்த்தவசுபண்ணுமென்றார்
சாத்திரமாமறையைத் தாமெடுத்துமாமுனியும்
சூத்திரநெஞ்சத்து உள்ளிருத்திவைத்தனராம்
இருத்திஸ்ரீரங்கம் யேகவென்றெம்பெருமாள்
கருத்திலுறயிருத்திக் கட்டாய்வருகையிலே
ஞானமுனியிரேடு நல்லகலைமுனிவன்
தானமுள்ளமாமுனிவர் தலைகவிழ்ந்தேதவசு
சடைத்துமுகம்வாடித் தானிருக்குமப்போது
திடத்தமுடனேநல்ல திருமாலருகேகி
நன்றியுள்ளமாமுனியே நல்லகயிலாசமதில்
கண்டதுண்டுங்களையுங் காட்டில்வந்தவாறேது
அப்போதுமாமுனிவர் ஆதிபதம்பணிந்து
செப்போடுவொத்த திருமாலேநாங்களுந்தான்
கைலாசமீதில்க் கரைக்கண்டர்பாதமதில்
ஒயிலாகப்போற்றி ஒழுங்காயிருந்தவர்காண்
இருக்குமந்தகாலையிலே எங்களிருபேர்களையும்
தருக்குகந்தாசர் தன்னையவர்வருத்தி

மாயன்மேல்பிறக்க மண்ணுலோகந்தனிலே
காயமிழந்து காணாதுருவெடுத்து
மறைந்திருக்கிறானெனவே வானோர்கள்சொல்வதினால்
சிறந்தபுகழ்மாயனுக்குத் தேருஞ்சிங்காசனமும்
மண்டபங்கள்மேடை வாய்த்தநீராவிகளும்
பண்டுள்ளநல்ல பைப்பொன்னிறப்பொன்பதியும்
உண்டுகாண்துவாரா யுகத்திலேயென்றுசொல்லி
கண்டுகொண்டானால்க் கலியனைதஆண்டுகொள்வான்
முன்போய்த்தானீங்கள் உவரிதனைவருத்தி
இன்பமுள்ளவகைகள் எல்லாமதிலுள்ளேவைத்து
வைகுண்டரிங்கே வந்தாலிதைக்காட்டி
மெய்கொண்டவுங்கள் இடத்திலேபோவுமென்று
அல்லாதேபோனால் அக்கினியாலுங்களையும்
இல்லாதேசெய்வார் என்றுசொல்லிவாருமென்று
அனுப்பினாரெங்களையும் அதற்காகயிங்குவந்தோம்
துனுப்பாகவாரிதனைச் சொல்லியேசட்டம்வைத்து
ஏகினோங்கயிலே இடைவழியில்மாநீசன்
தானிவரக்கண்டு தவலோகமேமறைந்து
கர்மவிதிப்பயனால்க் கலக்கமிகவடைந்து
தர்மச்சிறப்பில்லா தலைகவிழ்ந்திருந்தோமென்றார்
அப்போது அச்சுதரும் அந்தமுனிதங்களையும்
இப்போதுகூட்டி யேகின்றயப்பொழுது
கருங்குரங்குக்காராளை கடியகடுவாய்புலியும்
இருங்கருடனூர்வனமும் எறும்புசமுட்டைகளும்
கள்ளக்கசடுள்ள கரியமிருகமதும்
கொள்ளைகொண்டவூர்வனமும் குசலானபட்சிகளும்
வரவேகண்டெம்பெருமான் மாமுனியைத்தான்பார்த்து
ஈதேதெனவே எனக்கேள்க்கமாமுனிவர்
நீசனுதிரம் நீதிகெட்டவிம்மிருகம்
வாயமுள்ளபட்சிகளும் மாநிலத்திலூர்வனமும்
பிறந்துதித்துவந்து பேருலகிலம்மானை
சிறந்ததிந்தெம்பெருமான் செவியிலேகையறைந்து
விலகியேபோக வேணுமென்றெம்பெருமான்
மங்கியமாமுனிவர் மாயனடிபோற்றி
எங்களுக்கெங்கே இருக்கவேசொல்வீரென
அங்கந்தமாயவரின் அடிதொழுதாரம்மானை
அப்பொழுதெம்பெருமான் அந்தமுனிக்கேதுரைப்பார்
இப்பொழுதுநீங்கள் ஏகுங்கோசெந்தூரில்
செந்தூர்ப்பதியில்ச் சிறந்தவாரிக்கரையில்
நந்தகோபால நாராயணனெனவே
மாயநீசக்கலியை வதைசெய்துதர்மமதாய்
ஞாயமுடன்வைகுந்தர் நாட்டையொருசொல்லதுக்குள்
ஆளவரவேணுமென்று அருந்தவசுபண்ணுமென்று
வேழமொத்தமாமுனிக்கு விடைகொடுத்தார்மாயவரும்

விடைவேண்டி மாமுனிவர் வேலனுறை நந்திருக்கும்
கடலான தர்க்கரையில் கடுந்தவசு பண்ணினரே
அப்படியே மாமுனிவர் அங்கே தவசிருக்க
இப்படியே மாயவன் இசைந்த ஸ்ரீரங்கமதில்
போகின்ற வேளையிலே போகமென்ற மாமுனிவன்
தாவுமொரு மலையில்த் தலைசிதறிச் சாகவென்று
வேகித்து மாமுனிவன் விசையாக முட்டுகையில்
ஆகமுற்றெம்பெருமாள் அவனோடங்கே துரைப்பார்
மலைதனிலே முட்டி மாளவென்று மாமுனி நீ
குலைந்து குலைந்து மாமுனியே கூறு நீயென்றனராம்
அப்போது மாயவனார் அடிபோற்றியே துரைப்பான்
செப்பமுள்ள மாயவரே சீமைதனை யளந்த
மாயவரே நானுமினி மாழ்வதல்லால் இங்கிருக்க
ஞாயமில்லை ஐயா நாராயண பெருமாளே
என்றுரைக்க மாமுனியும் ஏதுரைப்பார் எம்பெருமாள்
உன்றுவசனம் உரையென்றார் மாமுனியை
என்றெம்பெருமாள் இதுவுரைக்க மாமுனியும்
அன்றுமுனி சொன்ன வசனங்கேளும் போரே
தர்மநீதமதுவும் தரணிதனில் மானுபமும்
நன்மையெல்லாம் நாடுவிட்டு நடந்து மறைந்ததினால்
வர்மமது வையகத்தில் வந்தபடியாலும்
நானிருந்த இஷ்டை நாலிரண்டாகையிலே
மானுபவங்கள் தர்மம் மறையத்தான் போனதினால்
என்றவன்றன் வம்பில் இழக்கதேனையென்று சொல்லி
தன்தலையைத் தான்சிதறிச் சாகவேணுமெனவே
மலைதனிலே முட்டி மாண்டுவிடவேணுமென்று
அலைமேல் துயின்ற ஆண்டியோடேயுரைத்தான்
நல்லதென்று மாயவனார் நல்முனியைக் கொண்டாடி
வல்லவனே யுந்தனுக்கு மாளவென்றால் வேறில்லையோ
கல்லிலே முட்டி கண்தவர்ந்து சாவதென்ன
சொல்லுநீயென்று திருமாலிதுவுரைக்க
அப்போது மாமுனியும் அந்தமலைப் புனுமை
இப்போது சொல்லுகிறேன் என்றேயுரைக்கலுற்றார்
வேதாவிதித்த மேலான ஆகமம்போல்
நாதாந்தவேதம் நாலுரண்டு கண்டமே
கலியன் பிறந்தபின்பு கட்டான வேதமொன்று
சலிவாகி வேதம் தான் விளங்காவண்ணமுந்தான்
இழகாமல் கற்போல் இருந்ததுகாண் வேதமது
குழைவான வேதா சுநியாயமையறிந்து
கல்வியிழகாமல் கற்போலிருந்ததினால்
பல்லுயிர்கள் வாழும் பாரிலொருபங்காக
மலையாய் வளர்ந்து வைகுந்தர் வருகையிலே
அலைபோலிளகி அவனிதனில் பாவமென்று
சபித்தார் காண் வேதா தானறிந்து வேதமது

குபிந்தரனமான குன்றுபொல்தான்வளர்ந்து
அன்றந்தவேதம் ஆனதினாலடியேன்
இன்றென்சிரசை இதிலிறடிமாண்டதுண்டால்
வைகுண்டங்கிட்டுமென்று மாளவந்தேனிம்மலையில்
கைகண்டவேதக் கருணாகரக்கடலே
என்றுரைக்கமாமுனிவன் எம்பெருமாள்நல்லதென்று
அன்றுமுனியை அவரோடுடன்கூட்டி
போகின்றவேளையிலே போகனென்றமாமுனிவன்
ஏகின்றவேளை யெம்பெருமாளேதுசொல்வார்
மாமுனியேநீகேளு மாச்சலாயென்னுடம்பு
தாமுனியேஎந்தனுக்குச் சடைவாயிருக்குதுகாண்
ஆனதால்கெங்கை யார்த்ததிலேகுளித்துமிக
போனால்சுகமெனவே போகனோடேயுரைத்தார்
அப்போதுநல்ல அருள்கொண்டமாமுனிவன்
இப்போதுமாயவரே இதோதெரியுகின்ற
அருணகிரிமலை அருவியொன்றுண்டுமையா
கருணையிராங்கினதால் காட்டியேதாரேனென்றான்
நல்லதுதானென்று நல்லமுனியோடே
வல்லதிருமேனி வாவிதனைக்கண்டார்காண்
கண்டுதிருமேனி கனத்தநீரவிதனில்
சென்றிறங்கிமேனிதனில்ச் செலங்கோரிவிட்டிடவே
ஆவிதனிலிறங்கி அச்சுதனார்நின்றிடவே
தேவியொருபெண் செலமெழுந்துமாயனையும்
வந்துபணிந்திடவே மாயனதைப்பார்த்து
சந்துபயில்மாமுனியே தண்ணீரைக்காணாமல்
பெண்ணாகவந்த புதுமையென்னமாமுனியே
கண்ணானமாமுனியும் கட்டுரைப்பானம்மானை
பெண்ணோடுகேட்டால் புதுமையதுதெரியும்
எண்ணாதெதண்ணி யேதுரைப்பான்மாமுனியும்
என்றுரைக்கமாமுனியும் யேந்திளையோடேதுரைப்பார்

சலந்தவசு

நன்றுநன்றுபெண்ணேநீ நதியாயிருந்ததுவும்
பெண்ணாகவந்ததுவும் பேசுநீயொண்ணுதலே
தண்ணீராய்நின்ற தார்குழலாளேதுரைப்பாள்
அய்யாவேநானும் ஆதிகைலாமதில்
மெய்யாகசுரர்க்கு வேலையதுசெய்திருந்த
வருகிறவேளையிலே மனங்குளறிகானடியாள்
அரையில்கலைபூண ஆவியிலேசென்றிறங்கி
குளித்தேனதையுங் கொன்றையணிவோனறிந்து
அழித்தேயெனையும் ஆவிபோலேபடைத்தார்
படைக்கும்பொழுதில் பரமனோடிச்சாபம்
கடனாவதெப்போதெனவே கலைக்கண்டரோடுரைத்தேன்
ஆவியாய்நீகிடந்தால் அச்சுதனாரங்குவந்து

தாவிக்குளிக்கச் சாபமதுமாறுமென்றார்
என்றுரைக்கப்பெண்ணாள் எம்பெருமாளேதுரைப்பார்
அன்றந்தப்பெண்ணதையும் ஆகமப்போகனையும்
நாலுண்டிருந்த நல்லதுவாரயுகத்தில்
தானுகஆண்டு தானிருக்குமப்போது
சூரியவொளிகாந்த துலங்குவைடூரியத்தில்
வீரியமான வெற்றிவிருதுக்குடையும்
தங்கப்பொன்னுயுதமுந் தனிருபிறச்சக்கரமும்
பங்கமில்லாமுத்துப் பவளநிறக்குடையும்
கட்டானவைரக் கல்கோட்டைவாவிகளும்
மட்டானசெம்பவள வயிரக்கால்மண்டபமும்
உண்டுகாணுந்தனையும் உடனேபோய்நீங்களுந்தான்
என்றுரான்வருவேன இதுவரைக்குங்காத்திருங்கோ
நான்வந்தபோது நல்லகெதியுங்களுக்கு
தான்தருவேன்போகுமெனத் தங்களிருபேர்களுக்கும்
விடைகொடுத்துஸ்ரீரங்கம் மேவியவரிருக்க
இடமுடலே போகமுனி தேவிசலமடவும்
வந்தந்தமாயவரின் வாழ்வெல்லாங்காத்திருந்தார்
மாயன்ஸ்ரீரங்கம் வாழ்ந்திருக்குமப்போது
மாயக்கலிசெய்த மாயங்களென்போரே
சாஸ்திரத்தையாருய்த் தானவகுத்துவேதமதை
மாத்திரமேமநாலாய் வைத்தனர்காணம்மானே
நச்சேத்திரத்தை நல்லிருபத்தேழாகப்
பொய்ச்சேத்திரமாய்ப் பிரித்த வகாணம்மானே
கோளொன்பதுக்குக் கூடுபன்னிரண்டாக
நாளேழுவாரம் நாட்டிவைத்தானம்மானே
பக்கமதுபத்தஞ்சு ஆகப்பவப்பிரித்து
தக்கமதுலோகந் தானுண்டிருக்கையிலே
மாந்திரத்தால்செய்த வறுமைகேளன்போரே
பாந்தள்வாய்கட்டிப் பருசுகெடவாட்டிடுவான
சந்திரனைமங்கவைப்பான் சமுத்திரத்தைப்பொங்கவைப்பான்
மந்திரத்தால்தெய்வமதை மாடுபோல்வேலைகொள்வான்
கற்பைக்கலக்கிடுவான் கன்னியழித்திடுவான
வேர்ப்பைத்தகர்த்திடுவான் வெடியைத்தடுத்திடுவான்
ஆண்பெண்கள் தன்னை அலச்சல்மிகச்செய்திடுவான்
சோண்பிரித்துகெட்டி குடிகெடுப்பான்மானிடரை
பசுவையடைத்துப் பட்டினிகள்போட்டிடுவான்
கசுவைமறைத்திடுவான் கண்ணைக்கெடுத்திடுவான்
மிருகமதைக்கெட்டி மொன்றியிடாக்கொன்றிடுவான்
மானிடர்க்குருஷ்டம் வருத்தியேகொன்றிடுவான்
வீணிலேமானிடரை விஷமடக்கிக்கொன்றிடுவான்
மாரிதனைமறைப்பான் வருத்தவென்றுலழைப்பான்
ஏரிதனைவெட்டி இயலழியச்செய்திடுவான்
அடப்பமிடத்தாலை ஆளாக்கிவைத்திடுவான

குடைபிடிக்கப்பிதாவைக் கொண்டுவான்வேலையது
பேயைவருத்தி பூசைமிகக்கொடுத்து
தேயமதில்மானிடரைச் செத்திறக்கவைத்திடுவான்
கடலதுக்குமாமலைக்குங் கல்கோட்டைதாண்டவிட்டு
தடவரைகளெல்லாந் தகர்த்துப்பொடிபடுத்தி
பூலோகதேசம் புவனமெல்லாம்பரந்து
மேலோகமெல்லாம் மிகப்பரந்தானம்மானை
கைலையிமலோகங் கரியதெய்வலோகமெல்லாம்
அகிலமெல்லாம்புரண்ட அதிசயங்கேளண்பேரே
சிவந்தானினைத்தால்ச் செல்லார்கள்தேவரெல்லாம்
தவந்தானிளகித் தான்வந்ததாலேதான்
மூவர்களொரு முறமைமிகத்தவறு
தேவர்களொருந் தியங்கிமிகத்தான்புரள
ஈசுரனாரப்போ ஏதெனவேதான்வெகுண்டு

நந்தி வரவு

வீசுபுகழ்நந்திதனை விரைவாய்வரவழைத்து
மாமுனியேயகையிலை வரம்பழியக்காரணமேன்
ஓமுனியேநீயும் உள்ளதெல்லாஞ்சொல்லெனவே
என்றந்தநந்தியோடு ஈசுரனார்தான்கேள்க்க
அன்றந்தமாமுனியும் அரனாரடிபணிந்து
நல்லதுகாணீசுரரே நம்தனக்கிங்கேதான்
செல்லாதுஇங்கிருந்தால் சிவனெனயெனத்தொழுது
பூலோகமெழும பொன்னுலோகமேழும்
ஈரேழுலோக இருபுத்தியானதெல்லாம்
சொல்லவேணுமெனறால் சிவகைலைவிட்டேகாம்
நல்லபரலோகமதில் நாம்போவோமீசுரரே
என்றந்தஈசுரரை இறஞ்சிமுனிதான்கூட்டி
அன்றந்தமாமுனியும் அரனுருந்தானேகி
சென்றார்பரலோகச் சீமையிலேவந்திருந்து
வண்டாடுஞ்சோலை வயிடூரியக்கோயில்
கோவிலவர்புக்கிக் குருவைமிகப்போற்றி
ஆவலுடனே அருளுவான்மாமுனியும்
நல்லபரமேசுரரே நாடுதடுமாறினதால்
எல்லாம்நீர்கேள்க்க எடுத்துரைப்பேனென்றுமுனி
மாமுனிவனீசுரரை வணங்கிப்பதங்குவித்து
ஓமுனியும்நன்றாய் உரைப்பான்காணம்மானை
கேட்டீரோஈசுரரே கேடுவந்தசெய்தியெல்லாம்
தீட்டுகிறேனென்று செப்புவாரன்போரே
மாயன்வைகுண்டம் மறையவென்றுபொய்ச்சடலக்
காயமிழந்து காணாதுருவெடுத்து
ஏகிவரும்வழியில் ஏந்திழையாள்தெய்வக்கன்னி
தாவிச்சுனையாடித் தங்கள்நிற்கும்வேளையிலே
கண்டந்தமாயன் கன்னியர்பேலிச்சைகொண்டு

பண்டந்த யோகமுனி பச்சமால் தந்தனக்கு
மேலோகத் தார்களெல்லாம் விஷ்ணுவினுதமதில்
பூலோகந் தனனில் பிறாவ னென்றெனவும்
பிதிரிற்றவமிருந்து பிறந்தவழி தனையெல்லாம்
சதிராகவங்கெடுத்துத் தர்மயுக மாள்வரென்று
யாகமுனியிட்ட உறுசாபமதனையும்
போகமதில் லோகப் பிறப்பெல்லாந் தோணவைத்து
கனலிவயிற்றினுறக் காட்டில் மிகப்போந்து
தன்னிகரில்லாத சான்றோரென வளர்ந்தார்
வளர்ந்தோர்களரச்சியத்தை வகையாகவாண்டிருக்க
இழந்த கலியோன்றி இயல் சென்றவ்வுகத்தில்
கலியன் என்செல்லைக் கைமறந்தவ்வுலகில்
பெலிவுள்ள தர்மம் ன்றிச் சேசீ தமது
முன்னிருந்த சாஸ்திரமும் முறையுமிகத் தவறி
பின்னுதிக்குஞ் சனம் பிரித்தானசாண் வெவ்வாய்
ஆனதால் பூலோகம் அழிந்துமிகத் தவறி
ஊனமடைந்தார் உலகிலுள்ள சான்றோர்கள்
தந்திரமந்திரத்தால் சான்றோரைத் தானமயக்கி
பந்தியழித்ததினால் பத்தினியாள் பெற்றமக்கள்
ஒண்ணுக்கொன்றாளாறு எதிர்த்தொத்துமிகவாழாமல்
பெண்ணுக்கு ஆணுமா பிரிவுமறியாகி
தாய்க்குத்தான் பிள்ளை தாளமலேபசும்
வாய்க்குவாய்ச் சொன்னாலும் மங்கைநல்லாளென்றிடுவான்
பிதாவை விநம்பார் புண்ணியமென்றே பாரார்
சிதாகவெல்லா நீசன் இட்டுவரச்செய்ததினால்
ஆனதாலிந்த வழிவழியேயயங் கழுது
போனதால் நீசம் பொனனுல மவளரையும்
ஏச்சுதையா இறுசேகலியும
கோவிச்சுதையா கொடுங்கலியுமங்கேகி
இதெல்லாம்பின்னும் கீன் ஞ்சிலநாளில்
ஏதெல்லாமாறென்று ஈசுரரேபார்த்திருவும
மாயனையும்வருத்தி வார்த்தைகேளாதிருந்தால்
தேயமிருள்மூடிச் சென்றிடுங்காணீசுரரே
அப்பொழுதீசுரரும் அதுக்கேதுசெய்வோமென்று
செப்பிப்பாடுவொத்த சிவனுநபொருந்திருந்தார்
மாமுனியேமாயவனை வருத்தவென் செய்திடுவோம்
ஓமுனியேநீயும் உரையென் பரனே பாரோ
அப்போது மாமுனியும் ஆரைவணங்கி
இப்போது தானவம் இவ்லோயலோகமதில்
தவஞ்செய்து மாயவனைத் தான்வருத்தவென்றாலும்
பலஞ்செய்த காலம் படுமோத பசிருக்க
என்றுரைக்குமா முனியும் இன்னமொன்று சொல்லிடுவான்
நன்றுநன்றீசுரரே நானுரைக்கக் கேட்டருளும்
இருள்கொண்ட காலமதால் ஏற்ற தர்மஞ் செல்லாது

மருள்கொண்டகாலத்தால் வம்புக்குநேராகுமையா

பேய்ப் பிறப்பு

ஆணுவஞ்சேர்பேய்க்கணங்க ளம்பைக்கோர்மாலைதனை
பூணுநீர் தவசு புரிந்தாலிவருவார்
என்றுமுனிசொல்ல ஈசுரனார்சம்மதித்து
அன்றுபேய்க்கணங்கள் வசுமாலையேயணிந்து
இருந்தார் அரிதான் இப்போவரவேணுமென்று
தருந்தாரமார்பன் தானறிந்தே தனதேவ
இருக்கலமை யில்லா எழுந்திருந்தாகாயமதில்
சுறுக்காயுதித்துத் தோன்றினார்ஈசன்முன்னே
அப்போதுமாயவரை ஆதியாவிப்பிடித்து
இப்போதிதுவரையும் எங்கேநீர்போனீர்காண்
என்றுதானீசர் எய்த்திளைத்துச்சொல்லிடவே
அன்றுதானீசுரரை அரியாவித்தானேசேர்த்து
பாண்டவர்க்குபகாரம் பண்ணியிருந்ததுவும்
வீண்டதுரியோதனனை வெற்றிகொண்டசெய்தியதும்
பொருப்பேறிப்பொய்ச்சடலம் போட்டுச்ஸ்ரீரங்கமதில்
இருப்பதுவுஞ்சொல்லி எனைவருத்துவானேனென்றார்
அப்போதரனார் ஆதிமாலோடுரைப்பார்
இப்போதுகலியன் இராச்சியத்திலேபிறந்து
யுகிறலுலோகமதும் பாரயிருள்மூடினதால்
இதுநாள்வரையும் யானும்மைக்காணாமல்
மனங்கலங்கிப் பேய்க்கணங்கள் மாலையிட்டுநானிருந்தேன்
கனங்கொண்டமாயவரே கைலையிருள்மாற்றுமென்றார்
நல்லாயிருக்கிறதுகாண் நவின்றதெல்லாங்கேள்பதற்கு
எல்லாமிருக்கட்டுமென்று ஈசுரரேயுமுடைய
கழுத்திற்றரித்ததையுங் கழற்றியெறியுமென்றார்
வழுத்திடவேயீசர் மாலைதனைக்கழட்டி
கோபத்தாலக்கினியிற் கூறியாயெறிந்தனரே
வேகத்தால்மாலை வெடித்ததுகாண்பேய்க்கணம்போல்
கொள்ளைகொண்டபேய்கள் கோடாமுக்கோடியுமாய்
துள்ளிக்குதித்துச் சுற்றிக்குதித்தாடும்
அப்போதுபேய்கள் அரனடிவணங்கி
இப்போதுஈசுரரே எங்கள்பசிதீர்த்து
மந்திரசால மாய்மாலமாறணமும்
தந்திரசாலஞ் சருவதுமேதாருமையா
கொல்லச்சாசங்கிலியும் கொன்றவரைத்தானெழுப்ப
வெல்லப்பிளசங்கிலியும் வெகுப்பாகத்தாருமையா
ஈசுரருந்தேவர்களும் என்கபடத்துள்ளாக
வீசுபலவரங்கள் விடையாகத்தாருமையா
அப்போதுபேய்கள் அதுகேட்டதத்தனையும்
இப்பொதுகொடுக்க ஈசுரரும்சம்மதித்து
மாலோடும்வேதா மறையவனோடுங்கேள்ப்பார்

கேட்டிருந்தநாரணரும் கிருபையுடனீசுரனை
தேட்டமுடன்பார்த்துச் செப்புவாரம்மானை
ஈசுரரேபேய்களுக்கு இவ்வரங்கள் ஈந்தாக்கால்
வீசுங்காண்லோகமதை விழுங்குங்காணிப்பேய்கள்
தூயவரேபேய்கேட்ட சத்தவரமத்தனையும்
ஞாயமில்லையென்று நானுரைக்கப்போகாது
ஆனாலும்பேய்களுக்கு அருளினாலிவ்வரங்கள்
ஞானாந்திரமான நாரதமாமுனியை
வருத்தியே பேய்களுக்கு வரங்கொடுத்தவன் கையிலே
இருத்தியணையவைத்து யேழ்ப்பிவியும்பேய்களைத்தான்
பேய்களுடபேரில் பிழைத்ததுநான்குற்றமென்றால்
தேயக்கலிமாழுகையில் சிவவடகயிலாசமதில்
முனிசிறையும்பேய்களுக்கு உயிரளிவுவென்றுசொல்லி
துனிவானமுனியுடனே சொல்லியனுப்புமென்றார்
அப்போதுவீசுரரும் அந்தமுனியைவருத்தி
இப்படியேசொல்லி ஏழ்ப்பித்தனுப்பிடவே
மாமுனியுஞ்சம்மதித்து வரவேண்டிப்பேய்களுந்தான்
தாமுனிந்துபூலோகந் தன்னில்வந்திடுமாம்
பேய்பூலோகத்தில்ப் போயிடவேஈசுரரும்
ஆயனாரோடே அருளுவாரன்போரே
கைலையிருளைக் கடத்திவைக்காதிருந்தால்
அகிலமதிலிருப்பு இல்லையேஅச்சுதரே
அப்போதுமாயவனார் ஆதிதனைநோக்கி
இப்போதுநீங்கள் எல்லோருமிக்கவேதான்
நன்றாகஆண்டிகள்போல் நற்றுவடங்களிட்டு
பண்டாரவேசமதாய்ப் பதிந்திருங்கோவென்றுசொல்லி
நடந்தார்ஸ்ரீரங்க நகரிதனிலெம்பெருமாள்
மாயனுரைமாறாமல் வாய்த்தமேலோகமுள்ளோர்
ஈசர்முதலாண்டியென இருந்தார்காணம்மானை
ஆனதால்கலியன் அங்கேயனுவிலகி
மானமனுப்போலே வாழ்ந்திருந்தாரம்மானை
பூலோகமெல்லாம் பொய்யானமாகலியன
மாலோசனையிழந்து மாறியேமானிடவர்
சாதியினம்பிரித்துத் தடுமாறிமானிடவர்
ஊதினங்களாக ஒன்றுக்கொன்றேறெயழிதாய்
பிரட்டுருட்டாய்மானிடரைப் பிலமுள்ளோர்தானடித்து
மருட்டும்புரட்டுடனே மானீசனாளுகையில்
மாரியதுபொழிந்து வையகமதுவுடைத்து
ஏரிவழிந்து இராச்சியத்தைத்தானெடுக்க
வெள்ளம்பெருகி வெம்மருண்டதம்மானை
உள்ளமகிழ்சோழனுக்கு உடனேதானோடி
மனுநீதிகாவலவா வையகமுடையாதிருந்தால்
இனித்தேசந்தன்னை யாண்டேகு ஞாயமில்லை
ஊரையரித்து உவரிதனில்கொணடேகும்

பாரைமிகவாளும் பத்தியுள்ளசோழமன்ன
என்றுகுடியானவர்கள் இராசனுக்கேயுரைத்து
அன்றுதான்வகை அணையடைக்கவேணுமென்று
எல்லர்வகைச்சாதி இப்போவரவழைத்து
வல்லபுகழ்மன்னன் வைகையணையில்வந்து
மண்ணோடுகல்லும் மரங்கள்மிகவைக்கேணலும்
எண்ணெண்ணக்கூடாத ஏதுவகையானதெல்லாம்
கொண்டுவந்தேயணையில்க் கூறிட்டுத்தானடைக்க
அன்றடைபடாமல் அறிவழிந்துசோழமன்னன்
அய்யோபாழாக அவனிதான்போகுதென்று
மெய்யோடுமெய்குளறி வெம்மருண்டுநிற்கையிலே
கோழனென்றமானீச குலத்திலுதித்துவந்த
ஈழனொருபொல்லாதான் என்சொல்வானம்மானை
மன்னவனேயிந்தவைகை மலையெடுத்துவைத்தாலும்
இன்னமிதுகேளாய ஏலாதுநம்மாலே
தெய்வகுலச்சான்றோராய்ச் சித்திரமாகாளி
கையதுக்குள்பிள்ளையெனக் கட்டாய்வளருகிறார்

சோழன் வினை

அந்தச்சான்றோரை அழைத்திங்கேகொண்டுவந்து
இந்தஅணையடைக்க ஏலுமென்றானம்மானை
அப்போதுசோழன் அன்னீசக்கலியதினால்
இப்போதேமயங்கி என்சொல்வான்மன்னனுடன்
மந்திரியேநம்முடைய வாய்த்தடைத்தலைவர்
தந்திரியேநீங்கள்சென்று சான்றோரைத்தான்கூட்டி
வாருமென்றுசொல்லி மன்னவனேவிடவே
சேருமென்றுசொல்லச் சேவுகர்தான்விரைந்து
அழைத்துவந்தார்சான்றோரை அரசன்மிகக்கொண்டாடி
தழைத்தபுகழ்சான்றோரை சந்தோசமாகவிப்போ
வைகைதனையடைக்க வழிபாருமென்றுரைத்தார்
செய்கைமுடிச்சான்றோர் தேசமன்னனோடுரைப்பார்
நல்லதல்லமன்னவனே நம்மோடிதுவுரைக்க
இல்லையிந்தவேலை இதற்குமுன்னே கேட்டிலையே
வெட்டாப்படையை வெற்றிகொண்டோமும்மாலே
பட்டாங்குயெல்லாம் பகர்ந்தாரேசோழனுடன்
மாயக்கலியாதலினால் மன்னவனுங்கேளாமல்
ஞாயமொன்றும்போகாது நழிமொழிகள்பேசாதே
குட்டையினால்மண்ணெடுத்துக் குளக்கரையைத்தானடைக்க
கேட்டியல்லால் வேறுகெறுவிதங்கள்பேசாதே
என்றுரைக்கச்சான்றோர் இயம்புவாரம்மானை
நன்றுநன்றுமன்னவரே நமக்குவழக்கல்லவே
இவ்வேலையொன்று எங்களோடியாமல்
எவ்வேலைசொல்வீரோ யாமதற்குள்ளதென்றார்
கேட்டந்தமன்னன் கிறுக்கமுடனிறுக்கி

இட்டினான் சான்றோரைச் சினத்தான் காணம்மானை
அப்போது சான்றோர் அதுக்கிசையாமல் நின்றார்
இப்போது சோழன் ஏது சொல்வானம்மானை
நான் வேலை சொன்னால் நகட்டுவதோ உங்களுக்கு
தான் பாருவென்று தன் தளகர்த்தருடன்
வேலை கொள்ளுமென்று விசை காட்டினான் கெடுவான்
தாலமறியாமல்த் துள்ளியே சேவுகர்கள்
சூழவளைந்து துய்யச் சான்றோர்களையும்
வேழம் பலதை விட்டுப் பிடித்திடவே
சான்றோரடுக்கல் சாரவகையில்லாமல்
மீண்டகலத் தோற்று வெளியிலே நின்டவே
அப்போது சோழன் அவனை கொண்டுவந்து
இப்போது சான்றோரை ஏறிப்பிடித்தனனாம்
சான்றோர்கள் சோழனையுந் தட்டப்படாதெனவே
நன்றியுடனின்றார் நாடியவன் பிடித்து
குட்டையெடென்றிடவே கூடாதெனவுரைக்க
தட்டினான் வைகையிலே தலையைச் சான்றோர் தனக்கு
ஆணை தனை விட்டு அரசனந்தச் சோழமன்னன்
சேனைத் தலைவர் சிறந்த சான்றோர்கள் தன்னில்
கொன்றானொருவனையும் குளக்கரையிலம்மானை
பின்னாலொருவனையும் பிடித்துக் கொடுவாருமென்றான்
குட்டையெடென்று கூறினான் மாபாவி
இட்டமுடனாண்ட தெய்வகுலச் சான்றோர்
முன்னிறந்த மன்னனிலும் மோசமோமாகாங்களுந்தான்
இன்னமிந்தக் குட்டை யாங்களெடோமென்றனராம்
பின்னுமந்தச் சோழன் பிடித்தொருவன்றனையும்
கொன்றான் காண் வைகை தனில்க் குஞ்சரத்தை விட்டிறடி
நன்றிமறந்து நாடாண்ட சோழமன்னன்
கொன்றான் காணிரண்டு குலதெய்வச் சான்றோரை
அப்போது வித்தியாதர முனிவன் தானறிந்து
செப்போடொத்த திருமாலருகேகி
மாயவரையும் முடைய மதலையேழு பெயரில்
காயமழித்தான் கரிக்காலச் சோழனவன்
என்றபொழுது எம்பெருமானப்போது
அன்றுபுட்டேயருந்தி அவளாலப்போல் கோலமது
கொன்றுகுமாரர்களைக் குசல்செய்ததும் பார்த்து
அன்று வைகையடைத்து அடிகள் மிகப்பட்டவரும்
ஸ்ரீரங்கந்தன்னில்ச் சிறந்த கோபத்தோடே
சாரங்கர் வந்து தானிருந்தாரம்மானை
மாகாளி தானறிந்து மக்களைத் தான் கொன்றதினால்
ஓங்காளி சோழன் ஊர்வறுமையாகிடவும்
பன்னிரண்டாண்டு பாரில் மழைபெய்யாமல்
உன்னினாள் மனதில் உடனே மழை சுவறி
பெய்யாமல் சோழன் பேருலகம் பஞ்சமதால்

அய்யமதியாமல் அறிவழிந்துவாடினனே
இறந்தசான்றோர்களுட ஏந்திழைமாரெல்லோரும்
சிறந்ததவம்புரியச் சென்றார்காணம்மானை
சென்றதவத்தின் செய்திகேளன்போரே
அழுக்குக்கலையணிந்து அந்தப்பொன்றாளாமல்
இழுக்குச்சொல்லீந்த ஈனன்பழிகொளவும்
இறந்தமன்னவர்கள் எழுந்திருந்தெங்களையும்
சிறந்தமணத்தோடு உடன்சேரவந்திடவும்
பழிசெய்தசோழனூர் பகல்நரியோடிடவும்
அழிவாகிச்சோழன் அவன்மாண்டுபோயிடவும்
வரந்தாருமென்று மாயவரைநெஞ்சில்வைத்து
பரமானபெண்கள் பாரத்தவசுநின்றார்
இப்படியேமாதர் இங்கேதவசிருக்க
அப்படியேமாயன் அவர்ஸ்ரீரங்கமதில்
இருக்கும்பொழுது இரணியநீசக்கலியன்

ஸ்ரீரங்கம் விட்டு சுவாமி அனந்தபுரமேகல்

கருக்கரகலோகங் கண்டவிடமேபரந்து
ஸ்ரீரங்கமானதிலே சேர்ந்திருக்கும்வேதியர்கள்
நீதங்குழறி நெறிதவறிப்போனதினால்
முறைவைத்தபூசை முந்திமுறையெனவே
மறையவனும்பூச வந்தேதமுகித்திடவே
பொருமல்மற்றொருவன் பூசையெனக்கென்றுசொல்லி
மறவாதமாயவரை வணங்கிநிஷ்டைசெய்யவென்று
முப்பதுவேழ்வி மொகுமொனத்தான்வளர்த்து
இப்போநான்வீழ்வேன் இதில்மாயன்வாராட்டால்
என்றவன்யெண்ணி ஏற்றவோமம்வளர்த்து
அன்றவன்வீழ ஆர்ப்பரிக்குமவ்வளவில்
முறைவைத்தபூசை முந்திமுறையெனவே
மறையவனைமாயன் வந்தெடுத்துப்புத்திசொல்லி
நிறையொத்தமாயன் நெடுமறையோனைக்கூட்டி
ஸ்ரீரங்கம்விட்டுத் திருவனந்தம்நோக்கி
சாரங்கர்போகத் தானேகும்வேளையிலே
நன்றானசேத்திரனும் நல்லமறைவேதியனும்
அன்றிளகிச்சென்று அரனார்திருக்கோயில்
வந்தபொழுது வானமதிலுள்ளோரும்
நந்தகோபால நாராயணரிடத்தில்
சென்றுதொழுது தேவரெல்லாந்தெண்டனிட்டு
இன்றுபெருமாள் இங்கெழுந்தருளி
வந்தவகையேது மாயவரேஎன்றுசொல்லி
அந்தமுனிதேவர்களும் அச்சுதரோடதுரைக்க
நல்லதென்றுஅய்யா நாராயணர்மகிழ்ந்து
வல்லபரமேசுரரை மிகவாழ்த்தி
ஈசுரரேயென்தனக்கு இங்கிருக்கக்கூடாமல்

தேசமதைப்பார்த்துத் திருவ ங் மேகி
இருக்கவேயென்று எழுந்தருளியங்கேதன்காண்
மருக்கிதழுமீசுரரே யாமுனிவர் தேவர்களும்
நீசனாய்த்தோன்றி நிரந்துபரந்திருந்த
தேசதிருவனந்தனுஞ் செல்லவகையேதுவையா
அல்லாமல்நீசன் அவனிடத்திற்போயிருந்தால்
எல்லாமவன்றனக்கு ஈடாகிப்போகுமல்லோ
கைவரயத்தென்று கலியவன்கொண்டாடி
பரிகாசஞ்செய்வானே பார்முழுதுமானீசன்
ஆனதாலங்கேக அச்சுதரேஞாயமில்லை
மானமழிந்தாச்சே மாகலியன்வந்ததினால்
எல்லாங்கலியை ஈடழிக்கப்பாருமையா
இல்லையேயானால் எங்களுக்கிங்கேதான்
சென்றயிடமெல்லாஞ் சிறைபோலிருக்குதையா
என்றுதான்தேவர் ஈசர்முதல்சொல்லிடவே
அன்றுமவர்களுக்கு அச்சுதருமேதுசொல்வார்
நன்றுநன்றுவாளவரே நல்லபரமேசுரரே
கலியதுநீசம் காணேதுவையகத்தில்
சலிவேதுராச்சியத்தில் தானேதுமானறியேன்
அனந்தபுரம்பேராக ஆதியிலெந்தனக்கு
தானந்தசுகமுனிவன் சாபமுண்டெந்தனக்கு
கொஞ்சநாளானாலுங் குடியிருக்கவேணுமங்கே
வஞ்சகங்களில்லாத மாயன்வழிகொண்டனராம்
ஈசர்தனையனுப்பி எம்பெருமாள்அச்சுதரும்
வாசமுள்ளசேத்திரனும் மறையவனுந்தேவர்களும்
சங்கமதுகூடித் தத்திதத்தியாய்வரவே
வங்கத்திருவனந்தம் வழிநோக்கித்தான்வரவே
வழியிலோர்அற்புதந்தான் மாயவனார்கண்டுமிக
கழிகூர்ந்தவருடனே கட்டாகவேதுரைப்பார்
மாமுனியே தேவர்களே வழியிலொழுங்கொழுங்காய்
ஓ முனியேயின்றதையும் உரைப்பீர்காணென்றுரைத்தார்
அப்போதுமாமுனி அருணமுனிவனென்று
செப்பொடுவொத்த திருமாலையும்பணிந்து
மாயவரேநான்முகனும் வாழும்பிரமதில்
ஆயகலையிருள்சி அன்பத்தொருநான்கோர்
பிறமன்பிறப்பை புகுந்தெடுத்திவ்விருள்சி
வரமானபுத்தகத்தை மாருட்டஞ்செய்ததினால்
அறிந்துவேதாவும் அவர்கள்தனையழைத்து
செறிந்தயிருள்சிகளைச் சிலைக்கல்லாய்ச்சாபமிட்டார்
அப்பொழுதிவ்விருள்சி அரனைத்துதிச்சாபம்
எப்பொழுதிச்சாபம் ஏகுமென்றார்மாயவரே
வேதாதெழிந்து விஷ்ணுஸ்ரீரங்கம்விட்டு
திரேதார்திருவனந்தஞ் செல்லவரும்வேளையிலே
வந்துசிலைதனையும் மாயவனார்தொட்டிடுவார்

சிந்துதிருக்கைதானை சிலைமேல்பட்டவுடன்
திருமுகங்கள்சாபமென்று சிவயிருள்சியானோர்க்கு
பேருலகமபடைத்தம் பிரமன்விடைகொடுத்தார்
அந்தப்பொழுதில் அனபத்தொருநான்குறிசி
இந்தக்கல்சிலையாய் இவரிருந்தாரெனவே
மாமுனிவனசொல்ல மாயவரும்நல்லதென்று
தாமுனிந்துகலைச்சிலையைத் தான்தொட்டாரம்மானை
உடனே யயிருள்சிவளாய உருவெடுத்துமாலடியை
தடமேலேவீழ்ந்து தானைவியேருவித்து
அன்றுபிரமா அயயார்க்கிட்டசாபம்
இன்றலைத்து இரட்சிக்கவந்தவரே
எங்களுக்குநல்லகதி ஈந்துதாருமெனவே
திங்கள்முகமாயருட திருப்பாதம்போற்றிநின்றார்
நல்லதுதானென்று நாராயணர்பதத்தை
வல்லயிருளசிகளை வாழுவெங்கேவேணுமென்றார்
மேலோகவாழ்வு வேணுமோவல்லவென்றால்
பூலோகவாழ்வு போதுமோவெனறுரைத்தார்
அப்போதிருள்சியெல்லாம் அவனியிலெங்களுக்கு
இப்போவரங்களைதந்து யேகவைத்தால்போதுமையா
நல்லதுதானென்று நல்லயிருள்சிகளுக்கு
வல்லதிருமால் வரங்கொடுப்பாரம்மானை
யிச்சையதுவாங்கிப் பெருமையதாயருந்தி
மிச்சமதுவைக்காமல் விழிபரந்துபாராமல்
சீமைகொண்டயிருள்சி செல்லுய காவாண்டியெனா
தாழ்மையபாரதசி தானுகவீதிருந்து
பூசைபலிகள் பீடமிட்டாதிருந்து
ஆசைக்கருத்தை அறுத்துவொருநினைவாய்
மாசணுகாமல் மதில்நமைதுதித்து
வைகுண்டமென்று வையகத்தேவாழுமென்று
வைகுண்டபதிக்கிப பூலோகமேயிருங்கோ
தந்தவர்த்திலே தப்பிநடந்ததுண்டால்
வந்தங்கிருந்து வருத்தியுங்கள்தன்னையெல்லாம்
அவரவர்கள்செய்த அக்குற்றந்தானகேட்டு
எவரெவர்க்குந்தக்க தீயல் வதருவோமெனறார்
நல்லதுதானென்று நாலுயிருள்சியெல்லாம்
செல்லப்பரதசிகளாய்ச் சென்றாரசீமையிலே
இருளசிகளைத்தானனுப்பி எமபெருமாளதான்மகிழ்ந்து
திருக்குமுடனந்த சீமைநோக்கிநடக்க
தேவர்களுமவானவருஞ் செயசெயெனநடக்க
தாவமுடனானந்தம தானேகிமால்நடக்க
அனந்தபுரம்நோக்கி அச்சுதனார்போகுகையில்
புனந்தனிர்ணார்பொருப்பும் பெண்பேயுருகிடக்க
கண்டெம்பெருமாள் கால்கொண்டுதைத்திடவே
குன்றுபோலேயுடம்புங் குஞ்சரம்போல்கைகாலும்

துண்டுமலைபோல் துய்யமூக்குமலையும்
வாய்கண்ணொருமலையாம் வயறுமூணுமலையாம்
கொண்டைபனிரெண்டு தூறுககமுண்டனபோரே
பண்டேதிருமால் டம்பளித்த தாடகைபோல்
நின்றாளையண்டபிண்டம் நிறைந்தசெருபமதாய்
கண்டாரெயெம்பெருமாள் கனத்தவிசேடமென்று
தேவர்களைவானவரை சேத்திரமாவேதியனை
பாவலரேகல்த்தான பரும்பெண்ணையவந்தன்னை
சொல்லுவீரென்று திருமாலுரைத்திடவே
வெல்லும்புகழ்தேவர் விளம்புவாரம்மானை
ஏமனிணையான வெக்காளத்துர்க்கையிவள்
சுவாமிசிவனார்தன் வார்த்தைதயிவள்தட்டினதால்
கோபித்தவளைக் குன்றுபோல்சாபமிட்டார்
ஏகிவரும்போது இவள்தானும்ஈசுரரே
வணங்கியிச்சாபமெப்போது மாறுமென்றாள்மாயவரே
அணங்குக்குஈசர் அருளினதைக்கேளுமையா
அனந்தபுரந்தனிலே ஆனந்திமேலே
வனந்தமால்பள்ளிகொள்ள வருகின்றதவ்வழியில்
உன்சாபந்தீர்த்து உன்னைஉலகத்திலே
பின்சாபமித்துப் போகவிடைதருவார்
என்றுசிவமுரைக்க இப்படியேவந்தவளும்
குன்றுபோலேகிடந்தாள் குருவேயுனபாதமதால்
அவள்சாபந்தீர்ந்து ஆயிளைபோல்வடிவாய
இவள்தானுமவந்தாள் எனச்சொனனார்தேவர்களும்
நல்லதென்றுநாரணரும் நாரிதனைக்கொண்டாடி
வல்லவளேயெக்காளை மடந்தையேயுந்தனுக்கு
ஏதுனக்குவேணுமென்று எனனோடுகேளுமெனறார்
வாதுக்குவல்லவியாள் மாயருடன்கேள்பபாள்
காரணரேஐயாவே நாந்தான்முர்க்காலமதில்
பாரமுள்ளசெந்திருள்சிப் பாரியாய்நானிருந்தேன்
அப்போதுஎந்தனக்கு அழுகிதுவில்லைஐயா
செப்போடுவொத்த சிவகாமிபோலழகு
நனறாகவென்னுடைய நல்லபர்த்தாவுடனே
ஒன்றாகவாழ்ந்து உறவாடிருக்கையிலே
என்பேரிலிச்சைசை ஏமன்மிகக்கொண்டாடி
வம்புசெய்தென்னுடைய மன்னவனைக்கொன்றான்காண்
ஆனதாலேமனுக்கு அழிவுவரவேணுமெனறு
மனத்தவசிருந்து வருந்திடேனீசுரரை
அப்போதுஈசுரரும் அடியாள்மனந்திருத்தி
இப்போதுஅந்தகனை இறக்கவைத்தால்ராச்சியத்தில்
நருள்பொறுத்துப்பூலோக நாடுதரியாதெனவே
பொறுத்துக்கோகொஞ்சம் பூவையேயென்றுரைத்தார்
ஏனனைமனந்திருத்தி எமனோடேசேர்த்தாலும்
மனனைவதைத்ததுதான் மறவாமலெப்போதும்

திவசமொருநேரம் சிவனுரையானோக்கி
பவதயியமனுக்குப் பகையாகக்கேட்டிருந்தேன்
ஆனதால்ஈசர் அறிந்தேயெனை நோக்கி
ஈசாமுடன்பேசி இகழத்தினார்ஈசுரரும்
கொஞ்சம்பொறுக்கவென்று கூறினேன்பெண்கொடியே
மிஞ்சவல்லோசெய்தாய் எனவெகுண்டாதிபரன்
மலைபோலுடம்பும வயிறும்மிகப்பருத்து
ஆலைபோல்ப்பரந்த அங்கம்பெரும்புடமாய்
கல்லதுபோல்க்கிடந்து காலனைக்கொல்லுவம்கை
வல்லவலையாலும் வருந்திக்கோவென்றுசொல்லி
கோயித்தார்முனைவா குன்றுபோலேகிடக்க
சாபித்தாரெனனைச் சாமியுன்பாதமதால்
தோனறினேனென்சாபத் துயராறுத்தேனமாபவரே
வினறியவந்தகனை வேரோடறுத்திடவே
வரந்தாருமையா மாயவரேயென்றுசொல்லி
சிரமுரத்தபெண்கொடியாள் தெண்டனிட்டாள்மாயவரை
அப்போதுமாயவரும் அவளைமுகமநோக்கி
இப்போதுபெண்கொடியே யான்சொல்லக்கேட்டிடுநீ
அந்தகனைக்கொல்லவென்று அருந்தவசுபண்ணிடுநீ
வந்தயுகமாறி வலியபிலத்தர்மயுகம்
உதிக்குமபொழுதில் உனதவசினபடியே
சதிக்குகந்தானுற் சண்டனழிவாகுமென்றார்
அப்போதுபெண்கொடியும் ஆனதவம்வளர
இப்போவிடை அருளென்றேகட்டுவேண்டியவன்
நின்றாள் தவதத்தில் நீலியாய்ச்சண்டனுக்கு
வண்டுறியககன்னி மன்னன்பழிவாங்க
ஆதிமையபோற்றி அருந்தவசுபண்ணிடவே
சோதித்திருமால் திருவைகுந்தம நோக்கி
நடக்கத்திருமால் நளினமுடனமகிழ்ந்து
வடக்குத்கயிலாச வழியேவருகையிலே
தெய்வலோகத்திலுள்ள தேவாதிதேவர்களும்
வைகுண்டலோகமதில் வாழுகின்றதர்மிகளும்
சிவலோகம்வாழும் சிட்டர்முதல்வானவரும்
தவமானவேதச் சதுர்மறையோன்தன்னுகத்தில்
கருகிரிசிமுதலாயக் கட்டாகநால்புவியில்
இருக்கினறவா வர்கள் எல்லோருமெண்ணமுற்று
மானவரம்பு மகிமைகெட்டேகுமுன்னே
வானமதுவிட்டு வடகயிலைபோவோம்நாம்
கைகயிலைவரம்பழிந்து கட்டுமிகத்தப்பினதால்
அகிலமழிவதற்கு அடையாளமித்தனைதான்
அல்லாமல்தரோணிமுதல் துன்னீசக்கலியன்வரை
எல்லாஞ்சரியாகி எவ்வோர்களானுலும்
கல்லாதபொல்லாக் கலியனுடமாய்கையினால்
நல்லோராய்மேல்டபிறந்து மனினமுற்றுவாள்வீரென்

வே தாகணக்கில் விதி ... முன்முறையில்
நா ... வரம் ... காமல்
...ப்படி ... ணமுற்றுவாடி
...படியே ... ஊழிவி ... யனம்வ
கடைச்ச ... கலிச்சாதியர ... ல
படைக்காமல் ...முடைய பங்குவமிசத்தோரர்
ஒண்ணுமதுக்குலந்தான் உயர்தெய்வச்சான்றோரில்
வண்ணமுள்ளவேதா மனுவாய்ப்பிறவிசெய்ய
ஒன்றாககாமமெல்லாம் உகந்துதவஞ்செய்வோமென்று
நின்றார்தவத்தில் நிறைவோன்பதமபோற்றி
தங்கள் ...லமான சான்றோர்கள் தங்குலத்தில்
எங்கள் தனைப்பிறவி ...போசெய்ய ...றுமென்று
பிறந்திறந்தபோதும் பின்னுமந்தப்பிறவில்
மறந்திடாவண்ணம் மனுவிலுதித்திடவும்
ஆதிமகாமூலத்து ஆதிநாராயண ...
நாதிபாவெங்களையும் நாடிமிகவந்தெடுத்து
எங்கள்துயாம எல்லாமவர்போற்றி
சங்கடங்களில்லாத தர்மபதியருளி
க்ரீடமுஞ்செங்கோலும் கீர்த்தியுள்ள முத்திரியும்
வீரியமாய்த்தந்து ... மகிழ்ந்து
என்றுஞ்சாகாமல் இருக்குமபவிசுதந்து
மண்விண்புகழ வரந்தாரு... சொல்லி
நின்றாரதையும் ...
கொண்டாடியே ... கூடிநின்ற தவருடன்
நின்றநினைவை நெடுமால் ...
... தேவர்க்கு கலியாதபுத்தி ... சொல்லி
நல்லதுகாண்தேவர்களே நடுவதுகாரியந்தான்
வல்லதவசு மணமபரியாச்செய்யு...
அச்சுதருந்தானடந்து ... மதுகையில்
பச்சுடமாய்நின்ற பசுவுமோர ...ந்திழையும்
நாராயணுவென ... தவமிருக்க
சீராடத்திருமால் சிறந்ததவங்கண்டருளி
ஏதுபசுவே ...யந்திளையே ...ருக்கு
ஏதுவிலாவண்ணம் இந்ததவசுபண்ணி ...தேன்
...ப்பாதுபசுவும் அச்சுதரு ... காக...
...ப்டாதுமாயவரே என்னுடையபுத்திகேள
...ல்லும்படியாய்க் ... தவசு
செல்லுமபடியாய்ச் ...
புத்திரனும்மண்டால் பிள்ளையாய ... க்கு
...த்திரக ... ளபிறக்க ... ஒன்று
நின்றோன்தபசு நீலவண்ண ...
... தாரா ... யுந்துணையும
... பார்த்து நாராயண்ருமைய ...
...ன் ...டாடியேயுந்தன் உற்றவளக்கேயுமை...

அப்போதுபெண்கொடியும் அச்சுதனைத்தானோக்கி
செப்போடுவொத்த தேவியருஞ்சொல்லலுற்றாள்
ஐயாவேயெனக்கு ஆளானவீரனைப்போல்
மெய்யாயொருமதலை விமலனருளினர்காண்
மதலைவளர்ந்து வயதுபதினாலாகையில்
குதலைமொழிகேட்டுக் கொண்டாடினான்மகிழ்ந்து
இருக்குமந்நாளில் இப்பசுவின்புத்திரன்தான்
உருக்கமுடனென்பேரில் உள்ளாசைகொண்டானாண்
அதட்டிநானுதர்க்கு ஆகட்டெனவுறுக்கி
மதட்டிமதலைதனை மாளவைத்தான்மாபாவி
ஆனதினாலடியாள் தான்மெலிந்துதான்வாடி
போனேன்பிரமா பூசாந்திரக்கணக்கில்
உள்ளவிதியோ ஊழ்விதிப்படியோ
கள்ளக்கணக்கன் கண்மாயமோவெனவே
பார்த்தேன்மகன்றான் படவிதியங்குமில்லை
ஆர்த்தேதனைகோபம் அக்கினிபோலேமீறி
சிவனுக்கபயஞ் செவியறியவிட்டேனான்
இவனுக்குவேண்டி யேதுசெய்வோமென்றுசொல்லி
ஒருவரும்யெனனுடைய ஊழ்விதிகேள்க்கவில்லை
வருவதுவரட்டெனவே வந்தேதவசுநின்று
மகன்பழிதான்வாங்க மாயவரேயுன்னருளை
அகமிருத்திநானும் அருந்தவசுசெய்தேனே
என்றுரைக்கயேந்திழையும் எம்பெருமாளேதுரைப்பார்
நன்றுநன்றுபெண்கொடியே நல்லதவம்புரிந்தால்
நினைத்தபடியே நிறைவேறுமென்றுரைத்து
கனத்தபசுவேநீ கட்டாய்த்தவமிருந்தால்
உந்தனக்குச்சித்திரனும் ஒருகன்றாய்த்தான்பிறந்து
எந்தமகனார்க்கு யேவல்செய்யவைத்திடுவேன்
என்றுபசுவுக்கும் யேந்திழைக்குந்தானுரைத்து
அன்றுதிருவனந்தம் அவர்நோக்கித்தானடந்து
கேத்திரனும்வேதியனும் கிஷ்ணரடிபணிந்து
மூர்த்திகளுங்காணாத முதலேமுதற்பொருளே
உன்மகவாய்வந்துதித்த உயர்ந்தகுசச்சான்றோர்
தன்மகவோவாரங்கே தவித்துமுகம்வாடிருக்க
நீசனுடகுடியில் நீர்போகக்காரியமேன்
தேசமெல்லாநீசனுட செய்திகேட்டேயிருந்தும்
போவதேதோதேவரீர் பொல்லாதவன்குடியில்
தேவரீரும்முடைய சிந்தையெனப்போலறியோம்
என்றுரைக்கக்கேத்திரனும் யேதுரைப்பாரெம்பெருமாள்
நன்றுநன்றுகேத்திரனே நானசொல்லக்கேட்டிடுநீ
சான்றோர்க்குபகாரம் தானசெய்யுமுன்னாக
பொன்றுகலிநீசனுக்குப் புத்திசொல்லவேணுமென்றும்
அல்லாமல்க்குறோணி அவன்மாயயிவன்வரையும்
எல்லாந்தான்சொல்லுக் கிடறுவையாதடி

சான்றோர்கள் தன்னிடத்தில் சாங்கமாயப்பாயிருந்து
ஆன்றோர் தானெங்களையும் அழியவைக்கிறேனென்றுரைப்பான்
ஆனதால் நானும் அதற்கிடைகள்வையாமல்
ஈசமுறுநீசன இடம்போறேனென்றுரைத்தார்
அப்போதுவேத்திரனும அனபாயமி மகிழ்ந்து
செபமேடைமுவொத்த திருநா த்தெண்டனிட்டு
மாயனேயுந்தன மகிமையதையாரறிவார்
ஆய ம்முடைய அளவறியக்கூடாது
என்றுவேந்திரனும் இயம்புவான் பின்னுமொன்று
மன்றுதனையளந்த மாயத்திருமாலே
பூசைபுனக்காரம வெரியதீபத்துடனே
ஈசனுமக்கு நினைத்துநித்தஞ்செய்வானை
எந்தவகைக்கென்ன லெக்குக்கூறியெவே
சிந்தைதெளிந்து செப்பிவிடைதாரும்
என்றுரைக்கக்கேத்திரனும யேதுரைப்பாரெம்பெருமாள்
இன்றுநீகேட்டதற்கு உறல்புரைக்கக்கேளு
கலிநீசன்மானிலத்தில் கால்வைத்தனறுமுதல்
சலிவாகியெனவேல் தண்ணீரறியாது
எண்ணெயறியன் லட்சுமியைஅறியன்
வண்ணத்துயிலறியேன் மறுபுடவைதானறியேன்
பூசையறியேன பொரிபறியன பூவறியேன்
ஆசையறியான அக்கினியறியேன்
மெஞ்ஞானதைஅறியேன் மவுஞ்சொருசறியேன்
முத்தைப்போலவேன் ர்ந்திருக்கறியேன்
மடையறியேன் மெல்லிய றியேன்
பாடையறியன மகிழுஞ்சிரிபறியேன்
தாழைகையைகாறியேன் சுருதிமொழி றியேன்
ஆளவைதண்டம அரசுமேடையறியேன
த்தனைகடானறியா தெண்ணமதுநா றியேன
புத்தியுள்ளவேத்திரனே பூசைபூவேர்ப்ப நல்லமும்
யக்கலியறுத்து வாய்த்தநாட வதறது
ஞாயபுள்ளபட்டம நா சூட்டிட்டர்மமதாய்
ராட்சியத்தையாள வைத் த யுமேர்பபதல்லால்
அதற்குமுன்பூசை புனக்க ரமுத லடஇல்லை
தற்குமுன் ளப்பவர்கள பாவார்
எனறந்தவேத்திரனு இத்தனையுந்தா கூற
அன்றாதநீசன் அவ்வூரிலெப்பெருமாள
னிடகதில் நீலவண்ணர் வந்ததுதான
சமறியச் செச்சைபலச்சிகண்டு
ழிதத்த ருவிடத்தில் ர்தேசமுமறிய
றித்தாள் புலச்சி விதமறி தெல்லோருமா
நீச நிந்து நெருங்கமணி டை வைத்து
வீசைமுறுக்கி விசைய ன்னீசன
கோவில்சிவாலயங்கள் கொந்துக்கொந்தாயமைத்து

மேடைக்குக்கால்கள் மிகுத்ததங்கத்தால்நிறுத்தி
பாவித்துப்பூசை பண்ணத்துணிந்தவனே
வாடைகமகமென வாத்தியங்கள்நின்றதிர
தீபம்புசச்சித் தீவெட்டிதானகொடுக்க
பாவக்குடும்பத்தோர் பண்ணினார்பூசையது
நம்பூரிவேதியர்கள் நாடியகமகிழ்ந்து
பம்பைபாத்தை பகட்டுக்கைகாட்டலோடு
நாடிமகிழ்ந்து நல்லவனந்தபுரம்
கோடிநூறாயிரம்போல் கூண்டரியதீபமோடு
தேடரியமாமறையோர் சிந்தைகளித்தேயிருக்க
நாடதிகமாகி நல்லவனந்தபுரம
மாதமும்மாரி வருசிக்கத்தான்பொழிந்து
வாரமுடன்சென்னல் மாருமலைவிளைந்து
தென்னங்குலைசிதறித் தேர்பலாலலங்கரித்து
என்னென்னபவுசி யெல்லாமிகப்பெருத்து
ஒப்பில்லாத்தேசம் உற்றஅனந்தபுரம்
செப்பத்துலையாது சிறந்தபெருமையது
நன்றாகச்சீமை நாடோறுமேவாழ்க
அன்றுஸ்ரீரங்கர் அங்கேயகமகிழ்ந்து
சென்னினைத்த வினைவுபோலெலபெருமாள்
தேசப்பவுசுஞ் சிறபபுமிகக்கொடுத்து
ஈசன்றனக்கெதிரி நீணிலத்திலில்லையென்று
தோசக்கலிபுளியைச் சூட்டியரசாளுகையில்
மதலையதில்லாமல் மனஞ்சலித்துமானீசன
குதலையிளைதுவினால்க் கொஞ்சஞ்சடைவாகி
ஆதித்திருமால் அடியைமிகப் போற்றி
சோதியேயெந்தனக்குச் சிறுவனொன்றுதாருமென்றான்
அப்போதுநாராயணர் அகமகிழ்ந்துகொண்டாடி
இப்போதுந்தனக்கு இங்கிருந்தால்மதலை
கிட்டாதுகாசிதனில்க் கீர்த்தநதிக்கரையில்
திட்டமுடன்தவசு செய்யப்போயங்கிருந்தால்
மதலையுடதுயரம மாறுங்காணுந்தனுக்கு
முதலைமொழிஈசனுக்குப பகர்ந்தார்காணம்மானை
கேட்டந்தனீசன் கெட்டிதானென்றுசொல்லி
நாட்டுக்குச்சீட்டெழுதி நருட்களையுந்தான்வருத்தி
போனானேனீசன புகழ்பெரியகாசிதனில்
சேனாபதிகள் திக்கெங்குஞ்சூழ்ந்துநிற்க
நீசனறவசு நிற்கவொருமறையோன்
வாசக்குழலோடு மருவினன்காணம்மானை
கண்டந்தனீசன் காமம்பொறுக்காமல்
தண்டுமீறிக்காமஞ் சலத்தில்விழுந்ததுவே
இரைநமக்கென்று எட்டிவொருகொக்காவி
விரைவாய்விழுங்க மிகுத்தகெர்ப்பமுண்டாகி
தண்ணீரில்பிள்ளை தான்பெற்றதம்மானை

வெண்ணிறமான மிகுத்தபிள்ளை தாமிதந்து
போகும்பொழுதில் புனலரிசிமாமுனிவன்
தாபமுடன்சிசுவைத் தானெடுத்தாரம்மானை
மதலைதனையெடுத்து வளர்த்துப்பருவமதில்
குதலைதனையாற்றில் குழியோடனீச்சலதும்
தோணியேறுந்தொழிலும சுருக்குக்கப்பலேற்றொழிலும்
ஆணிப்பொன்முத்தும் அதுவளருந்தலமும்
வெள்ளித்தலமும மிகுந்தபொன்தலமும்
உள்ளவித்தையான உற்றரசவாதமுதல்
கள்ளவுபாயக் கபடுபலதந்திரமும்
வெள்ளைநீசனுக்கு விதமாய்வரவருத்தி
செங்கோட்டியெனத் தேசகுரூணிகளில்
பெண்களெண்டுபேரைப் போய்மணமுகித்து
இருந்திருன்மாமுனிவன் ஏற்றசெங்கோமட்டியில்
பருத்தவெள்ளைநீசன் பண்பாசவங்கிருக்க
நின்றதவசு நெறியழிந்துமாநீசன்
அன்றந்தப்பாவி அனந்தபுரம்வந்தனனே
வந்துசடைவாய் மாநீசன்றானிருக்க
சந்துபயில்மாயவரும் தானறிந்தேதுரைப்பார்
மன்னவனேயுந்தனக்கு மதலையதுகிட்டினதோ
என்னவிதங்காண் ஏகிவந்ததென்றுரைத்தார்
அப்போதுநீசன் அவனேதுசொல்லலுற்றான்
இப்போதுமாயவரே யான்தவசுநிற்கையிலே
மறையவனுந்தேவியோடு மருவினதைக்கண்டாவி
இறையவரேயெந்தனக்கு இந்திரியந்தானிளகி
ஆனதாற்றவசு அழிந்ததனாலிதனாலே
ஈனமுடன்மதலை இல்லையென்றானீசனரும்
மதலையில்லாதேயிருந்தால் வையத்துக்கோதாது
குதலையல்லாவேணும் குவலயத்தையாளுதற்கு
செங்கோலாசு செலுத்தியரசாளுதற்கு
முன்னைசிதைத்து முறைநக்கருமம்செய்திடவும்
பிள்ளையில்லாதேயிருந்தால் போதுமோபுண்ணியரே
வள்ளலந்தமாலும் மறுத்துரைப்பாரம்மானை
சொந்தமுள்ளசோதிரியைச் சுறுக்காய்வரவழைத்து
உந்தனக்குப்பிள்ளை உண்டோதானில்லையென்று
வருத்திக்கேள்போ வகைசொல்வான்சோதிருள்சி
பொருத்தமாயவன் புகன்றானீசனுக்கு
நல்லதென்றுவேகியனை நாடியவனழைத்து
சொல்லவென்றுநீசன் தொகுத்தவனோடேகேள்க்க
அப்போதுசோதிருள்சி அன்னீசனைப்பார்த்து
இப்போதுகேளுநீ ஆகமத்திலுள்ளமுறை
பெற்றாலுடன்மகவு பேருலகமாளாது
மற்றோர்பெற்றுன்மருகன் வாழுவான்வையகத்தை
என்றேதான்சாத்திரமும் இசையுதுகாண்மன்னவனே

அன்றேதான்சோதிரியும்   அன்னீசனுக்குரைத்தான்
நல்லதென்றுநீசன்   நாடியகமகிழ்ந்து
வல்லணைகையாலும்   வைத்தபங்குகிட்டுமென்று
சோதிரியைத்தானனுப்பி   துயர்நீங்கியேயிருந்தான்
ஆதிமுறைப்படியே   அவன்மருகன்றனக்கு
பட்டந்தானென்று   பறைசாத்தியாண்டிருந்தார்
திட்டமுடனீசன்   தேசமதையாளுகையில்
முன்னீசன்விந்தில்   உதித்துவந்தேயிருந்த
அன்னீசனை   வசுபக்கிரிவளமை
சொல்லவேநாதன்   தொகுத்துக்கேளன்போரே
வல்லசெங்கோமட்டி   வையத்திலன்னீசன்
வெள்ளிமலைமிதத்தத்   தங்கப்பொன்மலையும்
கள்ளமில்லாவாதங்   கைகண்டவித்தையதாய்
நீதியில்பெருத்து   நெருங்கப்படைகூட்டி
பரியானை ஒட்டகங்கள்   பலபடைகள்சேகரித்து
ஆளும்படையும்   ஆயுதங்கள்அஸ்த்திரமும்
வேழும்பெரிய   வெகுவாளுபங்கூட்டி
தன்னோடினங்கள்   சதாகோடியாய்ப்பெருத்து
என்னோடெதிர்க்க   யாதொருவரில்லையென்று
அவர்தானொருவேதம   ஆகமங்கடான்பிரிதது
எவர்தானெதிரி   என்றெண்ணமுற்றிருக்கையிலே
நச்சேத்திரத்தை   நகடிருபத்தேழாக்
வைத்தானேமாதம   வருசமதுமாறாய்
முனனீசன்வைத்த   முறைமையிலுங்கூட்டி
பின்னந்தனீசன்   பிரித்தானொரேறத்தமுடன்
அரிநமாவென்ற   அச்சரத்தைவிட்டவனும்
வீரியாயநதியென   விளம்பினன்வையகத்தில்
இப்படியேவைத்த   இவன்வேதமானதுக்கு
அப்படியேமற்றோரை   அகப்படுத்தவேணுமென்று
பணமாதைக்கொடுத்துப்   பகட்டினன்மானிடரை
சிணமாகமானிடவர்   சேர்ந்தாரவன்வேதமதில்
இப்படியேவேதம்   மொன்றிவன்பிலத்தாலுண்டாக்கி
அப்படியேதானிருக்க   அவனேதுதானினைப்பான்
ஆளுவங்கள்சேனை   ஆயுதங்களவெகுவாய்
ஆளுபங்கள்ரெம்ப   வமமிசத்தோரெம்பரெம்ப
படையாலுமற்றொருவர்   பணைத்தாலும்நம்மையுந்தான்
தடைசெய்துநம்மைத்   தடுப்பவராரென்றுசொல்லி
ஆரெதிரியென்று   அவன்பார்த்திருக்கையிலே
பூராயமாயொருத்தன்   போதித்தானவன்றனக்கு
சோழனென்னுஞ்சேரனென்னுஞ்   துய்யபாண்டியனென்னுஞ்
வேழமுடிமன்னர்   விபரீதமாயாண்டிருந்த
தேசமதன்பத்   தாறுண்டுசெந்துரையே
வாசமுடனுண்டு   வகையாயிருக்கையிலே
வேசையொருதாதி   விழிநுதலாள்தன்வயற்றில்

பேசரியவோர் மதலை பிறந்ததுகாண் மாயமுடன்
மதலைபிறந்து வையத்திலேயிருந்து
குதலைவளர்ந்து குடுமிவளர்கையிலே
சேரனுக்குஞ் சோழனுக்குஞ் சிறந்தபாண்டியனுக்கும்
வாரமுள்ளதெய்வ மாதருடசாபமதால்
அவர்கள்கிளையிறந்து ஆறுவங்கள் தாளழிந்து
இவர்களும்போய்க்கடலில் இருந்தார்கள்கல்லெனவே
ஆனதினால் மூன்று அவனிதனையாளுதற்கு
மானமுள்ளபேர்கள் மறுத்ததானில்லாமல்
மாயமுடன்தானே மன்னருஞ்சீமைதனை
ஞாயமில்லாவண்ணம நாடாண்டிருந்தனனே
சென்றல்த்தானந்த சீமைநமக்காகுமென்று
அனேறதான்சொல்ல அவனகோபத்தால்வெகுண்டு
வந்தானயந்த மானீசனறனபேரில்
செந்தாரமாயன சேனைவருவதையும்
அறிந்தேதசேனுக்கு அச்சுதருஞ்சொல்லலுற்றார்
வெறிந்தமுள்ளநீசன் வேண்டுமபடைகூட்டி
நசுறுணியால நல்லவெண்ணீசனுக்கு
திசுவாமமானீசன திருமாலினறனருளால்
எற்றுக்கொடாமல் இவனவெற்றிகொண்டனனே
மற்றுமந்தனீசன மாறியவனபோயிருந்தான
அப்போதுஇருந்த வன்னீதமானீசன
இப்போதுபடையை யாமவெறறிகொண்டோமென்று
கோட்டையினனுமிட்டுக கொடியவிருதுகெட்டி
தாட்டிமையாயுலகில்ச் சட்டமதுவைத்தனனே
வைக்கும்பொழுதில் மாயவரைத்தானோக்கி
செயக்குமபெரிய திருமாலெயந்தனக்கு
கைக்குள்ளேயவல் கருத்தாகச்செய்வதற்கு
மெய்க்குணம்போலுள்ள விதமானசாதியென்று
வருவித்தெந்தனுட மணிவாசல்காத்திருக்க
தருவித்துநல்ல சாதியொன்றென்றுரைத்தான்
அப்போதுமாயன் அதற்கேதுசெய்யலுற்றார்
இப்போதுஉந்தனுக்கு ஏவல்த்தொழில்களசெய்ய
ஆகின்றபேரை அழைத்துக்கொவெனறுரைத்தார
வேகுணநீசன விளம்புவான்மதகருடன
ஆரைக்கொடுவரலாம அருகிலிடநவலசெய்ய
ஏரையெத்தமனவமோ யாமுமெனக்கேட்டனனே
அப்போதுமந்திரிகள அனனீசனுக்குரைப்பார்
இப்போதுமேவொருவர் இருந்தலோகாதெனவே
நல்லவகையான நாட்டுஞ்சானறோர்களைத்தான
வல்லவகையாலும் வருவித்துனைபயிரால்
ஆதமக்கச்சாதியென்று அனனீசனுக்குரைத்தார்
வேகும்பொழுதில் வெறிசானறோர்களுக்கு
ஆளவிட்டுவருத்தி அதிகநிதிகொடுத்து

வாள்கொடுத்தாயுத பாணிமிகக்கொடுத்து
சட்டைகுல்லாக்கொடுத்துத் தலைப்பாமிகக்கொடுத்து
பட்டயமுங்கொடுத்து பாரயிறைகூலிவிட்டு
வாசல்மணிமேடை வகையாகக்காரெனவே
வாசமொழிநகலியன் மாய்கையால்ச்சான்றோர்கள்
ஊழிவிதியாலுடையோனை நெஞ்சில்வைத்து
காளிவளர்த்த கண்மணிகள்காத்திருந்தார்
அப்படியேகாத்திருந்தவர் வருகும்வேளையிலே
முப்படியேவந்த முழுக்கலியன்றேசமதால்
அந்தநீசன் றனக்க அழிவுவரும்வேளையிலே
இந்தச்சான்றோர்கள் இவர்தூக்கமவைத்திடவே
நீசன்வம்மிசத்தோர் நேர்கூறேயறிந்து
வாசமிடநீசனையும் வதைத்தாரேயவ்வினத்தோர்
சீவன்பொறகும்வேளை செப்புவான்சாபமொனறு
காவலாய்நீரிருந்து காட்டிக்கொடுத்தீரென்று
சாபித்தான்சானரோர்க்கு சத்தியில்லாநீசன்
என்குடும்பத்தோர்கள் இராச்சியத்தையாளுமட்டும்
உன்குடும்பத்தார்கள் ஊழியங்கள்செய்துமிக
அழுந்தப்படுவாரெனவும் அன்னீசன்சாணறோர்க்கு
விழுந்தமொழியாய் விரைந்துரைத்தானேநீசன்
சொல்லியந்நீசன் சோர்ந்திறந்தானவனும
வல்லியுடன்பிறந்த மகன்தேசமாண்டிருநதான்
நீசனுடசாபம் நீனிலத்தில்சான்றோர்கரு
மாயவலையாய் வளர்ந்ததுகாண் அன்போரே
தேவரிதையறிந்து திருமாலிடமேகி
மேவலாகள்வந்து விளம்பினரைப்பேர்து
மாயவரேயெங்கள் வழியிலேவாழ்சான்றோர்க்கு
பாவிநீசனசபித்த பழிச்சாபம்கேட்டீரே
சாபதுல்பமெல்லாம் தானுரைத்தாரச்சுதர்க்கு
தாமத்திருமேனி தானுரைப்பார்தேவர்க்கு
மன்னஇயதேவர்களே வாய்த்தபுகழ்சான்றோர்க்கு
அன்னீசன்சாபம் அதுவுங்கூறிதான்காண்
வம்புள்ளநீசன வழக்கெல்லாமேபபதற்கு
அன்புள்ளசான்றோர்க்கு அவனிட்டசாபமது
எத்தனைக்குத்தம் இவர்செய்துபோட்டாலும்
அத்தனையும்நீசன் அவனேக்கக்காரியந்தான்
நல்லதுகாண்தேவர்களே நாடும்சான்றோர்களுக்கு
தொல்லைவுந்தாலுந்தீரத் தொகைவைத்தலக்குமுண்டு
சோழனுக்குச்சான்றோர் செய்தநன்றிமெத்தவுண்டு
வேழமிட்டிருபேரை வெட்டினன்பாரறிய
நீசனுக்குச்சான்றோர் நித்திரைகளில்லாமல்
வாசல்நடைகாத்தத்றகோ வலுதுயரச்சாபமிட்டான்
எல்லாம்அறிவார் ஈசர்முதல்லோகம்வரை
வல்லாமையாள வாய்த்ததேவாதிகளே

நாமென்னசெய்வோம் நாட்டில்விதிவந்ததற்கு
போமென்னதேவருக்கு பெரியோன்விடைகொடுத்து
மாமவருமங்கே மனஞ்சடைத்துத்தானிருந்தார்
மாயக்கலினீசன் வையகத்தையாண்டிருக்க
நீசனிட்ல்சாபம் நீதிச்சான்றோர்களுக்கு
மாயவினைபோலே வழைந்ததுகேளன்போரே
தம்பிதமயனுக்குச் சத்துருபோல்தானாகி
வப்புக்குங்கோழு மானீசனோடுரைத்து
அடிக்கவேவகைக்கூலி அவனுககேதான்கொடுத்து
முடிக்கும்வரையும முறைமுறைகோள்ச்சொல்லிடுவான்
இப்படியேசானரோர் இவர்களநினைபபில்லாமல்
அப்படியேனீசன் அனனீதத்தால்வேறாய்
பிரிந்துதான்சான்றோர் பெருத்தகிலேசமுற்றார்
அறிந்துதானீசர் அவர்க்கொாக்காச்செனவே
தாலிக்குவாயம் சருகுமுதலாயம்
காலிக்குவாயம சமபுதடிக்காயம்
தாலமதறுஞ் சானரோருக்காயம
தாலமுடனருவாள தாருவட்டிக்கேயாயம்
தாலமதுக்காயம் தரணிதனிலேவளர்ந்த
ஆலமரம்வரைக்கும் அதிகயிறைவைத்தனனே
வட்டிக்குமாயம் வலங்கைச்சானரோர்கருப்புக்
கட்டிக்குமாயங் கடுநீசன்வைத்தனனே
பாழிலேச்சானரோர்க்குப படுனீசன்கொள்ளுகின்ற
ஊழியங்களெல்லாம் உரைக்ககேளன்போரே
பனைகேட்டடிப்பான் பதனீர்கேட்டேயடிப்பான்
கனத்தகற்கண்டு கருபபுக்கட்டிகேட்டடிபபான்
நாருவட்டியாலே நாளதோறுங்கேட்டடிபபான்
வாதுக்குநொங்கு வாய்கொண்டுகேடடடிப்பான்
நெடுமட்டைகேள்ப்பான் நெட்டோலைதான்கேள்ப்பான்
கொடுவாவெனவே கூள்ப்பதனிகேட்டடிப்பான்
சில்லுக்கருப்புக்கட்டி சிரமிடவேஊற்றி
கொல்லைதனில்ச்சானரோரை கொண்டுவாவென்றடிப்பான்
மீச்சுக்கருப்புக்கட்டி மிளகுபலகாரமிட்டு
வீச்சுடனேகொண்டு வீட்டில்வாவென்றடிப்பான்
வட்டுக்கருப்புக்கட்டி மணர்க்கருப்புககட்டியோடு
வெட்டக்கருபபுக்கட்டி வெண்கருப்புக்கட்டியோடு
தோண்டிக்கும்பாய்க்கும் சுமடதுக்குமேலே
வேண்டியதெல்லாமெடுத்து விரைவில்வாவென்றடிப்பான்
காலைப்பதனீர் கண்முத்தாநொங்குகளும
மாலைபபதனீர் வற்றக்காயுர்பதனீர்
கொதிக்குமபதனீர் கொண்டுவாவெனறடிப்பான்
விதிக்குகநதசானரோர் விரைவாய்க்கொடுத்திடவே
இத்தனையுமவேண்டி இவைகொண்டுபோனாலும
பத்தியுள்ளசான்ரோர்க்குப் படுந்துயரமாறாதே

பனையிலுள்ளவஸ்துபலநாளுமிப்படியே
வினைகொண்டபாவி வேண்டியவன்போனாலும்
சான்றோர்க்குநன்மை சற்றுசெய்யவேணுமென்று
மாண்டோர்கணீசன் மனதில்வைக்கமாட்டேனே
உய்கொண்டசான்றோர் உடம்புருகுந்தேட்டையெல்லாம்
நொய்கொண்டநீசன் நோகப்பறித்தானே
இபபடியேசான்றோர் இவர்தேடுந்தேட்டையெல்லாம்
அப்படியேநீசன் அவன்பறித்துத்தின்றாலும்
ஞாயமுள்ளசான்றோர் நாமமதுகேட்டதுண்டால்
நீயநுலத்தோர்விரட்டி நெடுந்தூரம்கொண்டடிப்பான்
பின்னுமந்தசான்றோரைப் பொல்லாதான்கொள்ளுகின்ற
அன்னீதமெல்லாம் அருளக்கேளாயிளையே
உப்பாலுவரா உபயமெடுத்தவரை
ஒப்பமுள்ளசான்றோரை ஊழியங்கள்கொண்டடிப்பான்
குளம்வெட்டச்சொல்லி கூலிகொடுக்காமல்
களம்பெரியசான்றோரைக் கைக்குட்டைபோட்டடிப்பான்
சான்றோர்கள்தின்பனையில் தான்முளைத்தவோலையெல்லாம்
வீணாகநீசன் வெட்டித்தாவென்றடிப்பான்
வெட்டிக்கொடுத்தாலும் வெற்றியுள்ளசான்றோரை
கட்டிச்சுமவெனவே கைக்குட்டைபோட்டடித்து
சுமந்துபோனாலுந் தொகையெண்ணமுங்கேட்டு
பவந்துமொழிபேசிப் பணமும்மிகக்கேட்டடிப்பான்
ஐயோசான்றோரை அன்னீசன்செய்ததெல்லாம்
வையமதுகொள்ளாதே மாதேவனோடுரைத்தால்
ஈசருக்குமவேதா இவர்களுக்குந்தேவாதி
வாசமுடன்பதறி வணங்கிநின்றவேலையைப்போல்
நேசமுள்ளசான்றோர் நெடுநாளுமேபதறி
நீசனுக்குச்செய்த நிதவேலையொக்குமல்லோ
ஈப்புலிபோல்னீசன் ஈயைப்போலேசான்றோர்
நாய்ப்புலிபோல்னீசன் நல்லாடுபோல்சான்றோர்
கீரியைப்போல்நீசன் கிருணம்போலேசான்றோர்
பாரிமைப்போல்நீசன் படுத்தினான்சான்றோரை
பண்டுநீசன்சபித்த படுசாபந்தன்னாலே
விண்டுரையாவண்ணம் விசையடக்கித்தாழ்ந்திருந்தார்
இம்படியேவூழியங்கள் எண்ணலெக்கில்லாதபடி
அப்படியேசான்றோர் அவனூழியங்கள்செய்து
அல்லாமல்நீசன் ஆர்க்கமுள்ளசான்றோர்க்கு
வல்லாண்மையான வரிசையிறைகள்வைத்து
கரியிறைபாட்டவிறை கண்டபாட்டவிறையும்
தரிசிறைகாணாத தறைபாட்டவிறையும்
ஆமிசங்களில்லாத அன்னீதவம்பிறையும்
நேமித்துவைத்த நிலையுள்ளசான்றோரை
அடித்துக்கைகட்டி ஆண்பெண்வரைக்குமிட்டு
இடித்தடைத்துப்பட்டினிகள் இரவுபகல்போட்டு

பெண்ணுடைய பெருமைமிகக் குலைத்து
மண்ணுண்டசான்றோரை வரமபளித்துமாநீசன்
சான்றோரைக்கண்ணில் தான்காணவொட்டாமல்
வீணுட்டஞ்செய்து விரட்டியடித்தமிக
பம்பழித்துச்சான்றோரை பலசாதியின்கீழாய்
தம்பழித்து வேலை தாறுபடக்கொண்டனனே
பறையன்புலையன் பகல்வரானபோகுமிடம்
மறையொத்தசான்றோர் வந்தால்பிழையெனவே
முக்காலிகட்டி முதுகிலடித்துமிக
மிக்கானபொன்பணங்கள் வேண்டிஞன்பிழையெனவே
சான்றோர்தன்வஸ்து தரணிதனக்குயிராய்
ஆறுலுஞ்சான்றோர்க்கு அடியொருநாள்மாறாது
கோவில்சிவாலயங்கள் கூடஞ்சிங்காசனங்கள்
நாவலைதுங்கள்ளாய் நாடியிருந்தாலும
சாணுன்கள்ளேறியெனச் சண்டாளநீசனெல்லாம்
வீணகச்சான்றோரை விரட்டியடிப்பான்காண்
சாணுடம்புகொண்டு தரணிமிக ஆண்டாலும்
வீணுடம்புகொண்டு விரித்துரைத்தேகபாராமல்
சாணுன்சாணுனெனவே சண்டாளனீசனெல்லாம்
கோணுதுளத்தோரைக் கோட்டிசெய்தேயடித்தான்
தரணிதனில்வந்து தலையெடுத்தயாவருக்கும்
மாணம்வரைக்கும் வந்துதித்தவன்றுமுதல்
சேனைமிகவூட்டுதற்குத் தெய்வச்சான்றோர்முர்தம்
ஈனமதில்லாமல் யார்பேர்க்குமீந்தாலும்
பொல்லாநீசன் பொறுதியுள்ளசான்றோரை
கல்லாதானகூடிக் காணவிடாதேயடித்தான்
நீசன்குடியிருக்க நிறைந்மணிமேடையெல்லாம்
வாசமுடன்சான்றோர் வஸ்துவல்லாலாகாது
அப்படியேசான்றோர் அவருதவிசெய்திடினும்
எப்படியும்சான்றோர் இடுக்கமதுமாறவில்லை
எவரெவர்க்குஞ்சான்றோர் ஈந்துமிகவந்தாலும்
அவர்களுக்குநீசன் அறுப்போலுறவுமில்லை
பாலதியசான்றோர் படுந்துயரங்கண்டிருந்து
மாலதிககோபமுடன் மாநீசனைப்பார்த்து
கேளடாகூத்திராவுன் கிளையோடேமாழுதற்கு
வாழுடாசான்றோரை வம்புசெய்துவாறதுதான்
உந்தனக்குமுன்கிளைக்கும் உள்ளோர்க்குமடேறும்
எந்தனக்குநன்மை இன்பமுடன்செய்துவரும்
சான்றோரைநீயுந் தடிமுறண்டுசெய்கிறது
வாணுள்க்கிடேறு வருமடாமாநீசா
மூன்யுகத்தலகேளு மூகமைய்ந்துகொண்டோனும்
உன்றேடுபிறவி ஒருயேழுவுண்டுமடா
ஒண்ணும்யுகத்துக்கு உற்றகுறோணியடா
மண்ணெல்லாங்குறோணி வந்தெடுத்துழுங்கையிலே

பூதக்குருமுனுவன் புத்திசொன்னானவ்வுகத்தில்
நீதமுடன்கேளாமல் நீசனவனமாண்டானகாண்
அடுத்தயுகமதில்க் குண்டோமசாலினுக்கு
கடுத்தமுள்ளகோவிரிசி காரியபுத்திசொன்னான்காண்
கேளாதேமாண்டான் கிளையோடேயன்நீசன
பாளாகிபின்னும் பதிந்தமூன்றாம்யுகத்தில்
மல்லோசிவாகனென்று வந்தயிருவருக்கும்
நல்லபலரோமரிசி நாடிமிகப்புத்திசொன்னான்
கேளாதேமாண்டான் கிறேதாயுகந்தனிலே
தாளாதசூரபர்ப்பன் தம்பியவன்றனக்கு
வீரவாகுதேவர் விரைந்துமிகப்புத்திசொன்னார்
தாராமலச்சூரன் தன்கிளையோடேமாண்டான்
அவ்வுலகத்தில்வந்த அசுரனிரணியர்க்கு
செவ்வுகத்தகிங்கள் செப்பினதேபுத்தியது
சற்றுமவன்கேளாமல்த் தான்மாண்டானவ்வசுரன்
பத்துத்தலையான பாரவரக்கன்றனக்கு
தம்பிவிபீசணனும் தான்சொன்னான்புத்தியது
வம்பிலவன்கேளாமல் மாண்டான்கிளையோடே
பின்னுந்துரியோதனனாய்ப் பிறந்தான்மறுயுகத்தில்
மன்னுகந்தவீஷ்மரும் வாழ்த்திமிகப்புத்திசொன்னான
கேளாமல்மாண்டான் கேடுகெட்டமாபாவி
தாளாமலுந்தனக்கு தற்சொரூபத்தோடிருந்து
நாராயணராய் நானுதித்துந்தனக்கு
சீராளபுத்தி செப்புகிறேன்கேளடவா
உலைகிளையும்நீயும் உற்றார்பெற்றார்களுடன்
தன்கிளையோடேநீயுந் தரணியாளவென்றால்
சாதிதனிலுயர்ந்த சான்றோரவர்களுக்கு
நீதியுடனிறைகள் இல்லாமல்நீக்கிவைத்து
ஊழியமுந்தவிருநீ உலகாளவேணுமென்றால்
அல்லாமல்சான்றோரை அன்னீதமாயடித்தால்
பொல்லாதநீசா புழுக்குழிக்காளாவாய்
கற்புள்ளசாணாத்தி கதறியுன்னைச்சாபமிட்டாள்
அப்படியுமுனகோட்டை அழிந்துபொடியாகுமடா
சாணாத்தியுன்னைச் சாங்கமுடன்சபித்தால்
வாணாளழியுமுந்தன் வம்மிசங்கடான்முடியும்
தீத்தனலில்வீந்து சிக்கிமிகப்பிறந்த
பார்த்தனவழிகுலங்கள் பகைத்துனைநிந்தித்ததுண்டால்
கோட்டையிடியுமடா கோத்திரங்கடான்முடியும்
நாட்டைமுடிக்குமடா நல்சாணாத்திகற்பு
சேனையழியுமடா உன்செல்வமதுகுன்றுமடா
வானமிடிந்து உன்வம்மிசத்தைக்கொல்லுமடா
திடம்பெரியசாணாத்தி தினமுனைநிந்தித்ததுண்டால்
கடல்வந்துன்சீமைதனைக் கட்டாயழிக்குமடா
ஊக்கமுள்ளசான்றோர்க்கு ஊழியங்களில்லையென்று

ஆக்கமுடன்பறைதான் அடித்தவனிதானறிய
அல்லாதேபோனால் அரசாளமாட்டாய்நீ
நல்லானசான்றோர்க்கு நாட்டுமிறைதவிர்த்து
இறைகூலிதானம் இட்டுக்கொடுத்தவர்க்கு
தறைமீதுநன்றாய்த் தழைத்திருக்கவைக்காட்டால்
குஞ்சரமுமுனனுடைய கொத்தளமுந்தானிடிந்து
வஞ்சகமாயுந்தனக்கு வலியகர்மஞ்சுற்றுமடா
கர்மவியாதிகளாய்க் கண்டமாலையுடனே
வறுமைவந்துசிக்குமடா மாணீசாநீகேளு
தெய்வச்சாணாத்தி தினமுனைநிந்தித்ததுண்டால்
பொய்வகையால்க்கர்ம போகத்தால்நீமடிவாய்
என்றுநாராயணரும் ஏற்றபுத்திசொல்லிடவே
அன்றந்தநீசன் அதுக்கேதுசொல்லலுற்றான்
மாயவரேகேளும் வாய்த்தசான்றோர்களைத்தான்
ஆயரேநீரும் அபுருவமாய்ச்சொன்னீரே
சாதிகள்க்கிளான சாணார்கள்தங்களுக்கு
வீரியமாயித்தனையும் விபரித்துச்சொன்னீரே
சாணார்க்குவைத்த தலைவீதமுள்ளயிறை
என்வாணாலழிந்திடினும் மாற்றிவைக்கப்போறதில்லை
என்சீவனுள்ளளவும் ஏற்றசாணான்றனக்கு
வன்பானவூழியங்கள் மாற்றிநான்வைப்பதில்லை
நீர்தானுமிந்த நிலையெயர்ந்துசாணாரின்
ஊரானதிலே உறைந்திருக்கப்போனாலும்
கேட்பதில்லைசான்றோரின் கேள்விநான்கேட்பதில்லை
தாட்பதல்லால்சாணாரின சங்கடங்கள்கேட்பதில்லை
என்றந்தநீசன் இத்தனையுமாயருடன்
தாவியுரைக்கச் சாற்றுவாரச்சுதரும்
பாவியுனது பவிசெல்லாந்தான்மாறி
ஆவிக்குநரகம் ஆவதற்கோயென்னோடே
இந்தமொழியுரைத்தாய் எனடாமாணீசா
உந்தனுடவூர்விட்டு ஓடிப்போவென்றனையே
ஆனாலுஞ்சாணார்க்கு அடியும்பலவூழியமும்
மாணாந்திரயிறையும் மாற்றிவையென்றுரைத்தார்
அப்போதுநீசன் அச்சுதரைத்தான்பார்த்து
வெப்போடுகோப வெகுழியாய்த்தானுரைப்பான்
மாலைகாலைநேரம் மாயவனேயுந்தனக்கு
சிலமுள்ளபூசை செய்துவருவதற்கு
நித்தமொருநூறுபொன் நினக்குச்சிலவுமுண்டே
அத்தனையுங்கிட்டிடுமோ அவனிறைகடான்றடுத்தால்
அல்லாமலெந்தனக்கு ஆயிரத்திநூறுபொன்
எல்லாத்திருப்பதிக்கு எந்தனக்குமவேணுமல்லோ
என்றேவலையாக இருக்கின்றபேர்களுக்கு
பொன்னாயிரந்தான் போடணுமேசம்பளங்கள்
இப்பொன்னுக்கெல்லாம் யாரொங்கேபோவேனடா

அப்பொன்னுக்கெல்லாம் அவனை அடித்தல்லவோ
வேண்டித்தானித்தனையும் விதானிக்கவேணுமல்லோ
ஆண்டியுன்சொல்லை யான்கேட்கஞாயமுண்டோ
என்னோடு தானிருந்து இந்தமொழிசொன்னாயே
உன்னோடுயெந்தனக்கு உறவென்னநீபோடா
முன்னெல்லாம்நீதான் உதவியோயெந்தனக்கு
இன்னிலத்தைவிட்டு எங்கானாலும்போடா
அதுக்குயந்தநீசன் யடடாவென்றிடவே
பொதுக்கென்றகோபமதைப் புத்திதனிலடக்கி
சொல்லுவார்பின்னும் சீவனம்போலுள்ளபுத்தி
பல்லுயிருக்கெல்லாம் படியளக்கும்மாலோனும்
இத்தனையும்வேண்டி யெந்தனக்குப்பூசையது
நித்தமும் நீசெய்யெனவே நின்னோடேகேட்டேனே
பூசைசெய்தாய்நீயும் பிராமணநம்பூரிகள்க்கு
தேசமறியாதோ செப்பாதோசாச்சியது
ஏக்காதிருப்பதற்கு யேற்றஅடையாளம்
தெக்கேதலையும்வைத்துச் சென்றதுவுங்காணலையோ
பின்னுமந்தப்பூசை புனக்காரமானதெல்லாம
பின்னுகடைச்சாதி புலைச்சிகையெச்சித்தீதான்
அறியலையோநான்தான் அமுதேத்திருப்பதுதான்
வெறிகொண்டநீசா மேதினிகள்சொல்லாதோ
என்றந்தமாலும் இத்தனையுஞ்சொல்லிடவே
அன்றந்தநீசன் அதற்கேதுசொல்லலுற்றான்
நான்தந்ததொன்றும் நாவில்வைக்கவில்லையென்றால்
என்தொந்தமாக யென்னோடிருப்பதென்ன
போபோநீதானு போகுமிடந்தனிலே
நீபோவெனவே நிகழ்த்தினான் மாயவரை
அப்போதுமாயன் அதிககோபத்துடனே
இப்போதுநீசனைப்பார்த் தேதுரைப்பாரம்மானை
போறேநானுனுடைய புரத்தைவிட்டுச்செந்தூரில்
வாறேநானுன்னை வதைக்கவொருகோலமிட்டு
எளியசாணானெனவே யெண்ணம்வைத்தெந்தனையும்
நளியாகபேசி நகைத்தாயேமாநீசா
எளியோர்வலியோர் எவர்க்கும்வெகுநன்மைசெய்து
வெளியாகவுந்தனக்கு விபரமபோதித்தருளி
நீயறியத்தர்மம் நீனிலத்திலேநடத்தி
பேய்வெறியைக்கொன்று பேருலகமத்தனையும்
நாடாள்வோர்தனக்கு நான்பட்டமுஞ்சூட்டி
ஒருபுத்தியாகி உள்ளென்னைக்கொண்டோர்க்கு
புதுப்புத்தியீந்து பூலோகமாளவைப்பேன்
வருவேனென்று வருமுன்னறிவதற்கு
நிருபமதுவெழுதி நீனிலத்திலேயனுப்பி
மாமரியசீவசெந்து மலையுமிகவறிய
இடமானவாயு சேடன்முதலறிய

வருணனறிய மதியுமிகவறிய
தருணம்வருர் போது சாணூரிடம்வருவேன்
அறிந்துபலசாதி முதல் அனைபொன்றுக்குள்ளாஞல்
பிரிந்துமிகவாளாமல் பெரியோராய்வாழ்ந்திருப்பார்
என்றந்தநீசனுக்கு எடுத்துரைத்தெம்பெருமாள்
அன்றுதிருவனந்தம் அவனிவிட்டெழுந்தருளி
நீசனுடகோட்டை நெருநெரெனத்தானிடிய
தேசமெல்லாமநீத்திரா தேவியிருள்மூட
எழுமேகமுங்கூடி இராட்சியத்தைத்தான்மூடி
வெளுவெளெனமாரி வெண்டுளிபோலேதொழிய
வாசுவதுதிரண்டு வையகத்தைத்தானரிக்க
வீசுவீசென்று விலாவியதுவீச
வாரியதுகோபமுற்று வையகத்தைத்தான்முழுங்க
மூரிபோல்மூச்செரிந்து மொகுமொகெனக்கோபமுற்று
மானீசனிட்டிருந்த வாய்த்தகல்க்கோட்டையெல்லாம்
தேனீயின்கூடதுபோல் செகலிடிந்துதம்மானே
கோட்டைதளமிடிந்து குஞ்சரங்கள்தானிறந்து
பூட்டைமிகப்பூட்டி போட்டிருந்தகாவலெல்லாம்
உழைந்துமிக்வெருவி வோரீகாவெனஉழறி
கழைந்துஅவரோடக் கைமறந்துநின்றனனே
சேபாயிரயாடச் சுவோதாருந்தாேேட
அப்பப்பாவென்று அன்னீசன்ருேேட
பிராமணநம்பூரி புலம்பிமிகத்தானழுது
ஸ்ரீராமனையுங்காணலேயே தேசமிருளாகுதல்லோ
அய்யோகெடுத்தான அரசன்நம்மையென்றுசொல்லி
மெய்யோடேகுத்தி விழுந்தழுவார் வேதியர்கள்
மாயனனந்த புரத்திலேவாழுமட்டும்
நீசனுடசட்டம் நின்றுதல்லோராச்சியத்தில்
ஸ்ரீபல்பநாபரிந்தச் சீமைவிட்டுப்போனவுடன்
பிரிவாகநவ்வர் பிடித்தாரோ சீமையெல்லாம
என்றுபலபேர்கள் இப்படியேசொல்லிமிக
அனறுபுலம்பி அழுவார்கள்சிலபேர்கள்
நம்பூரிவேதியர்கள் நாஙகெட்டோமென்றுசொல்லி
விம்மிடவண்ணம் வெளியிலுரையாதிருந்தார்
இப்படியேயபூலாகம் எல்லாந்திணுக்கிடவே
அப்படியேமாயவரும் ஆனதவநடனே
இன்றுமுதல்யாணிருக்கும இடங்களிலேசாதியெல்லாம்
ஒன்றுபோலென்னிடத்தில் வொத்துமிகவாருமென்று
சொல்லித்திருச்சமபதி சென்றிட்டவேதானடக்க
பல்லுயிநம்பெந்த படிந்தகூ ளன பார்ப
திருச்சம் யதிலே சென்றவர்தானிருக்க
புச்சமது ர்க்தான் புகழுமெரநம்பூரி
அப்போதுசாத்திரத்தில் அவனிலசாதியெல்லாம்
ஒப்போதுசுமமா இந்நாரல மெகவே

அன்றந்தசாத்திரத்தில் அதுகண்டுமல்லாமல்
நன்றந்தசாணூர்கள் நல்லதேருண்டுபண்ணி
தொட்டுக்கொடுத்துத் தேர்நடத்தவேணுமென்றும்
மட்டும்வெகுதானம் வலங்கையுயர்கொண்டோர்க்கு
கொடுக்கவேணுமென்றுங் கூறினார்சாத்திரத்தை
வெடுக்காகவந்து விபரிப்பெல்லாம்நடத்தி
வாரிக்கரையாண்டியென வாய்த்தநாமம்விளங்க
நேரியர்கள்சூழ நெடியோனங்கேயிருந்தார்
திருச்செந்தூர் தன்னில்த் திருமாலங்கேயிருக்க
விருச்சமுள்ளநீசன் வேசைநசுறுணியவன்
வையகங்களெல்லாம் வரம்பழித்துமாநீசன்
நெய்யதியச்சான்றோர்கள் நெறியையெல்லாங்குலைத்து
பேரழித்துத்தர்மம் பெருமையெல்லாந்தானழித்தான
மார்வரையேகூடும் மைபுரசுசஞ்சுவம்போல்
தானமழித்துச் சான்றோரின்கட்டழித்து
ஈனகுலச்சாதிக்கு ஈடாக்கித்தான்கொடுத்து
பள்பறையுநீசனுக்குப் பவளத்தார்தான்கொடுத்து
கள்ப்பறையசாதிகட்குக் காலமிகக்கொடுத்து
சாதிவரம்பதானழித்து வெண்ணீசன்
மூதிமுன்னீசன் மும்முடியுந்தவிர்த்து
நவ்வாமுடியெனவே நாடியவுடாகவேதான்
வெவ்வோரறிய இவன்தேசங்காணக்கி
ஆளாகமுன்னீசனையும் அவனைநாடாளவைத்து
பாழாகநீசன் பழையசட்டமும்மாற்றி
நீசனவ்வாவின் நினைவுபோல்ச்சட்டமிட்டு
தேசமெல்லாம்நவ்வா செய்தானேசட்டமது
மானம்வரப்பு மகிமைகெட்டுச்சான்றோர்கள்
ஈனமடைந்து இருக்கின்றவேளையிலே
தேவர்களெல்லாம் திருச்செந்தூர்சென்றேகி
மூவரொருநிக்தனுக்கு முறையிட்டாரம்மானை
ஆதிமுதல்பொருளே அய்யாநாராயணரே
சோதியேயெங்கள் துயரமெல்லாந்தீருமையா
இத்தனைநாளும் இருந்தோமொருமானுபமாய்
கொற்றவரோகாங்களினிக் குடியிருக்கபோகாது
சாதிக்கட்டையெல்லாம் தலையழித்துவெண்ணீசன்
மேதினிகளெல்லாம் மேவினையாவே
தானமழிந்தாச்சே தம்பியர்கள்சான்றோரின்
மானமழிந்தாச்சே வரம்பெல்லாங்கெட்டாச்சே
பூப்பியங்கலைத்துப் புரசியேடொப்பமிட்டு
காப்பிலியனேதுவினால் கட்டழிந்தார்சான்றோர்கள்
இத்தனைநாளும் யாங்கள்முறையிட்டதுபோல்
புத்திதனில்வைத்தால் பொறுக்கயினிக்கூடாதே
தம்பிசான்றோர்கள் சங்கடத்தைக்கேளாமல்
சம்பிமுகமவாடித் தலைகவிழ்ந்திருப்பதென்ன

மக்களுடதுயரம் மனதிரங்கிப்பாராமல்
பக்கமாயநீரும் பாராதிருப்பதென்ன
சான்றோர் படுந்துயரம் தானிரங்கிப்பாராமல்
ஆண்டோரே நீரும் அயர்ந்தேயிருப்பதென்ன
இதெல்லாமெங்களை நீர் ஏற்றசான்றோர்பிறப்பாய்
முதலெல்லாஞ்சான்றோருள் முடிந்துவைத்தகண்ணியினால்
பாவியந்தநீசன் படுந்துயரமெல்லாம்
தாவிக்கையிலே சத்திசிவன்வரைக்கும்
பொறுக்கமிகக்கூடலையே புண்ணியவையாவே
மறுக்கமதைப்பாரும் மனதிரங்கியெங்களுக்கு
உகத்துக்குகங்கள் ஊழியங்கள்செய்ததெல்லாம்
அகற்றியருள்தந்த அச்சுதருபரல்லவோ
மக்களெங்களையும் வலங்கையுய்யோர்தானாக
ஒக்குறவுகெட்டோன் உலகில்படைத்திருந்தால்
இத்தனைபாடும் எங்களுக்கென்றேதான்
புத்திரனெங்களையும் பூமிதனில்பெற்றுவைத்து
நரங்கள்படும்பாடு நாரணரே கண்டிலையோ
தாங்களுக்குநெஞ்சஞ் சற்றுமிரங்கலையோ
இப்படியேதேவர் எல்லோருமுறையமிட
அப்படியேமுறையமிட்டு அவரங்கேநிற்கையிலே
நல்லவுமைத்திருவும் நன்றாயெழுந்தருளி
வல்லபொருளான வாய்த்தநாராயணரின்
அடியிலவள்வீழ்ந்து அழுதுகரைந்துரைப்பாள்
முடியுமடியில்லா முத்தமலமுதப்பொருளே
அரி அரிநாராயணரே அண்ணரே அச்சுதரே
கரிகரிநாராயணரே கண்ணரே கார்வணரே
லெச்சைகெட்டபாவி யேமாளிக்கலியதினால்
அலச்சல்செய்தெங்களையும் அகற்றிவைத்துப்போனீரோ
பாவிக்கலியனுட பழிசாபச்சூட்சியினால்
பூவில்மண்டூகம் பொசித்துதேகாரணரே
கலியனுடயேதுவினால் கபாலியுன்மைத்துனரும்
சலிவாகிபேனி சடலமிகத்திமிர்ந்து
இருளமூடிக்கண்கவிந்து இருக்கிறார்சுரரும்
உறவுசுவடில்லை உமமுடையமைத்துனரும்
நின்னயமில்லாக்கலியன நீசன்பிறந்ததினால்
எனனோடேபேச்சு இல்லையுமைத்துனரும்
வானுறவுகெட்ட மாநீசன்வந்தநாள்முதலாய்
நானுமரோமசுரரும் நலநஷ்டமுந்தெரியாம்
பிரசிபபளக்கமிட்டுப் பெருத்தநாளானதுமண்ணே
தேசிக்கலியனுட சூட்சியினால்நாங்களபடும்
பாட்டைமந்துபாராமல் பரிகாசம்பார்ப்பதென்ன
நாட்டைக்குடுத்தாரோ நன்றிகெட்டமாநீசனை
அல்லாடல்நாளடைய அருமைச்சான்றோர்கள்படும்
பொல்லாங்கதையெல்லாம் போயப்பார்க்கயெழுந்தருளும்

வரமீறியகலியன் மாய்கையிலோஆகினால்
பிரமன்பிறப்புப் பிசகித்தலைமாறி
முண்டம்போல்ப்பிறப்பு முகங்கண்ணில்லாப்பிறவி
பிண்டப்பிறவி பேருறுப்பில்லாப்பிறவி
தலையுடம்பில்லதே சடலப்பிறவியைப்போல்
நிலைதவறிவேதா நினைவுதடுமாறினனே
சீவன்கொடுக்குஞ் சிவனுக்கிருநினைவாய்
பாவக்குணவுயிராய்ப் பகர்ந்தார்சிவனாரும்
படியளக்கநீரும் பண்புற்றிருக்காமல்
குடிகேடுமாச்சே குடிக்கக்கிடையாமல்
இத்தனையுங்கலியன் ஏதுவால்வமபாச்சே
அத்தனையுநீர்தான் அறியாதவர்போலே
எங்கள்மேல்ப்பகைபோல் இருப்பதென்னவச்சுதரே
சங்கடங்களெல்லாந் தான்சொல்லக்கூடாது
கயிலைசிவனார் காணாமலும்மையுந்தான்
அகிலமதைப்பாராமல் அயர்ந்திருக்கிறாரெனவே
ஆனதாலென்னுடைய அண்ணரேவங்கேகி
மானமுள்ளபுத்தி உம்மைத்துளர்க்குச்சொல்வாரும்
என்றுமையாளிப்படியே இன்பமாய்ச்சொல்லிடவே
அன்றுபெருமாளவள் முகமபார்த்தேதுரைப்பார்
சிவனாரும்நீயும் தேசமதில்லாட்டால்
எவனுக்குமலச்சல் இல்லையோராச்சியத்தில்
உங்களால்யானும் உகத்துக்குகங்கிடந்து
சங்கடங்களுற்றுத் தவிக்கத்தலைவிதிதான்
நீங்களில்லையானால் எனக்கு அலச்சலில்லை
ஏனுங்களோடே இப்பாடுயான்படத்தான்
அய்யோத்தியாபட்டணத்தில் அரசுண்டுமெந்தனக்கு
கைகேயத்துவந்த கன்னிதிருவுமுண்டு
ஏனிந்தப்பாடு யான்படக்காரணந்தான்
மானமுதாப்போலே மறுகுவாள்லச்சுமியும்
கைப்பிடித்தநாள்முதலாய்க் கலந்துவிளையாடறியேன்
மெய்ப்பிடித்தமான் மெல்லிமருமங்கிருக்க
இரப்பனைப்போல்லோகம் எல்லாந்திரிந்தலையா
பரபிரம்மன்னம்மைப் படைத்ததுயிதர்க்கோவென
யெல்லையில்லாப்பாடு யான்பட்டதுபோதும்
நல்லகுலச்சானோரை நானபெற்றுவைத்தனென
வைத்ததெல்லோரும் மனதறியப்பார்த்திருக்க
பொய்த்தலைவனீசனையும் பிறவிசெய்யஞாயமுண்டோ.
நீசனுடகையதிலே நின்மக்கள்தந்தனையும்
பாசக்கயிறிட்டுப் பந்தடிக்கச்செய்தாரே
தொட்டாலும்நீசம் தொடருமதைக்கண்டாலும்
வெட்டாவெளியாய் விரட்டிப்பிடிக்குமல்லோ
காதிலதைக்கேட்டாலுங் கர்மம்வந்துசிக்குமல்லோ
ஆரிந்தநீசனையும் அழிக்கவகையாறிவார்

மாய்கைவினை வொழிய மறுபிறவி வாராதே
பொய்க்கலியனையும் முடிக்கவகையாரறிவார்
வாளாயுதத்தாலே மாளானேமாகலியன்
தூளாம்பிறவி சொல்லொணா வல்லமைதான்
முப்பிறவியாறு முடித்தவலுமையெல்லாம்
இப்பிறவி தன்னில் எட்டிலொன்றுபாரமில்லை
உகத்துக்குகம்பிறந்து ஓடித்திரிந்தவன்றே
அகத்தில்கொஞ்சம்வையாமல் அவர்மூப்பாய்ச்செய்தாரே
ஆனதாலின்னமினி அங்குவரவேணுமென்றார்
தானம்வைத்துப்பாராமல் சங்கையழித்தாரே
எங்கேயானாலும் இறந்திடுவேனதற்கு
சங்கையுள்ளசானார்க்கு தங்குமிடம்வேறில்லையே
தாய்தந்தையில்லாமல் தயங்குகின்றபிள்ளைபோல்
மாயக்கலியனினால் வாடுவரேசான்றோர்கள்
தகப்பனில்லாப்பிள்ளை சானார்களென்றுசொல்லி
அகப்படுத்திச்சான்றோரை அடிப்பானேநீசன்
தாயுந்தவமிருந்து சடைப்பாளைக்காணாமல்
ஆயுங்கலைதெரிந்த ஆயுளையும்வாடுவளே
இப்படியேஞாயம் இருப்பதாலேதனக்கு
அப்படியே வேறு வழியல்லவேயானதினால்
எங்கேயினிப்போவேன் என்றெண்ணி தன்மனது
உங்களுடவூருக்கு ஒண்ணுதலைபோநீயென
கோபத்தால்தங்கையுடனே கூறினரித்தனையும்
வேகத்தாலம்மை விழியிட்டழுதாளே
கைலைக்குநீர்தான் கால்வைக்காதேயிருந்தால்
அகிலமதொன்றாய் அழியுமொருநொடியில்
நல்லகுலச்சான்றோர் நாடுங்கலியனால்
தொல்லைமிகப்பட்டு துயருற்றுவாடுவரே

எம்பெருமாள் செந்தூர்விட்டுக் கைலைக்கு ஏகல்

நானுமெந்தங்கைமாரும் நல்லகைலையிலே
மானுங்கலைபோல் மறுகியிருப்போமே
கைலைமுனிதேவர் கட்டழிந்துவாடுவரே
மயிலனையார்சொல்லை மறந்துயிருந்தாரே
கன்னிப்பெண்ணார்கள் என்கற்பனையைத்தான்மறந்து
உன்னுதலாய்ப்பெண்கள் ஒருவர்க்கோர்மூப்பாக்கே
அய்யோகைலை அங்குமவரமபழிந்து
பையரவம்பூணும் பரமன்மனமாச்சே
அண்ணரேகோவே அடியாள்தனக்கிரங்கி
எண்ணமில்லாக்கைலைக்கு எழுந்தருளவேணுமையா
என்றேஅறம்வளர்த்தாள் இறங்கிஅண்ணர்கால்தனையும்
சென்றுபிடித்துச் செய்யத்தாள்தான்வணங்கி
மனதிரங்கியெம்பெருமாள் மார்போடுதங்கையரை
தனதில்பிரியமுற்றுத் தங்கையரோடேதுரைப்பார்

உன்னோடுபிறந்த ஊழிவிதியானதினால்
நன்றோடேவாழ நமக்குவிதியில்லையே
உந்தனக்காகவல்லோ ஊருக்கூரேதிரிந்து
சந்தோசமற்றுச் சடைக்கவிதியாச்சே
என்றுபெருமாள் யேற்றபிறப்போடு
இன்றுகைலைக்கு எழுந்தருளவேணுமென்று
தேவர்முனிவரோடு திருக்கன்னிமாரோடு
மூவருடநடுவன் முகமலர்ந்தேகூடி
நடக்கவேணுமெனவே நளினமுற்றெம்பெருமான்
கடற்கரையில்வந்து காலமேதெனப்பார்த்தார்
இந்தச்சொரூபமதாய் இங்குவிட்டெழுந்தருளி
சித்தர்குடியிருக்குஞ் சீமையிலேகுமுன்னே
கலிமூழ்கினாமள் கரையேறப்போறதில்லை
பொலிவாகவேசம் புதுப்பிக்கவேணுமென்று
என்னசொரூபம் எடுப்போமென்றுசொல்லி
அன்னப்பெருமாள் ஆலோசனையாகி
மேல்யெல்லாம்வெண்ணீற்றை மிகவணிந்தெம்பெருமான்
பாலொக்கும்நெஞ்சம் பரமனொருநினைவாய்
மாமோகவாசை மயக்கவெறியறுத்து
தாமோதரனார் சடைக்கோலமேபுனைந்து
காலில்சிவநினைவைக் களாமல்த்தானிறைத்து
மார்பிணைந்துபூமணியே வகிர்ந்தாரேவேடமிட்டு
கண்ணில்மணிஞன்மணியைக் கண்ணாடியாய்ப்பதித்து
எண்ணரியதங்கை இன்பமுடனேவளர்த்த
முப்பத்திரண்டறத்தை உடலெல்லாமேபொதிந்து
செப்பமுடன்கந்தை துய்யவெண்கலையணிந்து
தண்டாளமான தடியொன்றுகைப்பிடித்து
அண்டர்களும்போற்றி அரகராவென்றுவர
தேவர்களுங்கூடிச் சிவசிவாசிவனேயென்று
தாவமுள்ளதேவரெல்லாந் தாரமிட்டேற்றிவர
அம்மையுமையாளும் அவளுஞ்சடைவிரித்து
செம்மையுள்ளமாதுஞ் சிவசிவவென்றேத்தி
எல்லோருடனே எம்பெருமான்தானடந்து
வல்லோர்புகழும் வாழ்கைலைவந்தனராம்
கைலைதனில்வரவே யாரிருளுந்தான்மறைய
மயிலையொத்தாசர் மாயவரைக்கண்டாவி
சந்ததியைக்கண்டு தாயாவல்கொண்டதுபோல்
வந்தந்தாசுரரும் மார்போடறவணைத்து
இத்தனைநாளும் யானும்மைக்காணாமல்
புத்திரனுந்தாயைப் போகவிட்டார்போலிருந்தேன்
மாரிகாணாத வாய்த்தபயிர்போலும்
ஏரிகாணாத ஏற்றநீர்போலிருந்தேன்
இனம்பிரிந்தமான்போல் இருந்தேனுமைத்தேடி
துணையில்லார்போலே துணையற்றுநானிருந்தேன்

என்றுமகாமாலை யெடுத்தார்விசுவரும்
சென்றுவிக்கொண்டு சினுங்கியழுதுசொல்வார்
இணையும்புறுவதுபோல் இருந்தோமேமைத்துனரே
துணையுமெனைமறந்து தூரநீர்போனதென்ன
என்னைவிட்டுநீரும் எழுந்தருளுமன்றுமுதல்
வன்னஉமையாளின் வடிவைமிகவறியேன்
துணையிழந்தவன்றிலைப்போல் தினமுமுமைத்தேடி
கணவனில்லாப்பெண்போல் கலங்கினேன்காரணரே
உயர்த்தோழமைபோல் உறவுகொண்டநாரணரே
மெய்த்தோழமையை விட்டுப்பிரிந்தமுதல்
பிரிந்துமலைந்தேன் பச்சைநிறமாலே
சரிந்துபள்ளிகொண்டு சதாவருடமாச்சுதல்லோ
இத்தனைநாளும் என்னைமிகப்பாராமல்
மத்திமமந்திரியே மறந்தென்னைவைத்ததென்ன
கைலைக்குமெந்தனக்குங் கட்டானமந்திரிதான்
அகிலமீரேழ்க்கும் அடக்கமுள்ளமந்திரிதான்
நீயல்லால்வேறுளதோ நெடியதிருமாலே
இந்தவிதமாய் இகபரவிதத்தோடும்
உந்தன்றனைப்பிறவி உயர்ந்ததவஞ்செய்தேனல்லோ
அப்படியேநீயும் ஆதிநாராயணராய்
முப்படியேவந்து உருவெடுத்தமாயவரே
கைலைதேவாதிகளுங் கண்ணுளமாதிருவும்
ஒலிலோன்மாமறையோர் உற்றயிருஷிகளும்
கின்னரர்கள்வேதக் கிம்புருடர்சேதாரர்
மன்னர்முனிவர்களும் மறையும்பலசாத்திரமும்
வேதாவும்நந்தி விதரு ச்சித்தர்களும்
இப்படியேமேலோகத் தெல்லோரையும்வருத்தி
அப்படியேவோர்வசனம் அவர்களோடேகேட்டு
கல்லைவலித்திழுத்துக் காலில்மிகப்போட்டவர்போல்
சொல்லைமிகக்கேட்டுச் சுமந்தேன்மிகுபாரம்
எல்லாவிதப்பாடும் யாம்பட்டதுபோதும்
வல்லவனேயுன்னுடைய வாக்கைக்கேளாதபடி
செய்தவிதத்தாலே செப்புதற்குநாணமுண்டு
மெய்யிசையுமாலே வெத்தக்கோவிக்கரித்து
எல்லாமுமது இச்சையதுபோல்நடத்தும்
சொல்லொன்றுக்குள்ளே சூட்டிநீராளுமென்று
மாலுக்குமனது மகிழ்ச்சிவரும்படிக்கு
பாலுக்குமோரோன் பகர்ந்தார்காணம்மானை
அப்போதுவச்சுதரும் அவரேதுசொல்லலுற்றார்
எப்போதும்உமக்கு இப்படியேயுள்ளமுறை
நாலொருவன்வேடனைப்போல் நாட்டில்திரிந்தலைய
ஏனோகாணுங்களுக்கு இல்லையேசங்கடங்கள்
முன்னுதித்தபாவி முழுநீசக்குரோணியினால்
பின்னுந்துரியோதனனாய்ப் பிறந்தவன்மாழும்வரை

உகமாறுனதிலும் உதித்ததுரோணியுயிரை
பகையாக்கிக்கொல்ல பட்டபாடெத்தனை தான்
யான்மிகப்பட்டபாடு ஆரும்படவரிது
தான்பட்டதெல்லாந் தான்போதுமென்றுசொல்லி
இனிமேல்ப்பகைதான் இல்லாமல்செய்வதற்கு
மனுவாய்ப்பிறக்க மக்களேழுபேரை
சேர்த்தெடுத்துவிந்தில் சேர்ந்துசெங்காவுதன்னில்
சார்ந்துவிளையாடித் தான்பெற்றபாலருக்கு
எல்லோருங்கூடி யேற்றதிருநாமமிட்டு
வல்லோராய்ப்பூமிதனில் வாழுமென்றுவைத்தோமே
அலுவலொழிந்ததென்றும் அலைச்சல்மிகயில்லையென்றும்
மெலிவெல்லாந்தீர்ந்து மேவிஸ்ரீரங்கமதில்
இனிதிருக்கும்போது யென்னைநினையாமல்
மனிதனையும்பூமிதனில் வருந்தவேதன்னசொல்லுமென்றார்
ஆறுயுகமதிலும் அதிகபலக்காரர்களாய்
வீறுடனேபிறவி விதவிதமாய்ச்செய்தீரே
முன்பிறந்ததுரோணி முழுங்கிஞான்கைலைமுதல்
வன்பிறவிசூரனைத்தான் வதைக்கவேறுருமுண்டோ
இரண்டாம்யுகத்தில் நன்றிகெட்டப்பாவி
குண்டோமசாலிஞய்க் குதித்தான்மகாபாவி
வான்லோகமுழுங்க வாய்விட்டலறினதால்
கோனேகிரிவேந்த கொன்றதுவேறுருமுண்டோ
மூன்றும்யுகதில் முளைத்தானேயப்பாவி
வான்றுனமல்லோசி வாகனென்றமாபாவி
தேவரையுந்தெய்வ ஸ்திரீகளையும்மூவரையும்
யேவலதுகொண்டு இடுக்கமதுசெய்தனரே
முறையமதாற்றல் ஓடிப்போவென்றுரைத்தீர்
சிறைபிடித்தபாவிகளைச் செயித்ததுவேறுருமுண்டோ
நாலாம்யுகத்தில் நன்றிகெட்டசூரபர்பன்
ஆலாவிருச்சம் அதுபோல்கிளையுடனே
நாட்டமுடனே நாடும்படையோடு
கோட்டையதிட்டுக் கொடியமாபாவியனுய்
கேட்டவரங்களெல்லாம் கெட்டியாய்சீர்கொடுத்து
தேட்டமிடன்கைலை சீமையதுவுங்கொடுத்து
இருக்கயிடமற்று எழுந்திருந்துநீரோடி
உருக்கமுடனிருந்த உவரியிலேகிவந்தீர்
தேவர்களைப்பாவி செய்யுமிடுக்கமதால்
மூவர்முதல்உம்மிடத்தில் முறையிட்டயேதுவினல்
என்னைவருத்தி யேற்றமொழிகள்சொல்லி
சென்றவனைக்கொல்லுமென்று செய்திசொல்லிவிட்டீரே
விட்டவுடநானவனோடு வெகுநாளாயுத்தமிட்டு
பட்டபாடெல்லாம் பகரவெளிதாமோ
யுத்தமிட்டவனை ஒக்கத்தாமறுத்து
செயித்தேன்பின்னவனும் செத்தயுகமதிலே

இரணியசூரனென்று ஈனக்கெதிரியாய்ப்பிறந்து
தரணியிலவன்பேர்ச் சாற்றிவளங்கலுற்றான்
பின்னுமவனறாக்குப் பிள்ளையாய்நான்பிறந்து
கொன்றுதாமறுத்தேன் குதித்ததுகாண்மற்றயுகம்
பத்துத்தலையோடு பாவியவன்பிறந்து
உற்றவனைகேட்டவரம் ஒக்கநீர்தான்கொடுத்து
அருகில்மிகவீர்ழ்ந்திருந்த ஆயிளையநீர்கொடுத்து
குருவிருந்தசேர்திக் குன்றதையும்நீர்கொடுத்து
பாவியவன்மூன்று பாரடக்கியாண்டனனே
தேவியும்நானும் தேசமதிலேபிறந்து
அவ்லையழித்து அந்தயுகமுங்கருக்கி
சிவனேயும்பாதித்தனைச் சிறைமீட்டித்தந்ததாரு
சதியாங்குரியோதனனுய்த் தான்திரும்பவேபிறந்து
மதியாமலெந்தனையுர் மறையுமிகம்பாமல்
அன்பேரையெல்லாம் அகப்படுத்திமாபாவி
வன்பானகள்ளன் மாய்மாலஞ்செய்ததினால்
கொன்றவன்கொல்லக் கூடுமோகாரணமே
என்னென்னபாடு யான்பட்டமாய்மாலம்
கஞ்சனென்றபாவிக்குக் கடியவரம்நீர்கொடுத்து
வஞ்சகன்றான்செய்த மாய்மாலமெத்தவுண்டு
அவனைவதைக்குமுன் அடியெத்தனைகளுண்டு
சிவனேயுங்க்குச் சூடெண்ணஞ்சற்றுமில்லை
இருப்பிலிருந்துகொண்டு யெனக்கலச்சல்செய்வதுண்டு
எதிர்ப்பவரார்சொல்லும் இந்தமாய்மாலமோடு
கலியென்றசொல்லுக் காதில்மிகக்கேட்டதுண்டால்
சலிவாகிமேனி சடல்மிருளாகுமல்லோ
மெய்பேசவேணுமென்று மேவியிருந்தாலும்
பொய்பேசப்புத்தி பொலியும்பொடுபொடென
வாளாயுதத்தாலே வாய்ந்தகணையம்பாலே
பாளாக்கவென்றாலும் படாதேமகாகலிதான்
மாற்றப்பிறவி யாகவருத்தாலும்
இத்தனையெண்ணம் இல்லையேயெந்தனக்கு
அய்யோவென்மக்கள் அதற்குள்ளகப்பட்டாரே
மெய்யோயினிமக்கள் விளங்குவதெக்காலம்
தீண்டிப்பிடித்தானே செத்தகலிமாய்மாலன்
மீண்டிறடுதீர்ந்துமக்கள் விளங்குவதெக்காலம்
ஆறுபிறவி அழித்ததுவுமெந்தனக்கு
நீறுபோலெண்ணுதுகாண் நிர்க்கலியைப்பார்க்கையிலே
என்னவிதத்தால் இவனையழிப்போமென்று
வன்னச்சிவனே மனதுவெறெண்ணுதுகாண்
நாடாச்சுதேசம் நகரியுங்கள்பாடாச்சு
வீடாச்சுகுண்டம் மேதினிகளங்காச்சு
தேசவழிபோறேன் செல்லாதுயிங்கேதான்
மாய்கைவலையைவிட்டு மறையவேபோறேன்காண்

பலபேர்களாட்டும் பாம்புபோலென்னையுந்தான்
ஆலைவிதமாயென்னை அமைத்தெதன்னிச்சொல்லுமென்றார்
அப்பொதுசுரர் அச்சுதனைத்தான்பார்த்து
இப்போதுநானும் இயம்புகிறேன்கேளுமென்று
முப்பிறவிநீரும் உதித்துவந்தநாளையிலே
இப்பிறவிதுயரம் எல்லாம்வரும்படிக்கு
பண்டொருபாபம் பகர்ந்தேனென்மைத்துனரே
அன்றுசாபம்பகர்ந்த அதுகேட்டுக்கொண்டருளும்
குறோணியொருகூர்க் கொடும்பாவிதான்பிறந்து
சுறோணிதமாய்வரவே தொல்புவியெல்லாமுழுங்கி
என்றோடுசொரியாள் எல்லோரையுமுழுங்க
நின்றோடுமாயவரே நீயொருவன்தப்பிமிக்
என்னைநினைத்துத்தவம் இருந்தாய்நீகீழுலகில்
தென்னவனேநீயும் செய்ததவத்தினால்
எழுந்தருளிநானும் என்னவாழ்வேணுமென்றேன்
குளிர்ந்தகுணமான கோவேந்தேநீமாறி
கேட்டாயேசூரனுடல் கீறித்துண்டாறாக்கி
தட்டாண்மையாக தரணிதனில்விட்டெறிய
வரந்தாருமென்று வாக்காகக்கேட்டவுடன்
தாந்தரமேதுண்டந் தரணிக்கெல்லாம்பிறந்து
மாத்தாணுயுனக்கு வருமாறுயுகம்வரையும்
சீற்றத்துடனே செடமெடுக்குமென்றுசொல்லி
தந்தவரத்தின் தன்மையறிந்தமுறை
எந்தன்மேல்க்கோபம் யேன்சொல்லப்போறீர்காண்
அன்றுமகாமால் அசுங்களிக்கூர்ந்து
என்றந்தாசர் இப்படியேசொன்னவுடன்
ஆனாலும்நான்கேட்ட அவ்வரங்களானாலும்
மானுபரனாய வரம்பழிந்துப்போட்டீரே
இதற்குமுன்யேதாலும் என்னையறியாதவண்ணம்
ஒதுக்கிலிருந்தோர்வறுமை உங்களாற்செய்ததுண்டோ
மும்முறைபோலென்னை முகந்துகெணியாமல்
அம்முறையேநீரும் அழித்தேதன்சுரரே
என்னைக்கெணியாமல் இக்கலியைச்செய்ததினால்
நன்னமுர்தாசுரரே நம்மாலேகூடாது
அளிப்பதுவுங்கலியை அங்கியல்லக்கூடாது
விழிப்பதென்னம்மாலே விபரமிடக்கூடாது
நம்மாலேயொன்றும் நடவாதுசுரரே
சும்மாவென்றேடிருந்து சோலிபண்ணவேண்டாங்காண்
உகத்துக்குகங்கள் ஓடித்திரிந்தலைந்து
மருந்துவமாய்ச்சந்துசனைக் முறிந்துநோகுதப்பா
தூங்கிவிழியாமல் திமிர்ப்போல்சரீரமெல்லாம்
ஏங்கிமிகவாடுதப்பா என்திருவைக்காணமல்
பாவிகள்பண்ணிவிட்ட பாட்டைமிகவெண்ணுகையில்
ஆவிமிகவாடி அங்கமெல்லாஞ்சோருதையா

அந்தமுழுப்பாவிகளில் அதிகப்படுபாவியிவன்
சந்ததிக்குத்தாய்தகப்பன் தாள்ந்துநின்றேவல்செய்தால்
கொடியவனோபாவி கொஞ்சமிஞ்சமோயிவன்றான்
முடியுமோபாவி யுயித்தயிடச்சென்றதுண்டால்
தர்மமறியாத சண்டித்தடிமுடர்கையில்
நம்மைபிடித்தங்கே கட்டிவிடவேண்டாங்காண்
பட்டவடிஆறப் படுத்திருக்கப்போறேனான்
ஒட்டொழியவென்னை ஒடுக்கிவிடவேண்டாங்காண்
என்றதினாரா யணர்தானுமிப்படியே
அன்றுதினாதன் அவரோடிதுவுரைக்க
சிவனுமிகவயர்ந்து செப்புவார்மாயருடன்
புவனமதர்க்குடைய பொன்னேயென்மாதவமே
இப்படித்தான்மைத்துனரே ஈதுரைத்திராணுக்கால்
எப்படித்தானாலும் ஏகமதுவாழுவது
சிவரல்லோமைத்துனரே சித்திரம்நானல்லவோ
கவரல்லோநாங்கள் கயமல்லோமைத்துனரே
மாயாநல்லோயெங்களுக்கு மலையல்லோமைத்துனரே
ஆயனல்லோயெங்களுக் கணையல்லோமைத்துனரே
கோப்பல்லோநாங்கள் குருவல்லோமைத்துனரே
செப்பல்லோமைத்துனரே சிமிள்க்கூடுநாங்களெல்லாம்
நீர்தானுமிப்படியே நெகிழ்ந்தமொழிசொன்னதுண்டால்
ஆர்தானுமெங்களுக் கணைவுமொழிசொல்லுவது
மூடிப்படிக்குலுங்க மயங்காதோகொப்பதெல்லாம்
கூடிப்படிக்குலுங்க குலையாதோசீவனது
தேவமுனிசாஸ்திரிகள் சிறுபுத்தியைக்கேட்டு
மூவருன்னைப்பாராமல் முனிந்துசெய்தஞாயமெல்லாம்
பொறுத்தருளுமென்னுடைய புண்ணியனைமைத்துனரே
மறுத்துரைத்தால்நானுமினி வகுத்துரைக்கஞாயமில்லை
எல்லாம்பொறுத்து இனியுமக்குத்தேர்ந்தபடி
சொல்லொன்றுக்குள்ளே செலுத்தியரசாளுமென்று
ஈசுரனார்சொல்ல எம்பெருமாளேதுசொல்வார்
வீசுபுகழீசுரரே விரித்துரைக்கநீர்கேளும்
என்னையுமோகீழுலகில் இறந்துகிடந்தாரெனவே
சொன்னவரையெல்லாஞ் சுறுக்காகத்தானேயும்
என்றந்தமாயவனார் இப்படியேசொன்னவுடன்
அன்றந்தயீசுரனார் அழைத்தாரவர்களையும்
உடனேதான்தேவர் முனியொக்கப்பயமடைந்து
தடதடெனவோடிவந்து தாழ்ந்துநமஸ்காரமிட்டு
அப்போதுமாயவனார் யவர்கள்தனைப்பார்த்து
செப்புகிறாரையா திருக்கண்பொறிபறக்க
கண்கள்சிவந்து கருமேனிதான்விறைத்து
விண்களதிர வெடுவெடெனக்கோபமுற்று
தேவர்திணுக்கிடவே தெய்வமுனிதான்பதற
மூவர்திணுக்கிடவே யுரைக்கிறாரெம்பெருமாள்

மண்டிண்ணெனவே மலைகள் பொடுபொடென
திண்டிண்ணெனவே தேவர்மிகப்பதற
சிவமுங்கிடுகிடெனத் சிவனுமையுந்தான்பதற
நமனும்பதற நாராயணருரைப்பார்
தேவரேவானவரே தெய்வமுனிசாஸ்த்திரியே
மூவரேநானும் மொழித்ததங்கேசொல்லுமென்றார்
சாகக்கிடந்ததெங்கே தப்பிவொழித்ததெங்கே
பொகக்கிடந்ததெங்கே போனதெங்கேசொல்லுமென்றார்
ஆளுக்கொருமூப்பா அரியிங்கேயில்லையென்று
கோழுரைத்திரோசர் குருமுன்னேநீங்களெல்லாம்
சாஸ்திரத்தைதனைக்கிச் சரியாகச்சொன்னதிட்ட
சூஸ்ட்திரத்தையெல்லாஞ் சொல்லுமென்றாரெம்பெருமாள்
சொல்லநாவில்லாமல்ச் சோர்ந்துமிகத்தேவரெல்லாம்
பல்வாய்சுண்டொல்கிப் பதைபதைத்துநின்றனரே
கண்தலைகவுள்ந்து கால்பெயர்த்துவைக்காமல்
விண்கவிழ்ந்தயோகமுனி வெக்கிநின்றான்போரே
நின்றநிலையறிந்து நெடியபரமேசுரரும்
அன்றெந்தனோடே அறம்பாடிசொன்னதெல்லாம்
இன்றெங்கேபோச்சுதுகாண் இரண்டுமிகச்சொல்லாமல்
நின்றிங்கேநீங்கள் நினைவயர்ந்துநிற்பதென்ன
பேச்சுப்பேசுங்கிளிக்குப் பிணபூனைநாட்டமுற்றால்
கீச்சுக்கீச்சென்றுகிளி கிழ்ப்பதுங்கவேண்டியதேன்
அன்றுநீர்சொன்னமொழி அயர்த்துமிகப்போனதென்ன
இன்றுநான்கண்டிலனே இதற்குமுன்னுள்ளதிறம்
இப்படியேஈசர் யெடுத்துரைக்கத்தேவரெல்லாம்
எப்படிநாமசொல்வோம் என்றேதிகைக்கலுற்றார்
எல்லாமறிந்து யெடுத்துரைப்பாரெம்பெருமாள்
பொல்லாதார்க்கெல்லாம் பிறப்பொன்றிசைந்திருக்கு
சொல்லுகிறேன்நானுமொன்று சொல்வதைக்கேள்ப்பீரோ
நல்லதுதானென்று நாட்டமுற்றெல்லோரும்
அப்போதெம்பெருமாள் ஆதிசிவனோடுரைப்பார்
இப்போதுகேள்ப்பீரோ யான்சொல்லுநியாயமது
என்றுதிருமாலுரைக்க யெடுத்துரைப்பாரீசுரரும்
மன்றுதனையளந்த மாலேயென்மைத்துனரே
வாருமெனவழைத்து மாலேரன்றனையிருத்தி
சிருடனேவேதாவுஞ் சிவனுமையாளும்
எல்லோருங்கூடி இருந்தமாயவரின்
நல்லாயருகிருத்தி நவிலுவார்சத்தியமாய்
இதற்குமுன்செய்த இழிவெல்லாம்நீர்பொறுத்து
கதுக்காகவும்முடைய கருத்தின்படியாலே
நடக்கும்படிசட்டமெல்லாம் நாராயணர்க்குத்தந்தோங்காண்
அடக்குடக்கெல்லாம் ஆதிக்குத்தந்தோங்காண்
இன்றுமுதலும்முடைய இச்சைபோலேநடத்தி
என்றுநடத்திக்கொள்ளும் என்றேவிடைகொடுத்து

சட்டமெல்லாமுமக்குத் தந்தோமினிநீர் தான்
இட்டசட்டமீறி இனியொருவர்செய்யோங்காண்
உம்மைநினையாமல் இக்கலியைச்செய்ததினால்
நம்மைவரநீர் தான் நடத்தும்படிநடத்தும்
என்றந்தஈசுரரும் மேற்றவுமையாளும்
அன்றந்தவேதாவும் அமரர்முனிதேவர்களும்
சத்தியமாகத் தானுரைத்தார்நாரணர்க்கு
மத்திமநாதன் மனமகிழ்ந்தேதுசொல்வார்
நல்லதுதானென்று நாட்டமுற்றெம்பெருமாள்
வல்லபரமேசுரரோடே தான்வகிர்வார்
கர்மம்போலொத்த கலிப்பிறப்பானதினால்
நம்மள்முதல்மாறி பிறக்கநாளாகுதுகாண்
ஆனதாலீசுரரே அருளுகிறேன்நீர்கேளும்
ஈனமுள்ளபாவி இயன்றதிரியோதனனை
கொன்றேனவனைக் குருநாடையவர்க்கீந்து
முன்னேமறையோன் மொழிந்தசாபத்தாலே
தேவர்முதல்வானோர் தெய்வமுனிதான்வரையும்
மூவருறையும் உற்றதெய்வலோகமேழும்
மேலோர்களெல்லாம் மேதினியிலந்தனக்கு
பூலோகந்தன்னில் பிள்ளையெனவேபிறக்க
வேணுமென்றுமாமுனிவன் விட்டசாபத்தாலே
தாணுவேநீரறியத் தான்பிறந்தார்சான்றோராய்
ஏழுலகமதிலும் ஏற்றமுள்ளவித்தெடுத்து
கீழுலகில்பெற்றேன் கீர்த்தியுள்ளசான்றோராய்
பெற்றுவைத்துஸ்ரீரங்கப் பூமியிலேபோயிருந்தேன்
மற்றுஞ்சிலநாள்கழித்து வாழுந்தெயிதனில்
அனந்தபுரம்நோக்கி யானேகும்வேளையிலே
தெய்வலோகத்திலுள்ள தேவதேவாதிகளும்
வைகுண்டலோகமதில் வாழுகின்றதர்மிகளும்
சிவலோகம்வாழுஞ் சிட்டர்முதலானவரும்
தவமானவேதாவின் தனயுகத்தில்வாழ்பவரும்
வடகயிலாசந்தில் வந்திருந்தோர்வாட்டமதாய்
நடக்கும்வழியில் நானவரைக்கண்டேதான்
தாதுகரமணிந்த தானவரேதர்மிகளே
ஏதுகாணீங்கள் இங்குவருங்காரணமேன்
என்றவரோடேகேட்டேன் ஈசுரரேகேட்டருளும்
அன்றவர்களென்னோடு அருளினதைநீர்கேளும்.
கலியன்பிறந்ததினால் கட்டழிந்துமனுபங்கள்
சலிவாகியெங்களுட தானதவங்குன்றினதால்
இனியிருந்தாலென்னபலன் என்றுமிகவெண்ணமிட்டு
கனிந்துவுமைத்தேடிக் காணவந்தோமென்றுரைத்தார்
அப்போதுங்களுக்கு ஆகவேண்டியவளம்
இப்போதேசொல்லும் என்றேகேட்டேன்தேவருடன்
சொல்லுகிறாரந்தத் தேவர்களுந்தானீசுரரே

நல்லது தானிந்த நாட்டில் கலிவந்ததினால்
கலிக்குமுன்னுள்ளதுவுங் கலியில் மிகக்கண்டதுவும்
அலிக்கியமானதினால் அக்கலி மாழும்போது
சிவசத்திதான் முதலாய் சீவனுள்ள செந்துகளும்
தவமுனிவராகிடினுந் தாணிப்புற்பூண்டுவரை
மட்டைமருந்திலையும் மலைகடலும் வாசுகியும்
திட்டமுடன் நாரணர்க்குச் சிந்தைபொருந்த பேர்களெல்லாம்
மேனியழுக்கறுத்து மேன்மூடிருளறுத்து
யோனிப்பிறப்பும் உற்றலிங்கப்பிறப்பும்
அவரவர்க்குள்ள அதிகப்பிறப்போடும்
எவரெவர்க்கும் பூமியொன்றில் இனிப்பிறக்கவேணுமல்லோ
ஆகும்பிறப்பும் ஆகுதுமின்னாளில்
சாகும்பிறப்புத் தவறாதுமின்னாளில்
அப்படியே மோசன் அவன் பிறந்த நீசனதால்
எப்படியும் ரண்டிலென்றால் ஆகுவது திட்டமுண்டே
ஆனதாலங்களுட அக்கமதிலிப்போது
மானமாய்ச் சான்றோராய் வருகுவென்றார் ஈசுரரே
கொஞ்சம் பொறுவுமென்று கூறிவந்தே தன்னூனமே
இஞ்சொல் பார்க்கும்போது இவ்வுலகிலுள்ளோரை
பிறவிசெய்ய ஞாயமுண்டு பின்னைமொழி சொன்னதினால்
திறவிமுதற்பொருளே செய்தியென்ன சொல்லுமென்றார்
அப்போதீசுரனார் அச்சுதனைத்தான் பார்த்து
இப்போது மைத்துனரே யாமென்ன சொல்வதுதான்
நீர் நினைத்ததுபோலே நிச்சயித்துக்கொள்ளுமென்றார்
பாரனைத்துங் காக்கும் பரமேசுரருரைத்தார்

மறுப் பிறப்பு

அப்போது பாரளந்த அய்யாநாராயணரும்
முப்பொருளுமொன்றாய் எத்திருந்தேது சொல்வார்
தேவரையுந்தான் வருத்திச் செப்புவாரையாவும்
பாவல்ரே நீரும் பார்த்துணர்ந்தோராமல்
மாலிங்கேயில்லையென்று மாறுட்டஞ்சொன்னதற்கு
சூலின் கருத்திரண்டு தொல்புவியிலே பிறக்கும்
உங்களினமாக ஒருபிள்ளை பெற்றதுண்டும்
அங்கேபோய்ச் சான்றோராய் அதில்பிறக்கப்போவுமென்று
சொல்லவே தேவரெல்லாஞ். சிரித்து மனங்கூடி
நல்லதுகாண் நாராயணரே நாங்கள் பிழைத்தோமெனவே
பிறக்கவே போவோம் பிறந்தாலடியார்க்கு
இறக்கவிதியாகுமல்லோ இழிகலியனேதுவினால்
இறந்தால் பின்னந்த இனத்திலடியார் பிறக்க
வரந்தாருமென்று வணங்கிநின்றாரையாவை
அப்போது ஐயா அரிநேமா நாரணரும்
செப்பரிய நல்குலத் தேவர்களே துணைப்பார்
மக்களே நீங்கள் வையத்திலே பிறந்தால்

வக்கலியனேதுவினால் மாயமுங்களைச்சூழ்ந்து
என்பேரும்ஈசர் மேற்றஉடைமையாள்பேரும்
தன்பேருஞ்சொல்லாதே யென்றுதடுத்தடிப்பான்
ஆனாலுஞ்சாவுவரும் ஆனாலுமுங்களுக்கு
மானமதுமாறாமல் மாறியவ்வினத்திலுறும்
இப்படியேநானுங்களை இரட்சித்துக்காக்குமட்டும்
எப்படியுமுங்களுயிர் இதில்விட்டகலாதென்றார்
நல்லதுகாணென்று நாட்டமுற்றுத்தேவரெல்லாம்
வல்லவகையான வாய்த்தசான்றோரினத்தில்
தேவருயிர்பார்த்து சென்றுதித்தார்தேவரெல்லாம்
மூவருரைமாறாமல் மூர்க்கமுள்ளதேவரெல்லாம்
போகும்பொழுதில் பொன்னுலகத்தேவர்தனில்
தாவும்பெரியவொரு சம்பூரணத்தேவன்
பரதேவதையான பார்மறலிதன்னுகத்தில்
உரமானதேவியவள் உடையமன்னனைநோக்கி
தெய்வச்சம்பூரணனுஞ் சேர்ந்தவளோடேநடப்பாய்
மாயவனைமாய்கையினால் மாறியவன்பேசினானே
நான்பிறக்கப்போணாமென்றால் நண்ணுதலையென்னோடு
தான்பிறக்கச்சொல்லித் தாம்போலாக்குவீரால்
நான்பிறக்கப்போவேன் நாரணரேயல்லாது
தான்பிறக்கப்போவதற்குச் சங்கடங்களுண்டுமையா
என்றுரைக்கத்தேவர் எடுத்துரைப்பாரெம்பெருமான்
நன்றுநன்றுதேவாநீ நாணமென்னபேசுகிறாய்
உன்பிறப்புயர்பிறப்பு பேர்வியத்தின்தன்பிறப்பு
பின்பிறப்யேமன் பூமிப்பிறப்பலவோ
அப்பிறவிக்கிப்பிறவி அடுக்குமோமாதேவாநீ
இப்பிறவிஞாயம் ஏனுரைத்தாய்மாதேவா
ஆனையோடுபூனை அணைந்துநலஞ்செய்திடுமோ
பூனையோடானை புல்குமோமாதேவா

வெண்பா

ஆனைமதமாய் அடர்ந்துமிகத்தேவா
பூனையோடுவந்துபுல்குமோ—பூனை
நாயோடுபுல்குமோ நல்லறிவில்லாததேவா
ஈயோடேசேர்மோஇசல்

நடை

ஏனடாதேவாநீ இந்தமுறைசொன்னதென்ன
வீணடாவிவ்வாசை விட்டுவிடுநீதேவா
கீரிக்குப்பாம்பு கிளைவருமோவையகத்தில்
நரிக்குச்சிங்கம் ஒக்குமோமாதேவா
இப்படியேமாயன் எடுத்துரைக்கத்தேவாதி
எப்படியும்புத்தி இசையாமலேதுரைப்பான
காவலரேமாமோகங் கண்டவிடமன்றலவோ
ஆவலதுகொண்டயிடம் அச்சுலரேசம்மதங்காண்

எந்தவிதமாகிடினும் எனக்கந்தப்பெண்கொடியை
தொந்தமாயெந்தனக்குத் தொலையாதயாசைசெய்தும்
தந்தருளிவைத்தால் தர்மமுண்டுங்களுக்கு
எந்தன்பிரானே இனிமாத்திச்சொல்லவேண்டாம்
என்றுரைக்கத்தேவன் எடுத்துரைப்பாரெம்பெருமாள்
ஒன்றுநீகேட்டிலையே உன்மனதொத்திலையே
கீழுள்ளபெண்ணை மேலாக்கவேணுமென்றால்
வேளமொத்ததேவா மிகுத்ததவஞ்செய்திடுநீ
மேலாகவேணுமென்று மெல்லியரும்நல்த்தவசு
காலால்க்கனலெழுப்பிக் கடுந்தவசுசெய்திடச்சொல்
தவசியிருபேரும் தாப்பிரியமாகநின்று
சிவசுவாசம்பெருக்கி சிறந்ததவஞ்செய்திடச்சொல்
நின்றதவத்தில் நிலையாய்நினைத்ததெல்லாம்
அன்றுங்களுக்கு அருளுவேனுமொன்று
சொல்லிடவேதேவன் சிரித்துமனமகிழ்ந்து
நல்லதுதானென்று நாட்டமுற்றுத்தேவனுந்தான்
பரதேவதையான பைங்கிளியைத்தான்கூட்டி
விரைவாகத்தேவன் விருமாபதஞ்செபித்து
நின்றான்தவசு நெடியோனுறுதியென்று
நன்றானநன்னுதலும நல்லசம்பூரணனு

தபோதனர் மனுப்பிறப்பு

நினைத்துத்தவசு நிற்கநிலைதேடிநின்றார்
ஆனைத்துயிருங்காக்கும் ஐயாநாராயணரும்
ஏமனுலகமதில் இருக்குந்தபோதனரே
தாமனந்தபேர்கள் சருவதுமேயழைத்து
வாருங்கள்பிள்ளார வாய்த்ததபோதனரே
ஏதுங்கள்ஞாயம் என்னோடேசொல்லுமென்றார்
உங்கள்குடும்பம் உடையோன்பதம்வணங்கி
எங்களுடமோச்சமதில் ஏகியிருப்பதினால்
ஆனதாலவர்கள் அனுக்கிரகந்தன்னாலே
மானமுடனேமனுட வையகத்தில்வாழ்ந்திருந்தீர்
இன்னமுன்வழிகள் என்மகவாயங்கிருந்து
வண்ணமுடனவ்வழிதான் வாய்த்தசாணாரினத்தில்
போய்ப்பிறந்துநன்றாய்ப் புவிமீதிலேவளர்ந்து
மேல்ப்பிறவிவந்திடினும் மேவுமதவவழியில்
இப்படியேபிறந்து என்றுமிடறுசெய்து
எப்படியுமென்குடும்பத் தாலேயிருளகன்று
உன்பிறப்போர்தன்னால் உதவிபெற்றுவாழுமென்று
எனபெருமாள்சொல்லி இனத்தில்பிறவிசெய்தார்.

சொர்க்கலோகத்தார் மனுப்பிறப்பு

சொர்க்கலோகத்தாரை சுறுக்காய்வரவழைத்து
மிக்கவுங்கள்செய்தியென்ன விடுத்துரையும்மேவலரே
நான்பிறவிக்கெல்லாம் நம்பிக்கூடப்பிறந்து

என்பிறகேவந்து எனக்கேவல்செய்ததினால்
இன்னம்பிறவி இனத்திலுயிரென்மகவாய்
வன்னமுள்ளசான்றோர் வழியிலிருப்பதினால்
காலக்கலிதான் கட்டளித்தென்மகவு
மேலுகமர்ள விடைநித்திச்சிருப்பதினால்
நீங்களும்போயங்கே நிங்களுடதன்வழியில்
மங்களமாய்த்தோன்றி வாழுங்கோவென்மகவாய்
வாழுகின்றநாளையிலே வருவேனுனுங்களிடம்
நாளும்பலவூழியங்கள் நமக்குமிகச்செய்திருங்கோ
ஏவல்கண்டுங்களை நான் இரட்சித்து ஆண்டுகொள்வோம்
போவெனவேசொல்லிப் புகன்றாரவர்களுக்கு
பிரமலோகத்திலுள்ள பிலத்தயிருள்சிகளை
வரவழைத்தையா நாராயணர்வகிர்வார்
வாருங்கோபிள்ளா வாய்த்தரிசிமாரே
ஏதுங்கள்ஞாயம் என்னோடுரையுமென்றார்

ரிசி மனுப்பிறப்பு

அப்போதுநல்ல அந்தரிசியேதுரைப்பார்
இப்போதையாவே யெங்களைப்பூலோகமதில்
படைக்கவேணுமெனவே பகர்ந்தமொழிமாறாமல்
நடக்கக்கருமமது நாரணரேபொய்யாது
முன்னமேயெங்கள் முறைவழியிலொருயிரை
வன்னமுள்ளசாணாராய் வகுத்தீரேயும்மகவாய்
அல்லாமலெங்கள்வழி ஆனரிசிதங்களிலே
பொல்லாதகுற்றம் பிரமனுக்குச்செய்ததினால்
அன்பத்திலொனறிர்சி அவனிதனில்போகவென்று
இன்புற்றநாரணரே ஈந்தீரவர்கேட்டவரம்
ஆனதாலவர்கள் அவனிதனிலேதிரிய
ஏனையாளெங்களைநீர் இப்போபிறவிசெய்தால்
இனம்பிரிந்துநாங்கள் இருபபோமேபூமிதனில்
கனம்பொருந்தும்நாரணரே கட்டுரைக்கவேணுமென்றார்
நல்லதுதானென்று நாராயணருரைப்பார்
வல்லரிசிமாரே வகையாகக்கேட்டீரோ
அதற்குவிபரம் அருளுவேன்கேளுமென்று
மதுக்குகந்தமன்னன் வழுத்துவாரன்போரே
சென்றரிசியெல்லாம் செடமெடுத்துப்பூமிதனில்
மண்டலங்கள்தோறும் வாழுவார்கண்டீரே
என்னவிதமாய் இருப்பாரென்றேயிலமாய்
துன்னயமாய்நீங்கள் துணிந்துநன்றாய்க்கேட்டிடுங்கோ
மான்தோலிலேயிருப்பான் வானமதைத்தான்பார்த்து
தீன்சோறருந்தாமல் செலங்குடித்துநாடோறும்
கர்பமுண்டோமென்று கலியில்மிகப்படுளன்று
அர்பமுடன்கொஞ்சி அவன்சிலநாள்தானிருந்து
பிரமவைகுண்டம் பிறப்பெடுத்துநான்றனும்

வரம்வைத்தவனை வதைத்துப்பின் னுன்னினத்தில்
படைத்துத்தருவேன் பார்த்துக்கோலெக்கெனவே
இந்தப்படியே இருள்சியன்பத்தைந்துவரும்
ஆளுக்கொருவிதமாய் அருந்துவதுமிருப்பும்
நாளுமுறையால் நடத்துவதும்நீகேளு
ஒக்கவிபரமதாய் உரைக்கநேரம்பெருகும்
மிக்கத்திரட்டாய் விடுகிறேனீகேளு
நல்லமிளகுதின்று நவகண்டிதான்பூண்டு
கொல்லமிளகுதின்று குப்பைமேலேபுனைந்து
வெள்ளித்தடுக்கில் வீத்திருப்பாரேசிலர்கள்
ஆனைத்தோலிட்டு வருந்தாமல்நாடோறும்
கானகத்தில்வாழ்ந்து கண்மூடாரேசிலர்கள்
மரத்தைமிகக்காலிலிட்டு வார்சிலிந்திக்கோர்வையிட்டு
சரத்தையுள்ளேகொண்டு தானிருப்பாரேசிலர்
மீட்டைக்கொடியும் மிளகுவெற்றிலைக்கொடியும்
இட்டமுடன்நிஷ்டை இருப்பார்சிலபேர்கள்
உப்பில்லாதன்னம் ஒருபோது தான்குடித்து
அப்பிலிட்டுத்தின்று அக்கினியிலேகாய்ந்து
இருப்பார்சிலபேர் இன்னமுநன்றாய்க்கேளு
பொருப்பிலிருப்பார் பூமியில்வாரோமென்பார்
கள்ளிப்பாலுண்டு கவிழ்ந்திருப்பாரேசிலர்
கொள்ளித்தளலுங் கொள்ளைகொண்டகஞ்சாவும்
உண்டோங்காண்லோகமதை உழுங்குவோமென்பார்சிலர்
புல்லையருந்திப் புலித்தோலின்மேலிருந்து
தில்லைப்பாலுண்டு திரிகுவோமென்பார்சிலர்
புகையிலைச்சாறு புகட்டுவோமென்பார்சிலர்
தகையில்லாக்கற்பந் தானுண்டோமென்பர்சிலர்
பூவில்ப்படுப்போம் புகட்டுவோமாவின்பால்
காவிலுறைந்து கலைதரியாதிருப்பார்
உடையுடாதேகமுற்றில் உத்திராட்சமேபுனைந்து
நடையொற்றைக்காலால் நடப்பார்சிலபேர்கள்
இப்படியேநன்றாய் இவரிவர்க்கோர்விதமாய்
அப்படியேதேசம் அன்பத்தாறதிலுந்திரிவார்
சோழக்குருநாடு தேசமதுநன்றோடு
ஆளவைகுண்டர் அவர்வளரும்நன்றோடு
இன்றெட்டில்வாழும் இராசருடவளமை
சொன்னால்துலையாது சொல்லவெளிதலவே
இபபுவியில்வாழும் எந்தன்மைக்குண்டரிடம்
எப்புவியில்வாழும இருள்சிசன்றுசியெல்லாம்
வரம்கைக்கச்செயால்லி வதைக்கவந்தவைகுண்டர்காண்
பரம்பெரியவைகுண்டப் பதியாளவந்தவர்காண்
சன்றுசியெல்லாம் தலைவிதம்வாழுகின்ற
மின்றுண்சீமை விரிக்கக்கேள்நீங்களெல்லாம்
பாண்டியனுள் பரிகொங்கைநன்றுட்டில்

ஆண்டிருப்பான்சன்னாசி அவனொருவன்கேட்டிருநீ
வருசமொருநேரம் மாற்றிப்பிறந்தேனென்று
புருசனெனைவந்தெடுத்தால் புள்ளையுண்டென்றுசொல்லி
இருப்பான்சிலநாள் இவனொருசன்னாசி
சிங்களநன்னாட்டில் சிகண்டன்ராச்சியத்தில்
புங்கம்பாலுண்டு பூவையரைப்பாரோமென்று
ஆடையுடுக்காமல் அவனிருப்பானொருவன்
கோரக்கநாடு குருக்கேத்திரன்ராச்சியத்தில்
சூரக்கோல்கைப்பிடித்துச் சூலாயுதமேந்தி
தன்மதத்தால்பேசித் தானிருப்பானேசிலநாள்
கன்மத்தாற்சாவான் கடியமூன்றான்பேர்தான்
இப்படியன்பத் தாறாரிலைவகளுக்கும்
அப்படித்தானிருக்கும் ஆனசன்னாசிகள்க்கு
ஒண்ணொண்ணடையாளம் உரைக்கிறேன்சீக்கிரமாய்
துண்ணெனவேநீங்கள் துணிந்துமிகக்கேளுமென்று
நாலாஞ்சன்னாசி நயனமிமையாதிருப்பான்
காலைக்கைக்கொண்டுக் கட்டிறுக்கியேயிருப்பான்
அஞ்சாஞ்சன்னாசி அன்னங்குடியாமல்
பிஞ்சிருமிச்சியிலை பிசைந்துதின்றேயிருப்பான்
ஆறுஞ்சன்னாசி ஆனகஞ்சாக்குடித்து
நீருக்கித்தேகமதை நெட்டைபோல்த்தானிருப்பான்
ஏழாஞ்சந்நாசி இடுப்பிலேலார்சீலைகட்டி
பாழாகப்பச்சி பறவைதின்றேயிருப்பான
எட்டாஞ்சந்நாசி இருந்துமிகக்கண்மூடி
கட்டாய்ச்சுவாசமதைக் கவர்ந்துகவர்ந்தேயிருப்பான்
ஒன்பதாஞ்சந்நாசி உமிழ்நீரிறக்காமல்
இன்பவிறுவிறுத்து நீரவம்போல்க்கண்வெளுத்து
தூங்கினாற்போலே சூழச்சூழவிளித்து
பாங்குக்கள்தேடிப் பரிவாகநாள்தோறும்
பத்தாஞ்சந்நாசிப் பரிவாகநாடோறும்
சித்தாமணக்கிலையில்த் துயிலுவான்கண்டீரே
பதினோராஞ்சந்நாசி பவளமணிக்கோர்வையிட்டு
துதியாயொருவர்மூலஞ் சொல்லித்தினஞ்சேவித்து
கையிறைகொண்டேதான் கட்டிக்கொண்டேயிருப்பான்
உரியஉழுந்து ஓயாமல்க்கஞ்சாவும்
சதமென்றுநம்பித் தானிருப்பானொருவன்
பந்திரண்டாஞ்சந்நாசி பாரக்கல்லுக்கோர்வையிட்டு
உந்திக்கிலுப்பையிலை உழக்குச்சாறெடுத்து
இருப்பாண்பதிமூன்றான் இவனினத்தைக்கேளு
பருப்பானவலும் பழமுமிகவருந்தி
கோவையிலையுங் கொடுப்பையிலையும்பறித்து
சேர்வைபண்ணிநித்தம் செய்திருப்பானறிவீர்
பதினாலாஞ்சந்நாசி பண்ணுமுறைகேளு
துதியாயொருமூலஞ் சொல்லித்தினஞ்சேவித்து

கையிறைதேற்றிக் கட்டிக்கொண்டேயிருப்பான்
பதினைந்தாஞ்சன்னாசி பார்க்கெந்தமாலையிட்டு
மதியகத்தேயுண்டு மலர்ந்துதுயின்றேகிடப்பான்
ஆடையுடுக்க அறிவுசற்றுமில்லாமல்
கோடைசூடித்துக் குலைவான்பதினாறான்
கள்ளிதனைத்தின்று காய்களிலையருந்தி
கொள்ளித்தளல்காய்வான் கொடியபதினேழான்
நல்லத்திக்காயருந்தி நாமமணியும்பூண்டு
கொல்லத்திபோலேக் குலைந்துகுலைந்தே திரிவான்
இவன்பதினெட்டான் என்றேயினமறிநீ
எவனுமறிவான் ஈரெட்டுமூன்றானையும்
மான்றோலின்மீதிருப்பான் மற்றிருப்பான்மீசையுளான்
தான்தெரியுமற்றிருபத் தொன்றானினங்கேளு
நாகத்தின்முள்ளை நல்லதலைமேலணிந்து
கூகத்தைதச்சுற்றிக் கும்பிட்டுத்தான்திரிவான்
இருபத்திரண்டான் இனங்கேளுநன்றான
மதுவைத்துநித்தம் வணங்குவான்மந்திரத்தை
இருபத்திமூன்றான் இருப்பான்மயிர்வளர்த்து
சருவைத்துப்பால்பழத்தில் தங்கிரத்தையோதிடுவான்
இருபத்திநாலான் எங்குமிகத்திரிந்து
உருவேத்திநித்தம் உடல்வாடலாயிருப்பான்
இருபதஞ்சான்றான் எருக்கலம்பாலருந்தி
பருவமாயோவியஞ்செய்து அதிலேபடுத்திருப்பான்
கள்ளுக்குடித்துக் கறியுப்புக்கூட்டாமல்
புள்ளித்தோலிலிருப்பான் பகலிருபத்தாறானும்
நீரைத்தியானமிட்டுத் நித்திரைக்குத்தானோதி
பாதைவழியேகான் பத்துரண்டேழானும்
கோணமுடிமுடித்துக் குறுந்தடியுங்கைப்பிடித்து
நாணமில்லாதே திரிவான் நல்லிருபத்தெட்டானும்
சூலம்பிடித்துச் சுழியெழுத்தைமேலூன்றி
கோலமிட்டே திரிவான் கூறிருபத்தொன்போனும்
முப்பதாஞ்சன்னாசி முச்சந்திதான்பார்த்து
அப்புச்சிராங்குபற்றி அவன்கிடப்பான்சந்தியிலே
ஓர்முப்பத்தொன்றான் ஊமையெனவேதிரிந்து
கூர்மையுள்ளகாது கொஞ்சமுங்கேளாதிரிவான்
முப்பத்திரண்டாம் உயர்ந்ததிடில்தான்பார்த்து
சர்பத்திளஞ்சு தானுண்டோமென்றிருப்பான்
நன்றாயறிந்திடுநீ நல்முப்பான்மூன்றானையும்
கண்டாலறிந்திடலாங் கண்ணில்வெளுப்புமுண்டு
தொண்டையில்சடம்புகெட்டித் தொல்புவியிலேதிரிவான்
மண்டைவருப்புண்டு வாய்த்தமுப்பத்திநாலான்
முப்பத்தைந்தானும் முயலகன்போலுண்டாக்கி
யேய்ப்பிழைப்பார்போலே இவன்திரிவான்கண்டாயே
சோபமுள்ளமுப்பத் தொரான்செய்தியைக்கேள்

புஷ்பமீதில்படுத்து பூவையர்கள் தாலாட்ட
அர்ப்பமுடனுடை அணியாமல் தானிருப்பான்
அகத்தியிலையருந்தி ஆனைத்தோல்மீதிருந்து
மகத்துவமாய்ப்பேசி மாழ்வான் முப்பத்தேழான்
கொல்லமிளகு குறுணியொருநாளருந்தி
பல்லைமினுக்கா திருப்பான் பார்முப்பத்தெட்டானும்
சோறுகுழையவைத்து துப்பதலிப்பூவிலிட்டு
ஆறுமுன்பூனோடு அருந்துவான் முப்பத்தொன்போனும்
நாக்கிலேலாராணித்னை நல்லவித்தையாய்க்கொருத்து
மூக்கிலேகெட்டி முனங்குவானாற்பதானும்
சிறுபயற்றைமாவாக்கித் தேங்காயதனிலிட்டு
முருங்கக்காயதேயருந்தி முழுகுவான் நாற்பத்தொன்றான்
அறக்கீரைவித்தை அருந்தித்தினந்தோறும்
சுரைக்கூடிட்டேதிரிவான் சுத்தநாற்பத்திரண்டான்
நாற்பத்திமூன்றான் நத்தசூரிவிதையை
தார்பத்தியமெனவே தானிருப்பான் கண்டாயே
விராலியிலையும் விழுங்காய்வெறுந்தோடும்
நிராதானமாய்வைத்து நித்தமருந்துவன் காண்
நாற்பத்திநாலான் என்றேயிவனையறி
நாற்பத்தஞ்சானுடைய நல்விபரம்நீகேளு
பூப்பறித்துத்தின்று பூனைமொழிபேசிடுவான்
பேய்க்கோமட்டிக்காயை பிசைந்துவிரைதானெடுத்து
நாய்க்குணம்போல்தின்பான் நாற்பத்தியாறானும்
எருமையிடமோரும் எள்ளெண்ணெயயுங்குடித்து
கருநரெனப்பேசிடுவான் நாற்பத்துயேழானு
மருளானபெண்ணை மனதில்வையோமெனவே
இருளானபோது இந்தநினைவாயிருப்பான்
காமத்தைத்தன்னால் கழியவிட்டேவாடி
நாமத்தைப்பேசான் நாற்பத்துஎட்டானும்
புகையிலையைத்தீயில்வைத்துப் புகையுமிகக்குடித்து
நகம்வளர்த்தேயிருப்பான் நாற்பத்துவொன்போனும்
அன்பதாஞ்சன்னுசி அரசியிலைமேலிருப்பான்
மண்புரளத்தான்கிடந்து மார்சலங்குடித்திருப்பான்
அன்பத்தொன்றானும் அலைவாய்க்கரைதோறும்
புண்ணியதீர்த்தமெனப் போயாடியேதிரிவான்
நீலமவரி நித்தமச்சாறேகுடித்து
ஆலம்பலகையிலே அன்பத்திரண்டானிருப்பான்
சுக்குப்பொடியைத் தினந்தினமேயருந்தி
அக்குமறுகுடையான் அணிவானன்பத்திமூன்றானும்
அன்பத்தினாலான் அசுரக்காவடிவைத்து
கெம்பித்திரிவான் கீரித்தோல்காலிலிட்டு
விழியிட்டேயாடி வெறிகொண்டேதான்திரிவான்
வழிவிட்டுவிலகி வழிநடப்பான்பத்தஞ்சான்
இப்படியேயன்பத் தஞ்சியிருள்சிகளும்

அப்படியே அவரவர்கள் அற்புதங்கள் வேறுசெய்து
இருப்பாரவர்கள் இராச்சியத்துக்கொன்றாக
பருப்பாரவர்கள் பழுதுகைவரய்த்ததென்று
இருக்குமந்தநாளையிலே யான்வருவேன்தெட்சணத்தில்
ஒதுக்கிச்சன்னாசிகளை ஒன்றொன்றாய்க்கொண்டுவந்து
வைக்கச்செய்வேன்வர்த்தை மனுவறியச்சிலரை
செயிப்பேன்பலபேரைச் செகமேகமுமறிய
வதைத்துவொன்வொன்றாய் மனுவில்வரத்தாக்கி
நிதைத்துங்கள்தன்னோடு நிலைகெறுத்தியேதருவோம்
ஆண்டால்நீங்கள் அவனியிலென்மகவாய்
இனமாயுங்கள் இனத்தில் பிறந்திருங்கோ
வாழுங்கோகலியன் மாய்கையால்சாவுவந்தால்
பாழுபோகாதேயுயிர் பதியுமுங்கள்தன்வழியில்
நான்வந்துங்களையும் நாட்டமுடனெடுத்து
மாணொத்ததர்மம் வையகத்தில்வாழவைப்பேன்
என்றுபிரம இராச்சியத்தோர்களையும்
அன்றுபிறவி அமைத்து அனுப்பினர்காண்
அந்தப்பிறவி அவர்செய்தனுப்பிவைத்து
சொந்தப்பிறவி சிவவைகுண்டத்தோரை
வாருங்கோவென்று வரவழைத்தெப்பெருமாள்
ஏதுங்கள்ஞாயம் இயம்புமென்றார்தர்மிகளை
அப்போது தர்மிகள் அரியோனடிவணங்கி
எப்போதுமெங்களைநீர் ரட்சித்துக்கொண்டவரே
ஆண்டவைகுண்டம் ஆண்டிருந்தோமித்தனைநாள்
தாண்டவரேயினியுன் தயவினருளாலே
என்னபடிநிச்சயித்து இருக்குதோ அவ்வழியாய்
வன்னத்திருமாலே வகுத்தாலதுமனதாம்
என்றுதர்மியெல்லாம் இசைய ஆதிநாரணரும்
நன்றுபிள்ளாயுங்கள் நல்வளமைசொல்லுகிறோம்
இல்லாதெழியோர்க்கு எனைநினைந்துதர்யமிட்டு
பல்லுயிர்க்குன்னுயிராய்ப் பார்த்தொருப்போலே
நீதநிலையை நிறுத்தியெனைநினைந்து
சீதமாய்பூமி செலுத்தியரசாண்டிருந்து
வந்தீர்கள்கூட்டோடு வைகுண்டமானதிலே
சேர்ந்தீர்களாகிடினுஞ் செய்தநன்றிதான்பார்த்து
உங்களுக்கின்னாள்வரையும உதவிதாவில்லையல்லோ
தங்களுக்குநன்மை தாவேணுமானக்கால்
இன்னமொருபிறவி என்மகவிலேபிறவும்
வன்னாப்பிறவியென மகவ்ழியில்த்தான்பிறந்தால்
ஏழுயுக்கணக்கும் யான்கேட்டுவுங்களுக்கு
மாழுவதில்லாமல் மறுபிறப்புமறுத்து.
நம்முடையசொத்தும் நாடியுங்களுக்கீந்து
மும்மடங்காய்த்தர்மம் ஓங்கிவளர்ந்தேயிருப்பீர்
என்றுதர்மிதங்களுக்கு எம்பெருமாளீதுரைக்க

அன்றுயர்ந்த தர்மிகள் யாபேருமே துரைப்பார்
ஆயரே யெங்களுட ஆதிநாராயணரே
மாயரே யெங்களைநீர் மறந்தெங்கே போனீர்காண்
காணாமலும்மையெங்கள் கண்கள்மிகத் தவித்து
வாணாளயர்ந்து மறுகிநொந்து வாடினோமே
என்று தர்மபாண்டவர்கள் இப்படியே சொல்லிடவே
நன்றுநன்றென்று நாராயணர் மகிழ்ந்து
முன்னமே நீங்கள் யுகத்துக்குகங்கூட
என்னைவிட்டகலாது இருந்தீர்களென்னுயிர்போல்
ஆனதாலிப்பிறவி ஐயாநாராயணராய்
மானமாய்த் தர்மம் வளர்ந்தோங்கவென்ணுளும்
நிச்சயித்தொவ்வொன்றாய் நிலைநிறுத்தி தற்சொரூப
மெச்சித்து நானினித்தான் மேல்ப்பிறக்கப்போவதினால்
என்மகவாயங்கே யேழிலொருவனுமாய்
கண்மணிபோல்நீங்கள் கலியுகத்தில்ப்போய்ப்பிறங்கோ
என்றே தான் தர்மிகளுக்கு எம்பெருமாளீதுரைக்க
அன்றே தான் தர்மி எல்லோருமே துரைபபார்
தானதவஞ்செய்தல்லவோ தர்மிகள் தானாகி
மானவைகுண்ட வாசலிலேவந்திருந்தோம்
மாணுவங்களில்லா மாழுங்கலியுகத்தில்
போய்நீசவய்யகத்தில் பிறக்கப்போமென்றீரே
நாங்கள்முனைசெய்த ஞாயநடுபபோயிடுமோ
ஏங்கக்கலியனுட இருளிலலையாவே
ஆனதால்நீரும் அனறுநடுக்கேள்க்கையிலே
மானமில்லையானால் வளக்கென்னசொல்லிடுவோம்
எனறுரைக்கத்தர்மி யேதுரைப்பாரெம்பெருமாள்
நனறுநன்றுபிள்ளைகளே நானதுக்குச்சொல்வதுகேள்
என்மக்களேழும் இயல்கலியில்ப்பட்டுழன்று
வன்மக்கலியதனால் மாறிமிகச்செய்ததெல்லாம்
நான்பொறுத்துங்களுக்காய் நானே தவசுபண்ணி
வானசிவனுக்கேற்க வாய்த்ததவமிருந்து
மக்களேழுபேர்கள் வம்மிசங்களுள்ளதெல்லாம்
ஒக்கவொன்றுபோலே உகந்தெடுத்துண்மையுடன்
நாடாளவைப்பேன் நல்லமக்களேள்பேரை
தாடாண்மையாண் சத்தியுமைதனைனே
நீங்களென்னைகுற்றம் நிலையில்லாச்செய்தாலும்
தாங்கிப்பொறுப்பேன் தருவேனென்னறிவு
உங்கள்கர்மமெல்லாம் ஒக்கத்துலைப்பதற்கு
மங்களமாய்ச்சிவனை வருந்தித்தவசுபண்ணி
நானுங்களாலே நல்லதவசிருந்து
பேயும் லீசம் பிறப்பைச்சேதித்தறுத்து
நாடாளவைப்பேன் நம்மாணைதப்பாது
என்றுரைக்கவய்யா எல்லோருஞ்சம்மதித்து
அன்றுபிறவி அமையுமெனாறாப்படியே

நன்மையுள்ள தர்மியெல்லாம் நல்லசான்றோர்குலத்தில்
மேன்மையோரெல்லாமே மேதினியிலேபிறந்தார்
அந்தயுகப்பிறப்பு ஆனபின்யென்பெருமாள்
நந்தசிவனுகத்தோர் நாடும்வானோர்களையும்
வாருங்கோபிள்ளாய் வானோரேயென்றுமசொல்லி
ஏதுங்கள்ஞாயமே இயம்புமென்றாரெம்பெருமாள்
அப்போதுவானோர் எல்லாருமேமகிழ்ந்து
செப்புகிறாந்த சிவனாதிதன்னோடு
மாயவரேதூயவரே மற்றொப்பில்லாதவரே
ஆயரேயுமமுடைய அறிவின்படியாலே
அமையுமமைத்தால் அதுமைதாமெங்களுக்கு
சமையம்வழுவாத சாதித்திருமாலே
என்றேதானவானோர் ஈதுரைக்கவையாவும்
நன்றெனவேமனது நன்றாயகமகிழ்ந்து
காலக்கலிதான் கலிமூழ்கிவையகமும்
மேல்யுகவரையும் மூழ்கியதுகண்டீரே
ஆனதாலீரேழு அவனியிருள்மூடி
மானமழிந்து வரம்பழிந்துமானிடரும்
ஆதிமூலச்சாதி அடங்கல்வரைத்தேவரெல்லாம்
நீதிநிலைமாறி நின்றதுவுங்கண்டீரே
ஆனதாலிந்த அன்னீசவிருள்தனையும்
யேனமென்னபார்த்தே இதையறுக்கவேணுமென்று
பார்க்கும்போதிந்தப் படுநீசக்கலியை
ஆர்க்குஞ்செயிக்க அடங்காதுகண்டீரே
ஆனதால்நாமள் எல்லோருமின்னமொரு
மானமாய்ப்பிறந்தால் மாழுங்கலியல்லாது
கலிக்குளகப்பட்டசடங் கலியழிக்கக்கூடாது
பெலிக்குக்கலியையிடப் பிறந்தாலல்லாலேலாது
ஆனதால்நாங்கள் அம்புவில்வருவோம்
வானவரேயுங்களுட வளப்பமென்னசொல்லுமென்றார்
அப்போதுவானோர் எல்லோருமேபயந்து
செப்புவதேதோ திருமாலேநாங்களினி
சிவன்முதலேதிருமால் திருவுக்கிதுவானால்
எவனையாபூமியிலே இனிப்பிறக்கோமென்பதுதான்
ஆனதாற்பின்னும் அடியார்க்கொருவிதனம்
ஈனமேகண்டு இரங்குதையாயெங்கள்மனம்
அவவிதத்தைச்சொல்வோம் அடியாருக்கின்னபடி
எவ்விதத்திலேயும் இசைந்தனுப்புமெங்கோவே
என்றுவானோர்பணிந்து இயம்புவாரன்போரே
சிவனுக்கடிமை செய்திந்தப்பூமியிலே
எவனுக்கும்பதறாது இருந்தோமேயிவ்வுலகில்
மாய்கையில்லையெங்களுக்கு மக்கள்பெண்டீர்தானுமில்லை
சாய்கைத்துயிலுமில்லை தகையுமில்லையெங்களுக்கு
இளப்பில்லைதாகமில்லை பசிதாகமில்லை

வழைப்பில்லைதேக மறுவில்லைநோவுமில்லை
அலந்தாசையில்லை ஆணில்லைப்பெண்ணுமில்லை
கலந்தாசையில்லைக் காமக்களிவுமில்லை
இத்தனையுமில்லாது ஈசனருள்செயலால்
நித்தியமென்பூவால் நிமலன்பதம்போற்றி
இன்பதுன்பமற்று இருவினைகள் தானுமற்று
வன்பத்துச்சம்பத்து வாக்குடனேபோக்குமத்து
மலசலமத்து பயமுஞ்சயமுமத்து
பிலன்பொறியத்துப் பேரத்துஊருமத்து
இத்தனையுமத்து இருந்தசிவத்தொண்டரிடம்
புத்திகெட்டமாகலியில்ப் போய்ப்பிறக்கச்சொன்னீரே
சொன்னமொழி மாறாமல் சுவாமிவிண்ணப்பமென்றார்
என்னவிதமாகிடினும் ரட்சிக்கவேணுமையா
என்றந்தவானோர் இறஞ்சித்தொழுதிடவே
நன்றென்றுகேட்டாதி நாராயணருரைப்பார்
நல்லதுகாண்வானவரே நானினிமேதசெய்பிறவி
இல்லறத்தைதவிட்டுதவம் இல்லைகாண்வேறுண்டு
ஆனதால்பேடென்னும் அருளியிருளியெனும்
மானமில்லாரென்னும் வாராதுமேல்ப்பிறவி
ஆணுக்கொருபெண் அன்றாழிகாலமெல்லாம்
தோணுதலாய்வொன்றாய்த் தொல்லூழிகாலம்வரை
வாழ்ந்திருப்பாரென்றும் மக்கள்கிளையோடும்
தாழ்ந்திருப்பார்பேராய்த் தழைத்தோங்கவென்றனும்
பேருதழைக்கப் பெருமையாய்வாழ்ந்திருப்பார்
ஊரொன்றுகமொன்று உரையொன்றுக்குள்ளாக்கி
இறவாமல்ப்பெண்ணோடு இருந்துமிகவாழ்வதல்லால்
பிறவியத்துவாழ்வார் பெண்ணுடனேயல்லாது
ஊர்மறந்துபேர்மறந்து உற்றகிளைமறந்து
பார்மறந்துதேசப் பவுசிமிகமறந்து
ஆடல்மிகமறந்து ஆயிளைமைத்தான்மறந்து
பாடல்மறந்து பக்கத்துணைமறந்து
அன்னமறந்து அதிகமணமறந்து
சொர்ணமறந்து சுகசோபனமறந்து
நலமறந்துதேக நளினமிகமறந்து
மலசலமறந்து வளருந்தவப்பேறுமில்லை
இத்தனைநன்மைகள் எல்லாமிகக்கொண்டாடி
சித்திரமாகத் திரும்பிப்பிறப்பதவராய்
என்பிள்ளையேழும் எடுத்தவழியோரினமாய்
அன்புள்ளபேராய் அரசாள்வோங்கண்டாயே
என்றுமகாமால் இப்படியேசொல்லிடவே
அன்றந்தவானோர் எல்லோருமேயிரங்கி
நன்மைபலதேர்டும் நன்னுதலார்தன்னோடும்
மேன்மைபலபெறவே மேற்பிறக்கச்செய்வோமென்று
சொன்னீரேஐயா சுகம்பெற்றோம்நாமளென்று

பன்னீர்க்குணம்போல் பச்சம்வந்துவாறோர்கள்
ஆதியெயெங்களையும் அதிதமைக்கவேணுமென்று
சோதியேயென்று தொழுதுநின்றார்வாறோர்கள
நல்லதுதானெனவே நாட்டமுற்றெறபெருமாள்
வல்லமக்களான வாய்த்தசானூர்குலத்தில்
ஏழுமகவின் யேற்றவாறோர்வழியில்
மாழுவந்தாலுமதிலே மாறாய்ப்பிறக்கவென்று
நாராயணர்புவியில் நல்லமக்களேழ்வரையும்
சிராகவந்தேற்றுச் செய்தவினையுமநீக்கி
ஊழூழிகாலம் உயிரழியாவண்ணமுந்தான்
ஆழிக்கரையான்மகவு அரசாள்வாரென்றுசொல்லி
சொல்லிப்பிறவி செய்தார்கள்சாணூராய்
நல்லதென்றுவாறோர் நாடியகமகிழ்ந்து
சாணூராய்வந்து தானுதித்தார்வையகத்தில்
வாணுளநிந்து வாறோர்மிகப்பிறந்தார்
அந்தயுகப்பிறப்பு ஆனபின்னெம்பெருமாள்
சொர்க்கப்பரலோகச் சுத்தமுனிவோர்களையும்
எல்லோரையுமழைத்து எம்பெருமாளேதுரைப்பார்
வல்லவரேயுங்கள் ளைப்பமென்னசொல்லுமென்றார்
நீங்களென்னைமறந்து நீனிலத்திலில்லையென்று
நாங்கள்மிகவறிய நன்றிகெட்டுச்சொன்னீரே
ஆனதாலுங்களுக்கு அதிகபிழையாச்சுதல்லோ
ஏனயென்னபார்த்து இயம்புமுனிவோரே
அப்போதுமாமுனிவர் எல்லோருந்தான்பயந்து
செப்புவதேதோ சிவனுலகோர்செய்திகண்டால்
கர்ப்பனைக்குள்ளல்லாக் கடருவமோநாங்களினி
அற்பரல்லோகற்பினைக் கல்லவென்றுசொல்வதுகாண்
என்றுமுனிசொல்லி இயம்புவார்பின்னுமுனி
எல்லாவுரையும் எடுத்துரைத்தீர்வாறோர்க்கு
நல்லாய்நிந்தோம் நாதனேயவ்வகைபோல்'
படைத்தனுப்புமும்முடைய பாலருடவழியில்
நடத்தையதிகமுள்ள நாராயணப்பொருளே
என்றுமுன்வோர் இப்படியேசொல்லிடவே
அன்றுபெருமாள் அவர்க்கேதுசொல்லிடுவார்
எல்லோருமென்மகவாய் இனத்தில்பிறந்திடுங்கோ
வல்லோரேயுங்களைநான் வந்தெடுப்போமஞ்சாதே
என்மக்களேழும் ஈன்றவழிச்சான்றோரை
பொன்மக்களான பூமக்கள்தங்களுக்கு
என்சொத்துமீந்து என்பெயரையுங்கொடுத்து
தன்சொத்தோடேயிருந்து தற்சொரூபங்கொண்டிருப்பேன்.
இறப்புப்பிறப்பும் இல்லாமலென்மகவை
பிறப்பிறப்பின்றி பேருலகாளவைப்பேன்
ஆனதால்தர்மயுக அரசுங்களுக்கருளி
மானமாய்த்தந்தேதாம் மாயாண்டிதன்றுணை

என்றாணையாதி நாராயணர்கூற
நன்றாகமாமுனிவர் நல்லதென்று சம்மதித்து
அய்யாவுமது அருளின்படியாலே
மெய்யாயுமது விந்துவழிகுலத்தில்
படையுமையாசாணாராய்ப் பரமனையென்று நின்றார்
சடையுமணிந்தமுனி தாமுரைக்கவையாவும்
நல்லதுகாண்பிள்ளாய் நாடுவதுதான்கருமம்
வல்லவரேசான்றோர் வழியிலுங்கள் தன்னினத்தில்
பிறக்கப்போவென்று பெருமுனிவரையனுப்பி
சிறக்கச்சிவனோடு செப்புவாரெம்பெருமாள்
ஆதியேநாதி ஆனந்தமைத்துனரே
சோதியேசான்றோராய்த் தொல்புவியேழிலுள்ள
சங்கமுதற்தெய்வ சத்திப்பரலோகம்வரை
அங்கவரைச்சாணாராய் அவதரித்தார்பூமியிலே
என்மக்களான இப்பூமியேழிலுள்ள
பொன்மக்களெல்லாம் பொறுமையுள்ளசாணாராய்
பிறந்தார்புவிதனிலே புகலுமையாநம்மள்செய்தி
கலிக்குளகப்பட்டோர் கடந்துகரையேறவென்றால்
வலிக்குவலுவான வகையல்லோவேணுமையா
திட்டுக்குள்ச்சென்றால்த் திரும்பக்கூடியாமல்
வீட்டுக்குள்போவாரே மேதினியோர்நாமறிய
இனிமேல்ச்செய்தி இன்னதென்றீசுரரே
கனியானமைத்துனரே கட்டுரைக்கவேணுமென்றார்
அப்போதீசர் அட்சுதரைத்தான்பார்த்து
செப்புவதுநாமறியோஞ் செய்கருமமங்கேயல்லால்
நம்மோடுசொல்ல நாரணரேஞாயமில்லை
தம்மோடுசொன்ன சத்தியத்தின்படியே
நடத்தும்நீரென்று நவின்றாரங்கீசுரரும்
இடத்திருமாலானோர் செப்புவார்பின்னாலே
இவ்வுகமுநீசன் இனக்குலமுநாமழித்து
செவ்வுகற்றநம்மனுவோர் சிறந்ததர்மத்தாரணியும்
புதுயுகமபுதுவிருச்சம் புதுமனுபுதுநினைவு
நெதிவுசற்றில்லாது நின்றிலங்கும்பதியும்
புதுவாயுபுதுவருணன் புதுமுகில்புதுமதியும்
தர்மயுகத்துக்குத் தானேற்றவஸ்த்துவெல்லாம்
நன்மையினி இட்டித்து வைத்திடவும்வேணுமல்லோ
இப்படியேஞாயம் இருப்பதுவுமல்லாது
முப்படித்தானுள்ள முறைகேளுமீசுரரே
துரியோதனனைச் செயித்துக்கலிவருமுன்
பதிரங்கமேவிப் பள்ளிகொண்டுநானிருந்தேன்
ஸ்ரீரங்கமீதில்ச் சிறந்திருக்குமப்பொழுது
நீதங்கள்கேட்டகலி நீனிலத்தில்வந்ததினால்
நீதநெறிமானுபமும் நிசமானதர்மமதும்
சாதமுள்ளவெள்ளானை தலையைந்துகொண்டதுவும்

வெள்ளன்னம் வெண்குயில்கள் வெண்புறாவெள்ளைமயில்
கள்ளமிலாவெஞ்சா ர கடி பிடி ங்குருடன
நல்லவனுமன் நாடுங்காடைடாமிருகம
வல்லவெண்ணரிகள் வளரும்கி ன ்க்கைகளும்
ஆளி யாடுசிங்கம ஆனைருஞ்சிபபுள்ளும்
வெளிசைவெண்கலைமான் வெண்புர ளுவெண்ணணிகள்
வெண்கற்றுவெண்பொற்று வெண் டாகைவெண்பறவை
பண்புற்றபச்சி டால்மிருகமூர்வ மும்
இத்தனையும்ஈசனுக் செற்றுக்கொடாதபடி
புத்தியறிவோடு வ மறைத்துவிட்டேகி
கான மேநடந்து கதறியெனைவருந்தி
மானு மாய்நின்று வருந்தித்தவம்புரிந்தார்
ஆ தாலூர்வனத் ஐந்துதலைவெணசாரை
ஈரமிலாமிருகம் ஏற்றவெள்ளையானைகற்று
வெண்ணுடை வெண்குரணி வெண் மகுடிவெண்மிருகம்
வெண் ச்சியான மேல்பபச்சியா தி லே
பொன் ச்சிவெம்பச்சி பூணுநிறத்தான பச்சி
தென்பச்சியம் பச்சி செந்தாமரையின்பச்சி
ப்பச்சியாடே இம்மிருகமூவர்ன மும்
அப்பச்சியாடே அணைவுமனுவோலமுமாய்
கூடிக்குளையுங கொடிப்பிதிருமொன்றதுபோல்
தேடரியவந்தத் தெய் தனில்த்தோற்றிவரும்
விருச்சம்படைக்க வேணுமது பரம்
புரச்சமதுபார்த்து புகலுமது ஆகயந்தான்
என்பிளளையேழும் மெய பிக்கநாமீந்த
மின்விருச்சமான மிகவிருச்சாலையாய்
வன் ாயதுபூகம் வாசமது விருச்சம்
தென் விருச்சம் செறியுமபுன்னைவிருச்சம்
ஆதிவிருச்சம அடர்ந்தபெருவிருச்சம
சாதிவிருச்சம் சுகசோபா விருச்சம்
தேகவிருச்சம் செம்பொன்னிறவிருச்சம்
ஆகமதில்லுள்ள அநேகவிருச்சமநம.
வநதுமிகத்தோன்றும வைத்திருக்குந்தெய்திதனில்
சிந் யில்வானஞ் சிறந்தவொருவெண்வர்ணம்
வானமதிலுறையும் வளர்நிலவுநேராக
ஈனமில்லாகதுதான் இலங்குமெண்ேரம்வெளியாய்
சேத்திரங்களொன்று இனமுமது விளக்காய்
சாத்திர தஞ் சமையபொன்றுய்நின்றிலங்கும்
வாயுவேபூப்போல் மலரெடுத்துவீசிநிற்கும்
ஆயுங்கலைத்தமிழும அறிவொன்றுபோல்பரவும்
நம்மனுவோர்தர்மபதி நாளும்மிகத்தழைக்கும்
நம்மனுவோர் பால தழைத்திருந்துவாழுவார்கண்
வொக்கவொருவி ம்போல் உவந்திருந்துவாழ்வார்கண்
மிக்கத்திருச்சாதி மேல்ச்சாதிசான்றோராய்

இருப்பார்வயது எண்ணலக்கில்லாதபடி
பருப்பார்பழமும் பாலுமிக வருந்தி
புண்ணியமுள்ளோராய்ப் பூமிதனையாண்டிருப்பார்
மண்ணெல்லாந்தர்ம வயல்போல்விளைந்திருக்கும்
தர்மபுவியிலுள்ள தண்ணீர்கலக்கியானம்
நன்மைவெள்ளங்காட்ட நாடுங்கருணைவெள்ளம்
இப்படியே தர்மபதி இராச்சியமானதுண்டாக்கி
செப்பெரியபொன்பதிகள் திட்டித்துவைக்கவென்றும்
றன்னமேயெந்தனக்கு உகந்ததுவாம்பதியில்
பொன்னம்பதியும் பெரியதங்கபபதியும்
உண்டுகாணப்பதியும் உவரியதுக்குள்ளிருக்கும்
கண்டுகொள்ளார்கள் கலிமாசுகொண்டவர்கள்
ஆனதாலப்பதிதான் நாடுவந்து மக்களுக்கு
தானமுடனமைக்க தர்மசாஸ்திரத்திலுற்றிருக்கு
தர்மபுவிகண்டு தானிருக்கும்மனுக்களுக்கு
வர்மமில்லைநோவுமில்லை மறலிவினைதானுமில்லை
தர்மபுவிவாழ்வாருக்குச் சத்திவிதிகணக்கு
நம்மிடத்திலல்லால் நாட்டில்கணக்குமில்லை
சாத்திரவேதஞ் சமயம்போதித்தருளி
சேத்திரவிபரிப்புரைக்கச் செல்லநம்மனுவோரும்
காலனென்னுஞ்சித்திரக்கணக்கனெனும்பேர்களுக்கு
ஏலமேதவசு இடருகநிற்கிறார்காண்
ஆனதாலவர்கள் அழிவாகிப்போகுமையா
ஊணக்கிரகம் ஒன்பதுபேர்களையும்
அழித்துவேறொன்றுக்குள் அருள்கொண்டிருக்குதுகாண்
முன்னூலின்சாத்திரம் முறையெல்லாந்தப்பவைத்து
பின்னூல்ப்பிராணமொன்று போதிப்பொருவனுமாய்
இந்தப்படியான் நிச்சயித்திருப்பதினால்
அந்தப்படியுள்ளதெல்லாம் ஆகுமந்தத்தெய்இதனில்
அதற்குமுன்னேநாம் அமைப்பதெல்லாமமைத்து
கதுக்கெனவேபார்ப்போங் கலியையழிப்பதற்கு
என்றுவிசாரித்து இருக்கின்றநாளையிலே

தெய்வக் கன்னியர் தவம் நிறைவேற்றல்

சான்றவரைப்பெற்ற தையல்தெய்வக்கன்னியர்கள்
தவத்திலவர்நின்று தலைவரையுங்கால்வரையும்
உபத்திர ஆல்விருச்சம் உடலெல்லாமேமூடி
கன்னியர்கள்ரோமங் களத்தபுவியில்வேராய்
உன்னியேயலோகமதில் ஓங்கிம்பரங்கதுவே
நின்றதவந்தான் நினைத்துநிறைவேறி
நன்றிறினியகன்னிகள் நாடுந்தவத்தருமை
பார்த்தன்தவமதிலும் பத்துரெட்டிகூடவுண்டு
ஏத்தரியசீதை இருந்ததவசதிலும்
ஒட்டிரெட்டிகூடவுண்டே ஓவியத்தார்தன் தவங்கள்

பொறுத்துமுகியாத பெரியதவத்தருமை
மறுத்துரைக்கக்கூடாமல் வளர்ந்துதவமுத்தியதே
சத்தியுமையாள்க்குஞ் சதாசிவமானதுக்கும்
முத்திக்கும்மால்க்கும் முகுத்தன்பிரமனுக்கும்
மனதில்மிகவறிந்து மாதுசத்தியதுரைப்பாள்
காட்டிலேழுபெண்கள் கனநாள்த்தவசுபண்ணி
நாட்டியமாய்ப்பெண்கள் சடைத்தார்காணீசுரரே
பெண்கள்தவசியல்லோ பொறுக்கமிகக்கூடலையே
அங்கேபோய்நாமள் அவர்தவசுபார்ப்போமென்றார்
என்றுவுமையிரங்கி இப்படியேசொல்லிடவே
அன்றுஅறம்வளத்தாள் அவர்பங்கனேதுரைப்பார்
நல்லவுமையே நாடும்பெண்ணார்தவத்தில்
செல்லவென்றால்நாரணரும் தேனேவரவேணுமென்றார்
அப்போதுநாரணரை அடிவணங்கிமாதுவையும்
ஒப்போடுறவணங்கி உரைக்கிறாளன்போரே
அண்ணரேகோவே ஆதிநாராயணரே
கண்ணரேகார்வணரே காட்டிலேழுகன்னியர்கள்
தவசுதனிலிருந்து சடைத்தார்கனநாளாய்
சிவனேயவர்கள்தவம் செப்பப்பொறுக்காது
நாமள்போய்ப்பார்த்து நல்லபெண்ணேழ்வரையும்
ஆமானபதவி அருளவேணுமையா
எனறுநாராயணரை எழுந்தருளச்செய்துஉமை
அன்றுசிவனும் ஆதிநாராயணரும்
அம்மைஉமையாளும் ரம்பைஸ்திரீமாரும்
செம்மையுடனடந்து சென்றார்வனமதிலே
வனத்திலவர்கள்வர மாதரேழுகன்னியரும்
இனத்திலுள்ளமாதுமையை எல்லோருங்கண்டாவி
தாயேயுனது தாள்கண்டெத்தனைநாள்
வாயேபுவிக்குடைய மாதாவென்றுயாரே
எனதேதுமெங்களைநீர் இகழ்ந்துகடத்தாமல்
தனதாகவெங்கள் தயவில்க்குடியிருந்து
கற்பகலர்க்காத்த கண்ணெங்கள்மாதாவே
உர்ப்பனமாயெங்களைநீர் உலகில்தவறவிட்டு
இருந்தாயேதாயே எங்கள்விதிநாயகமே
அருந்தாமல்வாடினமே அறமிலார்தங்களைப்போல்
காத்திருந்தாயென்றிருந்தோம் எங்களுடகட்டழிய
பார்த்திருந்துநாயமென்ன எங்களுடபார்பதியே
என்றேரமீசுரர்க்கும் என்னையுமேயுங்களுக்கும்
சொன்னபணிமறந்து சொற்தப்பிநின்றோமோ
ஈசருடசட்டம் யாங்கள்மிகமறந்து
தேசமதில்வரவே சிந்தையிச்சித்ததுண்டோ
கற்பினையைமறந்தோமோ காரவைக்கொன்றோமோ
அற்புதவென்தாயே அடியார்தமக்கருளும்
என்றுகன்னியெல்லாம் இப்படியேதாமுரைக்க

ஒன்று அறம்வளர்த்த ம மை இரங்கி
நல்லது தான பெண்ணையுங்க நா மெலே முறைப்போம்
வல்லசில ர வார்த்தை யென்று நீர்களும்
தவத் நிலைறவேற்றித் த ர் மூலார்யேழ்வரையும்
அந்த வரவழையும் ஆதியேயென் றுரைத்தாள்
அப்போ தசி னார் ஆகணிமேயழ்வரையும்
செப ரடுசூழ்ந்துநின்ற த்தைழ ல்லாமேயுதிர்த்தி
நிறை பற்றித்தவத்தை கன்னிமாரேழ்வகையும
சிறைபோற்றிபெண்களையுஞ் சிவனார்வரவழைத்து
வந்தமட ார் மறையோத்தவர் ரயும்
சந் ஷ்டியாகத் தாழ்ந்துநமஸ்காரமிட்டு
கனகதிரவியக் கப்பல்க்கரை சேர்ந்தாற்போல்
ம மகிழ்ந்துமாதுமையை மாபட வாழ்த்திமுத்தி
கொண்டாடிக்கொண்டாடிக் கூறு ார்கன்னியர்கள்
சென்றுடிச்சென்றுடிச் சிவனைமிகட போற்றி

விருத்தம்

வந்தவனேவந்தாயேபோற்றி மாதுமைக்கணவாபோற்றி
சந்தனமயிலேபோற்றி சண்முகத்தாயேபோற்றி
நங்கேசாவேங்கடபோற்றி நாதனேநீதாபோற்றி
சிந் ரென்கணவாபோற்றி சிவசி ாபோற்றிபோற்றி

விருத்தம்

மாதவா போற்றிபோற்றி மறைமுடிகாணுய்வல்ல
நீ னேபோற்றிபோற்றி நிசநாச்சித் ாபோற்றி
சி ளுமையேபோற்றி தெய்வன்மணியேபோற்றி
பாதவாவனத்தில்தொட்ட பாங்கனேகணவாபோற்றி

விருத்தம்

மூவர்தேடியமுற்ற முதலேயு ம் கம்போற்றி
தவர்க்கரியதிரவியமே தெய்வமணியேசிதம்பரமே
காவக் ாணகவனமயிலே சற்றையழித்துக்கை விட்டகன்ற
பாவத்துணையேயென்கணவா தவமேயுனதுபதம்போற்றி

விருத்தம்

பட்டிலேறும்மகாபாவனே மாதுஉமையாள்டங்காளா
காட்டிலடியாரேழ்பேருங் கற்றுவிழுந்தபசு பதுபோல்
ஊட்டிஉறக்காரில்லாமல் ஊமைகண்டகனவுதுபோல்
வாட்டமறிந்துமனதிரங்கி வந்தாய்கவலைதீர்ந்தோமே

விருத்தம்

தீர்ந்த ினியெங்களைத்தாலும் திரும்பக்கைவிடக்களையாமல்
சந்தர்பிள்ளையேழ்வரையும் ி மேமழுங்குறையாமல்
சாந் ார் கள் கணவரையுந்தந்தே தரணியாசாண்டு
வாழ்ந் யிருக்கவாரமளும் மாயாநிருக்கும்மறைமுதலே

நடை

அய்யாமுதற்பொருளே ஆனந்தமானவரே
மெய்யானமூல மேல்வீட்டிலிருப்போனே
தாணுகவண்டபிண்டத் தாரைக்கடந்தோனே
கோணவட்டத்துள்ளே குடியிருக்குங்கோவே
ஈசரேயெங்களுட இளைப்பெல்லாம்நீர்மாற்றி
தேசமதில்வாழச் செல்லவரந்தாரும்
பெற்றமக்களேழும் பிள்ளையதுவழியும்
கொத்துக்கொடியுங் குலவம்மிசமுழுதும்
சான்றோர்வழிமுழுதுங் தற்காத்துயெங்களையும்
பண்டுசெல்செய்த பாரமுனிவன்பதத்தில்
சேர்ந்திருக்கவுமவரின் திருப்பாதமுந்தொழுது
தாழ்ந்திருக்கவுஞ்சிவனே தாரும்வரமென்றுரைத்தார்
அப்போதுநல்ல ஆதிசிவமேதுரைக்கும்
இப்போதுநாரணரே இக்கன்னிகேட்டதற்கு
இன்னவிதமென்று இசைந்துவரங்கொடுவும்
சொன்னவிதங்கேட்டுச் சொல்லுவார்நாரணரும்
கேட்டவரமதுதான் கெட்டிதானீசுரரே
நாட்டமிந்தப்பெண்களுக்கு நான்சொல்லநீர்துணையாய்
மடமாதேபெண்ணரசே மடந்தைக்கிளிமொழியே
தடமானபொய்கையிலே தண்ணீர்தனைச்சுருட்டி
ஈசருடமுடியிலிட்டுக் கரங்குவித்து
அப்போதுமாயன் அவர்களோடேதுரைப்பார்
வாசமுடனோடோறும் வருகின்றவேளையிலே
இன்றேநீர்கொண்டு ஏகின்றநீரையெல்லாம்
இன்றென்றலையில் இயல்பாய்விடுவுயென்றேன்
இரந்துதிரியும் ஈசருக்கல்லாது
பரந்தபுவிமாயனுக்குப் படாதேயெனவுரைத்தீர்
அப்போதுங்களைநான் ஆகட்டெனவுறுக்கி
இப்போதுபாரென்று இத்தனையுஞ்செய்ததெல்லாம
வன்னத்திருமால் வகையுரைக்கவேமாதர்
ஒப்போடுவொத்த ஓவியங்களேகேளும்
கன்னியர்கள்கண்பொற்றிக் கவிழ்ந்துமிகநாணிநின்றார்
அப்போதுயெம்பெருமாள் அவர்களுடனேதுரைப்பார்
நீர்பெற்றபிள்ளைகள்தான் நீணிலத்திலேபெருகி
வானத்தமுர்தமது பாலமுதருந்தி
வாழ்ந்தார்சிலநாள் மன்னரெக்கோட்டையிட்டார்
ஆனதொருசோழன் அவன்பழிகள்ரண்டேத்தான்
பின்னுள்ளசான்றோர்க்குப் பிறகுவந்தமானீசன்
அன்னீசன்சாபமிட்டு அவர்கள்துயரமுற்றார்
துயரமுற்றுசான்றோர் துர்க்கலிக்குள்ளாகி
அயர்ந்துமிகவாடி ஆள்ப்போலேநீசனுக்கு
தாழ்ந்துபணிவிடைகள் சான்றோர்கள்செய்தாலும்
வாழ்ந்துமிகக்கெட்டகலி வைதுமிகவடித்து

ஆருமற்றோர்போலே அலைகிறார்சான்றோர்கள்
சேரிடமில்லாமல்த் தியங்குகிறார்சான்றோர்கள்
அப்பனுனிருக்க அவரம்மைநீயிருக்க
அப்பனமமையில்லையென்று அடிக்கிறான்நீசனெல்லாம்
நீயுமித்தனைநாள் நின்றுவிட்டரித்தலத்தில்
நானும்பரதேசர் நடந்துவந்தனித்தனைநாள்
சான்றோர்துயரம் தான்கேட்பாராருமில்லை
மிண்டோடநாபகேள்க்கவென்று மேதினியில்போகவேன்றால்
இச்சொருவங்கொண்டு ஏகினல்மாயவியன்
பொய்ச்சுரூபத்துள்ளே புக்கிடுவோமல்லாது
என்றையாநாதன் எடுத்துரைக்கக்கன்னியர்கள்
அன்றவர்த்தலையில் அடித்துக்கீழ்வீழ்ந்தழுதார்
அழுதாரேபெண்கள் அருவரைகளதானிழுக
ஓழுகாளபெண்கள் ஓலயிட்டேயழுதார்
அய்யோயெம்மக்கள் அய்ந்திரண்டானதிலே
பொய்யோமெய்யோசோழன் பொனறிவிட்டஞாயமது
கற்பழியாக்கன்னியெங்கள் கற்பையெல்லாமழித்து
உர்பபனமாய்பபெற்றபிள்ளை ஒன்றுபோல்நீர்காத்து
வளர்க்காமல்மக்களையும் மாழக்கொடுத்தீரே
பழவினையோவெங்களுட பாவக்குறச்சலிதோ
கற்பிழந்தோமென்றுங் கவ்வையில்லாதேயிருக்க
எப்பிழையோவந்த தெமக்குத்தலைவிதிதான்
மக்களிரண்டுபேரை வதைத்தகெடுஞ்சோழனுட
அக்கபக்கமெல்லாம் அறுதேயென்சிவனே
மாபாவிசோழனுட வம்மிசங்களானதெல்லாம்
தீயாலிக்கொண்டு செத்திடாதேசிவனே
எம்மக்கள்தன்னை இடுக்கச்செய்தேயடித்த
வன்மக்கலிநீசனெல்லாம் வாழ்விழந்துசாகாதோ
பழிசெய்தசோழனார் பகல்நரியோடாதோ
வழிசோழவம்மிசங்கள் வன்னரகில்மாளாதோ
நீசக்குலங்கள் நெருநெரெனத்தானொடிந்து
தேசபபுழுக்குழியில்த் தோயாதோவென்சிவனே
பெற்றாளென்றழுதல் பிள்ளைகளைக்காணமல்
நித்தம்பால்சுரந்து நெகிழுதேயென்சிவனே
பெற்றபிள்ளையேழுடைய பேருடம்புதன்னிறத்தை
சற்றுமறிந்திலமே தலையிலெழுதுஞ்சிவனே
கொதிக்குதேயெங்கள் கும்பிமிகக்குமுறி
கதிக்குதேயெங்களுடக் கண்மணியைக்காணமல்
ஏழுகன்னிமாரில் யார்பெற்றகண்மணியோ
கோளுரைத்துப்பாவி கொன்றானேயென்சிவனே
கொன்றவன்தானின்னங் கொடுநாகில்விழாமல்
இன்னமிருப்பாரோ இறந்தானோயென்சிவனே
பாவியவனசெத்துப பஸ்படமாய்ப்போனாலும்
ஆவிலைக்கண்டாலும் ஆக்கினைகள்செய்திடுவோம்

மக்கள்ரண்டுபேரும் மணஞ்செய்துவாழ்ந்தவரோ
பக்குவவயதிலோ பாளறுவான்செய்தவினை
கலியாணஞ்செய்த கண்மணிகளாளுக்கால்
வலியானமங்கையர்கள் மனஞ்சடைத்துவாடுவரே
இட்டவுடமை இறக்காதிருப்பாரோ
கட்டினமங்கிலியங் கழட்டாதிருப்பாரோ
இத்தனையுங்கழட்டாது இருக்கச்சிவன்செயலால்
புத்திதனைக்கொடுத்துப் பெண்ணரசைக்காப்பாரோ
ஏதென்றறிந்திலமே யெங்களுடதாய்மாரே
கோதண்டமாதாவே கோவேயென்தாய்மாரே
வனத்தில்வந்தெங்களுட வாட்டமெல்லாந்தீர்த்தீரென்று
புனத்தில்கிளிகண்டதுபோல் பிரியமுற்றோமாதாவே
கைப்பிடித்தபண்டாரங் கட்டுரைத்தசொல்கேட்டு
மெய்பிடித்தமெல்லாம் மிகவுளறுமாதாவே
கன்னிப்பருவமதில்க் கைமோசமானதினால்
உன்னிமனதினுள் உளறியுள்ளங்கலங்கி
பாராமல்மக்களையும் பார்மீதிலேகிடத்தி
சிராகவனத்தில் சென்றோமிகனணி
பாவிகெடுவான் பழிசெய்வானென்றுசொல்லி
தாவியேயெங்கள்மனஞ் சற்றுமறியாதே
எங்களையுபசடளித்து எம்மக்களேழ்வரையும்
சங்கையழிக்கத் தலையெடுத்தாரிக்கூத்தர்
நச்சுக்களையாய் நாங்கள்வாழுமிடத்தில்
சச்சுருவமிட்டுவந்து சதித்தாரேபண்டாரம்
எங்களுக்கென்றிவரைப் படைத்தாரேபிரமன்
கெங்கையணிசிவனார் கேட்டுமகிழ்ந்தாரோ
இத்தனைகூத்தும் இக்கூத்தெல்லாம்பார்க்க
கூத்துவன்போல்த்தோன்றிக் கோலங்கொண்டபண்டாரம்
இனியெங்களையேற்று ஈந்தபிள்ளையேழ்வரையும்
மனுவேழ்குறையாமல் மக்களேழுவழியும்
குறையாமல்தந்துக் குவலயத்தைமக்களுக்கு
திறைவானதங்கத் திருமுடியுஞ்செங்கோலும்
கொடுத்தெங்கள்மக்கள் குவலயத்தையாண்டிருக்க
அடுத்துச்சில்நாளில் ஆக்கிவைக்காதிருந்தால்
ஏழுபெண்பாவம் ஏற்பீர்காண்பண்டாரம்
நாடூஞ்சுட்டத்தாமல் நடத்திமிகத்தாரும்
எங்களையுங்கற்பழித்து இந்தவனந்தனிலே
மங்களசோபனம் மறந்துமயிர்விரித்து
தூங்காமல்வாடி தினமுமிகவுணர்ந்து
ஆங்காரமேமறந்து அவனியாசையறுத்து
வலைவிரித்துச்தலையைச் சதமென்றுமெண்ணாமல்
உலையின்மெழுகதுபோல் உருவனத்திலேநிலையாய்
வெயில்பனியிலுமேகத் துளிர்விழிக்குள்ளாகி
குயில்கூவும்வனத்தில் கோதையேழுமாமயிலும்

நின்றோமேகாட்டில் நீர்செய்தமாயமதால்
இனியெங்கள்மக்கள் ஏழ்வரையுமேழ்வழியும்
அனியாயமுமடக்கி ஆனமக்கள்வம்மிசத்தை
கொத்தோடுசேர்த்தெடுத்துக் குறுங்கலியையடக்கி
அரசாளமக்களுக்கு ஆனபதிஈயும்வரைக்கும்
எங்களைப்போல்சுகமற்று இருப்பீர்காண்பண்டாரம்
மங்களமல்லால்க்கலி மாழும்வரைவாராது
என்றுசாபித்தாள் யேத்தகன்னியேழ்பேரும்
அன்றுநாராயணரும் அவர்கேட்டுத்துக்கமுற்று
என்னசொல்லப்போறோம் யாந்தானினியெனவே
வன்னத்திருமேனி மனதுநொந்தேதுசொல்வார்
பெண்ணேநீரேழ்பேர்க்கும் பிரமாவமைத்தபடி
எண்ணம்வந்தல்லால் யாரென்னசெய்தேண்டி
ஆனால்கலியை அழித்துமக்கள்தன்வழியை
நாளுகச்சென்றெடுத்து நலங்கொடுக்கும்வரைக்கும்
துயரமெனக்குத் தொடுக்குமெனச்சாபமிட்டீர்
அசுரக்குடும்பம் அறுக்கும்வரைமுன்னாளில்
ஈசரிட்டசாபம் ஈதோடேவாய்த்துதெடி
மாசங்கடந்து வரும்வரைக்கும்நீங்களுந்தான்
எங்கேபோயிருக்க ஏழுபேர்க்குஞ்சம்மதங்காண்
கொங்கையினியழகக் கோதையரேசொல்லுமென்றார்
அப்போதுகன்னி அவரெல்லாமாராய்ந்து
செப்புகிறாந்தச் சிவபத்தர்தன்னுடனே
மக்கள்ரண்டுபேர்கள் மாண்டார்ரவருயிரை
அக்கமதில்செய்தீரோ அசலோவதுஞாயமென்ன
தாதாமனமகிழ்ந்து சதுர்முகனைத்தானழைத்து
வேதாவேமக்கள்ரண்டை வெற்றியுள்ளவகையிலே
கொன்றோனேசோழன் குருநன்றியைமறந்து
சென்றோரேமக்கள் சென்றவுயிரெவ்விடங்காண்
அப்போதுவேதா அவர்தான்மிகத்தெளிந்து
செப்புகிறோமென்று செப்பினாரன்போரே
இறந்தபிள்ளைரண்டின் யேற்றஉயிரானதையும்
அறந்தழைக்குமாகைலை அரைக்குள்ளடைத்திருக்கு
மால்மக்களென்று மனமகிழ்ந்துநான்பதறி
வாலை'முனியுயிரும் வானவர்கள்தன்னுயிரும்
ஆனதினாற்பிறவி அமைக்கப்படாதெனவே
நாணிதற்கஞ்சி நற்பதியில்வைத்திருக்கு
என்றுவேதாவுரைக்க எம்பெருமாளேதுரைப்பார்
அன்றுபடைத்திலையே அனேகமனுவாகுமல்லோ
அஞ்சுமக்கள்பிள்ளை அவனியன்பத்தாறதிலும்
மிஞ்சிப்பறந்து மேல்ச்சாணேறாரேபெருக்காய்
இபிள்ளைரண்டு யேலமேநீர்படைத்தால்
கொப்புநூறாயிரம்போல்க் கூடிக்குவியுமல்லோ
பாவிகெடுத்தான் படையாமல்நீர்கெடுத்தீர்

தாவிக்கெடுத்தான் சளக்கலியன்மாபாவி
இனியெண்மக்களுயிர் இன்பமுடன்னீர்காத்து
மனுவராய்ப்பூமியிலே வைகைக்கூடவ்வேசூ
எழுப்பவேணுமென்று யாம்நித்திச்சிருப்பதினுல்
வெளுப்பாகவவ்வழியில் மேலுகத்தோர்தான்பிறந்து
இன்பமுள்ளவானவரும் இவ்வழியில்வாழ்வதினுல்
அவ்வழியிலவ்வழிகள் அனேகம்பெருகிடவும்
செவ்வாகநீருமிப்போ திடீர்திடீரெனப்படையும்
என்றுசொல்லமூலம் இசைந்துசொல்லவேதாவும்
நன்றுநன்றென்று நருள்ப்பிறவிசெய்தனராம்
இப்படியேபிறவி இவர்செய்வோமென்றுசொல்லி
அப்பிறவிவேதா அமைத்தார்மனுப்பெருக
உடனேநாராயணரும் உள்ளங்களிகூர்ந்து
திடமானகன்னியர்கள் செயமுகம்பார்த்தேதுரைப்பார்
நீர்கேட்டதற்கு நிர்ணயங்கள்கண்டீரோ
இனிநான்கேள்ப்பதற்கு இன்னதென்றுசொல்லிடுவீர்
உங்களைப்பூலோகமதில் உடையவழிக்குலத்தில்
நீங்களும்போய்ப்பிறக்க நிச்சித்திருப்பதினுல்
ஏதுபெண்காளுங்கள்மனம் ஏதென்றுடனேசொல்லும்
மாதுகளெல்லாம் மனமகிழ்ந்துகொண்டாடி
எங்களுடநாதா யெமையாளுமாத்திடமே
செங்கருடவாகனவா தேவிமணவாளா
நீர்நிச்சித்த நினைவெள்ளுப்போலமுவும்
சீர்பரன்முதலாய்த் தெரியாதகுட்சியரே
எங்களைப்பூலோகமதில் எங்கள்வழிக்குலத்தில்
மங்களமாய்ப்பிறவி வருபபோமெனவுரைத்தீர்
பிறவியதுநாங்கள் பெண்மனுப்போல்ப்பிறந்தால்
இறவியாகாமல் இருக்கவருள்வீரே
அல்லாமல்பின்னும் அடியார்மிகப்பிறந்தால்
வல்லாதநரயகமே வந்துநீரேக்குமட்டும்
மாதவிடைமாமணங்கள் மலர்ந்துறக்கமில்லாமல்
சீதமாயம்மானுவோர்க்கு குறவாடிச்சேராமல்
புரடாமலந்திசந்தி படுத்துத்துயிலாமல்
நன்மையறியாமல் நளிப்பேச்சுக்கேளாமல்
தின்மையறியாமல் தின்ரசத்தைத்தேடாமல்
கொய்துபுடவைக் குக்குழித்துச்சூடாமல்
மயிருவளர்க்காமல் மனதுவேறெண்ணுமல்
கொங்கைதிரளாமல்க் கூறுடம்புவீசாமல்
செங்கனிவாய்த்தேமல் தேகமதில்வீளாமல்
பக்குவஞாயப் பருவம்வந்துவாய்க்காமல்
மிக்குவமான மிகுவாழ்வுசேராமல்
சுற்றுக்கிளைகள் தொடுத்தன்புகொள்ளாமல்
ஒற்றுப்பிதற்றுமல் ஒருவர்முகம்பாராமல்
அல்லல்நோய்பிணிகள் அணுப்போலும்வாராமல்

தொல்லைவாராமல் சுகமுமிகவராமல்
இந்தவிதப்படியே யெங்களையும்நீர்படைத்து
சொந்தமுடன்வந்துநீர் தொட்டெடுத்துநன்மைதந்து
இரச்சிப்போமென்று எமக்குவுறுதிபண்ணி
நிச்சித்துத்தர்மகுலம் நீர்பார்த்துத்தான்படையும்
என்றுகன்னியேழும் இப்படியேசொல்லிடவே
அன்றுதிருநாதன் அகமகிழ்ந்துகொண்டாடி
நல்லதுதான்பெண்ணேநீ நம்மோடுகேட்டபடி
வல்லவிதமானாலும் மாறுதெனவுரைத்தார்
வாக்குரைக்கக்கன்னியர்கள் மனமகிழ்ந்துகொண்டாடி
நாக்குரைப்பார்பின்னும் நாராயணரோடு
நாங்கள்போய்ப்பிறந்தால் நம்முடையநாயகமே
தாங்கள்வருவோமென்றதற்கு தருணமேதென்றுரைத்தார்
அப்பொழுதையா நாராயணருரைப்பார்
செப்புகிறார்கன்னிகளுக்குச் சிறந்ததருணமது
ஆயிரத்தெட்டம்பலமும் ஆனதிருப்பதியில்
வாயிதமோரம்பலமும் வளர்பதியிலொன்றதுவும்
கெங்கையுடகண்ணுங் கேள்விமன்னர்தனசாவும்
சங்கையழிந்து தலையழிந்ததவ்வாண்டு
வருவேன்தென்சுவர்க்க வடமேற்குமூலையிலே
லிங்கமொன்றிலேமூன்று இணையாகத்தோன்றினபின்
யெங்கும்பிரகாசம் இட்டவ்வாண்டேவருவோம்
கண்டிருநீநான்வருகக் காரணமனேகமுண்டு
விண்டுரைக்கக்கூடாது மெல்லியரேயித்தருணம்
சொன்னதருணஞ் செவிகேட்டுநீங்களெல்லாம்
என்னைநினைந்து இருங்கோவொருநினைவாய்
இத்தருணங்கேட்ட இப்பொழுதேமுதலாய்
வடமேற்குமேற்கும் வடக்குங்கால்நீட்டாதுங்கோ
என்றுதருணம் இதுவுரைத்தார்கன்னிகளுக்கு
அன்றுமடவார் அகமகிழ்ந்துகொண்டாடி
நல்லதுகாணெங்களையும் நாயகமேநீர்படையும்
வல்லபெருமானே மறைமுதலேயென்றுரைத்தார்
உடனேயாநாதன் ஓவியத்தாரேழ்வரையும்
திடமானபூமியிலே செய்ததர்மவவ்வழியில்
பிறவிசெய்தார்மூவர் பிறந்தார்கள்கன்னியர்கள்
திறவிமொளிமாதர் தேசமதில்ப்பிறக்க
நாராயணரும் நல்லசிவனுமையும்
சீராரும்நல்லத் தெய்வத்திருமாதும்
கைலைதனிலேகிக் கட்டானமண்டபத்தில்
ஒயிலாகக்கூடி உவந்திருக்கும்போது
மாகாளியென்ற வடபத்திரகாளி
ஓகாளியென்ற உயர்ந்தபலக்காரி
சென்றாள்கைலை சிவஐயர்நாதனிடம்
நன்றானகன்னி நாராயணரிடத்தில்

வந்துவிழுந்து மண்ணிலவள்புரண்டு
சந்துபயில்மாயவரே தான்பிழைத்தேனுமக்கு
உமைமக்கள்சான்றோர் உற்றமக்களேழிலே
நன்மையற்றசோழன் நாடும்பழிரண்டேத்தான்
கண்டுஅடியாள் கரிக்காலச்சோழனுக்கு
மன்றுதனில்பன்னிரண்டு ஆண்டுமழைபெய்யாமல்
சாபித்தேன்சோழனார் தட்டழியப்பட்டுழற
பாவியவனாரைப் பகலநரிஓடவைத்தேன்
அல்லாமல்ச்சேரளன் அக்கமறச்சாபமிட்டேன்
பொல்லாதசோழன்வழிப் பொடிபடவேசாபமிட்டேன்
இத்தனையுஞ்சொல்லி ஈடழியச்செய்துவிட்டு
புத்திரரின்செய்திசொல்லப் புண்ணியரேவந்தேனென்றாள்
அப்போதனாதி அய்யாநாராயணரும்
செப்போடுவொத்த சிவனோடுசொல்லலுற்றார்
கேள்க்கலையோயெந்தன் கிருபைச்சிவனாரே
ஏக்கலையோயிந்த யேந்திளையாள்சொன்னதுதான்
பிள்ளைக்கோர்தீங்குப் பிணையாமலெப்போதும்
வள்ளல்களைநன்றாய் வளர்ப்போகாமென்றுசொல்லி
மருட்டிவிழித்து வாங்கினாள்மக்களையும்
திருட்டுமொழிபேசுஞ் செய்தியைநீர்கண்டீரோ
நான்றனியல்லவே நால்பேருமுண்டலவோ
தான்தனிமையாகிடினுந் தபிதமென்றேபுகல்வார்
வானவருந்தானவரும் மறையவருஞ்சாச்சியதாய்
நானவளோடேவாக்கு நவின்றல்லோதான்கொடுத்தேன்
மக்களுக்கோர்தீங்கு வந்ததேயுண்டானால்
மிக்கச்சிறையுனக்கு மேவுமெனவுரைத்து
ஈந்தேன்மதலை இவள்கையிலேஈசுரரே
மாய்ந்தவுடனாகிடினும் வந்துரைத்தாளோசிவனே
சற்றும்பதறுமல்த் தானிருந்தித்தனைநாள்
புத்திமேல்நெஞ்சரிப்பாய்ப் போவோமென்றேகிவந்தாள்
தன்மதலையென்றால்த் தலைவைத்திருப்பாளோ
என்மதலைக்கிவள்தான் இடறிவிழுவாளோ
ஒருதர்பிள்ளைக்கொருதர் உடமையிடுவாரோ
கருதல்விருப்பங் காணுமோமற்றோர்க்கு
பெற்றகும்பியல்லோ பெருங்கனல்போல்மீறுவது
மற்றோர்கள்கும்பி வருந்திக்குமிறிடுமோ
பாவியவன்கொன்று பன்னிரண்டாண்டுவரை
ஆவியறிந்திலையே ஆரும்வந்துசொலலிலையே
தாய்தகப்பனில்லார்போல் தயங்கினதுகண்டோமே
சேயவீரனுக்கோராத செய்தபழவினையோ
என்றானிறைதன் யேந்திளையைத்தான்பார்த்து
சென்றாதிவேந்தர் செடத்தோடுயிர்திருப்பி
எழுந்திருக்குமட்டும் இருநீசிறைதனிலே
குளிர்ந்ததிருமேனி கூறினாரந்தரிக்கு

கேட்டுமாகாளி கிலேசமிகவடைந்து
திட்டுவடவாமுகத்தில் செய்யவன்னிமண்டபத்தில்
இருந்தாள்சிறை ஈசன்செயலெனவே
வருந்தாதகூளிகணம் வாணகவிடுபேய்களெல்லாம்
நாச்சியார்க்கிச்சிறையால் நமக்கெனனகேடோகாண்
கேச்சியாய்த்தேசமதுக் கென்னகேடாவதியோம்
என்றுசிலபேயகள் யெண்ணியெண்ணியெதிரியும்
முந்தமுறாக்குள்ளே மூளிப்பபேயதுசொல்லும்
கைவாய்ததுமாகாளி கவிழ்ந்திருந்தவேதுவுஞல்
மெய்வாய்த்துதென்று விழியிட்டுக்கொண்டாடும்
இப்படியேபேய்கள எண்ணஞ்சிலஇண்ணமுமாய்
அப்படியேகாளி அவள்சிறையிலேயிருக்க
நல்லநாராயணரும நாடுஞ்சிவனுரை
வல்லபெருமாள மறைநாளுந்தாவியமே
காளிசிறைதான கவிழ்ந்திருக்கஞாயம்வந்தால்
ஆழிவலைவையகத்தில் ஆர்க்கூச்சுசுமவாய்க்கும்
முதற்தான்கலியை முடிக்கப்பாகாளி
விதத்தமுளளவக்கினியில் மிகவேசிறையிருக்க
பார்த்துநாமிங்கிருக்கப் படுமோகாணீசுரமே
சாற்றுநீரின்னதென்று சத்திகொண்டசுரமே
உடனேதானீசர் உரைக்கிறான்பெருமே
கடனகாரனென்றோடு கலங்குமொழிபேசுவது
நானேதடுத்ததன நாட்டுக்கலியீட்டறுக்க
ஏனேகாண்ணமத்துடே யென்றோடுபேசுவது
எப்போகலியழித்து எங்களுக்கதற்பேறு
எப்போதருவீரென்று எண்ணிமிகவாடுறோமே
திட்டைமிகக்கழித்துச் சிவஞானமுந்திகந்து
கயிலைவீட்டையெப்போகன்றய் விளக்குவீரென்றுமிக
தவித்துமுகம்வாடித் தானிருக்குஞாயமதும்
குவிக்துமுகமலர்ந்து கொள்ளுவதுங்காணலையோ
என்றேயேகாபரமும் எடுத்துரைக்கவெம்பெருமாள்
நன்றென்றுகட்டெனவே நாரணருங்கொண்டாடி
இலட்சுமியைத்தானழைத்து நவிலுவாராதிமுதல்
சச்சுடராய்நின்ற தருணத்திரவியமே
இதுமுன்பிறப்பும் இருந்தாயுருப்பிணியாய்
மதுவினியபெண்ணே மாயக்கலியறுக்க
நானிச்சித்திருப்பதினுல் நாயகியேயுமொரு
பூனிரசப்பொன்மகாப் பெண்மயில்போல்நீவளர்
அலையிலறுமுகவன் அவன்பதியினுளிதனில்
நிலையிலேநின்று நீவளருகண்மணியே
நீவளாச்சூழ நிறைக்கதங்கமாமணியாய்
தேனினியமண்டபமுந் தேரும்பூங்காவனமும்
சூழவரங்குவைத்துத் தெய்வரம்பைசூழவைத்து
காளமொடுபூரிகையுங் கன்னுளர்சூழ்ந்துநிற்க

அகரத்தெருவும் அரம்பையர்கள் தன்தெருவும்
சிகரத்தெருவுஞ் சேர்த்துவைப்பேனுன்சூழ
நித்தம்வலம்புரிகள் நின்றுவுனைச்சூழ்ந்து
நித்தியெனவேமுழங்க சேவிக்கவைத்திடுவேன்
கோட்டைகள்சூழக் கோடிமண்டபமுகித்து
வீட்டலங்காரம்போல் வேலையிலுந்தருவேன்
உந்தனுடமேனி உரைக்கெளிதாதங்கமென
செந்தழல்போல்மகரச் சிலைபோல்வளர்ந்திருநீ
கலியுகத்தைமுடிக்க கண்ணனவோருயிரை
வ்லியுடனேயுன்னுடைய வயிற்றில்பிறவிசெய்து
நாட்டுநருளின் சகர்சோதனைபார்த்து
திட்டுக்கலியறுத்து செவ்வுமனுதானெடுத்து
நாடுன்மகன்றனக்கு நல்லமுடியுங்கொடுத்து
தேடுந்தர்மச்சீமை செலுத்தச்செங்கோல்கொடுத்து
அரசாளவைக்கவோர் ஆண்பிள்ளைநீபெறவே
துரைசானிபோவெனவே சொன்னார்காணம்மையுடன்
கேட்டுமிகலட்சுமியும் கிளிமொழிவாய்தான்திறந்து
நாட்டுக்குடையவரே நாராயணப்பொருளே
மகரச்சிலையாய் வாரிதனில்நான்வளர்ந்தால்
சிகரநற்கோபுரமே திருவிளமேசீர்தானும்
வருகுவதென்னவித மாகவுருவெடுத்து
அருகில்சேர்வருக அடையாளமென்னவென்றாள்
அப்போதுவையா ஆனந்தமேபெருகி
செப்புகிறேமென்று திருவோடிதுவுரைக்க
மூன்றுசடையில் முறுக்குச்சடையொன்றெனவும்
பண்டுள்ளசூரியர்கள் பதிந்திருக்குமென்விழியில்
நெத்திதனில்ப்பிறையும் நெடியவடவக்கினியும்
சுத்திக்கனல்மேனியது மாத்துஎண்ணாயிரமாய்
பளிரெனவேலோகம் பதினாலுக்கோருருவாய்
துளிரெனவேவாரி சுழலவெருகலைய்
காதம்பனிரண்டில் கண்டகலியன்றெரிய
தீத்தக்கனலாய்ச் செயகுண்டமும்பதித்து
காவில்தர்மமணியைக் கலீர்யெனவேதண்டையிட்டு
மேலில்பலவேதமதை மின்னுடம்பாகவிரித்து
பெண்ணரசேநான்வருகும் பெருமைக்கடையாளம்
கண்ணரசேநீயுமென்மேல்க் கருத்திருந்தால்பிழைப்பாய்
அப்படித்தானென்பிறவி அருகேவருகையிலே
இப்படிவந்தேயிருபேரும் ஒருசேய்தானீன்று
நாட்டுச்சோதனைக்கு நாமனுப்பித்தான்பார்த்து
கோட்டிசெய்தபாவி குறுங்கலியைத்தானெரித்து
அதுமேலுனக்கும் எ க்குமிகுவானந்தம்
மதுவாகவின்ற மதலைநாடாழுமெடி
என்றுபிறவிக்கு ஏற்றஅடையாளமுரைத்து
நன்றினியமாதே நடப்பதற்குச்சங்கடமேன்

உடனே தான்லட்சுமியும் உரைக்கிறாள் ந்தவுடன்
திடமானகோவே செய்யமணிவிளக்கே
என்னை மகரச் சிலைபோல்பிறவிசெய்ய
என்னவிதமாய் இசைவீர்காணென்கோவே
என்றுரைக்கவம்மை யெடுத்துரைப்பாரெம்பெருமாள்
நன்றாகன்றுபெண்ணே நயக்குத்தொழிலோகடிது
அலையிலுனையும் ஆமதியபொன்மகர
சிலைபோல்வளருவெனச் சிந்தித்தாரெம்பெருமாள்
வடகைலைவாசலிலே வந்தலைந்தவாரிதிரை-
மடமடெனவந்து வாரியெடுத்தாயிளையை
சேந்தூரலைவாரித் திரைமேலெடுத்திருத்தி
சந்தனவாரி சமுத்திரத்துள்ளிருத்தி
பந்தியாய்வைத்தப் பரமமணிக்கோட்டையதுள்
தெய்வரம்பைசூழத் தேவரெல்லாவோலமிட
மெய்பரமக்கன்னியர்கள் மிகுவாய்க்குரவையிட
இடம்மானமெக்காளம் இடகுடகுடாவென்றிடவே
மடம்மானவாத்தியங்கள் மடமடெனவேயதிர
வலம்புரிகளெல்லாம் மாதுவந்தாளென்றாத
சிலம்புனைந்தரத்தினங்கள் சிலவிளக்கேந்திநிற்க
முத்துக்கள்சிப்பி முன்வாய்திறந்தொளிவீச
கொத்துக்கொத்தாக கோமேதகஞ்சூழ
கன்னிமாரெல்லாங் கவரிவீசிநிற்க
தன்னிகரில்லாமறையோர் சாத்திரங்களோதிநிற்க
மகரச்சிலையாள் மாதுதிருலட்சுமியாள்
சிகரகோபுரத்தாள் திருவுருவந்தாள்வளர்ந்தாள்
பார்பதியுமாதுமையும் பரமேசொரித்தாயும்
சீர்பதியுமங்கே இனமூன்றுநேரம்வரை
ஈஸ்பரனும்வேதா இவர்கள்நிதம்வரவே
வாசவனும்வானவரும் வந்துநிதம்போற்றிசெய்ய
செய்யவமாரெல்லாஞ் சிவசிவாவென்றுநிற்க
வெய்யவனுஞ்சந்திரனும் மெல்லிபதம்போற்றிநிற்க
புஷ்பமலர்தூவிப் பொன்னுலகத்தோர்சூழ
செப்பமுள்ளமகரச் சிலைபோல்திருவளந்தாள்
மாதுதிருலட்சுமியாள் மகரச்சிலைபோலே
ஓதுமணியலைக்குள் ஓவியம்போலேவளர
மாதைமகரச் சிலையாய்வளரவிட்டு
நாதனியுநாதன் சுங்கரனோடேதுரைப்பார்
கூட்டுக்கிளிபோலிருந்த கொடியிடையைப்போகவிட்டு
நாட்டிலிருப்பேனே நம்முடையமைத்துனரே
சீதைமகரச் சிலைபோலங்கேவளர
பாதையதுகேடாமல் பதிந்திருக்கஞாயமுண்டோ
அப்போதுசிவனார் அவரேதுசொல்லலுற்றார்
செப்போடுவொத்த திருமாலேநீர்கேளும்
நடத்தும்படியுள்ள ஞாயமெல்லாமிப்போது

சடைத்திருக்காமல்த் தானடத்துமென் றுரைத்தார்
அந்தப்பொழுதில் ஆதிநாராயணரும்
சிந்தைமகிழ்ந்து செப்புவாராதியோடு
நல்லதுகாணீசுரரே நாடுந்தேவாதிகளில்
வல்லசம்பூரணனும் வாய்த்தயெமலோகமதில்
பரதேவதையான பைங்கிளியுந்தேவனுமாய்
மருவனையமாதும் மன்னவனுமாய்ப்பிறக்க
உருவேற்றினம்மை உயர்ந்ததவஞ்செய்திடவே
ஆனதாலவரை அவனிதனிலேபிறக்க
ஈனமுடனமைக்க இதுநாளாகுவதால்
நின்மந்ததேவனுட நிஷ்டைநிறைவேறினதோ
என்றெனவேபார்க்க எழுந்தருளுமீசுரரே
அப்படித்தானீசுரரும் ஆதிநாராயணரும்
இப்படியேதேவனிடம் ஏகின்றவேளையிலே
தேவரெதிரே தெய்வேந்திரன்றனும்
மூவர்நடுவன் முத்தநாராயணரின்
சங்குசரம்போற் தங்கநவரத்தினத்தால்
எங்குமொழிவீசும் இரத்தினத்திருமுடியை
சூடித்தெய்வேந்திரனுஞ் சிவ்வெனதிரேபோவோமென்று
நாடியகமகிழ்ந்து நாராயணருடனே
சந்தோசமாகத் தான்வருகும்வேளையிலே
கண்டுசம்பூரணனுங் கைமறந்துநிஷ்டையது
பண்டுமய்யலாய்ப் பாவையரோடேவுரைப்பான்
மானேகேளிந்த வானவர்கோர் தன்சிரசில்
தானாகியமான சங்குசரத்தங்கமுடி
என்தலையிலேவைத் தேந்திளையேயுன்னோடு
தென்தலைவரத்தினைச் சிங்காசனமீதில்
இருபேரும்வாழ்ந்து இராசதுரைத்தனமாய்
பெருகானதெய்வக்கன்னி பெற்றமனுவழியை
எல்லாமருகிருத்தி யேற்றவொருசொல்லதுக்குள்
வல்லானநீத வையகத்தையாண்டிருந்தால்
எத்தனையோநாமள் இலங்குமகிழ்ச்சியுடன்
வர்த்தனையாய்வாழ்வதற்கு வாய்த்தமுடியீதலவோ
என்றுசொல்லத்தேவன் இச்சைகொண்டுபெண்ணாளும்
நன்றுநன்றுநீர்சொன்னமொழி நல்லாயிருக்கிதுகாண்
அப்படித்தானம்மை ஆதிசிவன்படைத்தால்
இப்படியும்படைத்தோர் இறவாதிருப்பாரோ
என்றுபெண்ணாளுரைக்க யேத்தசம்பூரணனும்
அன்றுபெருமூச்சு அலைபோலெறியலுற்றான்
அந்தப்பொழுதில் ஆதிசிவமுதலும்
வந்தங்குநின்றார் மாவிஷ்ணமாலவரும
கண்டந்தந்தத்தேவன் கைமறந்தநிஷ்டையோடு
தண்டமிழ்சேர்பதத்தைதந் தையலும்வந்தேவணங்கிட
இத்தனைநாள்யாங்கள் நின்றதவங்கண்டிரங்கி

சித்தமிரங்கிச் சிவனேநீர்வந்திரோ
எந்தன்பெருமானே இறையவரேவந்திரோ
நந்தகோபால நாரணரேவந்திரோ
குருவே அரிநாதா கோபாலாவந்திரோ
முருகக்குருவரனே முத்தாநீவந்திரோ
செல்வக்கடலே சிமயனேவந்திரோ
கல்விக்கடலானக் கரைக்கண்டர்வந்திரோ
அரவணிந்துவத்தியுரித் தணிந்தோரேவந்திரோ
பரமசிவமான பச்சமால்வந்திரே
இப்படியேமாளும் யேற்றசம்பூரணனும
அப்படியேயவந்தோர் அடிபணிந்துயோற்றிடவே
மாயப்பரனும் மனமகிழ்ந்துகொண்டாடி
ஆயனைப்பார்த்தே அருளுவார் ஆதியுமே
மாயவரேகேட்டீரோ வாய்த்தயித்தேவனுந்தான்
தூயவரேநின்றதவந் துலைத்தறுத்தானில்லையிவன்
முற்றுந்தவமும் முழுதும்நிறைவேற்றுகையில்
சிற்றின்பமாகித் திருமுடிமேலிச்சைகொண்டு
வாடியயர்ந்தான் மங்கையருந்தேவனுமே
நாடியவன்தனக்கு நல்வழமையேதுசொல்வீர்
அப்போதுநாராயணர் மகிழ்ந்துகொண்டாடி
இப்போதுன்சிந்தை எண்ணமெல்லாம்நீசொல்லுமென்றார்
தேவனதைக்கேட்டு சிந்தைதிகைக்கலங்கி
ஆவிமறுகி அவரேதுசொல்லுற்றார்
காரணரேநாங்கள் கருத்தில்நினைத்ததெல்லாம்
பூரணமாயங்கே புகுந்துதோயென்சிவனே
அய்யாநானுரைத்தேன் யென்னுயிரையோடல்லாது
கையோகண்ணாலே காணேனேமற்றிருவர்
ஊமைமொழிபோல் ஒதுக்கிலுரைத்தார்போல்
நாமறியப்பெண்ணறிவாள் நாடறியாதென்றிருந்தோம்
இவர்களறிவதற்கு யார்சொல்லிப்போட்டாரோ
எவர்களும்நாம்பேசுகையில் இங்குவரக்காணோமே
ஆர்சொல்லிப்போட்டாரோ அறியோமேயென்சிவனே
தார்சிறந்தயென்சிவனே சருவதயாபரனே
பூரணனேவாசவனே பொறுத்தினிக்கொள்ளுமையா
நாரணரேயென்சிவனே நாடிப்பொறுவுமையா
என்றுசொல்லித்தேவன் யேற்றவிருத்தமதாய்
நன்றினியமுப்பொருள்மேல் நற்போற்றலேபடிக்க
பரமதேவனதயான பைங்கிளியுமப்போது
திரமானதாயார் சிவசத்திபோதிலும்
சிவநாமப்போதிலும் ஸ்ரீகிஷ்ணர்போதிலும்
விவமானவாசிரிய விருத்தமபோல்போற்றலுற்றார்

விருத்தம்

காரணா அரிகாரணா கவிபூரணாவெகுதாரணா
கவிஞோர்தொழும்வாரணா கருணாகரதருணாவெகு

தருணகவிவருண கவிமால்சிவசபோற்றி
காயாம்பூவின்மேனி நிறவாயாசிவசிவாயா
கருவாயுருவுருவாயுனைத் தினமேயருணியாயா
குறிமத்தகா கருணாகராபோற்றி
குணசீராவெகுதீரா நவிவீராபுவிநாதா
திருவேர்டுறுமார்பா சிறியார்மிகதறியாச்செய்த
வெறியானதைச் சிறிதாக்கியேசேர்ப்பாய்
முகப்பார்பபாய் முடிவானதையறியாமலே
மோகமாய்வெகுதாகமாய் உளறித்தவங்குளறியே
உன்சொல்பதமஞ்சொல்லென ஒஞ்சிப்பதமஞ்சி
ஞேமுன்செயல் தந்தருள்வாயே

நடை

இப்படியேகன்னி யேற்றபரதேவதையும்
முப்படியேயாசீர் விருத்தமொன்றுபாடிடவே
கேட்டரிநாரணருங் கிளிமொழியைத்தான்பார்த்து
மெட்டுக்கொடியிடையே மின்னிடையேநீகேளு
உன்புருசனங்கே உற்றயெமலோகமதில்
இன்புருகிவாடி யேங்கித்தவிப்பதினால்
அவனைநீமறந்து ஆனதெய்வபூரணனை
இவனைமிகத்தாவி இருந்ததவமதிலும்
நிறைவேறமாட்டாயல் நினைத்தகேடித்தனையால்
பிறபேர்நீபூமிதனில் பெரியசான்றோர்வழியில்
யெமவழிலோர்பிறவி யெண்மகவசயங்கிருக்க
அமைப்பானதற்கு அவ்வழிதானயினையே
இந்ததவக்குறைக்கு இன்னமங்கேபிறந்து
முந்தப்புருசனுக்கு முன்வேலையுங்கழித்து
அழுந்ததுயரப்பட்டு அவனூழியங்கள்செய்து
குளிர்ந்தமொழியற்றுக் கூடுஞ்சரசமற்று
என்னேரமுந்தனக்கு யேக்கமுடனழுந்தி
மின்னேகேழிந்த மிகத்தேவநுன்வழியில்
கொண்டபச்சத்தாலே கோதையரேயுனையுங்
கண்டிச்சைகூர்ந்து கர்மக்கருவினையால்
கருவாலுருவைக் கைக்குள்வசமாக்கி
பருவாபருவமதில் பாவையரேநீயிவனோடு
இருவரொருவரென இச்சைமிகக்கூர்ந்து
குருமைம்மறந்து கொண்டவனைத்தான்மறந்து
தாய்தகப்பன்மர்மன் தமையன்தனைமறந்து
வாயிற்படிமறந்து வாழ்வைமிகமறந்து
சொந்தமனைமறந்து சுகசோபனம்மறந்து
சந்தோசமற்று சகலோர்க்குநாணமுற்று
முற்புருசன்றனக்கு மூலக்கருக்கேடனைத்து
இப்புருசன்றுன்னவே யெவ்வுலகுந்தானறிய
கட்டினமங்கிலியங் காசினியோர்தானறிய

கெட்டுனைப்போலே கீர்த்திமிகப்பிறந்து
மேலும்பலதொந்தரவு மிருநாள்வழிதோறும்
கேலிமிகவாகிக் கிலேசமிகவடைந்து
உதிரவெளியாகி உள்ச்செருமல்விக்கலுமாய்
தீனருமலந்தச் செடியேப்பச்செய்கையினால்
வீட்டைவிரித்து மேலேதெய்வவழியாய்
நாட்டையரசாண்டு நாச்சியார்போலிருப்பாய்
என்றுசிவனும் எம்பெருமானுமுரைத்து
அன்றேமச்சண்டன் அவ்வழியிலேயமைத்தார்
அமைக்கவணங்கும் அவனிதனிலேபிறக்க
ஏமக்குலத்தில்வந்து இயல்வாய்ப்பிறந்தனளாம்
மாதுபுவியில் வளரப்பிறந்தபின்பு
தாதுகரமணிந்த சங்குசரத்தாமன்
தேவன்றனைப்பார்த்துச் செப்புவாரெம்பெருமாள்
பூவுலகிலுந்தனுட பெண்பிறக்கப்போனதல்லோ
ஏதுநீதேவா இனியுனதுசெய்தியென்ன
சீரொத்ததேவன் திருப்பாட்டோதலுற்றான்

விருத்தம்

ஆறுசெஞ்சடைசூடியவையனே அலையிலேதுயிலாதிவராகவா
நீறுமேனிநிரந்தரம்பூசிவா நீசிவாசிவமைத்துனராகவா
வீறுசத்திமணவாளரானவா வீரலச்சுமிமன்னரிராகவா
ஏறுமீதினிலேறிடுமீஸ்பரா எம்மையாள்க்கொள்ளும்நாரணா
போற்றியே

விருத்தம்

சீதமாங்குணசெல்வனேபோற்றி சிவசிவாசிவசிவனே
போற்றி
நீதவாநடப்பேயதுவாபோற்றி நீசிவாசிவாராகவாபோற்றி
மாதவா அரிகேசவாபோற்றி வல்லனேயரிசெல்லனே
—போற்றி
ஆதவா அரிநாரணாபோற்றி அனாதியேயுந்தன்போற்றியே
போற்றியே

விருத்தம்

அய்யனே தவம்யானிற்கும்போதிலே இந்திராணிமந்நதிந்
திரநானவன்
பொய்யின்மாய்கைநினைவதிலானவன் பொர்ப்பற்கிரீடமீ
துர்ப்பனத்தாசையால்
மெய்யின்ஞானத்தவம்விட்டுவாடினேன் வித்தகாவுன்
சித்தமிரங்கியே
செய்யும்பாவவினைதவிர்த்தாண்டருள் சிவசிவாசிவசிவ
சிவாபோற்றியே

விருத்தம்

போத்தியென்றேத்தித்தேவன் பொற்பதம்வணங்கிநின்று
ஆத்தியேசூடும்வேதன் ஆகமேவிச்சைசூழ்ந்து
நீத்தியவாயனோடு செய்தியேதெனவேகேள்க்க
நாலத்திசைப்புகழுந்தெய்வ நாரணருரைக்கின்றாரே

நடை

தேவன்வணங்கித் திருப்பாதம்போற்றிடவே
ஆயனோடந்த ஆதிசிவமேதுரைக்கும்
அச்சுதரேதேவனுக்கு ஆனவளமையது
நிச்சயமாய்ச்சொல்லி நீரனுப்புமென்றுரைத்தார்
அப்போதுநாராயணரும் அகமகிழ்ந்து
செப்புகிறேருமென்று தேவனுக்கங்கேதுரைப்பார்
கேளாநீதேவா கீளானமங்கையரை
தாழாதமேல்வகையில்ச் சரியாக்கவேணுமென்று
நின்றுய்த்தவத்தில் நினைவொன்றைதானட்டி
சண்டாளாநீநினைத்த நினைவுதவத்தொத்திடுமோ
சூழ்வினையறுத்து சுருதிநேருள்ளாக்கி
நீளநூலிட்டு நீதவசுநிற்கையிலே
ஆசைநினைவாமோ அறிவுகெட்டமாதேவா
பாசமறுத்தல்லவோ பரகதியைக்காணுவது
ஏதுகாணுந்தனக்கு இன்னினைவுவந்ததினால்
மாதுபிறந்ததுபோல் வையகத்தில்நீபிறந்து
இந்தநினைவதற்கு இனிப்பிறந்துநீசிலநாள்
தொந்துயரமெல்லாம் தொய்புவியிலேதுலைத்து
கண்டந்தமங்கையரைக் கருவால்வசமாக்கி
கொண்டுதிரிந்து கோதையரின்றன்னாலே
நஞ்சுதின்றாலும் நாண்டுகொண்டாலும்
உன்சீவன்மாய்க்க உனக்குமனதாகி
யின்னுஞ்சிலநாள்க்கழித்துப் பெண்ணேடுறவாடி
தன்னோவியம்போலத் தானிருக்குநாளையிலே
உன்துயரந்தீர்த்து உன்னையெடுத்தென்மகவாய்
என்றுயரமெல்லாம் யானேநீமாற்றல்செய்து
என்வரிசைதானம் எல்லாமுனக்களித்து
பொன்னரசுதந்து புவியாளவைத்திடுவேன்
என்றும்கிஷ்ணர் இப்படியேசொல்லிடவே
அன்றந்தத்தேவன் அவரடியைத்தான்போற்றி
அய்யாவேபூமிதனில் அவதரிபோவென்றீரே
பொய்யானகலியன் பூமிதனிலேபிறந்தால்
பிறந்தவழியும் பிதிருமந்தக்குலமும்
அறந்தனைக்குமாலே அதுவுமென்னால்கெதிதான்
பெற்றுக்கொள்ளும்படிப் புத்திகொடுத்தருளி
பற்றுதலாகப் பலன்கொடுப்போமென்றுசொல்லும்
அல்லாமலென்னைவந்து ஆள்க்கொள்ளும்நாளதுதான்

எல்லாவிபரமதாய் இயம்பியனுப்புமையா
அப்பொழுதந்த ஆதிநாராயணரும்
செப்புகிறாரந்த தேவன்தனக்குத்திடம்
தெட்சணபூமிதனில் தேசபரசோதனைக்கு
நிச்சயமாய்நான்வருகும் நிசத்துக்கடையாளம்
பூமியிலோர்திக்கு பொருந்திமிகவர்ழும்
சுவாமிவேதமறந்து சுளல்வேதமுண்டாகும்
சாதிவாழ்வு தப்பிநிலைமாறும்
பாதிகட்குழப்பு பார்மீதிலுண்டாகும்
நீசக்குலங்கள் நெழுநெழெனைப்பூமிதனில்
தாசியிடதெண்டங் தொடர்ந்துபிடிப்பார்கள்
வானத்திடிகள் வருடவருடந்தோறும்
மீனினத்தில்வீழும் நின்றுமலைமுள்ங்கும்
பூமிமுளங்கும் பொழுதுமிகச்சாய்ந்துவரும்
சீமைதென்சோழன் சீர்பயிருமேவிவரும்
இலைகள்கருகும் இருவேதம்பொய்யாகும்
தலைகள்படலங் தட்டழியவோடிநிற்கும்
நட்சத்திரமுதிரும் நடக்கும்வழிதுறுகும்
பொய்ச்சேத்திரக்குருக்கள் பூமிதனில்மேவிவரும்
நவ்வாதுலுக்கு நாடிக்கலசல்வரும்
சிவ்வாலயங்கள் தேய்ந்துசுவரிடியும்
கிணறுபாழாகும் கீழூற்றுப்பொய்யாகும்
இணறுபெருத்து யேங்குவாரேமனுக்கள்
மனுக்கள்தங்களுக்கு மாகலசலுண்டாகும்
முனக்கத்துரோகி உலகில்மிகவுண்டாகும்
மாமோகவாசையினால் மாசண்டையாகிவரும்
காமோகவெறியால் கனபழிகளுண்டாகும்
மாதாவைப்பிள்ளை வைப்புநினைத்துநிற்கும்
தாதாவைவேலை சந்ததிகள்கொண்டிடுவார்
மாட்டின்வயிற்றில் மனிதர்போற்றுன்பிறக்கும்
கோடானதுபெருத்துக் கொல்வார்சிலபேரை
காணிக்கைவேண்டல் கைக்கூலிதான்மீறும்
மாணிக்கந்தங்கம் வைரமிகமறையும்
நீணிலத்தில்பேய்கள் நிரந்துமிகக்கோட்டிசெய்யும்
மாணிலத்தில்வேளாண்மை மழையில்மிகக்கேடுவரும்
பேதையர்கள்பிள்ளை பிறக்குமதிசயம்போல்
கோதையர்கள்கொங்கை கூடாமலேவாழ்வார்
கூடப்பிறப்பைக் கொடும்பகைபோலெண்ணிடுவார்
வானமுறுமும மழைகீழ்ச்சொரியாது
தானமழியுஞ் சாத்திரங்கள்பொய்யாகும்
ஈனருக்குக்காலம் செம்பமெப்பவுண்டாகும்
வீணர்பெருப்பார் வீடதனைக்கெடுப்பார்
தாண்டருடவேதந் தலையழியவிட்டிடுவார்
மெய்வேதந்தன்னை விரும்பாதுகக்சிசெய்வார்

பொய்வேதம்பூமிதனில் பெருத்துமிகவுண்டாகும்
கள்ளர்பெருப்பார் கலியுப்புமேமலியும்
கொள்ளையாச்சம்மை கோடாமுக்கொடியுமாய்
நாணியிறப்பார் நஞ்சுதின்றேயிறப்பார்
கேணிக்குள்ளேயிறப்பார் கீறிக்கொண்டேசாவார்
வைரமுழுங்கி மாழ்வார்சிலபேர்கள்
துயரம்பொறுக்காமல் தோயமதிலேவீழ்வார்
ஈக்கள்பெருக்கும் எறும்புமிகப்பெருக்கும்
காய்கள்பெருக்குங் கஞ்சாஅபின்பெருக்கும்
சன்றுசிநிஷ்டை தவறியலேவார்கள்
ஒன்றுமதுசாதி உலேமெழுகுபோலலேவார்
கட்டழிந்துபெண்கள் கற்புமிகத்தவறும்
சட்டமழியுஞ் சந்தியம்பலமிடியும்
கூட்டங்குலேயுங் குடும்பப்பகையாகும்
நாட்டையரசாங்கம் நாலுரண்டுமூன்றாகும்
கோட்டையழியுங் குச்சுக்கட்டைமதிலாம்
சிவ்செங்கெதல்லாந் தீனில்லாத்தட்டழியும்
சூலைபெருக்குஞ் சூரவளிமீறும்
அக்கினியால்தண்ணீர் அநேகசீமையழியும்
முக்கியமாய்லோகமதில் வாந்திமிகமீறும்
இப்படித்தானல்லாமல் இன்னமனேகவளம்
செப்பத்துலேயாது செப்புவேன்பின்னுனக்கு
நீகேட்டதற்கு நிலேயாகவித்தனேயும்
நான்றேட்டமாக நாடியுன்றேடுரைத்தேன்
உன்பேரால்நானும் உள்ளாசைகொண்டிருந்துன்
தன்பேராலெந்தனக்குத் தலேச்சிறைதாண்மாறுமென்று
சொன்னேனுனக்குச் சொல்லுவேனின்னமுமே
என்னவிளிப்பிறக்க யேதுனக்குச்சங்கடங்காண்
என்றுரைக்கநாதன் இசைந்ததேவனுரைப்பான்
அய்யாவேயென்னுடைய ஆதித்திருவிளமே
பொய்யானகலியில்ப் பிறக்கப்போகச்சொன்னீரே
சாதிபதினெண்ணுய்த் தான்பிரித்தானேசன்
ஆதிசாதிதனிலே அமையுமையாவென்கோவே
அல்லாமலுந்தனக்கு ஆதிவரையென்றும்
நல்லாகத்தொண்டுபண்ணி நவ்வியிருக்குமனுவில்
படையுமையாயெந்தன் பிதாவேயெனப்பணிந்தான்
குடையொன்றாற்பெரிய சூருவுமகிழ்ந்துரைப்பார்
நல்லதுகாண்தேவாநீ நம்மக்கள்யேழ்பேரில்
வெல்லமர்கோன்வாழும் வெற்றித்தெய்வலோகவித்தாய்
அவ்வழியல்மனுவில் ஆணசான்றோர்குலத்தில்
மெய்வழியிலங்கே மிகப்பிறக்கப்போநீயென்றார்
நல்லதுதானென்று நவிலுவார்தேவருமே
வல்லவரேமூவருக்கும் மைத்துனராய்நிற்போரே
என்னைப்பிறவி இப்போதுசெய்யுமென்று

வானவர்தேவாதி வணங்கிநின்றார்மாயவரை
அப்பொழுதையா நாராயணர்மகிழ்ந்து
முப்பொழுதுள்ள முறைமையதுகூறலுற்றார்
ஆறுதரம்நம்மை அகப்படவைத்துக்கொண்டசடம்
பேறுபெற்றதில்லையே பேறுநாமீந்திலையே
அச்சடலம்மலையில் அருந்தவசுபண்ணினதே
அச்சடலமீட்டுற இந்தநாள்வந்ததென்று
நற்சடலமானதை நருக்கென்றளித்துவிட்டு
மூவர்நடுவருட்ட முற்சடலக்கூட்டதையும்
வசவழைத்துவாருமென்று மறையோரைத்தானேவி
விரைவாகவாருமென்று விடைகொடுத்தாரெல்லோரும்
நடந்துமறையோர் நல்லமலைபார்த்து
சடமவீற்றிருந்த தங்கமலைமீதில்வந்தார்
மலைமீதில்வந்து மலைபுதுமைதான்பார்த்து
அலைமீதில்வாழ்துவாரம் ஆனபதிதனனுடைய
வடவாசல்நேரே வாழும்மலையிதுதான்
தங்கக்கிணர்வெங்கக்கிணர் தாம்பிறக்கின்றுடனே
சங்கமழிம்யிமலையின தடாகமிதுநன்றெனவே
கரைகாணத்தேவர் காச்சியிடும்மலைதான்
விரைவானமாமுனிவர் வீற்றிருக்கும்மலைதான்
மரித்தோரைத்தானெழுப்பும் வாயத்தசஞ்சீவிவளரும்
பதித்தானேமிமலையின பகுத்துரைக்கக்கூடாது
என்றுசொல்லித்தேவன் ஏற்றமலைக்குள்ளாக்கி
நன்றுநன்றென்று நாடியவர்பார்க்குகையில்
கண்டாரேகாயமும் கண்ணர்முக்கூட்டதையும்
கொண்டாடிக்கூட்டதையும் குளிர்ந்தரதமீதேற்றி
நடந்தார்கைலை நாதர்திருக்கூட்டமதில்
வடந்தாரமார்பன் வாயத்தவரிநாரணரும்
பார்த்துச்சடமதைப பதிந்தமுகத்தோடணைத்து
தேற்றியுயிர்கொடுத்துச் செப்புவார்கூடுடனே
எடுத்தபிறப்புக்கு எல்லாமெனைச்சுமந்து
அடுத்துமூவுலகும் அங்கமக்கொண்டேகி
பூமிகடலும் பொருப்புபூலோகமெல்லாம்
நமித்தெனைச்சுமந்து நட்டமுடன்றிரிந்தாய
நீசெய்தநன்றி நினைக்குரைக்கக்கூடாது
நானுனக்குச்செய்யும் நன்றிகளும்
இத்தனைநாளும எனைசுமந்துபாடுபட்டாய
புத்திரனாயெனக்குப் பெரியதெய்வயுகில்
பிறந்து விமீதில் பின்னுஞ்சிலநாள்கழித்து
சிறந்த[illegible]த்தயவிதில்ச் சேர்த்தேயுனையெடுத்து
உந்தலை[illegible]த்தி உபதேசநசரத்து
எந்தன்துயரமாற்ற யுகசோதனைகளுபயி
உந்தன்துயரமாற்றி யுகத்துயரமுமாற்றி
எந்தன்துயரமாற்றி ஏசர்துயர்மாற்றி

கலியையறுத்துக் கணப்பயங்கள் காணறுத்து
கலியில்லாத்தர்மத் தங்கநவரத்தினபதி
முத்துநவரத்தின முடியுமாகநானாளி
எத்திசையுமெய்க்க யேற்றமனு அண்டர்கள்
கட்டியங்கூறிக் காச்சியிட்டுந்தனக்கு
எட்டுத்திசைபோற்ற யேற்றதூடையொன்றுதந்து
அரசாண்டுநீயும் அழியாத்திருவுளம்போல்
வீரசான்றோர்சூழ வீரக்கொடிநிறுத்தி
செங்கோர்க்குத்தர்மச் சிவசெங்கோலுமருளி
எங்கோலரசும் என்னுமச்சக்கரத்தால்
சீமையன்பத்தாறுன் சொல்லொன்றுக்குள்ளாகி
பூமுகச்சிங்காசனமும் பொன்முகச்சிங்காசனமும்
கோமுகசிங்காசனமுங் குணமுகசிங்காசனமும்
மாமுகசிங்காசனமும் மயில்முகசிங்காசனமும்
அன்னமுகசிங்கா சனமீதேதாடாகவேதான்
பொன்னமபலம்போல்ப் பெரியசிங்காசனந்தான்
முப்பத்திரண்டு முழுதுமுனக்கருளி
செபபொத்தமாணுக்கர் சேவிக்கவுந்தனக்கு
தருவேனெனுன்னுடைய தாயார்பேராணையதாய்
எண்ணறையாநாதன் எடுத்தவர்க்கேயுரைக்க
நன்றெனவேநாதனோர் கற்பூரணனைக்கொண்டாடி
பேறுபெத்தசென்மம் பிராணனிதுநன்றெனவே
பூர்வத்திலுள்ள பூசாந்திரமிவ்வளமை
என்னதவஞ்செய்தாரோ இத்தேவன்தாய்தகப்பன்
பொன்னப்பநாரணர்க்குப் பிள்ளையெனவந்துதிக்க
நாரணரைப்பெறவே நல்லதசாதரும்
பூரணமாய்நின்றதவம் புகன்றிடவேகூடாது
பன்னீராயிரம்வருசம் பாரத்தவசுபண்ணி
முன்னூறுவ்ராமதாய் உலகளந்தோர்வேசமதில்
எண்ணுயிரத்தில் எடுத்தாரொருராமருரு
கண்ணுளர்தன்தனக்கு கர்பகம்போலிந்தேவன்
மதலையாகப்பிறந்து வையகத்தையாள்வாரென்று
கதலிவாய்நாதன் கற்பித்தாரிப்படியே
ஆர்பெற்றபேறும் அல்லப்பேறிப்பலந்தான்
பேற்பெற்றவரிவர்தான் பிறந்தயினமதிலே
நாடபிறந்தாலும்பெரிய நலங்கிட்டுமென்றுசொல்லி
தாம்பிறப்போமென்று சான்றோராய்த்தான்பிறந்தார்
அவர்கள்பிறக்க ஆனதெய்வபூரணனை
திவ்தமதுபார்த்துச் செய்தார்பிறவியது
செய்யச்சிவமுஞ் சிவவேதனுமகிழ்ந்து
வைய்யமழந்த மாலும்பிறவிசெய்தார்
கர்மக்கடன்கழிக்க கலியுகத்திலேபிறக்க
தர்மச்சம்பூரணனை தாணிப்பிறவிசெய்தார்
செய்தச்சடமதையுஞ் சுமக்கச்சடம்பார்த்து

மெய்யிசையுநாதன் மேதினியில்ச்செய்தனராம்
சடம்பிறக்கலோகந் தட்டுமிகமாறி
உடன்பிறக்கச்செய்தார் உலகளந்தோர்கற்பினையால்
அன்றுபிறவிசெய்தார் அவனிசோதனைக்கெனவே
எண்ணமில்லையென்று ஈசரும்மாயவரும்
கொண்டாடிஈசுரனைக் கூறுவாரச்சுதரும்
செண்டையகண்ணீசுரரே கேட்டீரோயெந்தனெண்ணம்
பஞ்சவர்க்கஞ்சல்செய்து பார்மீதில்நாணிருக்க
வஞ்சகநீசக்கலியன் வந்ததுகண்டேபதறி
நடுநடுங்கினாரோடே நல்லகலைக்கோட்டுமுனி
பொடுபொடெனவந்தான் போறவழிதனிலே
என்காணுமாயவரே எய்த்திளைத்தோடுவதேன்
கண்காணப்போறேனெனக் கலைக்கோடனுரைத்தேன்
என்னவிதத்தால் என்றேற அவனிசைய
சொன்னதுறுகலியன் சூழ்ச்சியிறலென்றவுடன்
அப்போமுனியும் அவனேதுசொல்லலுற்றான்
இப்போநீரோடுகிறீர் இவனையழிப்பதற்கு
எப்போவருவீர் இசையுமென்றான்முனிவன்
அப்போமுனியோடு அருளினதுநீர்கேளும்
மாமுனியேநீகேளு வஞ்சகநீசக்கலியை
நான்முன்னின்றுகொல்ல ஞாயமில்லைகேட்டிடுநீ
கலியனுடகண் கண்டால்பலஞ்சூடும்
இலியவனுயிரைச் செயிக்கவெவரால்முடியும்
முன்னின்றுகொல்ல மூவராலுமரிது
பின்னின்றவனவனைப் பேசாதேமாளவைப்பேன்
வல்லமையுங்காட்டேன் மாநீசன்கண்ணின்முன்னே
நில்லாமல்நின்று நீசன்தனையறுப்பேன்
அற்புதமுஞ்செய்யேன் அந்நீசன்கண்ணின்முன்னே
உற்பனமுங்கொடேன் ஒன்றறியாநின்றிடுவேன்
வந்ததெனச்சொல்வார் வரவில்லையென்றிடுவார்
எந்தன்போரோகாணும் யாரோவெனச்சொல்லுவார்
இதோதாவந்தானென்பார இவனில்லையென்றிடுவார்
அதோதாவந்தானென்பார் அவனில்லையென்றிடுவார்
இப்படியேசூட்சமொன்று எடுப்போநாமாமுனியே
எப்படியுமுள்ளறிவோர் எனையறிவார்மாமுனியே
அறிந்தோரறிவார் அறியாதார்நீறுவார்
செறிந்தோர்கள்வாழ்வார் சேராதோர்போய்மாழ்வார்
சாத்திரத்திலுந்தோன்றேன் சதுர்மறையைத்தாண்டிநிற்பேன்
சேத்திரத்திலுமடங்கேன் செய்தவத்திலுமடங்கேன்
அன்பிலுமடங்கேன் அறத்திலுமேயடங்கேன்
வன்பிலுமடங்கேன் வணங்கிடிலுமடங்கேன்
கும்பிடிலுமடங்கேன குவித்திடிலுமடங்கேன்
நம்பிடிலுமடங்கேன் ஞானத்திலுமடங்கேன்
யோகக்கிரியை உறுசரிதையிலடங்கேன்

விர்ப்பனத்திலுமடங்கேன் விநோதமதிலடங்கேன்
சொர்ப்பனத்திலடங்கேன் தெரிசனத்திலடங்கேன்
கனுவிலடங்கேன் கைகாட்டலிலடங்கேன்
அனுவிலடங்கேன் அச்சாத்திலுமடங்கேன்
இத்தனையிலடங்காது இருந்துபகைமுடிப்பேன்
என்றுநான்சொல்ல யேற்றகலைக்கோட்டுமுனி
மன்றுதனில்விழுந்து மறுகியழுதேபுலம்பி

விருத்தம்

மண்ணிலுமடங்கா மனத்திலுமடங்காமறையிலுமடங்கா
பலவசத்திலுமடங்காகண்ணிலுமடங்காகருத்திலுமடங்கா
கவியிலுமடங்கா பலவிதச்செபிப்பிலுமடங்கா
எண்ணிலுமடங்கா இகத்திலுமடங்காஇறையினிலடங்கா
இரங்கிலுமடங்கா ஒண்ணிலுமடங்காஉனைவந்தடங்கிட
உரைத்திடதிடமருள் யெனப்பதத்தடிமிசைவிழுந்தான்

விருத்தம்

மறையினிலடங்கா இறையினிலடங்காவணங்கிலு
மடங்காய்
பலவகைக்யிலுமடங்காய் நுறையினிலடங்காய்தொல்புவி
யிலடங்காய்
சுருதியிலடங்காய் சுகயினிலடங்காயுறவிலுமடங்காய்
யொழியிலுமடங்கா யுகத்திலுமடங்காய்ஒருவிதத்திலு
மடங்காய்
புறத்திலுமடங்காய் அகத்திலுமடங்காய் புகழ்ந்துனை
வருத்துரையென்பதத் தடிமிசைவிழுந்தான் [யடக்கிட

விருத்தம்

சரிகையிலடங்கா கிரிகையிலடங்காசயோகத்திலடங்கா
ஞானத்திலடங்காய் கலக்கியானத்திலடங்காய் கனவிலு
மடங்காய்
கருவிலுமடங்காய் உருவினிலடங்காய் உருவிலுமடங்காய்
யுகத்திலுமடங்காய் யோகிலுமடங்காய் உணர்விலு
மடங்காய்
உர்பனத்திலுமடங்காய் தவத்திலுமடங்காய் தழுவிலு
மடங்காய்
தனத்திலும்டங்காய் தயவிலுமடங்காய் அகத்திலு
மடங்காய்
புறத்திலும்டங்காய் மனத்தகத்தடக்கியுன் பதத்தடி
பணிந்திட
வருத்துரையெனப் பதத்தடிமிசைவிழுந்தான்

விருத்தம்

உகத்திலுமடங்காய் யோகத்திலுமடங்காய் உரைப்பிலு
மடங்காய்
உர்ப்பனத்திலுமடங்காய் தலத்திலுமடங்காய் தழுவிலு
மடங்காய்
தனத்திலுமடங்காய் நயனிலுமடங்காய் அகத்திலு
புறத்திலுமடங்காய் அசத்திலுமடங்காய் [மடங்காய்
புசத்திலுமடங்காய் அனைத்தினிலடக்கியுன் பதத்தடி
பணிந்திட வருத்துரையென பதத்தடிமின்சவிழுந்தான்

நடை

ஓரெழுத்துமீரெழுத்தும் உற்றபாமூன்றெழுத்தும்
ஆறெழுத்துமஞ்செழுத்தும் ஆறு அரியெழுத்தும்
ஏதெழுத்திலுமடங்கா திருந்துபகைமுடிப்பேனென்று
ஓதினீரையா உலகளந்தபெம்மானே
எட்டாப்பொருளே எங்குநிறைந்தோனே
கட்டாக்கலியைக் கருவறுக்கவந்தீரால்
நாங்களும்மைக்கண்டு நலம்பெறவெதப்படித்தான்
தாங்கள்மனமிரங்கித் தான்சொல்லவேணுமென்றான்
அப்போமுனிக்கு அருளினதுநீர்கேளும்
இப்போதுமாமுனியே இன்றுநீகேட்டதற்கு
ஒருவரறியா துபதேசங்கண்டாயே
கருகிவருந்தினதாய்க் கட்டுரைப்பேன்கேட்டிடுநீ
எனக்காகும்பேர்கள் இனங்கேளுமாமுனியே
புனக்காரமில்லை பூசைமுறையுமில்லை
கோவில்கள்வைத்துக் குருபூசைசெய்யார்கள்
பூவதுகள்போட்டுப் போற்றிநேமில்லார்கள்
ஆடுகடாய்கோழி அறுத்துவெலியிடார்கள்
மாடுமண்ணுருவை வணங்கித்திரியார்கள்
என்பெயருசொல்லி யாதொருவர்வந்தாலும்
அன்போடவரை ஆதரிக்கும்போராகும்
இரப்போர்முகம்பார்த்து ஈவதுவேநன்றாகும்
என்பேரால்முத்திரிகள் இட்டோரேநன்றாகும்
அன்போராய்வாழ்ந்தாலும் அறிவுநினைவொன்றானால்
நாம்வந்தோமென்ற நாமமதுகேட்டவுடன்
தாம்வந்துவேடமிட்டோர் சாதியதுநன்றாகும்
அல்லாமல்கேளு வேதியமுனியேநீ
எல்லாவமைப்பும் யேலமேவிட்டகுறை
உச்சாதிக்காச்சோ அச்சாதிநன்றாகும்
எவர்க்குமிகவீந்து இருப்போரேநன்றாகும்
அவர்க்குதவிசெய்தோர் அவ்வினமும்நன்றாகும்
தாழ்மையாய்வாழ்ந்த சாதியதுநன்றாகும்
ஏழ்மையாய்வருவோம் இரப்பன்பார்ப்பனென
இரப்பனைக்கைக்கொண்டோர் எனையேத்தார்மாமுனியே

பாப்பனைக்கைக்கொண்டோர் பரமேத்தார்மாமுனியே
சினமுமறந்து செடமுழிக்கும்பேர்மனுக்கள்
நினைவுக்குள்ளேநாம் நிற்போங்காண்மாமுனியே
இனத்தோடேயொத்து இருந்துமிகவாழ்ந்தாலும்
சொன்னநினைவதுக்குள் துயிலாமல்வாழ்வோங்காண்
மாசுகலியை மனதாடாதேயறுத்து
வாசுநினைவில் வந்துநிற்போமாமுனியே
பின்னுமொன்றுகேளு பூரணமாமுனியே
முன்னுகத்தில்கேள் ஒருவர்க்கோர்வாரமுமாய்
நின்றேன்முனியேயினி நீசுக்கலியறுக்க
சென்றோமேயானால் செய்யுந்தொழில்கேளு
காலுக்குள்ளேதிரியாங் கையதுக்குள்ளேதிரியாம்
மேலுக்குள்ளேதிரியாம் விழியதுக்குள்ளேதிரியாம்
கண்கெடுத்தோர்வாழ்வார் காணாதார்வீணாவார்
பண்டைப்பழமொழிபோல் பார்மீதிலோட்டிவைத்தேன்
கண்கெடுத்துக்கொண்டோர் கரையேறுவாரெனவும்
தொண்டனெனக்கண்டு சொன்னேனானுன்றோடு
தாய்தமர்களென்றும் தனதுகிளைகளென்றும்
வாயுரமாய்ச்சொல்லும் வம்பரென்றும்பார்ப்பதில்லை
அன்பாகிவந்தவரை அலைச்சல்செய்தேப்பதுண்டு
வம்பானமாத்தானை வளர்த்தேயறுப்பதுண்டு
எட்டியுமெட்டாது ஏழைக்குணம்போலும்
கட்டியுங்கட்டாத கடியசொருபமதும்
வேளைக்குவேளை விதக்கோலமுமணிந்து
நாளைக்குநாளாய் நடக்குமதிசயமாய்
இகபபலடிவாய் இருந்துகலிதனையும்
பரப்பரமாய்நின்று பத்திசோதித்தேநாம்
எங்குமிருந்து எரிப்போங்கலிதனையும்
சங்கிலிரந்து தான்வளர்ப்பேன் அன்போரை
என்றுரைக்கநாதன் எடுத்துமுனியேதுரைப்பான்
மன்றுதனையளந்த மச்சத்திருமாலும்
இந்தவிதமாய் எழுந்தருளிவந்திருப்ப
தெந்தச்சொருபம் எடுத்தணிவிசெம்பெருமாள்
கேட்டான்காண்மாமுனியுங் கீர்த்தியுள்ளஈசுரரே
நாட்டானமாமுனிக்கு நானுரைத்ததுகேளும்
இகாபரத்தைநானினைந்து ஏழுபிள்ளையீன்றெடுத்து
மகாபாவர்செயலால் மக்களுக்குசாத்திர
நானுபதேசித்து நாட்டில்மிகயிருத்தி
மானுபஞ்சேர்திக்க மகர்க்குவருள்கொடுத்து
மாசுகலியறுத்து மக்களொருமித்தவுடன்
பாசுபதங்கொடுத்து பாலன்கையால்விளக்கி
கூப்பிடுதலொன்றில் குவலயத்தைத்தான்கிறக்கி
சாப்பிடுவேனஞ்சைத் தன்பாலையாளைப்பேண்
என்றுகலைமுனிக்கு இயம்பிவந்தேனீசுரரே

அன்றுமொழிந்ததுக்கு அமைத்ததுகாணிம்மகவு
சந்தேகமாச்சுதுகாண் சங்கரரேகேருமிப்போ
வெந்தேசசந்தீர்ந்ததென்று வெள்ளிக்கைகலையிலே
ஒருவிடத்திலெக்கியத்தை ஊட்டிக்கனலெழுப்பி
திருநடனமாடுமென்று செப்பினாரொப்புடனே
அப்படியேநல்லதென்று அரனுமுமையாளும்
முப்படியேமாலினுக்கு கொன்பதாம்பிறப்பெனவும்
வேதனுக்கோராயிரம் பிறவியாச்சுதென்றும்
மாதுவுமைக்கு வளர்பிறவியேழெனவும்
திருவுக்கோர்பத்தாஞ் செய்யபிறவியெனும்
சதுர்மறைக்கேளெனவுஞ் சாஸ்திரத்துக்கோர்நான்கும்
வானவர்கோன்றனக்கு வளர்பிறவிமூன்றெனவும
தானவருக்கேழெனவுஞ் சரஸ்பதிக்காயிரமாம்
தொண்டர்தனக்குச் சூல்பிறவியொன்றெனவும்
அண்டர்கள்மெய்க்க அவர்நடனமாடலுற்றார்

திருநடனவுலா வெண்பா

1

நாதன்புறையார்க்கு நற்பிறவியொன்றுபத்தாம்
வேதன்றனக்குப்பிறவி ஆயிரமாம்வெண்டாள
மாதுக்குமாயிரமாம் மாதுமைக்—கோரேழாம்
சீதுக்குபத்தெனவே செப்பு

2

இந்திரர்க்குமூன்றெனவு மிறையவருக்கேழெனவும்
சந்திரர்க்கோரேழாஞ் சாற்று—நன்றியுள்ள
மறையதுக்குமோரேழாம் மானமுள்ளதொண்டர்களுக்கு
இறப்பிறப்பெல்லாப் பேறென்றியம்பு

3

என்றினைகளெல்லா மிப்படியேவந்ததென்று
ஒன்றியுள்ளசித்தாதி யோகினார்—பண்டையுள்ள
தாவடத்தைமேவிடத்திக் கோர்விடத்திலோமிடத்தி
னாவிடத்தி பூண்டாடினார்

4

தன்னால்முளைத்த சர்க்கணையின்றூன்வாங்கி
பின்னாலேயோர்கணைப் பீறி—பின்னாலே
பீறுங்கணையதினால் பெரும்புவியெல்லாந்தோன்றி
சீறுங்கலவயதால்ச் சென்றதே

5

வானத்தழவில்வளர்ந்த—கம்பத்தன்னருளால்
சேனைச்சிகம்படைத்த செல்வமே—மானத்த
மாகலியனைதுவினால் வாழ்விழந்திவ்வுகமும்
போகத்தான் பூட்டினதிப்போது

6

நல்லாறுசாஸ்திரமும் நாலுமறைவேதமதும்
பொல்லாக்கலியனால் பொய்சூடி—பொல்லா
பொடியக்கலியோடும் பொன்றியடிவேறவே
இடியத்தான் வந்திதாத்தநின்று

7

பக்கம்பதினைந்தும் பார்மேடம்பன்னிரண்டும்
வக்கணைகோளொன்பதுவு மங்கி—யக்கிகொண்
டழுந்தகலியோ டலமாந்தளிந்திடவே
சுழிந்துகள லாறுவந்துசுற்றி

8

மாந்திரதந்திரத்தை வைத்தியவாகடத்தை
சூழ்ந்திருந்த வச்சரத்தைதச்சோதித்து—ஏந்திருந்த
ஆழகுகலியோ டிம்முறையெல்லாமொடுக்கி
களவறுக்கச்சோதி யொன்றுகாணுதோ

9

ஐயமிட்டுண்ணு தரும்பாவியாவரையும்
பொய்யரையும் வெட்டிப்பெலியர்க்கி—மெய்யிழந்து
கையுங்கலியோ டனலாவிகொண்டெரிக்க
வெய்யவன்போல்ச் சோதியொன்றாகுமே

10

பத்திசோதித்தே பலநாளுங்காத்திருந்த
வித்தகனை வந்து வேண்டார்மேல்—வீடிழந்து
செத்திறந்திநரகச் சிக்குட்டுலையடைக்க
கொத்தியருந்த புழுக்கள்கொஞ்சுதோ

11

பாங்கலியனைதுவினால்ப் பண்டுண்டுசெய்ததெல்லாம்
மூங்கிக்கலியினுள்மூடி மூச்சுவிட்டு
ஓங்குவதோங்கி யுறங்குவதுதானுறங்கி
முங்கிக்குழிப்பு நாள்முற்றுதோ

12

லச்சைகெட்டபாவி யென்றுவந்தானன்றுமுதல்
நர்ச்சடலங்கள் நல்வகைகளாடிளந்து—காணமுற்று
பச்சிமுதல்மாமிருகம் பால்நரிகள்கற்றாவும்
அச்சமற்றுவாழ் புலியொன்றாகுதோ

13

பொல்லாதுயரங்கள்கொண்ட பேய்ச்செடிகடாறொழிந்து
கல்லாதபுல்லர் கருவொழிந்து—நல்லோராய்ச்
சாகாமல்நாளும் நகரொன்றதுக்குள்
சொல்லென்றாளச்சோதி யொன்றுதோன்றுதோ

14

தாணுமால்வேதன்றற்ப் பொளாய்முப்பொருளும்
ஆனுவமாய்யொன் றிலடங்குதோ—அஞ்செழுத்தும்
ஆறு அரியெழுத்து ஆங்காரமூன்றெழுத்தும்
ஓநமோவென் றதுக்குளொடுங்குதோ

15

ஆகாதவஸ்துவெல்லா மழித்துநாகிவிட்டு
வாகாய்க்குழிமூடி வந்ததோ—சாகாத
சனங்கள்பலவஸ்துவையுந் தர்மபதிராச்சியத்தில்
இனங்களொன்றாயாள ராஜாவொன்றாகுதோ

16

பொன்னாற்றுதன்னாற்று புரவுதன்னால்விளைழஆற்று
முன்னாற்றுயோசனை யல்லாசுழி—பன்னாற்று
பாலாற்றுமேலாற்றுச் சேலாற்றுவாலாற்று
மாலாற்று மாபதியுமாகுதோ

17

செப்பொற்றபொன்னுஞ் சிவமேடைசிங்காசனமும்
முப்பதிரண்டறம் மோங்குதோ—ஒப்பற்ற
ஊர்தெருவுமொன்றதுக்குள் ஓர்யோசனைத்தெருக்குள்
சீர்பதினாயிரத் தெண்சேருதோ

18

தெருக்கள்பதினாயிரத்தெண் செந்திருமால்வாழ்பதிக்கு
குருக்கள்விஞ்சைதானென்று கூறுதலோ—மருக்கள்
மாறுமல்வாழ்பதிக்கு மனங்கொடுத்துநிற்பதல்லால்
வேறூர்களும் பறிக்கவேண்டுமோ

19

பொர்மைபதியில்ப் பொன்வாசலொன்றதிலே
தர்மமணியொன்று தூங்குதோ—தர்மமணி
மணியினதுகூறறிய மணிகணீரென்றதல்லால்
இனியிருளில்லா தேகுதோ

20

அலைந்தலைந்தசூரியனு மவனலையச்சயாமல்
நிலந்தெரியவெப்போதும் நேரேநலைந்தலைந்த
கார்மேகத்தட்டெல்லாங் கண்டுடைந்துவானமதில்
ஊர்மேகமெல்லா மொருமேகமாகிடவே

21

மாணிக்கச்சிந்தை துலங்கிவெழிகாட்டுமல்லால்
காணிக்கையென்ற யிறைகாணுதோ—மாணிக்க
கல்லால்வளந்தபதி காணுமொழியல்லாது
பொல்லாரெனப் பேர்கள்போச்சுதோ

22

ஈசர்நடன மிருபத்துவொன்றதுக்குள்
தேசமதுதீது நலஞ்செப்பினர்—வாசமுடன்
வன்னியமர்த்தி மாதுமையைத்தானேக்கி
உன்னிச்சிவமு முரைப்பார்

நடை

ஈசர்மகிழ்ந்து யேந்திழையைத்தானேக்கி
வாசமுடனீசர் வகுப்பாரம்மாளோடு
முன்னேமொழிந்த முர்த்தாண்டவமதுக்கு
பொன்னேயிந்நேரம் புரிந்ததுநீகண்டாயே
அப்பொழுதிசௌரியும் அரனைமிகப்போற்றி
செப்போடுவொத்த சிவனேசிவபரனே
ஆடினீரேதாண்டவந்தான் அனேகவளங்கள்சொல்லி
பாடினீரேஅய்யா பாட்டுவழுகாதே
தாண்டவமாடிப்புரிந்தால் சத்திசிவம்வரையும்
மாண்டாரைப்போல்க்கிடந்து மறுத்தெழும்பவேணுமல்லோ
அல்லாமலென்னுடைய அண்ணர்நினைப்பதிலே
நல்லவரேகொஞ்சம் நானறிந்ததுகேளும்
காரணமாயண்ணர் கலியுகத்தைதமுடிக்க
நாராயணர்பூமியிலே நடப்பதுநிசமானல்
நம்மையுமிங்கிருக்க வொட்டார்காண்நாராயணரும்
எம்மழையிலானாலும் எவ்வெயிலிலானாலும்
கொந்தலிலானாலுங் கூர்பனியிலானாலும்
கந்தத்துணிகள்தந்து கையில்த்திருவோடுதந்து
எந்தனுக்குநல்ல இழுங்குறத்திவட்டிதந்து
மைந்தன்சரவணர்க்கு மறிப்புமிகக்கொடுத்து
பிரமனுக்குக்கோலமிட்டு பிசாசுதனைவெருட்டி
வரமுள்ளதேவதைக்கு மாற்றிவுருக்கொடுத்து
லோகமதில்நம்மையும் முகக்கோலங்களிட்டு
வேகத்துடனேமேதினி யெல்லாந்திரிந்து
கலிகள்அகலக் காண்டங்களிக்கவென்று
பலிகாணவைப்பார் பரசோதனைக்கனுப்பி
இப்படியேதோணுதுகாண் என்னுடையசிந்தையிலே
ஏப்படியும்வந்து இதுசமயமீசுரரே
என்றுவுமையாள் ஈசர்தனைவணங்கி
அன்றுமொழிந்து அவள்நிற்கும்வேளையிலே
நாராயணரும் நல்லசிவனிடத்தில்
சீராகவந்து தெண்டனிட்டுத்தானிருந்து
இருந்துமாலோனும் இருதயத்திலுள்மகிழ்ந்தார்
பொருந்துவிழிதங்கையோடு புகலுவாரம்மானை
என்னுடையதங்கையரே ஏனைமேனியாக்குவளே
உன்னுடையதன்பொருட்டால் உலகளந்தோநானுகி
நாட்டிலென்பேரும் நடத்திவைத்தநண்ணுதலே

கோட்டுவரையானே கோவேயென் தங்கையரே
நீயுநம்மீசுரரும் நீனிலத்தில்போகவென்று
நானும்நினைத்திருந்தேன் என்றுநவின்றுமே
ஈசுரர்க்குமீசொரிக்கும் இந்தநினைவானால்
தேசமதில்போக வேண்டாமென்றுசொல்வாரோ
நானுங்களைவலிய நாட்டில்போமென்றிலனே
நானுங்கள்தன்னினுவில்த் தரித்ததுபோலேபோவும்
நீங்கள்நடப்பதென்றால் எனக்குவெகுசந்தோஷம்
தாங்கள்மனதிரங்கிச் சாற்றிமிகப்போவுமென்றார்
அப்போதுஈசுரனுர் அச்சுதனைத்தானோக்கி
மைப்போடுங்கண்ணினிய மைத்துனரேயென்றுவி
சொல்லுச்சொல்லாதபடி சொல்வதற்கும்மையல்லால்
அல்லும்பகலும் அலைந்தாலுங்கிட்டாது
போமென்றுசொல்லாமல்ப் புத்திசொன்னுப்போலேநீர்
தாங்கியுரைத்திரோ சத்தியுள்ளமைத்துனரே
புத்திமிதுநன்று புண்ணியநாராயணரே
தத்தியுடநடக்கத் தருணமெப்போதென்றுரைத்தார்
நடக்கக்கருமமிது நல்லதுதானென்றுசொல்லி
அடக்கமுடனே அய்யாநாராயணரும்
ஒத்திருந்துதங்கள உர்பனமாயர்ராய்ந்து
புத்திபோல்வாசகங்கள் பூத்தானமாயெழுதி
நாட்டுநருளறிய நடைசிவசெந்தறிய
காட்டுமரமறியக் கல்லப்புத்தானறிய
புற்பூடறிய பூமிதெய்வாசறிய
நர்ப்பதிந்துபேய்கள் நடுங்கிமிகவறிய
சேடனறிய சிறுவாயுதானறிய
மேகமறிய மேலோர்கடானறிய
பூகமறிய பொழுதுசந்திரனறிய
நச்சேத்திரமறிய நமனறியக்கோழறிய
பொய்ச்சரிமைகிரியைப் பெயர்நாலுந்தானறிய
வேதமறிய விழுங்குமறையறிய
வரைதயறிய மன்றுபதினுலறிய
சங்கறியமுத்தறிய சகலமச்சமுமறிய
அங்கறியநாம்படைத்த வல்லோருந்தானறிய
எழுதிவிடுவோங்காண் எத்தறியபுத்திவைத்து.
பழுதுவைத்தாரென்று பார்முழுதுஞ்சொல்லாமல்
நம்பேரில்குற்றம் நகத்தளவில்லாமல்
பம்முதலாய்நாமும் பரிந்தெழுதித்தான்விடுவோம்
என்றுதிருமாலும் இறவாதவீசுரரும்
மன்றுபடைத்த மறைரோனும்பார்வதியும்
சரசுபதியும் சத்தியுள்ளலச்சுமியும்
விரசுமுனிமாரும் வேதமறையோரும்
சாத்திரருங்கின்னரரும் சங்கத்துறவோரும்
பார்த்திவனுந்தெய்வப் பாவணர்தான்முதலாய்

வானவருந்தேவர்களும் மற்றும்சித்தாதிகளும்
தானவரும்வேதத் தம்புருக்காரர்களும்
சங்கம்வரையுந் தாண்டவர்கள்தான்முதலாய்
எங்கெங்குமுள்ள இருள்சிமுதல்த்தான்வருத்தி
வல்லோர்களவாழும் வைகுண்டமீதில்வந்து
எல்லோருங்கைலை இடமிட்டெழுந்தருளி
கங்கைநதிகண்டு கரைக்கண்டர்தேவர்வரை
கெங்கைதீர்த்தமாடிக் கிஷ்ணர்பதிபுகுந்து
மேடைவிதானமிட்டு மிகுமேடைபொன்னழுத்தி
வாடைகமழவிட்டு வானவர்கள்பாடவிட்டு
எக்காளடம்மானம் எங்கும்முழங்கவிட்டு
மிக்கபுராணகலை மிகுமறையோர்போற்றவிட்டு
ஆகமங்கள்போற்றவிட்டு அரம்பையர்கள்கைகாட்டவிட்டு
போகமுனிசுத்தரெல்லாம் ப்ராணக்கவியோசைவிட்டு
மும்முதற்குத்தேவரெல்லாம் முறையிட்டுவாழ்த்தவிட்டு
சங்குத்தொனிகள்விட்டுச் சகலோரும்போற்றவிட்டு
இத்தனைநல்ச்சிறப்பும் இதமாயலங்கரித்து
வித்தையதுதண்டரமு விழியாளைத்தான்வருத்தி
கெங்கைநதிமூழ்கிக் கிரணபச்சையாடைபெய்து
சங்கையுடனாபரணஞ் சரசுபதியணிந்து



குழல்முடித்துக்குழையிற் குவிந்ததங்கத்தோடணிந்து
வழையல்முறுக்குமிட்டு மார்பிற்பொற்றேருமிட்டு
பச்சைநிறக்காப்பணிந்து பவளமணித்தண்டையிட்டு
மச்சமதில்மையெழுதி மகிழ்ந்தமூக்குத்தியிட்டு
தண்டாளமீதில்த் தங்கத்தகட்டணிந்து
கொண்டைதனில்த்தேன்மலரைக் கூவியமிகச்சூடி
பொற்சருகைச்சேலை பெரியமேத்தாப்புமிட்டு
அச்சரக்கைத்தோழி அரம்பையர்முன்னடிவர
அன்னநடைநடந்து அனல்கொழுந்திட்டார்போல்
வன்னவழகுடனே வந்தாள்திருமுன்பிலே
மாதுவரவே மறையோனுமாயோனும்
ஏதுகோலமெனவே எண்ணமதிலுன்னினாராம்
உன்னித்திடமாய் உள்மகிழ்ந்துமாயவனும்
கன்னிதனைப்பார்த்துக் கரைக்கண்டர்தாமுரைப்பார்
வன்னத்திருவடிவே மறையோனின்தேவியமே
அன்னமடமாதே அரசுக்குகந்தவளே
கருத்துடையசோதிக் கவியுடையீருந்தனையும்
வருந்தினகாரியந்தான் வகுக்கக்கேளொண்ணுதலே

நாட்டிலொருசேன் நன்றியறியாப்பிறந்து
மேட்டிமையால்லோகமெல்லாம் மெய்யழித்தான்கண்டாயே
கோட்டிப்பட்டவன்பிறந்து குருநீதியைக்கெடுத்தான்
கேட்டிருக்கக்கூடாது கெடுநீசனைப்பொல்லாங்கு
நம்மைநினையாததுதான் நமக்குச்சற்றெண்ணமில்லை
செம்மையுள்ளசாஞரை செய்தபங்கமேக்கலேய
தெய்வப்பிறவியல்லோ இசைவென்றசான்றோர்கள்
மெய்வரம்மையெல்லாம் மிகக்கெடுத்தான்மாபாவி
கற்பகலாப்பெண்களுட கற்புக்கிரங்காதிருந்தால்
உற்பனமேமாநாமள் உடையபரனென்றுமேமா
எளியவனைவம்பால் இடுக்கஞ்செய்தேயடித்தால்
விழியிட்டழுதாலும் மேதினியில்கேள்ப்பதில்லை
கெளாதகாரணத்தால் கீர்த்திகொண்டேபெரியோர்
நாளானநாள்வழியாய் நம்பிநம்பேரில்வைத்தால்
அல்லாமல்நம்முடைய அரிதன்மகாநாமமதை
இல்லாமலேமறைத்தான் இயல்புகெட்டமாநீசன்
ஆறுலும்பாரமில்லை அன்னீதம்பொறுக்கரிது
மாணபரஞாயமதை வரம்பழித்தான்மாநீசன்
ஆகமத்தைதக்கூறழித்தான் அன்னீதமாபாவி
தாகமடைந்தார்கள் தவசுமுனிமார்களெல்லாம்
நீசப்பசாசு நீனிலத்தைக்கொள்ளைகொண்டு
தோசப்பயலோடு துணையாய்மிகக்கூடி
கொடுக்கவொன்றில்லா நருள்பார்த்துக்கொல்லுதுகாண்
இதுவேவொருகொடுமை அனேகம்பொறுக்கரிது
எதுவும்வரம்புதப்பி இருக்குதுகாண்வையகத்தில்
ஆனதால்நாங்கள் அவனிதனில்போயிருந்து
மா முன்றிசோதித்து மனுவிடுக்கந்தான்தீர்த்து
நாட்டிலுள்ளதுற்றம் நாங்கள்கேட்டுத்தீர்த்து
ஓட்டுவதையோட்டி உறைப்பதையுறைப்பித்து
நாட்டையொருசொல்லதுக்குள் நலமாகவாழ்விக்கவே
பேணவென்னமாமயிலே பெண்ணாசையிப்பாது
நாங்கள்நடப்பதற்கு நாளானநாளிதுவே
ஆனதால்ப்பாவி அவனிழுக்குச்சொல்லாமல்
மானமுள்ளபுத்திமைப்போல் வாசகமொன்றேயெழுதி
வருவோமெனவயச்சால் மாபாவிதானறிந்து
கருவிதழறிக் கற்பினைக்குள்ளாகுவதும
எ.. வோவென்று குடும்புசெய்வதுமறிய
அவனறியவிட்டதுபோல் அவனிபதிஞைறிய
எவருர்புறப்பூண்டுவரை எவ்வகையுந்தானறிய
எ.றதியொருவாசகந்தான் இப பாவிடவேணுமென்று
முழுதுமுன்னிங்கே ஓடிவாவென்றதுதான
... சுபதி அ..வரா. மாமயிலும
... இவ்வகைக்கு யாவென செயகரு.ம்
எல்லாநகிருபை எமபரே வுண்செயலு

அல்லாமலெந்தனக்கு ஆருமோயேதாலும்
ஆட்டுவதுநீயலவோ ஆடுவானுக்நீயலவோ
ஓட்டுவதுநீயலவோ ஓடுவானும்நீயலவோ
சொல்லுவதுநீயலவோ சொல்லவைப்பானும்நீயலவோ
அல்லும்பகலும்நீயல்லவோ அழியாதவரும்நீயலவோ
எல்லாமுமது இருபையென்க்கல்லாது
சொல்லயிதுவந்தமெதன்ன சுவாமியெனப்பணிந்தாள்
மாதுதிருமால் மலர்ப்பாதக்போற்றிடவே
ஆதித்திருமால் அவரோதுசொல்லலுற்றார்
நீயுரைக்கநாமெழுதி நீனிலத்தில்விட்டதுண்டால்
வாயுரைக்கக்கூடாது மற்றோர்களாராலும்
வம்புரைக்கக்கூடாது வம்புரைத்தால்வன்னரகம்
உம்பதுவேயல்லால் உறுகெதிகள்காணார்கள்
ஆனதாலுன்பாக்கும் அரிஅச்சரமுங்காண்பித்தால்
மானமென்னவாகுமென்று வருத்துரைப்பார்பாமென்று
அப்போசரசுபதி அன்போடுளமகிழ்ந்து
செப்புகிறாள்நல்ல திருவாசகந்தானம்மானை

திருவாசக விருத்தம்

கலையோடுகலையைத்தாக்கிக் கண்ணின்மேல்கருணைநாட்டி
மலையோடுமலையைத்தாண்டி வளர்ந்தவன்பதமேகண்டு
சிலையோடுசிலையிறைழுஞ் சிவபரக்கிருபையென்றே
அலைகலைமுளக்கம்போலே அவளுரைகூறலுற்றாள்

விருத்தம்

கூறியவாசகத்தைதயிந்தக் குவலயத்தோர்காண
மீறியமொழிகள்சொல்லி விளம்புவார்நாசமாகும்
தேறியபூதத்தோடு தேர்ந்துணர்ந்தவரேவாழ்வார் [பார்
கூறியவாசகத்தையுள்ளங் கொண்டவர்குருவைக்காண்

விருத்தம்

ஒருதிருவிபூதியுண்டை யொருயிருமிச்சமாகும்
ஒருதிடத்தேதங்காய்போலும் ஒருமனத்திரணபோட்டு
கருதிடவெற்றிபோக்கும் கனிந்திடுவோர்க்குமூவர்
வருகிடஞாயமையயின் வழியிதுவாகுந்தானே

விருத்தம்

முனுமொழியிதுவாமெனறு மதத்துடன்பேசுவோர்க்கு
இனிதல்லவீண்தாமென்று யம்பியபகஞ்ஞர்தன்னை
குனிதவ்ள்துர்கைசென்று சொன்றவன்நாகபூந்தி
கனிதுடன்துர்கைவாரி கடற்றீர்த்தமாடுவாளே

வேறு

எறும்புகடையானை முதல் எண்பத்திநான் குயிர்கள்
எழுகடல் திரைவுபுவிகளும் ஆரதிமதிகுயிர்கள்
பருதி ஈலாழியும் மிசவாயுதரைய்

தெறும்புமாமலைமாமரச் சோலையுஞ்சேடனும்
தலைமுடனும் அறியவே தென்கீழத்தேவரும்
மிங்குள்ளமூவரும் தேசதெய்வேந்திரன் அறிய
வாசமுனிவோர்களும் வேதசன்னியாசியும்
மறைமாறுசாஸ்திரம் அறிய வேமண்டலம்அளந்தகை
கொண்டெழுதுவாசகம் மண்டலர்எவருமே அறியவே
வறும்பகல் தொளாயிரத்தெண்ணூறெட்டாண்டினில்
வளர்சாம்பவமூர்த்தியும் மகாபரசுராமரும்ஸ்ரீராமசேயரும்
பதியேறும்மூர்த்தியும் வண்மைபார்த்திந்தகலியுகத்தில்
படுநீசக்கலியினால் வரும்வண்மைமையபகர்ந்து
திருவாசகம்எழுதி பலநூல் அறிந்தவர்எவர்அவர்களும்
பக்தியுடனெக்காலமும பணிந்து திருவாசகத்தைதமுத்தியணைந்
தோர்க்குமிகுபலனுண்டாம் பகரக்கேழுந்தியுடன்
பூலோககலியுகாதேசத்தில் நடக்கும்முறைதானும்கேளீர்

வேறு

நல்லவீரபுரந்தர தற்மராசாவங்கிசத்திலே
நாடுமொருமதலைபிறந்து வந்தவுடன் நல்லஅருணாசலத்திலே
வாலிபப்பிள்ளையாயிருக்கிறார் அந்தபூலோககலியுகத்திலே
ஆசாரமாய்இருக்கிறபேர்களும் அழுக்கானபுத்தியர்ய்
இருக்கிறபேர்களும் அனைவர்ஆங்காரமாகியே
அழிந்துபோவார்கள் அதின்மேல்பதினெட்டு
துர்க்கையம்மாள்பிறந்து அந்தகலியுகபஞ்சமிர்த
ராஜ்ஜியத்திலேவருகிறார்கள் வந்தவுடனே மூன்று
நாள் இருள்மூடியானைத் துதிக்கைபோல்மழைபெய்யும்
மதிலேசிலதுர்ச்சனர்களெல்லாம் மாண்டுபோவார்கள்
அதின்மேல்பக்தியாய் இருக்கிறபேர்களுக்கும்
பிள்ளையில்லாம லிருக்கிறபேர்களுக்கும்
கண்ணில்லாம லிருக்கிறபேகேளுக்கும்
தனமில்லாம லிருக்கிறபேர்களுக்கும்
பராபரமூர்த்தியும் சாம்பசிவமூர்த்தியுஞ்ஸ்ரீராமசேயரும்
தீட்சையாகிதிருமணதிரங்கி பக்திகாரணங்களை
சோதித்துபகிர்ந்து அவரவர்கேட்டவரங்களைக்கொடுப்பார்கள்
இன்னும்சிறிதுநாளையிலே சிலபேர்கள்தெய்வீகமாய்ப்
முன்னுக்குபழைதட்டும் [போவார்கள்
உலகில்பலபலவஸ்து பலிக்குமெனப்பகுத்தார்
சிலநீசர்மிககறுப்பை நினைவில்லாதுதொட்டு
மிகப்பாசமடைந்து அலைந்துஅமிழ்ந்துபோவார்கள்
வாலிசுக்கிரீபனும் பண்டாரமாகிப்போவார்கள
வாச்சி, கொழு, கலப்பை எல்லாம்நாசமாகிப்போய்விடும்
முன்னாலேதுலுக்கர்தனை நாசம்பண்ணுகிறதற்காகவே
துர்க்கையம்மாளை பிறவிசெய்துஅனுப்பியிருக்கிறோம்
பிராமணர்நன்றாக சுகத்துடன்வாழ்வார்கள் [புகிறோம்
புவியில்முகத்துலிங்கம் இல்லாதபேர்க்குபிரமதேவனை அனுப்

பிரம்மதேவர்புவிமீதில்வந்து பத்திகாரணங்களைசோதித்து
பொல்லாதபேரைதெரிந்துபிடித்துபுதுக்ராமதேசத்தில்வாழும்
தேவதைக்குபூசைபண்ணிபோடுவார் எனப்புகட்டினார்
காவேரிஆற்றுக்குள்ளே மூன்றுபொதிமங்கிலியம்
கவிழ்ந்து அடையவேணுமென்றும் காசினியில்ஒரு
ஏழுபெண்பிள்ளைகள் ஒருஆண்பிள்ளையை
அடர்ந்துபிடிப்பார்களென்றும் அறுத்தமங்கிலியத்தை
மிகுத்துகெட்டுவார்கள்என்றும் இன்னுஞ்சிறிது
நாளையிலேகேள்வி கேளாமலிருக்கிறபேர்களுக்கும்
துர்ச்சனராயிருக்கிற பேர்களுக்கும்
வர்த்தகராயிருக்கிறபேர்களுக்கும் தம்மில்ஒருவருக்கொருவர்
சண்டைபோட்டு மாண்டுபோவார்களென்றும்
போனபேர்கள்போக இருக்கிறபேர்கள்
புண்ணியபுருஷரை தெரிசனம்பண்ணிக்கொண்டு
சர்வபாக்கியத்திலே அடைவார்களென்றும்
மூன்றுலோகத்துக்கு ஒருவால்வெள்ளிஉண்டாக்கி
நெருப்புப்போட்டுக்கொண்டு வருகிறோம்
அதினால்மானிடர்களெல்லாம் முறந்துஉட்க்கொள்ளை
பிறக்கொள்ளையடிப்பார்களென்றும் நமக்குநன்றாய்தெரியும்
நான்ஆதற்குமேல்பூலோககலியுகபஞ்சமுர்தாச்சியத்திலே
பண்டாரவேசமாய்வருகிறோம்
நாம்வருகிறபோது மண்ணெல்லாங்கிடுகிடென்றுடும்
மலையும்வனமும் முழங்கித்திடுக்கிடும்
அப்போததிலே அநேகதுர்ச்சனர்களெல்லாம்
மாண்டுபோவார்கள் போனபேர்கள்போக
இருக்கிறபேர்கள் புண்ணியபுருஷராயிருப்பார்கள்
மந்திரதந்திரவைத்தியங்களெல்லாம் மறைந்துபோய்விடும்
வாதைபேய்களெல்லாம் வடகைலாசத்திலேபோய்
சட்டுத்தீர்ந்துபோவார்கள் ஏழுசமுத்திரத்திலே
மூன்றுசமுத்திரம் இருள்வாங்கிப்போய்விடும்
ஒருசேர்வைவிபூதி ஆறுசக்கரத்துக்குவிற்கவும்
ஒருலிங்கம் மூன்றுவராகனுக்குவிற்கவும்
ஒருகுளஞ்சிஜலமெடுக்கவும் 2 நாழிகைவழிக்கு
ஒருதண்ணீர்பந்தலும் 3 நாழிகைவழிக்குஒரு
தர்மசாலைமடமும் நன்றாய்முகியும்
தர்மம்கொடுக்கிற பேர்கள்உண்டு
தர்மம்வாங்குகிறபேர்கள் இல்லையென்று
சொல்லுகிறவெயிலாள் மடக்கொடியாள்
வயிற்றிலேநாடுமொரு மதலைபிறந்து
பத்துவருடமாச்சுது நாங்களும்மகாஅருணாசலத்திலே
நாங்களும்வாலிபப் பிள்ளையாய்இருக்கிறோம்
அந்தவாலிபப்பிள்ளை என்னசொல்லுகிறார்என்றால்
வீரபுரந்தரதர்மராஜவழியிலே விகிநாராயணர்
இங்கேவந்து மூன்றுமாதத்திற்குதபசுபண்ணி

ரண்டுமாதத்திற்கு மேல்வருகிறார்
வந்தவுடனே அன்னியோன்னியகலகமாகும்
அந்தகலகத்திலே ஒருவர்க்கொருவர்
சத்தியமாய்போவார்கள் அவர்களுக்குவேண்டிய
பாக்கியத்தைதக்கொடுப்பேன்——998-ல்

விருத்தம்

பாக்கியம்கொடுப்போம்நாம் பலனுடன்வாழுவோருக்கு
கோக்கியகருணையுண்டாம் நோவில்லாதிருந்துவாழ்வார்
தாக்கியவாசகத்தின் தன்மையைநம்புவோருக்கு
வாக்கியவைகுண்டவீடு வந்தவர்வாழ்வார்தானே

விருத்தம்

தினமொருநேரமெந்தன் திருமொழியதனைக்கேட்டால்
பனிவெள்ளம்போலேபாவம் பறந்திடும்நிசமசொன்னேம்
கனிமொழிசேரதிவாக்கும் கையெழுத்தாதிநோக்கும்
துணிவுடனகேட்டோர்ருற்றார் துலைத்தார்பிறவிதானே

விருத்தம்

வாசித்தோர்கேட்டோர்உற்றார் மனதினில்உணர்ந்துகற்றார்
ஆசித்தனபதமேகண்டு அவ்வழிமுறையேநின்றார்
கோசித்தன்பதமேகண்டு கோமலைப்புவியினவாழ்வும்
தேசத்தின்செல்வத்தோடும் சிறப்புடனிருந்துவாழுவார்

விருத்தம்

திருமொழிவாசகந்தன்னை தேசத்தில்வருமுன்னாக
வருவதுதிடனுமென்று வழுத்தினேம்தொளாயிரத்
தொண்ணூற்றெட்டில்
ஒருதிருக்கூட்டமாக ஓராயிரத்தெட்டாமாண்டில்
வருகெனவந்துநாங்கள் அம்மானையில்வருத்தினேமே

விருத்தம்

வருத்தினேவம்மானைதன்னில் மானமாய்புதியதாக்கி
கருத்ததுவுள்ளகமேகொண்டு கவனித்தோர் அவர்க்கேதக்கும்
உருத்திலலாக்கேள்பபோர்க்கெல்லாம் ஒருரைவெளியே
காணார்
சிரித்துரைகேட்போரெல்லாம் சிவபொருள்வெளியேகாண்பார்

விருத்தம்

உலகில்மனுக்கள் தமிழாலே உவமையுரைத்துவிட்டார்போல்
கலக்கமுடனேஎன்மொழியைக் கண்டுபழித்துநகைத்தோரை
அலகைதுளைத்துநரகதிலே ஆணியறைந்துஅவனிதனில்
குலயக்குலைத்துதீநகரமதில் கொண்டேபோடச்சொல்வேனே

விருத்தம்

எந்தன்மொழியுமென்னெழுத்தும் ஏடாய்ச்சேர்த்து
இவ்வுலகில்
சிந்தைமகிழ்ந்த அன்பருக்கு தெரியத்திறமாய்எழுதி
வைத்தேன்
எந்தபேருமென் திருமொழியை எடுத்துவாசித்துரைத்தோரும்
சந்தமுடனேவாழ்ந்துமிக தர்மபதியும்காண்பாரே

விருத்தம்

காண்பார் தர்மக்கண்காட்சை கண்டேமரணமில்லாமல்
காண்பாரென் றுங்களிகூர்ந்துகண்ணேன்பதத்தைக்கண்ணுடு
காண்பார்நீதக்கண்ணாலே கருணாகராய்கவ்வையற்று
காண்பாரென்றும்கைலாசம் கண்டேநன்றாய்வாழ்வாரே

விருத்தம்

இந்தமொழியைதூஷணித்த இடும்பர்படும்பாடதைக்கேளு
கந்தஉலருகலிபிடித்து கண்ணுமுருக்கிகால்ஊமுன்று
குந்தக்குடலும்பிரப்பூர கொப்பிள்சிலந்தியுண்டாக்கி
எந்தவிடமுமலைந்தழிவார் என்னாணை இதுதப்பாதே

விருத்தம்

தப்பாதெனவேசாபமிட்டோம் சத்திபேரிலுண்மையதாய்
எப்பாரெல்லாமறிந்திடவே இந்தமொழியைஎழுதிவைத்தேன்
ஒப்பாரொருவர்எழுதார்கள் உலகில்மனுக்கள்தன்னாலே
அப்பாறுதன் எழுதிவைத்த அகிலத்திரட்டம்மானையிதே

விருத்தம்

என்றேயிந்ததிருவாசகம் இயம்பசாசுபதிமாது
கன்றையேய்த்தோன்எழுதிமிக கலியுகமதிலேவிட்டிடவே
நன்றோர்முறையோன் இடமேகி நாட்டிலறியச்செய்யென்வே
அன்றேஅவனிதானறியவனுப்பி மகிழ்ந்துஅங்கியிருந்தா
[ரென்றே

முதல்பாகம் முற்றிற்று.

நாராயணசுவாமி துணை.



அகிலத் திரட்டு அம்மானை.

இரண்டாம் பாகம்

ஏரணியுமாயோன் இவ்வுலகில் தவசுபண்ணி
காரணம்போல்செய்தகதை கட்டுரைக்கபூரணமாய்
ஆராய்ந்துபாட அடியேன்சொல்தமிழ்க்குதவி
நாராயணர்பாதம் நாவினில்பாண்டவர்தமக்காய்தோன்றி
பகைதனைமுடித்துமாயோன் வீன்றியகலியன்வந்த
விசனத்தால்கைலையேகிச் சான்றவர்தமக்காயிந்த
தரணியில்வந்தஞாயம் ஆண்டவர்அருளிச்செய்ய
அம்மானையெழுதலுற்றேன் சிவசிவமேசிவமணியே
தெய்வமுதலேசிதம்பரமே தவமேதவமேதலக்கொழுந்தே
தாண்டவசங்காரத்தமையே யெங்களுடபவமேபவமே
பலநாளுஞ்செய்த பவமறுத்துன்னகமேவைத்
தெங்களையாள்க்கொள்ளுவாய் சிவசிவசிவசிவ
ஆகரா அரகரா அலையிலே துயிலாதிவராகவா
ஆயிரத்தெட்டாண்டினிலோர்பிள்ளை சிலையிலேபொன்மகர
வயிற்றினுள்செல்லப்பெற்று திரிச்சம்பதிதனில்
மலையிலேபொன்மகரப்பாலை உமிழ்ந்துபின் னுற்றதெச்சணம்
மீதிலிருந்துதான் உலகில்சோதனைபார்த்தவர்
வையந்தரின்உவமைசொல்ல உகதர்மமாகுமே
திருமொழிசீதையாள்க்கு சிவதலம்
புகழ்வெங்கும்ஒரு பிள்ளைஉருவாய்த்தோன்றி
யுகபரசோதனைகள்பார்த்து திருமுடிசூடிதர்மசீமையில்
செங்கோலேந்தி ஒருமொழியதற்குள்ளாண்ட
உவமையையுரைக்கலுற்றார். — அய்யா துணை
நாடறியவெம்பெருமாள் நல்லதிருவாசமிட்டு
லாடமதிலிருந்து லாவுவ்வாரீசரொடு
வாரமில்லநமக்கு வஞ்சகங்கள் இல்லாமல்
சாரமுடனேதரணிதனில் வோதிவைத்தோம்
அகப்பேரெனவேயவனி சொல்வதில்லையினி
உகப்பாரந்தீர்க்க உரைப்பீர்காணீசுரரே
லக்ஷ்மியைமுன்னம் யிருத்திறைஞ்செந்தூர்கடலில்
பச்சணியுங்காளிதன்னை பாரச்சிறையில்வைத்தோம்
என்மகவாய்ப்பெறவே யிராசேயத்திலோர்சடலம்
தன்மகவாயங்கேதான் பிறந்துநல்வயசு
இருபத்திநாலுயென்றுச்சே மாநிலத்தில்

கருவுற்றமத்தோசங்கழிவதும் நாளின்றாச்சே
விட்டதிருவாசம் மேதினியோர்கொள்ளாமல்
கட்டங்கொடிதாய் காணாதொல்பூவியில்
புத்திவரும்யென்றிருந் தாம் பிழையாதநீசனுக்கு
சற்றும்மனதில் தங்குமோநல்வசனம்
பார்த்திருந்தால்போகாது பார்மீதில்மக்களுந்தான்
காத்திருந்துவாடுகிறார் கவ்வையுற்றநல்மனுக்கள்
மனுவிடுக்கம்தீர்த்து வாய்த்தசொல்லொன்றதுக்குள்
தோணியேறுவைக்குண்டர் சுத்தயுகம்மாழுதற்கு
நாள்உண்டோபோவதற்கு நல்வேதச்சொல்லுமுண்டோ
கோனுண்டோவெற்றியுண்டோ கூறினீர்வேதவுரை
அப்போதுாசரகமகிழ்ந்து கொண்டாடி
முப்போதுஉள்ள முறைகேள்க்கவேணுமென்றால்
ஆதிவியாகரரை அழைப்பித்துக்கேளுமென்றார்
சோதியுரைக்கத் திருமாலகமகிழ்ந்து
அழைத்தாள்வியாகரரை அதுகேட்டுமாமுனியும்
பிளவுத்தார்கள்போலெ பொடுபொடென ஓடிவந்து
தெண்டனிட்டுமூவரையும் சுவாமிவிண்ணப்பமென்று
கண்டிருந்தையா கரியமுனியைப்பார்த்து
முன்பிறந்ததுமகில முடிந்ததுபுமசொல்லிமிக
பின்பிறக்கபோவதும் பிசகாமல்சொல்லுமென்றார்
அப்போவியாகராதி யருளாலே
செப்புகிறோமென்று தெண்டனிட்டுசொல்லுகிறார்

வெண்பா

குறோணிமுதலாய் கூறுகெட்டநீசன்வரை
தரணியுகமாறும் சாற்றியேசத்தியுடன்
தர்மபுவிதோன்றுவதும் சாணரைவந்தர்வந்து
நன்மையுடன் நாடுவதும்நாட்டினார்

நடை

குறோணியோடுநீசன் கோள்பிறவியாழ்பிறந்து
தரணியுகமாறோடு தன்னால்லொழிந்ததுவும்
சொல்லிவிரித்து சுத்தவியர்காரும்
நல்லநாராயண ரோடேநவில்வார்
கொற்றவருமாண்டு குறும்புமிகப்பெருத்து
உற்றனகுறுணியுடன் வந்துடனோடி
மறவொருபத்தாண்டு லபானவைகுண்டராஜர்
உற்றொருவர்வந்து உலகாளவேணுமென்றும்
முன்னேபரந்தான் மொழிந்தஇன்படியே
தர்மபுவியில்சுவாமி நீராயவென்றும்
துர்மக்கடன்கழித்தோர் சுகமாகவாழ்வாரென்றும்
ஆகமத்தைப்பார்த்தாதி வியாகரும்
நாகத்தணைகிடந்தோன் நாட்டமதாயுரைத்தார்

விருத்தம்

உரைத்திடவியாகர்களும் ஏண்சமயாய்மொழிந்ததெல்லாம்
கரைத்திடகைலைமீது கல்வியிலெழுதிவையும்
நரைத்திடாமுனிவன் சொல்லும நாள்வழிதோறும்முற்ற
உரைத்திடமுனிக்குமேலும் முதலிகள்செய்யவென்றார்

நடை

என்றுசொல்லிவேத வியாகர்இசைந்ததெல்லாம்
அன்றுகைலையங்கிரியில் கரைக்கண்டர்நாட்டிவைத்தார்
மாமுனியையுமனுப்பி மாயத்திருமாலும
தாமுனிந்தீசுரரை தனிவியுறத் தானணைத்து
கேதாரமிட்டுக் கிரிகோவில்வந்திருந்து
கோதாரமாயன் கூறுவார்சங்கமதில்
செந்தூர்க்கடலில் சென்றுபள்ளிக்கொண்டிருந்து
விந்துவழிசெய்து விக்கனைசன்றெறுத்து
தேசாசோதனைக்கு தெக்ஷணத்திலையனுப்பி
வாசமுடனிங்கே வருவோமெனவுரைத்தார்
அப்போதாசர்முதலான சங்கத்தோர்களெல்லாம்
இப்போதுநாங்கள் ஏதுவோமுமமோடே
என்றுரைக்கசங்கர மெடுத்துரைப்பாரெம்பெருமாள்
ஒன்றுமறியாதே உற்றபதேசமத
தேவன்றிதுமுதலாய தெய்வகன்னிமார்முதலாய்
மூவர்முதலாய உள்ளறியக்கூடாது
கடந்தாலறிவார் நடக்குமுனாலேயொருத்தர்
அடக்கமறியா ரநவிஞ்சையிதல்லவோ
அந்தவகையானதினால் எல்லோருமெனகூட
வந்தால்சரியல்லவே வரவேண்டாமென்றால்நோவீர்களே
என்றுரைக்கநாத னெல்லோருமேதுரைப்பார்
ஒன்றுமறியாதிடினும் மும்முடனேவாரோமென்றார்
உடனேதிருமால் உற்றலெக்ஷிமிதனைவால்
நடைமேல்நடையெனவே நலசெந்தூர்தானேகி
உன்னிசிவமும் உற்றசத்திநல்மாதும
வன்னத்தேவர்முதலாய் மாமுனிக்கின்னாரும்
சங்கமுமெங்குள்ளோரும சகலகலைவாணர்களும
மங்களக்காரர்களும் மாதுசத்தியைசூழ்ந்து
மறைநவிசுமாதர்களும் மாதம்மைமார்களும்
திரைதிரையாய்கன்னியர்கள் சேவித்துவைத்திவர
எழுவாய்ச்சியமும மிமேலாசுற்றேற்றிவர
தொழுவார்சிலபேர் தொந்தேசமெனவாடி
கடலில்மேலோர்பிள்ளைக் கரியமாலீன்றெடுக்க
நடமாடுர்தெக்ஷணத்தில் நகர்சோதனைக்கனுப்பி
கலியையழித்துக் காப்பயங்கள்தானறுத்து
சலிவிலாதர்மபதி சத்திமக்களையாள
வாருராய்யாநாதன் வைகுண்டமும்மூர்த்தி

போனார்காணன்பெரென பெரியதர்மபுவியை
என்றுசிலவாத்தியங்கள் இசைந்துஇசைந்தாதிவர
கன்றுநிரைமேய்த்தோரு கைலேங்கிரிகடந்தார்
கடந்துதிரிச்செந்தூர் கடல்காணவேணுமென்று
நடந்தாரிநாதன் நல்லீசர்சத்தியோடு
கூடிக்குணமாய் கொலுயாரப்பாரமும்மாய்
தேடித்திருவைச்சிணமாய் வழிநடந்தார்
நடக்கமறையோர் நல்திசையும்போற்றிநிர்க்க
கடற்கரையைநோக்கி கண்ணோன்வழிநடந்தார்
வழிநடந்துமாயவரும் வல்லபரமேசுரரும்
களிகூர்ந்துமாதுமையும் கந்தன்செந்தூர்க்கடலில்
அருகேயொருகாதம் அவர்வரக்கண்டாறுமுகன்
கருவிகுழறி கடற்கரையோரன்றனலங்கி
ஆறுமுகனும் அங்குள்ளதேவர்களும்
வீறுமயில்வாகனம வெற்றிரதமேறுமல்
என்னவிதமாமோ வென்றுமனம்பதறி
மன்னன்ஆறுமுகனும மனமயங்கிதான்பதறி
வந்துமாமன்றனையும் மாதாபிதாவையும்
சந்துஷ்டியாகி தாழ்ந்துநமஸ்காரமிட்டு
இம்மூவரையும யா [illegible] என்று
எம்முதலேநாயடியேன் னெத்தனைநாள் காத்திருந்தேன்
காத்திருந்தநாளும் கரையெண்ணக்கூடாது
பார்த்திருந்தகண்ணின் பாவம்துலைந்ததென்று
என்றுவேல்முருகன் ஈசுரரையும்தழுவி
கன்றுநிரைமேய்த்த கண்ணரையும்தழுவி
மாதாபிதாவையும்தழுவி மனமகிழ்ந்துகொண்டாடி
சீராளதேவரையும் சிறப்பித்துக்கொண்டாடி
வாருங்கோவய்யாவென் மண்டபசிங்காசனத்தின்
பாருங்கோவய்யாவென பதியின அலங்காரம்
நீங்களிருக்க நிறைந்ததங்கமேடையுண்டு
தாங்கள்கிரிபோலே தங்கமலையிங்குஉண்டு
பாடப்படிக்க பாவணர்ரிங்குமுண்டு
ஆடக்கைகாட்ட வரம்பையர்கள் தானுமுண்டு
பர்லேக்கநல்ல பர்லுபழங்களுண்டு
மாலேக்கநல்ல மாதுகன்னிமார்கள்உண்டு
கண்டுகளித்திருக்க கனகதிகளுண்டு
உண்டுசொகித்திருக்க உற்றவகைதானுமுண்டு
பல்லாக்குமுண்டு பதிபோகிமாருமுண்டு
குல்லாக்களுண்டு குளிக்கத்தாம் ரேணியுண்டு
சதுரங்கமேடையுண்டு ஷண்முகவிலாசமுண்டு
பதிரங்கமான பாலாழியுண்டுமையா
மாதமொன்றுதனில் வருந்தீசாடிபொன்னதிகம்
போதவரும்காணும் பொன்சவடி ஆபரணம்
வருஷமொன்றதிலே மாலேவடமாயிரந்தான்

கருவலங்களின்னொத்தன்று காணுமானையதுதான்
காவடிகோடி காணிக்கைமுக்கோடி
பார்வேதாடிகூடி பலஜாதிகளுங்கூடி
இப்படியேயனந்தனும் நிற்குதுகாண் பாக்கியங்கள்
எப்படியுமக்கீங்கள் ளிங்கிருக்கவாருமென்றார்
கேட்டுநாரயணரும் கிழ்ச்சுண்டசையாமல்
நாட்டமுடனுள்ளத் தடக்கிபெறுத்தேதுரைப்பார்
நல்லதுவேமருகன் நலமாயிருப்பதுதான்
பொல்லாதுசெய்யாமல் புரிந்தாழ்வேந்த பாதும
என்றுசொல்லி யைய்யா ஈசுரரேமடதுரைக்க
பண்டுவிட்டவாசச்செல் பக்திச்சேசாபூமியிலே
வல்லாண்மைக்காரருக்கு மதமிப்படியிருக்கும
இல்லாதெளிமைகளுக் கிருக்குமதுமேல்தயவு
என்றுஇருபேரும் மெய்ம்பிமனதடக்கி
நனைவெற வேகந்தனோடு நல்வார்த்தையும்பேசி
அங்கடமடவே அவ்வேலாரும்தானடந்து
செந்தூரலைக்கரையில் சேர்ந்தனர்காணம்மானை

விருத்தம்

கடற்கரை தனிலே வந்தகத்தியமாமிசைராஜா
மடக்கொடியுமையாளாளி மறைமுனிதேவரோடும்
குடக்கலைபொருந்தும்வேத கூர்முனிரிஷிகளோடும
கடற்கரைதனிலேவந்து நடமார்க்கடலைதாமனை

விருத்தம்

வந்தவரெல்லாரும் வட்டமிட்டவிலைநிற்க
சந்தனவாசியோரந்த தன்னிலேநின்றாண்டு
சுந்தரமுனிவர்வந்து சுவாமிதன்மகமேபூண்டு
எங்கனிலாபிராவேன்று குருநுணக்கிசொல்வார்

நடை

ஆதியேயனங்க ளய்யாநாரயணரே
சோதியேயனங்கள் தவம் சுருக்கிட்டநவளர்ந்து
கண்டுகொண்டோமைய்ய கமலப்பொருளேநேர்
பண்டுமொழிந்தபடி பார்த்துவாரந்தருமையயா
என்றுமுனிஇருபேர் ரிறஞ்சிதொழுதிடவே
மனைறுதனையனங்கோர் மறுத்துரைப்பான் மாரை
எதுகாண்மாமுனியே செங் கின்ற சரது
காருகாமணிந்த சதசிகவியுமென்றார்
பெப்போதுமாமுனிவர் மயங்குசொள்ளவுற்றார்
முப்போதுநங்கள் முழுதும்செய்மாமல்
லோகம்விட்டு மேவர்ந்து செயபொல்
பூலோகமிறங்கி ராங்கடல்கண்டனுகி
சோதிபுரைந்த செல்வ நத்துவரிடம்

நீதியாய்நில்லுமென்று நினைவாகச்சட்டமிட்டு
கைலையதேகக் கண்ணோக்கும்வேளையிலே
அகிலமதிலக்கலியை நவனைமிகக்கண்டேதான்
மேலோகமேற மேல்வழிகள்காணாமல்
பூலோகமானதிலே போயிருந்தோங்கண்கவிழ்ந்து
அப்போதுவாயனே நீரங்குவந்தெங்களுடன்
இப்போதுபோய் நீங்களென்னுடையசெந்தூரில்
வாரிக்கரைதனிலே வாய்த்ததவமாயிருந்து
சூரியப்பிறகாசச் சுத்தவைகுண்டராஜர்
இக்கடலில்பிறந் தெங்கள்தனைக்கூட்டி
பக்கமதில்வைத்து பதவிதரவேணுமென்றும்.
நில்லுங்கோவென்று தவசினைவாகவென்றுசொல்லி
பல்லுயிரும்வளர்த்த பாக்கியவானேநீரும்
உரைத்தமொழியையாவுன் னுள்ளமறியாதோ
கரைக்கண்டோர்மைத்துனரே கண்ணாவெனத்தொழுதார்
அப்போதுநாருயணர் மகிழ்ந்துகொண்டாடி
செப்போடொத்தாப்போல் சிரித்துமனமகிழ்ந்து
நல்லதுகாண்பிள்ளாய் நாடுந்தவம்புரிந்தீர்
வல்லவர்தானீங்கள் வாருங்கோவென்றழைத்து
அருகிலேநில்லுமென்று அகமகிழ்ந்தாரென்பேரே
குருவானஈசரோடு கூறுவார்பின்னாலே
நம்முடையஈசுரரே நாம்வந்தகாரியங்கள்
எம்முதலேஇன்னதென்று இயம்புவீசுரரே
கட்டானஈசுரரும் காரியத்தைதபாருமென்று
மட்டானவாரி கரையிலெவந்திருந்து.
எல்லோருஞ்செந்தூர் இடமெல்லாங்கண்டுபார்த்து
வல்லோர்களெல்லாம் வந்திருந்தார்செந்தூரில்
அங்குசிலநாள் அமர்ந்திருக்கும்வேளைதனில்
சங்குவண்ணர்நேமித்த சடலத்தின்பெருமை
உரைக்கிறேனன்ப ருள்ளம்மகிழ்ந்தவர்க்கு
தறையீரேழுஅழுந்த சுவாமிஉரைக்கலுற்றார்
சீரானநல்ல தக்ஷணபூமியிலே
பாரானநல்ல பதித்தாமரையூரில்
தவசிக்குகந்த தாமரையூர்நல்பதியில்
சிவசிவரவரும் தெக்ஷணபுரிநாடு
பாண்டவரில்விசையன் பாசுபதம்வேண்டுவதற்கு
ஆண்டபரமேசுரரை யகம்வைத்துபோர்விசையன்
நின்றுதவம்முடித்து நெடியரனைமாதுமையும்
கண்டுபதம்வாங்கி கைக்கண்டதிவ்வூர்
அதியாசன்முன்னால் அதிகதவசியிருந்து
பதியாசன்பற்று வதியையான்றெதுதான்
இவ்வூருதெக்ஷணந்தான் மேற்றைறதாமரையூரு
செவ்வூருநல்லசிறந்த மணவைப்பதித்தான்
வானலோகம்வாழும் வாய்த்ததெய்வேந்திரனும்

தானவரைக்காணத் தவசியிருந்தஇவ்வூரு
பஞ்சவர்க்குமுன்ன பகவானுதவிசெய்ய
அஞ்சல்செய்து காதன்றிருந்தஇவ்வூரு
சாம்புசிவசான்றோர் தழைத்திருந்தஇவ்வூரு
தாம்பிரபருணியாவி தனைத்திருந்தஇவ்வூர்
பாராசமுனிவன் பாரித்தவசிபண்ணி
விரமானவியாசரை மிகயீன்றஇவ்வூரு
தவம்புரியவென்று தானினைத்தபேர்களெல்லாம்
பாவமற்றுதாமரையூர் பதியாகுமென்றுரைப்பார்
தவசிக்குகந்த சந்ததமுள்ளபேரூரு
பருசுக்குகந்தபால நியமாமறையூர்
அவ்வூருதன்னி லாதியருளாலே
செவ்வுமகாவிட்டுணுருவுரு செய்தசடமேபிறந்து
பிறந்துவளர்ந்து பெருமைபுகழ்காட்டி
மறந்திடாமுன்னமைத்த மாதையுறவாடி
பூலோகமனுக்கள் பிள்ளைபோலவளர்ந்து
மாலேக்கபூசை மனையில்மறவாமல்
விஷ்ணுவைப்போற்றி விளங்கஓர்பீடமிட்டு
கட்டுத்திர்க்காக கண்வளர்ந்தார்கலியில்
ஒருவருக்கோர்பொல்லாது உலகில்மிகசெய்யாமல்
குருவைகுருகண்டு சொக்கரித்தேவளர்ந்தார்
எதிர்த்தோரையடக்கி எல்லாருக்கும்நல்லவராய்
உருத்துக்கதியவராய் உலகில்மிகவளர்ந்தார்
எச்சாதியாருக்கும் நல்லவர்எனவே
அச்சாதிஎல்லாக் மகமகிழ்ந்துதான்வாழ்ந்தார்
முன்னுதித்துடன்பிறந்தோர் ஒருவர்முப்பாடாமல்
பின்னுதித்துபெரியோராய் பெருமையுடன்வளர்ந்தார்
தாய்தகப்பன்மாமன் சந்தமிந்தத்தம்பியென்று
ஞாயவானென்றும் நாடிமிகவளர்ந்தார்
ஊருக்குந்தலைவன் உடையவனுக்குந்தலைவன்
ஆருக்குந்தலைவனென்று தன்னைபிதாவளர்த்தார்
ஞாயம்மிருப்பதினால் நடாணுவானென்னுசொல்லி
தாய்தமர்களெல்லாம் தாங்கிமிகவளர்த்தார்
சொல்லுக்கும்வல்லவனுயி சூராதிசூரன்இவன்
மல்லுக்குமல்லவனாய் உபாயத்திலும்பெரியோன்
மங்கையருக்குஏற்றவனாய் மாமோககாமீகன்
எங்கும்பேர்கேள்க்கவைப்பான் இவன்கீர்த்திநல்வழமை
பல்லாக்குமேறிடுவான் பார்முழுதும்ஆண்டிடுவான்
எல்லோருக்கும்நல்லவனாய் இவன்சமைவான்என்றுசொல்லி
எவ்வோரும்கொண்டாட இன்பமுடனேவளர்ந்தார்
அவ்வோரும்கொண்டாடி யவர்வளரும்நாளையிலே
பத்துவயது பண்போடிருபதிலே
மற்றுமிகவெவ்வா மன்னவர்போலவர்வளர்ந்தார்
எல்லாத்தொழிலும் மிதமிதமாய்க்கற்றுமிக

பொல்லாதாரோடு பெரும்பகைபோலேசீறி
கல்லாரையுன்னில் நாளும்மறவாமல்
கல்லாரையெல்லாம் கண்டுகழித்தேயிருந்தார்
ஈவதற்குந்தர்மமென்ன எளியோரைக்கண்பார்த்து
ஆய்வதற்குநல்லா ரென்றேமிகவளர்ந்தார்
பதினேழுவயதில் பண்டமைத்தபெண்ணோடு
விதியானபடியால் மெல்லியர்மேல்இச்சைகொண்டு
கூடிக்குணமாய் கொண்டவனையுமகற்றி
தேடிஇவரோடு செய்யரசமாயிருந்தாள்
வானுபரமேசுரனார் மாயவனாராணையிட்டு
நானும்நீயுமாக நலமாகவாழவென்று
ஆணையிட்டுஇருபேரும் மகமகிழ்ந்தன்றுமுதல்
நாணமில்லாமல் நாயகம்போலவளர்ந்தார்
மங்கைகாணாமல் மறுவூறுதங்கறியார்
அங்கவனைக் கர்ணாதயலூருதங்கறியார்
இந்தப்படியா இவர்வளரும்நாளையிலே
எந்தநருள்கண்டிவர்க் கிவளையமைத்ததென்பார்
முன்னாளமைத்த ஊழ்விதிஎனவே
சொன்னாரவரும் சுவாமியருளாலே
அன்றைக்குஅமைத்தது போயவளையவர்க்கல்லாது
அன்றைத்தோச மகலமத்தோன்போதுநான்
என்றனருள்எல்லாம் மியம்பிமிகவுரைத்தார்
மன்றீரெழுமறிய மங்கையோடுவாழ்க்கையிலே
உற்றவயது ஊரிருபத்திரண்டதிலே
சத்திராதியோர் நீசன்றனேபிழையேக்க
ஏக்கவேநீசன் இடறுசெய்தஅதுவினால்
ஆக்கம்அடைக்கி அமர்ந்துபிணியெனவே
எல்லோரும்அறிய இவரிருந்தார்அம்மானை
எல்லோருமில்லா விசையடக்கிதானுமிருந்தார்
தம்பிலங்கடங்கித் தருணம்புலம்பலுற்றார்
கருவுற்றதோஷம் கழிந்துசிவஞான
திருவுளமாகி சிவமாய்பெறவே
மனதில்மிகவுற்று மாயவரைநெஞ்சில்வைத்து
தினமும்வருந்தி தினமெனவேஇருந்தார்
அப்படியேஓர்வருஷம் மங்கமதில்ஊறலெல்லாம்
முப்படியேஞாயமதால் உலகில்கழியவிட்டு
இகபாரதஞ்சமென் றிருக்குமந்தநாளையிலே
மகாபரனார்செயலால் மாதாவின்கண்ணதிலே
சொற்பனம்போல்சுவாமிவந்து சொன்னாரேஉத்தரவு
உற்பனம்போல் கொண்டுற்றவர்மாதாவும்
மகனேஇன்றிராவில் மனஞ்சடைத்துநான்வாடி
அகம்வைத்தஎண்ணம் அறிந்துசிவநாராயணரும்
வந்துசொன்னஉத்தரவை மகனேநீகேளுமென்று
விந்துவழிக்கிளையோர் மிகுவாககேட்டிருக்க

சொல்லுகிறார் அந்த சொற்பனத்தைமன்போரே
நல்லுறவாய்கேளுமென்று நவிலுவாரன்போரே
ஆயிரத்தெட்டாண்டிது வாமிவ்வருஷம்
மாசியென்ற மாதமிதுவாய்த்த தியதிபத்தொன்பது
இம்மாதம் இத்தெய்தி ஏற்றதிருச்செந்தூரில்
நம்மாணைக்கொடியேற்றி நல்லதிருநாள்நடக்கு
தங்கும்மகனை அழைத்துவருவாயானால்
எங்குள்ளோருமறிய இப்பிணியும்தீர்த்து
நல்லபேறுமகொடுப்போம் நம்மாணைதப்பாதெனெ
சொல்லவேகண்டேன் சுவாமிகருமேனிநிறம்
நான்கண்டசொற்பனந்தான் நழுவிமிகப்போவாது
தேன்கண்டாப்போல சிரித்துமனமகிழ்ந்து
இந்தக்கனவதார்க் கிங்கிருந்தங்கேபோய்
வந்தல்லாதேபிணியும் மாறவகையில்லையல்லோ
என்றுரைக்கஎல்லோரும் இன்பமுடனேமகிழ்ந்து
நன்றுநன்றுபோவதற்கு நடைக்கோப்புகூட்டுமென்றார்
வேண்டும்பலகாரம் விதவிதமாய்சேகரித்து
ஆண்டகருப்புக்கட்டி யானதெல்லாம்சேகரித்து
தானதர்மம்செய்ய தனங்கள்மிகயெடுத்து
நீணமாணவரை நிட்டமாக்கூட்டிவந்து
ஆளைசேகரித்துவகல நல்லத்தொட்டில்வைத்து
நாளைக்கடத்தாயல் நடக்கவழிக்கொண்டனராம
மாதாவும்மகனும் வாய்த்தனருளுடனே
நீதாவின்பாதாரம் நெஞ்சில்மிகநிறுத்தி
இருந்தபதியும்விட்டு ஏற்றஒருகாதம்விட்டு
வந்தனருளோடே வழிகொண்டார்அன்போடே
கூடம்குளமும்விட்டு குளிர்ந்தசுக்குப்பாரும்விட்டு
தோட்டவழியாறுகண்டு குறுவழிக்காடுமிட்டு
நடந்தோர்வனத்தில் நல்லதண்ணீர்ராவிகண்டு
கொடர்ந்தபலகாரங்கொண்டு தண்ணீர்ரான்குடித்து
தகையாறிக்கொண்டு தானிருக்கும்வேளையிலே
வகையானநல்ல வாய்த்தமகாவிட்டுணுவும்
பிறவிக்குஏற்ற பிள்ளைவருகுதென்று
இறவிமுதலோன் றெழிந்துமிகக்கொண்டாடி
எதிரேயாள்விட்டிங் கழைக்கவேணுமென்று
அருகேதானின்ற ஆதிமுனியானை
நல்லமுனிவரையும் நாராயணர் அழைத்து
வாருங்கோபிள்ளாய் வாய்த்தமுனிமாரே
நேருங்களோடே நிகழ்த்துகிறேனோர்வசனம்
நானேமித்த நல்லஉயிரானதிங்கே
தானேவருகுதுகாண் எந்தன்தவத்தாலே
எதிரேபோய்நீங்க ளிங்கழைத்துவாருமென்றார்
பதியேறும்பெருமாள் பகர்ந்துமுனியயச்சார்
அயச்சமுனிமார் ரவ்வாயுபோலவிரவாய்

பயபச்சமுடனே பகர்ந்தயிருமாமுனியும்
எந்தவழியாய் இவர்கள் வருவாரெனவே
அந்தந்தவழிகாலோட்டம் பார்த்துவந்தார்
வந்துஒருவழியில்வரவே கண்டமாமுனிவர்
சந்துட்டியாகி தாழ்ந்து நமஸ்காரமிட்டு
கண்டுகுவித்து கனகமுனிமார்கள்
வண்டுசுத்துமார்பனுட வாய்த்தகரம்கண்டதையும்
முனியிருபேர்தோழில் உயர்த்திமிகவேஏந்தி
துணிவுடனேமாமுனிவர் தோழின்மேலேயிருத்தி
பதியிலிருந்தார்போல் பார்மென்னணேயிருத்தி
குதிரைநடைகொண்டவர்போல் கொண்டாடிமாமுனிவர்
கூடநடப்போர்க்குக் குதித்தோடிவர
வாடியிடைந்து மனுநருக்குள்தானே
நல்லபிறவியைத்தான் நம்முனிவர்கொண்டாடி
வல்லசெந்தூர்பதியில் வந்தனர்காணன்போரே
வந்தமுனிமார்கள் வாழ்த்திவந்தநல்லுயிரை
சந்தனவீதியிலே சடலம்தனைநிறுத்தி
மாமுனிவர்தானும் மாயோனைவந்துகண்டு
சுவாமிநீர்கொண்டுவர தானுரைத்தநர்ச்சடலம்
அடியாரெதிரேபோய் அழைத்துவந்தோமய்யாவே
திடரெனவேநாதன் சொன்னமுனியோடுரைப்பார்
கொண்டுவந்தோமென்றீரே கூர்மையுள்ளநற்சடலம்
பண்டுமுறையெல்லாம் பகருவீர்மாமுனியே
அப்போதுமாமுனிவர் ராதியருளாலே
செப்புகிறோமென்று செப்பலுற்றார் அன்போரே
நல்லசடலமிது நாடுமுற்காலமதில்
வெல்லமர்கோன்வாழும் வெற்றிதெய்வலோகஉயிர்
பேர்சம்பூரணந்தான் பெரியதிறவான்காண்
ஆறெவவாரெவர்க்காதி கிருபையுளளோன்
அப்படியேதெய்வ லோகமதிலேயிருக்க
இப்படியேயிவர்க் கிமலோகமானதிலே
இருக்கின்றபெண்ணதி லிசைந்தபாதேவதையென்
றொருகுழலிதன்மே லுள்ளாசையாயிவரும்
அவரும் இவள்பேரில் யாசையாயிதானிருந்து
இவளுமிவரு மிருந்துமிகவாழ்கையிலே
தேவருக்கும்தெய்வ லோகமேளுள்ளவர்க்கும்
யாவருக்குமோர்பிறவி யாகுகின்றநாளிதுவாம்
இவரையும்வருத்தி என்னஉன்செய்தியென்றார்
அவனுடைய ஆசையி னில்லவென்றுதான்மறுத்து
இவளையும்மென்றேடியில் பாய்பிறவிசெய்தால்
குவண்முயணிமாயவரே குணமெனக்காகுமென்றார்
அப்போதுநாதர் நந்தத்தேவன்றனக்கு
செம்பமுள்ளபுத்தி செப்பிமிகபார்த்தனரே
அப்போது இவர்கேளாமல் லதுதான்னதுதஉனென்றார்

மாயனுக்குகோபம் மனதில்மிகவாகி
ஆயநிப்போதிவர்க் கதிகபலனுரைத்தார்
நல்லதுநீகேட்ட நியாயமிட்டேற்றமதாய்
வல்லவனைநினைந்து மாதுவும்நீதானும்
எங்களிருபேர்க்கின்னம் பிறவிபிறகுல
மங்கையும்புருடனென மறவாமலாவதற்கு
வரந்தாருமென்று மனதில்நினைவேற்றி
பரந்தாண்டிகண்டுப் பலன்பெறுங்கோவென்றுசொல்லி
தவசிநிற்கவிட்டீர்காண் சங்கரரேநீர்கேளும்
சிவசிவாவென்றுதவம் செய்தவர்கள்நிற்கையிலே -
தவம்பார்க்கசுரரும் சன்னியாசிநீதனுமாய
அலடமெழுந்தருளி அங்கேகும்வேளையிலே
தெய்வேந்திரனும் திருமுடியுஞ்சூட்டி
மய்யேந்திரனுடைய மலர்பாதம்காணவென்று
அவனும்மிகவந்தான் னரனெதிரெய்யாவே
தவத்துக்கிடறுதான் வாறதுதோற்றுமல்
தேவன்மதிமயங்கி திருமுடிமேல்இச்சைக்கொண்டு
பார்வையுடனுரைத்து பல்கடித்துதேவனுமே
அதையறிந்துஈசர் அன்றுமுடனுரைத்தார்
இதையறிந்துநீரும் மேற்றதேவரோடுரைத்தீர்
வாய்த்ததவம்தூழ்றி வாய்க்காமனின்றதிறல்
ஏற்றகீழுலகில் லென்மகவுசான்றோரில்
நல்லதர்மகுலத்தில் நன்றாகநீபிறந்து
தொல்லையெல்லாம்தீர்த்து சூலினழுக்கறுத்து
வளரும்பருவமதில் வந்துன்னைநாளெடுத்து
இளவாசாயுன்னை ஈன்றெடுத்தேவளர்த்து
ஆளுமரசு வழகாகவுந்தனுக்கு
நானும்மிகத்தருவேன் நம்மாணைதப்பாதென
உறுதிசொல்லிதேவனையும் முற்றசான்றோர்குலத்தில்
பொறுதியுள்ளதர்ம பிதிரில்பிறவிசெய்தீர்
மாதைபிறவிசெய்தீர் மக்கள்சானறோர்குலத்தில்
சூதையமக்குலத்தில் தோசயரைத்தோன்றவைத்தீர்
அப்படியேமின்னா மைய்யாலேஇவ்வகைக்கு
இப்படியேபிறந்த இச்சடலமென்றுரைத்தார்

விருத்தம்

என்றிந்தவிவரமெல்லாம் மியல்முனிவோர்கள்சொல்ல
நன்றிந்தவிபரமென்றே நாரணர்தயவுகூர்ந்து
சென்றிந்தச்சடலம் தன்னை திருச்செந்தூர்பதியிலங்கும்
கொண்டந்தெருவும் காட்டிகுளிர்ப்பாட்டிவாருமென்றார்

விருத்தம்

யேலுள்ளசடலம் தன்னைமிகுமுனிமாரேநீங்கள்
காலுள்ளதெருக்கடோறும் நடத்தியேதறையிலூட்டி
பாலுள்ளபதந்தில்கொண்டு பழவினைத்தீரக்காட்டி
மாலுள்ளம்புகுதநாட்டி வாருங்கோசிணமேயென்றார்

விருத்தம்

அப்படிமினிமாரேகி அங்கங்கேகொண்டுகாட்டி
முப்படுதோஷம்போக முனைபதமதிலேமூழ்கி
இப்படிஇவரைக்கொண்டு இவர்வருமுன்னேயாக
செப்படிவித்தைநாதன் செகலினுள்ளகமேசென்றார்

விருத்தம்

வானவர்தேவர்போற்ற மறைமுனிமார்கள்பாட
தானவர்ரிஷிகளோடு தமிழ்மறைவாணர்போற்ற
ஞானமாம்வீணைத்தம்பூர் நால்திசையதிரஓசை
ஓசைமாவென்று தேவர்ரோலமிட்டாடினாரே

விருத்தம்

மத்தளத்தொனிகள்வீணை மடமடன்றேத்தவரேர்
தித்திதெய்திதிமெனத் தேவியர்பாடியாட
தத்தியாய்சங்கமெல்லாம் சதுர்மறைகூறிநிற்க
முத்திசேர்மாயன்றானும் மூழ்கினர்கடலினுள்ளே

விருத்தம்

கடலினுள்ளகமேபோர்ந்து கணபதிமேடைகண்டு
மடவிபொன்மகரந்தன்னை வாகுடன்பூசிதேய்த்து
திடபதிமாயன்றானும் நிறைந்தபொன்னிறம்போல்வன்னி
வடவனல்போலவீசி வந்தனர்மகரமுன்னே

விருத்தம்

வந்தனர்மகரமுன்னே மாதுபொன்மகரங்கண்டு
செந்தெற்லெரியோவென்று சொல்லிடபதறிநொந்து
எந்தனின்மானவரனே யெரிவடவாசமோர்போர்
கந்தனின்மாயமாமோ என்றவள்கலங்கினாளே

விருத்தம்

கலங்கியமகரந்தானும் கருத்தளிந்தேதாசொல்லும்
இலங்கியேவருவோமென்று வென்மன்னர்தானேவாரோ
சலங்கியேயதிரப்பூமி சதிரெனக்கதிருபாய
துலங்கியசுடரைப்பார்த்து சொல்லுவாமகரந்தானே

நடை

சுடரேசுடரே துலங்குமதிசுடரே
கடலேகடலே கடலுள்கனலாரே
அக்கினிக்கேயபயம் மனலேயுனக்கபயம்
முக்கியமாய்காந்தல் முனையேயுனக்கபயம்
தீயேயுனக்கபயம் திரிபுரமேயபயம்
நீசுட்டஸ்தலங்கள் எனக்குரைக்கக்கூடாது

மாசற்றசன் னைல்லவனோடுள்ளியிருந்து
காண்டாவனமெரித்தாய் கடியவில்லிகையிருந்து
ஆண்டவிலங்கையெரித்தாய் யனுமன்கைலேயிருந்து
முப்புரத்தைசுட்டெரித்தாய் முதன்மைமகையிலேயிருந்து
முப்புரவாய்நீயெரித்த உவமைசொல்லக்கூடாது
அனலேஉனக்கபயம் மாதிஉனக்கபயம்
கனலேயமருமையா காந்தல்தன்னை மாற்றுமையா
மன்னரிநாரணர்க்காய் மாற்றுவீரக்கினியே
இன்னியல்வையெல்லாமென் மன்னரிங்குவந்தால்
சொல்லியுனக்குச்சொர்க்கம் வேண்டித்தருவேன்
வில்லிக்கும்வல்லவனே விலகியமருமைய்யா
என்னையென்மனனவர்தான் ஙிந்தக்கடலதிலே
பொன்னெனயநல் மகாமாகவேபோகவிட்டார்
வருவோமென்றநாள் வந்ததுகாண் அக்கினியே
தருவேனுனக்குவரம் தாட்டிகன்வந்தவுடன்
அமர்ந்துநீபோனால் அதிகபலனுண்டாகும்
சுமந்தறபத்தின் சுகப்பெற்றுநீவாழ்வாய்
என்றுமகாமாது தெரியைமிகக்கண்டுளறி
நின்றுமயங்குவதை நெடிதிருமாலறிந்து
அனலைமிகயுள்ளடக்கிய ஆதிஉருக்காட்டி
மனைவியைநீவாவெனவே மாயன் அருகழைத்தார்
உடனேபொன்மாது உள்ளம்மிகநாணி
தடதடனவந்து சுவாமியடியில்வீழ்ந்து
எந்தன்பெருமானே யிப்படித்தானின்றதுவோ
சிந்தைமயக்குதற்கோ தீப்போலேவந்ததுதான
என்றுமிகப்பொன்மகா யிளமாதுதோஸ்தரித்து
மன்றுதனையழந்தோர்வா நீயெனவழைத்து
அருகில்மிகநிறுத்தியங் குள்ளதேர்பதியும
கருதியிருபேரும் கண்கொண்டுநபார்த்து
வச்சிரமேடை மரகதபொன்மேடை
எச்சரிக்கைமேடை யெல்லாமிகப்பார்த்து
மாதேயுனக்கு வளர்பிறவிபத்தெவும்
சீதேயுனக்கு சிறந்தபேர்பத்திலே
பலன்பேறு பேருயிப்பார்மகிழஓர்பாலன்
சிலம்பேறுடையவனாய் சிவனுக்குகந்தவனாய்
ஏகாபரனு மகிழயானும்நீயுமாக
தர்மச்சிறப்பதிக தலைவன்றனைப்பெறவே
உண்மையாய்நானுனக்கு உபதேசமாயுரைத்தேன்
என்றுசொல்லநாரணரும் மிழமகாமேதுசொல்லும்
பண்டுவமைத்திருந்தால் பக்கமசொல்வதேயடியான்
சிங்கத்துக்கேற்ற செயலனவேபொன்மகாக்
கற்றைறக்குழலி கருதிமிகவுரைத்தான்
உடனேமகாநுள்ள மிகமயக்கமிட்டு
திடமயங்கிசிங்கா சனத்தில்மிகயிருத்தி

மயங்கியேபோனமகர மாதுமிகவிருக்க
தியங்குமேகலோகம் திசை யுரைசடன்முதல்
ஈசாமுதல் ஆதிமுதல் வேற்றுதெய்வார்களமுதல்
சீதைமுத மடங்க சீமையிமரமூ மயங்க
மாமோகச்சக்கரத்தை மாயவனார் தான்வீசி
சீமைஎழுகடலும் சிணமேமயக்கினாரே
மயக்கியந்தமால் மகரமாமோகமாயிருக்க
தியக்கியந்நாரணரும் சென்றார்மகரமதுள்
மகரமுனசென்று மகனை மிகநினைக்க
உகரமுனிக்கூட்டு வந்தஉற்றசடலமது
சிணமேகடலுள் சென்றதுகாண் அன்போரே
குணமேகுணமெனவே கூண்டெரியோன் தான்பார்த்து
மகனைமிகவெடுத்து மகரமதில்உள்ளேகொண்டு
டகரதெருவறயில் லலங்காரத்தட்டில்வைத்து
காலொன்றுய்நிற்கும் கனத்பொன்மேடையதில்
காலொன்றுய்கூடும் நல்லசிங்காசனத்தில்
தங்கவைடூரியத்தால் தான்னிறைந்தமண்டபத்துள்
எங்கும்பிறகாச மிலங்குகின்றமண்டபத்துள்
முத்துக்கள்சங்கு முளங்குகின்றமண்டபத்துள்
பத்தும்பெரியோர்கள் பாவித்தமண்டபத்துள்
தங்கநீராவி தான் வளரும்மண்டபத்துள்
சங்குமுளங்கிநிற்கும் சதுரமணிமண்டபத்துள்
மூவாதிகர்த்தன் உகந்திருக்கும்மண்டபத்தில்
தேவாதிதேவர் சிறந்திருக்கும்மண்டபத்தில்
ஆயிரத்தெட்டண்டநிறைமண்டபத்தில்
தால்பிரியமான தாமபிரவர்ணிமண்டபத்தில்
எண்ணக்கூடாவியல்பு நிறைமண்டபத்தில்
மண்ணளந்தோர்மகரமதுள் மகனை தானிருத்தி
கண்ணு மகர்க்கு கனைத்ததங்கசட்டையிட்டு
எண்ணவொண்ணுப்பணிக ளெல்லாமெடுத்தணிந்து
தங்கக்குல்லாவும் தலைமேலே தூக்கிவைத்து
டங்கமில்லாத்தைதல பதத்தில்மிகமூழ்கி
வைகுண்டவெள்ளை மான்பட்டெடான்றெடுத்து
கைகொண்டுபாலனுக்கு கண்ணருமிகசூடி
மேலுகளுக்கு மினுமினுக்காப்பச்சையிட்டு
கால்லுகளுக்குத்தங்கக் களாசப்பணிகளிட்டு
மகனையெடுத்து மடிமீதிலேயிருத்தி
உகமாளவந்தவனே உடையவனேயென்றுசொல்லி
கண்ணைத்தடவிக் கரியமுகம்தடவி
எண்ணும்வள்ளர் வாயன்றிசைந்தமுகத்தோடணிந்து
பாலனைப்போல்காட்டி பதினுறுடன்காட்டி
நாலுரண்டுகாட்டி நல்லமகவதுக்கு
நடக்கக்கருமம் நீவின்றிடவேநாரணரும்
அடக்கமுடனே அருளுவாரென்போரே

நல்லஉபதேசம் நல்மகவுக்கேயருள
வல்லத்திருநாதன் வருகதகுமென்ன பேசரே

விருத்தம்

தேடியமறைநூல் வேதம்தேவியர்க்கமலநாதன்
நாடியவிறையோனஞானி நாச்சுமார்சேவரோடும
கூடியரிஷியோர்வானோர்க் குவலயமறியாவிஞ்சை
தேடியமகனார்கமெகனாறு செபமினர்சொப்பில்லாதே

விருத்தம்

மகனேஉனதுமனமறிய மறையோர்யறியாவிஞ்சைசெய்து
அகமேயருளித்தருவதெல்லாம மனுபபோலசலில்லகலாதே
யுகமமுடிந்தபிறகு உதிக்குமதர்மயுகதநில்வந்தால்
செகமமயறியச்சொல்விமிகச் சிறந்தேவாழ்ந்துவாழ்வோரே

விருத்தம்

ஆண்டாயிரத்துஎட்டதிலே யதனோமாதமாசிலே
நாந்தானகடலின்கரையாண்டி நாராயணனேபபண்டாரம்
கூண்டார்கெக்ஷணுபுரியில் கொண்டோம்பள்ளிதர்மமுற்று
ஒன்றும்விஞ்சையதுமகனே உரைப்பேன்ரண்டாம்விஞ்சையதே

விருத்தம்

வேண்டாமவேண்டாங்காணிக்கையும மிகவேவேண்டாம் கைக்கூலி
ஆண்டார்நாராயணர்தனக்கு வனுப்போல் வேண்டாம்காவடியும்
வாண்டாமெனவேவநிறுத்தல்செயது வாய்த்தசிறையாயிக் கவிழ்ந்திருக்க
ரண்டாமவிஞ்சையிதுமகனே நவில்வேனமூன்றும்விஞ்சையிதே

விருந்தம்

கொற்றவர்தானுமாண்டு குறும்புகள்மிகவேதோன்றி
உற்றதோர்துலுக்கனவந்து உடனவன்வீழ்ந்தோடி
மற்றதோராணடுதனனில் வருவோமென்றுகமமபோல்
முத்தளநதோருமகாண உரைத்தமூன்றும்விஞ்சை

நடை

நல்லமகனே நாலாமவிஞ்சை கஞு
வல்லநடுஞான வாயத்தவை கண்டமது
பிறநது கொண்டிருகமகவும புதியநச்சேத்திரத்தில்
அறநதனழகைநனறுய யதுசதிகதுமென்றுசொல்லு
மாழுவதுமாண்டு மாதுகந்தவ புளிக நம
மூழுவதைதீகளி புளிபபது வைகண்டுகொள்ளும
ஒருநெல்லாந்து முடைக்க நாடுமகட்டுகொள்ளும
இருநெல்லெடுத்துடைகக நாடுதாங்காது
மலைகளதிர்ந்துவிடும வானமழிநதுவிடும
தலைநக்ஷத்திரம் தானுதிருமமங்காயபோல்

என்றுநாலமவிஞ்சை யிது காணுயென்மகனே
ச... மொனரு... இலே தானிதெல்லாம்மாகுமென்று
சித்தருடனே செபமியிருஎன்மகனே
ஆயிரதேதிட்டத்தில் வாழுமதவருக்கு
வாயிதமாயவிஞ்சை வாய்ப்பேகேள்என்மகனே
நாட்டுக்குடைய நாராயணர்தானும
ஆட்டுக்குடைபூசை அனுப்பர்லுமவேண்டாமென்று
சொல்லியேதர்மம்முற்று சிறையாகத்தானிருக்க
தொல்லுலகில்யார்க்கார் பார்பபோமென்றுசொல்லிடுநீ
தாருணபேய்களுக்கு சொல்லுமுறைகேளு
வாருணநாரணர்தான் வையத்ததர்மம்மேநினைத்து
கவிழ்ந்துசிறையிருக்க காரணத்தால்லோகமெல்லாம்
உலந்துதிரியும்உயிர்ப்பிருணி யாதொன்றையும்
ரத்தவெறிதிபதாப நிலைப்பட்டைமுதல்
சற்றும்வெலிபாவம தானகாணஒட்டாதெனை
தற்மம்நினைத்து தவசிருக்கநாரணனும்
உற்பனமாயறிந்தோர் ரொகிங்கியிருந்தோமெனவே
வீணப்பசாசறிய விளம்பியிருஎன்மகனே
நாணமறியாமல் நனறிகெட்டநீசகுலம்
மட்டையெடுத்தடிப்பார் மண்கெட்டிகல்லெறிவார்
சட்டமசயாதே தன்னளவுவந்தாலும்
நாட்டைக்கெடுத்த நவின்றகலிச்சக்காரத்தில்
ஓட்டைக்கலத்திலும் முக்குமிருப்பதிலும
முழியாதேயென்மகனே மும்முதர்க்குநாயகனே
பொய்யரோடன்பு பொருந்தியிருக்காதே
மெய்யரோடன்பு மேவியிருஎன்மகனே
வர்மபதைதவளைதக்கவந்தே ... சொல்லிமிக
தர்மத்தைவளர்த்துத் தரணியெல்லாம்வந்தேனென்று
மும்முதற்குள்ளாறு யிருபபேதவசுப்பண்ணி
இமமுதலேயாறு யிருப்பேதவசுசெய்து
மும்முதலாகி முறைநடத்துயென்மகனே
மூக்குசுளியு முச்சுளியுமுத்திமுத்தி
நோக்குச்சுழியாய் நேர்நில்லுயென்மகனே
பாரானபட்டணத்தில் பார்வைகொண்டேநாட்டி
சிரமானதுவிரித்து சிறைபோவிருமகனே
ஏற்பதுபால்ப்பச்சரிசி யிருப்பதுபார்மேலாகும்
காப்பதுமாதர் மங்கண்ணேயிருமகனே
சந்தனவர்ண்டை சாந்துசவ்வாதுபுஷ்பம்
எந்தவிதிரும்ஙேனா எள்ளளவும்பாராதே
வாடைபூதீபம் மகிழாக்கலியுகத்தில்
நாடையழித்து நல்லயுகமேபிறந்தால்
சொல்லவொண்ணாத சுகந்தருவேனென்மகனே
கண்டாயோமகனே கரியுபுவுசியெல்லாம
கொண்டாயோவிஞ்சை கூடுபிறகாசமதாய்

அப்போதுதான்பிறந்தான் வைகுண்டருரைப்பார்
இப்போதென்பிதாவே யெனையீன்றெடுத்து
பருவமதாயவளர்ந்து பகர்ந்தீரேஞாயமெல்லாம்
உருவுபிறகாசமதாய் உபதேசம்செய்தீரே
தங்கமுடிவேந்தே தகப்பனேநீர்கேளும்
பொங்குகடல்துகின்ற புண்ணியரேநீர்கேளும்
என்னுடையமுத்துயர மெல்லாயமிகக்கழிந்து
நன்னமூர்தமாக நலமாகசெய்தீரே
இன்னங்கலியுகத்தி லிருக்கபோச்சொல்லீரே
உன்னையறியாமல் ஊன்கலியிலுள்ளோர்கள்
என்னைமிகபபழித்து மேசுவாஎனநீசனெல்லாம்
அல்லாமல்முனைபெற்றவர் களுடையபேரைச்சொல்லி
பொலலாதநீசரெல்லாம் பேசியடிபபானே
சூத்திரவிஞ்சை தொழிலையறியாமல்
யூத்திரநீசனெல்லாம் மொழுங்குதப்பிமாழ்வானே
நம்முடைமஜாதி நம்மைமிகக்காணவந்தால்
செம்மைக்கெட்டநீசன சிதறவடிப்பானே
ஆனதால்நம்ஜாதி யகலினறுவாடுமே
ஏனமென்னசொல்லுகிறீர் என்னுடையநாயகமே
முன்னென்னைப்பெற்ற மொய்குழலாவமிசங்கள்
என்னேதுவாலே யியல்புபெறவேணுமல்லோ
அல்லாமல்முன்னமைதத அணங்குஒருபெண்ணிணங்க
நல்லோர்மனசு நல்லணங்குக்கேகொடுத்து
மேலும்பதவிமிகக் கொடுக்கவேணுமல்லோ
இப்படியேநல்ல யியல்புபெறவருளி
யெப்படியுமென்னை வந்தெக்கவருமநாளும்
எல்லாவிபரமதாய் யிமமபியனுப்புமென்றார்
பொல்லாதபேர்மாள போறதுவுமசொல்லுமென்றார்
அந்தவுடனேயாதி நாராயணரும்
சிந்தைமகிழ்ந்து திருமகனையாவிமிக
கட்டிமுடித்து கமலமுகத்தோடணைந்து
திட்டித்தநாதன் சொல்வார்மகனுடனே

விருத்தம்

எந்தனின்தவத்தாலே யிகபரன்உனக்குள்ளாகி
தந்திடும்மகனேநானும் தனதுளமயமர்ந்தேநானும்
உந்தனைக்கண்டால்மூவர் ரொஞ்சியேமகிழ்வர்கண்டாய்
சித்தர்களெவரும்போற்ற செயல்பெற்றமகனும்நீயே

நடை

மகனேநீகேட்டதற்கு வகைசொல்லவேணுமென்றால்
தவமுமுணுண்டே நீதரணியில்போயிருந்தால
அல்லாமல்பின்னும் மதின்மேல்நடப்புவளம்
எல்லாமுனக்கு யியம்பிதருவேனகேள
முகத்தான்தவசு யுகத்தவச்சென்மகனே

தத்தமுள்ளரண்டாம் தபசுசாதிக்காமே
மூன்றும்தவசு முன்னுரைத்தபெண்ணுள்க்கு
நன்றானமுற்பிதிரு நல்லவழிகளுக்கும்
இப்படியே மூவிரண்டாறுவருஷமதாய்
எப்படியும்நீ தவசிருக்கவருமெனமகனே
ஓராறுண்டெற்ற தவமேயிருந்து
பாராறும்காணயபார் கண்டுகண்டிருநீ
வஸ்துவகைசொத்து மனைவிவீடுவாசல்முதல்
சற்றுமனதெண்ணுமல் தானிருந்தென்மகனே
நன்மையோடுதின்மை நற்பேச்சுதிற்பேச்சு
உண்மையோடுதண்மை மௌனமுமிகபாராமல்
கந்தைத்துணியுடுத்து கைநிமிர்த்துக்காட்டாமல்
எந்தப்பேரோடு மினிப்புமொழிப்பேசாமல்
பாலல்லால்வேறு பண்டமிகவேருமல்
காலெல்லாச்சுத்தம் களுவினையாமல்
மூக்குநடுவே மும்முகமும்முத்திமுத்தி
நாக்குச்சுளிதாங்கி நாசணுனானெனவே
ஏாகபரத்தைக்கண்டிரண்டாண்டோரிப்பாய்
மகாபரனை நெஞ்சில் மறவாமல்லெப்போதும்
கண்டிருயென்மகனே கருத்தொன்றுதானுட்டி
கொண்டையமுதுண்டு குவித்திருயென்மகனே
இப்படியேயாருண் டிருநீயுகத்தவசாய்
அப்படியேயிருந்தா ருண்டேகழித்தால்
நினைத்ததெல்லாமுனக்கு நிசமாய்முடியுமப்பா
உனைத்தள்ளிவேறேயொரு மூப்புயுகத்திலில்லை
வன்னத்திருமகனே வகையதுதானென்மகனே
நீசெய்ததெல்லாம் நிரப்புத்தானென்மகனே
நானீயேயல்லால் நடப்பதுவும்வேறிலையே
தானீதனுசர் வபாரயென்மகனே
உனக்கேக்க உள்ளம்நினைத்தபடி
மிக்கநடத்தி விரும்பியிருயென்மகனே
எண்ணிறந்தகோடி யல்பாவம்செய்தோர்க்கு
நண்ணியமோக்ஷம் நவிலவென்றால்உன்மனந்தான்
முக்கோடித்ருமம் முவர்தளித்தயன்போனை
தக்கோடுநரகமதில் தள்ளவென்றாலுமனந்தான்
உனக்கேக்கநின்றவர்க்கு உதவிகொடுஎன்மகனே
எனக்கேக்கநிற்பவரை ரக்ஷிப்பதுன்மனந்தான்
சிவனும்நீநாதனும்நீ திருமாலும்நீமகனே
தவமும்நீவேதனும்நீ சங்கமுதலெங்கும்நீயே
அப்படியேஅய்யாவரி நாதனுமுரைக்க
முப்பொருளோர்மெய்க்கும் முதலோன்மகிழ்ந்துரைப்பார்
ஆறுவருஷ மதிகத்தவம்புரிந்தால்
வாறுமேலென்னவகுப்பீர் காணய்யாவே
அப்போதுநாரணர்கன்பாய் அகமகிழ்ந்து

செப்புகிறார்நல்ல திருமகக்கேள்போரே
அதிகத்தவசு ஆண்டாருதான்கழித்தால்
இதின்மேல்நடப்பு வியம்பகேள்என்மகனே
இம்மூணுதவமும் மேல்வாய்நிறைவேறி
மும்மூவருக்கு முதல்வனாய்வந்தாக்கால்
தானானயிநீயும் தலைவனும்நீயென்மகனே
சாணாரின்நாயகமே சாதித்தலைவன்நீயே
எந்தப்படிநீ எண்ணிநினைத்ததெல்லாம்
அந்தப்படிசெய்து தவனிதனிலேசிலநாள்
சொந்தவிளையாட்டு தொல்புவியில்கொண்டாடி
சிந்தாதநன்மையோடு செகத்திலிருயென்மகனே
அதின்முன்னாக வன்னீதமாபாவி
ஏதுவினைசெய்தாலும எண்ணம்வய்யாதெதன்மகனே
தாள்ந்திருஎன்மகனே சட்டைக்குள்ளேபதுங்கி
சார்ந்திருஎன்மகனே தனதில்மிகநினைத்து
கோபமாய்விள்ழாதே குவியசிரியாதே
பாவத்தைக்காணாதே பராக்கிரமம்காட்டாதே
ஆக்கிரம்மெல்லாம் மடக்கியிருயென்மகனே
தாக்கிரவனாகிடினும் சற்றும்பகையாதே
எல்லாம்உன்னருகே யிருந்துகேட்டுக்கொள்வேன்நான்
பொல்லாதாராகிடினும் போதப்பகையாதே
வாரஞ்சொல்லாதே வளக்கோரம்பேசாதே
சாரமறிந்துதானுரை நீசொல்லுரைகேள்
ஆய்ந்துதெளிந்து யருளநீயென்மகனே
ஏந்துநீதற்மம் மிடாதுநினையாதே
ஈனமில்லாதநாடு எமக்காகும்சாதியின்மேல்
மானமாயிவருந்தி மகிழ்ந்திருயென்மகனே
அன்பானவவ்வினரக்காய் அறிவில்வருந்தியிரு
தன்பாலேவந்தவுடன சரியாச்சுதென்மகனே
மகனேநானுனது மனதுள்க்குடியிருந்து
சிவனேபொருந்தி செப்புவதுமுத்தாவே
துல்லியம்காட்டேன் சூக்ஷமதுகாட்டேன
நில்லுநினைவில்நீ சரித்துக்கொடுமகனே
பேயன்பயித்தியக் காரனெனப்பேசிஉன்னை
நீசக்குலங்கள் நின்னையடிக்கவருவார்
சாத்துக்கொடுமகனே சற்றுமலங்காதே
ஒருவரோடும்பிணங்கி யுறையாதேயென்மகனே
எல்லாம்நான்கேட்டாள்க் கொள்ளுவேனென்மகனே
வல்லாண்மைபேசாதே மாநிறிபோடாதே
ஏழையாயிருநீ யென்னுடையகண்மணியே
ஆழமனதுடைய அதிகமகனேயுனது
விதங்களறியாமல் வீணாவார்வண்பரெல்லாம்
மதங்கனடக்க வாக்கெனக்கென்மகனே
தந்தைநான்உனக்கு தாளமணிமுத்திரியும்

கந்தைத்துணியதிலே காட்டாதே வைத்துக்கொள்ளு
மகனேயுனது மனமறியக்காட்டினதை
அகத்திலேவைத் தகமகிழென்மகனே
பொறுதிதாவென்மகனே பெரியோராகுவது
உறுதிமிகயுண்டாகும் முகநாதாயென்மகனே
தர்மச்சிறப்புதான் கண்டாயோமகனே
பொறுமைபெரிது புவியாள்வாரென்மகனே
கண்டாயோயென்மகனே கரியமண்டபச்சிறப்பு
பண்டையுள்ளதேரும் பதியும்மிகக்கண்டாயோ
தேட்டமுடனே உனக்கு செப்புமவிஞ்சையானதிலே
நாட்டமறவாதே நாரணயென்மகனே
அப்போது ஆதியுடன் நம்மகவுயேதுரைக்கும்
இப்போதெந்தனக்கு இத்தனையும்சொன்னீரே
கலியுகத்தைமுடித்து கட்டானதற்பதி
வலியுகத்தைக்கண்காண்ப தெப்போமாதாபிதாவேயென்றார்
அப்போமகனேயாவி முகத்தோடணைத்து
இப்போதுசொல்லுகிறே னென்மகனேகேட்டிருநீ
நீபோய்தவசு நீணிலத்தில்செய்திருக்க
நான்போய்நடத்தும் நல்வளமைக்கேட்டிருநீ
ஆயிரத்தெட்டான திருமண்டபத்தில்
வாயிதமாயாண்டொன்றில் வைத்தமண்டபங்களிலே
நூற்றிபன்னிரண்டு நொடில்பேரறையாண்டதிலே
தோற்றுவிபபேணர்க்கும் தாதுமிகநடந்து
பத்தாண்டுக்குள்ளே பல்சோதனைப்பார்த்து
வித்தாரமேலே விசாரிப்பேன்கண்டாயே
அங்கங்கேநாட்டி வைத்தாணிவேரத்தனையும
எங்கெங்கும்மொடுக்கி யானுன்னிடமிருந்து
ஒக்கஒருகுடைக்குள் ளுன்கையிலேவருதந்து
துக்கக்கலியறுத்து சுத்தமாயாளாக்கி
உன்மூப்புயர்மூப்பா யுல்லாசமேதருவேன்
பின்னுப்பில்லாமல் பெரியோர்னின்நாமமதாய்
அடக்குடக்கெல்லாம் மன்றுனக்குநான் தருவேன்
வடக்குவெளிவாசல் மலைமீதில்ஒருபுதுமை
உண்டாகும்மகனே உனக்குநல்காலமதே
தண்டாயுதத்தோடே சத்தமொன்றேபிறக்கும்
மேல்க்கால்மண்டபமும் மேல்மூடிதான்கழன்று
காலத்தால்காணும் கண்ணுமணியுண்காலம்
தெக்ஷிணமூலைத் தென்பால்கடலருகே
மெச்சுபதிமூலம் விளக்கெரியகண்டுனது
காலமிதுமகனே கன்னிதிருதென்திசையில்
கோபுரமண்டபமும் கொடியாமும்வீதிகளும
தாபுரமாய்த்தன்னால் தலங்கள்மிகத்துலங்கும்
கண்டதுவேகாலம் கனத்துவலுசூரியனும்
பண்டுமுறைதப்பி பரிதிரெத்தக்கண்வெறியாய்

மகனேயுனக்காக மாநீசபாவியெல்லாம்
அகமேகனல்தாவி அன்றுடனடாடழிவான்
உகமீதேதர்ம உனக்கெனக்கென்றைறக்குதிக்கும்
மகனேயுனது மாதபத்தோர்காலமோநன்று
காலமிதுமகனே கண்மணியேகேட்டிருநீ
தூலமுறையாதே துலங்குநாள் ஆகுமட்டும்
எழியோரைக் கண்டிரங்கியிருயென் மகனே
வலியாரைக்கண்டு மகிழாதேயென்மகனே
தாழக்கிடப்பாரை தர்க்காப்பதே தர்மம்
மாழக்கிடப்பார் மாதத்தோர்கள் என்மகனே
இவ்வகைகளெல்லாம் மென்மகனேயுன்காலம்
அவ்வகைகள் எல்லாம் ஆராய்ந்துபார்த்திருநீ
இனத்துக்கு இனங்கள் யிருப்பேன்ஞான் சுவாமியென்று
மனதில்வேறுரெனவே வையாதேயென்மகனே
நால்வேதம்மதிலும் நான்வருவேன்கண்டாயே
தூலவேஷமிட்டு சுற்றுவேன்கேட்டிடுநீ
தியங்காதேயென்மகனே சீருள்ளகண்மணியே
மயங்காதேமகனே மாதவங்கள்பெற்றவனே
அவரவர்கள்மனதில் லானபடியிலிருந்து
எவரெவரையும் பார்த்திருப்பேன்நானுன்னிடம்
லிங்கமென்னுகுதிக்கு நினையாகஒருசுவடாய்
தங்கநவரெத்தினங்கள் சமுத்திரத்திலேகாணும்
ஆனையொருகன்றீனும் மதினால்லுலகமெல்லாம
தானாகவாழும் தலைவனும்நீயல்லாது
மலையடிவாரம் வளரும்ஓர்விருக்ஷம்
அலைமதிலும்பெரிதாயது நளையும்கண்டீரே
சிலையுள்ளேதோன்றி சிவத்தோத்திரமாக
நிலையென்றுகி நீயாள்வாய்யுங்காலம
வாரிக்கரையில் மண்டபமொன்றேவளர்ந்து
நாரியர்கள் கூட நாடெங்கும்வாசமிட்டு
ஒருகுடைக்குள் ஆழ்வார் உன்காலமென்மகனே
தர்மதாய் ஞாணியில் தன்னந்தன்றால்சூழ்ந்து
பொறுமைபெரியோராய் பூதலமெல்லாம்வாழ்வார்
அப்போதுநீ யரசாள்வாய்யென்மகனே
வாரிமூன்றுகோதி வளைந்திருக்கும்மோர்தீர்வை
சாதிசொருபிரப்பாய்த் தாழ்வாய்யென்மகனே
கோடுபலவாதும் கோள்நீசப்பாவிகளும்
கேடுவரும்காலம் கிஷ்ணாஉன்நற்காலம்
வானமதுவெள்ளிமாறி வேறுவானமதாய்
மென்முகிலத்து வெறுவானமாய்த்தோன்றும்
நல்லமகனேயுனக்கு வரும்நற்காலம்
சொல்லத்துலையாது குலமகனேயென்கணக்கு
ஒக்கவடக்கி வுரைத்திருக்குதுன்னிடத்தில்
நீக்கமிலக்க நினைத்ததெல்லாம்மங்காரும்

பொறுமைபெரிது பெருயதிருமகனே
தர்மம்பெரிது தாங்கியிருயென்மகனே
எல்லாமுனதுயிச்சைசயதுபோல் நடக்கும்
நல்லார்க்கும் மோர்நினைவோநலமாகுமென்றுசொல்லி
எல்லாருக்கும் விளம்பியிருநீயிருமக ன
பொல்லாதாரோடும் பொறுமையுரைமகனே
தன்னாலேயாகுயட்டுஞ்சாத்தியிருமகனே
வந்தாரறிவார் வாறதார்கிருவார்
இன்னமுன்காலமியம்புவேன் கேள்மகனே
தனனந்தன்னாலேச் சாதிக்குச்சாதிமாழும்
நல்லநினைவோர்க்கு நாளெந்நினையாலும்
பொல்லாதுவராமல் புவிமீதில்வாழ்ந்திருப்பார்
நாட்டில்ஒருவனுமன் நல்லவனைநான்அயச்சு
கோட்டிசெய்யென்றுரைப்பேன் கேளமகனேயுன்காலம்
முறைதப்பியாண்ட முகசன்வெறுநீசன்
குறைநேரவுகொண்டு கூடியளப்பானுங்காலம்
அதிலெசிலபேர் அரசுகையெனக்கெனக்கெனவே
விதியையறியாமல் வெட்டிக்கொண்டேமாழ்வார்
அத்தருணம்உனக்காலம் மதிகமகனேகேளு
இத்தருணமல்லாயின்னு மெடுத்துரைபபேன்
எல்லாருமைகைவிட்டுயிருப்பார் உனனைத்தொடாமல்
நல்லோர்மனதில் நானுமென்றுரைப்பார்
கோலவிளையாட்டு கொஞ்சமெடுப்பேநான்
தூலமறியாமல் தொல்புவியெல்லாமயங்கும்
அன்போர்களெல்லாம் ஆவியைதானமறுகி
இன்பமுடனே ய இயேங்கியழுவார்
இத்தனைநாளும் இவரைநம்பிநாமிருந்தும்
புத்தியதுகெட்டோமென்று மகப்பேதலிப்பார்
அப்போதுவாகாவன்லீசமாபாவி
இப்போது கண்டுதெனபான்யெலமேசொன்னதெல்லாம
எய்த்தானனென்பான் அன்போரையிடுக்கஞ்செய்தேயடிப்பான்
சூக்ஷமுடனேசொருபமொன்றுநாமெடுப்பேன்
அதுதான்ஒரு காலமதிகமகனேகேளு
இதுபெரிய சூக்ஷமெனமகனேகெட்டிருநீ
அதின்மேலெஅன்போர் அதிகெரியாராம்
இதின்மேலேகண்டு மெய்வோடும்வல்லோரே
பின்னுமொரு சூக்ஷ உபிறமாணமாயெடுப்பேன்
பன்னுமணிய பராபரமேகெட்டுருநீ
குழந்தைத்தடதடனக் கொந்துயொந்தாயுடைத்து
சுழற்றிக்கனலக்கினியும் துர்க்கமகாதுர்க்கையையும
விட்டயச்சமானிலத்தில் விளையாடியேதிரியும்
கட்டடங்களாகக் கனமாய்குழுகுழென
ஓடுவார்பதறி விழுவார்அறமெலிந்து
நாடும்பெரியோர் ; நலமாகவாழ்ந்திருப்பார்

என்மகனையுன்காலமின்னம் வருப்பேன்காண்
பொன்மகனேபூமியிலே பின்னுமொருகாரணங்கேள்
கேட்டனசுருணிக் கெம்பிக்கடைக்காலம்
மொட்டைத்தலைவருவான் முழையளவேஞடிடுவான்
ஆடிக்கொண்டாடி அங்குமிங்குந்தானலைந்து
ஓடிக்கொண்டோடி ஒன்றுபோலேமாழ்வான்
மகனேஉன்கால மகிழ்ந்திருமென்மகனே
உவமையொன்று சொல்லுகிறேனுர்பனமாய்கேள்மகனே
புத்திரனுக்கேகுருவும் புகன்றதெல்லாம்புகன்றாலும்
சுற்றமொருகூடித் தொழிலுண்டுவாயனுள்
அத்தனையுமமென்னுள்ளடக்கமில்லையென்மகனே
முத்தியெனையீன்ற முதல்நாளோர்விஞ்சைவைத்தார்.
அவ்விஞ்சைமாத்திரமே யானுணக்கியவில்லை
இல்விஞ்சை ஈவதுதானேப்போவெனக்கேழு
சீமையரசு செலுத்தவரும்நாளையிலே
மேன்மைமுடிதரிக்கும் வேளையிலென்மகனே
சொல்லுகிறவிஞ்சை சுத்தவோகேட்டிருநீ
பல்லுயிர்களுக்கும் படியளக்கும்விஞ்சையது
எல்லாமுனங்களித்தேனென்னுடைய நாரணனே
அல்லாமல்நானுனக்கருளுகிற விஞ்சைகளைக்கேள்
பெரியோர்க்குவாழ்வு பெருகச்சிறந்தாலும்
மரியாதியேயிருக்குமகனேநீ கேட்டிருநீ
சற்றோருலே வாழ்வுசகடருக்கே வருகில்
கற்றோரையாகிடினுங்கண்டறிவேன் போனீயென்பான்
முள்முருக்கம்பூவுமினுக்கு மூன்றுநாளை
கள்ளருக்குவாழ்வு காணுமதுபோல்மினுக்கு
நல்லோர்க்குவாழ்வு நாளுங்குறையாமல்
வல்லோர்க்கும்நல்லோராய் வாழ்ந்திருப்பார்கண்டிருப்பாய்
விள்ளாதஞாயம்மேல் ஞாயமென்மகனே
துள்ளாதயானை துடியானையென்மகனே
அடக்கம்பெரிது அறிவுள்ளமென்மகனே
கடக்கக்கருதாதே கற்றோரைக்கைவிடாதே
நன்றிமறவாதே நாம்பெரிதென்றெண்ணாதே
அண்டினபேறையகற்ற நினையாதே
ஆபத்தைத்தக்காத்துயக்ல நீதள்ளாதே
சாபத்தைக்கூறாதே தன்னழவுவந்தாலும்
கோபத்தைக்காட்டாதே கோழோடிணங்காதே
பாபத்தைக்காணாதே பகட்டுமொழிபோசாதே
பசுவையடைத்து பட்டினிகள்போடாதே
விசுவாசமதிலே விரோதம்நினையாதே
எழியோரைக்கண்டு ஈந்துயிரயகிடுநீ
அழிவென்ற பேச்சனுப்போல்நினையாதே
தொட்டுப்பிடியாதே தோர்வைவைத்துகாணாதே
விட்டுப்பிடியாதே வெள்க்கமதைக்காணாதே

வரம்புதப்பாதே வழிதவறிநில்லாதே
பரம்பூமிக்கண்டு பாவித்திருமகனே
இத்தனைபுத்தியெடுத்துரைத் தேனென்மகனே
புத்திவிபரீதமாய் பின்னுமாராயாதே
சட்டம்மறவாதே தன்னழுவுவந்தாலும்
நட்டங்காணுதே நாடாள்வாயென்மகனே
என்மகனேஞனுமுனக்கின்னமொரு விஞ்சைசொல்வேன்
பொன்மகனேயுன்னுடைய புத்தியிலேவைத்திருநீ
இச்சட்டந்தன்னிலெள்ளளவு தப்பினதால்
ஈச்சட்டங்காய்க்கத் தெய்திவருமென்மகனே.
அனுப்போல மறவாதே யான்வைத்தசட்டமதில்
மனுப்போலென்றிராதே மனதெண்ணமாயிருநீ
புஞ்சமுர்தெயென்னுடைய பாதைதத்தப்பிநடந்தாய்
கொஞ்சும்கிழியே கொன்னெழுப்பு வேலனையும்
பதறியிருயென்மகனே. பம்மியிருக்கண்மணியே
பொறுதிமகனே பெரியோராகுவது
உறுதிமகனே உலகமதையாழுவது
மகனேநானெத்தனையோ மகாபிலங்கள் கற்றவன்ஞான்
புகமீதேச்சொல்லத்துலையுமோ உத்தமனே
எவ்வுகங்களுக்குயிப்படியே தற்மமில்லை
செவ்வுமகாவிட்டிணுதானென்று சொல்லார்தேசமதில்
இப்போதுஎன்மகனே. இக்கலியன்மாய்மாலம்
செப்பவெளிதலவே ஜெயிக்கயேலாதாராலும்
இபபோதுஉன்னோடுரைத்தயியல் விஞ்சைக்கப்படுங்காண்.
அபபனேபம்மலிலெயகப்படுங் காணிக்கலியும்
கலியென்றுலெலியல்லவே கணையாளிவேண்டாமே.
வலிமாயநினைவு மாய்மாலமென்மகனே
ஆனதாலாயுதங்களம்புதடி வேண்டாமே
மானமாகவிருந்தால் மாழுங்கலிதன்னாலே
இன்னமொருவிஞ்சையியம்புவேன் கேளமகனே
முன்னவனைக்காறனோடு மோதிப்பகையாதே
பகைத்தர்லிருக்கவொட்டான் காணவ்விடத்தில்
உகத்தடக்குமுன்னே ஒருவரையும்சீறரிது
தாழ்ந்திருக்கவென்றால் சர்வதுக்கும்தாளனுமே
ஓர்ந்திருக்கவென்றுவொருவர்ப் பகையாகாதே
ஆனதால்நீயும்மவனைப் பகையாதே
நானவனைக்கேள்ப்பேன் ஞாயக்கேடாகிடினும்
வலியோர்க்கொருவளக்குவைத்து நீபேசாதே
மெலியோர்க்கொருவளக்கு வீணுப்பறையாதே
செர்த்தர்த்திவஸ்த்து சுகமெனறுமெண்ணுதே
வஸ்துவிங்க பெண்வகையென்றுயெண்ணுதே
நீபெண்ணுதேயிருந்தால் நீணிலங்களுமயங்கும்
தானிதின்மேலெண்ணந்தங்கு தங்காதேயிரு

சத்துருவோடுஞ் சாந்தமுடனேயிரு
புத்திரரோடும் பேசியிரென்மகனே
அனபோர்க்குமீந்திருநீ ஆகாப்பேர்க்குமீயு
வன்போர்க்குமீயு வழிபோவோர்க்குமீயு
சகலோர்க்குமீந்துதானிரு நீயென்மகனே
வலியோர்க்குமீயு வளிபோவோர்க்குமீயு
மெலியோர்க்குமீயு மேன்மையாய்என்மகனே
ஆர்க்குமிகவீந்தால் அந்தத்தர்மமேக்கொதிக்கும்
போர்க் குநினைத்தாரைபெலி கொடுக்கும்தர்மமது
தர்மந்தான்வாழு சக்கரங்களல்லாது
இன்மையதுகேடு செய்பக்கேளென்மகனே
சாதிபஇனெட்டுந்தன்னால் கேடாகும்வரை
நீதியழியாதேநீ சாபங்கூறுதே.

விருத்தம்

மகனேயுனக்குவைத்தவிஞ்சை மனதிலறிந்துகொண்டாயோ
அகமேவைத்தசட்டமெல்லா மதுபோல்நடத்துமல்லாமல்
யுகமேயழியுமுன்னாக வோருசொல்லிலெகுறைவாறால்
தகமோசறியத்தீ முள்ளிசதியாய்மறுத்துமுளிப்பாயே.

விருத்தம்

நல்லோர்மகனே சொல்வதுகேள்நானேனைவைத்தவிஞ்சையெல்
வல்லோனேனதிருமகனே மனதிலறிந்துவறிந்துநட [லாம்
எல்லாநதுள்ளாச்சுஜென்றுயெண்ணி நடப்போனாமுன்னாலே
சொல்லால்த்தாண்டி நடுப்பீரால்தீயேஒளித்துவருவாயே.

விருத்தம்

கொடுக்கும்வரங்கள் உனக்கீந்தேன்கொடுத்தவரத்தைதப்பறிப்
உடக்குவரமும்தந்தேனான் உந்தன்ஆணைத்திருவாணை[பதற்கு
அடக்குமுடக்குந்தந்தேனை ஆதிசிவனாரவராணை
நடக்கும்படியேசட்டமெல்லாம் நாராயணனே தந்தேனே.

விருத்தம்

தந்தவரங்கள் தவறாது தருணஞ்சடையுந்தறைமீது
எந்தன்மீதுமறவாதே யென்னேட்டருளுமிறையோனே
அந்தன்மீதுமறவாதே யாயானெனவேயறிவில்வைத்து
சிந்தைமகிழ்ந்துமுறை நடந்தால்சிவனுமுனக்குள்வசமாமே

விருத்தம்

தாயாரோடுசிவமாது சரசுபதியேபொன்மாது
நேயமாதர்மடமாது நீணிலமறியவந்துனது
பூசாபலன்கள் சொல்லிமிகப்புலம்பித்திரிவார்துயர்தீர
மாயாதிருக்கு மகனேவுன்மனமேமகிழ்ந்துமகிழ்ந்திருவே.

விருத்தம்

சொல்லயெழிதோமென் மகனே சொல்லாதனேகந்தோன்று
வெல்லயெழிதோயென்மகனே மேலோரராலாலும் [மினி
கொல்லவெழிதோவுனேமகனே கோரவங்கிரியிநகேலாறலும்
வெல்லயெழிதோவுனேமகனே மேலாங்கண்ணேமிகவளராய்

விருத்தம்

இந்தப்படியேநாரணரும் மியம்பமகவுயேதுரைக்கும்
கந்தனுறுவேலானந்தகப்பாகடிதாயுன துபடிநடக்க
எந்தப்படியோநான் றமியேயன்யேதோவறியப்போறேறனென
சிந்தைமகிழ்ந்துதகபபனுடதிருந்தாள்பிடித்துசெப்பலுற்ருர்

நடை

தன்னம்பெரியக் தாட்டிகவைகுண்டரும்
என்னசொல்வீர் எந்தனக்கென்தகப்பாநீரெனவே
வணங்கிப்பதம்பூண்டு மதாவையுந்தொழுது
இணங்கியிவர்கேள்க்க யேதுசொல்வார்நாரணரும்
நாரணுவைகுண்டா நன்மகனே என்யினி
வாரணமேநீவணங்கி மகனேகைசேராதே
நீகைகுவித்தால் யெனக்குமிகந்தாங்கரிது
தானீதனுன சறுவபராயென்மகனே
ஒருவருந்தாங்கரிதுன் கைகுவித்தாக்கால்
குருதெய்வநீயே கோவேகுலக்கொழுந்தே
இன்னமுனக் கியம்புகின்றவிஞ்சையதும்.
பொன்மகனே பூராயமாய்க்கேழு
சாதிபதிெட்டுந் தலையாட்டிபபேய்களையும
வாரிமலையதிலும் வன்னியிலுந்தள்ளிவிடு
வரத்தைமிகவேண்டி வைத்துக்கொள்ளென்மகனே
உனக்கொள்கிரக முறவுகெட்டபேர்முதலாய்
கள்கோள்கருவைக் காணுதேசாபமிடு
செல்வம்பொருந்தி சிறந்திருயென்மகனே
கொல்லென்றபேச்சுக் கூருதேயென்மகனே
ஒவ்வொன்றைப்பார்த்தூணு வொவவொருசாபம்
செவ்வென்றபேச்சு செபபியிருயென்மகனே
உரைத்தவிஞ்சையெல்லா முனக்குபோதுமோமகனே
வினரத்துமுள்ளவைகுண்டா விர்பனவாநீகேழு
நீபோயிருக்கு மிடங்களிலென்மகனே
அன்பானபஞ்சவர்களங்கேயுண்டென்மகனே
முன்னேபிறந்தவுகத்துக்குகங்களெல்லாம்
என்னேவிட்டகலாதிருந்தார்கள்பஞ்சவர்கள்
மானமுள்ளபஞ்சவரை மகனேமுன்விட்டுக்கொள்
ஆனதாலிப்பிறவி யானும்நீயாகையினல்
அல்லாமல்கேள்ளரிநா ராயணுயென்மகனே
நல்லோராய்ப்பெண்கள் நாடியெண்ணக்கூடாது
வல்லோராய்னந்தன் வம்மிசத்தில்வந்திருந்தார்

அப்பெண்ணுக்கெல்லா   மதிகபலன் தாறேமென்றேன்
இப்பெண்ணோர்கள்சிலர்க   ளின்னமங்கேதோன்றிவந்தால்
ஆனதால்பெண்ணோர்க்   கழுகுகொடுயென்மகனே
நின்றதவசு   நிறைந்தறிஞல்மகனே
வுண்டோடியார்   சிலரையுன்பாரிதாணுக்கி
நன்மைகொடென்மகனே   நாரணுநாடாள்வாய்
உண்மைமினைத்தோர்க்கு   உதவிகொடுயென்மகனே
கட்டைவிடாதே   கருத்துள்ளயென்மகனே
சட்டமறவாதே   சாத்திரத்துக்குற்றவனே
பெண்பரவம்பாராதே   பேணியிரென்மகனே
கண்பாருகண்மணியே   கன்னிகணவருக்கு
இன்னமொருசூத்திர   மியாபுகிறேன்கேள்மகனே
துன்னமறியத்   தோற்றுவிப்பேன்சாதிதோறும்
அன்பிவன்புபார்க்க   வாருரிடத்திலும்போய்
உன்புதுமைசொல்லி   யுடலைமிகவாட்டி
சாதிசாதிசோறுஞ்   சக்கிலிபுலச்சிவரை
ஆதிச்சாதிமுதலாயாராதனைக்காட்டிவிப்பேன்-
காட்டிவிக்குஞ்சொருபங்கண்   டிருவென்மகனே
ஆட்டிவிப்பேனல்   வேதமதிலுநான் மாயமிட்டு
துலுக்கன்வீடானதிலுஞ்   சூதாட்டுப்பார்த்திடுவேன்
இலுக்கமொன்றுசெயவே   கீழுமேலும்நடுவும்
பதறித்தெளியும   பார்த்திருயென்மகனே
நீபெரிதுநான்பெறிது   நிச்சயங்கள்பார்ப்போமென்று
வானபெரித்தறியாமல்மாள்வார்   வீண்வேதமுள்ளோர்
ஒருவேதம்தொப்பி   யுலகமெல்லாம்போடுவெனபான்
மற்றொருவேதம்சிலுவை   வையம்யெல்லாம்போடுவென்பான்
அத்தனுதிவேதமவன்   சவுக்கம்போடுவென்பான்
குற்றமுறைப்பான்   கொடுவேதக்காரனவன்
ஒருவருக்கொருவர்   உனக்கெனக்கென்றேதான்
உறுதியழிந்து   வொன்றிலுங்கைகாணுமல்
குறுகிவழிமுட்டிக்குறைநோவுகொண்டுடைந்து
மறுகித்தவித்துமாள்வார்கள்   வீண்வேதமுள்ளோர்
ஓடுவாரேசிலபேர்சொழிவார்   சிலபேர்கள்
கேடுவருமேகேள்விகேழாப்   பேர்க்குயெல்லாம்
அதின்மேல்மகனே   யானுனக்குசொல்வதுகேள்
இதின்மேலுனக்கு   யேகவியாழம்வருது
சந்தோஷமாகுதுசானுனைச்   சார்ந்தன்பேர்க்கு
எந்துயரெல்லாமெகுது   காணென்மகனே
அதுவரையும்னீதானன்   பாயிருமகனே
எதுவந்தாகிடினும்   மெண்ணம்வையாதேமகனே
சுறுக்கிட்டியானும்   ஒவ்வொன்றாய்த்தோன்றவைப்பேன்
இறுக்குமிறைகளெல்லா   மில்லையென்றுசொல்லிநீ
வெண்டாமிறைகள்   வேண்டாமெனறுசொல்லிவிடு
ஆண்டார்மகனே   அதிகதிருமகனே

நல்லமகனே நான் வைத்தவிஞ்சையெல்லாம்
செல்லமகனேவுன் சிந்தையிலேப்பத்தினதோ
போதுமோவிஞ்சை புகலணுமோயென்மகனே
சாருமொருவிஞ்சைதான் சொல்வேன் கேள்மகனே
மூவ்விஞ்சைவைத்தே னுலகமறியாத்தவிஞ்சை
இவ்விஞ்சைமாத்திரமே யினம்பிரித்துசொல்லாதே
பெற்றோர்கள்கண்டுகொள்வார் பேசறியயென்மகனே
கற்றோர்கள்கண்டுகொள்வார் கண்ணேதிருமகனே

விருத்தம்

கண்ணேமகனே திருமகனேகமலயபூமாகரிமகனே
எண்ணெயெழுத்தேயென்மகனே யிறையோரர்தொழுவேவரு
ஒண்ணேமகனேவுயர்மகனேவுடையமகனேகண்மணியே [மகனே
தண்ணேமகனேதவமகனே சாகாதிருக்குஞ்சலமகனே

விருத்தம்

மகனேதவமேமரகதமே மாதவம்பெரியமலரோனே
தவமேயுனதுள்வைத்த விஞ்சைதானேபோதுமோமகனே
ஏகமேமகிழவந்தவனே யெந்தன்மகனேவளர்வையென [ணரே
உகமேயளந்தோருரைத்திடவே யுயர்ந்தமறையோர்வாழ்த்தி

நடை

அய்யாநாராயணரு மாதிவைகுண்டமென
மெய்யாயுரைத்து விளங்கவேவாழ்தலுற்றார்
மகனேயுன்தேகமதில் வைத்தநிறங்களெல்லாம்
யுகமழியுமுன்னே யொருவர்கண்காணாதென
அகமேவைத்து அகமகிழுயென்மகனே
வைகுண்டமென்றுமிக வாழ்த்தக்குருநாதன்
மெய்குண்டத்தோர்கள் மேலோர்கள்வாழ்த்தலுற்றார்
மகரவுந்இவிட்டு வைகுண்டந்தான்பிறந்து
சிகாமுனிதேவருட சிறப்பதிலேவந்தவுடன்
தேவர்திருவானோர் சென்றெடுத்துவைகுண்டரை
மூவர்தேவர்மகிழ்ந்து முதலோனைக்கைகுவித்து
ஏந்தியெடுத்து யிளந்தொட்டில்மீதில்வைத்து
சாந்திக்கழித்துத் தவலோகச்சட்டையிட்டு
வீரையும்வந்து வீரலெக்ஷிமியெடுத்து
மடிமீதில்வைத்து மாதுசரசோதியுடன
குடியானபேருங் கொண்டங்ககமகிழ்ந்து
பொன்றொட்டிலிட்டுப் பொன்சீதைத்தாலாட்
ண்பங்கொடியாள் சரசுபதிமாதுதாலாட்ட
தேவரிசிவானோர் தெய்வரம்பைமாதரெல்லாம்
சீவசெக்தெல்லாந் திருப்பாட்டுப்பின்பாட
ஈசர்முதலச்சங்க மெண்ணிமனமகிழ
சார்சரசுபதியாள் தாலாட்டவேதுணிந்தாள்

விருத்தம்

பொன்மணிப்பதியினுள்ளே புலனரிகிஷ்ணர் பெற்ற
தண்மணிப்பாலென்றன்னைத் தங்கமாந்தொட்டிலிட்டு
மின்மணிகொடிசேர் கன்னிவிழுங்கியேசோதிமாது
கண்மணிவைந்தராசர் காணத்தாராட்டினாகேள

தாலாட்டு

தார தட தர தாரரரோ தார ரா ரா ரா ரோ
நாராயணர் தானோ தாராரோ நல்லநாராயணவைகுண்டமோ
கர்ரணர் தானோ வைகுண்டமோ கைலாசநாதக்கண்மணியோ
செல்வமுதலானசீமானோ சிவசிவாசிவசிவமுதலோ
அல்லல்கற்றியேயரசாளும் மரியோன்மிக பெற்றவரிதானோ
தெய்வப்பெருமாள்தான் பெற்றகண்றோ சீதைமாதுதான்
பெற்றகன்றோ
மெய்யநிநாதன்பெற்றகண்ணோ விஷ்ணுமகாபான்பெற்ற
கனறோ
ஈசர்மைத்துனர்பெற்ற கன்றோயிரவாதிருமாதுபெற்றகன்றோ
பாயத்திருவுளம்பெற்றகன்றோ மானவைகுண்டராசக்கன்றோ
வேதக்குருநாதன்பெற்றகன்றோ வீரலக்ஷ்மீஈன்றகன்றோ
சீதக்குருதாயாரீன்றகன்றோ தெய்வவைகுண்டராசக்கன்றோ
கிஷ்ணமகாநாதன்பெற்றகன்றோ கிருபைக்குருநாதகண்
மணியோ
விஷ்ணுமகாநாதன்பெற்றகன்றோ வீரலெக்ஷமிஈன்றகன்றோ
நாட்டுக்குடையதோர்நாரணரின் நல்லபாலனோவைகுண்டனோ
மூலச்சிவநாதன்பெற்றகன்றோ வுலகையொருக்குடைக்காள்
வானோ
நாலுவேதமுந்தாண்டிமுறைநடத்திவொருகுடைக்காள்வானோ
தர்மத்திறவானோ தாராரோ தங்கவைகுண்டத்தாட்டிகனோ
மகரச்சீதையாள்வயிற்றிலுற்றுவளர்ந்தவைகுண்டமாமணியோ
அகரசிவகோபுர மழகுடதியதிகபதிகண்டுவந்தவரோ
தங்ககோபுரந்தளிர் மாமுஞ்சதுரமேடைகள்கண்டவரோ
சங்கமகிழவேவந்தவரோ சகலகலைதமிழராய்ந்தவரோ
உலகம்பதினாலுமொருகுடைக்குளொரு சொல்மொழிக்கள
வந்தவரோ
இலகுப்பிறகாசச்சுவடுகொண்டுயிலங்கும் பதியாளபிறந்த
வம்புக்கலியுகக்குலமறுக்க வைந்தபதியாளவந்தவரோ [வரோ
அம்புகணையொன்றுமில்லாமலேயறுக்கவந்தாரோகலிதனையும்
கூடப்படைகள்துணையில்லாமல்தறும்பையடக்கவேவந்தவரோ
சாடத்தலையாரியொன்றில்லாமல் சதைக்கவந்தாரோகலி
யுகத்தை
வாழுமாயுதமெடுக்காமலே வதைக்கவந்தாரோக்கலியுகத்தை
கோழுபேய்களைகிரகங்களை கொல்லவரம்பெற்றவைகுண்டரோ
சானக்குருநாதவைகுண்டரோ சாதித்தர்க்காக்கும்தலை
யாரியோ

காணுக்கருவான குருமூலமோ கர்த்தன் கர்த்தாதிக்கடவுள்
தானே
நீசக்குலங்களைக்கருவறுக்க நெடியநாராயணர்பெற்றகன்று
தோசபபுழுச்சாதிகுலமறுக்க திருமால்நாராயணர்பெற்ற
கன்று
சீமைமன்பத்தாறுதேசமெல்லாம் சொல்லொன்றுக்குள்ளா
ளபபிறந்தவரோ
நாமம்பெரியதோர்வைகுண்டவரின் நாமம்பெறவோங்கவந்த
வரோ
தெய்வப்பாலர்கள்சிறந்துபோற்ற சீமையரசாளவந்தவரோ
மெய்வாய்மையுடன்முறைநடத்தி மேன்மைசெங்கோல்முடிதரித்து
பொன்மைபெரியோனே வைகுண்டனே பெரியப்பூமேடைக்
கொலுவீரனே
தர்மவரம்புகளைதவறாமல் தரணியரசாளும்வைகுண்டரோ
இராசிநிறையிலுந்துல்லியமாய் செங்கோல்செலுத்தவே
வந்தவரோ
மிராசுமூவர்க்குந்தன்மைதானே மூலச்சிவமணிக்குருநாதனே
சான்றோர்களைக்கட்டிசரணங்கூறத் தரணியொருக்குடைக்காள்
வானே
வையமழுந்தவேதோர்நாரணர்க்கு மதலையெனவந்தவைகுண்டமோ
தர்மபதியாளும்வைகுண்டரோ சான்றோர்க்கனுகூலமானவரோ
அலைந்துமலைந்ததோர்சான்றோர்க்கு ஆதிகவிதிகொண்டு
பிறந்தவரோ
சாணுக்குலநாயகமோ தர்மந்தழைக்கவேபிறந்தவரோ
தோணுதுறைகொண்டுவந்தவரோ பூவைப்பதியாளப்
பிறந்தவரோ
ஏழுயுகடாக்கணக்கு யெல்லைமெடுத்துநடுதீர்க்கப்பிறந்தவரோ
ஆழுமலைகுண்டப் பதியாளவேவையதியமவைகுண்டமபிறந்தவரோ
வீரவீராதிவீரனானோனேவீர சூரனீன்றகண்ணே
சூராசூராதிசூரனானோனே சூரனார்பெற்றகண்மணியோனே
நாத்நாரணர்பெற்றகண்ணே நாகமணிநாதன்பெற்றகண்ணே
ஏகச்சிவனுதன்பெற்றகண்ணேயிறவர்ச் திருமூர்த்திபெற்ற
கண்ணே

வேறு

சந்திரசுந்தர தந்திரமந்திர சாமசீர்பாலகனே
நாயகமாயகநாயகமாகிய தாண்டசகரனே
சுந்திரசந்திரயந்திரகுஞ்சிதசூரிய பிறபாலகனே
சூரனேவீர னுமாதானே நீதனேகுலகலாதிபனே
தந்திரமந்திரயிந்திரசுந்தரி சைந்தசுந்தரியோ
சகடவெவ்விசண்டனை யகடவெலிசெய்திடுஞ்சக்கிரயுகரனே
கொந்தரிசந்திதந்திரசுந்தர கோசலானுயகனே
கொடுகலியறவொருகடுமுனை கொண்டொருள்குலவேங்கிட
குண்டகமோ
சுத்தனைகற்றரித்தோனைவத்தனே துலங்குந்தங்கானே

சூரனே வீரனே தீரனே நீதனே   சூரியப்பிறகாசவிநோதனே
வீரனே ஸாரனே தீரனே சாரனே   வெங்கிடாங்கிடனே
விகட, கட, கிடந, டகுட, டட, டகமருள்   விக்கிரசக்கிரனே
தீரனே ஸாரனே சீரனே வீரனே செந்திலம்பதிவளர்சந்திரனே
திக, தக, தரிகிட   செகமுமருள்புரிதிக்கிரவிக்கிரனே
நீதனே கீதனே வீதனே மாதனே   நீதவெங்கோகுலனே
கிகடுகலிதகடதவிகடுகுடல்   கருவறநெக்கிறவிக்கிறனே

விருத்தம்

இப்படிமவ்வைமாது   யியல்புதாலாட்டக்கண்டு
செப்படிமுனிமாரெல்லாம்   சிவனைவந்தர்பதந்தில்சென்று
முப்படிமுறைபோல்தேவர்   முக்கந்தன்பள்ளிக்கொள
அப்படிதேவரெல்லாம்   அவரிசைகூறலுற்றார்

பள்ளியுணர்த்தல்

பள்ளியுணராய்சிவமருகாநீ   பள்ளியுணராய்சிவமருகா
பள்ளியுணராய்நீ   தெள்ளியையாகவேபால்க்கடல்மீதினில்
தாக்குடனுத்தவா
வெள்ளியுதித்திடபள்ளியுணர்த்தவும்   வேதநாராயணர்
சீதகோபாலர்க்குகொள்ளியெனவந்த   வைகுண்டகோவனே
கோவேங்கிரிவளரீசர்மருகோனே   வள்ளிமணவாளா
வளர்செந்தூர்வாரியில்வந்துபிறந்து   நல்தெட்சணம்புகுந்தவா
பள்ளியுணராய்   சிவன்மருகாநீ   [கள்
வேகமுடனொருசந்தத்துள்ளாடியே   மேதினியோருக்குபகாரங்
செய்யவே ஆகாத்தபேர்களை   யக்கியில்தள்ளவுமாகின்ற
பேர்க்குபகாரங்கள்செய்யவும்   தாகத்துக்கானதோர்
தண்ணீர்கொடுத்துநீர்சஞ்சலநோய்பிணியஞ்சர்க்குத்தீர்க்கவும்
யேகத்துடன்நாளும்நாராயண   வேந்தர்க்குயம்பியெனவரும்
தம்பிரானவா   பள்ளியுணராய்சிவமருகாநீ
மூர்க்கன்கலியுகராசனை தட்டியே   முடுமுடுக்கம்செய்தமூர்க்கரை
வெட்டியே ஆர்க்கமுடன்   புவியண்பத்தாறுசீமையும்
அடக்கியொருசொல்லு   குடைக்குள்ளேயாளவும்காக்கமகா
தர்ம
கர்ப்பையும்காக்கவே   கர்த்தனரிகிஷ்ணர்புத்திரராய்வரும்
தார்க்கதிறம்வளர்   வைகுண்டராசரே   [மருகாநீ
தர்மமதிலுறையும்   பொறுமைகுலதீரபள்ளியுணராய்சிவன்
தம்பிலமானகுரோணி   குண்டோமனைத்தத்தியாத்தில்லை
மல்லாலனை
சூரனைவம்புயிரணிய   ராவணசூரனைமகோதரனேதிரியோதனப்
பாவியைகொம்பினும்   தெம்பிலும்பினால்கொன்னதோர்
கோபாலகிருஷ்ணருளந்தை   வைகுண்டரேநம்பினஅன்பர்க்
குபகார
சாலியோநாரணசீமைகரிவிரியானவா   பள்ளியுணராய்சிவன்
மருகாநீ

விருத்தம்

பள்ளிதானுணர்த்த தேவர்பரிவுடன்கேட்டுவைந்தர்
தெள்ளிமைகுண்டராசர் சிந்தையில்அன்புகூர்ந்து
நள்ளியதேவரார்க்கும் நயமுடன்தயவுமீர்ந்து
துள்ளியேதகப்பன்பாதம் தொழுதவர்வணங்கிச்சொல்வார்

நடை

தேவர்துயரமெல்லாந் தீர்ப்போங்காணென்றுசொல்லி
மேவலர்கள்போற்றும் விசையவைகுண்டராசர்
தகப்பனுடபதத்தில் சரணமிகப்பணிந்து
உகபரனார்நோக்கி யுரைக்கின்றான்போரே
என்னையீடேற்றி யிரச்சிக்கும்பெம்மானே
மன்னேபிதாவே மாதாவேயென்தாயே
எல்லாவிபரமதும் எடுத்துரைத்தீர்என்தனக்கு
நல்லோரேநானினிதான நடக்கவிடைதாரும்
பண்டுள்ளவாகமம்போல் பால்வண்ணர்பெற்றிடும்
குண்டர்தெச்சணமே கொள்வார்தான்பள்ளியென
ஆதியாகமப்படியே யனுப்பிவையும்புவியில்
சோதிமணியே சுவாமியெனத்தொழுதார்
உடனேமகன்தனையும் உவந்துமுகத்தோடணைத்து
கடலில்ச்சிறப்பை கண்டாயோவென்றுசொல்லி
மகனேயுனைவிட்டு மறுவூருவாழ்வேனோ
நகமுஞ்சதைபோல் நானவருவேனுன்கூட
எத்தினைகோடி யியல்தர்மஞ்செய்துவுன்னை
பெற்றெடுத்தேனுன்கூடே பிறகேவருவேனப்பா
நீயொருவனெனக்கு நிலையென்றுகாணுமுன்னை
தாயில்லாப்பிள்ளையைப்போல்த் தட்டளிந்தேனென்மகனே
மகனேயுனைக்கண்டு மனச்சடவெல்லாந்தீர்ந்தேன்
சுகமேபோய்வா வெனச்சொல்லியனுப்புவனோ
உன்கூடநானு மோடிவருவேனப்பா
என்கூடஉனதாயும் ஏகிவருவாள்காண்
என்றுதாய்தகப்பன் இவர்கள்வழிகொளவே
கண்டுவைகுண்டர் கனமாய்மனமகிழ்ந்து
நீங்கள்வருவதுதா னெனக்குவெகுசந்தோசம்
தாங்கிவருவேன் றமியேனுங்கள்பாதமதை
அப்போதுநாராயணர் மகனையாவிமிக
இப்போதென்மகனே யியம்புகிறபுத்தியைக்கேள்
சீமையதுகாணச் செல்லோங்காணுன்கூட
வாய்மைமகனே வருவோமுன்கண்காண
மகனேநீநடக்க வைகுண்டம்வைகுண்டமென
உகமீரேழுங்காண வுரைத்துவிடுயாம்மது
முன்னடந்துயாமம் மொழிந்துநடயென்மகனே
பின்னடந்துநானு மியாமம்பிசகாமல்
நடத்திவைப்பேன்மகனே நல்லமரகதமே

அடத்திவிட்டயாமமது அணுப்போல்ப்பிசகாமல்
காட்டுவிப்பேன்மகனே கண்ணேநீமுன்னடநீ
தாங்குடைமையாலுன்வாக்கால் தானுரைத்தயாமமெல்லாம்
நடத்திவைக்கவாறேன் என்மகனேயுன்பிறகே
கடல்திரைவாய்பதிகள் கண்டுசென்றுதானிருநீ
தண்ணிமண்ணீந்து தானிருபோனென்மகனே
கண்ணிலுருகாணுங் கைக்குளொருகிளிவரும்
பகைவன்மடிவான பைங்கிளியங்காகும
பகவான்சுழற்றும் பாருலகும்பழுக்கும
அகங்காரனும் பாந்தளுஞ்சாச்சரங்காணும்
மூசிரசிர்சிரசு முகாசிரசுமுன்காணும்
பார்சிரசுகண்டு வாறேனென்பாலகனே
தகையாதெமுன்னடநீ சந்தமுனிதன்கூட
பகையாதேஎன்மகனே பஞ்சவரைக்காத்துக்கொள்ளு
அஞ்சுபூக்கொண்டு வாசாரஞ்செய்தோர்க்கு
வஞ்சகமிலாதவாழ்வு கொடுஎன்மகனே
மகனேநீவாறவழியில் பவுசுகண்டு
தவமுடித்துநீயுந் தான்டியிருயென்மகனே
என்றுவைகுண்டருட னிசைந்தமுனிரண்டுவிட்டு
கொண்டயச்சுக்காத்திருங்கோ குண்டருடபக்கமதில்
சாட்சியாய்பார்த்திருங்கோ தாணிவளப்பமெல்லாம்
காச்சிகொடுத்திருங்கோ கண்ணரியோன்முன்னிருந்து
கோபங்காட்டாதேயுங்கோ ஞானமுனிவரேகேளும்
சாபங்கொடாதேயுங்கோ சாத்திரமுனிவர்களே
நாராயணர்பிலன்கள் நன்றாயறிவீர்களே
சீரானபொறுமை செய்வதுநீகண்டிருங்கோ
வைகுண்டமாமுனிதான் வாழுந்தலத்தருகே
மெய்குண்டமாய்மேக்கு மேன்மூலையார்தனக்கு
வடகீழ்மூலை மாமுனியோர்தனக்கு
இந்தப்படிகாத்திருங்கோ தருணம்வரை
சித்தமுனிவர்களே செல்லுமிவர்கூட
என்றுமுனிகளுக்கு இயம்பச்சிவநாதன்
நன்றுநன்றென்று நன்முனிகள்சம்மதித்தார்
உடனேதான்வைகுண்ட ருள்ளமிகமகிழ்ந்து
கடலைமிகத்தாண்டிக் கரையிலேசெல்லுமுன்னே
தேவாதிதேவரெல்லாந் திருமுறையிட்டனரே
ஆவலாதியாக வபயமிட்டதேவரெல்லாம்
வைகுண்டர்க்கேயபயகுறையமிட்டார்மாதேவர்
கைகண்டராசருக்குக் காதிலுறையபயமிட்டார்
நாரணருக்கேயபயம் நாதனுக்கேயபயம்
தோரணருக்கேயபயஞ் சுவாமியுமக்கபயம்

வேறு

நாராயணாநீராநல்ல நாகந்தனில்த்துயில்வாய்
நாடுங்கலிகேடுலரும் நாதாயுமக்கபயம்

சீராய்ப்புவியாள வருவாய்வுனக்கபயஞ் சிவசிவனே சா
சரணம்மகா
சிவனேயுனக் கபயம்பாராயேனை முகமேபராபரமேயுமக்கபை
யம்பாலர்தெய்வச் சான்றோர்படுந்துயரந்தனை மாற்றும நாரா
யணாதிரா நல்லநாகந்தனில்த்துயில்வாய் நலமோதுனக்கிது
நாள்வரைநாங்கள்படும் பாடுகடல்மேல்துயில் கண்ணுகனி
கொண்டேகன்றையெறிந்தாய் களமேபெலி கொளவே கூளி
களிக்க யிலங்கையழித்தாய் குடைபோல் குன்றையெடுத்தாய்
முப்புரைக்கோட்டைதனையெரித்தாய் கோணினிடை மாதரினை
கோணுகவே வளர்ந்தாய் காடேகாலிமேய்த்தாய் புனல்காழி
யன்றனை வதைத்தாய்கஞ்சனரனை வதைத்தாய் பிலகாறர்
பிலம் வதைத்தாய் மாவெலியைச்சிறைவைத்தாய் கோசலாபுரி
யாண்டாய் வலுகுகனை மிகக்கண்டாய் குரோணிதனை வதைத்
தாய்வலு குண்டோமசாலியைக்கொன்றாய் கொல்லத்தில்லை
மல்லன்கொடுஞ்சூரன்றனை வதைத்தாய் ஈடாய்வலி யிரணி
யன்குடலாறாயோடக்கொன்றாய் இரக்கமற்றத்துரியோதனன்
னரக்கர்குலமறுத்தாய் இன்னங்கலிநீசன்குலங் கொன்னே
வரம்பெற்றாய்
ஏனைக்குடிசாதிகள்க்கு மீளவிடைகொடுதாய்
எழுந்துதெச்சணா புவியிலிரங்கிவரவேணும்
மாளகலிதாளநரகம் வீழவரம்பெத்தாய்
வாய்த்தகுலச் சான்றோர்வர்க்கேற்றவரம்பெத்தாய்
வரவேணும் தெச்சணாபுரி மலைபோலுயிர்போகு
தேசக்கலிதீதுவணியாயழ பொறுக்கரிதோ.
சிவனே வைகுந்தராசே தெச்சணாபூமியில் போவோம்.
கேட்பாரில்லையெனவே பேய்கள் கீழுமேலுஞ்சாடுது
கிஷ்ணா மகாவிஷ்ணுவுங்கிருபை யிரங்கவேணும்
தாண்மைகுலச்சான்றோரனைத்தவத்தால்த்தேடி வருந்துன்
தாயுமவர் தகப்பன் சாமிதானேயல்லாலுண்டோ
சறுவ பராசாமி சிவசாமியுமக்கபயம்
சாணார்படுந்துயரங்கண்டு சாமியெழுந்தருள்வாய்
ஆற்றில்லை கோரையைப்போலலைவதுந்தெரியாதோ
அணைப்பாருந்துணையேயல்லாலவர்க்கேதேதுமுண்டோ
பலநாளவர்படும்பாடெல்லாம் பார்த்தேயிருந்தாயோ
பயமோவவரிடம்போகிலுஞ் செயமோசொல்லுமையா
பாலாவருமக்கேயல்லாபாராதிருப்பாயோ
ஆரும்மற்றார்போலே யவரலைவதுந்தெரியாதோ
அரனேசிவமருகாவுனக்கபயம்முனக்கபயம்
அவரால்நாங்கள்படும் பாடெல்லாம்மறியல்லையோசுவாமி
ஆதிமுறையாகமமதையழித்துச்சொல்லுறோமோ
அதுதான்பெரியோமெய்யோவென்றாகமந்தனைப்பாரும்
அண்டாண்டம்தொளவருமாதியுனக்கபயம்
அரகராசிவ அரனே சிவ அரசேயுனக்கபயம்
ஆதிசிவனாதிதவமோதியுனக்கபயம்

அய்யுங்கிலி சவ்வுங்கிண அரனோரினக்கபயம்
அம்மாவாதி அய்யா சிவ மெய்யாவுனக்கபயம்
அரசே தெச்சணாபுவியில் வரவேணுமுனக்கபயம்
அந்தக்கலி திங்தெய்யென்றறவேவரவேணும்
அந்திடக்கலி செத்திடக்கலியறவேவரவேணும்
அய்யக்கலி தியாவிமேவறவேவரவேணும்
அவகடக்கலி சவகேடாகவழிக்கவரவேணும்
அன்பத்தாறுசீமையொரு குடைக்கு அரசாள்வாயுனக்கபயம்
அத்தாவுமக்கபயம் சுவமுத்தாவுனக்கபயம்
ஆதிநாராயணருக்குப் பாலனான குணதீரா
ஆதியுனக்கபயம் சிவசோதியுனக்கபயம்
அரனேசிவனார்க்கு மருகனான குணபாலா
அலைவாய்க்கரைமடமாம்பதியாள்வாயுனக்கபயம்
ஐயாவைகுண்டா அலைகண்டர்யுனக்கபயம்
தாணுமாலயனாய்ப்பேருதளைக்கச் சிவமுழைக்க
தானொருகுடைக்குள் தர்மதாரணியாளவந்தாய்
சாணாக்குருவே தககுரு தாணுயுனக்கபயம்
தாண்டும்பதிக் கூண்டப்பதி தாணுயுனக்கபயம்
தவமேதெச்சணாபூமியில் தானேவருவாயே

விருத்தம்

தெச்சணமீதேவந்து தெய்வமாயிருந்துகொண்டு
மிச்சமாய் புதுமைகாட்டி மேதினியெவருங்காண
உச்சமேசான்றோர்க்கிந்துவுதவுயுஞ்செய்வாயென்று
பச்சமாய்த்தேவரெல்லாம் வைகுந்தரின பதத்தில்வீழ்ந்தார்

விருத்தம்

வீழ்ந்திட கண்டுவைகுந்தர்விடைவுள்ளதேவர்தன்னை
சோர்ந்திடமொழிகள்சொல்லித் தேவரேபதறவேண்டாம்
ஒர்ந்திடயெனக்குமுன்னே வுள்ளதுதானேயென்று
கூர்த்திடவுரைத்திரெல்லாம் குணமுடன்மகிழ்ந்துசொல்வார்

விருத்தம்

தெய்வமாதர்கள் தான்பெற்ற தேவரே சான்றோர்க்கெல்லாம்
மெய்வரம்பதுபோல்ஞாயம் விழும்பிடப்பேறுபெற்றேன்
பொய்வரம்பசாசுயெல்லாம் பொன்றுறவாங்கள்பெற்றேன்
அய்வரைகாத்துத்தர்ம வரசுக்கும்பேறுபெற்றேன்

விருத்தம்

ஒருகுடையதற்குள்ளாள வொருவிஞ்சையதிகம்பெற்றேன்
கருவுடையோர்க்குங்காண கனவரம்பெற்றேனானும்
மருகிநீர்தவிக்கவேண்டாம் வருவேனான்சான்றோரண்டே
குறுகலியதனைதாண்டிக்கொள்வேனான் குலத்லைதத்தானே

விருத்தம்

என்னையேகெணியாவண்ண மேளையாயிருந்தசான்றோர்
தன்னையேபழித்தோரெல்லாஞ் சளமதுதுயரங்கொண்டு
அன்னீசநரகந்தன்னிலகப்படத் தள்ளித்தள்ளி
கொன்றுநான்சான்றோர்க் கெல்லாங்கொடுப்பேன்மேல்பவிசு
தானே

விருத்தம்

எல்லாஞ்சான்றோர்கையாலே யெள்ளுநீருங்கலிக்கிறைத்து
பொல்லாக்கலியைநரகமதில் புக்கவடித்துப்பேயோடு
கொல்லவிடைகள்கொடுப்பேநான் கூண்டசாண்றோர்கையதிலே
வல்லோர்புகழுந்தேவர்களே மனமேசடைக்கவேண்டாமே

விருத்தம்

வேண்டாமெனவேதேவருக்கு விடைகள்கொடுத்துவைகுண்
டரும்
கூண்டாங்கடலின் கரைத்தாண்டிகுதித்தேகரையில்ஓடிவந்து
தாண்டாய்முன்னேபெற்றதொரு தாய்க்கோர்சடலவுருக்காட்டி
ஆண்டாராணையொருவருக்கு மகலாதெனவேயாணைகொண்டார்

விருத்தம்

நானேபிறந்தசமுத்திரத்தின் னடுமேலக்கடலினண்ணுபார்
ஏனேபதியும்மேடைகளுமெண்ணிப் பாருதேர்நிறமும்
மானேபொன்னேமண்டகமோ வறடேயுனக்குச்சாக்ஷியிது
யானேகாட்டுஞ்சொருபகெல்லாம் யாதாயிருநீமறவாதே

விருத்தம்

பதமோபதமோபால்க்கடலின் பாலேயகமேகொள்ளுவேன்
இதமாய்யிதமாய்ச்சொல்லிடவே யிசையாவண்ணம்வீழ்ந்திடவே
உதையம்முதையம்வெழிதிறந்த வுருவையார்க்குறையாமல்
இதையேயிதையேமறந்துயென்னை யிழுப்பம்பேசிநெகிழா
தென்றூர்

விருத்தம்

ஆண்டாயிரத்துயெட்டுமுன்னே யன்னையெனவேநீயிருந்தாய்
கூண்டாமெட்டாமாசியிலே குணமாய்நாராயணர்மகவாய்
சான்றோர்கெதிகள்பெற்றிடவே தர்மகுண்டம்பிறந்துவொரு
கூன்றுக்குடைக்குளாசாளக் கொண்டேபோலேன்கண்டிருநீ

நடை

வைகுண்டம்பிறந்து வார்த்தைதெதன்றோர்குடைக்குள்
பொய்கொண்டபேரைப் பெலிசெய்தாசாள
கொண்டுநான்போறேன் குலக்கிளடேபாரெனவே
அன்றுவ்வைகுண்டரவர் நடந்தார்தெச்சணத்தில்
கெங்கைக்குலதாயைக் கிஷ்ணர்வரவழைத்து
நங்கையெயென்னுடைய நாமமதுகேட்டதுண்டால்

பால்போலப்பதம்போல பரிவந்திரன்பாருக்கு
சூல்புத்திவன்பருக்குச் சூதுசெய்யங்கையரே
என்றுவைகுண்டரி யாமமகூறிகூறி
இன்றுதெக்சணம் போகயெழுந்தருளியேவருக
சகலவுலகோருஞ் சந்தோஷங்கொண்டாட
புகலயெழிதில்லாத பெரியநாராயணர்க்கு
வைகுண்டம்பிறந்து வார்த்தையொன்றோர்குடைக்குள்
மெய்கொண்டமுப்பொருளோர் மேனியொன்றாய்த்திரண்டு
எல்லாவரமுமிவர்க்கு மிக்கக்கொடுத்து
நல்லோர்க்குக்காலம நலமாகுமென்றுசொல்லி
வானலோகமவாழும் வானவருந்தானவரும்
தானேமுன்னாகமங்கள் தப்பாதிடைமுனிவர்
வகுத்திருந்தவாகமங்கள் நிறைவேறிவந்ததென்று
மாமுனிவரெல்லோருமாசந் தோசங்கொண்டாடி
நாமுமெதிரேபோய் நல்லவைகுண்டர்பதம்
கண்டுகொள்வோமென்று கனமுனிவரெல்லோரும்
கொண்டுமலர்பூக்கள் கோபான்கால்மீசொரிந்து
கொற்றவருமாண்டு குறும்புமிகப்பெருத்து
உற்றதுலுக்கனுடன் வந்துடனேடி
மற்றொருபத்தாண்டில் வருவோமென்றாகமத்தின்
வர்த்தமானம்போலே வந்தவைகுண்டரென
எல்லோரும்போற்றி எதிர்நின்றுவாழ்த்திடவே
நல்லோர்எங்களையும் நாராயணர்மகனே
உன்கிருபைதந்து உதவிதருவாய்மேலும்
முன்கிருபையெல்லாம் முனக்குவசமாச்சுதல்லோ
முப்பொருளுநீதானே யுருவெடுத்தாய் ஆனதினால்
எப்பொருளைக்கண்டு யியல்புபெறபோறோங்காண்
வைகுண்டமாமுனியே மனதிரங்கிக்காக்கவேணும்
மெய்குண்டர்பதத்தில் வீழ்ந்துநமஸ்கரித்தார்
அப்போதுவானோர்க்காதி வைகுண்டருரைப்பார்
இப்போதுவானோரே மெய்யறிந்ததெந்தவிதம்
என்றுவைகுண்ட ரியல்பறியச்சொல்லிடவே
அன்றுவானோர்க ளெல்லாருமேதுரைப்பார்
கைலயங்கிரியிலுள்ள கணக்குமுதலுள்ளதெல்லாம்
ஒயிலாகப்பிறப்புயர கணக்கானதுவும்
தத்துக்கணக்குஞ்சஞ்ச முதலக்கணக்கும்
பத்துங்கணக்கும் பலன்பெற்றோர்தன்கணக்கும்
மோசச்சக்கணக்கு முன்னுள்ளயுகக்கணக்கும்
வாச்சக்கணக்கும் வைகுண்டநல்க்கணக்கும்
நரகக்கணக்கும் நடுத்தீர்வைக்கணக்கும்
தர்மக்கணக்கும் சகலக்கணக்குமுதலாய்
பொற்மைபிரமா பூசாந்திரக்கணக்கும்
எல்லாக்கணக்கு மெடுத்துமிகதேவரெல்லாம்
வல்லானகைலைவிட்டு வருவதுகண்டேயடியார்

தியங்கிமனங்கலங்கித் தேவரேசடேக்கேட்டோம்
மயங்கிமிகக்கேட்டிடவே மாதேவரேதுரைப்பார்
நாராயனுர்க்கு நல்லவைகுண்டம்பிறந்து
சீராயுலகமெல்லாஞ் சிறந்தேயொருகுடைக்குள்
ஆளவருவதினல் அவர்கைக்குளிக்கணக்கு
நீளவரன்சிவனும் நெடியமருகோனும்
இன்னுள்முதலேயேள்ப்பிக்கவேணுமென்று
சொன்னர்காணெங்களையுஞ் சுருதிக்கணக்கையெல்லாம்
பொன்னுலோகம்புகுந்து பெட்டகத்தோடேயெடுத்து
வாருமெனவயச்சார் மாபரனுமாலோனும்
சேருங்வைகுண்டஞ் சீணம்பிறந்தாரென்றுசொல்லி
ஆனதினலிப்போ யாகங்கள்கொடுபோருமென்ருர்
நானதுகள்கேட்டு நன்ருயறிந்தோமென்ருர்
அப்போதுவைகுண்ட ராசர்மிகவுரைப்பார்
இப்போதுவானவரே யெல்லோருமென்கூட
சீருங்கோபாலச் சிவனேசிவனெனவே
வானவர்கள்தேவர்முதல் மறைமுனிகள்சாஸ்திரிகள்
தானவர்களுங்கூடச் சங்கீதம்பாடிவர
சந்திரசூரியர்கள் தம்மானக்குடைபிடிக்க
சுந்தாஞ்சேர்வைகுண்டஞ் தோன்றிவந்தாரெனவே
வேதமறையோரும் விசயம்முனிவர்களும்
நாதாந்தவேதமதை நன்ருய்தெளிந்தெடுத்து
கோமான்வளருங் கோவேங்கிரிதனிலே
ஏமாதுவாழும்நல்ல திருமண்டபத்தில்
தங்கநிறத்தூணில் சதுர்மறையோர்கள்தான்கூடி
எங்குமகிழ யெழுதினராம்மானே

வாசகம்

ஏகமொருபரமானதும் இம்மொன்ருரு வாயுவில் சத்தி வளர்ந்ததும் சத்தியிலே சிவன் தோன்றியுஞ் சிவத்தில் சத்திதோன்றியும் சத்தியில் நாதந் தோன்றியும் நாதததில் விஷ்ணு தோன்றியும் ருத்திரயேசுராருலகம் தோன்றியும் உலகில் அண்டபிண்டந் தோன்றியும் பிண்டத்திலக்குரோணியசுரன் தோன்றியும் குரோணிவான லோகமுழுங்கவும் கோபத்தால் விஷ்ணு சென்று குரோணியைத் துண்டாருய் வெட்டியுலகில் தள்ளவும் துண்டமொன்றிலேகுண்டோமசாலி பிறக்கவும் சுக சோபனமண்டபமலேயவிழித்ததும் திருமருகாது கேள்க்கவும் தேவாதிகளை நாங்கலாக்கி வரையானதைத் தூண்டலாக்கி மறையைக் கயிருக்கி வாயுவைத் தோணியாக்கி வருணனை மிதப்பாக்கி கடலேமோடையாக்கி காயாம்புவண்ணர் வோடமேறியே கரக்கண்டர் வோணித்தள்ளவே கன்னியிலே தூண்டலுமிட்டு அக்குண்டோமசாலியையும் வதைத்து மறுயுகந் தோன்றியே இல்லமல்லாலன்மல்லோசிவர்களென றயிருபேருடையவனியாயம் பெற்றுக்காமலே அவனிருவலாயுஞ் சங்கார

முஞ்செய்து அடுத்த யுகந்தோன்றியே சூரன்சிங்கமுகாசூரன் செய்தவனியாயம் பொறுக்காமலே ஆதித்திருமால் ஆறுமுகக் கடவுளென நாமமுங்கூறியே அவனைச் சங்காரமுஞ் செய்து அவ்வுலகத்திலே பிறந்தசூரனிரணியனையும் வதைத்துமந்த யுகமுமழிந்து யடுத்தயுகந்தோன்றியே அரக்கன் ராவணசங்காரமுஞ் செய்து சீதாபிராட்டியினுடைய சிறையை மீட்டித் தென்னிலங்காபுரியரக்கரையுங்கொன்று அக்கிழையொழிய வக்குலமுமறுத்து யடுத்தயுகந்தோன்றியே பஞ்சவர்க்குபகாரியாகியே பகைக்கத் துரியோதனனையும் வதைத்து பஞ்சவர்களுக்குக்குரு நாடுபட்டமுஞ்சூட்டியே யரசாளவைத்துக் கலி வருவாரெனக்காற்று வீசினதைக் காதிலே கேட்டுக் கானக வழிநடந்து கங்கையுங்கண்டு கங்கையிலேக்குளித்த கன்னிமார்ப் பெண்களுடைய கற்பையுஞ் சோதித்து கைலையங்கிரி சென்று யேழுலோகம் புகுந்து யேழுவித்துமெடுத்து ஏழு தெய்வக் கன்னிமார் பெண்களுக்கமீந்து யெரியுங்கட்டையெனக் கிடந்து யெந்திழைமாரைச் சூழவழையும் படியாக் கொந்தலுமெழுப்பி ஏழு பெண்களுக்கு ஏழு மதலையுங் கொடுத்து தவசுக்குக் கன்னிமாரையும் மனுப்பிப் பத்திரகாளிக்கிட்டேப் பாலரையுங்கொடுத்தும் பச்சமாலைச் சுமந்திருந்த பாமாயக்கூட்டையும் பறுவதாவுச்சிமலையிலேக்கிடத்தி பஞ்சவர்களுடையப்பாரபிலன்களையும் வாங்கிச் சிறீரங்கம்போய் ஜெகமறியும்படிப்பள்ளிகொண்டிருந்ததும் தேவாதிகளுடைய வாக்கினாலே ஈசுரர்தானே கலியனையும் பிறவி செய்து 230000 வருஷமாகக் கட்டங்கொடுமை செய்து அவனியரசாண்டு கன்னிக்காளாகிய சான்றோர்படுகிற மறுக்கம் பொறுக்காமலே வியாகரிடமுனிவர் வகுத்த ஆகமத்தின்படியே மகாபரா நாராயணர்தானே வைகுண்டமாய் பிறந்து ஒரு குடைக்குள் 1108-ளு மாசியிலே அமுசிமுவஞ்சித் தெய்தியிலே அவனி மனுவிலே ஆதிச்சாதியிலே மனுநிறமாக வந்திருந்து ஜாதி பதினெண்ணையுமோர் தலத்திலே வருத்தியேத்தர்ம மாகத் தரணியாபேர்க்கு நோய்பிணித்தண்ணீரால்த் தீர்க்கவும் சந்ததியில்லாதபேர்க்குச் சந்ததி கொடுக்கவும் தனமில்லாத பேர்க்குத் தனங் கொடுக்கவும் சாதவாத பேய்களைச் சரிவிலே யெரித்துக்கரியச்செய்யவும் தரணியோழுக்கணக்கையும் கேட்டு மிகச்சத்தியாயன்பு மனிதருக்காகவே தரணியில் நாலுதரஞ் சனங்கள் படவும் சாஸ்திரவேத நூலுக்குச்சரியொத்தபேர்களுக்குபகாரங்கள் செய்யவும் சண்டையாய்க் கலியனைத் தன்றாலே போக்கவும் தர்மமாமத்தரணியோர்க் குடைக்குள்ளாளவும் தங்கநவரத்தினத் திருமுடியே சகலமாபதி மேடைகள் பாவிக்கவும் தவசுக் கிருபைபெறவும் தங்கமணிச்சக்கிராயுதக் கொடியெத்தக் கொடிகெட்டவும் சகலரும் புகழ ஒரு தர்மராஜாவாகவும் சங்க விருதுக்கொடியொத்தக்கொடி கெட்டவும் அட்டதிக்குபதினாலு லோகமுமறிய அசையாமணியொன்று கெட்டியே யரசுபாவிக்கவும் ஆதிச்சர்வேசுவரனாகியே யவனி

யன்பத்தாறு சீமையுமடக்கியரசாளவும் ஆதிச்சர்வகாலமு மழியாத திருவுளமாயிருந்தரசாள்வாரென்று ஆதிராமச்சந்திர சூரிநாராயணர்க்கு யாகபத்தின்படியாகவே மாதிவைகுண்டம் பிறந்தாரென்று மண்டூர்களும் முனிவர்களும் தேவர்களுமதிக சகலமாமுனிவர்களும் - அல்லோருங் கூடியிருந்தாராய்ந்துத் தொண்டர்த்தனக்கென்று வளர்கொன்றையணிகக்கயிலேயில் மண்டபம் புகழவே சிவனுருடைய கிருபையினாலே ஈன்றவர் கைலேயங்கிரியில் எழுதினார்.

நடை

அன்றந்த தேவர்முனி யெல்லோருந்தான்கூடி
சென்றந்தக்கைலேச் செகத்தூணிமேலதரித்தார்
வைகுண்டர்பாதமதை வாழ்த்திக்குவித்துவர
மெய்கொண்டநாதன் வேலவன்செந்தூரனுகி
நட்கவதுமுகனும நடுங்கிமிகப்பதறி
வடக்குமுகமாய்விழுந்து வைகுண்டரைப்போற்றி
அப்போதுவேலவனே ஆதிவைகுண்டர்பார்த்து
செப்புகிறார்குண்டச் சிவநாதக்கண்மணியும்
நாடுகேள்க்கப்போறே நாரணன்நான்தானும்
கேடுவருமுனக்கு கேள்விகேளாதிருந்தால்
இத்தனைநாளும் என்னைக்கெணியாமல்
புத்தியறியாதவர்போலப் புலம்பிரீத்தனைநாள்
இனிவைகுண்டம் பிறந்தேகமொருகுடைக்குள்
மனுவொருசொல்லாக மகாதர்மமேநினைத்து
மாய்கையறுத்து மாற்றான்கருவறுத்து
தோயக்குளிமூடி தொல்புவியைத்தாளை
நல்லோர்களெடுக்க நான்போறேன்கண்டாயோ
கல்லார்த்தனக்கு கசபிணிமேல்கண்டாயோ
தர்மவைகுண்டம் தான்பிறந்தேன்கண்டாயே
நன்மையினிக்காணும் நாரணன்காணல்லாது
தின்மையென்றசொல் லாகாதுகண்டாயே
தர்மச்சிறப்பு தானினிமேல்க்கண்டாயே
ஆனதாலுந்தனக் கியான்இனிமேல்சொல்லுபுத்தி
வானஞ்சூழ்ந்தவையகங்கள் வாழுகின்றமண்டபங்கள்
எத்தனையோர் வத்தனையிலிருக்கின்றதேவரெல்லாம்
அத்தனையுபேருமறியும்படி சொல்லுவேன்
காணிக்கைவேண்டாதுங்கோ கைக்கூலிகேளாதுங்கோ
மாணிக்கவைகுண்டம் வல்லாத்தான்கண்டிருங்கோ
பூசையோராதிருங்கோ பெலிதீபமோராதுங்கோ
ஆசைவையாதிருங்கோ லவங்கடஞ்செய்யாதுங்கோ
ஞாயமுறைதப்பி நன்றிமறவாதுங்கோ
மாயநினைவுமனதில் நினையாதுங்கோ
வைகுண்டாவென்று மனதில்நினைத்திருங்கோ
பொய்கொண்டதேரோட்டம் புனக்காரமோரதுங்கோ

த்ரதிகைகாட் உலசப்பிறங்கனேறுதுங்கோ
மோதிப்பேசாதிருங்கோ மோகம்பர்ராட்டதுங்கோ
ஆலத்திகைவிழக்கு வாராட்டுப்பாராதுங்கோ
சாலத்திப்பாராதுங்கோ சகலபூவேறுதுங்கோ
கொளுந்துமஞ்சணைமாலைக்குப் பையுடன்சந்தனமும்
விழுந்துநமஸ்காரமுதல் வேண்டாமென்றுசொல்லிடுங்கோ
கூவென்றுரையாதுங்கோ கொக்கரித்துபேசாதுங்கோ
ஓவென்றுரையாதுங்கோ ஓமமுறையோதுங்கோ
தீவரணைக்காணுதுங்கோ திருநாளைப்பாராதுங்கோ
எல்லாம்வெறுத்திருங்கோ வித்தனைபோலுள்ளதுதான்
அல்லாமல்மீறி யாதொருவர்செய்ததுண்டால்
வல்லாத்தகோபம்வரும் வைகுண்டருக்கே
நல்லாரேயாகவென்றால் ஞாயமதிலெங்கிலும்
என்றுவைகுண்டமியம்பக் கந்தனுரைப்பான
மன்றுதனையழந்த வைகுண்டநாரணரே
நீருரைத்தசட்டமதில் நிலைதவறும்நாங்கடியார்
காரும்நீரென்று கந்தனடிதொழுதான்
அப்போதுவைகுண்ட ராஜர்மிகவுரைப்பார்
இப்போதுசொன்னதெல்லா மெனக்குநிசமாகவென்றால்
உண்கோபுரத்தி உயர்ந்தவடமேல்மூலையில்
பின்கோபுரங்காண பிழந்துபோடென்றுரைத்தார்
அல்லாமலுன்னையென்ற வனியுண்டாக்கிவைத்து
சொல்லாச்சிலையைத் திருப்பிவிடுதெற்குமுகம்
உலகோரறிய வொருவரயிலுமடைத்து
கலகமாய்க்கண்மூடிக் கவிழ்ந்திருப்பாயோவென்றார்
அல்லாதெனைமறந் தழிச்சாட்டமாய்நடந்தால்
வல்லாத்தகோபம்வரும் வைகுண்டருக்கே
பொல்லாதவனே பெருவிலங்குசிக்குமென்றார்
அப்போதுகந்தனுவி மிகக்கலங்கி
இப்போதுசொன்ன தெல்லாமியானினிச்செய்வேனென்று
ஆதிவுரைத்தது போலடியார்நடப்போமென்றார்
சோதிவைகுண்டஞ் சொல்வாசகரோடு
நிலையழியாதிருங்கோ நீதியாய்நின்றிடுங்கோ
உலகறியானுமொரு நெல்லடுக்குமுன்னே
பலசோதனையும்பார்த்து நடுத்தீர்ப்புசெய்வேன்
விடியும்பொழுது வேஷம்பலதணிவேன்
பிடியுமனமுடனே பெரியயுகமாளவைப்பேன்
வருவோமொருநெல் மாறியெடுக்குமுன்னே
கருதியிருங்கோ கருத்தயர்ந்துபோகாதுங்கோ
என்றுவைகுண்ட மித்தனையுங்கந்தனுக்கு
மன்றுக்குமென்று மறவாதுங்கோவெனவே
அதைவிட்டவர்நடக்க வாகாயங்கொண்டனரே
இதைவிட்டவர்நடந்தேகாயமாகிவர

விருத்தம்

அண்டரொடு தெண்டனிட்டெ திசையின் றுவருமாதவரை சூழ்கணம் போல்
அரியரியராகராசிவசிவாவென் றுசிலராடியே பாடிவரவே
தொண்டவர்கண்டு வைதண்டராடி கொண்டு கொழச்சூழவளோங் கேளியல்படர்ந்த
சூர்பதிகாராயணர்வீரர்பதம் ஓதிவசூராதிசூரரோ ரவே

விருத்தம்

செண்டையொடு தண்டைமணிடண்டடம்டண்டமென தேவர் சேவித்துவரவே
சிவனமசிவாயமெனுமோ நவசிவாயமெனும்சேவித்திருபுற மூவரவே
அண்டமுரசெண்டுமணிடுண்டுடும்டுண்டுமென ஆகாயமீதில் வரவே
ஆனவரதகோலாகலாதிநாரணமென் றுவமரசைகூறிவரவே

விருத்தம்

மத்தளமுடுக்குபலவாத்தியம்மடமடென வானமதில்நின் றதிரவே
மலர்மாரிசலமாரிதினமாரி தூவியேவானவர்கள் இசைகூறவே
தத்தளங்கிடகிடத்தோமென த் தோமெனசங்கீதகாரர்வரவே
சகலகலைக்கியானயவேதசாதி முறையோதிமிகுசாத்திரக் காரர்வரவே

விருத்தம்

தித்தங்கிண தித்தங்கிண தித்தங்கிண திததெய்யெனச்சில தேவர்கூறிவரவே
சிவசிவசிவாசிவாசிவவென் று சிலதேவர்சேவித்தியல்கூறி னரவே
தித்தங்கிண தித்தங்கிண தித்தங்கிண திததெய்யெனரிஷியர் சீரியல்கூறவே
நீலங்கிரிவாலங்குருநீயென்குரு தாயென்குருநீதென்குரு வெனபோற்றினர்

விருத்தம்

பண்டைமுறையின் றுவெனகுண்டமென கண்டுவருபலவாங்கிரி குண்டம
பசுவாமனைசிசுபாலனைபலமானனை தலமானனைபசுவாயிரிசமே
தொண்டர்தனக்கென் றுவரு குண்டவைகுண்டமயைத்தெதச் சபையிபூபரா
துளபமணிகளபமேனியழகொழுத கிருபைமிகுத்துவராபதிக் கரசேசெய் தொழுது

சண்டன்வலிதுண்டப்படகொண்ட கணைவிண்டத்தொடு
துச்சாவில்லுவீரா
சாமியுன்றனேளாயெங்கடலையின்மீதலையின்வழிதசமேனநடவாயே
துண்டபபடவண்டச்சரங்கண்டப்படப்பொண்டத்தொடுத்துச்
சர்வில்லுதீரா
சுத்தவுனக்கேத்தார்தனைவித்தானதில் வித்தரயதுவாரபதிக்
கரசேயென்தொழுதார்

நடை

தேவர்தொழுது திக்கெங்கும்போற்றிவர
தாவமுள்ளவாரோர் சங்கிதம்பாடிவர
வேதமறையோர்கள் வேதகலையோதிவர
நாதமொடுசங்கு நகராமுளங்கிவர
மத்தளமேலோர்மடமடென்றேற்றிவர
நால்திசையும்போற்றி நால்சாதியும்வரவே
அரம்பையர்களாடி யாலத்தியேந்திவர
வரம்பஸரமாமுனிவர் வரிசைமிகுக்கூறிவர
நாதாந்தவேதம் நவில்வோர்நெருங்கிவர
மாதவர்களெல்லாம் மலர்மாரிதூவிவர
கண்டங்ககமகிழ்ந்து கண்ணனாரணரும்
கொண்டாடிதேவரோடு கூறுவாரன்போரே
மனுக்கண்காண வரவேண்டிரென்பிறகே
தனுக்கானமேகமதில் சகலத்தோருமறிய
வாருங்கோயென்னுடனே வானவரேதேவர்களே
வானமதினின்று வாத்தியங்களேத்திவர
தானவர்கண்முதலாய் சங்கமுதல்வரவே
ஆகாயமீதில் யாபேரும்போற்றிவர
வாகானசூரியனும் வந்துகுடைநிழற்ற
நன்றானவைகுண்டர் நல்லசெந்தூர்தானுமிட்டு
வண்டாடும்சோலை வாய்த்தவனங்கள்விட்டு
சோலைத்தெருக்கள்விட்டு செந்தூர்தலங்கள்விட்டு
ஆலைத்தெருக்கள்விட்டு யந்தூர்பதிகள்விட்டு
மண்டபமேடைவிட்டு மடங்கள்மிகக்கடந்து
தண்டமிழ்செந்தூர்தலத்தை விட்டுப்போவதற்கு
நிற்கின்றபோது நிலையுள்ளமாமுனிவர்
நக்கன்மருகனுட நல்லடியில்வீழ்ந்து
செந்தூர்தலத்தைவிட்டு தெச்சணபூமியிலே
இந்தவேளைதனிலே யெழுந்தருளவேண்டியதேன்
இங்கோர்பகைத்ததென்ன யென்னுடையநாயகரே
சங்கமகழ்வேந்தே தானுரைக்கவேணுமென்றார்
அப்போதுநாராயணர் மகிழ்ந்தேதுரைப்பார்
இப்போதுகேட்டதற்கு இயல்புரைக்கக்கேளுமினி
கேள்விகேளாநீசன் கெடுவதறியாமல்
நாள்வழியாய்ச்சான்றோரை நியாயமில்லாதடித்தான்

சொன்னேன்புத்தி நீசனுக்குதிருவனந்தமேயிருந்து
என்னையும்பாராமலிளபபமிட்டான் சான்றோரை
ஆனதினால்நீசனுக்கு யானதிகோபமுடன்
கானவ்வூர்விட்டு நாடிவந்தேன்செந்தூரு
இங்கேயிருந்தேன்யான சிறிதுகாலங்களெல்லாம்
வெங்கைப்பயல்சிலர்கள் வேசையுடனாசையினால்
என்னைக்கெணியாமல் யென்கோவிலுள்ளேதான்
சன்னைசொல்லிப் பெண்களுடனசரசமிட்டெச்சிட்டான்
இருவரும்ஒத்திருந்தாலும்பழுதல்லவே
ஒருவன்பெண்ணை வொருநம்பூரிப்பிடித்து
எனக்கேவல்பண்ணி யேந்திழையாள்போகுகையில்
மனக்குழலிதன்னுடைய மார்பிற்கலைப்பிடித்து
இழுத்துவலித்து யிழுக்கேடுசெய்யவென்று
பழுத்துச்சழிந்த பருத்தஒருநம்பூரி
மேல்தலையில்லிட்ட முதஇரிகழற்றாமல்
மால்மயக்கத்தாலே மனம்கலங்கிநம்பூரி
மங்கைமனங்கலங்க வாரிப்பிடித்திழுத்து
கொங்கைதனைபங்கமதாய் கூறளியவேகிழித்து
வேதனைகள்செய்ய மெல்லியவள்கோபமுற்று
மோதியன்பேரிலொரு சாபம்கூறினளே
நாரணாகந்தா நானுனக்கேவல்பண்ணி
காரணங்களாச்சு கடசுநாள்தானாச்சு
உனக்குமிந்தப்பதிதானுறவு கேடாச்சுதைய்யா
எனக்குமொருபிறவி யின்றுவந்துவாச்சுதென்று
செந்தூர்தலங்கள்ச் சிலநாள்கள்செல்லுமுன்னே
மண்டூர்ந்துபோகுமென்று மாதுமிகச்சாபமிட்டாள்
சாபமிட்டுமங்கை தக்கென்றுகீழ்விழுந்து
சீவனதுவிட்டிடவே சிவனைக்கண்நோக்கினளே
நம்பூரிபங்கத்தாலே யந்தநாயகியும
உம்பர்கோனூரில் உயிர்விட்டாள்மாமுனியே
தவறாதமங்கை தானுரைத்தசாபமதால்
இத்ருயெனக்குவங்கிருக்கமனம்கூடாமல்
எங்கேயோபோவோமென்றிலைதவிட்டுஎழுந்திருந்து
மங்கைசொன்னநாள்முதல் தெக்குவாசியிலேபோயிருந்தேன்
அல்லாமலிங்கே யழிமதிகள்ரெம்பரெம்ப
வல்லாண்மையாக வலுஞாயம்காணுதுகாண்
முன்னடைப்புமங்கையர்கள் முங்கிகுளித்துமிக
என்னடையில் வந்தேந்திழைமாராடுவது
ஆடவரும்போது சுத்தத்தோடும்வாராள
பாடவரும்போது பண்ணுறுள்சுத்தமது
கோவிலிலேபூசை செய்யுங்குறும்பர்மிகத்துணிந்து
தேவியர்க்கியத் திருடுகிறாரென்முதலை
கணக்கன்முதல்நம்பூரிகள்ளப்பெண்ணார்களுக்கு
இணக்கமதாயிருந்தென் முதலைகொள்ளைகொண்டு

எ நகிறா ஏன் நள்ள சசி ாட நிமமாடி
ஒரு க கின்றனர் ழ றைக்கொண்டிருந்து
ால ட ட்ட லல்ல ம
எம்பர வக நற யிடல்பல் ம முனிமே
ஆ: ாலெ வ்வை கள டன் ல டானவே
மா ப்புயுமுன் எ மாமுனி யதசசணத்தில்
பள்ளிகொண்டுநானி நந்த டார்ந்துச்சிலநாள் கழித்து
வெளியாட்டுக்காவடி கைக் உலிதான் முதலாய்
கிறுக்கல்செயயவேண்டுய தெல்லாமிகதிறுத்தி
ல் நகரகர்ம புரியாளப்பேர றனினி
ம ம ச்சொல்லி வனிக்கா டார்தெச்சணமே
தானானிந்தய்யா தவருதமாமுனியும்
தெக்சணத்துக்கேகவெனறு திருச்சமபதியிருந்து
உச்சமந்துகாண்டு கச்சடமுங்கூறி
நடந்து வே நல்லசெந்தூர்தா றுமிட்டு
வடக்கு நமைக் கரைவழியேயதேவ ரெல்லாம்
ந க கூறி ஊனேயவர்வாவே
மய னாதா மனுச்சொரு மேயெடுத்து
நருளக்க மிகக்காண நால்திசைக்குமேவிவந்தார்
மாகக்களிகளங்து வாசமி நிக்கூடி
கிந்நாட விடாமல் திருவையுள்ளவைகுண்டவா
ஆர் புநாடவிடாமல சார்பூத மக்திவல
கபூகமைத யல்லக்கா ண றுசொல்லி
ப ண்ணர் மாபூசம தலைக்
பேய ள ச்சுமந்தால் நீணிலத்துசேதனையில்
எங்களநீநிகடந்தால் தநீயாநா கேடபதாக்கு
ட காண்நாரணர்க்கு வதாவுணவேலே
டர்கள ந்சவர்களு க்க
றுவைதண்ட ரிசபஇசைநடந்துயர்
தாண்டுசெய்யாமல் சூல்பூதமாடிவர
பூ விவந்து பாடபுக்கொதா பூவாரும
த்தகொண்டுவந்து தீபராணைகாட்டுவாரும்
மல சி காற்று மறைநீசிதிற துவும்
சிலநெனறுழிபோல் சிறப்புடனதாவிலா
நியுடநட டிக்க வாயுமறைவிச
நுயும்வழிசெய்க்கக் தேவர்கள்மிகவேவலமிட
றாட சிறப்புட பியல்வ ழளக்கிவர
பக்தி ள நா ணரும புறப்பட்டார்தெச்சணமே
ப ந்த நாமயணசக்கி
காசம டார் நிடந்தார்
வெல்ப்பிறக ஞ்ணநகா தர்
கடமை வழிநோக்கிக் கண்ணேனுன்வழிநடந்தார்
நடந்த வந்நல்ல வைகுண்டர்முன்னே
கடந்துமுர கண்டார்தேகாடு

சிங்கமியாளி செங்கருடனங்கனுமன்
பங்கமிலாருஞ்சி பால்கிறுப்பச்சிகளும்
ஐந்தலைநாகமஞ்சு பஞ்சாச்சாரை
செந்தலைக்கருடன் செய்யகாண்டாமிருகம்
கலியன்கண்காணாதே காடோடிவாழ்ந்திருந்த
சலிவில்லாமாமிருகம் சந்தப்பச்சிமுதலாய்
தர்மவைகுண்டர்தான் வந்தாரென்றுசொல்லி
பொறுமைகுலங்களெல்லாம் புறப்பட்டமகிழ்ந்து
வந்துவைகுண்டர் மலரடியைப்பூண்டுகொண்டு
சிந்தைதுலமன்று தெய்வப்பெருமானே
வைகுண்டரப்போ வருவீர்வருவீரென்று
வைகண்டவிதியும் காணாதார்போலிருந்தோம்
கப்பல்கரைகண்டார்போல் கண்டோமேயும்மையும்நாம்
வாரோம்காணும்முடனே வைகுண்டப்பெருமானே
தாரோம்காணஎம்முதுகு சாமியுன்பாதமதுன்
என்றிவைகளெல்லாம் இரங்கிதொழுதிடவே
நன்றென்றுயர்ந்த நாராயணருரைப்பார்
ஒருவிழிபொறுங்கோ உண்மையிது தப்பாது
இருவிழிக்குள்ளே என்னிடத்தில்வந்திருங்கோ
இதுமுன்னமச்ச யிடத்திலேபோயிருங்கோ
கருதியிருங்கோ கருத்தயர்ந்துபோகாதிருங்கோ
அலையவிடாதிருங்கோ வஞ்சபஞ்சமதையும்
குலையவிடாதிருங்கோ குருநினைவையுள்ளேற்றும்
என்றவ்வகைகள்க் கெம்பெருமான்சட்டமிட்டு
அன்றவ்வகைகளையும் யனுப்பிமிகநடந்தார்
நடந்துபலதிக்குமிட்டு நல்லவ்வவசமிட்டு
கடந்துசிலவூருமிட்டு கடல்வழியேதானடந்தார்
ரசகனிகளேத்து ராவுபகல்நடந்தார்
விசைகொண்டாசர் வீசாவிதிநடந்தார்
வாரிக்கரைவழியே வரவேணுமென்றுசொல்லி
வீரியநாதன் விரைவாய்வழிநடந்தார்
சூரியபுஷ்ப துர்பக்குறிப்பார்த்து
கடலுள்பதிகள் கண்டுகண்டேநடந்தார்
மட்மடென்வட்டவனை வாரிதீர்த்தமாடி
கடல்பெம்மான்வாரூர் காணுவோமென்றுசொல்லி
திடமுடனேவாரிசென்று கண்டுதான்தொளவெ
முத்துகள்சங்குமுன் வந்துதெண்டனிட
வத்தும்பெரிய வைகுண்டமன்னவரே
இத்தனைநாளும் இயல்கலியனேதுவினால்
சற்றும்வெழிகாணாதே சமுத்திரத்தினுள்ளிருந்தோம்
தர்மப்பெருமானே சாமிநீர்வந்ததினால்
நன்மையுடனேநாங்கள் நாட்டிலேவாரோங்காண்
ஒருசொல்வரைக்கு முவரியிலேவாழ்ந்திருங்கோ
இருசொல்லாகுமட்டும் இங்கிருங்கோஎன்றுரைத்து

நடந்துவைகுண்டர் நாடிமிகவாவே
கிடந்தநிதியுங்கீழ் கிடந்தகாசுகளும்
ஒக்கவேயாவுந்துப் மகிழ்ந்துதானிருக்குந்து
திக்கென்றுநாதன் சேடன்தனையளைத்து
கைலாசந்தன்னைக்கட்டாய் வரவழைத்து
ஒயிலாகயித்தனையுமுள்ளே நீகொண்டுசென்று
காவல்செய்துகொள்ளுங்கோ கயிலாசமென்றுரைத்தார்
தேவன்சட்டமிட்டு தெச்சணம்போகவென்று
நடந்தார்துரிதமுடன் நாரணனார்தெச்சணத்தில்
நல்லநாராயணரும் நாடுவழிநடக்க
வல்லபிலமான மாமுனிவருங்கூட
எல்லோருங்கூடி இயல்வாரிகரையே
நல்லோர்களாக நடந்தார்காணம்மானே
வாதைபேய்யானதெல்லாம் வைகுண்டர்பாதமதை
சீதமுடன்போற்றி தீபறனைகாட்டிவர
காட்டுகின்றதீபமெல்லாம் காணாதவர்போலே
நாட்டுக்குடையநாராயணர்நடந்தார்
நல்லகுலதெய்வம் நாட்டமதையறிந்து
எல்லைக்குடைய ஈசர்வந்தாரெனவே
இன்றுமுதல்வம்பருக்கு இயல்பகைதான்சூழ்ந்ததென்று
நன்றுமனத்தோர்க்கு நல்லநாள்வந்ததென்றும்
மூர்க்கலியன்சட்டமுதன்மையின்றுமுதலாய்
தூர்க்கலிபோலாகிச்சுத்து சூலைந்துதென்றும்
கொண்டாடிநல்ல குக்கூணிக்கிணங்கள்சொல்லி
கண்டாருடனேயும் கைதொழுதமனுவோரும்
இன்றுமுதலேங்களுக்கேக்கும் வகையில்லையேகாண்
கண்டுகொள்ளுங்கோவெனவே கண்காட்டிபோய்மறைய

விருத்தம்

நானிலம்ரசுவாழ் நாரணர்பெற்றுவாரூர்
தானிதமரன்வன்பாய்ச் சகலோரும்கேட்டுக்கொள்ளும்
மானிலத்தோரேஎன்னை வருந்தியேதேடவேண்டாம்
கானினிசெய்யவாகா நவின்றவர்தெய்வம்போனார்

விருத்தம்

தெய்வங்களுலகிலெல்லாம் தெரிசனங்காட்டிக்காட்டி
மெய்வரம்புள்ளோரெல்லாம் மேதினிவிட்டுபோர்ந்தார்
பொய்வரம்பசாசதெல்லாம் பொன்றியவகைபாராமல்
மெய்மறந்துரைகள்சொல்லி மேதினியொறிந்தாரன்றே

விருத்தம்

கண்ணான்நாதன்கமலக்குருநாதன்
வண்ணமுள்ளநாதன்வழி நடந்தாரம்மானை
நடந்துபகவதியாள் நல்லகடலும்பார்த்து
கடந்துபகவதியைக் கைக்கண்காட்டித்தானழைந்து

நன்மையுடைய நாயகியேசுந்தரியே
பொன்மோகினியே பிள்ளாய்நான்சொல்வதைகேள்
வைகுண்டம்பிறந்து வார்த்தையொன்றுக்குள்ளான
உய்கொண்டோர் குலத்தைவுருவேற்றுவந்தேனென
எந்தன்திருச்சம் பதியுமிதுமுதலாய்
எந்தெந்தநாள்க்குமினி காணிக்கையிறுத்தல்
ஆனதினால்நீயும் ஆதியிலென்னோடு
தேனினியதங்கையராய் இட்டித்தயேதுவினால்
உன்னோடுயித்தனையுமுபதேசமாயுரைத்தேன்
பொன்னாடுதெச்சணத்தில் போறேன்தவசிருக்க
என்றுபகவதிக்கியம்பி வழிநடந்தார்
அன்றுபகவதியாள் அறைக்குள்ளடைத்திருந்தாள்
நாராயணரும் நல்லசங்கத்தாருடனே
சிறீய்மனையைப் பதினோக்கித்தான்நடந்தார்
தென்காசியென்ற தெச்சிணாபூமியிலே
கண்காச்சிசூழக்கண்ணார்மிகநடந்தார்
கண்டார்துவரயம்பதியின் கண்ணோட்டமெல்லாம்
பண்டையப்பதியின் பயிசெல்லாமேபார்த்து
நடந்தெம்பெருமாள் நல்லகடல்வழியே
திடந்தெரிந்த தேவர்களும் செயசெயனநடக்க
ஆனபதியின் அகலநீளம்பார்த்து
மானபதியின்வாசலெல்லாம் பார்த்தவரும்
நாடுகுற்றம்கேள்க்க நல்லதவஞ்செய்வதற்கும்
தேடும்வடவாசல் சிவிவளர்மலையின்
நேரும்வாசல்தனக்கு நிகரில்லையாமெனவே
தவசுக்குகந்த தலங்களிதுநன்றெனவே
உபசீவனம்வளருமுகந்த புவியீதெனவே
என்றுமனதிலெண்ணி எந்தன்பெருமானும்
அன்றுவேதமுனியை யழைத்துமொழிகேள்கவென்று
வாநீமுனியே வல்லகலைக்கியர்னமொழி
தானீகரமாய்ச் சத்தியாய்கற்றவனே
மானமுனியே மறைநாலும்கற்றவனே
ஓனமோவேத மோயாமல்லெஓதுவோனே
பின்முன்பார்த்து பேணியுரைப்போனே
என்முன்னின்றியம்புவை கேட்டேயுரைநீ
நான்தவசிருக்க நாடுரைநீமாமுனியே
மான்றவசுக்குகந்த மாமுனியேயென்றுரைத்தார்.

வெண்பா

வெள்ளாசனத்தில் விரைவாசிலையிறுத்தி
கள்ளமானதை யகலக்காடகற்றி
வெள்ளமாங்கருணைபெறும் வேதமுகமாமுனியே
உள்ளதெனதிங்கின்னதென்றுரை

வெண்பா

பூரணத்திருடிபுகழ்ந்து முனிகொண்டாடி
வாரணத்தின் கோடுவரைதேர்ந்துகாரணத்தின்
கட்டுரைத்து நாடுவளமிட்டுரைப்பேனென்றுமுனி
தொட்டுப்பதங்குவித்து சொல்லுவான்

நடை

அய்யாவே வேதஆதிநாராயணமே
மெய்யாய்யுருவாய் விளங்குவேசனே கேளும்
பராசமாமுனிவன் பாலனெனமுனிவன்
விரைவாகவேபிறந்து வெளிமலை நாதனிடம்
தாதாவுடனே தான்வரக்கண்டசுரரும்
வாருய்முனியே மதலையுனக்கிங்கேது
அப்போமுனியு மானரடியைத் தான்பூண்டு
இப்போதிவ்வாண்டும் மாதமின்னாளில
பஞ்சகருணை பன்னிரண்டொன்பதுவும்
வஞ்சகமில்லாமல் வந்தாரொருவீட்டில்
பூரணநாளும் பிரிந்துறையு நேரமதும்
நாரணா பிறந்து நல்லநக்ஷத்திரமும்
யோகபலன்களோத் திருக்குநேரமதில்
ஆகமக்கூட்ட மடங்கியிருக்கு நேரமதும்
மதிசுளிபோலாகி வந்தாதமேறுகையில்
துதிமுகவன் சரஸ்வதி பிறந்ததன்றும்
இவ்வாறு கூட்டமெல்லா மெழுந்தொருநாள்
அவ்வாறுத் தான்கண்டன்றளிகைதனிலெ
துற்கந்தமுலாவும் தோகையொரு பெண்ணுடனே
நற்கந்தமுலாவி நான்சேர்ந்தேனப்பொழுது
சேர்ந்பொழுது இரண்டுநாதம்வளர்ந்து
காந்நற்றனுப்பாய்க் கன்னியுடலாகி
பெற்றுளிவனை பேருவியாகரனை
கர்த்தாவறிய கண்டேனிவந்தனையும்
ஆசுமதுரம் சித்திரம்விஸ்தாரமுதல்
வாசுநெறி தேசுவழியறிந்த மன்னவன்காண்
ஏகச்சுழிமுனையு மிகமுனிவரம்வரையும்
ஆகமுடம்பறிவு மண்டபிண்டத்தறிவும்
முன்பினனராய்ந்து முதுணர்வாகமங்கள்
தன்னன்பிறப்புச் சாற்றத்திறவான்காண்
கல்லாதகல்வி கலைஞானியக்காண்டம்
எல்லாமறிந்த வியல்முனிவனென்றுரைத்தார்
நல்லதுதானென்று நல்லமுனிவனை ஈசர்
தல்லமையாமென்று மாமுனியைக்கொண்டாடி
என்பிறப்பெண்மாதி துய்யமூன்பிறப்புமுதல்
பின்பிறப்புமுதலாய் பேசென்றுரீசருமே
அப்போதுவேத வியாகரமகிழ்ந்து

செப்புகிறேனென்று சிவனைமிகத்தொழுது
மூலமுதலேழுத்திமுகந்துகொண்டு
காலமேயின்றகடவுளெத்தஞ்சமென்று
ஆதிமுதலந்தமடங்கல் மிகவுணர்ந்து
சோதிபதம்போற்றி சொல்லுவான்மாமுனியும்
மும்மூர்த்தியானமுதல் மூர்த்திதோன்றியதும்
அம்மூர்த்திதன்னிலாயிழையாழ்த்தோன்றியதும்
சத்தியிலேநாதம் தான்தோன்றிவந்ததும்
விந்திலேநாதமதில் விந்துமிகத்தோன்றியதும்
விந்திலேவிட்டுணவும் விரைவாகத்தோன்றியதும்
அந்தமறமுதலாய் அண்டபிண்டம்வரையும்
சொல்லியுகமதுதான் தோன்றுவகைகூறலுற்றார்
சல்லிக்கொடுமைச் சண்டக்குரோணிமுதல்
நீசன்பிறப்புவரை நிகழ்த்திணுமாமுனியும்
பாசநீசன்வரைக்கும் பாருலகஆறதையும்
சொல்லிவிரித்து சுருதயேழாமுகந்தான்
நல்லயுகமதுதான் நாடுவதும்சொல்லிமிக
வல்லயுகத்தில் வளருமனுவழும்
அன்னுட்டைச்சொல்லொன்றுக்குள்ளரசாள
பொன்னுனாராயணரை மகேந்திரனும்
நல்லவைகுண்டம் நல்பிறவியால்வளர்ந்து
வல்லக்கலியுகத்தில் வாய்த்ததெக்ஷணபுரியில்
புதுமைமிகச்செய்து பொல்லாதவபர்கைய்யால்
அடிகல்லெறிகள் அவர்பட்டம்புவியில்
குடிதாழ்ந்தபேர்க்காய் கோபமதையடக்கி
நல்லோர்க்காய்பாடுபட்டு நல்லஉபதேசமதாய்
பஞ்சகருணைதிகளைப் பம்மலாய்த்தான்நடத்தி
கொஞ்சநாளுங்கழித்து குதித்துதித்தேவளர்ந்து
ஆடவராய்ச்சமைந் தாண்பெண்போலேயிருந்து
தேடவறியாருக்குத் திரவியம்போலேயிருந்து
பச்சக்குழந்தைகப் பருவமுன்னாகியவர்
மெச்சக்கொடியாள்க்கு ஏவும்பருவம்போலும்
சுத்தக்கிழவரைபோல் சூசுபிராயமுமாய்
மெத்தப்புலம்பி விளலும்பிராயம்போலும்
நாலுபிராயம் நாளதுக்குள்ளேயெடுத்து
கோலுகையேந்திக் குன்றும்பிராயம்போலும்
பார்க்கபிராயமுமாய் படுக்கக்கிழவனுமாய்
தார்க்கத்திறவனுமாய் சந்திக்கிசைந்தவனுமாய்
காக்கக்கருத்தனுமாய் கர்த்தனிகர்த்தனுமாய்
யேக்கத்திருத்தனுமாய் யிவர்சமைந்திவ்வுகத்தில்
தர்மத்தால்க்கலியைத் தன்னந்தனால்க்கரைத்து
கர்மத்தையீடழித்துக் காந்தக்கோலமெடுத்து
நேரேநூரைக்காத்து நிசமாகவேயெழுப்பி
ஏருரைக்கொன்று யேழ்பாகசூழும்பூத்தி

உகத்துக்குகம்வளக் கெல்லாமொருதலத்தில்
தொகுத்துநடுத்தீர்ப்புச் செய்துமிகத்தெழிந்து
ஆகாத்தபேரை யெல்லாம்நரகமதில்
வாகாகத்தள்ளி வாசல்தனைப்பூட்டி
சித்தத்துக்கேத்த செடத்தோரைத்தானெழுப்பி
பத்தாரைமாத்துற்ற பைம்பொன்னிறபபொன்பதியில்
சாகாவரங்கள் ஜனங்களுக்கேகொடுத்து
வாகாகநல்ல வரிசைமிகக்கொடுத்து
ஆண்பெண்ணுடனே வதிசவாழ்வுங்கொடுத்து
காணக்காணக்காட்சி கனமாமிகக்கொடுத்து
செல்லவைகுண்டர் சிமையன்பத்தாறதையும்
அல்லல்கற்றி யரசாள்வாரீசுரரே
மும்மூர்த்தியெல்லாம் மொருமூர்த்தியாயிருக்கும்
எம்மூர்த்தியெல்லா மியல்மூர்த்தியொலிருக்கும்
வைகுண்டப்பெம்மான் வாய்த்தச்செந்தூர்கடலில்
மைகுண்டநாதன் வந்துபிறப்பதுதான்
வளர்ந்துதவஞ்செய்வதுவும் வாய்த்தபுவித்தெக்ஷணமே
குழந்தைவைகுண்டர் குமாரப்பிராயமட்டும்
கோலாகலனாய்க் குருவாய்சமையமட்டும்
நாலாஞ்சொரூபம் நடத்துமவரைத்தெக்ஷணமே
பொல்லாதெல்லாமழிந்து பூவர்கொலுவாகுமட்டும்
யெல்லாவழக்கும் யிருப்புத்தெக்ஷணாபதியே

விருத்தம்

ஆதியிலுதித்தாவாறும் அரன்சிவப்பிறவிவாரும்
ஓதியயுகங்கள்வாறும் ஒவ்வொருவசுரன்வாறும்
நீதியமனுக்கள்வாறும் நீதமாங்குண்டர்வாறும்
தீதில்லாத்தர்மனாயச் சிறப்புடவாறுஞ்சொன்னான்

நடை

இவ்வாறெல்லாமெடுத்து மிகமாமுனிவன்
அவ்வாறெல்லாமுறத் தகன்றனன்காண்மாமுனிவன்
துதிகொடுதன்னால் சிவகோவேங்கிரியில்
பதியச்சிவமும் பதியன்னாரன்போரே
நந்திசுரரும் நாட்டினாரவ்வுரையை
இந்தப்பழமொழி போலிசைந்த புவிமகிமை
தெக்ஷணாபூமி சிவபூமிநல்லதுதான்
மிச்சம்வியாகர்முன் மொழிந்ததுவுமிது
ஆனதாலிப்பூமி யாகுந்தவசிருக்க
கோனாங்குமரி குடியிருக்குமின்னகரு
சங்குத்திறைமுகத்துச்சதா கேடியர்புதங்கள்
எங்கும்மகிழ வியல்புபெற்றதின்னகரு
மங்கைப்பதிநகரு மணவைப்பதிநகரு
கங்கைக்குலநகரு கண்ணாளர்தன்னகரு
பஞ்சவர்களஞ்ச பார்மன்னர்தன்னகரு

சஞ்சீவிதன்னகரு தவத்தோர்க்குருநகரு
தெய்வகுலமன்னர் சிறந்தகுருநகரு
சைவமுனிமார் தவத்துக்கிதுநகரு
மேலோகக்காட்சி விளங்கியிருக்குமின்னகரு
சாலோகசாமி சார்ந்திருக்குமின்னகரு
அரம்பஸ்திரிமாரராராடுஞ்சுனைநகரு
பரம்பெரியசேடன் பவிசுக்குருநகரு
வாவியுறைநகரும் வைகைக்குருநகரும்
தாவிக்குலாவுஞ் சந்தப்பக்ஷிதன்னகரும்
சொல்லவெளிதல்லக்காண் தெக்ஷிணபூமிவனம்
நல்லதந்தநாடு நமக்குகந்தனன்னாடு
பசுவும்புலியும் பாவித்திருந்தநகர்
கசவுமென்னோரங்கரைபுரளும்நன்னாடு
அன்னாடுநாடுவர நாடுக்கொப்பிடலாம்
பொன்னாடுபுரந்தர நாட்டுக்கீடாம்
தவம்பெற்றோர்வாழ்ந்தத் தன்மைக்குருநாடு
பாவமற்றோராகிய பாவித்தநின்னாடு
நல்லமலைவளரும் நாஞ்சிவளநாடு
சொல்லுருசியான சிறந்தகுருநாடு
ஒருநாடுமின்னாடுக் கொவ்வாதுவுத்தமரே
திருநாடுயீசா தினமுறையுநன்னாடு
திராவிடையைத் தீர்த்தறுக்குமின்னாடு
நீராளமானகிராதன் மின்னாடு
சம்பத்துக்கேத்த சகலகுருநாடு
இன்பம்வளரும் மிசைந்தகுருநாடு
ஆதியொருமுனிவன் நடவில்த்தவசியிருக்க
நீதியறியமென்று நிமலனிந்தேதவியுமாய்
காராவும்கன்றதுபோல்க் கரைக்கண்டர்வேஷமிட்டு
பற்றுமைபார்க்கப் பாரில்மிகமேய்ந்து
அந்தமுனியடுக்கலன்றி ராப்போயடைந்தார்
சிந்தனருளாலே சிறியொருகடுவாய்
பசுவனையும்கன்றனையும் பார்த்துமனமகிழ்ந்து
இசுவாகவேவந்திரையாம் நமக்கெனவே
என்றுகடுவாயியல்பசுவின் கன்றதையும்
தின்றுவிடவென்று சென்றுபிடித்திடவே
அப்போபசுவும்மந்த முனியடுக்கல்
இப்போதென்கன்றை யிந்தக்கடுவாய்பிடிக்கு
மாமுனியெநீயும் வந்தொருசத்தமிட்டால்
தான்பயந்துகடுவா தன்னாலொதுங்கிடுமே
வந்துசொல்லாதாலும் மாமுனியேயிங்கிருந்து
உந்தித்தோனியால் ஒருசத்தங்கூறினையால்
மென்பிள்ளையெந்தனக் கிப்போதுதவுமென்றார்
உன்னுள்ளமுமேத் துடையோனபதப்பெறுவாய்
என்றுபசுமீதுரைக்க மாமுனிவன்

ஒன்றுமுறையாடா துள்ளங்கவிழ்ந்திருந்தான்
கடுவாயுங்கணைறக் கைலேயங்கிரிதனிலே
வெகுவாககொண்டு விட்டதுகாணம்மானை
பசுவுமவனமறைந்து பார்முனிவன்காணமல்
விகுவாசமாககமேலாகஞ் சேர்ந்ததுலே
பின்னுஞ்சிலநாள்க்கழித்துப் பேர்முனிவன்சிந்தையிலே
முன்னு பசுமுறையால் முருந்தன்பதங்காணமல்
இத்தோஷங்கழிக்க பின்னுஞ்சிலநாள்வரைக்கும்
சித்தத்தோடேசாத்தத் தெக்ஷணபூமியிலே
இரந்துருடித்து யிகதவமேபுரிந்தால்
டாந்தணியுமேவதன் பதமடையலாமெனவே
உத்தரித்துமாமுனிவன் வொருநொடியிலேயிறங்கி
திர்ப்பதியுடனேதீத் தெக்ஷணபூமிவந்தான்
வந்துஇரந்து வருஷமொன்றுனதினபின்
முந்துமின்றகாவில் வுவந்துதவசிகின்று
பரமன்பாதாரபபவிசு மிகவடைந்து
வரமருளபபேறுபெற்று வாழ்ந்திருந்தாரம்மானை
அப்படித்தோசமகன்றுதரும் அறவ்வளரும்
உற்பனம்போலொத்து உகந்ததெக்ஷணபதியே

விருத்தம்

தெக்ஷணபுரியிதேனு செப்பிடதுலேயாதய்யா
மிச்சமாம்புவியுநாகு மேவலர்க்கநங்கந
பச்சமால்மகனேநீரும் மண்ணுறதவசியேறும்
அச்சமும்வாறாதை யாவென்றடிமிசை பணிந்துநின்றுன்

விருத்தம்

நல்லதுதனையென்று நாரணர்தயவுகூர்ந்து
வெல்லமர்வணவைவாரிமேன முகாேலேநின்று
அல்லல்நோய்பிணிகள்செல்லாமறமதான்தண்ணீர்த்தன்றல்
தெநல்லேரோயதிர்ப்ப ப மெ று தெக்ஷணபதியில்வந்தார்

விருத்தம்

வந்தவர்தலமும்பார்த்து வழியி லக் ஷமும்பார்த்து
சந்தமாமகிமைசகூர்ந்து சுவாமியுமுனிவைப்பார்த்து
ந்தமாநகரில்வாழும் ராஜனுமறியவெர்றை
வந்தையாயறிவொன்று விருத்தேழுதனுபபுமெலைருர்

வாசகம்

வாலேராபச்சந்திரசூரியனுராயணர்தரினை ந ண ட மா ய
தான்றிதர்மம்நித்திச்சு காணிக்கை ச்கூடி காவடியெயா
றதிருச்சபதிமூல் வேண்டாம. ஆவசியமில்லேயென்று
நிறுத்தலாக்கிய யுகந்சாதித்து ஒரு டக்நளளராசள
ஆயிரத்தெட்டரயா னி மாரி ப் கடசையாண்டு நார யணம்
பண்டாரமெ ந மமுர் ந லி எழிபக்கோலமெல்ப பசிச்சு

தெக்ஷிணம் பள்ளிக்கொண்டிருந்து தர்மமாகத் தாரணியோர்க்கு தண்ணீரினாலெசஞ் சலநோய் கர்மம் வர்மம் வாதை கோதை பயங்களோயும் பிறிவி நாசமும் பொய்வினை சஞ்சாரமும் பீடை கோடை வாடை தீர்க்கவும் பிள்ளையில்லாதபேர்க்கு பிள்ளை கொடுக்கவும் தனமில்லாத பேர்க்கு தனங்கொடுக்கவும் சாம்ப சதாசிவசுவாமி மூவரும் சற்சற்குணமாகியே தன்றாலொரு வேஷமாகிச் சமைந்து சாதியுயர் கொண்ட சத்திமாதர் வழி யிகல சகலருண நாராயண இரச் சம்பங்கற் சாதிவைகுண்டம் பிறந்திருக்கிறார் இனி மன்றாய் தெரியுமே, ஆனதினால் பூமியி லடிபிடிவன்னியாயம் மிறைதெண்டம் கைக்கூலி அபகடம் பொய்பிரட்டு யவர்செவியிற் கேட்க வொண்ணாதெனும்மகா கோடிதர்மபாக்கியசாலியாய்ப் பூமியில்லதிக பாசமாய் விரிந்து யவாருகில் குளாயலக்காரத் தற்மமணியாய் தெருத்தி யந்தரவீடு லலாடம் திறந்து அதின் வழியா நடனம் திருநடனம் மாடல் பாடல் அங்ஙனேக்கண்ணேக்கிச் சகலரும் பார்த்தா ராய்ந்திருப்பதால் அவரவர் நினைவிலிருக்கிறதெல்லாம் மவர்க்கு தெருயாமலிருக்கிறதல்லவே யதுகண்டு பதறியாரா னாலும் அவரிட்டிருக்கிற சட்டம்போல் நடந்து கொள்வாரா கவும். அங்ஙனே நடக்கில்லென்று வருகில் அவர் நிச்சயித் திருக்கிற தெய்தியில் நடக்கும்படியே வரும். மன்பாகிய மனுக் களுக் கனுகூலம் ஆயிரத்தெட்டாமாண்டு மாசியில் தெக்ஷி ணம் பள்ளிகொண்ட அய்யா நாராயண அய்யாவைகுண்ட மாய் தர்மம் நித்திச்சு எழுதி னயறிவென்று மாமுனியெழுதி யவனியறியும்படி யயச்சான். ஆயிதுவெல்லாமல் அய்யா நாரா யண அய்யா தர்ம நித்திச்சு தபசிருக்கிற படியினாலெ யின்று முதலவர் நிச்சித திருக்கிற நாள்வரையும் பூசைப்புனக்காரம் சேவித்தல் லர்ச்சினை யாராடு நீராடுதல் தீபாணை சாந்தி காழாஞ்சி கைவிழக்குகாவடிகாணிக்கை தெருமுகூர்த்தம்கூபுர முகூர்த்தம் திருநாள் முகூர்த்தம் குரவை குழாங்கூட்டம் கொலுவாரபார மாயுதம் அச்சுநடை ஆனைநடையலங்காரம் மஞ்சணைக்குழி நீராட்டலிது முதலுள்ள நன்மை சுபசோபனம் வரையும் அவர் நிச்சயித்த நாள்வரையும் மவர்க்கானதல்லவே யானதினால் நீங்களிதுவெல்லாமிது நாளுக்ககம் விணில்செல விடாமலும் விறுதாவில் காகில் விழாமலுமிருக்கக் கடவுளிது நாராயண வைகுண்டசுவாமி திருவாக்குபதேசக் கருணையினால் மாமுனி யெழுதி வயச்ச வாசகம்.

விருத்தம்

என்றிந்த விவரமெல்லாமெழுதி யெயுலகில்விட்டு
நன்றிந்தவாச்சை வெள்ளிநாகதிருதிக்கும்வேளை
பண்டிந்த மூலந்தன்னில் பஞ்சமி சேரந்தன்னே
குண்டத்தின் அரசிகோமான் குவலயமதிலேவந்தாள்.

நடை

நாதக்குருநாதன் நாருயணநாதர்
மாதவனுங்தெக்ஷிணத்தில் மாவருத்துமாவடியில்

மணவைப்பதிமுகத்தில் மாதுகன்னி பார்வையிலும்
இணையானபஞ்சவரின் யேற்றவரிச்சுனனும்
மணமானநாதன் மகாபரனைத்தானுட்டி
வணங்குந்தவத்தால் வந்தார்தாமரைப்பதியில்
தெக்ஷணமூலை தென்வாரியத்தமதில்
மிச்சமுள்ளதேவர் முழங்கிக்குரவையிட
தேவர்திசையெட்டும் ஜெயஜெயனென நெருங்க
மூவாதிசயமாய் மோடுவழி தாழ்த்திறந்து
ஆரபாரத்துடனே யாவர்கள்வந்து பார்த்துநிற்க
வீரநாராயணரும் வித்தாரதெக்ஷணத்தில்
பள்ளிக்கொண்டாரென்று நாயம்பரந்திடவே
துள்ளியசொரூபம் சுற்றினாரம்மானை
வைகுண்டமென்று மனுபோறிந்திடவே
மெய்கொண்டநாதன் மேவிநின்றார் தெக்ஷணத்தில்
யாமமிகக்கூறி யதிகதிசையெட்டிலுள்ள
ஓமப்புசாசுகளை யொதுங்க யுபதேசித்தார்
மேல்நடப்பையெல்லாம் வித்தாரநாரணரும்
தாரநடப்பாகத் துறந்துறந்தே படித்தார்
கண்டவர்களெல்லாம் கருத்தோடறியாமல்
வண்டப்புலப்பமென வாக்குரைத்தேபோனார்
புத்துமாதம்வரையும் பார்நடப்புள்ளதையும்
மூத்துமொருகுடைக்கு ஓலகானுவதும்படித்தார்
யெல்லாநடப்புமிவர் படித்தபின்பிறகு
வல்லாண்மையான வைகுண்ட பெம்மானை
உகஞ்சோதிக்க உற்றார்காணம்மானை
தவமேல்தவமெனவே தானிருந்து வையகத்தில்
பொறுதிசதமாய் புண்ணியநார் தானிருந்து
உறுதிரிடனய்யா யுகஞ்சோதிக்கலுற்றார்
நாரணரும் நல்லவைகுண்டமென
பேருனதும்நிறைந்து புண்ணியனார்தெக்ஷணத்தில்
மனுவிருமாய்வந்து மனுலைவசோதித்தெடுக்க
தனுவையடக்கித் தவமிருக்காரம்மானை

விருத்தம்

உலகினில் மனுவாய்த்தோன்றி யொருயிருபது நாள்க்கப்பால்
தலைமுறைவினைகள்போக்கி சடலத்துளூறலோட்டி
மலைசென்தாரலையினுள்ளே மகரத்துள்ளிருந்துபெற்று
அலைகடற்கரையா நாராயணரென புவியில்வந்தார்.

விருத்தம்

வந்தந்நாட்டிலுள்ள வன்குற்றமதனைகேட்க
நந்திகோன விபூதிசாத்தி நாடிகலங்களேற்றி
முந்தநாள்மூவர்க்கெல்லா முதன்மையாய் சாதித்தேறி
சந்தஞ்சாகாவிஞ்ஞைத் தலைவனாய்ச் சமையவைன்றே.

விருத்தம்

நீதியரோமம்வீசி நினைவொன்றைக் கருணைவாசி
சாதிகளுரைகளாறிச் சடத்துறவாசையற்று
வாதியாங்காரமந்து மலசலம்மதங்களத்து
ஆதியைக்கருணைகாட்டி யவர்தவம்புரிந்தாரைய்யா

விருத்தம்

ஆசையால் பாசமத்து வனுதர்குளாங்களத்து
மாசதாம்வினைகளத்து வாக்கலங்காரமத்து
நீசமாங்கலியைத்து நீணிலத்தாசையத்து
ஓசையாய் வெளியைத்தாண்டி ஒருவனைக்கண்டு கந்தாரைய்யா

விருத்தம்

கண்டவர்பாலேத்துக் கண்சுழிமுனையில்நாட்டி
பண்டவர்செகலில்பெத்து படிமுறைநத்தவருநாட்டி
கொண்டவர்லோகந்தனைக் குமியவோர்த் தலத்திலாக்கி
ரண்டதுமறியவென்றே யிவர்தவஞ் செய்யலுற்றார்.

விருத்தம்

மனுதவதாரங்கொண்டு வந்தவர்பிறக்கலுற்றார்
தனுமனுவோர்களெல்லாம் தனைத்துநீடுளிவாழ்ந்து
வனுதர்மப்புவியைக்கண்டு மாள்வருவாழ்வுவாழ்ந்து
துணிவிடன்மனதி லெத்திச்சூரியத்தவஞ்செய்தாரே.

விருத்தம்

முற்பீதிர்வளிகளெல்லாம் முதன்மைபோலாகவென்றும்
கற்பினைபடியேத்தோன்றி கலியுகமீதில்வந்தார்
அற்புதமடவாரோடும ஐவர்தன்குலங்களோடும்
செப்பியஜாதியெல்லாம் செயல் பெறத்தவசியானார்.

விருத்தம்

இத்தலமதிலீதெல்லாம் மியல்புடன்வசமேயாக
குத்தமேசெய்லோரீச கொடுகலிவளிகள்சாக
கர்த்தனார் கர்த்தனாக கலியுகத்தீர்வையாக
உற்றவைகுண்டர்சுவாமி யொருகுடைக்காசுபெற்றார்.

நடை

நாராயணரே நல்லவைகுண்டமென
சீராகதெக்ஷணத்தில் சிறந்ததவம் செய்யலுற்றார்
ஆறுவருஷதுள்ளே யவர்நினைத்த
வாறுவகையெல்லாம் வந்துவழிப்பட்டிடவே
நின்றார் தவசு நெடியநாராயணரும்
குன்றாக்கடலில் கொணடவழிப்படியே
கடலில்மிகவே கண்டதெல்லாமல்விள்ளாமல்
உட்டுள்சுச்சமொருவருக்கும் காணமல்
அகமதுவேம் பூஜித்ததிகத்தவசியிருந்தார்

தவப்புதுமை சொல்லத்தானுரைக்கக்கூடாது
இசர்முன்றாழில் யிருந்தாரொருதவசு
வாசக்குழலுமையை மதலையுருவாக்கவென்று
வெட்டுவனுக்கீந்த விஞ்சைதனைநெஞ்சில்வைத்து
கூட்டுக்கிளியை குழந்தையுருவாக்கவென்று
அத்தவந்தான் போதாதையாயிவர்தவத்தே
கற்றைக்குழலுமையாள்க்கரியமுக்காலமதில்
சூதனெனவந்த தோஷப்பொல்லாதவனை
வீரத்தனமாய் வெட்டிச்சரமறுத்து
ஆருமுகமாயானதொரு வாண்பிள்ளைத்தான்
பேருடனேநமக்கு பிறக்கவேணுமெனவே
சரவணபொய்கையிலெ சம்புவனைநினைந்து
அரகரா அவள்தான் நன்றுநின்றதவமும்
இவர்தவத்துக்கொவ்வா தீசுரனிலும்பெரிதாய்
அவர்தவமொவ்வா தய்யாயிவர்தவத்தை
சீதைதவசியதுஞ் செப்பவொண்ணாதித்தவத்தை
நாதவரிச்சுனனும் நாட்டத்தவத்திலுறும்
எத்தனையோகோடி யிவர்தானிருக்குயதவம்
விதரிக்கவென்றால் வெகுமணிகள்சென்றிடுங்காண்
சொல்லவெளிதல்ல சொன்னுலகிலுள்ள
பொல்லாதபெரும் பொருந்தியிதைக்கேட்டால்
பாவந்துலைந்திடுமே பாவிகள்க்குமோர்நினைபபாய்
நாமிருப்பதுவோ நாலுதிரையதனுள
ஆமவரைக்கண்ட றிந்தாவதுவீதம
இச்சொருபத்துள்ளேயிது விதிக்கவொண்ணாது
வச்சுகந்துபார்ப்பீராய் வழிதெரியுமிந்தயேடில
என்னவோவெனறெண்ணம வைத்துகேட்பீரார்
அன்னமுதலத்து ஆக்கினைக்குள்ளாவார்
நல்லவர்நல்லாவார் நானுரைக்கேளம்மானை
செல்லத்திருவேட்க சொல்லுவார்நாரணரும்
சீமையணபத்தாறுத் தேசனருள்களையும்
நேர்மையொழுங்காய் நிமிப்பொழுதில்வந்திடவே
செல்லவைகுண்டச் சீமானும்மப்பொழுது
வல்லதவமு மனதுளருதமுடித்து
உலகனருள்க ளாக்கவொருமிக்கவொரு
தலமழுந்தநாதன்தான் நினைத்தாரம்மானை
வடகிழக்கு வடமேற்குநேர்மேற்கு
நடக்கும்படியே நல்லதிக்குநால்திசையும்
அடங்கல்குடியிருக்கும்மாழ்களெல்லாம்வரவே
சாணுன்முதலாய் சாதிபதினெட்டையுமோர்
நாளுமேலோடிவர நாராயணர்நினைத்தார்
நினைத்தவுடனே நிமிஷம்ஸாறுக்காமல்
தினந்தோறும்வந்து சேரும்நருள்களது
எண்ணக்கூடாது வெவராலுமன்போரே

திண்ணமுள்ள சாதிச் செப்பவொண்ணாதன்போரே
நாணாதகாவேரி நல்லதுலுக்கபட்டர்முதல்
சூத்திரப்பிரமான்தோல் வாணியன்பறயன்
கம்மாளன்ஈனன் கருமறவன்பரவன்
வெம்மானசுராணி வேகாண்டநிடையர்
சக்கிலியனோடு சாதிபதினெட்டுகளும்
முக்கியமர்களோடி வந்தாரம்மானை
ஆகாயங்காண தறைக்குள்ளடைத்திருந்த
வாகாஸ்திரிமாரும் வந்தார்காண் அன்போரே
கிழவன்முடவன் கெற்பஸ்திரிமாரும்
இளவயதுகொண்ட யேந்துபசலேமுதலாய்
ஒக்கவேவந்தார்கா ணுடையவனார் தன்னிடத்தில்
வந்தனருள்களெல்லாம் வாய்த்தவலுவியாதிமுதல்
சிந்தையுடன் தன்னால் தீர்த்தாரே தர்மமதால்
அன்பதுவயதாய் அறைதழர்ந்தபெண்ணாள்க்கும்
சம்பத்துக்கேள்க்க சந்ததிகள் தான்கொடுத்தார்
உடல்தனமில்லாருது வளிந்தபெண்ணாள்க்கும்
சடலமுருக்கொடுத்து சந்ததியுங்கொடுத்தால்
பிறவுக்குருடுமை பேச்சறுநாக்குளறல்
திறவியொழிபோல்திறமும் மொழிகொடுத்தார்
கர்மவியாதிகளால் கால்மொட்டிகைகள்மொட்டி
தர்மமில்லாப்பாவிகள்க்குத் தாழ்மைமிகக்கொடுத்தார்
அந்தமொட்டியெல்லா மறத்தாலதைத்தீர்த்து
சந்தமுடன்கைகால் தானாக்கித்தான்கொடுத்தார்
உடலேயுருக்கு முற்றசயமிருமல்
குடலேப்புரட்டும் குறுமவாய்வுமுதலாய்
தீர்த்துக்கொடுத்த தேசத்தோர்கண்டுமிக
பார்த்துப்பார்த்துமகிழ்ந்து பச்சமுற்றுவந்தனர்காண்
கர்த்தாதிகர்த்தன் கடவுளாரென்றுசொல்லி
எத்தேசத்தோரும் மிங்குவந்தாரன்போரே
பதினெண்சாதிகளும் பண்பாயொருதலத்தில்
விதிவந்ததென்று மேவிக்குசவிருந்தார்
மேவிக்குளாவி மிகவேவொருதலத்தில்
ஆவினீருண்டு அகமகிழ்ந்தாரன்போரே
நொன்பலங்களெல்லா நிசமாகத்திருவதும்
அன்பாயுலகில் லானதேசத்தோறும்
ஒருதலமாய்வந்து ஒனறுகக்குமிகிறதும்
கருதினமர்ப்பார்த்து அவர்கள்மிகவுரைப்பார்
முன்னேமொழிந்த முறையாகமம்போலே
இன்னாள்சமைந்திருக்கு யிசைந்துமகிழுந்துரைப்பார்
வைகுண்டராஜர் வருவார்தரன்புமியிலே
மெய்கொண்டராஜர் மேதினியில்வந்தவுடன்
சாதிபதினெண்ணும் தலமொன்றிலேக்குவிந்து
கோதிக்குளிக்குமொரு கிணற்றிலல்லாது

கர்மவியாதிசெவிடு கண்குருடுமையெல்லாம்
தர்மத்தால்தீர்த்தார் சகலவுயிரானதுக்கும்
செல்வமுண்டாகும் சீமானுர்வந்தவுடன்
அல்லல்மிகத்தீரு மவரையறிந்தவர்க்கு
எழியோர்வலியோர் எல்லாமொருப்போலே
பழியானப்பேச்சு பாரினில்கேட்கவிடார்
தேசமெல்லாம்பரக்கும் சீமானுர்வந்தசெய்தி
தோஷமெல்லாமகலுஞ் சுத்தமாய்க்கண்டவர்க்கு
சார்ந்தோற்குசந்தனமாய்த் தர்மங்கொடுத்தருள்வார்
சேர்ந்தவர்க்குநல்ல செல்வமுண்டாகுமென
சொல்லியிருந்தாகமத்தின் றுல்வச்சுருதிப்படி
நல்லவைகுண்டர் நாட்டில்வந்தாரென் றுசொல்லி
சாதிபதினெண்ணும் சடலவரவும்மற்று
ஆதிவைகுண்டரடி வீழ்ந்தேற்றியவர்
எல்லாமொருதலத்தில் ரண்டுமனுப்போலே
அல்லோரும்வந்தோராவினீருண்டிருந்தார்
அல்லாமல்முன்னுள் ஆகமத்தின்படியே
எலலாமுன்வியாகரெழுத்தின் சொல்படியே
தெய்வச்சான்றேர்களுக்கு சேர்ந்தவியாழமது
மெய்வகையாய்வந்து மிகத்தோன்றியேயிருக்க
இன்னமிவர்வழியிலியல்பாய்மணமுகித்து
மன்னர்வைகுண்டர் மகராஜராகியவர்
சீமையன்பத்தாறும் சொல்லொன்றுக்குள்ளாகி
மேன்மைசான்றேர்க்கு முத்திரிசெங்கோல்கொடுத்து
தாழ்வில்லாச்சான்றேரை தர்மபதிமீதில்வைத்து
ஆழ்வதும்நிசமே யாதியாகமப்படியே
நாராயணர்க்கு நாள்ப்பகையாய்வந்தவர்க்கு
பொராதெனக்காலம் புராணமுரைக்கிதுகாண்
சொல்லியுலகோர் தொல்புவியில்கண்டாடி
பல்லுயிருமறிந்து பண்பாய்மகிழ்ந்திருந்து
மகிழ்ந்துசிலநாள் வைகுண்டர்பாதமதில்
மிகுந்துபலஜாதிமுதல் மிகவந்துரைகேட்டார்
வந்தனருளறிய வைகுண்டர்வாய்திறந்து
சொந்தமுடன்வசனம் சொல்லிமிகக்கூறலுற்றுர்

வாசகம்

ஆயிரத்தி எட்டாமாண்டு மாசியில். கட்றகலையாண்டி நாராயணம் பண்டாரந் தெக்ஷணம் பள்ளிக்கொண்டு காணிக்கை கைக்கூலி காவடி முதலெந்தனக்கு வேண்ட ஆவசியமில்லையென்று தர்மநித்திச்சுக் கொற்றவருமாண்டு குறுப்புமிகத் தோன்றி உற்ற துலுக்கன் வந்துடனேடி மற்றொரு பத்தாமாண்டில் வரும் வைகுண்டம் வருவோமென்றேயாமத்தின்படி வந்து வைகுண்டம் பிறந்துகொண்டிருக்கும நச்செத்திரத்தில் குதிச்சுகொள்ளுந்தன்னே மாளுவதுமாண்டு கொள்ளுந்தன்

னே முழிக்கப்பட்டது முளிச்சிகொள்ளுந்தன்னே முழிக்கப்பட்டது கண்டுகொள்ளுந்தன்னே ஒரு நெல்லெடுத்துடைக்கா காடுகெட்டுகொள்ளுந்தன்னே இருநெல்லெடுத்துடைக்க நாடு தாங்காதுதன்னே வானமும் பூமியும் இடிஇடென்றடிடும்தன்னே வானத்திலிருக்கிறவெள்ளிகளெல்லாம் ஆலங்காய்போல் உதிர்ந்திடுந்தன்னே மலைகளிளகிடுந்தன்னே பதியெழுப்பிடுந்தன்னே முளிக்கப்பட்டதுகண்டுகொள்ளுந்தன்னே என்று நருள்களறியும்படி உபதேசித்துக்கொண்டிருந்தார். அதையுலகோரறிந்தும்கேட்டும் கண்டும் முன்னுள்ளவாகமங்களுஞ்சரி என்று ஒத்துக்கொண்டு இவர்தான் வைகுண்ட சுவாமியென்று கேட்டறிந்து யிவர் தலத்திலே போவோமென்று வந்தார்கள் பின்னும் நாராயண வைகுண்டசுவாமிதானே பேய் பலஜீவஜெந்து ஊர்வனம் புற்பூடு கல்க்கரவேரி யறியவுபதேசித்தார் மெய்ப்படியென்றால் வல்லாத்தான் வைகுண்டம் பிறந்து காணிக்கை கைக்கூலி காவடி ஆடுகிடாய் கோழி பன்றி இரத்தவெறிதீபதூபம் மிலைபட்டையிது முதலானதெந்தனக்கு வேண்டாம். ஆவசியமில்லையென்று தர்யரித்திச்சு நாடு குற்றங்கேள்க்க நாராயணர் சிறையிருக்கும்போது இனியாரேக்காரென்று பார்க்க அதை அறிந்து நீங்களும் ஒதுங்கியிருங்கோவென்று உபதேசித்தார் உடனதுகளெல்லாம் மையாவானை நாங்களொன்று மெக்கமாட்டோமென்று சொல்லிப் போனாருடனே. நாராயண வைகுண்டசுவாமிதானே. ஓராண்டொன்னரை யாண்டு கழித்து உகஞ்சோதித்து வரும்போது பேய் செய்கிறவன்னீதம் பொறுக்காமல் மாணிடர் வைகுண்ட சுவாமியிடம் வந்து ஆவலாதி வைத்தாருடனே வைகுண்டராஜனும் இட்டிச்சுப் பார்க்கும்போது பேய் செய்கிறது அன்னீதந்தானெனறறிந்து பேய்களுக்குள்ள முன்னுகமக்கணக்கை சேர்இத்து பேயை எரிக்கவேணுமென்று நாராயண வைகுண்ட சுவாமிதானே மனதிலுத்தரித்தார்.

விருத்தம்

பேய்கள்தான்பிறந்தவாறும் பெருவரம்பெற்றநாளும்
மாய்கையாவுலகில்பேய்கள் வந்தோதார்நாளும்பார்த்து
ஞாயமாய்கடுவுங்கேட்டு நாமதைஎரிக்கவென்றே
ஆயர்முன்னெழுத்துங்கொண்டு அருள்முனிவரவேயென்றார்

விருத்தம்

வாவெனவுரைத்தபோது மறைமுதல்வேதன்வாறோர்
தூரத்தமீதோடாவிச்சீக்கிரம் வந்தாரங்கே
பரமருள்வைந்தாசர் பார்த்தவர்தன்னைநோக்கி
விரைவுடன்பேய்க்கு முன்னுன்விதிதன்னைப்பாருமென்றார்

விருத்தம்

விதிதன்னைப்பார்த்து வேதன்விளம்புவான்வைந்தரோடு
துதிகொடுவெழுத்து மெந்தன்சுருதியும்கேளுமோவையா

ஆதிநாராயணர் தானிந்த   வலிகலிகத்திலேதான்
பதிவைகுண்டமென்று   வந்தன்றேபரசிவுளிந்துபேசனார்

விருத்தம்

பொய்யொடுபசாசுகலிபொருமையுங்கலியுகீசம்
மாயோடுகபடுகள்ளமனக்கறுப்புகங்கள் தீர்ப்பு
பொய்யொடுமிரட்டு   வஞ்சப்பிளை பொல்லாப்பென்றதெல்லகம்
வாயோடுவாயால்   கெட்டுமறுபிறப்பில்லாப்பேசனார்

விருத்தம்

நாரணர்வைகுண்டமாகி   நாட்டினில்வந்தவன்றே
காரணமெல்லாமாச்சுக்   கலியுகழிந்துபோச்சு
பூரணவேதநூலும்   புராணமுன்னாகமங்கள்
சாரமுங்கெட்டுப்போச்சு   சதாசிவவைகுண்டமாச்சே

விருத்தம்

அழிவதையழித்துப்போட்டுயவருடு   சொல்லுக்குள்ளாய்
சுழிவரையெழுத்தை   ஊனிதெய்வமர்தவருமாகி
வழிதனில்வன்னியாகி   வகுத்திடும்மகவோராகி
அழிவில்லாப்பதிதானுழ்வார்   ஆகமத்துறைதானென்றார்

விருத்தம்

ஆனதால்ஆகாதென்றவ்   வகைக்கிதுநாள்சாக
மௌனமுமிதுதானென்று   கியம்பிடவேதன்றானும்
மானமாய்கேட்டு   வைந்தவானவர்சாக்ஷியென்று
தானவர்க்கணக்கிலூணிச்சத்தியாய்பதிதாரென்றே

விருத்தம்

கணக்கிலேயெழுதிக்கொண்டு   கருத்தினிலடக்கிவைத்து
இணக்கியேயவரையெல்லாம்   லக்கூலக்கதிலேகொல்வோம்
பிணக்கியக்கோலம்னனும்   பிசைகிலாவழியேசெய்வோம்
குணக்கிலாசெய்வோம்   பாருகோகிரித்தேவரெல்லாம்

விருத்தம்

உகசிவவானோர்னைதனொருதரும்   போகவேண்டாம்
வகையுடன்நான்தான்செய்யும்   வளிதன்னைப்பார்த்துக்கொள்
இகபரன்முதலாயிங்கே   இருங்கெனசொல்லிவைத்து   [னும்
பகைசெய்தக்கணிவையெல்லாம்மெரிக்கவேபரனங்குற்றார்

நடை

ஈசர்முதல்வானோரெல்லோரும்போகரிது
வாசமலரோனும்மற்றோரும்போகரிது
என்றுயிவர்களையுமிவர்சூழருகிருத்தி
அன்றுபேய்கொண்டுவா   அவர்னினைத்தாரம்மானை
உடனேயுலகமதிலூர்ந்துஇரியும்பேய்கள்

திடமேகுளறி சிந்தையுமிகக்கலங்கி
பேய்களொருதலத்தில் பிரமாணமாய்க்கூடி
மாய்கைத்தொழில்குளறி மனதுமிகவ்வழறி
சீலமுடனுரைத்தார் சிவ்வைவந்தர்ராஜர்மொழி
யேலமேநாங்கேட்டிருந்திலமேயெல்லோரும்
என்னவோவென்று வெண்ணிநினைத்ததெல்லாம்
சனனைபோலாகாமல் சாகவிதியாச்சே
அய்யோக்கெடுத்தோமவர்பேரில்குற்றமில்லை
பொய்யென்றிருந்தோமே பெரியோருரைத்ததெல்லாம்
நம்பேரில்குற்றமல்லால் நாரணர்மேல்குற்றமில்லை
தம்பேரில்குற்றமல்லால் சாமிமேல்குற்றமில்லை
நமக்குமுன்னாளில் நாரதமாமுனிவன்
எயக்கியாமியம்கொடுத்ததிகவர்மவேண்காரம்வேண்டிதந்தான்
அவனிடத்திறுமெளல்லோரும் பேயுரைத்தால்
சிவனிடத்தில்வந்து செய்திகேட்டேவுரைப்பான்
போவோம்வாருங்கோ பேய்கள்ஒருப்போலே
கோவேங்கிரிதனிலே குடியிருக்குமாமுனிவன்
அண்டேயவரணுகியவைபயமுறையெனவே
கண்டந்தமாமுனிவன்களிவையெல்லாம்மர்த்தி
அபயமிட்டதேதுதலைகைகளே சொல்லுமென்றார்
கவைதுயரமுற்று கழிவெல்லாம்சொல்லலுற்று
இனியுங்களெல்லாம் மெரிப்போ இப்போதெனவே
வரங்களையும்வைத்து மாண்டுபோங்கெனவே
துரைத்தனமாய்யெங்களையும் துடர்ந்துபிடிக்கிறார்காண்
பதறிஇங்கோடிவந்து பாட்டையும்மோடுரைத்தோம்
இதறுதனைத்தீர்த்து ரக்ஷிப்பீரெங்குருவே
என்றுபேயெல்லாம் மிப்படியேசொன்னவுடன்
அன்றுதலையோடந்தமுனிதானடித்து
வைகுண்டம்பூமியிலே வந்துபிறந்தாரென்றால்
மெய்கொள்ளசிவன்முதலாய் மேல்பிறக்கவேணுமல்லோ
சந்திசிவன்வரையும் சத்துப்பிறக்கணுமே
பொல்லாப்பிசாசுகளே புத்திகெட்டுபோனீர்களே
வல்லாத்தானல்லோ வைகுண்டமாபொருளும்
அவர்நாமம்கேட்டால் வல்லவென்றுசொல்வதுகாண்
சிவபரமுதலாய் சிந்தைப்பதறணுமே
உங்களுடமூப்பு புகத்திலினிவாராது
எங்களுடமூப்புவரையில்லை யென்றுபோகுதுகாண்
எல்லாமவர்மூப்புள்ளேயடங்குதுகாண்
பொல்லாப்பசாசுகளே பொன்றவிதியுங்களுக்கு
ஆனாலுமீசரமைப்புக்கணக்கெடுத்து
நானோயித்துமேவிதாறேனென்றப்போது
இந்தக்கணக்குமேழுயுகக்கணக்கும்
எந்தக்கணக்குமிருப்புமவரிடத்தில்
ஆனால்கணக்கையவரிடத்தில்நாமன்போய்

நானுகச்சொல்லி நற்கணக்கும்பார்த்து
அறிந்துகொளளலாமெனவே எல்லோரும்போவோமென்று
நாரதாமுனியும் நாட்டில்பேயத்தனையும
காரணவைகுண்டர்காலில் விழுந்துதெண்டனிட்டார்
தெண்டனிட்டபோது சொலலுவார்முனியுடனே
பண்டாகமப்படியே பசாசையெல்லாமெரிக்க
என்மனதிலுற்றேனிங்கு வந்துவாத்தென்று
நன்முனியேபேயை நகன்றிடாக்காருமெனுர்
முன்னேநீபேய்க்கு முதல்யமியைகொடுத்து
இன்னேரங்கூடி யொனிடத்தில்கொண்டுவந்தாய்
வந்ததுநல்லதுதான் வாய்த்தமுனியிபபோ
இந்தாபேய்கணக்கை யெடுநதுரைக்கேன்கேட்டிருநீ
பொல்லாக்கலியனை பிறந்தநாளனறுமுதல்
எல்லாம்பேயகளுக் கீந்தவராளதினுல்
நீசனைகொடுமை நீணிலமெல்லாம்பாாந்து
தேகச்சிறப்பு சிதறிகுலேந்ததெல்லாம்
வாய்யாநாராயணரும் வைகுண்டமாய்பபிறந்து
ஞாயநடுக்கேட்டு நாட்டுக்குற்றந்தீர்த்து
ஆக்காத்ததெல்லாம மழித்துநாகத்திலிட்டு
வாகாய்நரக வாயலத்தைப்பூட்டி
நல்லோர்க்குநாலு வரங்கொடுத்தேதயெழுப்பி
வல்லோரேசொல்லொன்று வைகுண்டமரசாள
பொல்லாரைநாகில் போட்டுக்கதவடைத்து
பிறந்துபூமிதனிலே பெருகவந்தவுடன
இறந்ததுகாணபேயகளிவர்க்காகாதபேர்களெல்லாம்
நனறுமுனியே நமபேரிலகுற்றமில்லே
முன்னுள்ளவாகபமுறைநூல்பபடியாலே
என்னுல்வொளுங்கி லெரிக்கிறேனிப்பேமை
மாமுனியேசாக்ஷிமாயாண்டிநீசாக்ஷி
நாமுனியேசாக்ஷி நல்லவரேசாக்ஷி
எல்லோருஞ்சாக்ஷி எனபேரில்குற்றமில்லே
வல்லாத்தான்வைகுண்ட மாலவருஞ்சாக்ஷி
என்றுநாராயணரு மெரிக்கலுற்றார்பேய்களையும்
பண்டந்தப்பேயைப் பாமீதில்கொண்டாடும்
நருக்கள்மிகப்பார்த்து நாலஞ்சுதான்ருக்கி
கருக்கிவிடவென்று களிவைத்தலேயாட்டி
மனுக்களறியமனுநருளைத்தாணட்டி
தனுக்கள்மிகவாங்கத் தானினைத்தாரம்மானை
அப்போநருள்பேரிலாடும்பேய்யேதுசொல்லும்
இப்போதுசுவாமி எங்களொக்கத்தானெரித்து
தனியேயரசாள சாதியொன்றுதானெடுத்து
சொல்லொனறுக்குள்ளாளச் சுவாமிவரங்கள்பெற்று
கொல்லென்றெங்களையும் கொல்லத்துணிந்தீரே
என்றுபேயெல்லா மெண்ணியெண்ணித்தானழுது

அன்றுவழுதுவவர் வரங்கள்வைக்கலுற்றார்
காந்தலிடியுங்கனத்தவலேச்சக்கரமும்
சூழ்ந்துகுத்தல்கண்டு சுறுண்டுமிகப்பேய்கைகள்
அய்யோசுவாமியடியார்க்குத்தந்தவரம்
வையோரறிய வைக்கிறோமென்றுரைத்தார்
உடனேவைகுண்டர் ருற்றநாராயணரும்
திடமுடனேபேயாடுரைக்கிறார்சீமானும்
அணியில்லாப்பேயே யன்றுதந்தவரத்திலொரு
மணியிருக்குதானல் மாறியென்னேடுரையும்
அப்போதுபேய்களெல்லோருந்தானழுது
இப்போதுநாழிகையுமில்லே மணிநேரமதும்
உம்முடையதர்மமுண்டதிறலெங்களையும்
தம்முடையகருணையுண்டால் லிப்பிழைப்போங்காண்
என்றுபேயுரைக்க எம்பெருமான்யேதுரைப்பார்
அன்றுநானுரைத்தவம் மூனுமாதம்வரை
பார்த்திருந்தேனே பசாசுகளேயுங்களுக்காய்
காத்திருந்தேனேயாண்டொன்றோர்கால்ப்வரையும்
யென்பேரில்குற்றமில்லே யென்றுசாக்ஷிவைத்து
உன்பேரில்குற்றமதா* லொடுக்கிறேனுங்களையும்
என்றுபேயோடுயிப்போவரம்மையுமென்றார்
அன்றுபேயெல்லா மறமெலிந்துதான்வாடி
என்னமுறைச்சொல்லி யிப்போவரம்வைக்கவென்று
வன்னப்பொருளேவகையாகச்சொல்லுமென்றார்
அந்தப்பொழுதிலேயா நாராயணரும்
இந்தப்பொழுதிலிம்மணிஇன்னேரமதில்
அய்யாவுமங்கையாகமத்தைதத்தான்பார்த்து
கைவாய்த்துதென்றுகழிவோடுரைபகர்வார்
திட்டிச்சயாணைச் சேர்ந்தவரங்கள்வைத்து
விட்டிருந்தசாவுபிளே சங்கிலிகள்தானும்வைத்து
மலேயேறியொக்கமாண்டு போவோமெனவே
விலேயாய்ப்பலகையிலே விரித்தடியுஞ்சத்தியமாய்
அய்யாவுரைத்தவாணைதவறுமல்
மெய்யாகப்பேய்கள்வரம் விளம்பிவைத்துதம்மானே
அய்யாணையையாணைத்திட்டிச்சவையாணை
மெய்யாணையெங்கள் மிக்கவரங்கள்வைத்தோம்
தந்தபிளேசாவு சங்கிலிகளானதுவும்
எந்தங்குலமுழுது மிப்போவரமும்வைத்து
அய்யாணைநாங்களருமலேகடானேறி
மெய்யாகவக்கினியில் விழுந்துசெத்துப்போவோமென
சொல்லிப்பேயெல்லாஞ் சுத்தவரமத்தனேயும்
பல்லுயிருமறியப்படித்து வரம்வைத்ததுவே
வைத்தவுடனே வைகுண்டர்முறைப்படியே
மெய்த்தபுகழ்சான்றோர் மெய்வாயுங்கையாலும்
ஆகாத்ததெல்லா மழித்திடுவாரெனவே

வந்தார்கள் தக்ஷணத்தில் வைகுண்டர்வாழ்பதியில்
கண்டுவைகுண்டரையுங் கரங்குவித்தேபணிந்து
பண்டுபெட்டபாட்டைப் பகர்ந்தாரவருடனே
கேட்டுவைகுண்டர் கிருபையுடனே துரைப்பார்
நாட்டுக்குடைய நாராயணர்பாலன்
பிறந்துவைகுண்டம் பெரியயுகமாள
துக்கக்களையறுத்துச் சுத்தமரையாளாக்கி
பக்கக்களையறுத்துப் பகைஞர்ரொன்றில்லாமல்
ஒருசொல்லுக்குள்ளே யுகமளித்துகமழிப்பீர்
இருசொல்லுக்குள்ளே பிராக்ஷியத்தேயாளுதற்கு
பிறந்துகொண்டிருக்கிறப் பெருமைக்கடையாளம்
இறந்ததுகாண்பேய்க ளிப்போது தந்திரமும்
போகநினைத்தேதன் பெரியதெய்வமுந்தனைத்தான்
வேகந்தனிலேவிடுத்ததுகாண் எந்தன்முனனே
நல்லதுகைவாய்த்து நமக்குவிதிதானுச்சு
பொல்லாததெல்லாம் போகவிதியாச்சு
உந்தன் துயரபொக்கயிப்போதீரவென்றால்
எந்தன்மொழிகேட்டிசைவீரே நீங்களெல்லாம்
அப்போதுமலையில் வாழுமலையரசன்
இப்போதுசுவாமி யென்னனீர்சொல்வீரே
யதுக்கெல்லாம்நாங்க ளல்லவென்றுசொல்லோங்காண்
பொதுக்கனக்கேட்டுப் புகல்வார்வைகுண்டருமே
மந்திரதந்திரமாமுனிவன்சாத்திரம்
உபாந்திரவாகடமும் முபாயச்சமூலமதும்
மாயக்கருவுமாறணு வித்தையதும்
உபாயக்கருவுமுயர்ந்தக்கருமோடிகளும்
சம்பனமுச்சாடனமுஞ்சல்லியம்பேதெனவும்
வம்புசெய்யுமாஞாலமந்திரமட்டகர்மம்
எட்டுமடக்கியிதுமுதலாய்மந்திரமும்
ஒக்கவைத்தோமென்றொருக்காயடக்கி
மிக்கயென்முன்னே மேதினியீரேளறிய
ஆணையிட்டுவைய்யு மறுமலையில்வாள்ரசர்
நாணமுட்டுப்போகுமுன்னே நம்முன்னேவையுமென்றார்
உடனேமலையரசன் ஒக்கமனதலைந்து
குடலேமருண்டு குறுகமுளிமுளித்து
வம்பறுக்கவந்த மாயக்கூத்தனென்னவே
தம்பிலங்களத்துத் தலைசாய்த்துடனயர்ந்து
மாட்டோமென்றேமானுல் மலைமிருகங்கேளாது
வீட்டைப்பித்தெறிந்து மிருகம்விலகாது
குடியிருப்புநமக்கு குன்றுமேலங்குமில்லை
படியீரேழளந்தபரமனம்மையிங்குவிட்டார்
அய்யாவுரைத்த வாணையில்வழிப்படியே
மெய்யாகவைத்து வீடுமட்டும்போயிருப்போம்
அல்லாதேபோனாலம்மலையிலிருப்புமில்லை

யெல்லாமறிந்து யெளிப்போவதுமரிது
யென்றுமலையரச ரெல்லோருஞ்சம்மதித்து
அன்றுவைப்போமென் றடிபணிந்துதெண்டனிட்டு
அய்யாவேயெங்களுட வாதிநாராயணரே
கையாரவைக்கக் கருவுகொண்டுவந்தோமில்லை
ஏடுகொண்டுவந்தோ மில்லையேயென்பரனே
வீடுவரைப்போயெடுத்து விரைவாகவாறோம்நாம்
யென்றுரைக்கமந்திரத்தோ ரெம்பெருமாளேதுரைப்பார்
நன்றதுதாரம் நம்முடையக்கைக்குளொரு
சூச்சமுண்டுபிள்ளாய் சொல்லக்கேளுநீங்களெல்லாம்
மாச்சல்படவேண்டாம் மலையரசாணீங்களெல்லாம்
எல்லாவிநத்தொழிலு மிந்திரமாஞாலமுதல்
எல்லாம்வைத்தோமென் றூணையிட்டால்போதும்
நல்லதுவேயென்று நாடிமலையரசன்
எல்லாவிதத்தொழிலும் மந்திரமாஞ்ஞாலம்
எல்லாமடக்கியிதுமுதலிப்போது வைத்தோமென்றூர்
அய்யாணையிட்டவர் முன்னேவைத்தார்காண்
மெய்யாணையிட்டப் பொழுதேமலையரசன்
எங்கள்பிழைப்பு யிப்போதேப்போச்சுதய்யா
தங்கடங்கலொன்று தானிருக்குதய்யாவே
அதினால்பிழைப்பு மென்றிருந்தோமித்தனைநாள்
விதியால்குறைந்ததுகாண் வித்தைப்பிழைப்புயெல்லாம்
மலையில்பயிரிட்டு வயிறுபிழைப்பதற்கு
உலவில்லாநொண்பலமு முலாவுமிருகச்சிறையும்
யில்லாமலிலக்கி யிப்போதரவேணும்
கல்லாப்பயிர்விளைந்து நாங்கள்பிழைக்கவேணும்
என்றுயிவருரக்க யிதுதந்தோமென்றுரைத்தார்
அன்றுவ்வரனுப்பியவர் மலைக்கேகுகையில்
வைத்ததொழிலை மலையரசர்நீங்களெல்லாம்
செயித்தத்தறியால்த் திரும்பியேசெய்ததுண்டால்
நரகமதுபிடித்து நாள்வழியேக்கொன்னுகொன்னு
துரோகமடைந்து தீநரகில்மாழ்வீர்கள்
என்றுசாபித்தார் ரெம்பெருமாளானவரும்
அன்றுவ்வர்கேட்டப் படியேவந்துதென்றுல்
சொன்னநரகில்ச் செத்திறந்துபோவோமென
றன்னப்பெருமான் முன்றூணையிட்டுப்போனார்
போனுருலகில்ப் பிச்சைவேண்டிக்குடித்து
வாரோரறிய மந்திரமாஞாலமற்று
மந்திரவித்தை மாமுனிவன்சாத்திரமும்
தந்திரமும்போச்சுதென்று சகலோருங்கொண்டாடி
வைகுண்டசாமி வாய்த்தக்கணக்கதிலெ
மெய்கொண்டவாறோர் மிகவறியத்தானெழுதி
பூலோகமும்மறியப் பெரியோரெனழுதினரெ

விருத்தம்

மாந்திரங்களிவுகூனு   மாறணக்கருவுகோழும்
உபாந்திரத்தீதுகேடு   ஒறியப்பொய்பொல்லாங்கு
ஏந்தியநினைவுபாசமிது   முதல்வினைகளெல்லாம்
சாந்தியிலெரித்து   நீத்தித்தர்மத்தைதவள்க்கலுற்றார்

நடை

நல்லநாராயணரும்   நாமமணிவைகுண்டராய்
செல்லத்திருவுளமாய்ச்   சீமைக்குறுதியுமாய
மனிதவதாரமெடுத்து   வைகுண்டவாசகனும்
பனிதவளும்பத்தினியாய்   பாலருடவங்கிஷத்தில்
உண்டாகிவாழ்ந்து   யுலகமறிவதற்கு
குண்டணிபேய்   பொய்யுங்குறளிகருவைத்தியமும்
ஆகாதெனவெரித்துப்   பிறப்புமறுத்து
வாகாகத்தர்மபதி   வாழுங்கோமானிடரே
என்றுசொல்லித்தர்மமெம்   பெருமாள்நினைத்து
மன்றுபதினுலறிய   வாய்த்ததர்மங்கூறினரே
இன்றுமுதலெல்லோரு   மிகாபராதஞ்சமென்று
ஒன்றுபோலெல்லோரு   மொருபுத்தியாயிருங்கோ
காணிக்கையிடாதுங்கோ   காவடிதூக்காதுங்கோ
வீணுக்குத்தேடுமுதல்   விறுதாவில்போடாதுங்கோ
வைகுண்டர்க்கேபதறி   வாழுவதல்லாமல்
பொய்கொண்டமற்றோர்க்குப்   புத்தியயர்ந்தஞ்சாதுங்கோ
அவனவன்தேடுமுதலவனவன்   வைத்தாண்டிடுங்கோ
எவனெவனுக்கும்   பதறியினிமலையவேண்டாமே
என்றுவைகுண்டராக்ஷியத்திலுள்ளோர்க்கு
கன்றுக்குமாதாவிரங்கிக்   கற்பித்ததுபோலுரைத்தார்
எல்லோருங்கேட்டு   யெங்கள்வினைதீர்ந்ததென்று
நல்லோர்கண்முன்னே   நவின்றிருந்தசொல்படியே
வருவார்வைகுண்டர்   வந்தாலிருப்பவர்க்கு
தருவார்கெதிகள்   சாகாதவாழ்வுகளும்
என்றுசொல்லிமுன்னோ   ரெங்கள்காலமதிலே
நன்றுதிருமொழியை   நாங்களுமேதான்கேள்க்க
எங்கள்கலிதீர்ந்ததம்பரனே   யென்றுசொல்லி
சங்கையுடனேபல   சாதியெல்லாமறிந்தார்
நருளறியத்தர்மமிதை   காட்டியேயெம்பெருமாள்
துரிதமுடனேதால்   புவியில்வாழுகின்ற
பக்ஷிபறவைகள்க்கும்   பலஜீவஜெந்துக்கள்க்கும்
அச்சுவரிமுதல்க்கு   மான்மிருகங்களுக்கும்
ஊர்வனங்களானதுக்கு   முதித்தபுற்பூண்டுகள்க்கும்
கார்சேடைறுகள்க்கும்   கறடுகல்லானதுக்கும்
உத்தரவாய்த்தர்மமுரைக்கிறாரன்போரே
மிருகமோடுமிருகமிகமகிழ்ந்து   வாழ்ந்திருங்கோ
மறுக்கலச்சலிட்டுமாளாமல்   வாழந்திருங்கோ

உங்களுக்குப்புலப்பூடுண்டு மதைப்போசித்து
சங்கையுடனோர்தலத்தில் தண்ணீர்குடித்திருங்கோ
வாழ்த்திருங்கோநீங்கள் வைகுண்டருண்டெனவே
தாழ்ந்திருங்கோவென்று தங்கள்கிளைபோலே
மிருகவினத்துக்கிதுவுரைத்துப்பக்ஷிகள்க்கு
உறுதியுடனேவுரைத்தார் வைகுண்டருமே
பக்ஷியெல்லாவினமும் பண்பாலொருவினம்போல
கக்ஷியுடனேகழிகூர்ந்து வாழ்ந்திருங்கோ
சிறிதுபெரிதுயென்று மிகச்சீறாமல்
உறுதிபெரிதுவுடையோரேதஞ்சமென்று
கூடாவிக்குலாவிக் குணமாய்மகிழ்ந்திருங்கோ
நாடியுரைத்தார் நல்லபக்ஷிதங்களுக்கு
புல்ப்பூடானதுக்கும் பொறுதிமிகவுரைத்து
கல்வாரிதனக்குங் கனத்தசேடன்றனக்கும்
தங்கள் தங்களுக்குத் தாழ்மைமிகவுரைத்து
மங்களமாகமனமகிழ்ந்து வைகுந்தருமே
நாட்டுக்குநம்முடைய நல்லதர்மத்தின்படியே
கூட்டுக்குயேத்த குருவுபதேசம்போலே
எய்யாமல்நாதனெவ்வோருந்தானறிய
செய்தர்மஞாயச் செய்திகேளும்நடுவே

விருத்தம்

அன்னீதத்தாலேலோகமவனியீரேழும்வாடி
குன்னியேக்கலியில்மூழ்கிக்குறுகியேயலைவர்கண்டு
கன்னிகள்மதலையானகர்ப்பகக்குலங்கள்தன்னில்
மன்னிகமனுப்போல்த்தோன்றிவளர்ந்துபின்னுதித்தார்தானே

விருத்தம்

உதித்தாயிரத்தெட்டாமாண்டிலுவரிசெந்தூரில்பெற்று
குதித்தண்டினில்மாசியில்த்தெக்ஷணக்குருநாட்டினில்
பதித்தாமரையூரில் பள்ளிதான்கொண்டநாளும்
விதித்தாமிதைதக்கருத்தாயருளுரைத்தாயறமுரைத்தாயே

விருத்தம்

பொய்யில்லைப்பசாசுயில்லைப்பில்லியின்வினைகளில்லை
நொய்யில்லைநோவுமில்லைநொன்பலத்துன்பமில்லை
தெய்யில்லையிறைகளில்லை சுறுட்டுமாஞாலமில்லை
மையில்லையுலகத்தோரே வாளுமோர்நினைவாலென்றார்

விருத்தம்

இத்தனையெல்லாமில்லையென்றரிகாதன்சொல்ல
புத்தியலறிந்துமன்னோர்புதுமையென்றன்பாய்கண்டு
முத்தியிலிவரைக்கண்டு மூயன்றவர்பேறுபெற்றார்
பத்தியில்லாதாரெல்லாம் பாளெனச்சொல்லிநின்றார்

விருத்தம்

மிப்படிமனுடரெல்லாமிவர்மொழித்தர்மங்கண்டு
ஒப்புடன்கூடிவந்து வொருவனைத்தஞ்சமென்று
செப்பிடத்துலையாதய்யர் சீர்பதம்பதமேயென்று
கற்புடன்மனுடரெல்லாம் நாடியேமகிழ்ந்திருந்தார்

விருத்தம்

நாடியேயுலகிலுள்ள நருளெல்லாமோர்தலத்தில்வந்து
கூடியேநிற்கும்போதுக்குரோணிதன்கொடியால்வந்த
சாடிகளினால்நீசன்சாறெதறியாமீறி
பாடியேவைகுண்டர்தம்மைப்படையேவிப்பிடிக்கவந்தான்

விருத்தம்

வந்தவன்சுசீந்திரந்தன்னில் வளைந்தவன்கூடாரமிட்டு
மந்திரிமாரைநோக்கி வகையெனப்புகல்வானீசன்
இந்தமானிலத்திலென்றோடெதிரிதானாரோசொல்வீர்
விந்தயராயவரைச்சென்று விருதிட்டுவருகவென்றான்.

நடை

நாடுங்குரோணி நாதவழியாய்ப்பிறந்த
மூடமடைந்த முனுநீசமாபாவி
இருந்தநகர்விட் டெழுந்திருந்துதானேகி
வருந்துபடையோடு வந்தான்சுசீந்திரத்தில்
ஆனைத்திரள்கோடி யதிகப்பரிகோடி
சேனைத்திரள்கோடி சென்றான்சுசீந்திரத்தில்
சேவுகக்காரர் திலுக்கர்துலுக்கருடன்
ராவுத்தர்கோடி ராக்கதர்கள்முக்கோடி
சாடன்காடன் செவுனிகெவுனியுடன்
மாடனுடனே மூர்க்கர்முழுமூடர்
படைகள்ளலங்கரித்து பாரவெடிதீர்த்து
கொடிகள்ளலங்கரித்து குடைகள்மிகப்பிடித்து
வாழ்க்காறர்கோடி வல்லயக்காறர்கோடி
தோழ்க்காறர்கோடி சூண்டிக்காரர்கோடி
அம்புக்காறர்கோடி யாயுதக்காறர்கோடி
வம்புக்காறர்கோடி வந்தாரவன்கூட
வெடிக்காறர்கோடி வேல்க்காறர்கோடி
அடிக்காறர்கோடி வந்தாரவன்கூட
இத்தனையாற பாரத்துடனீசன்
தத்தியுடநடந்து தமுக்குமிகவடித்து
வந்துகூடாரமிட்டான் சுசீந்திரத்தில்
தந்துதந்தாகத் தங்கள்மிகக்கூடி
கொந்துகொந்தாக கொடும்படைகள்கூடிவர
மந்திரிமாரோடு வந்திருந்தேதுசொல்வான்
கேளாய்நீமந்திரியே கிருபையுடனோர்வசனம்
வாழாலப்பெரிய மன்னர்கடன்னுள்முதலாய்

நமக்காயிருந்தது காணும் முசாடையனாளையிலே
துடுக்கான வெள்ளை நசுறாணியவன் றனக்காய்
ஆச்சுதே நாடு யவனுக்கேயாகிடினும்
பேச்சுநாமல்லால் பின்னொருவர் காணாதே
ஆனதால்ப்பூமியிலே யாதொருவரானாலும்
மானமறவே நமக்கு மாத்தானாய்க் கண்டதுண்டால்
ஆய்ந்துவிசாரித்தறிவித்துச் சொல்லுமென்றான்
தேர்ந்துநின்ற மந்திரியு நீசக்குலமதினால்
பொல்லாதசூத்திரப் பிசாசுக்குலமானதினால்
கல்லா தான்கூடிக்கண்டு தேர்ந்தே துரைப்பான்
வேறொருவரையும் மேதினியில் நாங்காணோம்
வாறோர் ஞாயமாற்றம் வையகத்தில் காணுது காண்
நமக்குயிறையிறுத்து நாடேழியங்கள் செய்யும்
குழுக்காயினம்பெருத்த கூண்டசாணாரின்த்தில்
வைகுண்டமாகவந்து பிறந்தோமென்று
மெய்கொண்டபூமியெல்லாம் வேறொருவராழாமல்
நாந்தான் முடிசூடி நாடுகட்டியாள்வோமென
தான்தானுரை பகர்ந்து சாதிபலதும்வருத்தி
ஒருதலத்திலூட்டு வித்தானுற்றநேரானதையும்
அருகிருக்குஞ்சாணார்க் கதிகவிதித்தானுது காண்
ஆகாத்தபொல்லாரை யழித்துப்போடுவேனென்றும்
சாகாவரங்கள் சாணார்க்கீவேனென்றும்
சொல்லியிருக்கிறான் சுவாமிவைகுண்டமென்று
தொல்லுலகிலிந்தச் சொல்கேள்க்குராசாவே
என்றவன் மந்திரிக ளித்தனையுஞ் சொன்னவுடன்
ஒன்றுமுறையாடா துழுக்கார்ந்தயர்ந்துரைப்பான்
ஏதுகாண் மாயமிது ஞாயம்வந்ததென்ன
வாதுக்கொருவர் வருவாரைக்காணோமென்று
நினைத்ததற்கோயிந்த நெருசொல்வந்தது காண்
மனதயர்ந்துபார்த்து மந்திரியைத்தானோக்கி
ஏதுகாரணமந்திரியே எல்லாரிலும்மெழியா
சாதியிலேயுள்ளவன்றான் சாற்றுவேனோயிந்தமொழி
ஏதோவொருசூச்ச மிருக்குது காணிம்மொழியில்
ஆராய்ந்துபார்ப்போ மல்லோருங்கூடிருந்து
என்றந்தப்பேர்க ளெல்லோருஞ்சம்மதித்து
அன்றந்தசாஸ்திரியை யவன்வருத்திக்கேள்க்கலுற்றான்
சாஸ்திரியேயிந்தத் தர்மராச்சியந்தனிலே
வேற்றொருவரெந்தனுக்கு வீறிட்டதுண்டோ காண்
எதிரியுண்டப்பா ரென்னுடைய சாத்திரியே
கருதிமிகப்பார்த்து கடியசாஸ்திரிப்புகல்வான்
தர்மமுடிவேந்தே சாற்றகேளுமரசே
கர்மக்கலிதோசங்கமண்டலங்களெல்வரையும்
சுற்றிப்பார்ந்தது காண் டேசத்தலப்பூமியெல்லாம்
கர்த்தனரிகிஷ்ணர் கடியகோபம்வெகுண்டு

பூமியிலேவந்து பிறந்ததிந்தநேரமதை
சுவாமிதர்மத்தாலே தோஷமதையழித்து
நல்ப்பூமியாக்கி நாடெங்குமோர்குடைக்குள்
சொல்லொன்றுக்குள்ளாள சுவாமிமகாவிட்டுணுவும்
மனுவாய்ப்பிறந்து வைகுண்டமென்றுசொல்லி
தனுவையடக்கித் தவசிமிகயிருந்து
நல்லோரையெல்லாம் நாடிமிகயெடுத்து
வல்லோராச்சாகாமல் வரங்கள்மிகக்கொடுத்து
ஆளவருவாரவர் வருகும்நாளிதுகாண்
என்றுமிகச்சோதிரியு மிந்தக்குறியுரைக்க
நன்றுநன்றென்று ராஜன்மிகமகிழ்ந்து
சொல்லக்கேள்சோதிரிய சொன்னதெல்லாஞ்சரிதான்
எல்லையுண்டோவவர் வந்திருக்குமினங்களென்ன
சொல்லினிதீ சுத்தமுள்ளசோதிரியே
நல்லியல்புபெற்ற நற்குறியோனுரைப்பான்
இன்னவகைசாதியிலே யிவர்வருவாரெனவே
சொன்னக்குறியைத் தியக்குதுகாணென்மனங்கள்
தர்மங்கொடுசுவாமி தாரணியில்வந்ததினால்
பொர்மைக்குலமாயிருக்கும் பெரியவழியாயிருக்கும்
நம்மாலேச்சொல்லி நவிலக்கூடாதிதுவே
சும்மாவெலைநீங்கள் ஜோலிபண்ணவேண்டாமே
எந்தந்தசோதிரியு மிணங்கிவணங்கிநின்றான்
மன்றுதனையாளுமன்னன் மறுத்தேதுபுகல்வான்
அப்படித்தானாலாதிமகாவிட்டுணுவும்
இப்படியேவந்திவர் பிறக்கவேணுமென்றால்
போத்தி-நம்பூரி பிராமணசூத்திரகுலத்தில்
பிறக்காமலிந்தப் பிறந்திண்டாச்சாண்குலத்தில்
பிறக்கவருவாரோ பெரியநாராயணரும்
சும்மாயிந்தச்சாணுன் சுவாயெனசமைந்ததெல்லாம்
பம்மாத்தாய்க்காணுதுப் பராக்கிரமமந்திரியே
இப்போதொருநொடியில் யிந்தச்சாணுன்றனையும்
மெய்யாகக்கொண்டுவிட வேணுமெந்தன்முன்னே
என்றுமந்திரிமாரை யேவுந்தறுவாயில்
அன்றுவருகின்ந்தா யிடையர்தன்வழியில்
ஒருவனெழுந்திருந் துற்றராசனைநோக்கி
கருதனைப்போல் புத்திகர்ப்பித்தானம்மானை

விருத்தம்

கேட்டீரோமுன்னுளுள்ள கெறுவிதவளங்களெல்லசம்
தாட்டிமையாகச்சொல்வென்றமியேனும்வணங்கிநின்று
பூட்டியேமனதில்வைத்து புத்தியென்றெண்ணிநீரும்
நாட்டினில்நன்மைசெய்து நலமுடனரசுசெய்யும்

விருத்தம்

மாயனேவாயத்தாலே மனுவதுபோலேயாகி
ஆயனர்க்குலமுந்தோன்றி யவனியிலிருப்பென்கண்டீர்

மாயத்தையறியாநீரு மாளவேபோகவேண்டாம்
ஞாயமாயுரைத்தேனைய நம்முடைவரசுக்கேகும்

விருத்தம்

எழிமையாங்குலங்களென்று வெண்ணுறமனுவேயல்ல
பழிரெனவதியாதன் பார்க்கவேமாட்டாரையா
அழிவதுயுகத்துக்காச்சு வானதால்வருவார்இஷ்டம்
வழியிதுயில்லையய்யா மாறியேபோவோம்வாரும்

விருத்தம்

தெசதாவன்மகவாய்மாயோன் சீமையில்வந்துதோன்றி
புசமுடப்பிறப்போர்கூடப் பிறந்ததுங்கேட்டிலீரோ
வசையுடன்மனுத்தானென்று வாஇட்டவரக்கன்தன்னை
சிரசையுடனறுத்தசெய்தி விளம்பியுங்கேட்டிலீரோ

விருத்தம்

தெய்வதிவயிற்றிலுற்று ஸ்ரீகிருஷ்ணனெனவேதோன்றி
வைவசுதேவன்பெற்ற மனுவெனவளங்கள்நாட்டி
நெய்பிடைவழியில்ச் சேர்ந்துநெருட்டிடுமாஞாலஞ்செய்து
செய்வதர்கஞ்சன்றன்னை ஜெயித்ததுக்கேட்டிலீரோ

விருத்தம்

ஐவர்க்குதூதனாகி யங்குமிங்கோடிச்சென்று
மைகுளல்சிலர்கள்தன்னை மணங்களுமிகவேசெய்து
மெய்ப்புடன்கிளைகளோடு மேவியேகுளாங்கள்செய்து
செய்திரியோதனனைக்கொன்ன செய்தியுங்கேட்டிலீரோ

விருத்தம்

இப்படிமாயன்முனு மிருமூன்றுகங்கடன்னில்
ஒப்புடன்மனுப்போல்த் தோன்றியுவமைகள்பலதுஞ்செய்து
அப்படியுகங்கடன்னுல்லழிந்திடா வரங்கள்பெற்ற
செப்பிடக்கூடாமாயன் செய்தியுங்கேட்டிலீரோ

விருத்தம்

சாணெனக்குலத்தின்மாயன் சார்வரோவென்றெண்ண வேண்டாம்
பாணனாய்த்தோன்றிநிற்பார் பறையனாய்த்தோன்றிநிற்பார்
தூணெனத்தோன்றிநிற்பார்த் தோலனாய்த்தோன்றிநிற்பார்
ஆணெனத்தோன்றிநிற்பார் ரவருக்கேட்டிலீரோ

விருத்தம்

குகவனின்குலத்தில்வந்தார் குறவனின்குலத்தில்வந்தார்
ம்சவெனக்குலத்தில்வந்தார் மாடெனக்குலத்தில்வந்தார்
விசுவெனக்குலத்தில்வந்தார் வேடனின்குலத்தில்வந்தார்
அசுவெனக்குலத்தில்வந்தார் ரவருருகேட்டிலீரோ

விருத்தம்

எவ்விடந்தானும்மேவி யிருப்பவர்க்கெந்தச்சாதி
அவ்விடமாகாதென் றவர்தள்ளமாட்டாரையா
செவ்விடமாலோனா கூச்சஞ்செப்பிடத்துணையாதய்யா
இவ்விடம்விட்டுநாம மேகுவோநம்முமெனறான்

விருத்தம்

என்றவன்சொன்னபோது யிராசனுமிகவேக்கேட்டு
பொன்னுறவனையினாலே புத்தியிலறியாவண்ணம
மன்றலத்தோர்க்குயேர்க்கா வார்த்தையையுரைத்தாயென்று
சொன்றவன்றன்னைபோடுங் கோபமெய்வுரைத்தானீசன்

விருத்தம்

வேதமாங்கலைகடேர்ந்த மேல்க்குலமதிலேமாயன்
சீதமாய்ப்பறவாவண்ணஞ் சிறுகுலம்புக்குவாரோ
ஆரடாவிந்தவார்த்தை யார்க்குமேர்க்காபோடா
பாதகாயெனக்குப்புத்தி பகாவேவந்தாய்மோடா

விருத்தம்

நித்தமுன்னாலேலெக்ஷம் நேடியபொன்களிட்டு
சத்திரசாலைதோறும் தர்மமுமழித்துகாமள்
சித்திரதிருநாள்நித்தஞ் செய்கிறகுலத்தைதள்ளி
நித்தியம்வேலைசெய்யமெழில்குலம்புக்குவாரே

விருத்தம்

பிரமனையொப்பாஞ்சாதி பிராம்மணக்குலத்தைத்தள்ளி
சிராமனுமற்றோர்தன்னில்ச் சேர்வதுதிடமேயில்லை
வராகமாயுதித்தமாயன மனுவெனப்பிறக்கமாட்டார்
ஏதடாயிந்தவார்த்தை யெணமுன்னேசொல்லிநின்றாய்

விருத்தம்

காரணமானமாயன் கலியுகம்வருமென்றெண்ணி
நாரணன்பயந்துவோடி நல்மலையேறிமாறாய்
வாரணநாதவம்பால் வல் வடனைய்துசெத்து
தாரணிவாறேறென்று த வலோகஞ்சேர்ந்தார்மாயன்

விருத்தம்

அப்படிக்கொத்தமாயன் னவனியில்மனுப்போல்வாருன
அப்படியிவன்றான்சொன்ன இகழ்ச்சியையெங்கேகண்டோம்
கடப்பிடிச்சானன்கையில்க் கைக்கூலிவேண்டிக்கொண்டு
இப்படிமழுப்பவந்தா யேதடாசெய்திடென்றான

விருத்தம்

மழுப்பில்லைக்கேளுங்கேளு மாண்டுநான்போறேலனா
வழுப்பில்லையுமக்குத்தூண்டல் வளருதுவவரிடமேகண்டாய்
கழுத இலையுனதுமைய ல்க் கத்தி வாங்கவைபபாய
முழுக் இல்லையானுலெ ந்தன்மேல் வி சையறிந்துதாறேன்

விருத்தம்

ஆனையும்படையுமுந்தன் அரண்மனைக்கோவில்க்காலும்
சேனையும்குடையும்வியாள செல்வமும்சிறப்புயெல்லாம
ஏனமுமிகவேதோத்து மெரிந்துநீகரிந்துசாவசய்
ஈனிதைச்சொல்லவில்லை நாரணருரைத்தாரெனருன்

விருத்தம்

என்றிவன்சொன்னபோது யேங்கியேவுளறிப்பின்னும்
பான்றுறவகைழிைேல புத்தியிலறியாவண்ணம்
கொண்டிவன்தன்னைப்போடுங் கொடுவிலங்கதிலேசிங்கத்
தண்டிகைமெடுத்துவாருஞ் சாணெனச்சாமிப்பார்க்க

விருத்தம்

பார்க்கவேபோவோமென்று பார்முடிவேந்தன்சொல்ல
தார்கெனபாவிநீச்சறடனு மேதோசொல்வான்
ஆர்க்கிதுயேர்க்குஞ்சாணு னவனிடம்போவதென்ன
கார்க்கெதிகெவிடசாஸ்திரி கடிகனையனுப்புமென்ருன்

விருத்தம்

அனுப்புமென்றுரைக்கும்போது வாசனுமேமதோஇசால்வான்
துனுபபுடன்சாணுன்றன்னைச் சூழ்ந்துநால்க்கயத்தால்கட்டி
களிப்புடனமதுமுனனே கட்டுடனகொண்டுவாரும்
வனுப்புடன்போவாயென்று வரிசையுங்கொடுத்தானீசன

விருத்தம்

கொடுத்திடும்வரிசைதன்னைக் குவித்தவன்வேண்டிககொண்டு
கடுத்தமாய்க்கெவுடசாஸ்திரி கடுமபடைக்கோலமிட்டு
தடுத்திடுமவீரர்தன்னை தானிங்கேவாருமென்று
நடுத்தரமதிலேநின்று நல்லணிவகுக்கலுற்றுன

விருத்தம்

பரிநடைக்காரர்தன்னைப் பக்கமுமுன்னேவிடடான்
கரிநடைக்காரர்தன்னைக் காவலராய் முன்னேவிட்டான்
சரிபரியேறிக்கௌட கௌடசாஸ்திரிமுன்னேநின்று
வரிபடைக்கவசம்போர்த்து வந்தனன்படைக்குமுன்னே

விருத்தம்

அம்பெடுத்தெய்வே னென்றவனொருவணிகள்சாட
கடபெடுத்தடிப்பேனென்னைக் காலசனமிகவேசாட
கோயபெடுத்துதைபபேனென குஞ்சரத்தலை ராட
புமபடக்கொல்வேனென்னைப் போயினன்கவுடன்ருனே

நடை

இந்தநேரத்தனிலே [illegible] ந்தசாணுனை
குந்தமதுகொண்டிடித்துக் குண்டிசுறறிக்கயிறிறுக்கி
இக[illegible]கொடுவா[illegible]றெமு[illegible]ன்றுகௌ னுமே

துங்கவிருதுபெற்றுச் சூழ்படைவகுத்து
ஆயுதமம்புமணியீட்டி தான்பிடித்து
வாயுதக்கணைகள் வகைவகையாயெடுத்து
பரியைவிதானமிட்டுப் பாய்ந்துகொண்டனுமே
கரியைச்சூழமிறுத்தி கனபடைகள்பின்னிறுத்தி
நீசன்விடைவேண்டி நீனிலமுமறிய
பாசக்கயிறுடனே பாவியந்தக்கொண்டன்
வாறவிதமனைதயும் ஐந்தப்பொருழறிந்து
கறணிக்கமென்று கருத்திலிமிகநினைந்து
இப்போபதறி யெழுந்திருந்தோடவென்று
அப்போதுமாய னறிந்தேகும்வேளையிலே
நன்மையாய்ச்சொல்லி நாடுவதுமெச்சாதி
தின்மையாய்ச்சொல்லிச் சிறிப்பதுவுமெச்சாதி
என்றுநாம்பார்ப்போ மென்றுமனதிலுற்று
பண்டுநாம்பிறந்த பால்க்கடலைநோக்கி
ஓடத்துணிந்தாரொரு வேசமும்போட்டு
ஆடத்துணிந்தா ராகாசத்தேதேவர்
ஆடையணியாமல் லரைக்கயிறுமில்லாமல்
நாடைக்கெணியாமல் நடந்தார்கடல்நோக்கி
நல்லமனுச்சாதி நாராயணாவெனவே
செல்லமக்களெல்லாஞ் சிவசிவாவென்றுசொல்லி
கூடத்துடர்ந்துக் குபித்துப்பதம்போற்றி
தேடரியநல்லோர் சேவித்துபின்வரவே
ஆகாதநீசவளியாயச்சாதியெல்லாம்
வாயாரப்பேசி வம்புரைத்தேநகைத்தார்
பதறியிவன்போறான் படைவருகுதென்றுசொல்லி
கதறிமிகவோடுகிறான் கள்ளசுவாமியிவனும்
சுவாமியென்றால்நருள்குத் தோற்றுமிகவோடுவானோ
நமேமனைநம்பி நடந்ததுவும்வீணாச்சே
பேயனுடபேச்சைப் பிறமாணமாய்க்கேட்டு
ஞாயமதுகெட்டோம் நாமெல்லாமொன்றுசொல்லி
நீசகுலத்தோர் நெடுந்தூரம்வைதார்காண்
தேசமதையாளுஞ்செல்ல வைந்தர்சூச்சமதை
அறியாமல்நீசரெல்லாம் அப்பொன்னறியைமறந்து
வெறிகொண்டபேயனென மேதினியில்பேசினர்காண்
நல்லமனுவோர் நாரணத்தஞ்சமென
செல்லமனுவோர் திருப்பாதமுந்தொழுது
கூடிநடந்தார் குருவேகுணவேயென
நாடிநடந்தார் நல்லபதியேற்றவரென
கண்டுகொள்வோமென்று காட்சையுடநடந்தார்
பண்டருள்பெற்ற பச்சமாலுடநடந்தார்
அப்போவைகுண்டத்தா சாமியுமகிழ்ந்து
இப்போதும்வாள்வாரெனக் கான்மக்களெல்லாம்
வம்புரைத்தநீசனை முழுதுஞ்செத்திறந்து

முன்புவிதியால் முழுநாக்மேவிழுவார்
என்றுமிகச்சாபித்தெம் பெருமாடானடந்து
பண்டுபிறந்தப்பால்க் கடலுள்ச்சென்றனரே

விருத்தம்

சென்றவர்தேவரோடுச் செகல்க்கரைதனிலேநின்று
நன்றினந்தன்னைப்பார்த்து நவிலுவார்வைந்தராசர்
பண்டெனைப்பெற்றதாதா பால்கடலுள்ளேயென்னை
சென்றிடவிளக்கார்நீங்கள் செகல்க்கரைதனிலேநில்லும்

விருத்தம்

நில்லுமென்றித்தை யெல்லாம்நிறுத்தியேகடலிலுள்ளே
பல்லுயிர்யாவும்வாழப் பரமனுமங்கேசெல்ல
வெல்லமர்தேவரெல்லாம் மேகனிலக்குடைகள்போட
வல்லவன்தகப்பன்பாதம் வணங்கியேவைந்தர்சொல்வார்

விருத்தம்

அப்பனேவொப்பில்லாத யலைகடல்துயின்றமாயா
செப்பவுந்துலையாநாமஞ் சீமையில்விளங்கபெற்றாய்
தப்பாவில்லாயெந்தன் தகப்பனேகேள்மோவையா
எப்போனுன்விளங்கியுந்தனிரத்தின சிம்மாசனத்திலேறுவன்

விருத்தம்

ஆண்டிரண்டாச்சே மாதமாயிருபதிலாச்சே
வேண்டுதலின்னங்காணேன் வெம்புறேன்கலியுள்மூள்கி
கூண்டுநீர்முன்னே சொல்லிக்குருபதேசம்வைத்த
ஆண்டினம்வருகிலேயோ வப்பனேமெய்யுள்ளோனே

விருத்தம்

இப்படிமகன்றான்சொல்ல விருகையாஸ்மகனையாவி
முப்படித்தவத்தால்வந்த முதவெனத்தளுவிக்கூர்ந்து
எப்படியென்றேநீயு மேங்கவேவேண்டாமப்பா
ஒப்பிலாசிங்காசனம் முனக்கெனவளருதப்பா

விருத்தம்

ஏங்கிப்பதறவேண்டாமே மெனாதுமகனேநீகேளு
ஓங்கிக்கலியைவிட்டகன்று முழித்துக்குதித்துவுதித்தன்று
தாங்கியுனைநான்வந்தெடுத்துத் தனதுதாயையிடம்நிறுத்தி
பாங்கிலுதித்தமகனுனக்குப் பட்டந்தரிப்பேன்பதறாதே

விருத்தம்

வண்ணப்பதியினலங்காரம் வைகைகளின்னதென்றுசொல்லி
யெண்ணத்தொலைமாதென்மகனே ரதினசிங்காசனப்பவிசு
கண்ணைப்பறித்துநீசனுட கருவையறுத்துக்கலியழித்து
எண்ணும்வளரவாழவைப்பே னெண்ணுணையிதுவேநிசமகனே

விருத்தம்

மண்ணிலுள்ளோர் தாமறிய மனுவோர்சிவசந்தறிய
கண்ணிலிவர்கள்கண்காணக் கலியில்காச்சிமிகநடத்தி
புண்ணில்க்கருதுப்பட்டாப்போல் பொல்லாநீசன்கண்டுளைந்து
யெண்ணியறியாநீசனல்லா மேங்கிமாளவைப்பேனே

விருத்தம்

மகனேநீயுந்தவமிருக்கும் வாய்த்தயிடத்திலிப்போசென்றால்
உகமேற்றியக்லி நீசனோடிவந்துவுனைப்பிடித்து
இகமேளறியவுன்கையைத் திறுக்கிப்பின்னேகெட்டிறுக்கி
பகைமைசெய்துமிக வடித்துப்பாரவிலங்கில்வைப்பானே

விருத்தம்

வைப்பான்மூன்றேமுக்கால்மாதம் வாய்த்தவிலங்கில்நீயிருந்து
செயிப்பாய்கலியை யறுப்பதற்க்குரிச்சணமேமக்குக்கைவாச்சு
பொய்ப்பாரென்பான்பின்னும்மவன்பெரிய குற்றமேர்ப்பதற்கு
மெய்ப்பாயவனுமுரைத்ததுபோல் மெள்ளவுரைத்துயிருந்திடுநீ

விருத்தம்

மனுவையடித்ததுபோலே வசைகள்சொல்லிமிகவடிப்பான்
தனுவைவிட்டக்கிக்கொண்டிருநீ சற்றும்புதுமைகாட்டாமல்
இனிமேலறிவாயென்றுசொல்லியெண்ணிமனதிலெனைநினைந்து
களிபோலமகிழ்ந்துநீயிரு நீக்கண்ணேயெனதுகற்பகமே

விருத்தம்

அன்பாயுன்னையடுத்திருந்த வாதிச்சாதியவ்வினர்க்கு
தன்பாலருஞ்சாதிகள்க்குத் தலத்துக்குறுதிதான்கொடுத்து
யென்பால்கடலின்கரைதனிலேயேழுமணிக்குவிடைகொடுத்து
பின்பாலவரையருகழைத்துப் புசத்திலடுக்கயிருந்திடுநீ

விருத்தம்

கண்டாய்கண்டாயுடன் புதுமைகண்ணேயுனக்குநற்காலம்
கொண்டாய்கொண்டாய் பத்தறையில்க் கோவில்க்காலுஞ்சி
[வாலையமும்
தண்டாயுதத்தால் வாகனமுஞ்சத்திமாதிரிருபுறமும்
பண்டோர்காச்சியுனக்குள்ளே பண்பாயிக்காணுமென்மகனே

விருத்தம்

காச்சிச்சிறப்புக்கலியாணங்கவரி வீசிக்கொலுவசரம்
காச்சிக்கணைக்குமுன்வருந்திச் சந்திரவர்ணக்கொடிநிறுத்தி
வாச்சியுலக்குத்திருநாளும் வாய்த்தடம்மானம்முளங்க
காச்சியுனதுமுன்காணுங்கருணைன் மகனேகலங்காதே

விருத்தம்

பல்லக்கேறித்தெருவீதிப் பலைத்தேருநடத்தி
செல்லப்பதிகள்மிகமுகித்துத்திருநாள் கண்டுமகிழ்ந்திருநீ

வல்லக்கொடிகள்மரம்கிறுத்தி வருவர்ய்கித்தவாகனத்தில்
பொல்லாக்கலியன்கண்டுளேந்து பொடிவானித்தமடிவானே

விருத்தம்

இப்படிசிறப்பதெல்லாம் உனக்கென்மகனே மென்மேலும்
எப்படிமலங்கி எண்ணுேடிதுரைத் தேதுபிள்ளாய்
சொல்ப்படியெல்லாம் அந்ததெய்தியில் தோணுங்கண்டாய்
அப்போகிவறிந்து கொள் அப்பனும் நீதாஞமே.

நடை

சிமைகருளறிமத் தேசந்தனிலாண்டு
தாழ்மைபொறுதியுடன் சாணுர்விருந்தழைந்து
மனுக்கள்முறைறபோலே வாழ்வாம்புவிதனிலே
தனுக்களுனக்குள்ளே சறுவதுமேயடங்கும்
எல்லாமடக்கி யானுன்னிடமிருந்து
நல்லோனேயுனக்கு நாட்டில்சிறப்புமெத்த
காணுமகனே கலிநீசன்கண்ணுமுன்னே
ஆணும்பெண்ணுேடு மன்புற்றிருக்கையிலெ
நல்லத்திருவாளி நர்பட்டுவாகனத்தில்
செல்லத்திருவோடுஞ் செம்பவிளமாலேயுடன்
வாகனத்தேறும் வருமாஞாலத்திருந்து
காணுவோர்காண்பார் காணுதார்வீணுவார்
தாணுவேநீயொருவன் தாஞகவாண்டிருப்பாய்
இன்னம்பவுசு மெண்ணத்துலேந்திடுமோ
வன்னமகனே வாறதெல்லாங்கண்டிருநீ
பதருதேபோயிருநீ பாாத்தவசியிலெ
குதருதேபோயிருநீ கூண்டத்தவமதிலே
வாறநீசன்றனக்கு மலங்காதே நின்றுகொள்ளு
போறநீசன்றனக்கு பொறுமையாய் நின்றுகொள்ளு
என்றுமகன்றனேயு மெழுந்திருந்துபோனீயென
மன்றுதனேயழுந்தோர் மகனேக்கடல்கடத்தி
கரையிலேகொண்டு கண்ணருடனுரைந்தார்
பிதாவையனுப்பிப் பெரியவைகுண்டபொருள்
விதானித்துவுச்சரித்து வேதவுல்லாசமிட்டு
தெச்சணுபூமி சென்றதவத்ததிலே
உச்சரித்துநாதனுகந்து நடக்கலுற்றுர்
நடந்தாரெதெக்ஷணத்தி நல்லமுனியுடனே
படந்தார்மார்பன் பண்டுதவமிருந்து
தலத்திலேவந்து சுவாமிதவமிருந்தார்

விருத்தம்

இருந்தனர்விஞ்சைபெற்று யிருபுறமுனிகள்சூழ
பொருந்திடுங்கமலமாது பூரணமதுவாய்நிற்க
கரிந்திடும்நீசப்பாவி கயிறுவாள்வெடிகள்சூலம்
புரிந்தவன்கோட்டிசெய்து பிடிக்கவே வந்தானங்கே

விருத்தம்

வருமுன்னே யருகில்நின்ற மக்களைவைந்தாசர்
கருதினமாகநோக்கிக் கூடக்கவேநில்லும்நீங்கள்
பொருதிடநீசன்வாறான் பொறுத்துநான்வந்தபோது
அருகிலேயுங்கள் தன்னையழைத்து நாங்கொள்வோமென்றார்

நடை

இப்போதுநீசனிங் கோடிவாறான்காண்
மெய்யப்பானமக்களெல்லாம் விலகிநின்றுவந்திடுங்கோ
செய்கிறதைப்பார்த்து திரும்பியிங்கேவந்தவுடன்
கையருகிலுங்களையுங் கூட்டாய்வரவழைப்போம்.
என்றுமக்களுக்கு யியம்பவவர்விலக
முன்றுசெய்யாப்பாவி முடுகுங்கெவுடனுமே
கூட்டப்படையோடு கொக்கரித்தேதுடியாய்
சாட்டைவெறிபோலே சாடிவந்தான்கெவுடன்
சூழப்படையைச் சுதானமாநிறுத்தி
வேழம்பலரேவிவெடி யர்யுதத்துடனே
வந்துவளைந்தான் வைகுண்டர்வாழ்பதியில்
சிந்துக்குயிரான ஸ்ரீபல்பனைபருமே
கவிழ்ந்துபதிவாசலிலே கட்டிலின்மேலிருக்க
அவிழ்ந்ததுணியோடவரிருக்குமுபாயமதை
அறியாமல்நீசனணி வகுத்துத்தன்படையை
குறியாய்ப்பிடிக்கக் கூட்டமதில்நுழைந்து
சாணாரினங்கள் சதாகோடிகண்டுழைந்து
வாணாள்வதைப்பாரே வென்றுமனதுழைந்து
குதிரைமேலேறிக் கொடுஞ்சகட்டையால்வீசி
சதிருசதிராய்ச் சாணாரைத்தானடித்து
அடிபட்டபோது வவர்கள்மிகக்கொக்கரித்து
முடிபடவேயிந்தமுழுநீசலம்பிசத்தை
இப்போதொருநொடியி லிவரையெல்லாமடித்து
மெய்ப்பாகக்கொன்று விடுவோமெனச்சினத்தார்
ஆழுக்கொருவனைவாறே நீசனெல்லாம்
தூழுபோலாக்கவென்று துடியாயெழுந்திருந்தார்
சான்றோர்சினத்துத் தாறுமிகப்பாய்த்து
ஆன்றோரைநெஞ்சில் வைத்தாடைமிகயிறுக்கி
உடையிறுக்கிக்கெட்டி வல்லாசத்தைத்தொங்கவிட்டு
படைத்திராளாச்சான்றோர் பண்பாய்வொருமுகமாய்
யெதுத்துநிற்கும்போது யெம்பெருமாள்தானறிந்து
பொதுக்கென்றகோபமதைப் புத்திதனிலடக்கி
பொறுத்திருந்தவரெ பெரியோரேயாகுமக்காள்
அறுத்திடவென்றால் லபூருவமோயெந்தனக்கு
வம்புசெய்வதைப்பார்த்து வதைக்கவந்தேகுலத்தை
அன்புகுடிகொண்ட வதிகமக்காளீங்களெல்லாம்
பொறுத்துயிருங்கோ பூலோகமாளவைப்பேன்

மறுத்துரையாடாமல் மக்களென்றசான்றோர்கள்
என்னசெய்வோமென் றிவர்கையைத்தான்கடித்து
பின்னைவிலகிப் பெரியவனையென்றுநினைனார்
நீசன்மகிழ்ந்து மெதிர்ப்பாரைக்காணோமென்று
பாசக்கயிறுகொண்டுபரமன் வைகுண்டரையும்
கட்டியிருக்கிக் கைவெடியாலிடித்து
கெட்டியிறுக்கி கீழேபோட்டேமிதித்து
தலைமுடியைத்தான்பிடித்துத் தாறுமாறாயிழுத்து
குலையைக்குலைத்ததுபோல் குண்டரைத்தாலைத்து
குண்டியிலேகுத்திக் குனியவிடுவானொருத்தன்
நொண்டியோவென்று நெழியிலேகுத்திடுவான்
வெடிப்புடங்கால்சுவாமி மேலெல்லாம்தானிடித்து
அடிப்புடங்குகொண்டு வடித்தடித்துத்தானிழுப்பான்
சாணாருக்காகச்சமைந்தாயே சுவாமியென்று
வாணாளைவைப்போமோ மண்டிப்பதனிக்காரு
பனையேறிச்சுபாவம் பட்டுதில்லையென்றுசொல்லி
அனைவோரையும்வருத்தி யாபரணந்தேடவென்றோ
சமைந்தாய்சுவாமியென்று சாணாப்பனையேறி
பனைச்சிரங்கின்னம்பற்றித்தெழியலையே
உனைச்சுவாமியென்றால் வொருவருக்குமேராதே
ஆளானவாழோ நீவாளில்ச்சிறியவனை
தாழக்கிடந்து சாமியென்றுவந்தாய்நீ
நாராயணசுவாமி நானென்றதும்நீயோ
வாரணத்தின்காலில் கட்டிவாட்டுவோம் பாருமென்பான்
உன்னோடுநின்றவர்க ளுன்னையடிக்கையிலே
என்னோடுவந்தென்னவென்று கேட்கல்லையே
நீசாமியென்றால் நெகிழுவரோயிவர்கள்
பாசக்கயிறுபற்றுமோ வுன்கையிலே
வகைதேடவென்று மனுச்சாமியென்றாயோ
புகையோடேப்புகையாய்ப் போறாய்நீவம்பாலே
நருள்க்களைவருத்திவிட்ட நல்லமந்திரத்தாலே
மருளச்செய்தெங்களையும் மண்ணில்விழவைப்பார்ப்போம்
அல்லாமலுன்கைக் கெட்டுமறுவதற்கு
வல்லமையுண்டானால் மந்திரத்தைப்பார்நீயும்
கூனனைப்போலிருந்து குறுமுழிமுழிப்பதென்ன
நானன்னவென்று நகைப்பாரொருகோடி
ஏசுவார்கோடி யெறிவாரொருகோடி
பேசுவார்கோடி பேயின்வெறும்பேயனென
சொல்லிநகைப்பார் சுத்தமுள்ளநாராயணரை
பல்லுயிரும்படைத்த பரமன்வாய்பேசாமல்
கவிழ்ந்துகண்மூடி கழிகூர்ந்தேமகிழ்ந்து
சவுந்தரியநாதன் தானேநடக்கலுற்றார்
வெடிகொண்டிடிப்பார் வெட்டவாளோங்கிடுவார்
அடியடித்துத்தள்ளியங்குமிங்குமிழுத்து

வேதனைகள்செய்வார் வேதநாராயணரை
சாதனைகளுள்ள சர்வபரநாரணரும்
எவ்வுகத்துக்கு மிப்பாடுவென்பாடு
இவ்வுகத்துக்கு மிப்பாடுவென்பாடு
அவ்வுகத்திலுள்ள வனியாயப்பாவிசுழை
இவ்வுகத்தைப்போலே யெரியாமல்விட்டேனோ
என்றுமனதிலிதமாய் மிகவடக்கி
ஒன்றுமுறையாம லூமைபோலேநடந்தார்
நடக்கவேமாயன் நல்லன்புசான்றோர்கள்
கடக்கவந்துநின்று கண்ணீர்மிகத்தூவி
ஏழைக்காகயிரங்கி யெங்கள்குலமீதில்வந்தீர்
கோளைக்குலநீசன் கொண்டடிக்கவந்தானே
பாவிநீசனாலே பட்டதுயரறிந்து
ஆவுமேயத்தநாதன் ஆளவந்தார்நம்மையுமே
அய்யோயினிநாமலைந்து மிகப்போவோமே
மெய்யோடேகுத்தி விழுந்தழுவார்சான்றோர்
தாய்தகப்பனில்லையென்று தானடித்தநீசனெல்லாம்
வாயமர்ந்திருந்தானே யிவர்வந்தநாள்முதலாய்
இனியாருநம்மை யேத்துக்கைய்தாறதுதான்
தனியானோம்நாமினித் தலையெடுப்பதெக்காலம்
என்றுசான்றோர்கள் சொல்லியழுதசத்தம்
கன்றுக்கிரங்குங் கண்ணர்மிகக்கேட்டு
மலையாதுங்கோநீங்கள் மாமுனிவன்புத்திரரே
அலையாதுங்கோ மக்காளையாதிருவாணை
இப்பூமிதன்னில் வந்தித்தனைநாள்வரைக்கும்
கைப்பொருளுக்கிச்சை கருத்தில்மிகநினைத்து
கைக்கூலிக்கிச்சை கருதினேனாக்கால்
இக்குவலயத்திலினிவரேன் கண்டிருங்கோ
தர்மமதுநிச்சயித்துத் தாரணியில்வந்ததுண்டால்
நன்மைகடைப்பிடித்து நான்வருவேனிலத்தில்
ஒன்றுக்குமலையவேண்டாங்காணுத்தமரே
என்றுக்குங்காணிருப்பே னென்மக்கள்தங்களிடம்
ஆளுவேனோர்குடைக்கு ளானவைகுண்டமனாய்
வாழுவோமக்கா வையகத்தைதாநாக

விருத்தம்

ஒன்றுக்குமலையவேண்டா முகபரநாதனாணை
என்றுக்குமலையின்மீதி லேற்றியதீபம்போலே
கன்றுக்குப்பாலும்போலுங் கண்ணுக்குப்புருவம்போலும்
என்றுக்குமக்காவுங்களிட மிருந்தரசுவாள்வேன்

விருத்தம்

முன்முறைவிதியாலிந்த முழுநீசப்பாவிகையால்
என்விதிப்படவேயுண்டு யிறப்பொன்றனக்கென்றதினாலே
பின்விதியெனக்குநன்றும் பெரும்புவியாழ்வோமக்கா
உன்விதிநல்லதாகு மொழிவருவாள்வீர்தானே

நடை

என்றுமகிழ்ந்து யெம்பெருமாளுள்ளடக்கி
மன்றுதனையழுந்த மாலோலை நடக்கலுற்றார்
கெட்டினக்கெட்டைக் கிறுக்கமுடனிறுக்கி
ஏசுவார்மாயவரை யெறிவார்கண்மாயவரை
பேசுவார்மாயவரை பேயனென்பார்மாயவரை
இப்படியேநீசக்குலங்களெல்லாமாயவரை
அப்படியேபேசி யடித்துமிகநடத்தி
நீசக்குலமிருக்கும் நெடுந்தெருக்களூர்வழியே
பாசக்கயிறேறுடுப் பகர்க்கள்ளனைப்போலே
தெருவுக்குத்தெருவு சிறுகுழந்தைநீசகுலம்
வருகின்றமாயவனை மண்கட்டிபேத்தெறிவார்
தலையைப்பிடித்திழுப்பார் சடைப்பேயன்பேயனென்பார்
குண்டியிலேவொருவன் கோல்கொண்டுகுத்திடுவான்
கொண்டியோவென்று நெளியிலேகுத்திடுவான்
நம்மள்குலத்தை நாணக்கெடுக்கவந்த
பம்பக்குறுயபேயன் பம்பைதன்னைப் பின்னுமென்பான்
அதிலுஞ்சிலபே ரட்டாவென்றிடுவார்
மதிலேறிவந்து வாமடவார்சிலர்காண்
இவன்தானடியோ யென்னயுமோவாடவைத்து
சவந்தனையேசுட்டதுபோல்த் தான்சுட்டபேயனிவன்
தலைமயிரைப்பனையில்த்தான் பங்குவைத்திறுக்கி
குலையக்குலையக்கொன்ன கொடும்பாவியிவன்
என்றுவெறிவாரிவன் சிலர்களம்மானை
அன்றதுகள்கண்டதிலுஞ் சிலமடவார்
ஆமடியோயுங்களையு மழைத்தாறேவீட்டில்வந்து
ஒமடிமோயிந்த விறுமாப்புப்பேசாதுங்கோ
அன்னைறக்கவனை யடிபணிந்துநின்றுகொண்டு
இன்னைறக்கவனை யெறியத்தொடர்ந்தாயோ
என்றுசிலபேரெறியாதே யென்றுரைப்பார்
நன்றுநன்றென்று நாரணருள்ளடக்கி
ஒருத்திக்கொருத்தி வுரைத்திடுங்கோவெனவே
கருதிமுகம்பாராமல் கண்ணார்மிகநடந்தார்
பாவிக்குலங்கள் பச்சமால்நாரணரை
தாவிச்சுசிந்தரத்தைத் தாறேக்கிக்கொண்டுசென்றார்
கொண்டுபோகும்வேளை கொடும்பாவிநெட்டூரன்
விண்டுரைக்கக்கூடாத வேதனைகள்செய்யலுற்றான்
அய்யய்யோமாயவரை யன்னீசமாபாவி
கொண்டுவிட்டுமாயவரை கண்டுகலிராசன்முன்னே
கண்டுகலிராசன் கருத்தில்மிகதேர்ந்து
பார்ப்போம்பரீட்சை பயித்தியக்காறனுடனே
தார்ப்பிரியமாகத் தன்விரலின்மோதிரத்தை
கள்த்தியொருவர் காணாமல்க்கையடக்கி
ஜனத்திலொருவர் தானறியாநீசனுமே

ஏதடாயெந்தன் கைக் குள்ளிருப்பதையும்
ஒதடாவுந்தன் வுற்றவலுவாலே
அப்போதுவாம ணடக்கமிகவறிந்து
இப்போதுதானுரைத்தாலிந்த நீசக்குலங்கள்
கண்டுபிடித்துக் கட்டுவார்நம்மையுமே
தொண்டுசெய்யுஞ்சான்றோர் துயரமதுமாறாது
நாம்நினைத்தகாரியமும் நடவாதுவானதினால்
யேமிதைத்தான் சொல்லப்பேறுமெனவடக்கி
எல்லாம்படைத்த ஏகன்கிருபையென
அல்லாநினைத்தபடி யாகுமெனவுரைத்தார்
அப்போதுநீசனவன் வெகுளியாயுரைப்பான்
இப்போதொருமருட்டா யிவனேசுவாமியென்று
மருளிதுதானென்று மாற்றுங்மிகமருண்டு
கொண்டுபோங்கோ சறடன்கூண்டவன் முன்பதிலே
என்றுரைத்தபோது யேவல்சேபாசிகளும்
நடத்தியிழுத்து நாராயணரையுமோ
கடத்திசறடன் கண்டிருக்கக்கொண்டுவிட்டார்
உடனேசறடன்வுபாயமதைப் பார்ப்போமென்று
தடதடனவேயெழுந்து சாராயமானதிலே
அஞ்சுவகைநஞ்சு வதில்க்கலந்தான்மாபாவி
நஞ்சில்லையென்று நல்லபாலென்றீந்தான்
பாலென்றபோது பச்சநாதன்மகிழ்ந்து
காலனைக்காலாலுதைத்த கடவுளோர்தான்மகிழ்ந்து
வேண்டியகமேத்தார் வேதநாராயணரும்
ஆண்டியதினா லஞ்சாதிருப்பதையும்
பார்த்துசறடன் பண்பாயகமகிழ்ந்து
வேற்றொருசூச்சம் வேறேயுண்டாகுமென
என்னவோவென்றிவ னுணர்ந்துபாராமல்
பொன்னர்மயக்கம் பெரியமயக்கமதால்
கொடுபோங்கோவென்று கூறினான்சேவகரோடு
வெடுவாகக்கொண்டு வெறுநீசன்டாணாவில்
யடைத்துவைத்தானங்கே யன்னீதமாபாவி
இடத்தமுடனாரணருஞ் சிந்தைமிகமகிழ்ந்து
இருந்தாரேமாய னேழைக்கிரங்கியவர்
தருந்தார்மாயோன் தர்மந்தனைநினைத்து
சான்றோருக்காகத் தடியிரும்பிலுமிருந்து
மாண்டோனரயுமெழுப்பும் மாயவலுவாண்டி
அய்யையோமாயவரையடைத்து வைத்தேயிருந்த
பொய்யோப்பிரைக்குள் பொறுக்குமோகண்ணுகண்டா
மோழுக்குழியில் மொதுமொதெனவேபுழுக்கள்
தோழுவழிப்புழுக்கள் தூணிமிகச்சரிய
அட்டைமிதக்க வரியயீதேள்மிதக்க
விட்டாகு மிகுவாய்ப்புழுமிதக்கும்
நாற்றத்துறைகள் நரகத்துறைபோலே

பரித்தவிடமெல்லாம் பலபுழுக்களுஞ்சரிய
அய்யோயவரை யடைத்தபுரையதிலே
கய்யாடிநிற்கக் காரணமோமாயவர்க்கு
சான்றோருக்காகத் தர்மக்குருநாதன்
மீன்றுமுழியாமல் முகமலர்ந்துவங்கிருந்தார்
ஏழைகளுக்காகயிரான் ஒருருநாளாய்
மீளச்சிலுவையிலே முள்ளாலடிகள்பட்டு
மரித்துப்பிறந்ததுபோல் மாயக்குருநாதன்
யிதுவுகத்துக்கிப் பிரையிலிருந்துவழுந்தவென்று
இருந்தாரேமாயவனர் ஏழைகளுக்காயிரங்கி
கருந்தார்மார்பன் கருத்தில்மிகவடக்கி
எல்லாமடக்கியிருக்கு மந்தநாளையிலே
பொல்லாக்கலியன் புறப்பட்டான்மேர்க்கெனவே
இப்பேயனையுமிங்கே கொடுவாருமென்று
அப்போதுசொல்லியவ னடந்தான்மேர்க்கெனவே
உடனேசிவாசியுற்ற நாராயணரை
திடமாகக்கூட்டிச் சிணமேநடக்கலுற்றான்
கொண்டுபோனாரே கோட்டாற்றுவூரோடே
கண்டுபெரும்பாவியெல்லாங் கட்டிக்கொண்டுதானெறிய
எறிவார்சிலபே ரேசுவாரேசிலபேர்
வெறிபேயன்பேயனென்று விரட்டிமிகவெறிவார்
யெல்லாம்பொறுதியுடன் யெம்பெருமானுமடக்கி
கல்லாரையெல்லாங் கசக்கியறுப்பேனென்று
மனதிலடக்கி மாயநெடுமாலும்
கனத்திருமேனி கண்கவுழ்ந்துதானடந்தார்
நடந்தாரேகோட்டாறு நல்லபிடாகைவிட்டு
கடந்தாரேசுங்கன்கடையெல் கைதானும்விட்டு
பல்பனுபப்புரத் தெல்கைபார்த்துத்தெருவோடே
உர்பனமாய்மாயன் உள்தெருவோடேநடக்க
ஆகாதபாவியெல்லாம் மவரைக்கண்டேபளித்து
வாயாரப்பேசி வைத்தாரேநீசரெல்லாம்
அதிலுமன்போர்கள் அவரைக்கண்டேபணிந்து
இதினுள்வரையும் யிவர்நடந்தசட்டமதில்
பொல்லாங்குசெய்தாரென பேருநாங்கேட்டதில்லை
எல்லாங்கடதலைக்கு யிட்டதர்மமேகாக்கும்
என்றன்பேர்சொல்லி யிவருழுதுநின்றனராம்
அன்றந்தநாதனது கடந்துபோயினரே
போனாரேத்தக்கலையின் பிரைக்குள்ளேயுமிருந்து
மானனபொன்மேனி வாலராமங்கடந்து
வாரிக்கரையும் வாய்த்தநதிக்கரையும்
சீரியநாதன் சென்றுகண்டேநடந்தார்
நடந்துதிருவனந்த நல்லபுரத்தெல்கைகண்டு
அடந்தமரச்சோலை யடவிவனங்கள்கடந்து
கண்டுகொண்டிடம்பெருமான் கண்கொள்ளாக்காக்ஷியுடன்

பண்டுநாஞ்சீரங்கத்தை பார்த்துவகனறேநடந்து
இவ்வூரைக்கண்டு யெத்தனைநாளாச்சுதென்று
செவ்வுமகாவிட்டுணுவுஞ் சிந்தையுள்ளேயடக்கி
அவ்வூரைப்பாராமல் அந்தவனமானதுக்குள்
நாட்டுக்கலியனுக்காய் நல்சோதனையெனவே
நீட்டினகாலில் நீசனிட்டவிலங்கோடே
ஏழைகளுக்காக யிருந்தார்பாரானதிலே
கோழைக்குடும்ப குறும்பர்தனைவதைக்க
மனுப்பாரானதிலே மாயக்கண்டிதானிருந்தார்
தனுப்பாரமடக்கி தாழ்மையுடனேயிருக்க
ஆகாத்தநீசன் அழியும்நினைவதிலே
போகாதபடிக்கு பேயன்தனைவிலங்கில்
போட்டுவையென்றும் புள்ளிபதனமென்றும்
கோர்ட்டுக்காரர்தனக்கு கொடுத்தானேஉத்தரவு
அந்தகலிராஜன் அவனுரைத்தடத்தாம்போல்
சந்தமுனிமாயனையும் தான்விலங்கில்விட்டுவைத்தான்
அப்போதுமாயனதியசான்றோர்களுக்காய்
இப்பொறுதிகொண்டிருக்கே னெனாவிருந்தார்
நாட்டுச்சோதனைக்காய் நாராயணர்விலங்கில்
நீட்டினகாலோடே நிலம்பார்த்தேயிருந்தார்
சாணான்பால்வைத்து சந்தோசப்பாலேத்து
நாணமலென்பெருமாள் நல்லசோலையிலிருந்தார்
சோலையில்வாழ்பறவை சுவாமிவந்தசென்றுசொல்லி
ஏலேலமுங்கூறி என்னேரமுந்தொழுது
நன்றானமாமுனியும் நல்பறவையானதுவும்
கொண்டாடிக்கொண்டாடிக் கொஞ்சிவிளையாடியிருக்கும்
இந்தவனச்சோலையிலே எம்பெருமாள்தானிருக்க
சாந்தமுடனருட்கள் சதகோடியாகவந்து
தொழுதுநமஸ்கரித்து தாயோன்பதம்பூண்டு
முழுதும்உன்பாதமென மொய்குழலாள்சிலர்கள்
நாற்பதுவயதாய் நான்பிள்ளையில்லாதிருந்தேன்
காப்பதுன்பாதமென கண்டுதொழுதபின்பு
தந்தாரேஎங்களுக்கு சந்ததிதழைத்தோங்க
வந்தாரேநாயடியார் வாழும்மனையிடத்தில்
என்னஉபகாரம் இவர்க்குநாம்செய்வோமென்று
கன்னல்க்கதலி கனிகள்கொடுப்போமோ
தற்மமதாய்த்திறந்த சஞ்சமதுவாசலதையும்
அம்மாசொல்லஆரால் தொலையுமோடீ
குட்டம்பதினெட்டும் குடித்தபதமென்றாலே
கட்டமுதலாய் காணாப்பறந்ததுவே
இப்புதுமைசெய்தவர்க்கு இப்போஒருபுதுமை
கொப்புளிக்குநேரமுன்னே கூடாதோஇவராலே
ஏதோஒருதொழிலாய் இவர்பம்மலாயிருக்க
குதால்கொடுமைவந்து சற்றுங்காண்நீசனுக்கு

என்றுசிலபெண்கள் ஏழைபங்கோனருளை
கண்டுதொழுது கருத்தகலநின்றிடுவார்
அப்படியேனருள்கள் ளாதிநாராயணரை
செப்படிபோலவர்க்கு செய்தூன்றிசொல்லியவர்
கூரைக்குப்போக கூறநினைவில்லாமல்
நாராயணரைச்சூழ்ந்து நமஸ்காரம்செய்துநிற்பார்
சூழ்ந்துநருழ்கள் தொழுதுமிக நிற்கையிலே
தாழ்ந்துசாகுங்கலியன் சறடன்தனைநோக்கி
பேயனொருசாணானை பிடித்துக்கொடுவந்தோமே
துய்யஇரும்புவிலங்கதிலே போட்டுவைத்தோம்
சாமியென்றுபாவித்த சாணான்தனைநாமும்
காமியத்தால்பெருத்த கடுவாய்தனைவருத்தி
ஏவிவிட்டுபார்த்திருவகையும் தானறிந்து
போமெனவேசொல்லி பேயன்தனையனுப்ப
வேணுமேஇப்போ விபரமென்னவென்றுரைத்தார்
ஆணுவமுற்க வரசனிதுவுரைக்க
நல்லதுதானென்று நகட்டமுற்றுச்சாடன்
வல்லபிலசேவுகரை வாவென்றருகழைத்து
இப்போதொருநொடியிலேழு மலையுந்தேடி
வெற்போடுவெற்பெல்லாம் வேகமுடன்தேடி
வேகம்பெரியவேங்கைக் கடுவாய்பார்த்து
நாகமதிலுங்கடிய நல்லகடுவாய்பார்த்து
நாழிகையேழதுக்குள் நம்மிடத்தில்கொண்டுவா
தூளியதுபறக்குமது சூறாவழியதுபோல்
இன்றேழுமணிக்கிங்கே கொண்டுவராட்டால்
தூக்கியேஉங்களையும் தூண்டலிலேபோட்டிடுவேன்
ஆக்கினைகள்செய்திடுவோ மாமிசத்தைதவாங்கிடுவோ
என்றுசேவகரை இறுக்கமுடனிறுக்கி
இன்றுபோமெனவே ஏற்றவரிசைகொடுத்து
அனுப்பினான் சேவகரை அந்தவேளைதனிலே
பனிப்பிசினும்வெயிலை கண்டுபதறினாப்போல்
பதறியேசேவுகர்கள் பண்பாகசட்டையிட்டு
குதறியேவந்து கூண்டுலைப்பார்மாயனொடு
நாராயணரேநாங்கள் போகுங்கருமம்
போராய்நடக்கவேணும் பெரியதிருமாலே
உம்மைச்சோதிக்க ஒருகடுவாய்கொண்டுவர
செம்மையுள்ளராஜா செனமேஅனுப்பினர்காண்
ஆனதினால்கடுவாய் அடியேன்கள்கையதிலே
போனவுடன்சிக்கிடவும் வரந்தாரும்புண்ணியரே
என்றுரைக்கசேவுகர்கள் எம்பெருமானுள்ளமதில்
நன்றுநன்றென்று நாராயணர்சிரித்து
விடைகொடுத்தார் கடுவாய்வேகமதில்சிக்கிடவும்
படைசேவகர் பாரமலைதானேறி
கடுவாய்கிடக்கும் கனமலைகள்தான்தேடி

முடிக்கித்தலையாரி முச்சுவலையணிந்து
காடுகலைத்து கடுநாய்கள்விட்டேவி
வேடுவர்களெல்லா விரைந்துகலைத்தனரே
கலைக்கஒருகடுவாய் கடுவேகம்கொண்டேழுந்து
வலைக்குள்நுளைந்ததுகாண் மாயவனார்தன்செயலாய்
உடனேதான்சேவுகர்கள் ஒடிமிகவேநடந்து
அடவுடனேவலையை அமர்த்திமிகப்போட்டு
உபாயத்தால்சென்றொரு கூட்டுக்குள்ளடைத்து
கபாடத்தால்கடிய கனகூடுதானெடுத்து
தாமரைகுளத்தார் சன்னியாசிபாதமதாய்
நாமமும்மன்னனுக்கு நாடிப்பிளைத்தோமென்றார்
நல்லவெண்ணியுண்டு நற்சாணுசாமியிடம்
வல்லவர்தானென்று மாதயவாய்க்கொண்டாடி
தேடித்திரியாமல் திக்கொங்கும்வாடாமல்
ஓடித்திரியாமல் உற்றசாணுசாமியினால்
நாமும்பிளைத்தோம் நம்உத்தியோகமும்பிளைத்து
சிமையாமும்ராஜன் செப்புவாக்குப்படியே
கடுவாயைக்கொண்டு காலமேபோவோமென
வெடுவாகக்கூடதுக்குள் வேங்கைதனையமர்த்தி
சுமந்துகொண்டுவந்தார் துடியானசேவுகர்கள்
அமர்ந்தகடுவாய் அதறுகின்றஓசையினால்
நருமுக்கள்மிகப்பதறி நால்கரைக்கும்ஆட்கள்விட்டு
வருகின்றவேளை மஹாகோடியாய்ச்சனங்கள்
சுவாமியென்றசாணுவை சோதிக்கவேணுமென்று
ஆமியமாய்க்கடுவாய் யதோகொண்டுவாருமென
பார்க்கவருஞ்சனங்கள் பலசாதியுங்கோடி
போர்க்குதிரம்போல் போறவகைபோல
எண்ணிறந்தநருமர் இதல்கூடிவந்தனரே
மண்ணளந்தநாதன் மனமகிழ்ந்தேஇருந்து
சுவாமியருகில் சூழ்ந்திருந்தசான்றோர்கள்
நாமினித்தான்செய்வதென்ன நாதனேஎன்றுசொல்லி
கேட்டுநாராயணரும் கீழ்கண்டுக்குள்மகிழ்ந்து
நாட்டுக்கரிவிரிநான் நாராயணனும்நான்
பட்சிபறவைபல சீவசெந்துகளை
நிச்சயமாய்படைத்த நீலவண்ணநாதனும்நான்
மண்ணேழந்த மாயப்பெருமாளும்நான்
விண்ணேளுமழந்த விஷ்ணுதிருவுளம்நான்
ஏகம்படைத்தவன் நானெங்குநிறைந்தவன்நான்
நாதக்கடல்துயின்ற நாகமணிநானல்லவோ
சீவஜெந்துக்கெல்லா சீவனும்நானல்லவோ
இன்னிசரெல்லா என்னையறியாதிருந்தான்
மின்னிலநான்படைத்த மிருகமறியாதோ
என்றேயடக்கி ஏகந்தனைநினைத்து
ஒன்றுக்குமஞ்சாதே உற்றமக்கள்சான்றோரே

பகருதேளந்தனுட பாலகரே என்றுசொல்லி
இதருதமாயவனர் இருந்தார்காணம்மானை
அப்போதுஅவரிருக்க அம்மிருகமாலைதையும்
வெய்போடுநெஞ்ச மானிசராஜனிடம்
கொண்டுவைத்தாரந்த கோபக்கடுவாய்தனையும்
கண்டுகலிராஜன் கனகசந்தோஷமுடன்
அன்றுசீவாயுகளுக் கானவரிசைகொடுத்து
இன்றுகடுவாய் இப்போதுகொண்டுசென்று
கூட்டிலடைத்துக் கோபமதுவருத்த
ஈட்டியமையாதற் கிரையொன்றும்போடாமல்
இன்றைக்குவைத்தது இதுநாள்கழிந்தபின்பு
சென்றந்தபேயனிடம் சொல்லிவிடலாமெனவே
அடைத்துவைப்போமெனவெ அரசன்விடைகொடுக்க
திடத்தமுள்ளசேவகர்கள் சென்றடைத்தார்கூட்டிலெ
இன்றுகடுவாய்இறந்தி கட்சியதுபார்ப்போமென
வந்தாரனந்த மானிசபாதகனும்
தந்தாய்சரடன் செவுளிக்காடனுமே
கெவுடன்வெகுடன் கீர்த்திதுரைச்சாணிகளும்
மகுடவர்த்தனர்முதலாய் மந்திரிமார்களுமே
துலுப்பர்சலுப்பருடன் சிவாயிமார்களுமாய்
அலுப்பர்பட்டாணிகளும் மாலகரிகாலாளும்
காலாளும்வீராளும் கருமறவர்சேகரமும்
சூலாளும்சீதாலாளும் சூழ்ந்தபடையாழ்களும்
ஒக்கத்திரண்டு ஒருமித்தோம்காரமுடன்
மிக்கத்திரண்டு வெடியாயிதத்துடனே
ஆனைக்காறர்கோடி அம்புக்காறர்கோடி
சேனைக்காரர்கோடி திரண்டுவந்தாரம்மானை
இந்தப்படையோடே இட்சாதிதன்னோடு
வந்துவளைந்தார் மஹாகடுவாய்கூடயுமே
அப்போதுராஜனருகில் தலையாரிகளை
இப்போதுஇந்த ஏத்தகடுவாய்தனையும்
குண்டியிலேகம்புகொண்டு குத்துவதுகோபம்வர
கண்டுகடுவாயும் கம்பதுக்கேபதுங்கி
அத்திமுளங்கியது அவிழ்ந்தேபடுத்து
பத்தியதுகிடந்து படுக்கைஇளகாமல்
நீசனவன்குத்த நெடுஞ்சரடன்வெடியால்
வாசப்பொடியிருத்தி வன்னப்பொடிநிறைத்து
விட்டான்கடுவாய்மேல் விதறிஇளகாமல்
மட்டாக்கடுவாய் மாறிஇளகாமல்
கிடந்ததுகாணய்யா கிறுபையதினாலே
திடந்தெரியாதவன்னஞ் சனங்கள்மிகபார்க்க
ஈட்டியெடுத்து இனிகுற்றவேண்டுமென்று
மேட்டியொருவன் விசையாகக்குத்திடவே
எட்டிக்கடுவாய் யீட்டிதனைப்பிடித்து

விட்டிடவேயருகில் நின்றதொருவேதியனை
குத்திச்சேயிட்டிலக் குடல்ப்பிறலம்மானை
கத்தியும்பட்டு கடக்கவொருவன்சாட
பார்த்திருந்தநீசப் பாதகனேதுரைப்பான்
நால்திசைக்குமேறாதே நல்மறையோன்பட்டதுதான்
ஆயிரம்பசுவை யடித்துமிகக்கொன்றாலும்
தோசமீதல்லோவொரு வேதியனைக்கொன்றது
என்னபோலராச்சு யாணினைத்தகாரியங்கள்
மன்னன்கலிராசன் மாசறடனுமயர்ந்து
ஞாயமதல்லவென்று நடந்தானரண்மனைக்கு
தோசமொன்றேத்தோமென சொல்லிமிகபோனான்
அப்போதுசனங்களெல்லோரு மேதுரைப்பார்
இப்போதுபேயனுக்கு யிதுவுமொருநல்லதுதான்
என்றுசொல்லிநீசனே சறடனுமே
ஒன்றுமுரையாதுள்ள படையத்தனையும்
கூட்டிக்கொண்டுப்போனான் கோட்டையதுள் அம்மானே
வேட்டைபலித்துதில்லை வெற்றிதான்பேயனுக்கு
பார்க்கவந்தசனங்கள் பலதிசைக்குமிவ்விசனம்
ஆர்க்குமிகவேயறிவித் தகன்றனரே
அப்போதுசுவாமி யருகில்மிகவாழும்
மெய்ப்பானசனங்கள் மெத்தச்சந்தோசமதாய்
இன்றத்தறுவாயீசுரன் காத்ததுதான்
அண்ணல்காயாம்பு யச்சுதனூர்காத்ததுதான்
என்றுமனமகிழ்ந்து யெம்பெருமாள்நாரணர்க்கு
அன்றுவிசனம் யறிவித்தாரன்போர்கள்
கேட்டுநாராயணரும் கிள்ச்சுண்டுக்குள்மகிழ்ந்து
ஆட்டுவானாட்டுவங் காணல்லாமல்வேறுழதோ
இப்படியேசொல்லி யிருக்குமந்தநாளையிலே
முப்படித்தானீசர் மொழிந்தநாள்வரைக்கும்
இருப்போமெனச்சொல்லி இருந்தார்காணம்மானை
அருப்பானநீசனவன் சிலநாள்சென்றதன்பின்
என்னவிசாரமிப் பேயனுக்கெனவே
தன்னையிருந்து தானினைக்கும்வேளையிலே
முன்னேயொருயுகத்தில் மூவரியநாராயணர்க்கு
அன்னமொடு பாலருந்தக்கொடுத்திருந்த
ஆயாகுடியில் அவதரித்தகோமானில்
தூயவொருகோனுந் துணிந்தகெளுந்திருந்து
பத்தியுள்ளநாரணரைப் பாராவதுவிழக்க
உத்தரித்துக்கோனு மூலகமதையாளுகின்ற
மன்னனவன்முன்பில் வந்துநின்றங்கேதுரைப்பான்
தன்னையியமான தலைவனேகேட்டருளும்
நம்முடையராச்சியத்தில் ஞங்களிடதன்னினத்தில்
எம்முடைய ஆளா யிருக்கின்றயிச்சாணன்
சாணனிநல்லதன்மை மிகுமானமுள்ளோன்

கோணாமனதுடையோன் குணமுடையநல்லவன்காண்
நேர்மையொழுங்குள்ளோன் நேர்சொல்லொருவர்காண்
ஓர்மையுடையோன் உபகாரகாரணிவன்
ஆனதாலெங்களுக்கா யாசேநீர்தாமருகி
ஈனமிலாதெமக்கா யிரங்குமெனத்தொழுதான்
அப்போதரசன் அவன்மனதுதானிழகி
இப்போதிவனை யாமனுப்பிவிட்டிடுவோம்
விட்டாலவனு மேலுமிருக்குமுறை
கட்டாகச்சொல்லிக் கைச்சீட்டெழுதிவைத்து
போகச்சொல்லென்று பேர்கண்டனோர்க்குரைக்க
ஆகமகிழ்ந்து ஆயன் மறுத்தேதுசொல்வார்
என்னவிதமா யெழுதிவைக்கும்வாசகங்கள்
மன்னவனேசொல்லுமென மாறியவன்றொழுதான்
அப்போதரச னெல்லோருமேகேள்க்க
இப்போதிவனினத்தில் யெத்தனைபேர்க்கானாலும்
வொப்போடுறவா யொத்திருந்துவாள்வதல்லால்
உத்தரவென்ற துபாயமாய்சொல்லாமல்
மற்றுமொருசாதிகளை வாவென்றுரையாமல்
தன்னொருசாதி தன்னோடிருப்பதல்லால்
பின்னொருசாதிப் பிதனம்வைத்துப்பாராமல்
இனத்துடன்சேர்ந்திருப் போனுமென்றுசொல்லி
கனத்தோடவனுங்கைச் சீட்டெழுதிவைத்து
பின்னவன்னெல்லையிலேப் போகச்சொல்லென்றுரைத்தான்
மன்னன்கவியுரைத்த வாக்கின்படியெழுதி
ஒப்பமிடசொன்னாருல கழந்தபெம்மானை
செப்பமுடனாரணரும் சிரித்துமனமகிழ்ந்து
நம்மாலேசொல்லி நகட்டப்படாதெனவே
தம்மாலவன்வாயால்த் தானுரைத்தேசுமந்தான்
இதல்லோநல்ல யியல்காரியமெனவே
அதல்லாவென்றறிமா லகமகிழ்ந்து
கைச்சீட்டைவாங்கிக் கைகொண்டுதான்கீறி
வச்சிக்கோவென்று மண்ணில்மிகப்போட்டார்
கீறிவிட்டவோலைதனைக் கெடுநீசன்றானெடுத்து
மாறிக்கொருத்து வைத்தான்காணம்மானை
உன்னில்லிடத்திலுடனே நீபோவெனவே
குன்றுடையநீசன் கூறினனம்மானை
அப்போதுமாயவனார் ஆகட்டெனவுறுக்கி
இப்போதுநினைத்த லெக்கதிலேபோவேனோ
தேவநினைத்த தெய்தியுண்டவ்வேளை
போவேனெனச்சொல்லிப் பெரியோனகமகிழ்ந்து
நல்லவரேமக்காள் நாம்நினைத்ததெய்தியது
வல்லவரேவரும் மாசிபத்தொன்பதிலே
கிழக்குநாம்போவோம் கிணாதாய்நீங்களெல்லாம்
விளக்குவொளிபோலே வீரத்தனமாயிருங்கோ

என்றுரைக்கநாத னிசைந்தமக்களெல்லோரும்
நன்றுநன்றென்று நாதன்பதந்தொழுது
தொழுதுவவரிருக்கத் தூயத்திருமாலும்
முழுதுமனந்த மூதூரைவிட்டுயின்று
பழுதில்லாத்தெச்சணத்தில் பரமனமக்கேயருளி
தந்தயச்சிருந்த தாமரையூர்நற்பதியில்
சிந்தைதமகிழ்நாதன் சீக்கிரம்போகவென
நினைத்துத்திருமால் நிர்ணயமாயுள்ளடக்கி
கனத்தபுகழ்ச்சான்றோர் கைக்குள்ளேநிற்பவரை
பையவேயின்று பணமெனவுரைக்க
உய்மமிகக்கொண்டோ ருல்லாசமேயடைந்து
சந்தோஷங்கொண்டு சங்கடங்கள்தீர்ந்துதென்று
வந்தோர்களெல்லாம் மாயவரைத்தொட்டில்வைத்து
ஏந்தியெடுத்து யியல்வாகனம்போல
ஓர்ந்துவருக உற்றவனந்தமிட்டு
கண்டுநீசப்பாவி கர்த்தாவைத்தானிகழ்ப்பாய்
கொண்டுபோஞ்சாணுரைக் கூடிமிகச்சிரிப்பார்
சாமியென்றோன்பட்ட சழங்கலெல்லாம்பார்த்தும்
வாய்மதத்தால்பின்னும் வழுங்கல்சுமப்பதுபார்
பிழைப்பில்லையென்றே புத்திகெட்டசாணுர்கள்
உழைக்கமதியத்து வுழத்துகிறான்சுமந்து
பேயனைச்சுமந்து புலம்பித்திரிவதற்கு
நாயன்முன்னாளில் நாட்டில்படைத்ததுபார்
என்றுதூசணிப்பார் யிசைந்தபுகழ்சான்றோரை
அன்றதிலேசிலபேர் அல்லக்காணென்றுசொல்லி
நம்மளுக்கென்ன நட்டம்வந்துபோச்சுதென
சும்மாவவனினத்தார் சுமந்துகொண்டுபோவதல்லால்
ஏனிந்தப்பேச்சு யியாஞ்சொல்லப்போறோமென
தானிந்தவார்த்தைச் சனங்கள்சிலர்சொல்லவே
சொல்லன்புவன்பு சுவாமிமிகப்பார்த்து
நல்லவனந்தமிட்டு நாடும்வால்ராமமிட்டு
வல்லவழியில் வாளுகினறுவூருமிட்டு
பள்ளிவாசல்கள்விட்டுப் பார்வதியகரமிட்டு
துள்ளிக்கோட்டாறுஞ் சுசிந்திரத்தலமும்விட்டு
வேகமடக்கி விளியிட்டுவண்டிறுக்கி
ஆகமத்தின்தெய்தி யடுத்தாலாகட்டெனவே
சொல்லுவேன்வெள்ளித் தோன்றிவருகையிலே
வெல்லுவேனென்று விசையடக்கியெம்பெருமான்
தொட்டிலிருந்து சுவாமிவிளியுமிட்டு
மட்டிலிருந்த வளர்தாமரைப்பதியில்
வந்துபதிகண்டு வட்டமிட்டுத்தாவடி
விந்துவளிக்குமேல்க் கெதிகளாகுதென்று
இன்றுமேலெனக்கு யேகவியாளம்வருது
பன்றுவெனக்கு பகர்ந்தமொழிபோலே

சான்றோரைநல்ல தவத்துக்கனுப்பிடவும்
பண்டோர்நமக்குப் பகர்ந்தபடிமாதர்களை
நாடுமணங்கள் நல்லகலியாணமுதல்
வீடுவகைசொத்து விருதுவேடிக்கையுடன்
தேருதிருநாள் திருக்கல்யாணக்கொலுவும்
பாருபுகள்ப் பாவாணர்க்கீதமுடன்
நாட்டில்மனுக்கள் நல்லோர்கள்வாள்வதிலும்
மேட்டிமைகளாக மிருவாள்வுசேர்க்கையுடன்
வேண்டும்பசுவு மிருவாய்ப்பசிவுகளும்
தாண்டும்பெரிய சனங்கள்மிகக்குழையும்
கொடியும்மிகக்கெட்டிக் கொக்கரித்திகளையுடன்
வெடியெக்காளமுடன் வெற்றியிடம்மானமிட்டு
நாட்டில்சிறப்பதிகம் காமினிமேல்ச்செய்யவென்று
தாட்டிமையாய்நாதன் சாணார்தனக்குவப்போ
அறிவில்விநோத மதிகநேருத்தமமாய்
குறியாய்மனதில்க் குறிக்கும்படியருள
அருளானவிஞ்சையருள் கொடுக்குமாலோனும்
மருளாமல்ச்சாணார் மனதிலுருவாக
மூணுநேரந்துவைத்து வுச்சியொருநேரமதாய்
வேணும்பச்சரிசி வெற்றிச்சிறுமணியும்
வேகவைத்துநன்றாய் விரைவாய்மணலிலிட்டு
தாகமில்லாமல்த் தவசிருக்கவேணுமென்று
பெண்ணுடனேயாணும் பிறந்தபிள்ளைதன்னோடும்
கண்ணுகக்கட்டில் கலருங்கிளவிவர
சூலிபிளம்பிள்ளை இரண்டமடமாதும்
மாலிகருளால் வத்துவகைதானிழந்து
வீடுமனைமறந்து வித்துவிலைகள்செய்து
ஒண்ணிலைப்பாதியென யொக்கவித்தார்சொத்ததனை
மண்ணுமறந்து மாடாடுதான்மறந்து
ஆண்டபண்டமெல்லா மகலமிகமறந்து
கூண்டபண்டமெல்லாங் கூசாமலேமறந்து
அனுபோகமத்து மாண்பெண்ணிகமாமல்
இனிபோகமத்து யிருந்தார்தவசெனவே
எல்லோருமிக்கயிருக்க தலம்பார்த்து
அல்லோருமேக வவர்கள்மனதிலுற்று
நாதனரிநாதன் நாராயணநாதன்
சீதக்குருநாதனிடஞ் சென்றாரவர்பதத்தில்
சென்றேயவருடைய சீர்பாதம்தெண்டனிட்டு
இன்றேசனங்களுக் கிப்போவிடையருளி
என்றேசனங்க ளெல்லோரும்போற்றிநிற்க
அன்றுபெருமா ளகமகிழ்ந்துகொண்டாடி
நாம்நினைத்ததுபோல் நடந்ததுகாரியந்தான்
நாம்நினைத்ததுபோல் முன்னடத்துவீரெனவே

உத்தரவுசொல்ல வுடையவழிச்சான்றோர்
சித்தவருடருளால்ச் சென்றார்தவமதுக்கே

விருத்தம்

தவமதுசெய்யவென்று சடுதியில்ச்சான்றோரெல்லாம்
உகமதையழந்தோன் பாதமுண்டெனமனதிலாக்கி
வகைபொருளாசையற்று மனைவிகள்மக்கள்கூட
திசையதுநோக்கிவாரி துவாரயம்பதியில்ச்சேர்ந்தார்

விருத்தம்

மண்ணுடன்மனைகளாசை மாடுடன்வீடுவாசை
பெண்ணுடன்பொருளிலாசை பூதலப்பொன்னிலாசை
எண்ணுடனெழுத்திலாசை யிறப்பொல்லாசைவேசை
ஒண்ணுடனாசைநீக்கி யுடையவனாசைகொண்டார்

விருத்தம்

கொண்டெனமனதில்பூண்டு குருபாதஞ்சமென்று
பண்டுநல்த்துவாரகைபதி வடவாசல்தன்னில்
தொண்டிரைவாள்வசூழ்ந்து செகல்க்கரைதனிலேவைத்து
கண்டுடன்பதியில்புக்கி கருத்துடனிருந்தாரன்றே

விருத்தம்

இருந்தவர்தலமும்பார்த்து யேகநல்வளியுங்கண்டு
பொருந்திடும்ஞானவான்கள் புண்ணியமனதிலெண்ணி
வருந்திடக்கனிவேகாணும் வசவைநற்பதியிதாகும்
தெரிந்திடக்கடலில்மூழ்கி சிவகலையணிந்தார்தானே

விருத்தம்

அணிந்தவர்பெண்ணுமாணு மன்புடன்மகிழ்ச்சைகூர்ந்து
துணிந்தவர்தங்கள்தங்கள் துயரங்களறவேநீங்கி
பணிந்தவர்தன்தன்னைப் பரிவுடன்மனதிலாக்கி
தணிந்தவர்கோபயேகத் தருளிமைத்தள்ளிவாள்ந்தார்

நடை

வாள்ந்தேதவசு வாள்வப்பதியதிலே
தாழ்ந்தேதச்சனங்கள் சந்தோசமாயிருக்க
அந்திசந்தியுச்சி யாகமூணுநேரம்
நந்தியருளால் நல்லதுணிதுவைத்து
உவரிநீர்றுவைத்து உவரிநீர்குடித்து
உவரிநீர்தன்னிலூற்று வன்னமேசமைத்து
உச்சியொருநேரம் உணவுமிகவருந்தி
மெச்சிப்புகழ்ந்த விடியவொருச்சாமம்
உகப்பாட்டுமோதி யுற்றவயமிட்டு
வகையாய்விடியவரும் நாளிகையேழில்
துணிகள்துவைத்து தோயமதிலிறங்கி
கொணியாய்குளித்து கிஷ்ணர்பதம்போற்றி
இப்படியேசித்தமிவர் மறவாவண்ணமேதான்

அப்படியேவாரி யலைவாக்கரையிருக்க
வாரிப்புறமாய் வளர்நண்டுசேகரமாய்
நீரிறைத்தார்போலே நித்தமந்தத்தவத்தோர்
பேரிலிணைத்துப் பெருவாடையாய்வீச
சிருகந்தநாதன் செயலாமெனவிருந்தார்
இருந்தார்தவசு யேற்றரியசான்றோர்கள்
அருந்தாமல்மற்றொன்று மன்னமொருநேரமதாய்
வாரிநீரல்லால் மறுநீரறியாமல்
சீரியல்பாய்ச்சான்றோர் செய்தார்தவமதுவே
தவமாய்யிவர்கள் தானிருக்கும்பொழுது
பவமானதுநீக்கும் பச்சநாராயணரும்
முன்னொருவருசம் உவந்திருந்தநல்த்தவத்தை
பின்னோர்வருசம் பேணிநடத்துமுன்னே
நீசனிடையில்நிறடு செய்தானைதிறல்
தோசமவன்பேரில்ச் சுமக்கச்சாபம்புரிந்து
ஆறுவருசம்மதில்க் குறைவுவாராமல்
வாறுதவசு வகுத்துமுடிக்கவென்று
புரிந்தார்தவசு பெரியதிருமாலும்
இருந்ததவசு லெக்குத்திகைவதுமுன்
சான்றோர்தவத்தைத் தான்பார்க்கவேணுமென்று
ஆண்டோர்மனதி லன்புமிகக்கொண்டாடி
அலைவாய்க்கரையில் அமர்ந்திருந்தசான்றோரை
நிலைபார்க்கவென்று நிச்சயித்தெம்பெருமான்
உகத்துக்குத்தக்க வுபாயமினிசெய்யவென்று
மருத்துவநாதன மனதில்மிகவுத்தரித்து
தெள்ளுதனக்குச் சிணமேவிடைகொடுத்தார்
விள்ளுறவேசெய்து விடுநீசிணமெனவே
ஆதிவிடையருள யதுவெல்லாமேசமைத்து
மோதியெருமித் துற்றவந்ததெள்ளினங்கள்
வந்துவளைந்துதல்லோ வாய்த்ததவத்தோருகில்
பொந்துபொந்துள்ளும் போடுந்துணியதுள்ளும்
வைத்தசுடிலுள்ளும் வளைந்ததுகாண்டெள்ளினங்கள்
மெய்த்தபுகழ்ச்சான்றோர் மெலிவாய்மிகச்சடைத்து
மாடாடுகோழி வளர்ப்பில்லாநம்மிடத்தில்
எட்டவிடாமல்வோ விதுசெய்யுமாய்மாலம்
இருக்குமிடத்தி லெண்ணக்கூடாதபடி
பொருக்குபொருக்கெனவே பொன்றக்கடிக்குதென்ன
மூணுநேரந்துவைக்கு முற்றகலையானதிலே
கோணியலில்பபற்றுங் குறுந்தெள்ளுவந்ததென்ன
படுக்கவிருக்கப் பண்புசற்றுமில்லாமல்
முடுக்கமாய்த்தெள்ளு முடுக்கிமுடுக்கிக்கடிக்க
இதல்லால்சான்றோர்க் கின்னமும்விட்டுபார்ப்போமென
சதமில்லாமுட்டைத் தன்னினங்களைவருத்தி
தவத்தைக்குலைத்துச் சான்றோரைத்தான்விரட்டி

பகுத்துவமாய்நீங்கள் பாரிப்பீரென்றுசொல்லி
மூட்டைக்குறைகள் மொழிந்தார்முகுந்தனுமே
சேட்டைசெய்வோ மெனவேதிரண்டுமிகக்குமிந்து
வந்துவளைந்தார் வாளதியசான்றோர்கள்
முந்துபரிந்த மூண்டதெள்ளினங்களோடு
கூடிக்குழாவி கூட்டமிட்டேதிரளாய்
தேடிச்சான்றோரை செகலுக்குள்ளேவிரட்ட
வேணுமெனவே விசும்புகொண்டவ்வினங்கள்
பூணுமுடமைப் போர்த்துந்துணியிருந்து
நடையில்கடிக்கும் நல்லிருப்பிலேகடிக்கும்
கிடையில்கடிக்குங் கிடக்கவிடாதேயரிக்கும்
குடிக்கும்மலைநீரில்க் குப்பக்கும்பலாய்க்கிடக்கும்
முடிக்குந்தலையில் முச்சிறங்கைபோல்கிடக்கும்
அன்னத்திலேமிதக்கும் அண்டைக்கல்லிலேவாழும்
முன்னெத்திமயிரில் மிரந்துமிகமுன்னுதிரும்
இடைக்குள்ளிருந்து யிடைவிடாதேயரிக்கும்
உடையிலிருந்து ஓயாமலேயரிக்கும்
மேலெல்லாமிரந்து மிகச்சரியுங்கீள்வளியாய்
காலெல்லாம்தெள்ளும் கனமாய்மிகவரிக்கும்
மாறியிவரெடுக்க மனதுசற்றுமில்லாமல்
ஆறிப்பதறி யசையாமல்த்தானிருப்பார்
வாரிக்கரையில் வளர்நண்டுசேகரமாய்
மாரித்துளிர்போல வந்துவளைந்துமிக
பாண்டத்துக்குள்ளே பதிந்திருந்துதான்வளரும்
காண்டமாய்க்கண்டுக் கைநீட்டலாகாதென
தடைவியெடுத்துத் தன்னாலேபோநீயென
வடவிப்போகாமல் வளப்பாருபோலிருப்பார்
இப்படியேதெள்ளு யீமூட்டைநண்டினங்கள்
அப்படியேக்கூடியவர்க் கலச்சல்செய்திடவே
அல்லாமல்ச்சான்றோர் அவரவர்க்குதேகமதில்
பொல்லாதவங்கு பெரியசிரங்குடனே
வெகுவாய்பெருத்து மேலிடைகாணாமல்
திகுவாய்சடைத்து சனங்கள்மிகவெல்லோரும்
எங்கேயினிப்போவோம் எல்லோருமென்றுசொல்லி
சங்கையுடன்கூடிச் சமுத்திரக்கரையருகில்
போயிருக்கும்வேளை பொங்குகடல்கோபமதாய்
வாயிதமாய்த்திரைத்தான் வந்துகோபித்தெடுத்து
பாலதியப்பெண்கள் பண்பாய்புத்திருந்த
சிலைரண்டுதன்னைச் செகல்கொண்டுபோயினதே
ஆய்யோகடல்தானங்கு செல்லக்கூடுதில்லை
செய்யவிருக்கவென்றால் தெள்ளுநம்மைவிட்டுதில்லை
வீட்டுக்குள்ச்செல்ல விட்டுதில்லைமூட்டையது
ஊட்டுகின்றஅன்னமதில் உசரவந்துநண்டிருக்கும்
தேகமதில்ச்சிரங்குச் சொறுச்சல்பொறுக்குதில்லை

வேகமுடன் காந்தல் மேலில்பொறுக்குதில்லை
தாகத்துக்கேற்ற தண்ணீர்கிடைக்குதில்லை
பாகமுடனுண்ணுதர்க்கு பற்றுதில்லைதினதுவும்
இனியெங்கேபோவோம் மெல்லோருமென்றுசொல்லி
மனுப்புகழுஞ்சான்றோர் மாதமொருவாறாய்
இருந்தாரதிலே யீசன்செயலெனவே
திருந்தாரமார்பன் திரும்பவொருதலத்தில்
கொண்டுபோய்பார்ப்போம்குல தெய்வச்சான்றோரை
பண்டுவொருசாணான் படுத்திருக்கும்வேளை
சொர்ப்பனம்போலுர்ப்பனமாய் சுவாமிமிகவுஸத்தரித்தார்
இதின்நேற்கெக்கு மிருக்குமொருபதிதான்
அதின்நோக்கஞ்சொல்ல ஆராலும்ஏலாது
துட்டர்தனைவென்றுச் சுற்றுமதில்கேட்டையிட்டு
முட்டப்பதிநாடுமுகுந்தர் முன்னாள்ஆண்டதலம்
அலங்காரநற்பதியினழகு சொல்லக்கூடாது
அலங்காரமான வாய்த்தகடலதினுள்
தேருபொன்பதிகள் சிங்காரமேடைகளும்
நீருக்குள்ளேயிருக்கும் நிறங்கள்சொல்லக்கூடாது
கன்னிமாராடுங்கரிய நல்ப்பூஞ்சுனைகள்
பொன்னினாலேபடிகள் பூஞ்சப்பிறக்கொலுவும்
மாணிக்கக்கல்லால்வளர்ந்த மணிமண்டபமும்
ஆணிப்பொன்தன்னாலழகு பூம்பந்தல்களும்
வகையின்னதென்று வகுக்கமுடியாது
துகையின்னதென்று சொல்லமுடியாது
இப்பதியிலீங்களிந்த நேரம்போனால்
அப்பதியிலுங்களுக்கு அதிகபலன்கிட்டுமென்று
தூக்கமதில்சொர்ப்பனம்போல்ச் சொன்னாரேவுத்தரவு
ஆர்க்கமுடனெயவனெழுந்து சொல்லிடவே
கேட்டுயெல்லோருங்கூடி கெட்டிதானென்றுசொல்லி
ஆட்டுமெனவேயெல்லோரும் சம்மதிச்சு
நடக்கத்துணிந்தார் நாரணருண்டெனவே
அடக்கமுடதினிலேயாறுமாதம்வரைக்கும்
இருந்தோமென்றாய் யினிநடப்போம்பதியில்
வருந்தாமல்போவோம் மகாபரனாருண்டெனவே
போவோமெனவே பெண்ணாணுடனெழுந்து
தாவமுள்ளமுட்டப்பதித்தலத்தில் வந்தனரே

விருத்தம்

வந்தனர்ப்பதியின்கூறும் வாரியுஞ்செயலுங்கண்டு
சந்தனவாரிபோலுந்தலமிது நன்னதாகும்
இந்நல்பதியில்நாமளிருந்துதான் தவசுசெய்தால்
செந்தமிளாயன்புரீதஞ் செயல்பெறவாழ்வோமென்றார்

விருத்தம்

வாள்வதில்க்குறைவராது மக்களுங்கிளைகளோடு
தாள்வதுயில்லாவண்ணந்தவமது வளர்வதாகும்
நாள்வளிபலனுண்டாகும் நாரணாருளினாலே
ஆள்வதுதிடனுமென்று மதிலவரிருந்தாரென்றே

நடை

என்றேமிகமகிழ்ந்தெல்லோருமொருமுகமாய்
அன்றேமிகமகிழ்ந்தாரதிலிருந்தாரம்மானை
சூழவணியாய்ச்சுற்றுமதில்போலே
நீழவரங்குலைத்து நெருங்கப்புரைகள்வைத்து
வைத்தோர்திசையில் வாயிலொன்றாகவிட்டு
மேய்த்தேதினமுமிகவே துணிதுவைத்து
அன்னமதர்க்கும் அவித்தநெல்லேயுடைத்து
வன்னமுள்ளகாய்கனிகள் வகைவகையாய்த்தான்வகுத்து
நல்லநீர்தன்னில் நாடிதுணிதுவைத்து
எல்லாவகைக்குமிசைந்த நீரேயருந்தி
அந்திசந்திநேரம் ஆதிதனைதுதித்து
தந்திரமதாகத்தவசு மிகப்புரிந்தார்
கண்டிருந்தமற்ற கலிநீசச்சாதியெல்லாம்
பண்டிலமைத்ததுவோ பனையேறுஞ்சாணார்க்கு
மூணுநேரந்துவைத்துச் சியொருநேரமதாய்
வேணும்பகுத்தாய் வெகுவாயலங்கரித்து
நாதனவர்பங்கில் நாடிமிகவந்ததுவோ
எப்போதுநீனுண்டென் றேமிகப்பார்த்து
அப்போததைதவேண்டி யரக்குரக்காயவித்து
வாயிலேலடுத்திட்டு வயிற்வளர்க்குச்சாணார்கள்
போயிலையுமறந்து பெண்ணாணுமோர்மனதாய்
இந்தப்படியாயிருக்க யிவர்களுக்கு
முந்தவிதித்த விதிவந்துவொந்ததுவோ
அவர்களுடுக்கு மாடையழுக்கில்லாமல்
இவரிருக்கச்சற்று மெண்ணமொன்றில்லாமல்
மூணுநேரந்துவைக்கும் வுற்றதுணிபொன்னிறம்போல்
தோணுதலாயவர்கள் தேகம்பளபளென
இந்தவிதமாயிவர்கள் பாவித்திடவே
சொந்தத்திருமால் சேர்ந்தாரவரிடம்
ஆதிமகாமாலவர் பங்கிலில்லாவிட்டால்
ஓதியுணவருந்த வொன்றுந்தெரியாதிவர்க்கு
போத்திநம்பூரி பிராமணர்கள்தன்சிலை
மாற்றித்துவைப்பு மங்கலாய்க்காணுதுகாண்
இந்தச்சாணார்சிலை யேகாசூரியன்போலே
பந்தவொளிபோலும் பளபளெனதோணுதுகாண்
பிராமணர்கள்சூத்திரர்கள் பேணியிவர்தனக்கு
நிராதனமாய்காய்கனிகள் நித்தஞ்சுமக்கிறார்கள்

பாக்கியங்கள்வந்ததென்று பனையேறுஞ்சாணார்கள்
நோக்கமதுவந்துதென்று நீணிலத்துள்ளோர்கள்
எச்சாதியும்புகழ்ந் திருந்தார்களம்மானை
அச்சாதியெல்லாமப்படியே சொல்லிமிக
சாதிமற்றோரெல்லாந் தலைகவிழ்ந்திருக்கையிலே
நாதித்திருமால் நாடுகின்றசான்றோரை
இவர்களுக்கருளுமாண்டுலகருந்திகைந்ததல்லோ
அவரவர்கள்வீட்டிலனுப்பிவிடவேணுமென்று
தோணித்தாரவர்மனதில் சொர்ப்பனம்போலெம்பெருமாள்
மாணிக்கச்சான்றோர் மனமறியத்தான்பார்த்து
இனிநாமளிப்போஇருந்த தலத்தைவிட்டு
தனியானோமளங்கேச் சார்ந்தோமேயானக்கால்
நம்முடையச்சாதி நகைத்திழிவுபேசுமல்லோ
எம்முடையதவமு மில்லையென்றுபோயிடுங்காண்
முன்னிருந்தவீடு மூண்டிருந்தபண்டமுதல்
தன்னிருந்தசொத்துந் தலத்தையிழந்துவந்தோம்
இனியங்கேபோனா லிருக்கவிடமுமில்லை
இனியங்கேபோவதைக் காலிந்தக்கடலதிலே
விழுந்தோமேயானால் மேலும்பதவியுண்டு
அழுந்தலுடனினைத்து யல்லோருமேயிருந்தார்
அப்போதரிநாதனுகட்டெனவுறக்கி
இப்போநீர்போங்க ளென்றேவிடைகொடுத்து
இன்னமிவர்போகலையே யென்றேமனதிலுற்று
அன்னமதைக்குறைத் தாளாக்கரிசியிட்டார்
ஆளாக்கரிசியலர்மலர்ந்த கோவையுடன்
தாளாமல்ச்சனங்கள் சடையாமலேத்தனரே
துவயல்முடங்கவில்லை தினஞ்சேவிப்பதுவும்
உகப்பாட்டோதுவதும் ஓயாமல்ச்செய்தனரே
இன்னும்போனாரில்லையே இப்படியேசெய்திடினும்
இன்னமொருவசனமிப்போது செய்யவென்று
உன்னித்திருமா லுற்றவைசூரியைத்தான்
ஏவினார்ச்சான்றோரேந்திழைக்கும் பிள்ளைகள்க்கும்
மேவியசான்றோர் மிகமெலிந்துதான்வாடி
பற்றிருந்தபருஞ் சிரங்குமாறலையே
முற்றுங்கண்ணொழிவு முழுதுந்திறக்கலையே
கும்பிக்குளிர குடிக்கக்கிடைக்கலையே
வெம்புமிலைகனிகள் மிகப்பறிக்கக்கூடலையே
அய்யோநாமெல்லா மலைத்துமலைத்திருக்க
வையமதில்லாத வைசூரிவளர்ந்ததல்லோ
கூன்றுஜனங்க ளெண்ணம்பெரிதாகி
சென்றஜனத்தில் சிலபேர்மடிந்திடவே
பதறிநடுங்கிப்பரனே நீதஞ்சமென
குதறியுலகில்க் கூச்சல்மிகவடைந்து
எங்கேயிருந்தாலு மீசன்செயலெனவே

சங்கைவழுகாமல் தாமோதரனுடைய
நினைவுமயராமல் நிலைதவறிப்போகாமல்
தன்னுடையவீட்டில்த் தான்போவோம்நாமளென்று
போகுமுன்னாகப் பெரியோன்பதமணுகி
பாகுவுரைத்துப் பட்டனமுரைத்து
உத்தரவுவேண்டி யுற்றிடத்தில்ப்பேசவோமென
புத்தியுடனே பெரியோனடி சேர்ந்தார்
சேர்ந்துவாவைப்பதியின் செய்திமெல்லாமுரைத்து
பேசர்ந்துவந்து முட்டப்பதியின்பெருமைசொல்லி
ஊணுகிடையாததுவுமுயிரழிவுவந்ததுவும்
கோணுதலெல்லாங் கூறிவிடைகேட்டார்
அப்போதுநாதனவ்லோரையும்பார்த்து
இப்போதுவுங்களில் லிடத்திலேபோனால்
நாராயணக்குருவை நாளுமறவாமல்
போாகவேயிருந்தால்ப் பேறுங்கள்க்கேகிடைக்கும்
அன்னமளக்கு மாதித்திருநெடுமால்
முன்னவன்றன்பேரால் முத்திரிகளிட்டதினால்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பதிகமுங்களுக்கு
என்றைக்கும்நல்ல வியல்பேயருள்வோமென
நல்லவிடைகொடுத்து நாராயணரனுப்ப
வல்லவளர்சான்றோர் வாள்த்தியவர்போனார்
அவரவர்கள்வீட்டில் லன்பாகப்போனவுடன்
இவரிவர்க்குநல்ல யியல்புசெய்யவேணுமென்று
உலகமதிலெம்பெருமா ளொருசொருபங்கொள்ளலுற்றார்
இரப்பவடிவாமெடுத்தா ரொருவேஷம்
பரப்பவடிவைப் பாருள்ளோர்கண்டுகண்டு
கோட்டைக்கணக்காய்க் குளிர்ந்தநெல்லேயெடுத்து
சாட்டமுடன்காய்கனிகள் சகலவகையுடனே
பழங்கள்முதலாய்ப் பற்படமும்பாயஸமும்
வழங்கயிலேயிட்டு வத்தல்வகைசீனியுடன்
அன்னமுதற்றன மாடையோடுபொன்தானம்
சொற்னதானமுதலாய்த் துவையர்க்காறர்கெனவே
சான்றோரினத்திற்ச் சார்ந்தன்புகொண்டவர்கள்
ஆண்டோனருளால் அன்னவஸ்திரங்கொடுத்தார்
நித்தம்நித்தமன்னம் நீங்களுண்ணுமென்றுசொல்லி
சித்தமிரக்கமதால்த் துவையர்க்காறர்கெனவே
இடைவிடாதேதபடியே யீந்தாரேயன்னமது
வடவெல்லாந்தீர்ந்து மகிழ்ந்தார்துவைத்திருந்தோர்
நாலுதிசையும் நடந்துபிச்சைதான்குடித்து
இப்படியேசான்றோ ரினமாயிருந்தவர்கள்
அப்படியேபிச்சையிட்டன் பாய்மகிழ்ந்திருந்தார்
பாங்கானதுவையல்ப் பண்டாரங்களெல்லாம்
பூங்காரமாகபிச்சை யமுதுண்டிருந்தார்
இந்தப்படியே யிவர்வாழும்நாளையிலே

சொந்தத்திருமால்க்குச் சுவாமியுரைத்தபடி
ஆண்டாறுசென்றதி கதவமதுதான்
கூண்டாய்முடித்துக் குருநாதக்கண்மணியும்
இனிநாஞ்செய்யுமியல் பென்னவென்றுசொல்லி
மனிதவதாரன்மனதில் நினைத்திருக்க
நன்றானமுட்டப்பதித் தலத்தில்நாரணரும்
மன்றாடும்நல்ல வாய்த்தபரமேசுரரும்
வேதப்பிரமன்விழங்கும் மறையோனும்
காதரிசிமாரும் நல்லசங்கத்தோர்களுமாய்
சத்தியுமையுஞ் சராசுபதிமாதும்
வித்தைதமுகத்து வேளைமுகத்தோனும்
எல்லோர்களும் வந்திருந்தார்கடலருகே
அல்லோர்களும்வந் தங்கேயிருந்துகொண்டு
ஏற்றமுனியிலிரண்டுபேரைவருத்தி
சித்தமுடனே இடீரெனவே நீங்கள்சென்று
நம்முடையபாலன் நல்லவைகுண்டரையும்
எம்முடையயருகிலிப்போ கொடுவரவே
சொல்லியயச்சார் சுவாமிதானென்றுசொல்லி
நல்லியல்பாய்ச்சொல்லி நாரணனையிங்களையும்
வாருங்கோமுனியே வாய்த்ததவத்தோரே
சேருங்களங்கே இடீரெனவேயிப்போது
என்றுவிடைக ளிருவருக்குங்கொடுக்க
அன்றுமுனிகள் வாயுபோல்விரைவாய்
கடிதாய்நடந்துக் கரியமால்நல்த்தவசு
முடிவாகச்செய்த முகுந்தன்பதியில்வந்தார்

விருத்தம்

வந்தனர்வைந்தர்பாத மலரிணைமுனிமார்கண்டு
செந்தமிளாயன்பெற்ற சேயிதுகண்ணேவிண்ணே
கந்தர்கலியைவென்று கனதர்மபுவியையாள
முந்தனர்த்தவங்கள்செய்து முடித்தவாபோற்றபோற்றி

விருத்தம்

பொல்லாக்கலியில்வந்திருந்து பெண்ணோடவனிபொன்னாசை
மண்ணோடுண்ணுமதத்தாசை மாய்கைவிளியார்மருட்டாசை
மண்ணோர்தவத்துளணுகாமல்ப் பவமேயறுத்துப்பார்வைவிளி
கண்ணேஞானக்கூவிருத்திக் கண்டாய்பொருளைக்கண்டாயே

விருத்தம்

அய்யாவுனதுதவமதுவாயாம்பை மாதான்றுபெற்ற
மெய்யாஞ்சான்றோர்கெதிகள் பெற்றார்மேவலோருமிகபுகழ்ந்
பொய்யாங்கலியனுயிரிழந்து போனன்நரகில்மீளாமல் [தார்
அய்யாமுட்டப்பதிதனிலே யழைத்தாருந்தனப்பனென்றார்

விருத்தம்

அழைத்தாரெனவேசொன்ன வுடனேதிமுனியைமிகநோக்கி
பிழைத்தார்மேலமனமகிழ்ந்து பின்னுமுனியோடுரைபகர்வார்

இனித்தகலியினுள்ளிருத்தி யென்னைக்கலியன்செய்தவலுச்
சளத்தமறிந்துவந்தாரோ சமயமிதுவோதானுரைப்பீர்

நடை

நல்லமுனியே நம்மைக்கலியதனுள்
செம்மைகெட்டநீசத் திபாவிகையதிலே
கண்ணியிட்டுவைத்துக்கட்டிக்கே நகண்டிருந்து
புண்ணியவானின்று பிழைத்துக்குதித்தாரோ
நான்பட்டபாடு நாடுபதிலறியும்
என்பட்டாரென்று யின்றுகேட்கவந்தாரோ
ஒத்தொதெரியலையே என்னுடையநாயகமே
பாதகந்தான்செய்த பாசாத்தியெங்களெல்லாம்
பார்க்கும்படியாய் பார்க்கிறேனெனவே
ஆர்க்கமுடனேயன் னீசன்செய்தபடி
கட்டிங்கயிறுங்கையில் விழுந்திடத்தில்
முட்டுக்குமேலேவூற்றமிக நினைத்தார்
வெடிப்புடங்குதன்னால் விலாவிலிடித்திடத்தில்
துடிப்புடனேயூற்றந் தோன்றும்படியேவைத்தார்
மேலிலப்பிரம்பால் மிக்கவடித்திடத்தில்
சிலமுடனேசீணந் தோணவைத்தனரே
கன்னமதிலக்கம்பால்க் கனக்கவடித்திடத்தில்
உன்னிதமாகவுடன் தோணவைத்தனரே
கூண்டமுடியைக் குலுக்கியசைத்திடத்தில்
வேண்டுமுடியைமிகக்கழிய வைத்தனரே
இப்படியேநீசன் செய்தயிடறதுபோல்
அப்படியேத்தோணவைத் தாங்காரங்கொண்டனரே
பால்மாட்டை நீசன்பற்றிக்கொண்டேயடைத்து
மால்பாலேக்கு மாதிரியைப்பார்ப்போமென
இந்தநாள்வரைக்கு மிருபத்தொன்றதுக்குள்
கொண்டுவடைக்கக் கோவேங்கிரிநாதன்
அன்றுமுதலிருபத்தொரு நாளதுவரைக்கும்
பாலுமுதல்வேறு பண்டமிகவொரமல்
இருக்குந்தறுவாயிது நல்லதாகுமென
அருக்காகநீசனவன் செய்தவேதனைபோல்
எல்லாமுறைறபோ லெடுத்தால்சொருபமது
நல்லமுனிமார் நாரணுவென்றுநிற்க
கைக்குள்ளேநின்ற கரியசிஷன்மாரில்
மெய்க்குளறிய விளம்பினுரெம்பெருமான்
இன்றைத்திவதம்மிசைந்த முட்டப்பதியில்
நன்றிப்போபோகநல் மணிகளாகுமெதன
சொல்வறிந்து சிஷன்மார்தான்மகிழ்ந்து
நல்லதெனச்சொல்லி நாடியவரிருக்க
அன்றிராதன்னில் ஆருமறியாமல்
நன்றினியசிஷன் நாலுபேர்தானறிய
வந்தமுனியும் வளர்ந்தயிருமுனியும்

சேர்ந்தமுடனுதன் தொட்டில்மிகவேறி
சேஷன்பார்காவிச் சிணமாய்மிகநடக்க
வாசமுள்ளமாமுனிவர் வலமிடமுஞ்சூழ்ந்துவர
துடியாகத்தொட்டில் சுவாமிமிகயிருந்து
வடிவானமுட்டப்பதித் தலத்தில்வந்தனரே
முட்டப்பதியில் முகுந்தனரிநாதன்
இட்டவருகுங்கிஷ்ணர் வந்துசேர்ந்திடவே
மகனைமிகக்கண்டு மாவிருப்பத்தோடுளவி
உம்மாளவந்தவுடைய மகனேயுனது
சடமெல்லாம்வாடிச் சடைப்பானேனென்மகனே
வடவெல்லாமென்னோடு வகுத்துரைநீயென்மகனே
கண்ணேமணியே கருத்துள்ளநாயகமே
விண்ணேவெளியே வேதத்திருவிளக்கே
கலியில்மிகயிருந்து கலக்கமிகவடைந்த
மெலிவெல்லாஞ்சொல்லி விளம்புநீயென்மகனே
அடித்ததாருன்னை யவனிதனில்ப்பேயனென்று
கடுத்தமதுசெய்தகலக்க மெல்லாஞ்சொல்லுவென்றார்
சொல்லென்றமாலுஞ் சிவமுமெடுத்துரைக்க
வல்லபெலமான வைகுண்டரேதுரைப்பார்
செந்தூர்க்கடலில் ஜெகலதுக்குள்ளென்னைவைத்து
முந்தவெனக்கு மொழிந்தவுபதேசம்
தப்பாமலாறு வருஷந்தவசாக
மெய்ப்பாவின்பாலருந்தி வீடுசொத்தெண்ணாமல்
கலிக்காசியாசை கருவில்நினையாமல்
அலிக்கியானப் பெண்ணிருசையணுகாமல்
பக்கக்கிழையாசை பாவித்தினிதாசை
அக்கத்திருசை அனுப்போல்நினையாமல்
நல்லதுணியாசை நளினமொழியாசை
சொற்றனவாசை முதலாயதின்பண்டத்திருசை
தேய்ப்புக்குழிப்புச் சிறந்தபொருளாசை
தார்ப்பிரியமான சந்தோஷத்திருசை
பூமியாசைமுதலாய்ப் பேராசையும்வெறுத்து
சுவாமியுமதருளால் தோல்புவியிலுள்ளோர்க்கு
தண்ணீராலெந்தச் சர்வவியாதிமுதல்
மண்ணிலுள்ளோரியார்க்கும் வாய்த்ததர்மமாகவேதான்
நோய்தீர்த்துவைத்தல்லால் நேட்டமொருகாசறியேன்
வாழ்வில்லாப்பேர்க்கு வாள்வுமிகக்கொடுத்தேன்
தாழ்வடைந்தோர்க்குத் தாழ்வைவிலக்கிவைத்தேன்
பிள்ளையில்லாப்பேர்க்குப் பிள்ளைமிகக்கொடுத்தேன்
கள்ளமெல்லாம்நீக்கிக் களிவைவரத்தைவைத்தேன்
வரம்வேண்டிநம்மிடத்தில் வைத்தந்தபேய்களையும்
குரமாயமலையில்க்கொண்டு வெரியவைத்தேன்
ஆயிரத்தெட்டான திருப்பதியில்
வாயிதமாய்வாழும் வாய்த்ததேவர்தனக்கு

ஞாயமில்லைபூசை நல்லாடுதீப்பெலி
தேசமதில்லுங்களுக்குத் தேரோட்டமும்முதலாய்
ஏக்கப்படாதினிமேலி ராக்ஷியத்திலுள்ளவர்தான்
மார்க்கவைகுண்ட வல்லாத்தான்வந்ததினால்
பூசைபடைப்புப் பெலிதீபமேராமல்
வாசமுடனே மறைந்திருங்கோசீங்களென
சட்டமிட்டுவைத்தேன் தாணிப்புல்பூண்டுவரை
மட்டைமருந்திலையு மலைகடலுவாசுகியும்
வையகத்தை ஆளும் மானீசனுமறிய
மெய்யாய்விரித்து விளம்பிமிகச்சட்டமிட்டேன்
இத்தனைச்சட்டமிட்ட வர்த்தமானமெல்லாம்
மத்தியமாய்வைத்த மாமுனியோரேகேளும்
அல்லாமல்பூமி தனிலவர்களறியாதபடி
வல்லாமையாய்க்காசி வளங்குயிலைபாக்குவரா
நாளைசகொண்டு நருள்களிடம்வாங்கினதை
வாளுசையுள்ள மாமுனியோரேகேளும்
நருள்களறிய நல்லவெகுவர்புதங்கள்
இதுக்காய்கிணத்திலேயே ஏகாசிலையுங்காட்டி
இருந்தேன்தவசாய் யென்னுடையநாயகமே
பொருந்தாதகாரியங்கள் புத்திமிகுளறி
செய்துமிகக்காணுது செய்யமணிவிளக்கே
நீசமீதுவோவென்று நீரவரோடேகேளும்
இத்தனையுந்தர்மமதா யான்செய்திருக்கையிலே
புத்திகெட்டநீசப் பொல்லாதான்வந்தெனையும்
கட்டியடித்துக் கைவெடியாலிடித்து
இட்டுறுக்கிவைத்தா னிரும்புவிலங்கதிலே.
நஞ்சிட்டுத்தந்தானுடுஞ் சாராயமதில்
கொஞ்சுங்கடுவாய்க் கூட்டிலடைக்கவென்றான்
நீசனவன்ஜாதி நீசமாகத்தான்கூடி
ஏசியெனைப்பழித்து யிடறுசொல்லக்கூடாது
அய்யோவவர்களடித்த வடிகளெல்லாம்
வையம்பொறுக்காது மாளீசன்செய்தவிதம்
மந்திரதந்திரத்தால் வஞ்சனைகள்செய்தெனையும்
கொந்திரமாகக் கொல்லவகைசெய்தார்கள்
பாவிகள்செய்த பழ்வினைகள்சொல்லவென்றால்
தாவுமுலகிற்றலமதிலேலாலையில்லை
என்னைத்தவத்துக்கிருத்தி யிதுநாள்வரையும்
இன்னுமிரங்கலையோ யென்தவசுகாணலையோ
அன்றருளித்தந்த வாண்டுதிகையிலையோ
இன்றுமுதல்க்கலியிலியான் போகவில்லையையா
நம்மால்க்கலியில் நவின்றிருக்கக்கூடாது
சும்மாவெனைநீங்கள் ஜோலிபண்ணக்கூடாது
நன்றிசற்றுமில்லா நாறவெறுங்கலியில்
கொண்டென்னைவைத்துக் கோலமதுப்பாராதேயும்

இனியென்னுல் கூடாதிக்கலியிலேயிருக்க
பணிதவளுமாயவரே பகர்ந்தமொழிமாருமல்
ஆறுவருஷ மவனித்தவசிருந்தேன்
தாறுமாறுண்டானுல் சாக்ஷியோடேகேளும்
என்றுவைகுண்ட ரித்தனையுஞ்சொல்லிடவே
நன்றறியமகனை நல்லமுகத்தோடணைத்து

விருத்தம்

கண்ணேமணியென்கருவலமே கனகமணியோத்தினமே
விண்ணேவொழியே கர்பகமேவேதச்சுடரேவிளக்கொளியே
மண்ணெழுந்தமலர்ப்பதத்தில் வந்தேகுதித்தமலர்க்கொளுந்
இண்ணேமுதலாயுனக்குநல்லவியல்பேயாகுதென்மகனே [தே

விருத்தம்

மகனேதவத்துள்ளிருக்கையிலே வருநேசெல்வமாரார்க்கும்
ஜெகமேளறியத்தவமுடித்துச் சென்றல்சிவனுக்ககமகிழ்ந்து
தவமேமுடித்தவினைவதுபோல்ச் சகலகருமங்ககூடும்
அகமேயுனக்குவருளினது யனுப்போல்த்தவருதருள்மகனே

நடை

செல்லமகனே சீமானேநீகேளு
நல்லமகனே நாரணுநீகேளு
தவவேடம்பூண்டு தவமாயிருக்கையிலே
சிவஞானமெல்லால்ச் செல்வம்போல்காணுது
தவசுநிறைவேறி தாமோதரர்கேத்து
பவுசுமிகவேண்டிப் பலன்பெற்றுவாழ்வார்கள்
மகனேநீயிருந்த மாதவத்தின்பெருமை
ஜெகமீதேசொல்லத் தொலையுமோவென்மகனே
கள்ளயுகத்தைக் காணுமலேயறுக்க
உள்ளநடுஞாய முகத்திர்ப்புச்செய்துமிக
ஆகாத்ததெல்லா மழித்துநரகத்திலிட்டு
வாக்காய்க்குழிமூடி வாசல்தனைப்பூட்டி
மாறியதில்லாமல் வங்கிஷமுந்தானெழிந்து
வேறுவகைசெய்து மேலுமொருநல்லுகமாய்
தர்மயுகமாய்த் தாரணிக்கமாயருளி
பொர்மைமனுவாய்ப் பெரியசான்றோர்வழியை
அன்பாகவைத்தாளமுடிசூட்டி
பண்பாகவேண்டும் பவுசுமிகவாக
சாகாவுலகத் தர்மபதியாள
வாகாத்தவசு வகுத்துமுடிக்கையிலே
ஆங்காரமாமோ வாணுவங்களங்காமோ
ஓங்காரமாமோ உத்ததவசதுக்கு
தவசுநிறவேறித் தான்வந்ததாலேயினி
பவிசுவுனக்குப் பகாவினிக்கேளு.
அருகில்வைத்த மாமுனியையழைத்தார்திருமாலும்

துரிதமுடன் முனிகள் சுவாமியைத் தொழுதார்
இந்நாள்வரைக்கு மிவரிருந்தார் தவசு
சந்ததமாவீரே தானுரைப்பீர் யாமுனியே
அப்போமுனிகளாதியடிபணிந்து
தப்பொருவனில்லைத் தபத்துக்குறுதியுண்டு
நூலொழுக்கமல்லால் நுணிமைகள் தப்பவில்லை
மாலொழுக்கமல்லால் மனதுவேறில்லையையா
தப்பாத்தவத்திற்குச் சண்டித்தடிநீசன்
சிப்பாயிவிட்டுச் சுவாமிதனைப்பிடித்து
அடித்துவிலங்கிலவனை கொண்டுவைத்தனனே
வைத்துப்பலவேதனைகள் மாநீசன்செய்ததல்லால்
மெய்த்தபுகழ்மாலை யிவர்மேலேகுறறமில்லை
என்றுமுனிமாரி சையத்திருமாலும்
கொண்டுபோய்நீசன் கோட்டிசெய்தஞாயமெல்லாம்
இருக்கட்டுமந்த இனிநீசன்செய்ததெல்லாம்
குருக்கட்டுமுறையின் குணத்தைதமிகச்செல்லுமென்றார்
உடனேமுனிக ளுள்ளமிகமகிழ்ந்து
படபடவென்று பணிந்துமிகப்போற்றி
தப்பில்லையையா தவத்திலொருபங்கமில்லை
நற்பல்லால்வேறு ஞாயகேடங்குமில்லை
என்றுமுனிகளிகபரத்துக்குத்தமமாய்
ஒன்றுவுரைக்க உதியதிருநெடுமால்
நல்லதெனவே நல்மகளைத்தானுவி
செல்லமகளே செகலதுக்குள்வாநீயென
மகனைமிகக்கூட்டி வாரிக்குளேநடக்க
தவமுனிகளெல்லாம் சங்கீதம்பாடிவர
பாவாணர்பாடப் பரமுனிவர்தானபாட
சோவாணர்போற்ற நாராயணர்மகனை
பால்கடலிலுள்ள பாலமுற்றந்தான்வருத்தி
ஆர்க்கமுடனே அருமைமகனைமூழ்கி
அழுக்கைத்துடைத்து அஞ்சாக்ஷரமருளி
முழுக்காட்டிமகனை யுகந்தமுகத்தோடணைத்து
வேதப்புரோகி விளங்கிமிகவாழ்த்த
நீதம்நிறைந்த நீலநிறமண்டபத்தில்
தங்கமணியரங்கில்ச் சமயக்கொலுவதிலே
மங்காதவீசுரரும் மாதவனுக்கேதலர்களும்
சக்தியுமைபுஞ் சரகவதிமாதும்
முக்கியுள்ளதேவர் முனிருஷிமாரும்
எல்லோருநின்று யிறைஞ்சிமுறையமிட
நல்லார்களெல்லாம் நாடிமிகவிருக்க
வல்லதிருமால் மகனைமுசம்நோக்கி
செல்லமகனே சிறந்ததெய்தி [illegible]
திருநாள்நடத்தி தெருவீதிதானவரவும்
ஒருவாரங் [illegible] நேரிடைவிடாமல்

நித்தந்திருநாள் நடத்தியென்மகனே
சத்திகன்னிமாரைத்தான் வருத்திமாலையிட்டு
கலியாணமங்களமும் காக்ஷித்திருநாளும்
சலியாமற்காசி தந்தவர்களுண்டானால்
வேண்டிநீதற்மம் விரைவாய்நடத்தியிரு
ஆண்டத்திருநாள் அதுமுடக்கம்வாராமல்
பிச்சுவெள்ளைப்பச்சரிசி மிழகு இலைத்தேங்காயும்
மிச்சம்பழஞ்சந்தனமும் மிக்கப்பன்னீர்வாடைகளும்
மேற்கட்டிகட்டி மிகுவாயலங்கரித்து
மார்கட்டுசெய்து மகிழ்சையிடம்மானமிட்டு
இந்தப்படியாயேழு நாழுந்திருநாள்
அந்தப்படிசெய்தவனியிலாடிக்களித்து
எல்லாமுறையுமியல்பாகக்கொண்டாடி
நல்லாண்டுதெய்தி நல்லதிவதம்பார்த்து
தெய்வக்கன்னிமாரைச் செல்வச்சான்றோரிடமே
மைவரம்பான மனுமுறைபோல்தான்பேசி
கொடுக்கல்வாங்கல் முறையும்கூறிமிகக்கேட்டு
துடுக்கானநல்ல தோகைக்குணமும்பார்த்து
பார்த்துன்னருகில்ப் பணிவிடைகள்செய்யுகின்ற
தோன்றுகின்றசீஷன் தோல்முறையும்பார்த்து
பதியமுறையும் பாவையர்கள்தன்முறையும்
சதியாயுலகோர் சங்கையதுபோலே
மங்களமதாக மாலையிடுயென்மகனே
என்றேடுகன்னி யேலமேசொன்னபடி
தன்றோடினங்கள் தலைவன்மாரேழ்வரையும்
யெடுத்துக்கொடுத்து யிளமுலைப்பால்தானூட்டி
கொடுத்துயிகனைக் கூறிக்கோயென்மகனே
இப்படியேபெண்களின்னஞ் சிலபேர்களுண்டு
அப்படியேயவரவர்க் கந்தந்தவேஷமிட்டு
வகையாகவேஷ மாறியுருவெடுத்து
திகையாமல்வாக்குச் சொல்லுமுறைபோலே
கலியாணக்காக்ஷி கணக்குத்தீர்வைமுறையும்
வலியானக்கலியில் வாழ்வைமிகக்கொண்டாடி
சாம்பசிவக்கோலம் சாருமஞ்சணைக்கோலம்
ஆம்பக்குறக்கோல மாடிமிககளித்து
முற்றுந்திருநாள் முழுதுமிகநடத்தி
பத்தும்பெரிய பாலர்தங்கள்வீடேகி
விருந்துமிகவு விரைவாகத்தானருந்தி
திருந்துபுகழ்கிளைபோல் சிலவீட்டமுதருந்தி
பிச்சைபோலுமருந்தி பெண்வழிச்சோறுமருந்தி
மிச்சமாய்ப்புவியில் வேண்டும்பவுசியுடன்
வெற்றியிடம்மானம் விருதுக்கொடிகள்கட்டி
புத்திரானோர்க்குப் பிழைக்கும்வலுபுத்திசொல்லி
பாடித்தீர்வைதீர்த்து பரசோதனைபார்த்து

ஆடித்தீர்வைதீர்த்தாண் பெண்மிகவேகண்டு
நல்லாண்டுகண்டு நாடும்பூமங்கையரை
செல்லக்கலியாணஞ் செய்துசிறப்புடனே
செந்தாமரையாளுடனே சிறப்பிருந்து
கொந்தார்குழலை கூடிமிகப்புரிந்து
ஆனைகன்றீணி அதனாலுலகமெல்லாம்
தானாகநீயுந் தலைவனெனச்சமைந்து
தாரணியீரேழுந் தடதடெனதானசைத்து
நீயதின்மேலாளும் நிர்ணயத்தைக்கேள்மகனே
தங்கமுடிசூடி சான்றோர்க்குநால்வரமும்
அங்கவர்க்குத்தானருளி யழகுமிகக்கொடுத்து
நல்லதற்மமாக நாடும்புவியதிலே
அல்லல்வினையற்ற வனியதைநீயாள்வாய்
அப்போநீயாக ஆளுகின்றநாளையிலே
செப்பொணாச்செல்வம் சிறப்புமிகவுண்டாகும்
பூமடந்தைவீட்டிற் புகுந்துகொலுவிருந்து
தாமுனிந்துநீயுந் தாரணிதனில்வந்தவுடன்
நான்வந்துவுன்னை நாடிமிகவெடுத்து
தான்மகிழ்ச்செல்வத் தலைவனுனையாக்கி
சொல்லவொண்ணாத சுகந்தருவேனென்மகனே
எல்லைக்கணக்கு மேழுயுகக்கணக்கும்
தீர்த்துவுனக்கு திருவம்பலமருளி
தோறும்பதிகள் துலங்கும்வெகுரத்தினமாய்
எல்லாமருளி யெழுமாதர்தான்சூழ
வல்லோனாய்நீயும் வாழுவாயென்மகனே
மலங்காதேயென்மகனே மாதவங்கள்பெற்றவனே
கலங்காதேயென்மகனே கண்ணேயென்கற்பகமே
என்றுமகனுக்கிது வுரைக்குமிவ்வளவும்
மன்றுகுலுங்காது வாரியலுங்காது
மேகங்குடைநிழற்ற மேவர்கள்போற்றிநிற்க
யோகமுனிமா ரோதித்தமிழ்கூற
ஈசர்மகிழ்ந்து இரத்னமதிலிருக்க
வாசவனுந்தேவர்களும் வாய்பொற்றிதாழ்ந்துநிற்க
இப்படியேசங்க மெல்லாமகிழ்ந்துநிற்க
அப்படியேவிஞ்சை யருளினார்ஆதியுமே

விருத்தம்

விஞ்சையும்பெற்றுவைந்தர் விரைவுடன்றகப்பன்பாதம்
அஞ்சலையும்புணர்ந்தசோதி யானையும்வழங்கிப்போற்றி
நெஞ்சையுமொன்றுளாக்கி நிற்மலத்தாயைப்போற்றி
கொஞ்சையுங்குணத்தினாதன் கூறுவார்குருவைப்பார்த்து
என்னையாட்கொண்டநாதா எங்குமாய்நிறைந்தநீதா
உன்னையான்கண்டுபெற்ற வுன்னருள்கிருபைதந்தா
இன்னமுங்கலியிற்போய் நானிருந்துமுறைகள்செய்தால்

என்னையாட்கொண்டு ரெத்தினகிரீடமெப்போயிவீர்
கிரீடம்யெப்போயிவீர் யென்றெனக்கேட்டமைந்தா
அரிவிதிகொண்டேசூடி அணியிடைமாரைத்தோய்ந்து
தரிவிதியானபோதுந் தாமரைகய்நிகழ்ந்தபோதும்
பரிவலம்வந்தபோதும் பார்மகளடைந்தாயன்றோ
உன்விதியதனால்முன்னா லாதியவமிற்தந்தன்றால்
என்விதிதன்னால் வந்தயிகாபரமுனக்குளாகி
மன்முறைதெளிந்ததன்றும் மான்கன்றுயின்றதன்றும்
பொன்மகளகன்றதன்றும் பூமகளடைந்தாயன்றோ
பூமகளுன்னைச்சேர்ந்து பின்னூறுவரைக்குமேலே
நானுகந்தன்னால்ப்போக்கி நகரொருபதற்குளாக்கி
தானுனைத்தங்கமான ணைதலமாம்பதத்தில்முள்கி
வானுனைமணிமாத்னமகிள் கிரீடமருள்வேனென்றார்

நடை

மகனெவுனக்குமகா செல்வமாகிவரும்
சுகமெபோயிரெனவே சொல்லியனுப்பலுற்றார்
அனுப்பத்திருமாலருமை மகவேதுகாக்கும்
மனுப்புகழ்ப்பெற்ற வைகுண்டமேதுரைக்யர்
பாவிவெறுநீசன் பண்ணினைத்தப்பாட்டையெல்லாம்
ஆவியறிந்தேதன்னுடைய வங்கமெல்லாஞ்சோருதையா
என்றுவைகுண்ட ரிசையத்திருமாலும்.
அன்றுமகனுக்கு வருளினதுகேள்மாதே
இன்னீசனமக்கு யிந்தயுகம்வரையும்
மன்னீதங்கெட்ட மாத்தாறைய்வந்ததினால்
செய்தானதினால் திருமகனெயஞ்சாதே
மைதானமானவர்க்கு நமக்காச்செதன
கைவாச்சமகனெ கலிநீசனையறுக்க
மெய்வாய்த்தநம்முடைய மேன்மைக்குலத்தோர்க்கு
அன்பானசீமை யரசாழநாளாச்சு
தன்பாலடையச் சரியாச்செதன்மகனெ
மலங்காதெபோ நீவாழுகின்றநற்பதியில்
கலங்காதேபோயிருநீ கண்ணேதிருமகனே
என்றுவிடையருள யேற்றதிருமாலும்
அன்றுதிருமாலு மண்பாய்விடைவேண்டி
அலைவாய்க்கரையி லாதிவருமுன்னே
நிலையானசான்றோர் நிரம்பவந்துகூடினரெ
கண்டந்தசான்றோரை கரியதிருமால்மகிழ்ந்து
நன்றென்றுசொல்லி நாராயணர்கூட்டி
பண்டிருந்தநல்லபதியில் வந்துசேர்ந்தனரெ
கண்டெடுந்தப்பேருங்கள பிரியமாய்மகிழ்ந்து
தாமோதரனார்த் தலத்தில்மிகச்சேர்ந்து
நாமொமுனிகூட நாடிமிகயிருந்தார்
இருந்துமிக்ப்பாலு மேற்றநல்லப்பச்சரிசி

இருந்துசிறுமணியுந் தேங்காய்ப்பூ தன்னுடனே
கொல்லமிழகு கூண்டபொடியுடனே
நல்லாகயிவ்வகைகள் நாடியொருநேரமதாய்
காவிமிகப்புரிந்துக் கனத்தருத்திராக்ஷமிட்டு
தாவமுடன்மாத்திரைக் கோல்த்தானிதுவோடேயிருந்தார்
கொஞ்சநாள்பார்த்துக் கூண்டஇவதம்பார்த்து
பஞ்சகருணைதிகளை பண்பாகத்தானிருத்தி
கந்தைதமிகச்சூடிக் காவித்தொட்டின்மீதிருந்து
விந்தயுடனுகத்து விபரிப்பெல்லாமெடுத்து
கூறினாந்த கூண்டரியகாரணத்தை
நாடழியப்போறதுவும் நன்னாடுதோன்றுவதும்
பாடழியநீசன்ப் படப்போறச்செய்தியதும்
நல்லமனுவோர் நாடிமுழிப்பதுவும்
வல்லபுலிதற்மம் வாழ்வதுவுஞ்சிறப்பும்
சொல்லிவிரித்தார்ச் சிறந்ததொட்டின்மீதிருந்து
எல்லோரும்கேட்டுப் பேசதொருகாரணந்தான்
நடத்துகிறாரென்று நல்லோர்கள்சொல்லிடுவார்
சடத்தமுள்ளநீசச் சண்டாழப்பாவியெல்லாம்
காசிமிகவேண்டக் கபடுசெய்கிறானெனவே
பேசியிவனும் பிதற்றுகிறானென்றுசொல்லி
நகைப்பார்சிரிப்பார் நன்றிகெட்டநீசகுலம்
சிகப்பானதுவாலத் தெய்வகுலச்சான்றோர்கள்
கூடிகுவிந்துக் குணமாகவேகூடி
தேடிவைத்தபண்டஞ் சுவாமிதனக்கெனவே
நம்முடையசஞ்சலம் நாடும்பிணிதீர்த்தவற்கு
தம்முடையபாலுத்தான் கொடுக்கவேண்டுமென்று
பசுவைக்கொடுப்பார்ப் பாலாடுதான்கொடுப்பார்
கசுவிரக்கமாகக்காசு பணங்கொடுப்பார்
வஸ்திரங்கொடுப்பார் வழங்குமிலைகொடுப்பார்
நெல்லுசிறுமணிகள் நெய்தேங்காகனிகள்
நல்லமைப்புச்சான்றோர் நாடிமிகக்கொடுத்தார்
கொடுக்கஅன்போரெல்லாங் குணமாய்மிகவேண்டி
அடுக்கஅவருகில் அன்பாகநின்றவரின்
பணிவிடைகள்செய்வோர்க்குப் பரிந்துமிகயீந்தார்
மணியாம்பரனு மகிழ்ந்துபாலேத்தெனவே
ஏத்துவுகத்துக்கேத் தீர்ப்பும்புரிந்து
சாற்றுமொழிகூறித் தானிருக்குமப்பொழுது
மாயத்திருமால் மால்வேசமேயெடுத்து
தேயமதில்நம்முடையத் தெய்வகுலமாதற்களை
வருவிக்கவென்று மாஞாலவித்தைதயினால்
உருவிக்கவென்று வுலகநருளானதிலே
தாக்கியுடலுள்த் தமனியமாய்ப்பொதிந்து
நோக்கிமுறைநாண்டம் நேர்மைமொழிமொழிந்து
பெண்ணாண்வரைக்கும் பெருங்கிழவிதான்வரைக்கும்

கண்ணுமாமதலை கைக்குழந்தைமுதலாய்
பாட்டுவித்தேசம் படிப்புவித்தேசமுதல்
ஆட்டுவித்தேச மாட்டிமிகவருத்தி
முன்னமைத்தபெண்ணை யெல்லாமிகப்பார்த்து
சொன்னமுறைபோல் சிணுஞ்செய்யலாமெனவே
இட்டாரொருகூஷம் யீசற்முதலெல்லோரும்
மாட்டாருஞ்சூஷம் வையகத்திலெயாகி
யாதிபதினெட்டு மாராட்டுப்பார்த்தனரெ
ஆதிச்சாதிதனிலெ யமைப்புப்போலுள்ளவற்கள்
தானிறைறந்தாடித் தண்மைமிகக்கூறி
வானிறைறச்சோதி மமமாய்க்குதித்தனரெ
இப்படியேசாணுரி லேற்றபெண்ணுணுவரை
அப்படியேநன்றாய் ஆராதனையாகி
பாருகங்காணப் பண்பாகக்கொண்டாடி
உமைபார்வதியெனவு முற்றமுத்தாரெனவும்
இமையோர்புகழும் லட்சுமிகாவெனவும்
சத்திகன்னிமாதரென்னுந்தார் குழலாள்தோழியெனும்
பத்தியுள்ளநல்ல பரமேசொரியெனவும்
மண்டகாட்டாளெனவும் மாதுநல்லாள்தோளியென்னும்
பண்டையுள்ளயீசொரியாள் பாக்கியவாட்டியெனும்
வள்ளிதெய்வானை வாய்த்தபகவதியெனவும்
பூமடந்தையென்னும் பெரியபிராட்டியெனும்
பார்மடந்தையென்னும் பத்திரமாகாளியெனும்
காகன்னியென்னும் நல்லதெய்வகன்னியெனும்
பாவைகைகாட்டும் பைங்கிளிமார்நாங்களென்னும்
இப்படியேநல்ல யேந்திழைமாரெல்லோரும்
அப்படியேநல்ல அவனிபெண்ணுர்பேரில்
ஆராதனையா யங்கங்குதான்கூடி
சீராகக்கூடிச் சேர்ந்துவருவார்தினமே
ஆண்பிள்ளைகள் பேரிலானசிவமாலெனவும்
நான்பிர்மாயென்றும் நல்லஅனுமனென்றும்
காலனென்னுமே மனென்னுங்கடிபிலக்கந்தனென்றும்
மாலவனின்மக்களென்னு மாமுனிமார்நாங்களென்னும்
தேவரிசியெனவுஞ் சிமிழ்க்கருடசேவனெனும்
தாவமுள்ளநல்லச் சன்னுசிமார்களென்னும்
ஆராதனையாயவர்கள்மிகவாடி
சீராகக்காண்டம் செப்பிமிகப்படிப்பார்
வருவார்தினமே மாயோனிடமதிலெ
கருவாயுதித்தக்காண்டம் மிகப்படிப்பார்
இப்படியேபெண்ணுணு மியாமமுறைப்படியே
அப்படிவந்து ஆடிமிகப்படிக்க
நல்லநாராயணரும் நாட்டமிகவறிந்து
வல்லபொருளுமனதுளதறிந்திருப்பார்
அறிந்துசிலநாளகமகிழ்ந்துதான்பார்த்து

செறிந்தகுணநாதன் தெய்திக்கணக்கதிலே
இதனைநடத்தவெண்ண முற்றிருக்கையில
உவமைபலசொல்லி வுற்றதெய்வகன்னியர்கள்
அனைவோரும்புகழுமரன் கைலைவாழ்ந்ததுவும்
சுனையாடப்போனதுவுந் தூயோனைடத்தினதுவும்
பிள்ளைதனைப்பெற்றதுவும் பெருங்வனத்தில்சென்றதுவும்
வள்ளல்சிவனை வருந்தித்தவம்புரிந்து
உலகில்மிகத்தோன்று முன்னவர்த்தமானமெல்லாம்
சிலைநுதலிகன்னிச் சொல்லிமிகப்படிப்பாள்
அப்போதிருமா லடக்கமிகமனதில்
செப்புவதெல்லாஞ் சிந்தைதனில்கொண்டிருந்தார்
உமைமகண்மைடக் காட்டாளுற்றபகவதியாள்
இமையோர்புகழு மேற்றகுலபார்பதியும்
சீதைமடந்தை சேயிழைமாரெல்லோரும்
மாதவனைநோக்கி வழங்கூறியேபடிப்பார்
பாவிக்கலியன்பழி நீசன்றோன்றினதால்
மேவிக்கலியில் மிகழூழ்கிமாயமதால்
மாயக்கலியை வதைக்குமந்நாளையிலே
தேசமதிலெங்களையும் திருக்கலியாணமுகித்து
எங்களுடநாயகனு ரிங்குவருவோமெனவும்
எங்களையுமிங்கே யிக்கோலமாய்வரவே
சொல்லியயச்சசாமி நீர்வந்தீரோ
பல்லுயிரும்பணியும் பரமனேநீர்வந்தீரோ
என்றுமடவாரிப் படியேயிசைய
பண்டுமுறைபோல் பரப்பிரமமாயிருக்கும்
எண்ணீத்திருமா லிறுதயத்திலேயடக்கி
மண்ணிலுள்ளோர்கள் வந்துமிகக்கூடிநிற்க
மேலோகத்தார்கள் யிறஞ்சிமிகப்பார்த்துநிற்க
பூலோகமெல்லாம் புதுமையெனப்பார்த்துநிற்க
அப்போதுமாயாதி யாகமத்தின்படியே
செப்போடுவொத்த தேச்த்திருப்பதியில்
வாழுகின்றதேவரையும் வாகாய்வரவழைத்து
நாழுக்குநான்சொன்ன ஞாயமுறைப்படியே
நடத்தாமலிப்போ நாயமீறிநீங்கள்
அடத்தமாய்செய்வதென்ன வல்லோருஞ்சொல்லுமென்றார்
உடனேஎல்லோரு முள்ளமிகத்தளன்று
இடமேகுளறியச் செப்பவாயில்லாமல்
புத்திமயங்கி பொறியழிந்துதேவரெல்லாம்
சக்திகெட்டார்போலே தானேவிறுவிறுத்து
நின்றநிலையை நெடியதிருமாலறிந்து
குன்றினில்க்கொண்டுக் கொழுவிலங்கில்த்தான்சேர்த்து
மன்றுவொருகுடைக்குள் வைகுண்டமாள்வரைக்கும்
இன்றுமுதலெக்குவரே யிருங்கோபாருவதிலே
வைத்தாரேநல்ல வடவாமுகமதிலே

செயித்தான்விதியெனவே தேவரெல்லாமிருந்தார்
அந்தவவதார மகிமையுடனடத்தி
சந்தானமான சத்திகன்னிமாரையினி
மாமணங்கள்செய்து மாதரேழுபேர்களுக்கும்
தாமதங்களன்றி சந்ததிகள்தான்கொடுத்தார்
இராச்சியமுங்கொடுத் தேற்றபசுவுங்கொடுத்து
இராச்சியமாள செய்யவேணுமெனவே
நிலைத்துத்திருமா னின்றிருதயத்தேயடக்கி
தன்த்தனங்கள்பாடித் தந்தனங்கள்போடலுற்றார்
தினத்தினங்கள்பாடி சிவவேடம்போடலுற்றார்

விருத்தம்

முன்னேகுருநாடைவருக்கு மீண்டுகொடுத்தோமிகக்கலியில்
பொன்றோர்மாறையுருவெடுத்து பொருப்பேறிமுனிகையிறைல்
சென்றேறுங்கூடுமிசைப் போட்டுச்சிறீரங்கமேகச்செல்வழியில்
மின்னேயிவர்களேள்வரையுமே விப்புணர்ந்தோமவ்வனத்தில்

விருத்தம்

வனத்தில்ப்புணர்ந்தமாதர்களை மக்களேளும்பெறவருளி
புனத்தில்க்காளிதனை வருத்திபிள்ளையேழுமிகயீந்து
இனத்தில்பிரிந்தமானது போலிவர்களேழுமடவாரை
வனத்திற்தவசுமிகப்புரிய மனைதக்கொடுத்துமீண்டோமே

விருத்தம்

மீண்டோங்கைலைக்கிருந்து பின்னுமெல்லியவர்தவம்பார்க்க
ஆண்டோர்சிவனொருமை யாளுமுவந்தவக்துக்கருள்புரிந்து
சான்றோரிடமேபிறவிசெய்து தாணிதனிலேலநாம்வருவோம்
என்றேவிடைகள்கொடுத் தயச்சயிளமாமாதர்வந்தனரே

நடை

முப்பிறவிசெய்த மொய்க்குழல்மார்வந்தனரேன்
நாப்பிறவிகொண்ட நாராயணர்மகிழ்ந்து
ஆடரம்பைமாரை யருமைமணம்கூட்டவென்று
வேடமிட்டார் வீரநாராயணரும்
நாராயணராய் நல்லதிருவேடமிட்டு
சீரானக்காவிச் சீலைமிகப்புரிந்து
ஒருதோளில்போக்கணமு முத்திராச்சமாலைகளும்
துருசமுடன்சிரசில் துளசிமாலைபுனைந்து
கையில்பிரம்பும் கனத்தச்சுரைக்கூடுடனே
மெய்யில்வெண்பதமு விஸ்த்தாரமாயணிந்து
வேலுமிகப்பிடித்து வேடமிகதரித்து
மாலுநிறமாய்னாய்த்தக் கொட்டில்மீதிருந்து
ஆகமத்திலுள்ள வறிவுஞானம்பேசி
பாகமதில்நிற்கும் பாலதியச்சான்றோரை
பார்த்துவருகளைத்து பச்சமாலேதுரைப்பார்

நால்திசையுமறிய நல்லகுலச்சான்றோரை
உங்களுடதாய்மாருற்ற கன்னிமார்களை நான்
எங்களுடவிதியா லிப்போமணஞ்சூடட
விதிவந்திருக்குதுகாண் வேளையிது ஆனதினால்
பெரியவுங்கதாய்மாரை போயழைத்துவாருமென்றார்
நால்திசையும்நீங்கள் நடந்துமிகச்சத்தமிட்டு
மாலதியபெண்ணை வரவழைத்துவாருமென்றார்
சீரானநூல்முறைக்குத் தேனேயெங்கள்தாய்மாரே
நாராயணர்க்கு நல்லமணஞ்சூட்டுதற்கு
நாளானநாளிதுவாம் நண்ணுதலேதாய்மாரே
தாளாமல்வாருமென்று சத்தமிட்டழையுமென்றார்
இப்படியேசொல்லியேற்ற புகள்ச்சான்றோரை
அப்படியேசொல்லி யழைத்தாரேசத்தமிட்டு
பாலருடசத்தம் பாவையர்கள்கேட்டுமிக
சீலமுடனெழுந்து தெய்வமடமாதர்வந்தார்
வந்துமிகநாரணரை வாழ்த்திமிகவணங்கி
சந்துஷ்டியாகதங்கள் தங்கள்வாக்கினின்று
முன்முறைகள்சொல்லி மொழிந்துமிகப்படித்தார்
தென்பதிகளான தெச்சணபூமியிலே
நான்வந்திருந்து நானிலத்துள்ளவர்க்கு
தீனம்பலதீர்த்து சிறிபண்டாரமெனவே
நாமமிகக்கூறி நாட்டிலிருப்போமெனவே
சொல்லியங்கடன்னைத் தொல்புவியில்வாருமென்று
நல்லவராய்ச்சான்றாருள் நாடிப்பிறவிசெய்தீர்
பிறந்துவளர்ந்து யென்பேருகேட்டவுடன்
மறந்திடாவண்ணம் வாருங்கோவென்றுசொல்லி
பிறவிசெய்நாயகரே பெரியவரேவந்திரே
கங்கைதிரட்டிக் கரைகண்டர்தன்சிரசில்
பெண்கள்ளேழுபேரும் பிரியமுடன்வாள்ந்திருந்து
யெகள்கர்ப்பெல்லா மீடழியவேதுணிந்து
சங்கையழித்தத் தலைவனேநீர்வந்தீரே
எங்களுடபிள்ளை யேழுமினவழியும்
அங்கங்குறையாமலவ் வழிகள்தான்முழுதும்
கொத்தோடேசேர்த்து குடும்பத்தோடேயடக்கி
பெற்றோர்களெல்லாம் பெருவாள்வுதானகொடுத்து
யெங்களையும்சேர்த்து ராச்சியமும்மருளி
மங்களமாய்வாள்வோமென்ற மாதவரேவந்தீரே
இனியிப்போதேள்வலையு மேற்றமணம்புரிந்து
வனிதவளும்மாயவரே வைத்தாளுமென்றுசொல்லி
பாடியேமாமடவார் பாதம்பணிந்துநிர்க்க
நாடியேயெம்பெருமாள் நல்லாகட்டெனவே
அருகில்மிகநிர்க்கும் அன்பானசான்றோரை
வருகவழைத்து வார்த்தைதமிகக்கூறலுற்றார்
எந்தனுக்குமுன்னமைத் தயிளங்குளலாளேள்பேரும்

வந்தனரேயிவர்கள் வளப்பமென்னசொல்லலுற்றார்
கன்னிதானேயிவர்கள் கள்ளிகளோபாருமென்றார்
உன்னிமனதிலுபாயமாய்த் தானுரைத்தார்
நடையுடைகள்பேச்சு நாரியர்கள் தன்குணங்கள்
மடமயிலின்சாடை மாதிரியைப்பாருமென்றார்
அப்போதுசான்றோ ரெல்லோருமேமகிழ்ந்து
இப்போதுஎங்களுக்கு யாதுந்தெரியாது
படைத்தவர்க்கேதெரியும் பாவையரினர்க்குணங்கள்
செடத்தமெல்லாமெங்களுக்கு தெரியாதெனவுரைத்தார்
மாயவர்தான்பார்த்து மாதுகளை தானோக்கி
தூயவர்தான்வார்த்தை சொல்லுவார்பெண்களுடன்
நான்எப்போதுங்களையும் நடுவனத்தில்கண்டதுதான்
தானெப்போவந்தேன் தார்குளலேநானறியேன்
காட்டிலேவந்ததெப்போ கர்ப்பமழித்ததெப்போ
பேட்டிசெய்துபிள்ளை பெற்றதெப்போநானறியேன்
ஒன்றுந்தெரியாது வுங்களைநான்கண்டதில்லை
பெண்டுகளேயிப்பேச்சுப் பேசாதேபோய்விடுங்கோ
மாயமாய்நீங்கள் மருட்டிவிழியாதுங்கோ
பாயமாயுங்கள் பகட்டிலடங்கேனென்
பண்டாரத்தோடே பழிமொழிகள்ப்பேசாதே
அண்டாதுவுங்கள் மொழிமகலநின்றுபோயிடுங்கோ
என்றுவடாத்தியமாயிவர்தான் மிகமொழிந்தார்
நின்றுநினைத்து நேரிழைமாரெல்லோரும்
அடர்ந்துமடவா ராகத்திரண்டேகூடி
தொடர்ந்துநெருங்கி தொட்டுப்பிடிக்கவென்று
தார்குளலிமுத்தசாஸ்த்திரத் தாளேதுரைப்பாள்
வாரணியுங்கூந்தல் மடவாரெறன்னங்கையரே
கள்ளக்கவுலாயக் கைமாயஞ்செய்துயன்று
மெள்ளநிகழ்ந்த மெக்குவாய்த்தாதனையும்
சென்றுபிடித்து செய்தியென்னக்கேளுமென்று
தன்றுபுகழ்சாஸ்திரத்தாள் தங்கையரைக்கண்காட்ட
மடவார்களெல்லாம் மாகோபமாய்வெகுண்டு
அடவாகமாயவரை யடர்ந்துபிடிக்கலுற்றார்

விருத்தம்

தேன்மொழிமாரேயெந்தன் சித்திரைத்தங்கைமாரே
கான்வனமதிலே நம்மைக்கைகலந்திளிவுசெய்த
மான்முனிதன்னைக்கண்டோம் வார்த்தையில்குழைக்கார்சோற்
வான்முனிதன்னைநீங்கள் வளையுங்கோசிணமெவென்றாள் [றை

விருத்தம்

செப்பிடமுத்தகன்னி தேவியாளறுபேரும்
அப்பிடவொன்றுபோலே யவர்வளைந்தாதிதன்னை
முப்பிடியெங்கள் தன்னைமொய்வனமதிலேவந்து
கர்ப்பினையிகழச்செய்த கள்வரேயென்றேறசூழ்ந்தார்

விருத்தம்

சூள்ந்தேநமது துயிலை முன்னஞ்சுழியஞ்செய் தமாமுனிவை
பூந்தநெருங்கித் துயிலுரியப்பிடித்தேயிழுத்து நாமீன்ற
சார்ந்தோர்மக்களேழுவரையும் தரவேளன்னசெய்தியென்று
ஓர்ந்தேகேள்ப்போமென்று சொல்லிஒன்றுபோலேவளைய
[லுற்றார்

விருத்தம்

வளைந்தபோதுமாயவரும் மனதுளுபாயமொன்றெடுத்து
இழந்தமொழிகள்சொன்னாக்கா விழப்பமிதுவேயாகுமென்று
குழைந்தவார்த்தைதமிகக்கூறி குழைந்தைதய்யேழுமினவளியும்
நுழைந்தேயெடுத்து நொடிப்பொழுதில்நேரேகொண்டுதாரே
[மென்றார்

தரு.

பிள்ளைநான் தாறோம்நீங்கள் பெற்றபிள்ளைநாம்தாறோம்
பிள்ளைநாம் தாறோம் இள்ளைமடவாரே
கள்ளமொழியில்லைஉள்ளதை சொல்லுகிறோம்பிள்ளையை
[நாம்தாறோம்
காட்டுவனத்திலே கண்டுங்கள்தன்னையும்
லோட்டுகள்பார்த்தினீருடுகலைதோற்றதும்
மேட்டுகளாய்யென்னை யெரிக்கத்துணிந்ததும்
பூட்டுகள்சொல்லாமல் பெண்ணேநீர்பெற்றிடும்பிள்ளையை
அருவனமீதிலே அமர்தவாழ்கங்கையில் [நாம்தாறோம்
கருபமாய்நீங்கள் சுனையாடும்வேளையில்
வருமொழிமீதுங்கள் வாய்மொழிமதங்கண்டு
கருதுவதுகொண்டுநீர்க்காட்டினீ லீன்றிடும்பிள்ளையை
உருவனமீதிலென் னுபாயத்தையறியாமல் [நாம்தாறோம்
முறுவல்செய்தென்னைநீர் மொழிந்ததுகண்டுநான
இறுவானமேலோக வேழுபூவியிரன
பெறுகநான்செய்திடப்பேணியேநீர் பெற்றபிள்ளையை

விருத்தம் [நாம்தாறோம்

மடமயில்மாதேநீங்கள் வந்தென்னைநெருக்கவேண்டாம்
தொடவும்நீர்நியாயமில்லை தூரவேயகலநின்று
அடவதில்பெற்றபிள்ளைக் கடையாளமறியச்சொன்னால்
உடனிப்போமதலைதந்து உலகமும்மருள்வோமென்றார்

விருத்தம்

அய்யனேக்குருவே யெங்களாதியேசோதியான
மெய்யனேஒப்பில்லாத வேதநல்மணியேகேள்மோ
வெய்யநல்மதலையீன்று வெள்க்கமுமிகவேயாகி
கையதுதப்பியோடக் கண்டமோமதலையென்றார்

சிந்து

மதலையைத்தாருமையா நாங்கள்பெற்ற
மதலையைத்தாருமையா

மதலையைத்தாருமெங்கள் வயிறெல்லாங்கொதிக்குது
குதலைமொழிகள்கேட்டுக் கொஞ்சிக்குழைந்திருக்க
மதலையைத்தாருமையா
பெற்றநாளின்றுவரைப் பிள்ளைதனைக்காணாமல்
மெத்தமனதுநொந்து மெய்யயர்ந்தளருதய்யா
மதலையைத்தாருமையா
வாலைப்பருவத்திலே வனத்தில்மயக்கமிட்டு
கோலமழித்தவேத கோலகாலமாமுனியே
மதலையைத்தாருமையா
பாலர்பெற்றநாள்முதலாய்ப் பன்னிரண்டாண்டுவரை
காலதுயிளகாமலேக் காட்டில்த்தவசிருந்தோம்
மதலையைத்தாருமையா
ஊணுறக்கமில்லை யொருவரின்தஞ்சமில்லை
மூணுநாலுகாலம்வரை மூண்டதவசிருந்தோம்
மதலையைத்தாருமையா
சிங்கங்கரடிபுலி திரியும்வனத்தினூடே
நங்கைமாரேழுபேரும் நாடித்தவசிருந்தோம்
மதலையைத்தாருமையா
இத்தனைநாளும்தவசிருந்து பின்னுநாங்களுந்தான்
பெற்றனமனுவயிற்றில்பபிறந் துவுதித்துவந்தோம்
மதலையைத்தாருமையா
முன்னிருந்தசெல்வமென்ன மூதூர்ச்சிறப்புமென்ன
மன்னுயர்ந்தமாதுமையை மறந்துகலியில்வந்தோம்
மதலையைத்தாருமையா
ஆண்டசிறப்புயென்ன மருஞ்சுனையாடலென்ன
காண்டமநிறைறவேற்றுதர்க்கோகலியிலுதித்துவந்தோம்
மதலையைத்தாருமையா
உண்டிருந்தசெல்வமென்னஒடுத்த துயில்ஞாயமென்ன
கொண்டிருந்தவிதிப்பயனோ கூறுகலிமீதிலவந்தோம்
மதலையைத்தாருமையா
பொன்னும்பந்தலாரமென்ன பூத்தொடுக்குஞ்சாரமென்ன
முன்னுரைத்துவிட்டதுவோ மூண்டகலிமீதில்வந்தோம்
மதலையைத்தாருமையா
பந்தடிக்கும்வீரமென்ன பைம்பொன்னிறமேடையென்ன
குந்தடிக்கமாவுலகில்குதித்திப் பிறந்துவந்தோம்
மதலையைத்தாருமையா
கனியழியுமுன்னேகாதல் தனைபெற்றதினால்
நின்னுபிள்ளைபாராமலே நெடுகநடந்துவிட்டோம்
மதலையைத்தாருமையா
கண்டுபிள்ளைதானெடுத்துக் கமலமுதத்தோடணைத்து
பெண்டேழும்பால்கொடாமலப் பெருக்வனத்தில்ச்சென்றோம்
யதலையைத்தாருமையா
பாலினிலல்லமுர்தம் பாழாச்சொரியுதையோ
பாலழகரெங்களுட மனக்கவலையைத்தீர்க்க

மதலையைத் தாருமையா
வர்ணநிறமதுவும் மக்களுடசாயலதும்
கண்ணதிலே கண்டறிவோம் கையதிலே தாருமையா
மதலையைத் தாருமையா
அங்கமெல்லாஞ் சோருதையோ ஆவிமெத்த வாடுதையோ
தங்கமணி நாங்கள் பெற்ற தவமணியைத் தாருமையா
மதலையைத் தாருமையா
மங்காததெய்வகுலமக்களேழு மென்வளியும்
சிங்காரமாகவிப்போ சீக்கிரம்நீர் தாருமையா
மதலையைத் தாருமையா

விருத்தம்

மதலையுந்தந்துயெங்கள் மனச்சடவெல்லாமாற்றி
குதலைதனக்குயிந்தக் குருமுடிச்சூட்டித்தர்ம
பதியுகமதிலேயெங்கள் பார்முடிமன்னராக
நிதமிருந்தர்சேமாள நின்மக்கள் தருவீரென்றார்

விருத்தம்

தருவீரெனவுரைக்குமடமாதே நீங்கள்சந்ததியை
பெற்றிடத்தில்த்தயவாய்பாரு
பெருநிலைவாழ்ந்திருப்பா ரங்கேசென்று
பெற்றிடத்தில் பார்க்குலகைலுண்டுலங்கே
மருவியென்னைக்கேள்க்காதேக்காட்டிலூடேவளர்ந்திருப்பார்
கண்டுகொள்வீர் இட்டஞ்சொன்னேன்
சருவியென்னைநெருங்காதே மடவீரெல்லாஞ்சந்ததியை
தேடிவனஞ்சொல்லுவீரே

விருத்தம்

சொல்லுவீரெனமொழிந்ததேனை கண்ணேசீமானே
காமாதுபுரக்குமாலே
பல்லுயிருமிகப்படைத்தபரங்கிருவானே பருவனத்தி
லெங்களை நீர்ப்பற்றிவந்து
தொல்லைவினைசெய்துநாஞ் சுமந்தேபெற்றே
சுற்றகுலமான தெய்வச்சான்றோர்தன்னை
இல்லிடத்திலிப்போது தருகிலாயல்யிளுத்
தும்மைச்சந்திதியிலே யேற்றுவோமே

விருத்தம்

சந்திதியிலேத்துவோமென்ற மாதேகேளு தருவதுண்டோ
முன்கடன்கள்தந்ததுண்டோ
பந்தியழித்துங்களுடபேச்சைநாலும் பகருவேனுங்களை
யார்பழித்துயேச
முந்தியிலேயுரைத்திட்டேனோடிப்போங்கோவுலக
நருளறிந்தாக்கால்ச்சிரிக்கலாகும்
சிந்தனைக்கேடாகும்வரை நிர்க்கவேண்டாம் தேன்மொழியே
மறுவிடம்போய்த்தேடுவீரே

விருத்தம்

தேடுவீரெனமொழிந்தயிந்திரச்சாலந்தெய்வமடவர்ரோடு
    செலுத்தவேண்டாம்
நாடுபதிகாவறியுமதுகள்ளஞாயமது   மெங்களொடு
    நவிலவேண்டாம்
வீடுவழிதோறும்விருந்துண்டுமுன்னேமெல்லிமடவார்
    சிலரைகொள்ளைகொண்டு
பாடுபட்டபாட்டையினிநாங்கள்   சொன்னால்பாரிலுள்ளோ
    ரேசிப்பளிப்பார்காணும்   [ரும்மை

விருத்தம்

பளிப்பரெனசொன்னயிளம்பாவைமாரே   பாரிலுள்ளோரறி
    வார்கள்பச்சமாலின்
களிப்பதுவுங்காண்டமுறைநூல்கடாறுங்காரணத்தை
    சொல்வார்கள்கருதிக்கேளு
சுழிப்பதுவுமமைப்பதுவும்நமக்குள்ளாகும்   தோகையரே
    யிதுவெனதுசொந்தவித்தை
குழிப்பதுவில்ச்சுனையாடிமதலை   யீன்றநீதாலமதை
    சொன்னாக்கால்குறைவதாமே
குறைவதாமெனவுரைத்தகுறவாகேளும்   கோவேங்கிரி
    வாழும்குலமாமாதர்
மறைமுதல்வானோர்சிவனார்க்கு   நாங்கள்வந்துச்சுனையாடி
    கங்கைதிரட்டியேக
துறையறியாக்களவாண்டுதோய்ந்த   கள்வாதொல்
    புவிகளறியாதோவுன்சுத்தக்கள்ளம்
இறையளவுமெய்யில்லாப்பொய்யே   சொல்லுநீமாளிக்கள்ள
    ரெனவெவருஞ்சொல்வார்
கள்ளெனச்சொல்லிவந்தமாதேநீங்கள்   களவாண்டீர்
    கைலையதிலீசர்முன்பில்
வெள்ளமதுதிரளாமல்க்   கள்ளத்தாலேவெம்மருண்டு
    நின்றவிதவெள்க்கங்கண்டு
வள்ளல்சிவனாறிந்துகலியில்ச்   சான்றோர்மேல்வழியதிலே
    பிறக்கவென்றுசபித்தார்முன்னே
உள்ளதெல்லாஞ்சொல்லிடுவேனோடிப்போங்கோ   ஓகோகோ
    வெனச்சொல்லியுறுக்கிறாரே
உறுக்கிநீருரைத்தசுனையுமக்கேயல்லா   லோவியங்களேன்
    பேருக்குமுண்டோசொல்லும்
இறுக்கிவைத்தநீரிளகச்செய்தகள்ளம்   யீசர்முதல்
    வானோர்கள்   ளவருஞ்சொல்வார்
சிறுக்கிமிடைமாதருடவீட்டில்   வெண்ணைதிருடியுண்ட
    கள்வரெனச்சொல்வாரும்மை
பொறுக்கயினிவாட்டோங்கணுமது   ஞாயம்புகன்றிடுவோமினி
    யண்டம்பொடியத்தானே

விருத்தம்

புட்டுக்காய்வைகை தனில்மண் சுமந்து பிரம்படிகள்
பட்டதுவும்போதாவண்ணம்
கெட்டுமிகப்பட்டிரோயிடைச்சிகையால் கேள்வியில்லா
முப்புரத்தில்க்கிழவன்போல
குட்டுமிகப்பட்டுமதுவீசைதன்னில்க் குறுங்கண்ணி
போட்டிழுக்கக்குனியவைத்து
பொட்டுவதுகுலைத்திடுவோம் நாங்கள்பெற்றபிள்ளைதனைத்
தந்துப்புவியாளவைப்பீர்

விருத்தம்

ஆடெடுத்தகள்வரெல்லோவுமக்குச்சூடுவணுவளவுந்
தோற்றுமலந்துயெந்த
நாடெடுத்தஇடமெல்லாம்வேசம் போட்டுநாண
மொன்றில்லாமல்நாரிமார்தன்
வீடெடுத்தமனைதோறுமிருட்டுவேளை வேசையுடன்கூடி
விளையாடிக்கள்ள
கூடெடுத்தமுறையல்லோவெங்கள் தன்னைக்குவலயத்தில்
கள்ளியெனக்கூறினீரே

விருத்தம்

இன்னமுண்டுமக்கு வெகுபங்கத்தானுமெடுத்துரைத்
தாலிப்போது விழப்பமாகும்
முன்னமைத்தபாலரையுமினத்திர்ச் சேர்க்கைமுழுவதையுந்
தந்துபுவியாளவைப்பீர்
இன்னமிப்போதாராமலிருந்தீராலீரேழு
யுகமறியயிழுத்தும்மை
அன்னமதுவருந்தாமல்மறித்து கொள்வோமதுவறிந்து
பாலரைத்தந்தாளுவீரே

விருத்தம்

பாலரைத்தந்தாளுவீரெனமொழிந்தபாவைமாரேபகர்ப்
களித்துவெள்ளிகுதிக்குநாழை [பொழுது
காலமேநீரெல்லோருமவந்தீரானால் கதிரவனும்போயடைந்து
கங்குலாகும்
சீலமுடன்தென்றலுக்குமழைக்கும் மேலோச்சிட்டெழுதி
தேவரையும்வருத்தியிங்கே
கோலமணமுங்களைநான்புரிந்துகொள்வேன்குடிலதுக்குப்
போயமதுகுடித்துவாரும்

விருத்தம்

வாருமெனமங்கையர்க்கு விடையருளிமாயன்வருணனுக்குந்
தென்றலுக்கும்வானலோக
ஊருமிகவறிவதர்க்கு வோலைதானுமுடனெழுதி
யயச்சிடவேவந்தார்வானோர்

பாருடனேசங்கமதுதிரண்டுகூடிபாவாணர்கீதமுறைபாடிநிர்க்க
சீருடனேகதிரவன்போயடைந்து மீண்டுதினகரனு
முதித்து வெள்ளிதோன்றிற்றென்று

விருத்தம்

தோன்றியபொழுதேவானோர் ஈசர்மாதுதுதிமுகனும்
நான்முகனும் தொல்விமாதும்
கூன்றிசிரிசிதேவரிசிவேதபான குணயிருள்சிகிண்யிருள்சி
குலமாமாது
தான்றுசாசோதிபகவதியின் மாதுசதாகோடி
தேவரம்பைசங்கமாக
மன்னுபுசழ்நாரணருக்குந் தெய்வகன்னிமடவார்க்கு
முகூர்த்தமெனவந்தாரங்கே

விருத்தம்

வானமதிலிடம்மரணமுழங்கத் தேவர்மலர்மாரிசலமாரி
வானோர்தூவி
நான்முகனும்வேதமுறைமுகூர்த்தங்கூற நாரிமார்
குரவையிடநமனுமாற
தானமுறைமாமடவார் சமனங்கூறத்தரணிதனில்
காரணர்க்குந்தையலான
மேன்முகில்மாதர்க்கு மணமாமென்றுமேலோகபந்தலிது
விண்ணோரிட்டார்

விருத்தம்

பந்தலுக்குநமனுதிகாலதாக பக்கம்பதினைந்தும்
வழைப்பரப்பதாக
சந்தமுடன்மேல்கட்டிமறையதாகச் சாருமேல்
மேந்ததுவேசமையமாக
அந்தமுறைசூரியனும் விழக்கதாகவலங்கிரதம்
வானக்காயதுவேயாக
சொந்தமுள்ளசிவமதுவே பீடமாகத்தேவரெல்லாஞ்
செய்துபந்தல்ச்சிறப்பித்தாரே

விருத்தம்

சிறப்பித்தோமென்றுமகாதேவரெல்லாம் திருமாலினடி
பணிந்துசொல்வாரப்போ
பிறப்பித்தபெம்மானேயெவர்க்கு மாய்ந்துபேணி
யமுதளித்துவுயிரனைத்துங்காக்கும்
உறப்பித்தமாலோனே அய்யாவுந்தன்வுதவியினால்
பந்தலதுவிதானஞ்செய்தோம்
நிறப்பித்தமணமதுக்கு நாங்கள்செய்யுந்நிசவேலை
இன்னதெனநிகழ்த்துவீரே

விருத்தம்

தேவருரையதனைமிகக்கேட்டு மாயன்திருமனதுமகிழ்ந்து
வாய்திறந்துசொல்வார்
மூவருரைமாறுமலெனக்கு முன்னேமொழிந்ததெய்வ
மாதர்களைமுகிழ்த்தஞ்செய்ய
நாவதுரைவருணனோடு வாய்வுதானுந்நளிரமலர்
தூவியதுகுளிரவீச
தேவருரைசெய்துமிக இல்லுமென்றுதெய்வமடவார்
வரவேசிந்தித்தாரே

விருத்தம்

சிந்தித்தவுடனேயிந்தத் தேன்மொழிமாதரெல்லாம்வந்
தனரடியைப்போற்றி வணங்கிமேநாங்கள்பெற்ற
சந்ததியேழுபேரும் தன்னுடனேகளொக்கதந்துநலம்புவியை
யாளத்தருவீரென்தலைவாயென்றார்

விருத்தம்

தருவீரெனச்சொன்ன குலமாதேநீங்கள்தலைவர்எங்கள்
மக்களையுமதருகவுங்கள்
மருவினியகருவதிலேவுதிக்கயின்ற மனுவழிமை
யென்முன்னேவருகச்செயதால்
தருமினையசொத்தாஸ்தி பொன்னுங்காசுந்தாறதுவுங்
கொடுப்பதுவஞ்சையிலேபேசி
பெருவுங்கள்தன்னைமணஞ்செய்து நீங்கள்பெற்றபிள்ளை
தந்துபுவியாளவைப்பேன்

விருத்தம்

புவியாளவைப்பேனெனவுரைத்தீரெங்கள் பொன்மானே
கண்மணியேபுரந்தமாலே
கவிஞ்ஞோர்கள்போற்றுமதக்கண்ணே தேனேகாயாம்பு
மேனியரேகடவுளாரே
இவ்லோககலியதிலே பிறந்ததாலேயிதுநாளு
வரையன்னமீந்தபேர்கள்
செவியானுன்பதமடைந்தாலவர்களேது செய்வார்க
ளெங்களொருசேர்க்கைதானே

விருத்தம்

சேர்க்கையுண்டோவெலா மொழிந்தமானேபெண்ணேதேன்
மொழியேயுங்களுக்குதெரியாவண்ணம்
வார்க்கையதுசொல்லாதோ நமதுவாழ்வுமக்களுடை
வாள்வதுமொன்றுபோலே
மார்க்கமுடன்வைத்தாசுவாள நானுமனதிலேநினைத்
திருக்கும்வளமையாலே
கோர்க்கையிதுவவர் கொடுக்கல்வாங்கல்தன்னைக்
கூறிமிகக்கேட்டுமணங்கூடுவேனே

விருத்தம்

மணங்கூடுவேனெனவே யுரைக்கமாயன் மனுவளியிலுதித்த
குலச்சான்ரேரெல்லாம்
அணங்குயினவழிபோலேயவர்கள் வந்துமாயனடி
போற்றிமிகவன்பாய்நிற்க
குணங்குறிகள்கண்டுமிகவரியோன்மெச்சிகொடுப்பதென்ன
யிவர்களோநான்மணங்கள்செய்தால்
பணங்கள்மிப்பொன்காசு செம்பசெயபாவையர்க்குச்
சிதனங்கள்பகருவீரே

விருத்தம்

பகருவீரெனமொழிந்தமையமா நீரும்பதிமெமென்ன
வெங்களுக்குபண்பாயீவீர்
உகருமெனச்சொல்லியே சான்ரேரெல்லாமுடைய
குலச்சொக்கருமேயுரைப்பார்பின்னும்
தகருமோநான்தருகுந்தங்ககாசு சதாகோடி
யெண்ணமதுதானேயில்லே
நீகருவீர்நீங்கள்தருஞ்சொத்தையெல்லாம் நினைக்கறிய
சொல்லிடுங்கோநிசமாயென்ருர்

விருத்தம்

ஆண்டவரேயிப்பதியங் தருவீராளுல்யாமடியா
ராளுகின்றவஸ்துவெல்லாம்
கூண்டபண்டம்பொன்னுடமையாடு மாடுகுருபானே
யாங்கள்வரையுமக்குச்சொந்தம்
மீண்டும்மைமுக்காலுமுமக்குநாங்கள் விலேயடிமையானோம்
காண்விரையமாலே
பாண்டவரைகாத்துரச்சித்தாண்டாப்போலேபாலவயரு
மக்களுமுன்பக்கந்தானே

விருத்தம்

பக்கமதுஎன்றவுடன் மாயன்ருலும்பதருதேவுங்களேயுங்
கொத்துக்கொள்வேன்
ஒக்கவெனக்குங்களேயுமாண்டுகொள்வேனொன்றுபோலே
யிருந்துபுவியாள்வோம்நாமும்
தர்க்கமதுயில்லேயப்பாயிந்தவார்த்தை தந்ததுவுமீந்ததுவுந்
தவறேறயில்லே
மிக்கதெய்வகன்னியரைமணங்கள்செய்ய மெல்லிகையை
பிடித்தெனக்குவிடுருவீரே

விருத்தம்

கைபிடித்துத்தாருமென வுரைத்திரையாகணவரெல்லோ
முன்னவர்க்குக்கருணேமாலே
மெய்ப்பிடித்தமெல்லியருந் தேவியல்லொமேஇனிக
ளறியவவதாரஞ்செய்தீர்

எப்படித்தாளுங்கள் கையைப்பிடித்துயீயயிவ்வுலகி
லவதாரயிகனை தானோ
எப்படியோமறியோங்காணென்று சொல்லியேந்திழைமார்
கைபிடித்துயீவலுற்றார்

விருத்தம்

ஈந்திடவேமாயவரும் தங்கத்தாலோத்னவொளிபோல
வீசுந்தாலிதன்னை
மாய்ந்துமிகப்போகாமல்த் தாலிவாளமகாதர்டி
யுகம்வாளமாதும்வாழ
ஏந்தும்புவிதர்மமது தனைத்துவாளஈசர்
முதலெல்லோருமிருந்துவாழ
சாந்தகுலச்சான்றோர்கள் தனைத்துவாளதாலிமிகவாள
வென்றுதரித்தார்தாலி

விருத்தம்

தாலிமிகத்தரிக்குகையில் மாதரோடுத்தமனிய
னாத்னுமகிழ்ந்துதானேதுசொல்வார்
கேலிமிகவுரையாதுங்கோ யின்னங்கெணிமடவா
ரனேகமுண்டுமணங்கள்செய்ய
சோலியல்லோவாச்சுதென்று நினையாதுங்கோ
தொல்புவியையாசாள்வீர்நிச்சமேசொன்னேன்
நாலினுடசூச்சமகாகோடியுண்டு மனதுசடையாயல்
மிகவாளுவீரே

விருத்தம்

வாளுவீர்கூடுவிட்டுக்கூடுபாய்வேன் மறுவுருபாய்ந்து
வுங்கள்மனதில்வாழ்வேன்
மாளுவேன்முழித்துப் பின்வருவேனுங்கள்மனதலைந்து
வெனையிகழ்ந்துமாளாதுங்கோ
தோளிலேயிருந்து பலசூச்சஞ்செய்வேன்தோகையரே
நீங்களெல்லாமெனதுவாயம்
நாளிலேயறிந்துமிக கண்டுகொள்ளுநாரணரின்
நடப்பிதுவேஞாயம்சொன்னேமே

விருத்தம்

சொன்னமொழிதனைமறந்து நீங்களெல்லாம்தூசணித்து
யெனைக்கபடமெண்ணாதுங்கோ
என்னுடையதொழிலிதுவே வுங்களோடுவிருந்து
தர்மமுடிசூடியாளுமட்டும்
பொன்னுடையநாடதுக்கு வானோர்தம்மைபோக
விடைகொடுக்கவவர்போனாரங்கே
கன்னிமடவார்கையைப் பிடித்துக்கொண்டுகருணைபதித்
தெருவீதிவருகின்றாரே

சிந்து

தெருவீதிநாம்வருவோமெந்தன் தேவிமாரேகன்னிநாயகமே
மருவினிய கன்னியரே பதிவலங்கள்சுற்றிநாம்வருவோம்
கண்மணியேயகாரணரே உடெககாயாம்புமேனியரே
மண்ணேழுமழந்தவரே உகமாயவரேநாம்வலம்வருவோம்
பெண்ணரசேமாமயிலே நமதுபெருமைப்பதிவலம்வருவோம்
தண்ணமுள்ளதேவிமாரே நமதுதர்மபதிவலம்வருவோம்
ஆண்டமணிநாயகமே உலகாண்டருளுமென்கண்மணியே
காண்டம்நிறைவேற்றவந்த யெங்கள்கணவணாரேநாம்வலம்
[வருவோம்
பொர்மைப்பதிவலம்வருவோம்கலிபொடியனாமம்போட்
டிடுவோம்
தர்மதுதளைக்கச்சொல்வோம்பதிதானேவலம்தான்வருவோம்
பொல்லாதவகையழித்து சாமிபுதுப்பூமிதோணவைத்து
கல்லாதார்கருவறுத்துச்சுவாமி கதிகபதிவலம்வருவோம்
நாடும்பதித்தலங்கள்வாளும்பெண்ணே நம்முடையினங்கள்
[வாளும்
கேடுகலிகோடுவதும் பெண்ணேகிளர்ந்தபதிவலம்வருவோம்
ஆகாத்தபேரையெல்லாம் சுவாமியக்கினிக்குவிருந்தளித்து
வாகாகதர்மபதி வாளும்பதிவலம்வருவோம்
முன்குறோணிவுதிரமதால் லுதித்துவந்தக்குலங்களெல்லாம்
தன்குணத்தால் மாண்டுபோகத் தர்மபதிவலம்வருவோம்
மாத்தாணெளியவேணு மக்களெல்லாம்வாளவேணும்
காத்தோரைக்கய்விடாமல் நாமள்கருணைபதிவலம்வருவோம்
தெண்டமிறைபொய்க்களவு செய்யும்வண்டகுலங்களெல்லாம்
கொண்டகலிகூடமாண்டு குருநாதபதிவலம்வருவோம்
வீணானகலியுகத்தைதசுவாமி வெய்யோனுக்கமுதளித்து
சாணாரைவைத்தாளத் தர்மபதிவலம்வருவோம்
நாடும்பதிதுலங்குதெடி நல்லசிலைகுதித்ததடி
ஆடுமாடுமருகுதடி காத்தஆவினங்கள்தோணுதெடி
நல்லபதிதுலங்கணுமே நாடுதர்மமாகணுமே
பொல்லாப்பதுவொழியணுமே சுவாமிபுத்தியொன்றாய்க்குவி
[யணுமே
கோவில்தெருதுலங்கணுமே நம்மள்கோட்டைவெளியாகணுமே
தேவருடநல்திருநாள் பெண்ணேதினமுவந்துகூடணுமே
தங்கத்தொட்டில்தண்டாயமும் தாண்டும்பதிவீதிகளும்தலத்
[தில்வந்துகூடணுமே
சங்கையோடுடம்மானமும் தலத்தில்வந்துதோணணுமே
கோட்டையிட்டுகொடியுங்கெட்டி கொத்தளமாய்மேடைசெய்து
நாட்டையெல்லாந்தான்கிலிக்கி நமக்குபதியேறணுமே
நம்பினோரைகாக்கணுமே நாடுகெட்டியாளணுமே
அம்பலங்களேறணுமே யலதாரங்கள்கட்டணுமே
சிங்காதலமேறணுமே நிவெட்டிகள்போடணுமே

கண்காச்சை காணணுமே பெண்ணேகன்னியரைக் கைப்பிடித்
[தால்
பாக்கியங்கள் பெருகணுமே சுவாமி பாரிலுள்ளோர் காணுதற்கு
ஆக்கிரகங்கள் படைக்கணுமே யமுதருந்திவாளணுமே
மக்கள் பெற்றுவாளணுமே வந்துமெந்தன் கால்பிடித்து
ஒக்கநின்றுராட்டணுமே பெண்யுற்றபள்ளிமெத்தைதரூழ
பால்பசுவுபெருகணுமே பஞ்சணையில் கொஞ்சணுமே
தூலருமையறியாமலே கலி தொல்புவியும் மயங்கணுமே
சமுசாரியாகணுமே தலையில் சோறுசுமக்கணுமே
ஒவுதாரியாகணுமே வுங்களை நாணடிக்கணுமே
அயலூர்போகணுமே யளைக்கநீரும் வரவேணுமே
கயல்விளிமாரொருதர்க்கொரு தர்சற்றுதல்கள் கொள்ளணுமே
நானும் வந்துவிரத்தணுமே பெண்ணே நல்லமொழிசொல்ல
[ணுமே
தேனும்பாலும்போலே நாமள் தேசமதில் வாளணுமே
கண்டுயிர்த்த நீசகுலம் களிப்புச்சொல்லியும் மைமிக
பெண்டுகள்க்கு வீங்கியென்று பொல்லாப்பயலே சணுமே
காரணத்தை யறியாமலே கலிப்பயல்கள் தானநகைத்தால்
மாரணத்தின் தீர்வை தன்னில் மடுநரகம் பூத்திடுவேன்
செம்பவளநர்ப்பதியின் தெருவலங்கள் சுத்திவந்தோம்
பொன்பதிக்குள் நாமுள்புக்கிமறுபொழுது வந்தால் வருவோ
[மைய்யா
சோபனமே சோபனமே திருநடனச்சோபனமே
தேவர்குருநாரணர்க்குத் தேவியர்க்குஞ்சோபனமே
பூமலர்ந்தயீசொரிக்கு பொன்தேவிமாதுமைக்கும்
காமனந்தநாரணர்க்கும் தெய்வகன்னியர்க்குஞ்சோபனமே
பூமடந்தைநாயகியுக்கும் பொன்னுமண்டைக்காட்டாளுக்கும்
பார்மடந்தைலச்சுமிக்கும் சிவபகவதிக்குஞ்சோபனமோ
தெய்வகன்னிநாயகிக்கும் சிறந்தவள்ளிமடந்தையர்க்கும்
ஐய்வர்குலநாரணர்க்கும் கன்னியரிவையருக்குஞ்சோபனமே

விருத்தம்

துடியிடைக்கன்னிமாரைத் திருமணந்திருமால்செய்து
குடிபுகள்சான்றோர்மக்கள் குரவைகள்முளக்கத்தோடு
திடிரெனதெருக்கள்ச் சுற்றிதேவியுமன்னராக
படிமிசைபதியினுள்ளே பதிந்துவந்திருந்தான்றே

நடை

மாதுநல்லாரேள்வரைம் மணமுகித்துமாயவரும்
நிதகலும்நர்பதியில் சிறந்தங்கினிருந்தார்
கன்னிமாரேள்வரையும் கைப்பிடித்துமாயவரும்
பொன்னும்பதியில் புகழ்ந்தத்திருநாள்நடத்தி
நித்தந்திருநாள் நிதநடத்தவேணுமென்று
சித்தமதில்நாரணரும் சிந்தித்தாரம்மானை

எற்றிசையுமுள்ள ஏற்றபுகழ்சான்றோரும்
முற்றியடைந்தோமோ மோக்ஷமதுபெற்றோமே
நமமுடையதாயார் நல்லதெய்வகன்னியரை
சென்மத்திருமால்த் திருமணங்கள்செய்ததினால்
குற்றமில்லைநம்முடைய குலத்திக்கினியனவே
சிற்றமதுநாதன் செயல்நமக்குண்டெனவே
வந்துமிகஎல்லோரும் வாழ்த்திமிகப்பணிந்து
சிந்துபுகழ்தெய்வ மடவாரையுந்தொழுது
நல்லபண்டமானதுவும் நாடும்நிதியதுவும்
வல்லகுலச்சான்றோர் மாதாப்பிதாவதுக்கும்
கொடுத்தாரேநல்ல குவலயத்தில்மக்களெல்லாம்
விடுத்ததெல்லாம் தான்வேண்டிமிகயேற்றார்மாயவரும்
பலன்பெற்றோமென்று பாலதியச்சான்றோர்கள்
குலமெல்லாம்வந்து கூடினார்மாயனிடம்
அப்போதுநாதன் கர்த்தவமேபுரிந்து
இப்போதிருநாளிகளை நடத்தவென்று
நாளானநாளிதுதான் நாதனபிறந்தநாளும்
நாளாதுஞாயறதுவே சுவாமிபிறந்தநாள்
இந்நாள்முதல் திருநாளிகளைமிகநடத்தி
பொன்னுநாரணரும பூரித்தாரமமனை
ஞாயறுச்சைத்திருநாள் நான்பார்க்கபோவோமென
தேயவதிலுள்ளத் தெய்வகுலச்சான்றோர்கள்
பாலுக்குநெல்லும் பண்பாய்ச்சிறுமணியும
மாலுக்குநல்ல மகிழ்ந்தபிச்சிமாலைகளும்
கொழுந்துபனிநீர்சந்தனமும் குலுங்காவிடலைகளும்
தென்னங்காய்மாம்பழமும் திகட்டாப்பலாங்கனியும்
வாழைகனிஇலையும் வகுத்தகமுகினகுலையும்
நாளைக்குத்திருநாள் நமக்குமுந்திப்போவோமென
இத்தனையுங்கொண்டிசைந்த திருநாள்வகைக்கு
பத்துமூணாறு பணமுமிகயெடுத்து
காதுக்குநல்லாக யேத்தபணியாபரணம்
மார்புக்கியல்பாய் கூளர்கோர்வையுமணிந்து
பெட்டிச்சீலையுடுத்து பெரியநாமப்பொட்டுமிட்டு
கட்டளமுமெடுத்து கண்ணார்த்திருநாள்கனவே
மக்கள்மணவாளன் மனைவிக்கிழவியுடன்
சிக்கெனவேநாதன் திருநாள்க்குப்போவோமென
வருவார்க்கிழமை மாதந்தவறாமல்
திருமால்அகமகிழ்ந்து திருநாள்முறைநடத்தி
கொட்டாலையிட்டு குவிந்தபணிமேடைவைத்து
பட்டாலேமேல்கட்டி பழங்கனிகள்தான்தூக்கி
பிச்சுமாலைதூக்கி பெருவாடைதான்தொழித்து
சந்தனம்கஸ்தூரி சவ்வாதுபுனுகுடனே
சித்தரெவரும்போற்ற தேன்கனிகள்மாங்கனிகள்

வெற்றிலைபாக்கு மிகுவாய்பழங்களுடன்
தத்திதத்தியாக சதகோடியாய்க்குவித்து
பால்பாயுதங்கள்வைத்து பாரித்துநல்பதிக்குள்
மாலாயிருந்து மகிழுமலங்கரித்து
தெருவில்காழாஞ்சித் திவெட்டியும்பிடித்து
மருவினியமாதர்மார் குரவைமலமலென
டம்பானநாகசுரம் நல்லவாணம்வெடிகள்
மும்மானமுழக்கம்போலே மிகமுழங்க
கன்னிமாரெல்லாம் காவிப்பட்டாடைகொண்டு
பின்னுமடவார்க்குப் பெரியஉத்திராச்சமிட்டு
நாமப்பொட்டிட்டு நல்லயத்தாப்புமிட்டு
மாமடவாரெல்லாம் மகிழ்ந்துதெருவில்வர
எந்தன்பிரானும் மெடுத்தார்ஒருவேடம்
கர்ளைதக்காவிப்பூண்டு கனத்தவுற்றிராச்சமிட்டு
கையதிலேமாத்திரைக்கோல் கமுக்கூட்டிலேபிரம்பும்
மெய்யதிலேவெண்பதமும் மினுக்கமுடனணிந்து
உச்சிகொண்டைகோர்த்து உயர்ந்தச்சுரைக்குடுமிட்டு
மெச்சித்துளசி மிகுமாலையுமணிந்து
பிச்சிமாலைபுனைந்து பெண்கள்மிகச்சூழ்ந்துவர
சச்சிசங்கமாக சனங்கள்சான்றோர்கள்வர
கைக்குள்நின்றசிசர் காயாஸ்திரமணிந்து
மெய்க்குருவைப்போற்றி மேலிலுத்திராச்சமிட்டு
கையதிலேமாத்திரக்கோல் களத்தச்சுரைக்குடுமிட்டு
மெய்யதியபொக்கணமும் மேலதியநாமமிட்டு
அய்யாகுருவே யென்றவர்கள்மிகப்போற்றிவர
துய்யாதுவையல் துவைத்தபண்டாரமெல்லாம்
காவியுடனுத்திராசங்கனத்த செம்புகடுக்கமிட்டு
காவில்சிவாயாவெனவே நாட்டமிகவாய்வரவே
ஆராதனையாய் யருள்கொண்டபெண்ணுனும்
நாராயணர்பேரில் நல்கீதம்பாடிவர
தங்கரத்தினத்தொட்டியிலே சுவாமிமிகயிருந்து
பெண்கள்மிகநன்றாய் பெருகக்குரவையிட
சங்குதொனிக்க சகலோருமேபோற்ற
சிங்கமுகலலச்சுமியுந் திருமுகத்தினின்றிலங்க
சான்றோர்கள்தொட்டில் தண்டயமுஞ்சுமந்து
ஆண்டோர்பதியை யலங்கிர்தமாயிவர
கன்னிமார்நாதன் கைக்குளொழுங்காய்வரவே
மின்னும்பதித்தெருவும் மிகவேயிந்தபவுசாய்
உலாவிவரவேஉற்ற தெய்வவானோர்கள்
குலாவிமகிழ்ந்து கிருபையுள்ளநாரணரும்
பூமாரிபொன்மாரிப் பெரியச்சிலமாரி
நாமாரிவானோர் நாடிமிகத்தெளிக்க
யெல்லோரும்பார்த்து யித்திருநாள்நல்லதென

அல்லோரும்மெச்சியக மகிழ்ந்தாரம்மானை
நல்லதிருநாள் ஞாயறுச்சைமுழுதும்
செல்லமறுநாள் திங்களுதித்தவுடன்
சாட்சிநடத்தி சரியத்திருமாலும்
காட்சிமாரோடும் நாதன்பதிபுகுந்தார்
நாதன்பதிபுகுந்து நருள்க்குவிடைகொடுத்து
மாதரோடுநாரணரும் மகிழ்ந்திருந்தாரன்போரே
இப்போதிருநாளினைமிகநடத்தி
நர்ப்புடையநாதன் நாயகிமார்தன்னோடு
கூடியிருந்து குலாவியிருக்கையிலே
நல்லபுகழ்சீதாலச்சுமிக்கும் நாரணரும்
செல்லப்பட்டானதுவும் சிவந்ததங்காறயதும்
இட்டுக்கலியாணம் லச்சுமியைச்செய்யவென்று
மட்டுநிகரில்லா மாயன்மனதிலுற்றார்
தங்கத்தால்க்காறை தானதியப்பட்டதுவும்
அங்கேமிகவுருத்தியாயிழைக்குத்தான்கொடுத்தார்
திருநாளிகளையுடன் டம்மானமுழக்கமொடு
பெருமாளும்லச்சுமியை பேராய்மணம்புரிந்து
தெருவலங்கள்ச்சுற்றி சிறந்தபதிபுகுந்து
மருவினியமாயன்மாதரோடு வீற்றிருந்தார்
நல்லரியநாதன் நன்றாயிருக்கையிலே
வல்லதிருதெய்வ மடவார்களேதுசொல்வார்
அய்யாவேயெங்களான திருமாலே
மெங்களைநீரிப்போவ்வுலகந்தானறிய
மங்களமும்செய்தீரே மக்களைதாருமென்றார்
அப்போதுமாயனவர்களோடேகேள்பார்
இப்போதுமாதர்களென்ன என்னோடுகேட்டதர்க்கு
நல்லத்திவதம் நமக்குவரும்நாளில்
வல்லவகையாலும் துமக்களையுந்தாரேனென்றார்
அதுவரையும்நீங்கள் நட்டாமலேயிருங்கோ
இதுவுரைக்கநல்லோர் சேந்திளைமாதரெல்லாம்
சந்தோஷமாகசுவாமி தனக்காகவர்கள்
வந்தேனிதமும் வாய்த்ததொண்டுசெய்துமிக
வாய்த்தபுகழ்லச்சுமியு மாதுமடவாரேனும்
ஏற்றதொண்டுசெய்து மெப்போதும்வீற்றிருந்தார்
நாரணர்க்குந்தேவியரை நாடிமிகமகிழ்ந்து
காரணருமெச்சி களிகூர்ந்தினிதிருந்தார்
நன்றாகவிப்படியே நாச்சிமாரோடிருக்க
எண்டிசையிலுள்ள ஏற்றபுகழ்ச்சான்றோர்கள்
வந்தவ்வர்பதத்தை வாழ்த்திமிகப்போற்றி
சந்துட்டியாத்தாழ்ந்து நமஸ்காரமிட்டு
மனதில்நினைத்ததெல்லாம் மாயவரோடேயுரைத்து
தனதுள்விடைவேண்டி சங்கடங்கட்டீர்த்திருப்பார்

தெய்வமாராய திருவுளமுமவராய்
வையமகிழமனுப்போலுமிருபபார்
வத்துவகையு மாடாடுசொத்துகளும்
ஒத்துமிகவாள்ந்துடையபரனிருந்தார்
இப்படியேயொத்தி ரிவரிருக்கும்நாளையிலே
நர்புடையதெய்வ நாயகிமார்கேட்டபடி
மதலைகொடுக்க மனதிலுற்றெம்பெருமாள்
குதலையி ாத்தைக் கூறிமிகவுரைத்தார்
ஏழினமுமாதர்க்கினமிட்டே தான்கொடுத்து
நாளுவந்தபோதே நாரணருங்கொண்டாடி
வாய்த்ததிருநாள் மகிழ்ச்சையுடன்நடக்க
ஏற்றதலச்சான்றோ ரெல்லோரும்வந்துநிற்க
பிள்ளைதனையெடுத்துப பெண்ணோர்களேழுபேர்க்கும்
வள்ளலந்தமாலு மனதுற்றியிருக்கையிலே
கண்ணானதெய்வ காரிகையாரெல்லோரும்
விண்ணணமாக வீரநாராயணரை

விருத்தம்

கண்ணரேகரியமாலே காரணக்குருவே ஆய்யா
இண்ணெணங்கள்மதலையேழு மெடுத்துநீரினமதாக
விண்ணெணங்கும்மகிழத்தந்து வெற்றியாய்யாண்டுகொள்ளும்
மண்ணெணங்குமளந்தமாலே மகாபரகுருவேயென்றார்

நடை

நாதக்குருவே நாடுமெங்கள்மன்னவரே
மாதவரேயின்று வந்தநாள்நன்றெனவே
இப்பே மதலை யெடுத்துமிகத்தாரும்
செப்பேபாடுவொத்த திருமாலேயெனறுரைத்தார்
நல்லதுதான்பெண்ணே நாட்டுநருளறிய
முல்லைவனத்தில் முனைவோர்பெற்றுவைத்த
மதலையேழும்வளத்து யித்தனைநாளும்
குதலைப்பிராயம்தாய்க் கொண்டுதிரிந்தேவளர்த்தேன்
பாலமுதூட்டாமல் பருவனத்தில்சீங்கவிட்டு
கோலவனத்தாடே குதித்தோடிமீண்டுவந்தீர்
என்னென்னபாடு யானிந்தபிள்ளையினால்
பொன்னினியக்கன்னியரே புகலவுந்தான்கூடுமோ
தெய்வேவந்திரன்பசுவ்வத் திரையாகக்கொண்டுவந்து
மொய்வனத்தில்பாலுகொண்டுமிகக்கறந்துமக்களுக்கு
ஊட்டிவளர்த்தேன ஹும்பர்கொளுமறிந்து
மாட்டிடவேயென்னை மாபடைகளோடுவந்தான்
தப்பியவன்றனக்குத்தான் வளர்த்தேன்பிள்ளைகளை
ஒப்பரியபாலமுர்தமொரு நாளொழியாமல்
மைப்பெரியதாலம் வ ந்த்துமிகவளர்த்தேன்
மக்களுக்காய்பாடுப்பட்டு வைகைமண்ணும்நான்சுமந்தேன்

சொக்கனெனுமுருசமைந்தேனை செந்திருமக்கள்வாளவென்று
பின்னுமிப்பிள்ளைகள்தான் பெரும்புவியையாளவைக்க
துன்னுகெட்டகலியில் தானறிக்குதித்துவந்தேன்
வந்தான்சாணார்குலத்தில் மாயனென்றுமாநீசன்
பினதாக்கிகையைப்பிடித்து மிகயிறுக்கி
சாட்டைகொண்டேயடித்து தடியிரும்பிலிட்டுவைத்து
கோட்டிமிகசெய்து கூறிமிகவடித்து
அராக்குமணிமேடையானதில் யென்னைவைத்து
பரங்குவியமித்தம் பாதம்பணிவேனெனருர்
சாணாரிடத்தில்தான் போகாதபடிக்கு
கோணாமலெங்களுடன் கூடியிருவென்றடித்தான்
பெற்றபிள்ளையெல்லாம் பெருகலைந்துபோவாரென
இற்றவிலங்கில்யிருந்தேன் மிகக்கவுள்ந்து
சாலமுடனீசன்றான் படுத்தும்பாட்டையெல்லாம்
பாலருக்காய்வேண்டி பாசறியபட்டேனான்
பெற்றநுதான்போதுமென்று பெண்ணேநீரேள்பேரும்
மெத்தத்தெளிந்து யிருந்துவந்தீரிப்போது
என்றுரைக்கமாலும் ரேந்திழைமாரேள்பேரும்
மற்றுள்ளோர்களறிய மாதருரைக்கலுற்றார்
பிள்ளைகள்தான்நன்றாய் பெருகிமிகவளர
வள்ளலெங்கள்மாலே மாறாய்த்தவசிருந்த
காரணத்தைச்சொன்னால் கணக்கிலடங்கிடுமோ
பூரணத்தின்ஞானப் பெரியத்திருமாலே
ஆருமொருதரா ராட்டங்காணாத
மேருகிறைவனத்தில் மெல்லியாரேள்பேரும்
ஒருவர்முகமொருவாக கோருருவங்காணாமல்
கரியவரவர்கள் காவுவடவுகனில்
உடுகலைகள்கொய்துற்ற முடிதான்விரித்து
கடுகெனவேவூசிதனில் கைவிரலைத்தானூன்றி
ஆசைவுறவறுத்துத் தக்கபக்கதாசைத்து
மாய்கைக்கருவறுத்து மயக்கவெறிதானறுத்து
பர்சமறுத்து பக்கதுணைமறந்து
காடுகினைவறுத்துக் கணபயங்கடானறுத்து
வீடுகினைவறுத்து வெளிவீடுதான்திறந்து
மலசலங்களற்று வாயுவுடபோக்குமத்து
குலதலமுமற்று கூறுகின்றபேச்சுமற்று
பேச்சற்றுமூச்சற்று பெருவனத்திலுய்மருளால்
ஏச்சதூர்ச்சமற்று யீராறுகாலம்வரை
நிர்க்கவுடம்பை கெடுபுற்றுத்தாமூடி
பக்கமால்முளைத்துப் புறுவினங்கள்தான்கூடி
முட்டையிட்டுகுஞ்சு மூன்றுவதுதான்பொரித்து
வட்டணியாய்க்காடு வளைந்தெங்களைச்சூழ்ந்து
கடுவாய்புலிகாடிக் கனத்திருகுட்டிகளீன்று

கடுகிமிகப்புற்றுக் கரையில்மிகவாள்ந்திருக்கும்
ஆனையதுகுட்டியது பயின்றெங்களுட
தான்னின்றபுற்றருகில் தன்னால்மிகவாளும்
பிள்ளையால்நாங்கள்ப் பெருகத்தவசிருந்து
உள்ளமெய்களெல்லா முளைக்கவெளிதாமோ
நாணமற்றாணமற்று நாலுமூன்றுண்டுவரை
தாண்டருடதஞ்சமெனத் தவசமிகப்புரிந்து
பிள்ளைகளாசையினால்ப் பிரியாத்தவசிருந்தோம்
வள்ளலெங்கள்மக்கள் தனைமாயவரேதாரும்
தந்துபுவியாளத் தலைவரெம்முடைய
விந்துவழிக்கிளையும் விரைவாய்மிகத்தாரும்
தாருமென்றுமாதரெல்லாம் தாழ்மையுடனீதுரைக்க
ஆருநிகரொவ்வா வச்சுதருமேதுரைப்பார்
மாதேநானிந்த வையகத்தில்வந்தவுடன்
பாரேழில்நம்முடைய பஞ்சவர்கள்தன்வழியில்
தெரிந்துதன்மக்களிலே சீசனெனத்தெரிந்து
கூர்ந்தென்கைக்குள் கொள்ளுகிறேன்வேலையது
இன்னுபாரென்று மேழுபேரையுமெடுத்து
நன்னகரிபார்க்க காலனிடுப்பில்வைத்து
வட்டமிட்டாடி மாதொருவருக்கொருவர்
கிட்டவிட்டுக்காட்டி கிளிமொழிமார்கைக்கொடுத்தார்
பாலரையும்பார்த்து பாவையரைப்பார்த்தவுடன்
சிலமுள்ளலச்சணமும் சிற்றிளையும்மொப்பனையும்
ஒப்பாமென்றுஎல்லோரு மும்பருந்தான்மகிழ்ந்தார்
செப்பமுள்ளமாதர் சிரித்துமனமகிழ்ந்து
அண்ணுபெற்றபிள்ளைகள் அயந்திரண்டானதிலே
மண்ணுதனையாளு மாபாவிசோழனவன்
கொன்னுனிருபேரைக் கூண்டத்தவமீதில்வந்து
சொன்னீரேசுவாமி தோன்றியிப்போவந்தீரே
தேன்மொழியமாதே சென்றபிள்ளைரண்டுடைய
மானதியமக்களென மாயவருந்தானுரைக்க
அப்போதுபெண்க ளச்சுதரைத்தான்பார்த்து
இப்போவரவில்லையே யெப்போவருவார்கள்
மைப்பெரியகண்ணே மாதவரென்றேவியரே
செப்பினீரேசீங்கள் சென்றமக்களெப்போவென்று
பொல்லாதநாட்டுப் போன்றுகலியைமுடித்து
நல்லதர்மநாடு நாந்தோணவைக்குகையில்
நடுநாயங்கேட்டு நடுத்தீர்ப்புசெய்யுகையில்
கெடுவேலைசெய்த கேள்வியில்லாச்சோழனையும்
ஆக்கினைகள் செய்தாளாகதிலே
தாக்கியுன்மக்களோடான் சடத்தோடெழுப்பிமிக
தருவேன்குருசாமி தன்னாணைமாதர்களே
மருவினியமாதே வார்த்தையிதுதப்பாது

என்றுதிநாதனீதுரைக்கமாதரெல்லாம்
நன்றுதிமகிழ்ந்து   நாடிமக்களையெடுத்து
மடிமீதில்வைத்து   மலர்ந்தமுகத்தோடணைத்து
கண்ணேமணியே   காட்டுராசன்மகளே
விண்ணோர்கள்மெய்க்கும்   வேதப்பரஞ்சுடரே
தோணார்க்கரிய   துய்யதிருயாலீன்ற
சாணாரோநாயகமோ   சகலகலைகற்றவரோ
தெய்வயுகக்கன்றோ   திசைவென்றசான்றோரோ
வையம்புகழவந்த   மக்களென்றுசொல்லி
சந்தோசமாகத்   தார்குழலாளேழ்பேரும்
புத்திமகிழ்ந்து   பூரித்தகமகிழ்ந்தார்
நாங்கள்செய்ததவத்தில்   நாலிலரைபங்குவரம்
வாங்கினோமய்யா   மாயவரேயின்னமுண்டு
நாடாளவைக்க   நல்லவரந்தந்ததுண்டு
நாடாண்மையுள்ள   சங்காரும்வந்திருந்து
என்றுரைக்கமாத   ரெம்பெருமாள்நல்லதென்று
இன்றுரைத்ததுவும்   லெக்கதியிலாகுமென
சீதைக்குநல்ல   சிறந்தமகனையெடுத்து
மாதுக்குத்தான்கொடுத்தார்   வையகத்தோருங்காண
மணமுகித்துமாதருக்கு   முன்வைத்தமைந்தரையும்
குணமுடனேகாட்டிக்   கொடுத்தாரேயெம்பெருமாள்
நல்லதிருநாள்   நாளக்கழித்துமற்றுனாள்
வல்லகதிரோனும்   வந்ததுகாணம்மானை
கதிரோனுந்தோன்றிக்   கங்குல்வெளியாகுகையில்
திருநாளிகனை   செய்துநிறைவேறி
மக்களெல்லாருஞ்சூழ   வந்துமிகப்பணிந்து
மிக்கவவர்வீட்டில்   விடைவேண்டித்தான்போனார்
கைக்குள்ளேநிர்க்கும்   கரியசீஷன்மாரும்
மைக்குழல்மாரோடு   மகிழ்ந்திருந்தாரம்மானை
பின்னுஞ்சிலநாள்   பெரியதிருநாள்நடத்தி
மன்னுகந்தநாரணரும   மாதரோடுவீற்றிருந்தார்
பெண்களவரவர்க்கு   பெரியவரங்குவைத்து
தங்கள்தங்களுக்குச்   சமானம்மிகக்கொடுத்து
பாலபவுசுகொடுத்து   பாக்கியங்கள்வெகுவாய்
மாலவர்கள்மனையில்   வந்துவமுதருந்தி
இன்றொருவீட்டிலேற்றமுதருந்தி
அன்றிராவங்கே   அனந்தமால்பள்ளிகொண்டு
பின்னுமொருயாதருட   பொன்னரங்கில்வந்திருந்து
அன்னுவமுதருந்தி   யன்றிராவ்வம்மனையில்
பள்ளிகொண்டபடியே   பாவையர்கள்வீடோறும்
துள்ளியேமாயன்   திருவிளையாட்டுமாடி
மங்கையர்கள்காணாமல்   மறுமனைகளும்புகுந்து
கொங்கைமடவாரோடு   கூடிவிளையாடிடுவார்

மாயன் விளையாட்டை வகைப்படியேசொல்லவென்றால்
வாய்ந்தவுலகில் வளர்ந்தபுனைவேலையில்லை
கூடிமடவாரோடு குவிந்துவிளையாடுகையில்
நாடிமடவார் நாயகிமார்தங்களுக்கு
ஒருவர்க்கொருவரு பசயமாய்ப்பார்த்திருந்து
திருமருகரோடே தெய்வமடவார்வெகுவாய்
சண்டைபிடிப்பார் தந்ததுபோராதெனவே
கண்டமடவாரோடு கனிவாகபோறீரென
அவள்வீட்டில்ப்போறீர் யவளோடதிகமுமாய்
உபகாரம்செய்கிறீருள் ளாகத்தானிருந்து
என்னோடுபேச்சு யிப்படியேசெய்வீரென
மின்னேவியங்கள் வெகுவாகக்கத்திடுவார்
சுவாமியோடுவெகுவாய் துரத்தனங்களதான்பேசி
காமகலப்போவோமென நடந்துமக்களுட
வீட்டிலவர்போவார் வீரமால்தானறிந்து
கூட்டிவரப்போவார் குளிர்ந்தமொழியுரைத்து
அள்ளித்தருவேன் னந்தவிராகன்பணமும்
வெள்ளியும்பொன்னு மேன்மையுள்ளசீலைகளும்
உந்தனுக்குப்போர வுடமைமிகத்தருவேன்
அந்தப்பெண்ணோர்களுக்குக் கதுக்கதுபோலேகொடுப்பேன்
எழுந்திருநீயென்றெட்டிமிக கைப்பிடித்து
குளிர்ந்தயவர்வார்த்தை கோதைமின்னார்தான்கேட்டு
சிரித்துமகிழ்ந்து தேர்த்தலிதுநன்றெனவே
உருத்துமிகச்செய்வதெல்லா மோவியமும்நானறியேன்
யேன்காணும்முடைய யிந்திரசாலமெல்லாம்
கோவேங்கிரிவேந்தேக் கொஞ்சமெனக்குதெரியும்
மருட்டாதேயெங்காண் மாய்மாலமுந்தெரியும்
உருட்டாதேயும்போமுமது தெளிலும்தெரியும்
எனக்கோர்வார்த்தை யிதமிதமாய்ப்பேசிடுவீர்
தனக்கேக்கநெஞ்சக தானறியாதேயிருக்கும்
கனியமுதுடைய கருத்தெல்லாம்நானறிவேன்
நின்றுசடையாமல் நீர்போகுமென்றுரைப்பாள்
அப்போதுமாயனதுக் கினியவார்த்தைதசொல்லி
இப்போதுநீயு மெழுந்திருந்துவாவெனவே
மாயனழைக்க மாதுமெழுந்திருந்து
நாயன்பிறகே நடந்துமிகவருவாள்
வந்துவளர்பதியில் வாள்ந்துண்டினிதிருந்தார்
இப்படியேபெண்ணோடுகளைமிகநடத்தி
ஒப்பரவாய்மாயனு வந்துண்டிருக்கையிலே
செந்தூராலையிலத் தேவனுதித்தன்றுவந்த
முந்தாமூலைப்பதியிலு வரிக்கரையிடத்தில்
சென்றங்கிருந்து சிவலிங்கத்தானமைத்து
மன்றுக்குள்கொஞ்சம் மறைத்துவைத்துமாமவரும்

நான்றவசிருந்துநாள் கொஞ்சமேகளித்து
வான்புதுமையற்புதங்கள் மானிலத்தோர் தாமறிய
செய்துதெய்வமானர்களை சிறந்தமணமுகித்து
தெய்திதனிலிங்கே திருநாளைக்கொண்டாடி
வருவேனெனச்சிலைக்கு வாக்குமிகக்கொடுத்து
திருவேற்றிவைத்த தெய்தியின்றுவந்துதென
சும்மாயிவரை திருப்பதியில்வசநீயென்று
நம்மாலுரைத்தால் ஞாயமில்லையென்றுசொல்லி
கொஞ்சமொருச்சூத்திரங்க கூர்மையாய்செய்யவென்று
அஞ்சலெனச்சாமளாத் தேவிதனையழைத்து
கன்னியிலேரண்டுபேரை கலகமிட்டு
யென்னுடையமக்களிலு மியாமமுறைப்படியே
கொஞ்சமதுவாங்கி கொடுத்துயிரைதான்வாங்கி
மஞ்சறையில்வைத்து மகிழ்ந்துமிகக்காருமென்று
விடைகொடுக்கநாதன் வேண்டினாள்தேவியவள்
இடமுடனேசொன்னச் சொல்வாக்குரைப்படியே
கன்னியரில்ரண்டு கடத்தினாள்மாதேவி
மின்னிஞெளிமதலை வீரத்தனமாக
நாலுமூணுடனே நகட்டினாள்மாதேவி
உடனேசனங்களுடை யவரேதஞ்சமென
தடமேலேவீள்ந்து சுவாமியையமென்றார்
அவதாரத்தின்படியே யான்றமைத்தபெண்கொடியை
உபகாரமாமணங்களுடையவரேசீருளி
வையகத்தோரெல்லாம் மனமகிழ்ந்திருக்கையிலே
செய்யயிந்தமாயன் செய்வாரோமாயவரே
ஆரார்க்கும்மேர்க்குமரிவையர்கள்மக்களுந்தான்
போரரவழியாளைப்பொல்லாப்புசெய்தாரோ
ஆதியேயவர்க ளனியாயஞ்செய்ததென்ன
சோதியேயென்று தொழுதார்மடவார்கள்
அப்போதொருமகன்றனஞ் சாறுநாளதுமுன்
சொர்ப்பனங்கள்கண்டதுவை சொல்லாமல்தட்டழிந்து
அன்றைறபபொழுதிலவன் வந்தடிதொழுது
நன்றினியயெங்கள் நாரணரேநாரணரே
பத்துநாளுண்டுநான் படுத்திருக்குமவ்வழவில்
பெத்துச்சளிந்தவர்போ பெரியபூவண்டர்வடிவாய்
வந்துயென்னோடு வளப்பமெனச்சொல்லலுற்றார்
கொஞ்சநாள்தோப்புக் குளிர்ந்தபதியானதிலே
ஆஞ்சிரண்டுவயதில் வாழ்ந்திருந்துபினனும்
மூலகுண்டப்பதியில் மிகயிகளை செய்யெனவே
ஏலமேசேரானாலெதல்லா மெண்ணிமதிலில்லாமல்
பெணகளைக்கண்டவுடன் பூத்தானமாய்மகிழ்ந்து
கண்ணாட்டமறந்து கலியையுமைப்பதற்கு
நினைவுமயந்து நிலைபெர்ந்திருக்குகிறுன
நாட்டுக்குற்றங்கேள்க்க நாலயச்சிவைத்ததற்கு

கோட்டுமடவாவர குறிப்பாகவெண்ணிமிக
யெண்ணியிருக்கிற னிப்போது அங்குசென்று
நண்ணிமூலப்பதியில் நாடிவரச்சொல்லிவிடு
வரவில்லையானால் மாதருடன் மக்களையும்
சரமதையும்வாங்கிடுவேன் சாமியுடன்போய்யுரைநீ
என்றுசொல்லினாளுமெட்டு ரண்டாச்சுதய்யா
அன்றுவுரைக்க ஐயாமிகக்கோபமுற்று
பாவிப்பயலே பகராமலித்தனைநாள்
மேவியிருந்தாயே மெல்லியிளந்தேனே
தீட்டிலைத்தசொர்ப்பனத்தை சொல்லாதிருந்ததினால்
கூட்டில்மிகவளர்ந்த கிளியைமிகத்தோற்றேனே
முந்திவந்துநீயு மொழிந்ததேதுண்டானால்
யெந்தனின்மயிலை யிழந்துமிகவாடேனே
பூவண்டரானால் பெரியப்பிதாவல்லவோ
மாவண்டப்பயலே வந்துசொல்லாதேயிருந்தாய்
இப்போபதிக்கெழுந் தருளவேணுமென்று
மைப்போடுவொத்த மாதொடுமக்களுமே
கூடிநடந்தார் கூண்டதியப்பொன்பதியில்
தேடிமூலப்பதியின் சிறப்பெல்லாம்தான்பார்த்து
யேலமேஇப்பதி லெட்டுநாள்க்குள்ளேவந்தால்
மாலவரின்மக்களுக்கு மாய்வுசத்தும்வாராதே
கெடுத்தானேசொர்ப்பனந்தான் கெணித்தவுடன்சொல்லாமல்
கொடுத்தோமேநம்முடைய குலமக்கள்மாதரையும்
இப்பதியில்வந்தா லெள்ளளவுதோசமில்லை
யேப்பதியுமிப்பதிக் கொவ்வாதுயென்றுசொல்லி
எல்லாருடனே யெம்பெருமாளுமகிழ்ந்து
அல்லல்வினைதீர்ந்ததில் வாழ்ந்திருந்தனராம்
தோப்புப்பதிபோல்த் தொட்டிக்கெட்டம்பலமும்
கோப்புப்புரையுங் குவிந்தமணியரங்கும்
பள்ளியறையும் பார்சவுக்கைமண்டபமும்
துள்ளியிகனை சுகசேசபனம்வரவே
பூம்பந்தலும்பெரிய புகுவீரமேடைகளும்
ஊண்புரையும்நல்ல உகத்திர்ப்புமேடைகளும்
சிணமாகச்செய்து சிறந்துமிகயிருந்து
குணமாகமாயன் கோதையோடுவசழ்ந்திருந்தார்
வாளுந்திருநாள் வாரஞ்செவ்வாச்சைமுதல்
ஆளுந்திருமா லவதாரகாட்சியுடன்
குமமியிகனை குவலையத்திர்ப்புரைத்து
தம்மியல்புகொண்டு சுவாமிவெண்பட்டுடுத்தி
தங்கக்குல்லாவணிந்து தாவியநீராளம்
எங்குமகிழ யெம்பெருமாள்தானணிந்து
ஆயிளைமாரவர்க்கழகு வெண்பட்டுடுத்தி
வாயிதமாய்மாயன் மகிழ்ந்துமிகக்கொண்ட

மங்களமாயிகளை மாயிகளைதான்கூறி
சங்கமகிழசாமி திருநாள்நடத்தி
பாக்கியங்களோடே பவுசாயிருக்கையிலே
தர்க்கிமிகமாயன் சந்தோசமாய்மகிழ்ந்து
பொல்லாக்கலிநாடு போவன்றவருங்காலமதில்
வல்லாமையான வாய்த்தபகவதிக்கு
மாதுமைக்குமண்டைக் காட்டாள்பார்வதிக்கும்
சீதகலும்வள்ளித் தெய்வானைநாயகிக்கும்
கலிமுடியுமுன்னே கலியுகத்தோர்கண்காண
வலியானமாதர்களை மணமுகிக்கவேணுமென்று
முன்னுரைக்காகமத்தின் முறைநூல்ப்படியாகவே
நன்னூல்வழியாகவே நாமகிக்கவேணுமென்று
உன்னித்திருமா லுள்ளில்மிகவடக்கி
வள்ளலந்தமாகுமரி வாருமபகவதியை
மாயமாய்க்கொண்டு வரவேணுமென்றுசொல்லி
உபாயமனதிலுடைய பரன்நினைத்தார்
கிழவனுகைச்சமைந்து கிறுதஞ்செய்யவேணுமென்று
களதனைத்தேகந்தன்னுடம்பு மினுமினுக்காய்
மெக்குவாய்ப்பொக்கனுமாய் முடியுமிகவெண்ணரையாய்
கக்கலிருமலுமாய் கையதிலேகோலூன்றி
கள்ளர்கூமெள்ளச் சன்னைமிகப்போட்டு
பிள்ளாப்பகவதியே பேத்தியென்பொன்மகளே
கண்ணுமயிலே கனகவொளிமாமணியே
பெண்ணும்பின்னாய்ப்பேத்தி பேரனுக்குஞ்சிவிடு
என்றுசொல்லிமெள்ள வேங்கிளையாள்தானிருக்கும்
குன்றுமணிக்கோவிலுக்குள் குன்னிமிகச்சென்றவரே
பேத்தியென்றசொல்லு பிரியாமடனுயகியும்
காதில்மிகக்கேட்டுக் கண்ணிமிகப்பார்த்து
ஆர்காணும்நானிருந்தவாங்குக்குள்வாராதுதான்
பாரளியும்நாளோர் பையாங்குக்குள்ளேவந்தாய
எங்கிருந்துநீர்தானெவ்வூருன்பேரேது
இங்கிலுக்கவந்தவரே கிழவன்றுரேனுயுரைநீ
அம்மாயென்பேத்தி யாயிழையேநாயகமே
சும்மாமயங்காதே சூச்சமொன்றில்லையம்மா
பரமாத்தமம்மா பழனிமலையெந்தனுக்கு
விதமாற்றமில்லை விரோதவித்தைதானுமில்லை
லாடகுருவம்மா ராமனென்றன்பேர்பேத்தி
திலாடமதிலிருந்துத் தீர்த்தமிங்காடவந்தேன்
ஞாந்தேகுனைக்கண்மயக்காய் வழிதப்பியிங்கேதான்
உன்கள்ளிருபபதியை வொருவகாமென்றிருந்தேன்
ர்கேளவென்பேத்தி மாஞானமொன்றுமில்லை
செகமெல்லாந்தீர்த்தஞ் சென்றேனிவ்வாதுளை
உன்னுடையதீர்த்த மாடுங்காடவந்ததிப்போ
பின்னுமொருபேச்சுப் பேசுகிறாரிவ்வுலகில்

இன்னுந்தன்பதியிலிருந் திந்தாவிடிந்தால்
நின்னுநின்னுபோயாலும் நிச்சயம்பார்த்தேமகிழ்ந்து
என்னுடையவூருக் கேகவேணும்பேத்தி
பொன்னுமகளேபேத்தி யெனப்போத்திசொன்னுர்

விருத்தம்

போத்தியென்றுரைத்தபோது பொன்பகவதித்தாய்மெச்சி
போத்தியேயுமக்குக்கொஞ்சம் பொரிமாவுப்பிசைந்துதாறேன்
ஏத்திரிரீரிளைப்புமாறி யின்றுராக்கழித்துயேகும்
சாத்தியமொழியைக்கேட்டுத் தனதுளம்மகிழ்ந்தார்போற்றி

நடை

அம்மாநீசொன்ன வருமையெனக்கதிகம்
மும்மால்க்கும்யேத்து முகுந்தன்பதம்பெறுவாய்
தாகமல்லால்ப்பசிகள் தானெனக்கில்லையம்மா
தேகமதுவாடாமல் செலந்தந்தால்ப்போதுமென்ருர்
பால்மோருபோலே பதங்கொடுத்துமாகுமரி
காலாறிப்போமெனவே கன்னிமிகவுரைத்தாள்
தாகமதுதீர்ந்து தானிருக்கும்பொழுது
நாகரிகுமரி நாயகியுமேதுரைப்பாள்
போத்தியுமக்கு போரவழிதானதிலல்
நாற்றிசைகளெங்கும் நடமாட்டமாயிருக்கும்
ஏதேதுதீர்த்தமிகளை பலமாயுனது
மாதோடேசொல்லு மாபெரியபோத்தியென்ருன்
உடனேகிழவனுளமகிழ்ந்து நன்றெனவே
மடமாதேகாசி மகாதீர்த்தம்நல்லதுதான்
கன்னிகுமரிகாசி தீர்த்தம்நிகராம்
பின்னுமற்றதெல்லாம் பிறமாணமப்படித்தான்
இப்போதொருசெய்தி இராச்சியத்தில்சொல்லுகிருர்
எப்படியோவிசமா யிந்தாலதுமெய்யதாம்
என்றுரைக்கநல்ல யிளங்குமரியேதுசொல்வாள்
விண்டுரைத்தஞாயமதை விளம்புநீர்போத்தியென்ருள்
அப்போது கிழவனுச்சரியமாய்மகிழ்ந்து
இப்போது வேணுமிவளைமிகயிளக்க
என்றுமனதுள்ளிருத்தி மிகத்தெளிந்து
மன்றுதலின்கேட்டவளமை கேளென்றுசொல்லி
ஆயிரத்தெட்டாண்டாமானதொரு மாசியிலாம்
வாயிதமாய்செந்தூர் வாரிதனிலேபிறந்து
வைகுண்டமென்று வையகத்தில்வந்திருந்து
கைகண்டவற்புதங்கள் கனகோடுசெய்கிருராம்
தீண்ணீரதுவாற்ருன் கொடுக்கும்முத்திரியாம்
மண்ணிலுள்ளாரும் வந்துவணங்குகிருராம்
புண்ணியதானங்கள் போதமிகச்செய்கிருராம்
குட்டங்குறைநோவு குருடூமையானதுவும்
கட்டங்கொடிய கர்மமுதற்றீர்க்கிருராம்

சந்ததிகளில்லாத தாணிமனுப்பெண்களுக்கு
மைந்தர்கொடுக்கிறாராம் மாதர்மஞ்செய்கிறாராம்
மனுப்பேரிம்பேயை மாகிலுக்கமாயாட்டி
தனுப்பிலங்கள்வாங்கிச் சருகிலெரிக்கிறாராம்
தெய்வமடவாரெனவே தேவியேழுபெண்களையும்
வையமறியமாலையிட்டுக் கொண்டாராம்
நித்தந்திருநாள்போல் நீணிலத்துள்ளோர்கள்
மெத்தகுழுக்காய் மிகவந்துகூடுறாராம்
இடம்மானவெடிகள் டகுடகென காகசுரம்
இம்மாத்திரமெனவே யெண்ணவுந்தான் கூடாதாம்
காச்சிறெம்பவுண்டாம் கலிமுடிக்கவந்தோமென்றும்
பேச்சுமிகச்சொல்லி பிரான்யாமங்கூறுறாராம்
இப்படியே பேச்சிதுவுறுதியாளுக்காய்
எப்படியுங்கர்த்தனிவரெனவே சொல்லிடலாம்
அல்லார்கலியுகங்கள் யழியுகின்றநாளையிலே
சொல்லால்பெரியத்திருமால் சொருபமதாய்
தெச்சணத்தில்வந்து திருவிளையாட்டாகுமென
அச்சமறபேச்சொன்றுதியிலே கேட்டதுண்டு
அந்தமுறைதானோவவனிதனில்கேள்க்கிறது
எந்தவிதமோ தெரியுதில்லையென்பேத்தி
போய்ப்பார்த்தால்தெரியும் பொன்பேத்தியென்றுரைத்தார்
வாய்பார்த்தபோதே மாதுமிகமகிழ்ந்து
கண்ணரியபோத்தி காரணத்துநல்போத்தி
திண்ணமுள்ளபோத்தி செப்புவலைதநீர்கேளும்
தெய்வமடவாரை திருமணம்செய்தாரென்று
வையமதுசொன்ன வளமுரைத்திரென்பேத்தி
மாதரையும்பார்க்க மனவிருப்பாயிருக்கு
ஆதரவாய்ப்போத்தி மதுவரையுமென்னையும்நீர்
கூட்டிக்கொண்டுபோவீர் கிழவனைப்போத்தி
பூட்டியுந்தன்பிறகே பிள்ளைப்போலேவருவேன்
செய்தியென்னவென்று தேவியுருக்கமுடன்
செய்திமிகவடைந்த தாதனோடேயுரைத்தாள்
அப்பொழுதில்லாடகுருவவரேது சொல்லலுற்றார்
இப்பொழுதுசொன்னதர்க்கு யான்கூட்டிப்போயிடுவேன்
ஓடிநடக்க ஒட்டாதுதள்ளாட்டம்
கூடிநடக்கக் குறுக்குப்பிலக்காது
பேசிநடக்கப்பிசகு மம்மாயெனக்கு
வீசிநடக்க விளிக்குகொஞ்சந்தான்மறைவு
கக்கவிருமல்கால் பிலக்கவொட்டாது
சிக்கெனவேநடந்தால் செருக்கிருமலிளைவரும்
இத்தனைதுன்ப மிருக்குங்கிழவனுடன்
சிற்றிடையீர்நல்ல சிறுபிராயம்நடந்தால்
ஒக்குமோபேத்தி வுன்னடையுமென்னடையும்
பக்குவமோநாந்தான் பாதைநடப்பதற்கு

நானடப்பேன்காதவழி நாலுநாள் தங்கிலென
நீயென்னோடேநடந்தால் நிகராமோபேத்தியென்றார்
அப்போதுநல்ல வாயுளையுமேதுரைப்பாள்
நர்ப்போடுவொத்த நம்முடையப்பேராநீர்
வேறாள்கள்கூட வெளியேறப்போகாது
வீருகப்போத்தி மெல்லநடையாகிடினும்
உம்மோடேநடக்க உள்ளாசையாயிருக்கு
எம்மாத்திரநாள் யெவ்வளவுசென்றாலும்
வையவிருந்திருந்து பாதைதமிகநடந்து
நெய்யதியகன்னி நேரிழைமாரேள்வரையும்
பார்த்துவாவேணும் பண்டையுள்ளபோத்தியென்றாள்
சாத்துமொழிகேட்டுத் காதன்மிகநடந்து
அப்படியேயானால் யாயிழையேயுன்னருகில்
போர்பணிவேலைபுரியும் பெண்ணாறியாமல்
இங்குள்ள பேர்களெள்ளளவுமறியாமல்
கங்கைக்கரைவழியே காணாதுபோயிடுவோம்
போகவென்றாலும் பொழுதுபுறப்படுமுன்
ஏகவேணும்நாமென றியல்பாயுரைத்தனராம்
அப்போதுகன்னி யாயிழையும்நல்லதென்று
இப்போதெழுந்திருவுமிது கடந்துபோவோமென
சொல்லக்கிழவன் சிரித்துமனமகிழ்ந்து
நல்லகாரியமெனவே நாம்போவோமென்றுன்னி
அரிகரிகோவிந்தா வலைதுயின்றுபோத்தியென்று
கரிகரிகோவிந்தா காரியங்கள்கைகொண்டோமென்று
குன்னிமிகவெருந்து கோலுமிகப்பிடித்து
உன்னியிருப்புவிட்டு உடனேவெளியில்வந்து
சன்னைமிகயிரும்பி தள்ளாடிதள்ளாடி
பின்னேவிழுவார்போல் போத்திமுன்னிற்கையிலே
மாதுகதவெல்லாம் வாங்கிமிகவடைத்து
கேதுவிழைத்துவந்த கிழவன்பின்னாலேகி
வந்தவளையழைத்து வாவாபிறகெனவே
சந்தமுடன்லாடகுரு சாடைசெய்துமுன்னடந்தார்
முன்னடக்கப்போத்தி மொய்குழலாள்பின்னடக்க
அன்னநடைகள் விட்டலைவாய்கரைவழியே
முட்டாங்குவிட்டு முகந்தெரியாவண்ணமவள்
கட்டிக்கவுழ்ந்து கன்னிபகவதியும்
கிழவன்பிறகே கிளிமொழியாள்தானடக்க
மலர்மாரித்தூவ வாய்வுமறைறவீச
பூமிநலுங்காமல் பொருப்புமசையாமல்
காமிகுமரி காலசையாமல்நடந்தாள்
நடக்கும்வழியில் நாயகியேயடிகேள்பார்
வடக்குநாடுநமக்கு வசந்தான்வழிநடப்பு
தெச்சணபூமி திசைமாற்றமாயிருக்கும்
பச்சைவளையணிந்த பாவையரேபார்த்துநட

திக்குத்திசைகள் தெரியுதில்லையெனப்பேத்தி
முக்கொருமூலை தன் முன்னடிப்போவோமென
வாரிக்கரைவழியே வாய்த்தநேர்மேற்காக
காரிருளாகுமுன்னே கால்விரைவாய்போவோமென
சொல்லச்சிறுகன்னி தியங்கிமெள்ளவாயுரைப்பாள்
அல்லல்வினையே வாண்டவன்றன் செயலோ
வெளிகாணாதேயிருந்த மெல்லிவெளியில்வந்தால்
வழிதெரியுமோதான் மாபெரியப்போத்தியென்றாள்
பதறாதேபெண்கொடியே பகவான்றுணையுண்டடி
தெச்சணத்தில்பள்ளிகொண்டு தெய்வமடவார்களையும்
நிச்சயமாய்மணம்புரிந்த நீலவண்ணருண்டுமெடி
கலங்காதேகண்ணே கடல்கரையேப்போவோம்
விலங்காமல்வழியே மேர்க்குநோக்கிப்போவோம்
என்றுசொல்லிமாதை யிளக்கிமிகப்போகையிலே
அன்றந்தவாரியதர்க்கு வடபுறமாய்
டம்மானவோசை டகுட்டகாவென்றுமிக
இடம்மானநாகசுர மிரச்சல்மிகக்கேட்டு
சற்றேறப்பொறுப்பேத்தி சத்தமொன்றுகேள்குதிங்கே
மெத்தவிரச்சல் மேளத்தொனிகேள்கு
குரவையொலியுங் குத்துவெடியுங்கேள்கு
பாசாதிக்குரல்கள் பலவிதமாய்கேள்கு
பார்த்துநடப்போம் பாதைவிட்டுவிலகி
சற்றுவடக்கேறித் தான்பார்த்துப்போவோமென
என்றுரைக்கப்போத்தி யியம்புவாள்நாயகியும்
நன்றுநன்றுகிழவா நடவுமுன்னேயெனவே
தண்டையணிமடவாள் சடைத்துமுகம்வாடி
கெண்டையெங்கண்மடவாள் கிள்ளைப்போலேயுரைத்தாள்
குன்னிமெல்லக்கிழவன் கோலூன்றிக்கோலூன்றி
மின்னிடையேப்பய்யவென்று மெல்லவடக்கேறின்று
வடக்கேறிமாதை வலத்தவிட்டுத்தான்கூட்டி
நடக்கையிலேயாளிரச்சல் நாடிமிகக்கேட்டு
அன்னநடையழகி யமுர்தவாய்ச்சொல்லழகி
சின்னயிடையழகி திசைமயங்கியேதுரைப்பாள்
கண்ணினியப்போத்திக் காரணத்துநல்ப்போத்தி
நண்ணினியப்போத்தி நானுரைக்கும்செய்தியைக்கேள்
சனக்கூட்டம்ரெம்பத்தான் காணுமாகையினால்
எனைக்கூட்டிக்கொண்டு யிதில்விட்டகலாதேயும்
திக்குத்திசையெனக்கு தெரியாதுகண்டீரே
பக்குவங்கள்சொன்னேன் பாதமடைக்கலமே
கைக்குள்விட்டுக்கொண்டு கன்னியரைத்தான்கூட்டி
பைக்குள்வைத்துக்கொண்டு பகலோனுதிக்குமுன்னே
என்பதியில்கொண்டு யிருத்தியெனைவைத்தீரால்
பொன்பதினாயிரந்தான் புனைந்ததொருதாவடந்தான்
உம்முடைய மார்பிலுடனணிவேன்கண்டீரே

எம்முடைய மானமிருக்குதுகாணும்மிடத்தில்
ஒருவரறியாமலுபாயமாய் கொண்டுமென்னை
திருவனப்பதிக்குள் சேர்த்துவையும்போத்தியென்றாள்
பேத்திபதறாதேபெரியபதி சேர்த்துவைப்பேன்
காத்துவசுங்காத கண்ணர்பதிசேர்த்துவைப்பேன்
மலங்காதேபேத்தி வாள்பதியில்வாள்ந்திருக்க
கலங்காதேசேர்த்துக் கண்ணனைவைத்திடுவேன
என்றுரைக்கபோத்தி யிளவரசியும்மகிழ்ந்து
அன்றுவந்த கிழவனருகிலொண்டித்தானடைந்து
ஆளுக்கிடைநடுவே யாயிழையும்போத்தியுமாய்
தோளுப்பிடித்தாப்போல் தோகையரும்வந்தனளாம்

விருத்தம்

வந்தனள்பதியின்சீரும் வளர்மணிமேடைக்காலும்
சந்தனவாடைவீசும் தலமதுநருக்கள்சீரும்
செந்தமிழ்த்தர்மச்சீருஞ் சிவாலயதெருக்கள்நேரும்
புந்தியில்மகிழ்ச்சைகூர்ந்து போத்தியைமெச்சுவாளே

விருத்தம்

போத்திநீருரைத்ததெல்லாம் பொய்யில்லைமெய்யதாகும்
சாத்திரீர்ப்பின்னுந் தெய்வத்தார்குழலுண்டுமென்று
பார்த்துநீர்நமக்குக்காட்டு பைங்கிளிமாரையெல்லாம்
சித்துமாகயெந்தன் சிந்தையறியவென்றான்

விருத்தம்

உடனந்தக்கிழவன்றானுமுள்ளதுதானென்று
மடமயில்குமரிதன்னை வாவெனவழைத்துக்காட்டி
குடத்தனமுடையரான கோதையர்கோவில்புக்கி
நடைதனில்நின்றுகொண்டு நாரியரிவர்தானென்றார்

விருத்தம்

பார்த்தந்தமடவாளான பகவதிமாதுசொல்வாள்
சேர்த்திந்தமடவார்தன்னை திருமணஞ்செய்துமன்னன்
எந்தெந்தவிடத்தேவாழ்வாரிது நமக்கரியக்காட்டி
சாத்திந்தத்தலமும்காட்டித்தன் பதிபோவோமென்றாள்

நடை

ஆதிக்கிழவா அருமைக்கன்னிமார்களையும்
நீதியுடன் கண்டேனேரிழைமார்தன்னைமணம்
செய்தகணவரையுஞ் சென்றுபார்த்தேநாமும்
சாமகசேநம்பதியில் நாம்போவோம்வாருமையா
என்றுரைக்கமாது யிழங்கிழவனே துரைப்பார்
நன்றுநன்றுபேத்தி நாயகியார்மன்னனையும்
இன்றுநீகாணயிப்போது காட்டுகிறேன்
பார்த்துக்கோவென்று பையவாயென்றுசொல்லி
கோற்றுக்குருவம்பலத்தில்க் கும்மிமிகக்கொண்டாடி

நாட்டுத்தீர்வைக்கணக்கு நவின்றிருக்கும்வேளையிலே
காட்டிக்கொடுத்தார் கரியமால்நாரணரை
பகவதியாள்வந்து பார்க்கின்றவப்பொழுது
சுகபதியாள்கண்ணுக்கு தூய்யதிருமாலும்
பச்சநிறமும் பவளவாய்க்கனியிதழும்
நச்சரவில்பள்ளிகொண்ட நல்லசொரூபம்போலே
தண்டையணிக்காலுந் தாமரைக்கைபொன்முகமும்
கெண்டையக்கண்மாலுமக்கிரண வொழிரத்தினம்போல்
அம்பலத்தேநின்று வானந்தமேபுரிய
தானந்தமான சச்சுதானந்தவடிவை
கண்டுவந்தமாது கண்மூடாவண்ணமங்கே
நின்றவவள்பார்த்து நெஞ்சந்தடுமாறினதை
கிழவரறிந்து கிளிமொழியைவிட்டகல
பளவவொருசொரூபம் பாசமிகயெடுத்து
கய்நிகழ்ந்துமாயன் கனகபதிமீதில்வந்தார்
மைவளையமாது மாறிமனதேதிரும்பி
பார்த்தாளருகில் பண்பாகநின்றதொரு
கூத்தாடித்தாதனையுங் கோதைமிகக்காணாமல்
பாவிக்கிழவன் பாதகங்கள்செய்தானே
லாவிலாவிப்பார்த்து லாவிமிகத்தேடலுற்றாள்
அய்யோகெடுத்தானே ஆதிக்கிழவனம்மை-
மெய்யோனென்றிருந்தேன் வெளியேற்றிவிட்டானே
எங்கேயினிக்காணு யென்பதியில்போவோநாம்
திங்களுதிக்குதல்லோ சேவல்குரலாகுதல்லோ
நிலாவெளிச்சமாகுதய்யோ நிர்க்கிழவனையுங்காண்கலையே
குலமழிவதாச்சே குவலயக்கேடாகுதல்லோ
மானமழிந்தாச்சே வையகமும்பேசாச்சே
தானமழிந்தாச்சே சங்கையினிகெட்டாச்சே
இக்கிழவனம்மை யிளக்கியிங்கேகொண்டுவந்து
மொக்கைமிக்ககெடுத்து மோசஞ்செய்யவந்தானோ
என்னபோலாச்சு என்தலையின்கூறிதுவோ
அன்னம்போலேவார்த்தை யாசாரமாயுரைத்து
சந்தியில்பந்தாக்கினேனே சளக்கிழவன்நம்மையின்று
சுந்தரியும்மெத்தத் துவங்கிமனதேதங்கி
புலம்புவாள்தனியே பொன்னும்பகவதியும்
சிலம்புவணிநாயகியும் திசைங்கிபுலம்பினளாம்
என்னைப்படைத்தவரே ஈசுரரேதஞ்சமென்று
பொன்னணையமாது புலம்பித்தவிக்கலுற்றாள்
தலையிலெழுதுஞ் சங்கரனேதஞ்சமென
உலையின்மெழுகதுபோலே வியமுமுள்ளுநைந்து
இனம்பிரிந்தமானதுபோலியமதுபோலிளகி
மனம்பிரிந்துமாது மதலையழுதாப்போல்
பிறப்பித்தசிமானே பிஞ்ஞகனேதஞ்சமென்று
சிறப்பித்தமாது திசங்கிமசங்கலுற்றாள்

மாதுபகவதியாள் வயதுபதினாறுடையாள்
சாருமிடமாதர்போல் தனியேபுலம்பலுற்றாள்
கண்ணினியசொல்லாள் கரியமகாயீசொரியாள்
எண்ணுஞ்சாகாம லிருக்கும்பகவதியாள்
தாயில்லாப்பிள்ளை தயங்கினாற்போலேநின்று
வாய்குழறிகண்ணீர் வடியமிகவழுதாள்
சோடுபிரிந்ததுய்ய பிராவுமிரங்கி
போடுகின்றசத்தம்போலே குரல்நிகழ்த்தி
உள்ளுக்குள்கேள்க்கும் வோவியத்தின்றகுரலு
எள்ளுக்குள்எண்ணையென யிருந்துமழுகலுற்றாள்
சங்குள்ப்பிறந்த சமயத்திருமணியும்
எங்கும்புகழ்பெற்ற யீசொரியாள்மாமயிலும்
தனியேயிருந்து தனதுளகமடக்கி
மனிதர்காணாமல் மறைந்துநின்றுமாதுநல்லாள்
கிழவன்றன்னைத்தேடி கிளிமொழியாள்பார்த்து
களபநிறத்தாள் காணாமல்வாடலுற்றாள்
கூட்டிக்கொண்டுவந்தக் கூனுக்கிழவனையும்
காட்டித்தரமாட்டீரோ கன்னிகுலமாதர்களே
ஆதிமகாலச்சுமியே யண்டமழுந்தவளே
சோதிமகாமானே துணைசெய்யமாட்டீரோ
அன்னப்பச்சிமாமரங்காள் விளங்காளுர்வணங்கா
என்னைமிகக்கூட்டிவந்து யிளங்கிழவனைக்காட்டித்
தாறீரோளந்தனுட சந்தப்பதினான்போக
வாறீரோஎன்மனது வாட்டந்தவிர்ப்பதற்கு
என்றுபுலம்பியிளங்குளவி தேடுகையில்
குன்றுமேல்திங்கள் குதிக்குமந்தவேளையதாம்
வேளையறிந்து மெல்லிப்பொன்வண்டதுபோல்
சூழ்ந்துநிர்க்கும் புன்னைப்பூவிலொருசூச்சமதால்
இருந்தாள்பொன்வண்டாய் யேத்தபகல்போகும்வரை
தருந்தார்மார்பன் சாமிமிகவறிந்து
பகவதிக்குமங்களங்கள் பாடிமகிழ்ச்சையுடன்
சுகபெரியமாயன் சோபனங்கள்கொண்டாட
ஆடிக்களித்து அகமகிழ்ந்தாரச்சுதரும்
கூடிநிர்க்கும்பேரோடுங் கூறிமிகவாடுவார்
காட்டைமளிக்கநமக்குளொரு முகூர்த்தம்
பேட்டைத்தர்மந்தோண போக்குண்டுமெந்தனக்கு
என்றுகும்மிபோட்டு யிழங்குழலையும்பார்த்து
இன்றுயிருவென்று யெம்பெருமாளுமாட
நல்லபகவதியாள் நாடிப்பொன்வண்டதுபோல்
செல்லப்பதுங்கி இசைமயக்கமாயிருந்தாள்
பகல்பொழுதுமாறி பகவானடைந்தபின்பு
உகப்படைப்புமின்னாள் வொருகுழந்தைபோலாகி
பத்துவயது பிராயம்போலேசமைந்து
சீத்துபலதுடையள் சேர்ந்தவுயிர்கண்மணியாள்

ரண்டுபொழுதாச்சே நம்பதியைவிட்டிளகி
பண்டுபதிக்கேக பாதைதசற்றுங்காணலையே
நாலுதிசையுண்டும் யென்பார்நமக்குச்சற்றுந்தோணலையே
கோலூன்றுங்கிழவன் கூட்டிவந்தபாதையதும்
சற்றுந்தெரியலையே தலையிலெழுதுஞ்சிவனே
முற்றுமிந்தநாடு முடிமாஞ்சிபோவதர்க்கோ
நரைக்கிழவனம்மை நடுச்சபையில்க்கொண்டுவிட்டான்
உரைத்திடுவாரிந்த வூரிலொருவசனம்
மாப்பிள்ளைக்குவீங்கி வறட்டுக்கிழவன்கூட
போய்பிளைத்தேனென்று புவனஞ்சொல்வாரிதுவே
நம்முடையமட்டும் நாயன்விதித்தானோ
சும்மாயிருந்தக்கிழவன் சோலிப்பண்ணவந்தானோ
படைத்தபரனே பாவியேயென்றலையில்
நடத்தையெழுதி நவின்றதுவுமிப்படியோ
பரதவித்துமாது பலபலவாவெண்ணிமிக
விரதமுற்றமாது மெல்லியிழமயில்போல்
ஆளுக்கிடையே யன்னம்போலேதிரிந்து
கூழுகுடித்த குறுங்கிழவனைத்தேடி
திரியும்பொழுது செய்யதிருமாலவரும்
பரியேறும்பெருமாள் பகதியைக்கண்டவரும்
இனியிவளையிந்த யிராச்சியத்தில்நம்முடைய
மனிதப்பெண்கூட்டில்விட்டு மாலையிடவேணுமென்று
நினைத்தம்பெருமாள் நேரிழையைதான்மயக்கி
புனைத்தொருபெண்ணுடைய பொர்க்கூட்டுக்குள்ளடைத்து
தாண்டவமாடுஞ்சபையில் சனங்களெல்லாம்பார்த்திருக்க
காண்டமிகப்படித்துக் கன்னிப்பகவதியை
மனுவறியவண்ட வானலோகமறிய
இனிமணங்களிவை யாம்புரியவேணுமென்று
நிச்சித்தொருபெண் நிலையுங்குறிபார்த்து
எச்சரிக்கையான யிளங்குயிலாள்தன்கூட்டில்
அடைத்தார்பெருமாளாயிழையும் வெகுவாய்
படைத்தோராருளால் பாரீரேழுமயங்க
பாடினாள்காண்டம் பகவதித்தாய்நாயகியும்
நாடியவள்படித்த நல்காண்டமானதுதான்
புகன்றாலுலகம் பொடிப்போலுதிர்ந்திடுமே
உகந்தான்முடிய வுரைக்கிறேன்காண்டமது
மனுவிலுடைதை யுமாகிலுக்கமாய்க்கிலுக்கி
தனுவளைத்தாப்போலே சடலந்தனைவளைத்து
ஆளுக்கிடையதிலே யாட்டிசடலமதை
தானுமிகப்பறந்து தாசிவாண்மடைய
சடலமதைப்புடவையென தான்கோபமாய்க்கிலுக்கி
தடதடவொச்சுவாமியுட தாளடியில்வீழ்ந்து
பாவிநீயிந்தப் பாரழிக்கவந்துயெங்கள்
சீரளிக்கவென்றோ தெச்சணத்தில்வந்திருந்தாய்

பொல்லாதநீசனுட பிதிரையெல்லாமழித்து
சொல்லொன்றுக்குள்ளே தெய்வகன்னிமக்களையும்
வைத்தாளநீயும் வந்தாக்காலெங்களுட
மெய்த்தானமழிக்க மேன்மையோயெந்தனுக்கு
பாவிநீயென்னிடத்தில் பருங்கிழவனாகவந்து
தேவியெந்தன்மானமெல்லாஞ் சீரழித்துப்போட்டாயே
இவ்வளமைசெய்வாயென்று நான்முன்னறிந்தால்
பொவ்வவாய்த்தீயெறியப் போடுவேனக்கினியை
என்கோவில்வந்து யென்னைக்கண்மாயமதாய்
உன்கோவில்வாசலிலே விட்டு ஆட்டுப்பார்க்குறாயே
என்னமாயமாகயிங்கு கொண்டுவந்தாய்நீ
பொன்னம்பலத்தீசன் பொறுப்படுவானிங்கிலேயோ
பொல்லாதகத்தீசன் பொருப்பேறிமாண்டாரே
எல்லாவாபத்துமித்தனைநாள் காத்துமிப்போ
மாண்டானகத்தீசன் மாமுனியாய்ப்போனானே
வேண்டுமென்றகாலம் வேம்புமினிப்பானதுபோல்
பார்வதிமாதும்மையும் பரமேசொரியாளும்
சீர்பதியென்னக்காள் சிறந்தமண்டைக்காட்டாளும்
ஒக்கக்கசந்தாரோ வோவியம்வேண்டாமென்று
அக்கறுகுரூடும் ஆதிவெறுத்தாரோ
மூவாதிமூவருக்கு முன்னுதித்துவந்தவரோ
தேவாதிதேவன் தேவருக்குமூத்தவரோ
இவனுடையமாயமென்னச் சொல்லப்போறோநாம்
சிவனுக்குமென்னுடைய செய்திதெரியுமல்லோ
ஆர்க்குமடங்காத்ததிகாரம் பெற்றவரோ
பாருக்குள்வந்து பஞ்சுகெடுக்கிறானே
போகவழிசொல்வீர்களோ பொன்னுகன்னியம்பதிக்கு
ஏகவழிசற்று மெனக்குதெரியலையே
என்றுபகவதியாளிரஞ்சி மிக்கக்கூச்சலிட்டு
மன்றுதனில்வீழ்ந்து மாபுலப்பமாயழுதாள்

விருத்தம்

புலம்பிடத்திருமால்மாதை பொறுபிள்ளாபிள்ளாபெண்ணே
சலம்பிநீயுரைத்தாலோ கந்தட்டுண்டுபோமோசொல்லு
பலம்பெறயுனக்குயிந்த பருவமாமணங்கள்செய்ய
நலம்பெறவரங்கள்பெற்றேன் நலம்பெறத்தீசனானே

விருத்தம்

நானென்றயீசரானல் நானிலம்பிறவார்கள்ள
கோனென்றயிடையன் சாமிகோபாலனானதாலே
தானென்றுவுலகில்த்தோன்றிச் சடாச்சரவாட்டுமாடி
நானென்றுவேடம்பூணும் நாரணன்நீதானென்றாள்

விருத்தம்

நாரணன்நீதானென்று நவின்றதுசரிதான்பெண்ணே
காரணயுகத்துக்கெல்லாங் குருவுதித்தோங்குமாதி

நாரணயீசனல்லால் கடப்புவேறுருசொல்லு
வாரணக்குயில்போலன்ன மயிலெனவுரைத்தாரையா

விருத்தம்

உரைத்திடமொழியைக்கேட்டு உறுமியேகோபமுற்று
வரைத்தடம்புலிபோல்சீறி மங்கையும்மாறிச்சொல்வாள்
நரைத்துமேபுலச்சைகெட்ட நாரணயீசனென்று
துரைத்தனமாகச்சொல்லச் சுணையுண்டோவுனக்குயென்றாள்

விருத்தம்

சாதிக்குச்சாதி நீயுஞ்சமைந்துநல்வேடம்பூண்டு
தாதிக்குகணவன் போலச்சடமெடுத்துடல்கள்போட்டு
வாதிக்குப்பிறப்பாய் பின்னும்வழிமுந்தன்குலமேகந்தன்
சாதிக்குசரியோடந்தன் தன்குலமறிவேனென்றான்

விருத்தம்

அறிவேனுனென்றபெண்ணே ஆதியுமெனதுள்கண்டாய்
தறுமொழிசொல்லவேண்டாம் தானுமாலையனுநானே
உறுமொழியொருசொல் குள்ளேயுகமதையாளநானும்
மறுமொழியில்லாவண்ணம் வரமபெற்றநாதனேனே

நடை

அப்போதரிவையரும் ஆதிமுகம்நோக்கி
இப்போதுன்மெட்டெல்லா மிகவறிவேன்
சோலிமிகப்பண்ணாதே சுகமாமெங்களைவிடுநீ
கேலிமிகச்செய்யாதே கெஞ்சுகவாய்பெண்ணுரை
பாதகங்கள்யேறாதே பாவையரைவிட்டுவிடு
தோதகமாய்வித்தை தோகையரோடேறாது
எங்கள்மசக்கமெல்லா மிகத்தெளிந்து
சங்கையெங்கள் பதிக்குத்தானேகவைத்துவிடு
கேட்டந்நாரணரும் கிளிமொழியோடேதுரைப்பார்
நாட்டமடவாரே நானென்னசெய்தேன்காண்
உங்களைநான்கட்டி ஒதுமிகப்போகாமல்
எங்களுடபொர்ப்பதியி லிட்டிருக்கோபிள்ளாசொல்
போகவேணுமென்றால் பொழுதிருந்துபோகலாமே
ஏகவேணுமென்றால் யெழுந்திருந்துபோகலாமே
மாயதிருமேனி மனதிலொன்றேயடக்கி
வாய்த்திருவாய்மலர்ந்துரைக்கப்பெண்ணாளும்
வாயுரைத்தாப்போலே மனதுக்கேசொல்லாதே
நீயுரைத்தநெஞ்சம் நினைப்புவேறாயிருக்கும்
மாயமறிவாரோ மாயாதிவுன்சூச்சம்
உபாயமறிய ஒருவராலேலாது
என்றுமசருமரி யிப்படியேசொன்னவுடன்
நன்றுநன்றென்று நாரணர்பின்னேதுரைப்பார்
பெண்ணேயெனதுடைய பேரழகிபெண்மயிலே
கண்ணேயெனது கனியேயென்றெள்ளமுதே

அமிர்தவாய்ச்சொல்லழகி யாசாரவிச்சழகி
தேனேமயிலே திகட்டாததெள்ளமுதே
மானேகுயிலே மரகதப்பெண்ணோவியமே
கெஞ்சுகவாய்ப்பெண்ணே கிழிமொழியென்மாமயிலே
செஞ்சுடரேநல்ல திரவியமாமணியே
பொன்னும்பகவதியே பிள்ளாய்நான்சொல்வதுகேள்
என்னுடையபேரில் எள்ளளவுங்குற்றமில்லை
கலியளியவயது காலஞ்சரியானதினால்
வலியயுகமான வாய்த்ததர்மநல்புவிதான்
பிறப்பதினாலிந்தப் பெருபுவியில்நான்பிறந்து
சிறப்பதுகள்செய்து செய்கருமமும்முடித்து
நாடாளநமக்கு நல்லபலனதினால்
தாடாண்மையான சத்திப்பகவதியே
உண்மைதான்சொல்லுகிறேன் வோவியமேநீகேளு
தன்மையல்லால்வேறு தப்பிதங்கள்சொல்லேனான்
மாதுவுமையாள் வாய்த்தகுலபார்வதியாள்
நீதுபுகழ்லச்சுமியாள் சிறந்தபகவதியாள்
மண்டைக்காட்டாள் தெய்வமடந்தையேழுபேர்கள்
குன்றையுறைவள்ளிக் கோதைத்தெய்வானைவரை
பூமடந்தைநல்ல பொன்னரியதேவிமார்கள்
பார்மடந்தைகங்கை பாணிமடந்தைமுதல்
கலியென்வரம்பெத்து கைலைதனைவிட்டவனும்
இலியனுகத்தில் தேவியவள்பெண்ணுடனே
வருகுமந்தவேளையிலே மாமுனிசீராமரிசி
திருவுமையாள்பங்கரோடு சென்றுநின்றேதுரைப்பார்
நல்லபரமேசுரரே நாடியிந்தக்கலியன்
வெல்லக்கூடாதவரம் வேண்டியவன்போறதினால்
எக்காலமையா இவன்முடிவாவதுதான்
அக்காலமெல்லாம் மருளுமென்றாரீசுரரை
நல்லபரமேசுரரும் நாடுமுனிகேட்டதற்கு
சொல்லலுற்றார்பெண்ணே செவிகொடுத்துக்கேட்டிடுநீ
மாமுனிகேளென்று மாயரந்தயீசுரரும்
தாமுனிந்துசொன்ன தன்மைமிகக்கேளும்
பொல்லாக்கலியன் பொன்றியடிவேரறுவ
தெல்லாமறிய யிலக்கறியக்கூறினாராம்
இவன்மாளும்போது யினத்துக்கிளம்பகையாம்
சிவஞானநினைவு சொல்லாதுதேசமதில்
குலைகளவுரெம்ப கோள்கள்மிகுந்திருக்கும்
தலைஞானவேதம் தடுமாறிகைவிடுவார்
நேருக்குக்காலம் நிகழ்ந்திருக்கும்பார்மீதில்
போருக்குயாரும் புத்தியாய்த்தானிருப்பார்
பிள்ளைக்குத்தாயும் பெருத்தபகையாயிருக்கும்
கள்ளக்கணவருடைக் கருத்துமிகமாதருக்காம்
கூடிவுடன்பிறந்தக்கோதையரேப் பெண்ணெனவே

நாடியவரெண்ணி நாணிறப்பார்கோடி
மாரிமறைந்துவிடும் வாயுவதுநோய்வீசும்
கீழ்ச்சாதியெல்லாங் கெறுவிதங்கள்மிஞ்சியவர்
மேல்ச்சாதிதன்னை வேலைகொண்டுதான்வருவார்
வம்புக்குநோக்கம் வாக்கில்மிகவிருக்கும்
அன்புக்குநோக்க மடங்கிமிகயிருக்கும்
மனுவதிலேகர்பிகளா மாதர்கர்ப்பேயிழந்து
தனுவாய்ப்புருசருட தன்வாக்குக்கேளார்கள்
தெய்வநிலைகள் தேசமதிலேக்காணாது
மைநெரியப்பெண்ணார் மனுநீதங்காணாது
இராசநெறிநீதம் ராச்சியத்தில்காணாது
பிராயம்வருமுன்னே பெண்கள்நிலையழிவார்
தெய்வமடவார் தேசமதிலேவருவார்
வையமறியமாலையிட்டு வாழ்ந்திருப்பார்
பார்வதியாளீசெரியாள் பரமேசெரியாளும்
சீர்பதியாளான சீதாதேவிமுதலாய்
கன்னிகுமரிகைலைபுகழ் மாதரெல்லாம்
உன்னியவர்களொரு தலத்திலேகூடி
வாழ்ந்திருப்பார்மங்களமாய் மக்கள்கிளைவாழ்வுடனே
தாழ்ந்திருந்தமாகலியன் தன்னால்மடிந்திடுவான்
இப்படியேயிந்தக் கலிமாயும்லக்கெனவே
அப்படியேமாமுனிக் கருளசிவனாரும்
பின்னுமுனியும் பிஞ்ஞகனோடேகேள்ப்பார்
துன்னுபுகளீசுரரே தெய்வமடவார்களெல்லாம்
கலியுகத்திலவர்கள் கட்டாய்வொருதலத்தில்
சலிவிலாதேவாழ்ந்து சந்ததிகள்வாழ்வுடனே
வாழ்ந்திருப்பாரென்று வகுப்புரைத்தீசுரரே
கூர்ந்திவர்கள்தன்னைக் கோலமணஞ்செய்கிறதார்
யானறியச்சொல்லி மானேயெனத்தொழுதார்
தானறியச்சொன்ன தண்மைமிகக்கேளும்
நாடுகுற்றங்கேள்க்க நல்லோரைத்தேர்ந்தெடுத்து
கேடுகலிநீசருட கிளைவழிகளுமறுத்து
தெய்வச்சான்றோர்களுக்குச் செங்கோல்மிகக்கொடுத்து
மெய்வரம்பாய்த்தர்மமேன்மை முடியுந்தரித்து
தர்மபுவியாளத் தாட்டிகவைகுண்டரும்
பொர்மைகுலமானதிலே பிறக்கிறானதினால்
நாங்களெல்லோரும் நமனுவர்க்குள்ளானோம்
தாங்கியொருபொருள்போலே தானிருப்போமப்பொழுது
ஒருபொருளாய்வந்து வுருவெடுப்பதானதினால்
திருமடந்தையாவருஞ் செய்யுமன்னர்தானவராம்
என்றீசர்சொல்ல யிசைந்தமுனிநல்லதென்று
நன்றுநன்றையா நல்லகாரியமெனவே
சந்தோசங்கொண்டு தானிருந்தான்பெண்ணரசே
முந்தோர்மொழிந்த முறைநூல்ப்படியாலே

வந்ததுகாணிந்தவிதி மங்கையரெங்களுக்கு
மெந்துகாரியம்பெண்ணே யென்னையொன்றுஞ்சொல்லாதே
தலையில்விதிபிள்ளாய் தங்கடங்களாகாதே
கிலேசமதையெலாங் கிளிமொழியேவிட்டுவிடு
கொண்டுவந்தேன்பெண்ணே குவிந்தவிதியெந்தலைக்குள்
பண்டுவமைத்தபடி பதறுதேபாவையரே
பெண்ணேநீயொருத்தி பேர்பெரிகண்ணரசே
கண்ணேயுனைக்காணாமல் கலங்கிமிகநானலைந்து
வாடியிருந்தேனடி மங்கையுனைக்காணாமல்
கோடியிருந்தேனடிக் குமரியுனைக்காணாமல்
தாபத்தாலுன்னைத் தவமிருந்துகண்டேனடி
கோபத்தால்க்கன்னி குமரியென்னைப்பேசாதே
என்றுமகாமா லிரக்கமுடன்மாதைமிக
கொண்டுவணைவாய்க் குழைவாய்மிகயிருக்க
அம்மைபகவதியா ளகங்கழிகூர்ந்து
நம்மைப்படைத்தது நாயன்முன்னொன்றுசொல்லி
இருந்தபதியையெண்ணி யெண்ணிமாதுநல்லாள்
பொருந்துவிளியால் பொருமிமிகநீருவிட்டு
அழுதாளேசொல்லி யருவரைகடாணிழக
ஒழுகாகதிர்க்கு முலகநருளளவே
மாமரங்களெல்லாம் மலங்கிமிகவளவே
பூமரங்களெல்லாம் பூத்துச்சொரிந்தனவே
அய்யோநானிருந்த வம்பலமும்தோற்றேனே
வையாவழித்தெருவு மண்டபமும்தோற்றேனே
சிங்காசனமும் செல்லத்துறையும்வாவிகளும்
மங்காதபொன்னும் மாழிகையும்தோற்றேனே
இலாடக்கிழவன் ராத்திரியில்வந்துநம்மை
கபாடமிகச்செய்ததினால் கனபதிகள்தோற்றேனே
பொன்னுபரணமும் பெட்டகமும்தோற்றேனே
முன்னுளெழுத்தோமுத்து மண்டபமுமிழந்தேன்
ஆண்டிலொருதேரோட்டம் வதுவெல்லாம்தோற்றேனே
வேண்டுமனுவந்து விழுந்திறைதல்தோற்றேனே
தண்டையணிசிலம்பும் தாள்மெல்லாம்தோற்றேன்
துணைக்கிள்ளையான தோளியரைத்தோற்றேனே
பணப்பெட்டகமும் பைம்பொரியப்பட்டுகளும்
நவமணியாற்செய்த நல்லவடந்தோற்றேனே
செகமெல்லாங்கூடி சேவிப்பதுந்தோற்றேனே
இத்தனைநாளுமிருந்த கெதியோவெனக்கு
முத்திபெற்றயீசன் முன்னெழுதிவைத்ததுவோ
அய்யோநான்பிறந்த வன்றுமுதலின்றுவரை
வெய்யோன்முகம்வரையும் மெல்லியறியேனே
பாவிக்கிழவன் பரிகாசஞ்செய்வானென்று
ஆவியறிந்திலனே வங்கமதுவாடுதையோ
மூன்றுபொழுதாச்சே ஊறுநீர்தானருந்தி

மீண்டசரீரம் விழலாய்யெரியுதையோ
பாலும்பழமும்பருந்தேனுஞ் சர்க்கரையும்
காலுரண்டான நல்லருசியதுவும்
பாவித்தரும்பி பருங்கனல்போலமீறுதையோ
ஆவிதடுமாறுதையோ வாதிபரமேசுரரே
என்றுபகவதியா ளெண்ணமுற்றுத்தானழவே
மன்றுதனையழந்த மாலுமிகவமர்த்தி
தேனினியகண்ணே தேவிபகவதியே
நானினித்தான்சொல்லும் நல்லமொழிகேளாய்
நான்மணங்கள்செய்யும் நாரியர்கடன்னிலுமோ
மேன்மைமதாயுனக்கு வெகுபணிகள்நாந்தருவேன்
பொன்பணங்களான பெட்டகமுந்தருவேன்
என்பதியுந்தருவேன் மேறும்பல்லாக்கருள்வேன்
தண்டாயமேறிச் சனங்கள்மிகப்போற்றிவர
கொண்டாடநல்ல குருபாக்கியந்தருவேன்
திருநாள்பவுசுதினமுனக்கு கானருள்வேன்
அருன்ஞானப்பெண்ணே யங்கிருந்தசீரதிலும்
ஐரெட்டியாகயணி வேனுனக்குடைமை
பொய்யென்றிராதே பொன்முடியுமற்றன்றுணை
யென்றுமாயாதி யிப்படியேயானைகொண்டு
ஞுன்றுதனமின்னுள்க் குமரிமனம்மகிழ
சத்தியஞ்செய்து தலையைத்தொட்டாணையிட்டு
புத்திவந்துபெண்ணுள் பொன்னும்பகவதியாள்
நாதனுடதஞ்சமென நாடியகமகிழ்ந்து
மாதுகுமரிவாயுரை யாதேயிருந்தாள்
அப்போதிருமா லானந்தபேபெருகி
இப்போபகவதியை யேற்றமணஞ்செய்யவென்று
உன்னித்திருமாலொரு சொரூபங்கொண்டனராம்
மின்னுமந்தயீசுரராம் வேடமதைக்கொண்டனராம்
எக்காளவாத்தியங்க ளிசைதாளநாகசுரம்
அக்காலமீதில் தேவராகாயமாகநின்று
பந்தல்விதானமிட்டு பாவாணர்போற்றிநிற்க
சந்தமுடன்மணிதர்ச் சாதிமிகமகிழ
தெய்வரம்பைமாதுத் திருக்குறவைத்தான்பாட
ஞாயமனுவோர் நல்குரவைதான்பாட
பகவதிக்குநல்ல பாரமணக்கோலமிட்டு
சுகபரனுமாலைமணச் சொரூபமெடுத்தவரும்
பிச்சுமாலைபுரிந்து பொற்கடுக்கன்மீதணிந்து
மிச்சமுடன்வெள்ளி விரலாளியோடரஞாண்
பொன்த்ராவடங்களிட்டு பொன்னரியதாலிதன்னை
மின்தாவடம்பூண்ட மெல்லிபகவதிக்கு
கண்ணுனதாலி காரணத்துநல்த்தாலி
விண்ணோர்கள்மெய்க்க , விறலோன்மிகத்தரித்தார்
கண்டுதெய்வாரும் கன்னிபகவதிக்கு

யின்றுமணம்புரிந்தா ரிறையவர்தானெனவே
கொண்டாடிக்கைலைக்குவிந்து மிகவாழ்ந்திருந்தார்
தொண்டரனச்சான்றோர் துதித்துமிகப்போத்தி
கலிமுடிந்தக்காலங் கன்னிபகவதிக்கு
சலிவில்லாமாமணங்கள் தானுச்சுநன்றனவே
எல்லோருங்கொண்டாடி யிருந்தார்காணம்மானை
நல்லநாராயணரும் நாடியகமகிழ்ந்து
செல்லமடவாரோடு சேர்ந்துவிளையாடியிருந்தார்
அந்தந்தபெண்களுக்கழகு சொரூபங்கொடுத்து
சேர்ந்தவிளையாட்டுத் தோகையரோடாடினோம்
ஆடித்திருநா ளானந்தகும்மிகளும்
நாடியிசத்தீர்ப்பும் நல்லமக்களுக்கறிவும்
சொல்லியாமங்கூறிச் சோபனங்கள்தான்பாடி
நல்லியல்வாய்நாதன் நடத்திவருகையிலே
ஈசுரனுக்கேற்ற யேந்திளையாள்பார்வதியை
வீசுபுகழ்பார்வதியை வெற்றிமண்டைக்காட்டாளை
மாமணங்கள்செய்ய மனதிலுற்றெம்பெருமாள்
பூமணங்களான பொன்னுநல்லபார்வதிக்கு
திங்கள்சடையணிந்துச் சிவவேடமுந்தரித்து
மாத்திரைக்கோல்கைபிடித்து மார்பில்தாவடம்பூண்டு
காத்திருந்துபார்பதியை கருத்தாய்நினைக்கலுற்றார்
மாதுமைக்குமங்களங்கள் மாயேசுரன்கூறி
நீதகலுமாதர்களைச் சிவமும்மிகநினைத்து
கருத்தாயிருந்து காண்டமதுசொல்லியவர்
உருத்தாயிருந்து வோதுவார்மோகமதாய்
பெண்ணேயென்பார் பதியேபேரானமாதுமையே
கண்ணேயென்பார்வதியே கனககரெத்தினமே
கூட்டுக்கிளியே கொடியிடையேநீங்களெல்லாம்
நாட்டிலெனைவிட்டு நன்னகரில்வாள்வீரோ
தனியேநான்வந்திருந்து தவித்துமுகம்வாடுவது
கனியேயென்மாமணியே கருத்திலறியீரோ
உள்ளுடைந்துவாடி யுங்கள்மேல்காதல்கொண்டு
தள்ளுடைந்துநானிருக்குந் தன்மையறியீரோ
ஊணுறக்கமில்லை யுங்களைநான்யெண்ணியெண்ணி
கோணுதலாய்வாடி கோடிமுகம்வாடுறேனே
வாரீரோபெண்காவமற் பார்த்துவன்னமிட
பாரீரோவென்முகத்தை பார்த்திரங்கமாட்டீரோ
அன்னங்காய்வைத் தமுதருந்துமென்றுசொல்லி
முன்னிங்கேவந்து முத்தமதுதாரீரோ
வாழைப்பழங்கனிகள் மாம்பழம்பலாக்கனிகள்
கூழையசந்தணமுங் கொண்டுவந்துதாறையளோ
கண்ணாரிப்பெண்ணே கள்ளமில்லாதோவியங்கா
பெண்ணரியமாமயிலே பிள்ளாயென்கண்மணியே
யெண்ணுஞ்சிறுபிள்ளை யாயிருக்குமந்தபார்பதியே

கண்ணுமயிலே கைக்குள்வந்துசேராயோ
யென்னுபரநாதனு மெய்யில்விசைகள்தான்கூற
மன்றூர்க்குள்ளுமையாள் வாய்த்தகுலபார்பதியாள்
வந்துதிருப்பாதமதில் மாகாகோபமாய்வீழ்ந்து
முந்துமொளியெல்லா மொழிந்தாரேமாதரவர்
அய்யோயிதென்ன மடிமாறுகாலமதோ
பொய்யோகலியென் பிறக்கப்போய்நாங்களெல்லாம்
இப்பாருலகிலிப்படியே வந்ததென்ன
பொல்லாக்கலியுகந்தான் பொடிப்பட்டுப்போறதற்கோ
வல்லாத்தமங்கையெல்லாம் மாகலியில்வந்ததுநான்
என்றந்தமாதரிது கூறமபரனும்
மன்றெந்தமாதர்களே நானினைத்ததுபோலே
வந்தீரேயின்று மணம்புரியவேணுமென்று
புந்தியயர்ந்து பூவைமுகங்கோடி
அண்ணர்நாரணரும் வளிதனில்வந்தாரென்று
பெண்ணரசுநாங்கள் போய்பார்க்கவேணுமென்று
வந்தோமேயென்னுடைய வரம்பெரியவண்ணரென்றூர்
அண்ணதுநீயென்று மாயிழையேயிவ்வுலகில்
இண்ணதுவேலிப்படித்தான் யென்னுடையநாயகமே
மனதயர்ந்துமாதர் வாயுரைக்கக்கூடாமல்
தனதுளமுங்கோடி தலையில்விதியெனவே
நின்றூர்மடவார் நினைவுதடுமாறி
பண்டாரமாக பரமன்வடிவெடுத்து
தாலிமிகத்தரித்தார் தாமண்ந்தபெண்ணூர்க்கு
ஆலித்துப்பார்வதியை மருவியுடனீராட்டி
சந்தோசமாகத் தாலிமிகத்தரித்தார்
வெந்தோசந்தீர்ந்து மேலோர்கள்கொண்டாட
வையகத்தோரும் மனமகிழ்ந்துகொண்டாட
செய்யத்திருமால் செயச்சடங்குகள்முடித்து
வாழ்ந்திருந்தார்பெண்களுடன் மாயப்பரநாதன்
தாள்ந்திருந்துமடவார் சரண்மிகப்பூண்டு
பூண்டுபணிவிடைகள் பூவையர்கள்செய்துமிக
வேண்டும்பலபாக்கியத் தோடிருந்துமிகவாழ்ந்திருந்தார்
இப்படியேபெண்க ளோடிருந்துமிகவெம்பெருமாள்
நற்புடையதேர்த்திருநாள் நாளுங்குறையாமல்
செய்துயிகனை சிவசோபனம்புரிந்து
'பைதுமழமாதரோடு பண்பாகவேயிருந்தார்
மாதருக்குமாதவனும் வானோர்க்குநாயகமாய்
தாரணிக்குநாதனெனத் தான்வாழ்ந்திருந்தனராம்
வாழ்ந்திருக்கும்நாளில் மாதுகன்னிமார்களோடும்
சேர்ந்திருக்கும்நாளில் திருமால்மனமகிழ்ந்து
கூர்ந்ததெருதேவி குவிந்தமன்றைறக்காட்டாள்க்கு
சோபனங்கள்கூறி சுற்றமங்களம்பாடி
மேவரசிமானு மெல்லியரைநாமணந்தான்

புரிந்தவர்க்குக்கோலம் புகுந்தணியவேணுமென்று
மதிபெரியமாதை மயக்கமிகசெய்திடவே
மாதுக்குநல்ல மனவிருப்பமானதொரு
சிருஷ்ந்தமாதரெனச் செம்பவளமாயவரும்
காதுக்குத்தோடணிந்துக் கைக்குவளையுமணிந்து
மார்பில்வடமணிந்து வாய்த்ததண்டைகாலிலிட்டு
சேலையுடுத்துச் சிவந்தகொசுகமுடித்து
மாலையணிந்து மார்பிற்கலையணிந்து
கோர்வையணிந்து குழலுமிகமுடித்து
தோர்வைப்படாத தோகைபோலேசமைத்து
மஞ்சளையும்பூசி மாலைமிகவணிந்து
செஞ்சொல்மதனைச் சிந்தைக்குள்ளேயிருத்தி
எடுத்தார்பெண்ணாக யெம்பெருமாள்கோலமது
கடுத்தகன்னிமார்கள் கன்னிகணவரென்று
சொல்லிமகிழ்ந்து தோழிநாமென்றுசொல்லி
முல்லையணிப்பெண்ணார் முகுந்தன்பதந்தொழுவார்
நாட்டிலுள்ளோரும் நாரணப் பெண்ணாரென்று
தாட்டிமையாய்ப்போற்றிச் சரணம்பணிந்துநிற்பார்
இப்படியேவேச மெடுத்துத்திருமாலும்
பொர்படியில்வாழும் பொன்னுமன்றைக்காட்டானை
மயக்கிக்கொடுவாவெனவே மாமோகப்பெண்ணேவ
இச்சொரூபம்போலே யேந்திழையாள் கண்ணிலொரு
சற்சுருபமாகத் தான்கண்டுரைபகரும்
பெண்ணேயென்னக்காள் பேர்பெரியநாயகமே
கண்ணேயென்மாமணியே கனகவொளிமாதவமே
கலியுகத்திலேபெரிய கண்காட்சைதன்னுடனே
நித்தத்திருநாளும் நீலமணிமண்டபமும்
சிற்றம்பலமும் திருநாள்சிறப்புடனே
சத்திகன்னிமாரும் தண்டாளமாதுமையும்
பத்தியுள்ளபார்பதியும் பார்மகிழ்பகவதியும்
கங்கைமடவாரும் காச்சிமிகப்புரிந்து
கொங்கைமடவார் கூடிமிகப்புரிந்து
கும்மியடித்துக் குரவைமிகக்கூறி
எம்வடிவுபோலே யேலங்குளலார்கள்
ஆடிப்பாடித் தலங்கிறுதமாகியவர்
சாடிக்குலாவிச் சனங்கள்வெகுகூட்டமுடன்
பாலும்பழமருந்தி பாவிக்கும்பாவனையை
மேலுக்குகந்தவனே விடுத்துரைக்கக்கூடாது
என்றுரைக்கவந்த யிளவரசிக்காட்டாளும்
அன்றுமதிமயங்கி யாயிழையாள்மாய்கையொடு
கூடிநடந்துக் கூண்டரியநர்ப்பதியில்
ஆடிக்களிக்கும் மாதிகனைச்சபையில்
வந்தாளேமாய்கை மண்டைக்காட்டாளுடைய
சிந்தையதற்குள்ளே சென்றுமிகவிருக்க

திக்குத்திசைகள் தெரியாமல்த்தான் மயக்கி
பக்குவமாது பறிகொடுத்தபேர்களைப்போல்
புலம்பித்தவித்து பெண்ணரசுநிர்க்கையிலே
வலம்புரிக்கண்மாயன் மாதைதமிகவருத்தி
மணமுகிக்கவென்று மாயன்மனதிலுற்று
பகவதிக்குள்ச்சென்று பாரமணஞ்செய்யவென்று
சுகவதியாளந்த சோதிபகவதிக்குள்
உள்ளாக்கிக்கொண்டு வுற்றத்திருச்சபையில்
துள்ளாட்டமாக்கித் தொகுத்தகாண்டம்படித்தாள்
வையகத்தோர்காண வாழும்பகவதியாள்
செய்யமண்டைக்காட்டாள் சிறந்தகாண்டம்படித்தாள்
அயயோநான் கணமயக்கமாய் யங்கிருந்திங்குவர
பொய்யோயொருமாய்கைப் பெண்ணுகவந்தது தான்
இங்கேயிவர்போல யிருந்ததுகாண்வந்தபெண்ணும்
சங்கைநமைக்கெடுக்கச் சமைந்தாரேயுபெண்ணுகி
பெண்ணுச்சமைந்து பேராசையுமாகி
கண்ணுனையெந்தன் கர்ப்புயிழந்தேனே
என்றுமாதேவி யிப்படியேசொன்னவுடன்
ஒன்றுமறியாதவர் போலுள்ளந்தனிலடக்கி
பெண்ணுறிந்த பெருங்கலிமைத்தான்முடிக்க
கண்ணன்பெண்ணரசிக் கரியசொரூபமது
எடுத்திகனைக்கூற யானிங்கேயாடுறவன்
முடுத்துந்தனூரில் முறைமயக்கவந்தேனே
யெனக்குப்பெண்ணில்லை யென்றிரந்துகொள்ளவந்தேனே
தனக்கிதுவோர்ஞாயந் தாணியதுசொல்லாதோ
நாமிருப்பிங்கேகாம மெங்குங்கேழ்க்குதல்லோ
சேரமவாரமணிந்த சுவாமியுடகர்ப்பனையோ
என்றுபெருமா ளிதுவுரைக்கமாதுசொல்வாள்
குன்றெடுத்தமாயக் கோபாலாவுன்சூச்சம்
எவருலமுவெடுக்க வேலுங்காணுன்மாயக்
கவருயிரங்கோடிக் கருத்திருக்கும்மாயவரே
இராமனாய்த்தோன்றி இராவணசங்காரமது
சிராமர்படைவெகுத்துத் தென்னிலங்கைசுட்டழிய
.போரில்நேர்நின்று பொருதுகின்றவேளையிலே
மேருகுலுங்கி விண்டுேள்மிகப்பறந்து
ஆகாயத்தேகி யந்தரங்கமேகமதில்
தூள்மூடக்கண்டு தேவர்மிகப்பதறி
வேழதியவுஞ்போர்மிகுத் தேவர்பார்க்கையிலே
போரிலும்நீர்நின்று பொருதுசாக்விழைக்க
வாரியிலும்பாம்பணையில் வாய்த்தபள்ளிகொண்டீரே
ஆய்ப்படியாய செல்லாருந்தான்கூடி
சாய்ப்பானபேய்களுக்குச் சருவில்கொடைகொடுக்க
பேய்யெல்லாவோட்டி பெரும்பூதமாயிருந்து
ஆயர்கள்ப்பர்த்திருக்க வங்குபூசாரியுமாய்

நின்றுய்யெத்தனையுஞ் சிலநாதயனாயிருந்து
தொட்டிலாமனையிற் சிறுபிள்ளையாய்க்கிடந்து
மட்டுப்பருவமுள்ள மாதர்மனைபுகுந்து
விளையாடிநீயும் வேருரறியாமல்
குழைவாய்மதலையெனுங் கூர்ந்ததொட்டிலேகிடந்து
சிறுகுழவிபோலே சீறிழிகவழுவாய்
பருபதங்களுமெடுப்பாய் பாலன்போலேகிடப்பாய்
உன்சூச்சவேலை யுரைக்கவெழிதாமோ
தன்சூச்சமெல்லாந்தான் வுரைக்கக்கூடாது
பலவேசங்கொண்டு பார்முழுதுஞ்சுற்றிடுவாம்
குலவேசநீருங் கொண்டதொழிலல்லவோ
ஆரோடேசொல்லி யதட்டிவிடவேண்டாமே
பாரோடுதித்துவந்த பாவையொடுசெல்லாது
என்றுமனைறக்காட்டா ளிசைந்தமொழிகேட்டு
நன்றுநன்றுபெண்ணே நமக்கிதுவேஞாயமுறை
பெண்ணேயுன்பேரில் பேராசைமெத்தவுண்டு
கண்ணேவுன்னையிப்போ கலியாணஞ்செய்வதற்கு
வேளையிதாகும் மெல்லியரேயென்றுரைக்க
மானனையமங்கை மனதயர்ந்துவாய்குழறி
தலையெழுத்தெனவே சத்தமுறையாடாமல்
சிலைதாள்நுதலாள் சொல்லுரையாதிருந்தாள்
இருந்தநினைவை யோகமூர்த்தியறிந்து
பொருந்துமதியான பிரமாதிவேசமதால்
வேசமெடுத்து மேளத்தொனியுடனே
வாசவருந்தேவர்களும் மலர்மாரிதூவிவர
தேசநாறுளறிய தெய்வமடவாரறிய
மாயபரனும்மகாபெரிய நூல்முறையாய்
வாசக்குழலாளை மாலையிட்டாம்மானை
மாலையிட்டுநாதன் வாய்த்தசடங்குங்கழித்து
சாலையத்துள்யேகித் தானிருந்தாரம்மானை
மணமுகித்துநல்ல மணவறையினுமிருந்து
துணைபெரியமாயன் சுருதிமுறைப்படியே
ஆகமத்திகனை யலங்கிருதமாய்புரிந்து
நாகரிகநாதன் நடத்திவரும்நாளையிலே
கந்தனுக்கும்பெண்ணைக் கலியாணஞ்செய்யவென்று
சிந்தித்துநல்ல திருமால்மனமகிழ்ந்து
கேட்டுநருளவிட்டு கிளிமொழியைத்தான்வருத்தி
கோட்டுவரையான கோதைவள்ளிநாயகியை
கந்தன்சொரூபங் கரியமால்தானெடுத்து
எந்தன்பிரானும் யேற்றவள்ளிநாயகியை
மாலையிட்டுநல்ல மணமுகித்தார்கந்தனுமே
வேலையிட்டமான வேண்டுஞ்சடங்குசெய்து
நாளிட்டுவந்து நாளேழுமேகழித்து
வாழட்டுமென்று வாய்த்தசடங்குமுகித்து

மாதரோசடெல்லாம் மகிழ்ந்திருந்தாரம்மானை
தாரணியோராறியத்தான் வாழ்ந்திருந்தனராம்
பெண்ணோர்தமக்கு பேர்பெரிதர்சொரூபம்
கண்ணனையாயவருங் காட்டிமிகவாழ்ந்தார்
வாழ்ந்திருக்கும்நாளையிலே மங்கைதெய்வமாதர்களில்
மேந்திளைக்ளில்ச்சிலர்க் ளிழங்குளவிபெற்றனராம்
பாலரானபெண்ணும் பாவையர்கள்பெற்றுமிக
கோலமுடன்வாழ்ந்திருந்தார் கூண்டரியசெல்வமொடு
பாக்கியங்கள்ரெம்ப பவுசுங்குறையாமல்
நோக்கியியல்வாய்மாதர் நுண்ணிமையாய் வாழ்ந்திருந்தார்
நாராயணர்க்கு நல்லமதுதான்படைத்து
காரணர்ரமுது கலந்துமிகவுண்டிருந்தார்
கூடியிருந்துக் குலாவிமிகவாழ
நாடிமகிழ்ந்து நாரணருந்தேவியுமாய்
வாழ்ந்திருக்கும்நாளை மங்கைபகவதியாள்
சேர்ந்தகுழலான தேவியவள்தோழியர்கள்
இருந்துமிகவாழ்ந்த யிரணவொழிமண்டபத்தில்
திருந்துபகவதியை தேவியவர்கள்காணமல்
காணமல்த்தேடி கானகங்களும்பார்த்து
வாணல்மறுகி வந்தாரோநர்ப்பதியில்
பதியில்பகவதியை பண்பாகப்பார்த்தவர்கள்
விதியிதுவோ தாயே வெயிலுகந்தமாதாவே
நீயிருந்தபதிதானிதானம் போதாதெனவோ
நீயுமிந்தபதியை நினைத்துவந்தவாறேது
அப்போப்பகவதியா ளவர்கள்தனைப்பார்த்து
இப்போநமக்கு வெழுத்தின்படியாலே
நடந்திருக்குமபெண்ணே நவிலக்கூடர்தினிமேல்
கடந்தபொருள்காணுங் கன்னியிவர்கண்டரே
தலையில்விதியெ ன்வே சாற்றிளுள்தோளியுடன்
மலைவுதெளிந்து மாதேயென்தாய்மாரே
எங்களுக்குத்தாயே யினியாருநல்த்துணைநான்
தங்கடங்கள்தீரச் சாற்றுமெங்கள்மாதாவே
மாதேயென்தோளியரே மன்னருக்குமெந்தனக்கும்
திதேதுமில்லாத தெய்வத்திருப்பதியில்
நின்றுபணிசெய்து நிறைவாகநில்லுமென
அன்றந்தத்தோழியருக் கருளிவிடைகொடுக்க
விடைபோலேதோழியர்கள் வேதம்புகழ்பதியில்
சடைவில்லாதேமகிழ்ந்து தாள்ந்தேவல்செய்திருந்தார்
நன்றாகநாரணரும் நாடுமடவார்களுடனாய்
ஒன்றாகமக்களொடு வொத்தளமாய்த்தானிருக்க
பெற்றவுபதேசம் பெருநூல்முறைப்படியே
கற்றைக்குழலார் கனமானதேவியரை
ஏகமறியயிசைந்து மணம்புரிந்து
வாகாய்பரனும் மகிழ்ந்திருந்தாரம்மானை

இனியிந்தயிவ்வுகத்தில் யீயாமனுப்புங்கோலமதை
தனுவைக்குறைக்க தனதுள்மிகவடக்கி
நடத்தும்நருள்கள் நல்லன்னமீகிறதை
இடத்தில்கொடு வந்தியுங்களென்றுமிக
சொல்லிநாங்கூட சுவாமிமிகயிருந்து
நல்லமக்களோடு நாங்கூடிவாழுவென்று
ஆராதனைச்செருபமடக்கினருள்மனதில்
ஊரானதில்ப்பிச்சையுங்களுடமுப்பாலே
இடஞாயமில்லை யென்னிடத்தில்கொண்டுவந்து
விடநாளுங்கூடி விருந்துதர்மமேமற்றிடலாம்
என்றுரைக்கநருள்களெல்லாருஞ்சம்மதித்து
கொண்டுவந்துவிட்டார் கூடிவந்துநாரணரும
மாதர்மக்களொடு மாயன்மனமகிழ்ந்து
தாதரிருந்து சாப்பிட்டாரம்மானை
கூடியிருந்துக் குளாவியமுதேதற்று
பாடிமகிழ்ந்து பரமன்வரும்நாளையிலே
பின்னும்பெருமாள் பிள்ளைகளைத்தான்பார்த்து
மன்னும்பெரியமக்கள் மக்கள்மாதர்களே
உங்களுட வீட்டி லுற்றவிருந்தருந்து
மங்களமாய்யெந்தனுக்கு மாவிருப்பமாயிருக்கு
நான்வந்தென்றேபோரால் நாட்டுமிணத்தாங்கல்களை
தான்வந்துபார்க்கச் சந்தோஷமாயிருக்கு
என் றுரைக்கநாத னிசைந்தகுலச்சாணோர்கள்
நன்றுநன்றெங்கள் நாராயணக்கருவே
எப்போதுநீர்வந்து ரச்சிப்பீரெனறுமிக
தர்பாரோநாங்கள் சடைத்துமுகங்கோடி
பழைக்காணப்பயிர்போல வாடியிருந்தோமய்யா
பிழையானதுபொறுத்துப் பிள்ளைகளையாண்டுகொள்ளும்
ஆண்டுகொள்ளுமையா வாதிமகாபரனே
பூண்டுகொண்டோமுமது பொர்பாதம்நாங்களென
தொழுதுவணங்கிச் சுவாமிமிகவாவேணுமென்று
முழுதுமனையில் முகித்தமுறைபக்கலிட்டு
பந்தலிட்டுநல்லப் பரிமேல்க்கட்டிகட்டி
சந்தமுடனேதலைவாழையுங்நிறுத்தி
அம்மைலாரவர்க்கு வாங்குமிகவகுத்து
செமமையுடனேமாயன் சிறந்திருக்கமேடையிட்டு
கட்டுமேல்க்கெட்டி யென்கனிபலதுங்கொணர்ந்து
வெட்டிராமிச்சி மிருத்தபன்னீர்சந்தணமும
வாடைகமகமென மலர்ப்பிச்சிமாலைதூக்கி
மேடையலங்கரித்து விதானம் லதணிந்து
ஆயமுக்கமுது தான்கனிவகையும்
மெய்யானதய்மார்க்கு வண்டுகின்றதீனவகையும்
கூடவந்தநருள்துக் கோப்புபலசேகரித்து
வாடவிடாயல் வஸ்துபலதீன்வகையு

மேளத்தொனியும் வெடிவாணக்கோப்புடனே
காளடம்மானங் கூடியசிறப்புடனே
அய்யாவைவரன்று மானபரிமேலேற்றி
வையாளிகொண்டு மாதாவைத்தொட்டில்வைத்து
ஆடல்பாடலுடனே யரம்பைக்குரவையுடன்
நாடதிய்நாரணருக்கு நல்லவிருந்தெனவே
சான்றோரவர்கள் தான்கூட்டித்தங்களுட
மீண்டோர்மனையில் விருந்துமிகக்கொடுத்து
நாரணர்க்குச்சான்றோர் நல்லசுருளும்வைத்து
காரணர்க்குநல்லக் கனபட்டுகள்கொடுத்து
அம்மைமாரவர்க்கு வதிகப்பட்டுச்சேலைகளும்
செம்மையுடன்கொடுத்துச் செய்வார்விருந்தெனவே
விருந்துகொடுத்து மேலதியநல்சிறப்பாய்
திருந்துமவர்பதிக்குத் திரும்பக்கொண்டேவிடுவார்
இப்படியேமாயவரும் யேற்றசான்றோர்களுட
மைப்புடையவீடோறு மாயன்பதிதோறும
விருந்துமருந்தி வேதாகமம்போலே
பொருந்துமிகவே புரிந்துமிகவாள்ந்து
இன்னமொருபெண்ணேற்றமடந்தையரை
நன்னகரிமெய்க்க நாமணங்கள்செய்யவென்று
கேட்டுப்பரிசமிட்டு கிழர்ந்துமுகூர்த்தமிட்டு
நாட்டுநருளறிய நாரிமின்னார்தானிருக்கும்
ஊரிலவர்செனறுற்ற மங்களம்புரிந்து
பாரிலகமகிழ் பதியில்வந்துதானிருந்தார்
பதிதனிலேவந்து பாவித்தகமகிழ்ந்து
விதியால்பெரிய விருதுக்கொடிகள்கெட்டி
சொத்தாஸ்துவஸ்து தொகையெண்ணமில்லாமல்
வஸ்தாஸ்திரேபரில் மனதுமிகநாடி
நிலங்கரைகள்சுற்றி நிர்ப்பயிர்கள்தன்னிலைவாய்
தனம்புகழும்நாதன் தனதுளகமகிழ்ந்து
பொன்னனைபெண்களுக்குப் பொசுக்கும்பலவஸ்துகளும்
கண்ணனமாயன் கையாரவேகொடுத்து
நடத்திப்பெண்ணரை நல்லவொழுங்காக
இடத்திவிருத்தி யிகனேபுரிகையிலே
எம்பெருமான்நாட்டு யிகனேநிறைவேற்றி
பொன்பதியில்நாளேழும் புரிந்துதிருநாளும்
நடத்தித்திருமால் நாட்டுக்கணக்கும்பார்த்து
தடத்தின்வளியாய் தானிருந்துள்ளாராய்ந்து
வந்தநாள்வந்து வையகத்துச்சோதனைகள்
இந்தநாள்வரைக்கு மிருந்துநாம்பார்த்ததிலே
மிச்சமிந்தசாதியென்று மேலோர்மிகவறிந்து
அச்சமில்லாச்சாதி ஆதிச்சான்றோர்களையும்
விலைபோட்டுஆளடிமை மேவிக்கொள்ளவேணுமென்று
மலையாமலெந்திபெருமாள் மனதிலுற்றுச்சான்றோரை

உயிரறிந்துநல்ல விலைகூறியாளடிமை
மெய்தறிந்துநாதன் முழுதடிமைகொண்டனராம்
கொண்டவடிவமைக்கு லச்சாதியாரேறை
அண்டமறிய ஆகத்தெழிந்தெடுத்து
சேத்துவைத்துக்கொண்டார் சிவஞானபொக்கணத்துள்
காத்துவந்தபெண்களுட கற்பறியவேணுமென்றும்
பெத்துவந்ததீர்ப்பு பிறமானப்படியே
சித்துவொன்றுசெய்ய சிந்தைதனிலுற்றனராம்
உற்றமனதிலுபாயமதுவாக
வஸ்துவகைபேரில் மகானேட்டமாயிருந்து
பொன்னுபணம்காசு பெரியநிலமதிலும்
தன்னுள்நினைவாய்த் தானிருந்தாரம்மானை

விருத்தம்

இப்படியிவர்தான் பாரிலெண்ணியகருமமெல்லாம்
ஒப்புடன்முடித்து தன்னுளெண்ணியதெல்லாந்தோன்ற
வைப்புடன்யாமங்கூறி மனுக்களைதெளிந்துயேத்து
இப்புவிவிட்டுக் குண்டமேகிடமனதிலுற்றார்

விருத்தம்

ஏகிடமனதிலுற்று யிருக்கின்றவுபாயந்தன்னை
வாகிடமிருக்குமாதர் மனைவிகள்மக்கள்சான்றோர்
தாகிடச்சீசன்மார்கள் தங்களுமறியாவண்ணம்
கோகிடக்குண்டஞ்செல்லக் குருவையும்நாட்டமான

விருத்தம்

மனதிலுற்றமாயன் மாதர்கள்மக்களோடும்
தனதுளமகிழ்ந்துக்கூடித் தயவுடனிருக்கும்போது
எனதுடல்காணவண்ண மின்னமுஞ்சிலநாள்பாரில்
தினமுடல்வாடிநீங்கள் தேடுவீரென்னைத்தானே

விருத்தம்

தேடியேயிருக்கும்போது தேவியர்மக்கள்காண
நாடியசொரூபங்கொண்டு நான்வந்துகடுக்கள்கேள்ப்பேன்
பேடிகள் நினைத்திடாமல் பேசினநூல்ப்போல்க்கண்டால்
வாடியேயலையாவண்ணம் வாள்தர்மப்புவியில்வாள்வோம்

விருத்தம்

என்றவர்சிரித்துக்கொண்டு யிருந்ததைதகவனியாமல்
விண்டவர்நழியாய்ப்பேசி விடுத்ததைமக்கள்சான்றோர்
என்றைறக்கும்ஆள்வாரென்று யிருந்தனரவர்களெல்லாம்
குண்டத்தைமனதிலெண்ணிக் குருவையும்நாட்டமானார்

விருத்தம்

குருவேவெனக்குநீரருளிக் குறித்தவாண்டுயிதுவரைக்கும்
ஒருசொல்மொழியேக்குறையாமல் வுகத்துத்தீர்ப்புக்கூறிகலி
கருகயாம்மிகவுரைத்துக் கைக்குளெடுத்தென்மக்களையும்
வருகக்குண்டமனதிலுற்றேறன் வந்தேதக்கூட்டிக்கொடுபோவீர்

நடை

ஆதியேயெந்தன் அப்புவனந்தருரு
சோதியேயெந்தன் சொந்தரூபத்திருவுளமே
இந்நாள்வரைக்கு மிவ்வுலகில்போயிரென்று
அன்னுரைத்த அப்புகாரணரே
இனிநானுமது மிலங்கும்பதியில்லை
முனிமானவர்க்கு முற்றவிடைதருளும்
ஆண்டார்க்கலக்கு வடுத்திருக்குதையாவே
வேண்டாமுலக மேலுலகமேமனையும்
அங்கனையுமையா ஆதிமுனியெந்தனையும்
தங்கயினிமாட்டேன் தரிப்பிடமங்கேயல்லால்
என்றுவாழ்த்தி யிவரிருக்குநாளையிலே
மன்றுதனையாளும் மாயத்திருமாலும்
வான்கொடுத்தானும் வைத்தலக்கும்பார்த்து
யிருக்குநீதர்த்து பாலன்றன்னைவருத்த
வேலுமென்றீசாரும் வேதத்திருமாலும்
கண்ணுமகனேக் கடுவிமானமதில்
ஏற்றிவைத்துமாமுனி வரிருபுறமுஞ்சூழ்ந்துவர
சாத்திரியோர்நானச் சாக்குருவைத்தானனுப்பி
வைகுண்டவீட்டை வாரிரையங்கரிக்க
மெய்க்கொண்டமாதன் விளம்பினர்மேலுலகில்
வானோர்களெல்லாம் வைகுண்டவீட்டையும்
தானமுடனெல்லாஞ் சணமேயலங்கரித்தார்
சாகுருவான சடையமுனியிருவந்து
மெய்க்குருவான வீரவிசையனுக்கு
சொன்னானந்தச் சகமாமுத்தனோ
நல்லதுதானென்று நவின்றவரையும்புகழ்ந்து
சொல்லுவாரமனிக்கு சென்றிங்கேகில்லுமென்று
மாதர்மனைமறந்து வாண்மையமைமறந்து
நாதனுன்மறந்து சடலவுடைமறந்து
நன்மைபலசோபனமு மழிப்பேச்சுமறந்து
செம்மைக்குவாய் செம்மிமூலமடக்கி
மூலமதிலடக்கியுட லூர்த்துறதனிறக்கி
சாமேமடக்கி கண்ணனூர்தானேக்கி
வைக்குள்ளேநமக்கன் தலைமிசைப்பயந்து
பிறகுப்பிணைவ பிணைவிலரிந்துவைதது
டக்கும்படியான நல்மொழிகளுமுரைத்து
உடற்றன்னுநியமம் வெத்துமிகவாருமென்று
சொல்விளக்கவைக் கிருவைத்தேதாடேசேர்த்து
இல்லிமல்பாங்காருமியா மூழித்துவாரேமன
ருமல்லேன் பண்பாமொருப்போலே
சிகணமல்லேன் செய்வுறுவுலமுமாய்
இருந்துமிகவாரு மென்றுநாமன்கொடுத்து
இருந்துபுகழ்மான் சிறந்தேனாராயித்து

ஓரிருபத்தாறு மோங்குமிடபமதில்
சீரியல்பாயுள்ள தெய்தி இருபத்தொன்றில்
பூறுவபச்ச பூசநச்சேத்திரத்திலு
வாறுடையசோம வாரம்பொழுதூர்ந்து
பன்னிரண்டுவேழை பாவிக்கும்நேரமதில்
மெய்கொண்டச்சான்றோர் மேலாசையுள்ளிருத்தி
கைகண்டமாமுனிவர் கட்டாய்மிகச்சூழ
வைகுண்டமேக வழிகொண்டாரம்மானை
வைகுண்டமானோர் வாய்த்தவிமானமேறோடு
வானலோகத்தார் மலர்மாரி தானுந்தூவ
விமானமதிலேறி மேலோகமீதில்வர
தேவாதியெல்லாந் திருப்பாட்டுக்கூறிவர
மூவாதியெல்லா முகமலர்ந்து தானிருக்க
தெய்வரம்பைமாதர்த் திருக்குறவை தான்பாட
மெய்வரம்புநாதன் மெய்குண்டமீதில்வந்தார்

விருத்தம்

வந்தபொழுதேமறையோரும் வானோர்தேவரிஷிமாரும்
நந்தன்பெருமாள்மகனெனவே நாடிவணங்கிமிகப்போற்றி
எந்தன்பிரானேயெங்களுக்கிரங்கி யிமையாள்க்கொண்டவரே
சிந்தரெவருமிகப்போற்றத் திருமால்மகனைக்கண்டாவினரே

விருத்தம்

கண்டேமகனைமிகவாவி கமலமுகத்தோடணைத்து
பண்டேசெகலில்மகாமதுள் பண்பாய்யிருத்தியருளிவைத்து
நன்றோர்மொழியுங்குறையாமல் நடத்திக்கணக்கின்பிறகாரம்
இன்றேயெழுந்திங்கேகிவந்த யிந்மான்கண்றேயென்றுவினரே

நடை

ஆவிமகனையன்போடுறவணைத்து
தாவிமகன்மேல் தயவுமிகக்கூர்ந்து
மாமுனிவர்தங்களையும் வாருங்கோநல்லதென
தாமுனிந்துமகன்மேல்த் தயவாகத்தாயாரும்
அன்புமிகக்கூர்ந் தருமைமகனையாவி
இன்புருகநன்றாய் யிருந்தாள்காண்லச்சுமியும்
சந்தோஷமாக சங்கரநுந்தான்மகிழ்ந்து
வந்தாயோவென்று மகிழ்ந்துகொண்டாரம்மானை
நான்முனிவனும்வேத நல்லதெய்வேந்திரனும்
தாமுமிகமகிழ்ந்து சந்தோஷங்கொண்டனராம்
சரசுபதிமாதும் தாயீசொரியாளும்
பரசுராமன்முதலாய்ப் பண்பாய்மகிழ்ந்திருந்தார்
கைலேயுகமுங் கமண்டலமேளபுவியும்
அகிலமறிய யானோர்வைகுண்டமென
எக்காளபூரிகையுமிடம்பமானமுட்டன்
முக்காலத்துள்ள முனிமார்நளக்கிமிக
ஈரேமுலகும்யிவர் செய்தநல்த்தவம்போல்

ஆரேதுஞ்செய்ய வடங்காதிவர்தவந்தான்
பிறவிநாசக்கலியன் பொல்லாதவையகத்தில்
திறவிதனிலிருந்து செய்துதவமேற்றுவரோ
கண்டால்ப்பவஞ்சூடுங் கலியனுடவையகத்தில்
தண்டாழமான தவம் தாக்கிநிறைவேற்றுவரோ
கலிதுடருமுன்னே கனகதுவராயுகத்தில்
சலியாமல்வாள்ந்த தர்மமுதல்தவத்தோர்
பதறிநடுங்கிப் படாதினிமேலென்றுசொல்லி
குதறிமலைந்துக் கொடுவானமாமுகடும்
கெடுவுங்குகையுங் கீழுமேலுனுளைந்து
முடுகுமுன்னோடி நுழைந்தார்மிகப்பதறி
அப்படியேநல்ல வறீவோர்பதறிமிக
தப்பிவாயிளருஞ் சடையாமலவ்வுகத்தில்
முப்பிறவியுந்தியிலு முதித்துகுதித்தவராய்
அவ்வுகத்துக்குள்ள யாண்டுமூவாறுவரை
செவ்வுமகாஞானத் திறவிவெளிநாடி
பவமறுகாவண்ணம் பார்த்ததவம்புரிந்து
இவமதுவைக்கண்டு செயல்பெற்றுமவ்வுகத்தில்
மாதுக்கிழையோடு மக்கள்பலசொத்தோடும்
சீருமனையோடுஞ் சிறந்தபலஞாயமொடும்
இருந்துயிசுவாழ்ந்தெள்ப்பாவஞ்சூடாமல்
சிறந்துவைகுண்டச் சிவவீடுகாண்பவரார்
பெரிதுபெரிதெனவே பெரியமுனிவோரும
அரிதுஅரிதெனவே யகமகிழ்ந்துகொண்டாடி
கொண்டாடிநாதக் குருவேசரணமென
மன்றாடுங்கைலை வானவரும்போற்றிநிற்க
பூமிதனில்மக்கள் பெரியகுலச்சான்றோர்கள்
சுவாமியுடதேவி சுற்றமடமாதர்களும
அன்பானதொண்டர்களு மசந்துமுகங்கோடி
வன்பானபேர்கள் வசையமாய்மிகநகைக்க
வைகுண்டமேகவழி கொண்டார்நம்மையா
என்றுபுலம்பி எல்லோருந்தான்தேறி
முன்றுமொழிந்த முறைப்படியேநம்மையா
நடந்தார்தானல்லால் ஞாயம்வேறில்லையென்று
மாதத்திருநாளும் வாரமறவாதபடி
நாதன்றனக்கு நாமன்செய்வோமெனவே
கோவிலதுவைத்துக் கூண்டதிருநாள்நடத்தி
சேர்வைசெய்துமக்கள் தினஞ்சூழ்ந்துபோற்றிநிற்க
நாதனுடதேவி நாயகிமாரெல்லோரும்
சீதமணவாளருட சீர்பாதமுண்டெனவே
துயரமதாய்வாடிச் சிவனேசெயமெனவெ
இயல்புதருவீரெனவே யிருந்தார்தவமுறைபோல்
நண்பரெல்லாம்வாடி நாராணாபோற்றியென்று
அன்பர்முறைபோல அகமகிழ்ந்துதானிருந்தார்

பொன்மேனிங்கூட்டைப் பொதிந்துமணிக்கோவில்வைத்து
தென்மேனிச்சான்றோர் திருநாள்நடத்திவந்தார்
இப்படியேமன்போரேந்திழை மாரெல்லோரும்
முப்படியேசொன்ன முறைமெனவேயிங்கிருக்க
அப்போது கைலைக்கானகுருநாரணரும்
மைப்பொலினிய மகனைமிகமுன்னிறுத்தி
கூண்டமணியே கோகுலமேதுர்பகமே
ஆண்டமணியே யருளுமெந்தன்கண்மணியே.
எந்தன்மணியே என்றுதவோவியமே
உந்தனைநான் பெற்றுற்றகலியுகத்தில்
இருக்கிக்கவமேற்று முறையும்நடத்தி
வருக்கிநாகனை மாசோதனைபார்த்து
களித்துக்கொண்டாடிக் கலிநெகிழநல்லோரை
தெளித்தவரவென்று செப்புமறைவரையும்
இருந்துநீயெங்கே யிகனைநடத்தினைகே
பொருந்தும்படியே புகன்றிடுநீநாளறிய
மாயவர்தான்கேள்க்க மனதுமிகமகிழ்ந்து
ஞாயக்குருநாதன் நாடிமிகவுரைப்பார்
உய்யரேக்கோவே அப்புவேநீர்கேளும்
பொய்யர்வாள் கலியில்புரிந்துதவசாக
ஆறுவருசமதிகத்தவம்புரிந்து
வாறுமுன்னீறும் வாரியிலேவந்திருந்து
கேட்டுமகிழ்ந்து கெணித்ததின்மேல்நல்வளங்கள்
தாட்டாண்மையாய் நீருந்தான்மொழிந்தசொல்படியே
நித்தந்திருநாளும் கேரிமையுமாருள்ளதையும்
புத்திரரையுஞ்சேர்த்துப் பெண்களையும்மாலையிட்டு
மாலையிட்டப்பெண்களோடு வாழ்ந்துமகவீன்று
கோலமணிமாதருக்கு கோடிபலனஸ் அவரை
தேடிக்கொடுத்துத் தேசக்கலிமாடழிய
ஆடக்களித்து யாமமிகக்கூறி
நல்லோரையெல்லாம் நாடித்தெளித்துமிக
வல்லோரையுந்தன் வைகுண்டமதில்வந்தேன்
ஆஸ்திபலதும் ஆயிழைமார்மக்களையும்
கோத்திரமுங்கண்டேன் கூறிவைத்தலக்கில்வந்தேன்
வந்தசிறப்போடங் கிருந்தேதனைக்கால்
இந்தவைகுண்டமி யான்வந்துகாண்பேறு
என்றுகுருமகனை றிசைந்தவுடன்நாரணரும்
அன்றுவைச்சிருந்த வானமுனிதங்களையும்
இருபேரையும்வருத்தி யாமுரைத்தவார்த்தையில்
ஒருமொழிகாணுகிடுவு முனிதங்களுண்டோசொல்
தவறாமல்சொல்வீர் தப்பிதங்களுண்டானால்
பதறாமல்சொல்வீர் பரம்பெரியமாமுனியே
யெனக்கறியாவண்ணமியார்செய்வார்மாமுனியே
உனக்கறியநீங்கள் சாற்றுவீருள்ளபடி

என்றுமகாக்குருவுமியம்பமுனிமாரும்
நின்றுவாய்புதைத்து நெடியோன்பதம்பூண்டு

விருத்தம்

கண்ணுக்குள்மணியாய்நின்றக் காரணக்குருவேஞான
விண்ணுக்குளெவர்க்குஞான வெளிச்சுடரானமூர்த்தி
ஒண்ணுக்குளொன்றாய் நின்றுலகிரேளனைத்துங்காக்கும்
அண்ணுக்குங்கடந்தசோதி வறிவுளமறியாதேதோ

விருத்தம்

ஏறும்புகடையானைமுதல்பேதாபேதமெண்பத்து
நாங்குயிர்களுக்கு மேகமாக
உறும்பொருளாய்நின்றகுருநீயே யல்லாருலகதிலே
யாருளதோவுடையமர்லே
செறும்பொருளாயுமதுமகனங்கேவந்து செய்தவசுமுறை
யதிலுநடத்தைதமேலும்
கறும்பொருள்போலெங்கள் மனமறியவொன்றுந்
தப்பிதங்களில்லையெனதாள்ந்துநின்றார்

விருத்தம்

தப்பிதங்களில்லையையாதவத்துக்காதிதண்மைமிகு
குணமுடையதர்மசீலன்
உப்பரிக்கைமீதிருந்துவரசேயாளஉன்புவிக்கு
வாசையல்லாலுலகிலில்லை
மைப்பிதுக்கமானதொருகுழலாரோடும்மக்களொடு
வாழ்வோடும்வாழ்ந்தவுள்ளம்
நர்பிதுக்கமானகுருநாட்டமல்லால்நானிலத்துள்
ளாசையில்லைநாங்கள் கண்டோம்

விருத்தம்

நாங்கள்மிகக்கண்டோமிவருள்ளம்போலேநாடுபதினாலதிலுள்
தவத்தோர் பார்த்தால்
காண்கரிதுவெங்களுடகருணைநாதாகலியுகத்தை
வேரறுத்தக்கடவுள்பாதம்
ஓங்கவவரடியிணையைப்பணிந்தென்றெமுழியங்கள்
செய்தவரோடுகந்துநிர்க்க
பாங்கருளிச்செய்துமிகவாண்டுகொள்ளும்பரமகுருநாத
னென பணிந்துநின்றார்

விருத்தம்

நின்றவரைமுகம்நோக்கி மாயன்றானும்இவர்களுள்ள
மெதல்லாமெனக்குள்ளாச்சு
இன்றிவரைநீங்கள்கொண்டு நமதுகுண்டத்தேகபதி
வாசதெருவெல்லாங்காட்டி

கொண்டுவந்தத்தயிலமதில் மூழ்கிப்பின்னுங்கொடு
வரவேணுமெனக்கூறவானோர்
டுண்டுபலமேளமொடுதாளத்தோடுவுற்றாதமீதினில்
வைத்தும்பர்சென்றார்

விருத்தம்

சென்றவர்கள்நாரணனின்குண்டமானசிறப்பையெல்லாம்
காட்டிமிகத்தெளிந்தசந்த
தன்றமலர்வாள்தங்கப்பதத்தில்மூள்கிதண்டிகையின்
மீதிருத்திதயவாய்வானோர்
கொண்டவர்கள்மாயனுடபதத்திலிட்டுக்குலாவியந்த
வானோர்கள்கும்பிட்டேற்ற
மன்றலணிமாயவருமீசர்தானும் வைகுண்டமாமுனி
யெனவேவழங்கினரே

விருத்தம்

வளங்கியந்தமாயவரும் வானோர்தம்மைவாவழைத்து
நீங்கள்மகாமேர்பில்ச்சென்று
இழங்குருமானுனகுருவைந்தாசரின்றுபுவி
யீரேழுமடக்கியாள
பழங்குருநூல்முறைறபோலே பாரில்த்தோன்றிப்
பதியாளவந்தரெனபதிப்பீரென்று
வளங்கமிகமறையோர்கள்மேர்விர்சென்றுமாயனுரை
தவறாமல்வகுத்தார்தானே

விருத்தம்

வ்குத்திடவேமுன்னுரைத்தமுறைறபோலுள்ளமகாபெரிய
கிரீடமுமவர்க்குச்சூடி
பகுத்துடையசெங்கோலும் பரமநார்தன்பரம்பெரிய
முத்திரியும் பலன்களாவும்
தொகுத்திடப்பொன்னீராள்துயிலுமீந்து துதிச்சிங்காதன
மீதில்தூக்கிவைத்து
மகுத்துவமாய்வாளுமெனவானோர்போற்றமறையவரும்
யீசுரரும் வரமேயீந்தார்

விருத்தம்

ஈந்திடச்சிங்காசனத்திருந்தவரேதோசொல்வார்
கூர்ந்திடயெனக்குவிங்கே குணமெலாம்நலமதாக
சார்ந்திடயருளிச்செய்தீர் தர்பராவொப்பில்லானே
ஓர்ந்திடவெனக்குவங்கே யுகந்தவருண்டேமுன்னம்

விருத்தம்

ஆடையும்பொன்னுங்காசுமன்னமும்பாலுமுந்தன்
நீடியவுதவியாலே நினக்கவரிதுநாள்மட்டும்

வாடிமேமுகங்கோணாமல் மனத்தயவதிறலீந்து
தேடியமக்கள் தன்னைச் சிந்தையில்நினைக்குதென்றார்

விருத்தம்

அய்யரேயிதுநாள்மட்டுமவரெனக்களித்தசெல்வம்
வையமேதரியாதெந்தன் வாயினாலுரைக்கப்போமோ
மெய்யெல்லாமவர்கள்பேரில் மேனியுமுருகுதைய்யா
செய்யனேயவர்களெந்தன் திருப்பாதம்வணங்கச்செய்வாய்

விருத்தம்

திருப்பாதம்வணங்கச்செய்வாயென்றெனத்தெளிந்தஞானி
கருவதிலுதித்தசான்றோர் சாதியில்க்கௌவையாகி
குருபதம்வணக்கஞ்செய்து கூறியமொழியைக்கேட்டு
மருவணிதுளசிபூணும்மாயனும்மகிழ்ந்துசொல்வார்

விருத்தம்

கைகண்டமணியேயெந்தன்காரணக்குலமேகன்றே
வைகுண்டமணியேயுந்தன்மனதலைஇருக்கவேண்டாம்
மெய்கொண்டம்ணிகளான மேன்மக்கள்ச்சான்றோரெல்லாம்
பொய்கண்டகலியைவிட்டுன் பொர்பதம்பெறுவார்கண்டீர்

விருத்தம்

கலியையெரிக்கத்தவசிருந்தகருத்தையறிந்துவுன்னிடத்தில்
வலியவந்துன்பூதம்வணங்கிமனதுக்கேர்க்கநின்றவரும்
பொலியவுனக்கழுதுடனேபுடவைபலதுமீந்தவரும்
ஒலியத்தானதர்மமதுமுவந்தேயளித்தோர்மிகவாழ்வார்

விருத்தம்

இரக்கும்படிபோலவடிவெடுத்துயிருந்துகலியைமுடிக்கவங்கே
உரைக்கும்மொழியைக்கேட்டு எனக்குதவிபுரிந்தவுத்தமரும்
கரைக்கும்படியேயமுதளித்துக்கைக்குள்ளேவல்மபுரிந்தவரும்
மறைக்குங்குருவேயென்றெணைவந்தேசேர்வாருன்பாதம்

விருத்தம்

உடுக்கத்துணிகளில்லாமலுலகமதிலேயெழியவனாய்
முடுக்கமதுவேயில்லாமல்முடியும்விரித்துப்பேயனைப்போல்
கடுக்கக்கலியையெரிப்பதற்கு கவுள்ந்துசிறைநீயங்கிருக்க
அடுக்கவுனக்குவுதவிசெய்தாரவரேயுனக்குமகவாமே

விருத்தம்

ஆமேயவர்களல்லாமலதிகமகனேயிருந்து
ஓமேயறியாவண்ணமுந்தாலுலகிலுன்னைப்பளித்தவர்கள்
சாமேதீயில்த்தான்கிடந்துசடமேநரகுக்குள்ளாகி
வேமேயுந்தன்மேலாணைவிறுமாபத்ததிறணையிதே

நடை

ஆணைமகனே அசையாதகண்மணியே
சாணாரென்குலங்கள் தப்பாமலுன்னுடைய
தர்மபதிராச்சியத்தில் தான்வாழ்வார்சத்தியமாய்
வர்மமுனைப்பேசி வம்புசெய்தநீசகுலம்
அழுந்தநரகமுதுள்ளாகுவார் சத்தியமாய்
குழிந்தமனதுடைய கோவேயென்கண்மணியே
மலங்காமல்வாழ்ந்திருநீ வையகத்திலெப்போதும்
பிலங்களதுபார்க்க பொய்வேசமொன்றனுப்பி
மகனேநீசொன்ன மானூல்முறைப்படியே
உலகமீதில்யார்தானுந்திருக்கிறாரெனவே
பார்த்துவரச்செய்வோர் சொரூபம்படைத்துனனுப்புகிறேன்
ஏற்றந்தச்சாதிக்கின்னமீராறுகலை
அடுக்கும்வரைநீ யவர்பேரில்நாட்டமதாய்
முடுக்கமுடனிந்தவுற்றசிங்காசனத்தில்
தவம்போலிருந்து தானொருகுண்டமதில்
ஆழ்நீவரசு ஆண்மைக்குறையாமல்
நாளும்வரைமகிழ்ந்து நலமாகவாள்ந்திருநீ
அனுப்புகின்றபொய்ச்சொரூபமாங்காரமற்றவுடன்
மனுப்புகழநாமன் வையகத்தின்மீதிறங்கி
நிச்சித்துவைத்த நினைவானதின்பிறகே
வச்சிருந்தகல்ப்பதியில் வாழலாங்கண்மணியே
என்றுரைத்தமாசலியில் யேற்றபொய்வேசமதாய்
குன்றுதனிலிருந்துக் கோலமதுதானனுப்ப
வந்தங்குதித்ததுகாண் வையகத்திலம்மானை
நந்தனென்பான் காரணன்கோண்ராமனென்பான்
மூந்தச்சுவாமிகள்க்கு முன்னுதித்துவந்தனென்பான்
செந்தழல்போலநின்றிடுவான் சிட்டுப்போலேபறப்பான்
கண்டகண்டவர்ப்புதங்கள் கண்ணாரக்காட்டிடுவான்
பண்டையுள்ளவைப்பைப் பாரறியக்காட்டிடுவான்
தீர்க்கமுடன்அற்புதங்கள் திடமொளவேகாட்டிடுவான்
மார்க்கம்பலதணிவான் வைகுண்டமென்றிடுவான்
கடலில்கடப்பேனென்பான் கனலிலிருப்பேனென்பான்
மடவாரையெல்லாம் மாலையிடுவேனென்பான்
செப்பிடுவான்பூமியிலே தேசநருள்மலங்க
சூச்சமனேகஞ் சொல்லவொண்ணாவித்தையதாம்
தூச்சமறியாமல் தொல்புவியெல்லாமயங்கும்
இந்தப்படியா யிருக்கின்றநாளையிலே
மூந்தவைகுண்டமுடி சூடிவாழ்ந்திருப்பாய்
சிவனுமையாளுஞ் செய்யதிருமாலும்
தவமுமுனிவர்களுஞ் சாகபதிமாதுமையும்
நான்முகனும்வேத நல்மறையோரும்
தாமுனிந்தாகமத்தின் றன்மையதின்படியே
தொடுத்தகலியென்று தோன்றிநுதித்தவரை

கொடுத்தகணக்கின்படியே கொல்லக்கலிதனையும்
வானமதுகுளவி மண்பூமியம்மியென
தானமதுநிரப்பாய்த் தன்னாலிருந்திடவும்
உண்டானதெல்லாமுடன் கரிந்துநீறிடவும்
அண்டருலகவ்வரை யசைந்துமுழித்திடவும்
மாயவருமீசர் வைகுண்டமாமணியும்
தாய்தமர்களான சத்தித்திருவுடனே
வைகுண்டரான மகனைநடுநிறுத்தி
மெய்குண்டத்தேவர் மிகுகூடலமாகிவர
முத்திச்செங்கோலு முழிப்புச்சங்கும்பிரம்பும்
பத்தியுள்ளநாரணர்தான் பாலனுடைகொடுத்து
ஆகாயமாகவவர்கள் மிகவந்துநிற்க
வாகாகநாரணரும் மகனைமுகம்நோக்கி
நல்லமகனே நாடுந்தவத்தோனே
செல்லமகனே திருபெற்றகண்மணியே
உந்தனக்கேற்ற வுற்றமனிதர்களும்
சந்தமுள்ளதேவியருந் தனதுகந்தபுற்பூடும்
ஆகின்றபச்சிகளும் மானமிருகமதும்
பாகுசெறிவிருச்சம் பண்பானநற்பதியும்
யாதாகமுன்னே யாமிட்டநூற்படியே
நீதான்வருகவென நினைத்துவிடுயென்மகனே
நினைத்தார்வைகுண்டம் நினைவின்படிபோலே
மனத்தயவுகூர்ந்து மலமலெனநல்மனுவர்
முழித்தார்வைகுண்டர் மொய்குழலார்மக்களுமே
களித்தேயிருந்தக் கருத்தின்படியாலே
பச்சிமிருகம் பால்மிருகச்செந்துகளும்
அச்சுதற்கேற்ற வாதிவிருச்சமதும்
புதுப்பூமிபுதுநிலவு புதுவானம்புதுவாயு
குருபூமியான கூண்டதங்கபொன்பதியும்
பொன்பதியும்நற்தெருவும் பெரியதெற்பவாவிகளும்
அன்பதியநன்மனுவு மனுகூலமாயுதித்தார்
எம்பெருமான்முன்னே யாமமுரைத்தபடி
வம்பரெல்லாமாண்டார் மனதுகந்தோர்தான்முளித்தார்
தர்மயுகத்துக்குத் தானேற்றவஸ்துகளும்
நன்மையுடனுமன் நாடிக்குதித்ததுண்டால்
நல்லயுகதர்மம் நாடிமிகக்குதித்தார்
வல்லவைகுண்டமதாய் வந்தவுடன்வாருமென்ற
சொல்லியயச்சிருந்த சுற்றமிருகமதும்
நல்லமனுவோரும் நற்பறவையானதுவும்
விருச்சமதுவுமேலுகந்தவஸ்துகளும்
வாருமெனச்சொன்ன வகையில்லாமல்முழித்தார்
ஆருமிகவொவ்வாதரியோன்மிகமகிழ்ந்து
ஆகாத்ததெல்லா மாழிதனைவருத்தி
வாகாயரித்து வன்னரகில்தள்ளிமிக

சுற்றயுகந்தைச்சுற்றி வருத்துமென்று
கற்றைறக்கங்கையாள்க்குக் கரியோன்விடைகொடுத்தார்
விடைவேண்டிவாரி விமலன்மொழிந்தபடி
கடல்வாரிசெய்து கமலயுகஞ்சுத்திபண்ணி
கர்த்தனரிநாரணரைக் கடலுமிகத்தெண்டணிட்டு
முத்தனரிநாதன் முன்னுரைத்தநீசனென
குரோணியவனுயிரைக் கொண்டுவந்துமுன்னிறுத்தி
சுரோணிதப்பாவி சொல்லடாவுத்தரங்கள்
ஏழுபிறவியிதுவரையுஞ் செய்துவுன்னை
வாளுநீயென்று வரமருளிப்பார்த்தேனே
இக்கலியில்நானு மிரப்பனைப்போல்வந்திருந்து
மிக்கவுலகறிய வெறிபேயையுமெரித்து
தண்ணீரால்மானிடர்க்கு சகலநோய்தான்தீர்த்து
புண்ணியமாய்த்தர்மம் புரிந்துமிகவருளி
காணிக்கைக்கூலி காவடியுமிறுத்தி
ஆணிக்கமாக வம்புவியில்யாவரையும்
ஒருதலத்தில்விட்டுற்ற புத்திசொன்னேனே
இருபுத்தியால்நீயு மென்னைப்பிடித்தடித்தாய்
கட்டியென்னைப்பேயனெனக் கடுவிலங்கில்வைத்தாயே
அட்டிசெய்யவில்லையல்லோ வாண்டியாய்நானிருந்து
பண்டாரமாகப் பார்மீதிலன்பரிடம்
நன்றாகப்பிச்சை நான்வேண்டியேகுடித்து
தர்மமாயல்லோ சனங்களுக்குநோய்தீர்த்தேன்
வர்மமாயென்னை வந்தடிக்கஞாயமுண்டோ
அல்லாமல்முன்னே யானிடத்திலாணையிட்டு
எல்லாமினிமேலிராச்சியத்திலியாதொருவர்
பண்டாரமென்று பாரறியவந்தவரை
அண்டேனவரை யட்டிமிகச்செய்யேனென்று
ஆண்டிகளைநானு மட்டியதுசெய்ததுண்டால்
கூண்டிறந்துபோவோங் கொடிப்பிதிர்களானதெல்லாம்
சேனைதழமிழந்து செல்வமதுதானிழந்து
ஏனைக்குழலோடென் கிளைகளெல்லோரும்
தன்னாலிறந்து சமுநரகம்போயிடுவோம்
முன்னாள்நீசொல்லி மொழிந்தாணையின்படியே
பண்டாரந்தன்னைப் பகைத்கவிடாதபடி
அண்டாமல்நீயு மடித்ததினல்ஞாயமென்ன
சொல்லடாநீதான் சொன்னமுறைப்படியே
கல்லடாநீதான் கவிழ்ந்துநிக்கும்ஞாயமென்ன
பாவியேநீயேழ்பிறவி பார்மீதிற்றோன்றிமதில்
ஆயிமறிய அனுப்போலும்நன்மையது
செய்ததுண்டோசொல்லு செவியுனக்குக்கேள்க்கலையோ
மெய்தெரியபிப்பிறவி மிகுயிரப்பன்போல்ஞானும்
எழியகுலத்திலிகாபானே தஞ்சமென்று
சுழிமுனையைமுத்திச் சோமனருளுள்ளிருத்தி

உடுக்கத்துணிகளத்து வுண்ணவுண்தானுமற்று
படுக்கயிடமுமற்றுப் ப்ரமாற்றமாயிருந்து
சாதிபதினெட்டதுக்கும் யாமமுறைப்படியே
நீதியுடன்தண்ணீராய் சொன்பலங்கள்நீக்கிவைத்தேதன்
நீயறிந்துங்கண்டும் நீணிலத்தோர்தாமறிய
வாயிலிடும்வெற்றிலைக்கு மனுவோர்தடவுகின்ற
சுண்ணும்பாறலும தொட்டுநீதந்தாயோ
பாவிநீயென்னைப் பருசுகெடத்தானடித்து
மேவினனிட்டிருந்த வெற்றிச்சுரைகூடதையும்
உடைத்துத்தகர்த்தாயே வுற்றகந்தைதக்காவியையும்
மடத்தனமாய்நீயும் வலித்துக்கிழித்தாயே
தோளிலிடும்பொக்கணத்தைதத் தூக்கியென்னைக்கீழ்ப்போட்டு
தூளிபடவுதைத்து துண்டுதுண்டாய்க்கிறினையே
அய்யோநீசெய்த வனியாயஞ்சொல்லவெணுரல்
வையமீரேழும் வளிந்துநிரம்பிடுமே
பத்தினியார்பெற்றப் பாலதியச்சான்றோர்கள்
மெத்தவவர்நன்றாய் விளங்கிருக்கணுஞ்சிவனே
ஆடையில்லாமல் லமர்ந்திருக்கையிலே
நாடகிகமான நல்லபட்டுசோமாளம்
தங்கச்சரிகை தலைப்பாக்குல்லாவுகளும்
மங்களமாயென்னை வந்தெடுத்துதான்போர்த்தி,
பாலும்பழமும் பருந்தேனுஞ்சர்க்கரையும்
மேலும்நவனிதியும் வேண்டுமபலகாரம்
அன்னங்காய் சொர்னமண்பாகமகொண்டுவந்து
பொன்னப்பகாரீணரே பெற்றவரேதின்னுமென்று
வாயிலெடுத்திட்டு வளமாகயெந்தனக்கு
சாமத்தலையணையும் சருகத்தொட்டில்மெத்தைகளும்
பாதங்கீள்கொள்ளாமல்ப் பாலதியச்சான்றோர்கள்
ஈதலிரக்கமுடன் யெடுத்தென்னைதோளில்வைத்து
போற்றிமகிழ்ந்து பூமெத்தைமேலிருத்தி
ஏத்திப்பலகாலுமென் சொல்மிகக்கேட்டு
தாங்கிமிகயிருந்தச் சான்றோர்களின்பெருமை
நாங்களுரைக்க நாடுமிகத்தாங்காதே
என்னஎன்னப்பவுசு யெனக்கவர்கள்தானீந்து
பொன்னம்பலமீதில் புகள்ந்துமிகவாழ்வாரே
பாவிநீயென்னைபருசுகெடதானடித்து
ஏவிநீவிட்ட யேவலாளிப்போதெங்கே
ஆனுவங்களெங்கே வுன்னுணைபடைகளெங்கே
பூணுகின்றதங்கப் பொன்னுபரணமெங்கே
வித்தாரமெங்கேநீ வீத்திருக்கும்மேடையெங்கே
சுத்தர்கிழைகளெங்கே தோகைமயிலார்களெங்கே
குதிரைத்தளங்களெங்கே கோட்டையெங்கேவாயிலெங்கே
சதிராயணிவகுத்த தாண்டும்படைகளெங்கே
தேரெங்கேவுந்தன் சிங்காசனங்களெங்கே

ஊரெங்கேயுந்தனுழுங்குதளச்சேனைகளெங்கே
மாடமெங்கேகூடமெங்கே மணிமேடையாரமெங்கே
தோடமெங்கேவுந்தன் றோழரெங்கேசூரரெங்கே
ஆயுதங்களெங்கே யம்புதடிக்காரரெங்கே
வாயுரங்களெங்கே வாயில்காப்போர்களெங்கே
துட்டமெங்கேபட்டியெங்கே துரத்தனங்களானதெங்கே
பட்டமகங்காரமெங்கே பருங்கிள்ளாக்காரரெங்கே
மாடமெங்கேநீதான் வளர்த்தமிருகமெங்கே
ஆட்டெங்கேயுந்தனுடாம்மைமாதரெங்கே
வேடிக்கையெங்கே விசித்தகணக்குமெங்கே
ஓடிவுலாவுமுற்ற சாறட்டுமெங்கே
வண்டியெங்கேவுந்தன வாள்வெங்கேமாச்சியெங்கே
சண்டிப்பமலேவுன் றட்டாண்மையெங்கேசொல்
இத்தனையுந்தோற்றிப் போநரகமதில்
சத்திறந்துபோக வுன்றலையில்விதியாச்சே
உன்விதியால்நீயு முயிரழிந்தாயல்லாது
என்னதிகாரத்தால் இயாக்கினைகள்செய்கிறேனோ
உன்றால்நீமாள வூளிவிதியானதல்லால்
என்றாலுனைநான் யிடுக்கமதுசெய்கிறேனோ
தன்றாலேதான்கெட்டுத் தான்போவாரென்றபடி
உன்றாலேநீயு முயிரளிந்தாய்மாபாவி
ஒருபிறவிதன்னிலுயிரழிக்கக்கூடாதோ
கருவருளும்நாதன் கர்பினைக்கோரதனவே
பிறவியேழுன்னைப் பெரும்புவியிலேபடைத்து
திறவிப்பொருளோன் சிந்தைதமிகவறிய
உகத்துக்குகங்களுத்தமனாய் நான்பிறந்து
மகத்துவமாயுந்தன் மனைதமிகப்பார்த்தேன்
என்போலேதர்ம மீதிலிரக்கமுடன்
நன்பேதுங்கண்டிலனே நன்றிகெட்டமாபாவி
ஏழுபிறவிலுமென்பேருசொல்வோரை
கோழுசெய்தவரைக் கோட்டிகொண்டேயடித்து
சிறைக்காவல்தன்னில்த் திட்டவிலங்கில்வைத்து
அறையானதுகொடுத்து வட்டிமிகசெய்தல்லால்
இரக்கமுடன்றயவில்லைமே யுன்னிடத்தில்
அரக்கர்குடும்ப மானதிலுன்னுடைய
மனதிரக்கமாகாது மாபாவிநீகேழு
முன்னாள்க்குறோணியுதித்துவந்தமூன்றுகமும்
தன்றாலேநீபிறந்து தாண்டியமதுகழித்து
பின்னாள்பிறந்தாய் பெருங்கிறேதாயுகத்தில்
அன்றாளில்நீங்களண்ணனென்று தம்பியென்றும்
பிறந்தீர்படைகள் பெருத்தசனக்கூட்டமுடன்
சிறந்தமதினும்பெரிய செல்வமாய்யாண்டிருந்தீர்
ஆண்டிருக்கும்போது மாங்காரந்தான்மீறி
தாண்டிப்பதமறந்துத் தானவரையும்பிடித்து

தெய்வமடவார்களையுஞ் சிறையில்மிகப்போட்டு
மெய்வரம்புவிட்டு மேலோகத்தார்களெல்லாம்
ஊழியங்கள்கொள்ள வுனக்குமனதாகி
நாழில்வரைநாட்டி மிகவட்டிசெய்து
வம்புசெய்துநீயும் வானலோகம்வரையும்
அம்புவியங்கு முன்னனியாயமேமீறி
ஈரேழுலகும் மிராமாராமாவென்னவே
பாரேழும்நித்தியம் பண்பாய்முறையிட
முறையமிட்ட சத்தமுடையபரனறிந்து
இறையவரும்நம்மிடத்தி லிந்தவனியாயமதை
மாற்றிவைக்கவென்று மலரோனையனுப்ப
பார்த்துன்னைநானும் பழையவரமும்தோற்று
ஆயுதத்தாலம்பாலைந்துமுகத்தாலும்
மாயும்படியே வகையில்லையென்றுசொல்லி
ஆறுமுகமாயான புகழ்சத்திதனை
வீறுடனேநல்ல வேலாயுதமெனவே
எடுத்தேசொரூபமியானுனக்குநல்லபுத்தி
விடுத்துவுரைக்க மிகுதூதனையனுப்பி
சொல்லியுங்கேளாமல்ச் சூதப்படைக்கூட்டி
கொல்லுவேனென்று கூடும்படையோடு
சண்டைக்குநீயுஞ்சமைந்து வந்தாமென்றோடு
கண்டேயுனைநான் கருணைபோலபுத்திசொன்னேன்
தேவர்களைவிட்டு தெய்வமடவாரைவிட்டு
மூவர்களைநெஞ்சில்வைத்து யுகமாளுவென்றேனே
அப்போதுநீயு மாக்கிரமந்தன்னாலே
இப்போதுபேயாண்டி யார்கேள்ப்பாருன்பேச்சி
பிச்சைக்காருவுன் சொல்பேருலகமாளுகின்ற
செஞ்சொல்வளர்ராசனுக்கு செல்லாதுபோடாவென்றாய்
யென்றோடேபோர்க்கு வெதிராகவந்தாயென்றால்
உன்றோடுவுள்ள வுற்றத்திறத்தாலே
சண்டைக்குவாடா தாட்டாண்மைபார்ப்போமென்றாய்
அப்போதுவேலாறுத்தேறுனுன்னுயிரை
முப்போதுவுள்ள முழுக்கிளைகள்அத்தனையும்
சேரக்குலமறுத்துன் சேனையெல்லாமழித்து
கோட்டையழித்துன் குவலயத்தைத்தானழித்து
சத்திவேலாலே சத்தியென்னைச்சங்கரித்தாள்
புத்திகெட்டவாண்டி போதுமோயென்னைவெல்ல
என்றுநீயப்பாவி யேற்றயுகமன்றழித்து
அன்றேயுனையு மதிலோர்பிறவிசெய்தேன்
அன்னாளுள்பேர்தான் அதிகவிரணியனும்
துன்னாயமாய்நீ தோன்றிமுடுக்கமதாய்
அரிநமாவென்று வச்சரத்தையுமாற்றி
மதியாமலுன்பேரை வளங்கினுமவ்வுலகில்
ஆதிசிவமறிந்த -சுருவுனையனுக்க

மாதிரிபோலென்னை வருத்தாரேயுன்மகவாய்
மகவாயுனக்கு மாயவுருவெடுத்து
உகமேளறிய வுதித்துவளருங்கயில்
பள்ளியிலேசென்று படிக்கின்றநாளியிலே
தெள்ளிமையாயுன்பேர் செப்பென்றான்வாத்தியானும்
உடனேநான்மாறி யொருவசுரன்பேரதையும்
தடமேலுரைத்தால் தருணமதுகாத்திடுமோ
படைத்தகுருவின் பருநாமஞ்சொன்னதுண்டால்
சடத்தைதமிக்காக்கத் தருணம்உதவிசெய்வார்
ஆனதார்ப்பெரிய வரிநமாவல்லாது
மானமில்லாப்பாவி மாபாவிசூரனுட
ஏற்றப்பேரான யிரணியநமாவெனவே
சாற்றக்கூடாது தாணித்துவேசொன்னவுடன்
வாள்த்தியுன்னோடுவந்து வளங்கூறிடவே
பார்த்தென்னைநீயும் பர்க்கடித்துச்சொல்லெனவே
இறுக்கிநெருக்க யிசையாமல்நான்மாறி
உறுக்கிப்பெரியோன் வுற்றவரியோன்பேரை
சொல்லவேநீயுஞ் சொன்னஅரியெங்கேயென்றாய்
வல்லபொருளான மாயவரியோனும்
எங்கெங்குமாகி யெவ்வுயிர்க்குந்தானாகி
அங்கங்குமாகி யழிவுக்களவாகி
நிரந்தரமாயெங்கும் நின்றந்தசொரூபந்தாய்
பரப்பரமாய்நிற்பார் பாரவரியென்றேனே
கோணிநீவாடி குருவென்றவுன்னரிதான்
தூணிலுமுண்டோ சொல்லென்றனைப்பார்த்து
கேள்க்கநானுண்டெனவே கிறங்காமல்சொல்லிடவே
வாள்கணையால்நீயும் வரயினடைதன்னில்நிற்கும்
தூண்பேரில்வெட்டச் சிங்கமாய்நான்தோன்றி
வீண்கொண்டபாவியுனை வய்யோனடைவதிலே
இடைநடையில்வைத்து யெந்தன்னுருக்கத்தால்
குடல்நெழியக்கீறிக் கொன்னேநானுன்னையுமே
உயிர்நெகிழுமுன்னே உன்னுடையகண்முன்னின்று
செய்தயுத்தத்திறஞ் சொன்னவப்பொழுது
உன்னாலேயென்னை வுயிரழிக்கக்கூடாது
முன்னாலுன்னகத்தி லுற்றமலேபத்தநனை
சேர்த்துப்பதித்து செய்யநகமாக்கி
கீத்துநீசெய்தாய் கெறுவிதமாயல்லாது
ஏலாதுஉன்னாலே யென்றியம்பவுடன்நான்மாறி
மேலாகப்பின்னும் விளம்பினன்தநீகேளு
பத்துமலையைப் பாரநகமாயப்பதித்து
இத்தலத்திலிப்போதிறக்க வைத்தாயல்லாது
உன்னாலெனைமாய்க்க வுற்றவகையில்லையென்று
சொன்னாயேநீயுஞ் சொன்னவுடன்நான்மாறி
பத்திமலையை பருந்தலையாயுனக்கு

எத்திசைகள்மெய்க்க லேற்றதியகைத்திறமும்
கைத்திறமும்வில்த்திறமும் கணையாளிவாள்திறமும்
புத்திரின்கூடப் பிறப்போர்கள்தன்திறமும்
மெத்தப்பவுசும் வேண்டும்படையோடே
கொற்றவனுயுன்னைக் குவலயத்திலேயருளி
உன்னிடுக்கத்தாலே வொருராமபாணமதால்
கொன்றுனையன்றின்று கூறுமொழிகேழ்ப்பேனுன்
என்றுவுனக்கிருந்த வுயிருமளித்து
அன்றுதிறேதாயுகமுமழித்துமிக
பின்னுந்திரேதா பெரும்புவியிலுந்தனையும்
பத்துத்தலையாய் பாவிநீராவணனாய்
மற்றுநிகரொவ்வா வாய்த்ததம்பிமாரோடும்
சேனைபடையுடனே செல்வரோடுநீபிறந்து
வான்லோகம்வரைக்கும் மாபாவியாண்டனையே
ஆண்டிருந்துமல்லா தாதிசீதாலக்ஷிமியை
மாண்டிறந்துபோங்காலமாபாவிநீயவழை
கொண்டுபோயுன்னுடைய கோட்டையதுள்வைத்தாயே
மன்றுதனில்நானும் மாதைவிடுவென்றுசொல்லி
வேண்டுகின்றபுத்தி விதவிதமாய்ச்சொன்னேனே
கூண்டுந்தன்தம்பி கும்பன்விபீசணனும்
நாராயணருடைய நல்லசீதாலெக்ஷிமியை
ஆராலேகூடுமருஞ் சிறையில்வைத்திருக்க
பாவிநீவம்பால் பழிக்காகிப்போகாதே
கூவுமொழிசீதைதனை கோட்டைவிட்டனுப்பிவிடு
மாதைவிடாதே வம்புசெய்தாயானக்கால்
பாதகாவுன்னுடைய பவுசெல்லாம்போகுமென
சொன்னதம்பிமாரை சொல்லால்மிகத்துரத்தி
சின்னஞ்சிறுவன் தெசதானர்பாலனுட
பெண்ணவளைச்சீதையெனும் போகச்சொல்லென்றனையே
அல்லாதேதபோனாலலக்கழிவாகுமென
எல்லாம்பெரிதா யென்னோடுரைத்தாயே
பார்த்தார்ச்சிறுவன் பைங்கிளியாள்தன்புருஷன்
காத்தானதில் பறக்குங்கடியதுரும்பெனக்கு
அவனுடையபெண்ணோ மாதிசீதால்ச்சுமியாம்
இவனுடையபோரால் ராச்சியங்கள்கேடாமாம்
ஆமோடாநீங்களரக்கர்குலமோடா
போமோடாயென்தன் பூமுகத்தில்நில்லாதே
என்றேயெனையு மிளப்ப மிகப்பேசி
அன்றவர்பேச்சை யல்லவென்றுதட்டிவிட்டால்
அப்போதவர்கள் அன்பாகயென்னுடைய
செப்போடொத்தத் திறமெல்லாஞ்சொல்லிடவே
சின்னக்குழந்தையென்றுஞ் சீதையொரும்பெண்ணெனவே
மன்னவனேயுன்மனதில் வைத்துமேகொள்ளாதே
நாட்டுக்குடைய நாரணரேராமரென்றுங்

கூட்டுக்கிளியான கோதைசீதாலக்சுமியாள்
முட்டாளாயுந்தன் முழுநீசப்புத்தியினால்
அட்டாளபூமி யடக்கியரசாளுகின்ற
பகுத்தைதக்குலையாதே பனிக்கிரையாய்ப்போகாதே
தொகுத்தவுரைபோலச் சீதைதனைவிட்டுவிடு
என்றுரைத்தார்பின்னு மிருவருள்தம்பியர்கள்
அன்றுவுனக்குவதிகோபமுண்டாகி
என்னுடையகண்முன் னிப்போதுநீங்கள்நின்றால்
உன்னிருபேர்தங்களுற்ற சிரசதையும்
அறுத்துவதைப்பேனது வறிந்துநீங்களெல்லாம்
மறுத்துவுறையாமல் வனமதிலேபோயிருங்கோ
என்றாயேநீயும் இருவரையுமப்போது
அன்றேயவர்க ளயர்ந்துமிகயிருக்க
அப்போதெனதுடைய வாதிசீதாலக்ஷிமியை
நற்போடுயர்ந்த நாயகியைநானன்றே
அனுமன்றனையுமங்கே யனுப்பிவைத்தேன்
தனுவானவாழி குழல்க்குத்தாணிந்து
உன்கோட்டைவாயிலுடனேநான்வந்துநின்று
என்கூட்டிலான ஏற்றசீதாலச்சுமியை
விடுநீயென்றேனே வீணாய்நீகேளாமல்
படுவதறியாமல் படையெடுத்தீர்யென்றோடு
அப்போதுன்தம்பி ஆனவிபீஷணனும்
நற்போடுவெனைவந்து மிகநல்வியவன்
பொல்லாதபாவியுடன் பிறந்ததோஷங்களித்து
யெல்லாம்பொறுத்து யெனையாண்டுகொள்ளுமென்றார்
நல்லதுதானென்று நானவனையும்ஏற்று
பொல்லாதபாவியென் பெண்ணைவிடுஎன்றேனே
பாவிநீகேளாமல் படையெடுத்துவந்தனையே
தாவிநீவிட்ட சாரங்களெல்லாம்தடுத்து
யென்கையினாலே எடுத்துவொருபாணம்
சங்கையுடனெயித்து தலையறுத்தேனுந்தனையும்
உன்றாலுன்பண்டகளுயிரழிந்துமாண்டபின்பு
முன்றாழுரைத்தமொழி கேட்டேனுன்றோடு
அப்போதுபாவியதற் கேதுநீயுரைத்தாய்
இப்போதுஎன்னுடைய ஏத்ததம்பிதானொருதன்
உன்னோடேசேர்ந்து உயர்ப்பிலங்கள்தானுரைத்து
சொன்னதினாலென்னுடைய சிரசறுத்தாயல்லாது
ஏலுமோராமா இளப்பம்பேசாதேயென்றார்
கட்டிப்பயலே சுணைவந்துதில்லையெனவே
மட்டிப்பயலே மாறிப்பின்னேதுரைத்தேன்
உந்தனுடதம்பி ஒருவன்மிகவந்தெனக்கு
சிந்தையுற்றுஉன்பிலங்கள் தெரியப்படுத்தியல்லோ
கொன்றாய்நீயென்று கூறினாய்யின்னமுனை
துவாரகைதன்னில் தோன்றவுனையருளி

பவுருயுனக்கு பக்கத்துணையாக
ஒருநூறுபோராய் யுலகில்மிகநீதோன்றி
எதுவோர்க்கும் நான்பொதுவாய்யிருந்துயுனைவதைத்து
இன்றுரைத்துபேச்சு யானன்றுகேள்ப்பேனே
அன்றுவுன்னுடைய அன்னசுத்தம்வொறுத்து
உன்னுயிரையுமளித்து உற்றயுகமுமழித்து
என்னுடையலட்சுமியை யான்கூட்டிஎன்னுள்வைத்து
உற்றதிரேயுதாயுகமளித்துந்தனையும்
சுத்தத்துவாரகையுந் தொல்புவியும்தோணவைத்து
சுற்றத்துவருத்தொல்புவியில் தோணவைத்தேன்
பிறந்தாய்நீபேருலகில் பிறப்போருநூறுங்கூட
அறந்தான்பெரிய ஐவர்களும்அங்குதித்தார்
அப்படியேநீபிறந்து ஆகுகின்றவேளையிலே
முப்படியேநானும் யுகத்தில்க்கோபாலனென
பாலனெனஉதித்து பாண்டவர்கள்கூடியிருந்து
ஸ்தூலமென்றும்வீமனுக்கு சொல்லியுனைசங்கரித்தேன்
சங்கரித்துன்னை சகுனியிழுக்கையிலே
பங்கமாய்முன்னுரைத்த பாங்கும்மிகக்கேட்டேன்
அப்போதுநீயும் அகமகிழ்ந்துகொள்ளாமல்
இப்போதுவீமனெனைக் கொன்றல்லாது
ஏலுமோபோடாயிடயாளனையுரைத்தாய்
மேலுமந்தயுகத்தில் மேட்டிமையாயுன்னையிப்போ
தன்றல்பிறக்கவைத்து தன்றலழிவையென்று
சொன்னேனுன்னை சொன்னமொழிப்படியே
உண்றலக்குதித்து உற்றகலியனென
இன்றள்வரைக்குநீ யிருந்தாயேபார்மீதில்
பார்மீதில்நானும் பரதேசிபோலிருந்து
பேரேதும்யில்லாமல் பொறுதியுடனிருக்க
கர்மவயதுனக்குக் காலம்சரியாகி
வர்வந்துமுடி மாண்டாயேதன்றலே
முன்னுனக்குத்தந்த முடியுமென்சக்கரமும்
மன்னுகந்தநல்லவரங்கள்மிகதத்துவமும்
எல்லாருமிப்போ தென்முன்னெடுத்துவைத்து
பொல்லாதவனேநரகம்புக்கிடுநீஎன்றனராம்
மாறியுரைக்கவாய்மொழிகளில்லாமல்
உள்றிக்கலியனுடக் கடித்துவைத்தனனே
எல்லாவரமும்வைத்து எந்தன்முடியும்வைத்து
பொல்லாப்புவானதொரு பொய்களவும்முருட்டும்
தந்திரமும்ஞால தத்துவங்களானதுவும்
அந்திரமான அன்னிதவஞ்சனையும்
மாய்கைபலது வழக்கோரமானதுவும்
சாய்கைபலதும் சர்வபொல்லாப்பானதெல்லாம்
என்றேடுகூட யானுமதுகூட
வன்நரகில்புக்கிடுவோ மென்றுவரம்வைத்தனனே

கலக்கவனுடைய மாய்மாலமாய்கையதும்
பொய்க்கலியனுயிரும் பொதிந்துதிரையாக
ஆயிரத்திருநூறணியாய்ப்பவஞ்சூடி
தீயிறத்தமான திருநருனரகில்
சுத்தியெடுத்துத் தூக்கிக்கொண்டேயவனை
இத்தனைநாள்நம்மை இரச்சித்தராசனென்று
மாய்கையெல்லாம்கூடி வளர்ந்தவனைத்தூக்கி
பேயலகைவாழும் புழுக்குழிக்குள்ளாக்கி
மூக்கிநிமிர்ந்தது முதக்காமல்மாய்கையெல்லாம்
தாக்கியிருத்த தடதடன்சேடனது
நிரந்தரைதமுடி நிரத்தியதையம்மானை
பார்த்தந்தசேடன் பாரைநிரப்பாக்கியபின்
உற்றவைகுண்டரொருசங்குஊதினரே
வெற்றியாய்சங்கு விரைவாகஊதியபின்
எற்றிசையீரேழுமிந்தசங்கோசைமிக
நல்லோர்களான நாடும்மனுவோரும்
நல்பூமிநல்விருக்ஷம் நல்மிருகம்ஊர்வனமும்
கற்புநெறியான கடியபலவகையும்
கீழ்மேல்நடுவும்கிரணமண்டபம்மூன்றில்
காழ்மேல்பரம்பெரிய நல்லவகையானதெல்லாம்
தர்மநன்னீதம் தவசுநிலைமைமுதல்
நன்மைபலதும் நாடிமிகவந்ததுவாம்
எல்லாம்வைகுண்டரிட்ட சத்தமிதில்வந்து
நல்லாகக்கண்டு நாரணரைத்தான்போற்றி
வைகுண்டசாமி வரவேணும்என்றுசொல்லி
மெய்கொண்டஞானம் மிக்கதவம்புரிங்கால்
வந்துசத்தமொன்றில் வரவழைப்போமென்றுசொன்ன
செந்துயிர்காக்குஞ் சிவகுண்டம்வந்தீரே
தர்மவைகுண்டசாமி வந்தாரென்றுசொல்லி
நன்மைபலசெந்தும் நன்னஇகப்பச்சிகளும்
பசுமைக்குணமான பலமிருகஊர்வனமும்
கசுவிரக்மான கற்றாவின்றன்னினமும்
நல்வேதம்நீதம் நாடுகின்றசாஸ்திரமும்
சில்வாடைப்பிச்சு செந்தாமரைமலரும்
தங்கநவரத்தினமும் சமுத்திரத்துநல்வகையும்
கங்கைக்கண்ணுளுங் கமலப்பூவாணிமுதல்
தர்மமதும்போற்றி சுவாமியெனத்தொழுமாம்
முழித்தமனுக்களுக்கு மொய்குழலார்தங்களுக்கும்
களித்தேவிளிஞானக் கண்ணுமிகவருளி
நல்லமனுக்களுக்கு நாலுவாமுங்கொடுத்து
செல்லமனுக்கள் தேகமதுபொன்னிறமாய்
கல்வித்தமிழ்ஞானக் கலைக்கியானமும்கொடுத்து
நல்விச்சிறப்பாய் நாடியவர்க்கீந்து
தெய்வமடவார் இருக்கன்னியேழ்வரையும்

வையமழந்தோர் வரவழைத்தேழ்பேருக்கும்
பெற்றமதலையெல்லாம் பிறமாணமாய்த்தெரிந்து
தத்திரமாயேழ்பேர்க்குந் தாந்தரமாய்தாணீந்து
வைகைதனிலிறந்த மக்கள்வரைநாரணரும்
தையலவ்ரேழ்பேருக்குந் தான்தெரிந்தீந்தனரே
ஏழ்பேருக்குந்தலை யிதமாகத்தான்கொடுத்து
வாழுங்கோபுவியில் வயதுபதிநாறெனவே
எல்லோருநன்ருயிருந்துவொருயினமாய்
நல்லோராய்ச்சாகாமல் நீடூழிகாலமெல்லாம்
ஆண்பெண்ணுடனே யதிகபலபாக்கியமும்
காணக்காணநீங்கள் களைவையற்றுவாழுமென்ருர்
பச்சிப்பறவை பலசீவஜெந்துக்கள்க்கும்
அச்சமில்லாப்புவியில் யல்லலவ்விண்யில்லாமல்
பெத்துப்பெருகி பிதுரெல்லாம்வோரினமபோல்
ஒத்துமிகக்கூடி ஒருதலத்துநீர்குடித்து
வாழ்ந்திருங்கோதர்ம வையகத்திலென்றனராம்
சார்ந்திருங்கோவென்று தாமன்விடைகொடுத்தார்
நல்லபூவாசநளிர் விருக்ஷமானதுக்கும்
அல்லலகற்றி யமர்ந்துமிகவாழுமென்று
தில்லையாடும்பெருமாள் சொன்னாதுகளுக்கு
புல்பூடுங்கூடிப் பொருந்திமிகவாழுமென்று
நல்பூடதர்க்கு நவின்றுவிடைகொடுத்தார்
அசையாமல்வர்னமது நேர்நிலாவுடனே
பிசகாறதில்லாமல் பொழுதுமிகசாயாமல்
நோராகவாழுமென்று நெடியோன்விடைகொடுத்தார்
வருணனுக்குநல்ல வாக்குமிகக்கொடுத்து
தருணமதுபார்த்து சாற்றியிருவென்றுரைத்தார்
வாயுவதுக்கு மறைபோலவழங்கெனவே
விசும்புகழ்நாதன் விடைகொடுத்தாரம்மானை
நீதமதுமூன்றும் நிலையாகநில்லுமென்று
சீதக்குருநாதன் சொன்னாதுகளுக்கு
மானுவ்தர்ம வரம்புதவருமல்
நானுபதேசம் நவின்றதுபோல்நில்லுமென்ருர்
பூமகள்வானிப் பொருந்திக்கலைபுரிந்து
சீர்முகத்தர்மச் சீமையிலும்வாழ்ந்து
மகிழ்ந்திருமென்று மாயனருள்புரிந்தார்
குவிந்துமலர்மகளுங் கொண்டாடிக்கொண்டிருந்தார்
கங்கைமுதலாய் கனகரத்திறுதிகள்க்கும்
சங்கையுடனீங்கள் தன்றல்துலங்கிமிக
வாழுவீரென்று வரமும்மிகக்கொடுத்து
என்னென்னபாக்கியங்கள் யெல்லாமிகத்தளித்து
பொன்னம்பலம்போல பொருந்திமிகவாழுமென்று
நல்லவ்கையவர்க்கும் நாடிமிகக்கொடுத்தார்
வல்லபுவிக்கு வாழ்வரமுங்கொடுத்து

நல்லவைகுண்டர் நாராயணமகர்க்கு
வல்லமகர்க்கு வாய்த்தமுடியுங்கொடுத்து
செல்லக்கலியாணஞ் செய்யவேணுமெனவே
வைகுண்டரான வாய்த்ததிருநாதனுக்கு
மெய்குண்டமான விமலக்குருநாதனுக்கு
நாதக்குருவான நாராயணமணிக்கு
சீதமங்கைமார்கள் தேவிதெய்வக்கன்னியரை
கன்னியரைநன்றாய்க் கலியாணமும்புரிந்து
மன்னரவர்க்கு மாலையுடன்புரிந்து
பொன்னம்பலர்க்கும் பெரியபொருளதுக்கும்
தன்னம்பெரியசதா பிரமனவர்க்கும்
நாதன்மார்க்கெல்லாம் நல்லமணம்புரிந்து
மாதவர்களார்க்கும் வாய்த்ததேவாதிகள்க்கும்
ஆதவனதரி கேசவன்றனக்கும்
இப்படிமேமங்கள மெல்லார்க்கும்கொண்டாடி
செப்பமுள்ளநாயகிமார் சேர்ந்தங்கொருப்போலே
சரசுபதிமாதும் தண்டாமுச்சுந்தரியும்
விரசுகுழலுமையும் வீரமகாலச்சுமியும்
வாய்த்தபகவதியும் வாழுகின்றபார்பதியும்
ஏற்றபுகழ்தெய்வ யிழங்குளல்மாரேழ்பேரும்
வள்ளித்தெய்வானை வாயீசொரியுடனே
தெள்ளிமையாயுள்ள தேவிபராபரையும்

விருத்தம்

இந்தமாதர்கள்வந்தபோதிலே சிந்தையாகியதெய்வமாதர்கள்
மந்தநாங்களுமின்றபாலரை முற்றுமாகவம்போலவளர்ந்திடும்
சிந்தர்மாமணிதெய்வநாயகி தேவிகாளிவராகிசுந்தரி
இந்தமங்களமானதிர்க்கண்டிலோ மெங்கள்நாயக
என்றவர்போற்றினர்

விருத்தம்

போற்றுமாதரைப்பார்த்து நாதனும்போதமாமென
வாமிதுகூறுவார்
சாற்றுமாதரேதையலேழ்வரே சந்தமாகியந்திரியானவள்
பார்த்துன்மைந்தரைக்காத்திடாமலேபாலரான்று
யிரிப்பிடியானதால்
ஏற்றுக்களைவயாய் வீற்றிருக்கிறுளெண்ணந்தீர்த்தவள்
தன்னையழைக்கிறேன்

நடை

பெண்ணேகேளுந்தன் பிள்ளேரண்டுதன்னுயிரை
கள்ளக்கவுலாய கலிக்காலச்சோழன்வன்
சொன்னதினுல்க்காளி கூண்டமனமிடைந்து
என்னிடத்திலேவந் திவ்வழமையுரைத்து
பாலர்முளித்து பரம்பெரியவைகுண்டரும்

சிலமுள்ள தாமச் சிமையராசாளுகையில்
வருவேன துமட்டும் வடவாமுகமதிலே
குருவே துணையெனவே குவிந்திருப்போனென்றிருந்தாள்
இப்போதவள்க்கு யிங்குவரஞாயமுண்டு
நர்போடுவொத்த நல்லபாக்காழியைத்தான்
அழைக்கிறேனென்றுவாதி நினைக்கலுற்றூர்
பிழைக்கிறேனென்று பெரியகுலமாகாளி
உடன்வந்துநாரணரை யுவந்துபதங்குவித்து
திடன்வந்துநின்று சிவனையடிதொழுது
பாலரெல்லாமுந்தன் பாதம்வந்துசேர்ந்தாரென்று
மாலவரேயெந்தன் மனதுமகிழ்ந்துதையா
நாரணரும்மெச்சி நன்றாயகமகிழ்ந்து
காரணமதாகக் கழிகூர்ந்தினிதாக
வைகுண்டநாதருக்குங் வாள்மடந்தைமாதருக்கும்
கைகண்டநல்லக் கலியாணமும்முகித்து
மணிவைகுண்டருக்கு மாமகுடஞ்சூட்டி
அணியாபரணமனேக மெடுத்துஅணிந்து
தங்கக்குல்லாவுந் தளிருநிறச்சட்டையிட்டு
பெண்கள்குரவையிட பெரும்பொன்மாலையுஞ்சூடி
பன்னீர்பரிமளமும் பவளநிறம்பொட்டுமிட்டு
நன்னீர்களாடி நாரணக்கண்மணிக்கு
ஆலத்திவன்னியாகாயத்திவெட்டமும்
கோலமடவார்கள் குளித்துநீராடி
பட்டுபணிகள்ப் பரிமணங்குகளும்புரிந்து
கட்டுமுறையாய் கன்னியர்கடாவெயிலாய்
தேவர்கள்மூவர்களுந் திசைவென்றமன்னர்களும்
மூவர்களும்நல்ல முனித்தபலஜெந்துகளும்
நான்முகனும் வேதநல்லமறையோரும்
வானுகமுமண்ணுகமுமன்றுகமுமொன்றெனவே
எல்லோருநன்றாய் யகமகிழ்ச்சையுடன்
நல்லோர்களெல்லாம் நாரணஞர்பொன்கதிக்குள்
தெருப்பவுசுவந்து சிங்காரபொர்ப்பதிக்குள்
மருப்புகளும்சிங்காசனத்தில் மகிழ்ந்திருக்க
போவோமெனவே பெரியவைகுண்டரையும்
கோவேங்கிரிபோல் குருவைரதமீதேற்றி
தேவாதியெல்லாஞ் சிவ சிவாபோற்றியென
சிவசெந்தெல்லாம் திருப்பாட்டுக்கூறிவர
தெய்வமடவர்த் திருக்குரவைப்பாடிவர
மெய்வதிந்தச்சான்றோர் மொகுமோகெனவேகூடி
கட்டியங்கள்கூறிக் கனகப்பொடியுந்தூவி
கெட்டிகெட்டியென்று கீர்த்தனங்கள்பாடிவர
வாரிசங்கூத வாயுமலர்தூவ
நாரிவருணன் நல்லந்திமலர்தூவ
இந்தக்கொலுவா யெழுந்துரதமீதேறி

ஒன்று மகிழச் சிவமுந் திருமாலும்
கூடாரமதில் கூண்டங்கினிதிருந்து
இலட்டர் மகிழ நல்லத்தெருப்புவீசு
நேராகவந்து நெடியோன்பதித்தனிலே
சேர்ப்பதிமுடுகச் செகலதுவே தானீங்கி
அமைத்தலைக்கொண்டிருந்த வளகுபதிகோபுரமும்
சமைந்துயிருந்த தங்கமணிமண்டபமும்.
மண்டபமும்மேடைகளுக் மணிவீதிபொர்த்தெருவும்
குண்டரைக்கண்டந்தக் கொடிமரங்களுந்தோன்ற
வாரியாதுநீங்கிவைத்த லககில் பாயிடவும்
சாதி வதன்டர் சாபம்நிறைவேறி
சாபம்நிறைவேறி தாணய்கிளீர்ந்தெதல்லாம்
யாமமுன றயாயங்கே குதித்திடுமாம்
என்னென் யாமம் எல்லாமேயிட்டதெல்லாம்
பொன்பதிதான் புரந்தாளவந்ததினால்
நிறைவேறினானும் நிச்சித்தமெய்வரம்போல்
குறைபாடுகள்வாராமல் குணமாக்வாளுமென்றார்
இப்படியேயாமமெல்லாம்நிறைவேறி
முப்பத்திரண்டறத்தால் முகித்தசிங்காசனத்தில்
செப்பொத்தமாணக்கர் சேவிக்கயிருபுறமும்
ஒப்பற்றபொர்பதிக்குளுயர்ந்த சிங்காசனத்தில்
மறுமன்யரெதிரி வையகத்திலில்லாமல்
விறுமஞ்ஞாம் வெற்றிவைகுண்டருமே
சிங்காசனமிருந்து தெய்வச்செங்கோல்நடத்தி
பொயகாரமான புவிதர்மராச்சியத்தில்
ஆளுவாரென்ற வாகமநூல்ப்படியே
ஏழுபெண்மக்களிர மொன்றாய்த்தான்கூடி
வாளவேணுமெனவே வாயத்தசிங்காசனத்தில்
ஆளவைண்டர் வைரிருந்தார்பொன்மாதே

விருத்தம்

ஆதிமாம்வைந்தராசருள்ச் செங்கோலேந்தித்தர்மச்
சோதியிநெறிபோல ரத்தினந்துலங்கியமுடியுஞ்சூடி
நீதிபோலதர்மஞாய நெறிபுரிந்தரசேயாமு
சாதியாமுயர்ந்தச்சான்றோர் தன்னையேவ்ருத்திச்சொல்வார்

விருத்தம்

மக்களேளீங்களெல்லாம் வாள்பொன்னம்பதியில்ச்சென்று
முக்கியமானதர்மமுயா நிலமதிலேதன்னால்
கக்கியபொன்கள்சொர்ணம் கைமனங்குளிரவன்னம்
பொக்கிசம்நிறையவைத்துப் புகளவுண்டினிதாய்வாள்வீர்

விருத்தம்

வாளுவீர்தாழ்வில்லாமல் மக்களுங்கிளைகள்கொஞ்சி
நாளுமேமகிழ்ச்சைகூர்ந்து நலமுடன்வாளும்போது

நீளுமேயெனது செங்கோல் நீதியும்நெறிபோல்வந்து
ஆளுமேயுங்கள் தன்னை யன்புடனலையாவண்ணம்

விருத்தம்

வண்ணமாய்நீதமூன்றும் வாம்பனுவிலகிடாமல்
தண்ணமாயிருந்துவாளுஞ் சனங்களேபதறவேண்டாம்
திண்ணமாய்த்தன்னந்தன்னால்ச் சிறப்புடனிருந்துவாள்வீர்
எண்ணமேதொன்றுமில்லை யெழிமையும இல்லைக்கண்டீர்

விருத்தம்

உன்னிலும்பெரியோனாக வொருவனுமுயர்த்திக்கண்டால்
தன்னிலும்பெரியோனாக தனைத்தினிதிருந்துவாள்வீர்
என்னிலும்பெரியோனீங்கள் யானுங்கள்தனிலுமேலான்
பொன்னிலவூற்றுவீசும் பொலைபதியுகத்துவாள்வே

விருத்தம்

ஆணுடன்பெண்ணும்பெற்று வதிகமாய்ச்செல்வமாகி
தானுடனினைவுமுற்று தர்மமுமநெறியுங்கற்று
வேணுமநீளகாலமெல்லாம் மெல்லியருடனே வாழ்ந்து
பூணுதல்கமலநாதன் பொற்பதம்பெற்றுவாள்வீர்

நடை

மனுக்களவர்க்கு வாய்ந்தசட்டமீதருளி
தனுக்கள்பெரிய சந்தமிறுகங்கள்கு
ஒன்றாகக்கூடி ஒக்கஒருயினம்போல்
நன்றாகவெசர்தலத்தில் நண்ணீர்தடித்துமிக
வாள்ந்திருந்தோமென்று வைந்தர்மிகச்சட்டமிட்டார்
மெச்சிக்குழைந்து மேவிவொருவினம்போல்
பச்சிபறவைகள்க்கும் பார்ங்காகச்சட்டமிட்டு
ஊர்வனங்கள்கு வொருப்போலேச்சட்டமிட்டு
பாருகத்தில்நீங்கள் பசுமையாய்வாளுமென்று
தேவதெய்வார்க்குந் தெய்வஸ்திரிமார்க்கும்
மூவர்முனிவருக்கும் முக்கோடிதேவருக்கும்
யெல்லோர்க்கும்நன்றாய் யியல்பாகச்சட்டமிட்டு
வல்லோர்களான வைகுண்டமாமணியும்
மங்காததேவரம்பை மாதரிருபுறமும்
சிங்காரமாகத்தேன்போல்மனை வீச
சான்றோர்களேவல் தனதுள்ளமகிழ்ந்து
நின்றேவல்செய்து நித்தம்பணிமாற
கட்டியங்கள்கூறி கவரிமிகவீச
கெட்டியாய்ச்சான்றோர்க் கிருபையுடன்மகிழ்ந்து
பாவித்துநித்தம் பரமவைகுண்டரையும்
சேவித்துப்போற்றி தினமேவல்செய்திடவே

கன்னியர்களோடுங் காதலாய்தானின்ற
மன்னதிமச்சான்றோர் மக்கள்மனைவியோடும்
ஆதிவைகுண்ட மானந்தகாரணரும்
நீதியாய்தர்ம நேரோர்மணிதூக்கி
சிங்காசனத்தில் சிவசூரியக்குடைக்குள்
சங்காதரனர் சற்பினைமைஉள்ளிருத்தி
ஆண்டபரனு மாதிமுறைப்படியே
சான்றோர்கள்போற்ற தர்மபதியாண்டிருந்தார்

விருத்தம்

ஆண்டிருந்தாசுசெய்ய வணிவரைபோலேநீதம்
பூண்டிருந்துஇனிது வாழ்ப்பூதலமனுவோர்வாழ
கூண்டிருந்தருளாச்செல்வம் குணமுடன்மகிழ்ச்சைசகூர்ந்து
வேண்டிருஞ்செல்வமோங்க வேற்றுமையில்லாவாள்ந்தார்

விருத்தம்

தர்மமாய்ப்புவியிலுள்ள சனங்களும்பலதுசெந்தும்
பொற்மைமாய்வாளும்போது புரந்தரவானோர்விண்ணோர்
நன்மையாய்யவருங்கூட நாடொன்றாய்மேவிவாள
வர்மமேயில்லாவண்ணம் வைந்தரும்புவிமையர்ண்டார்

கலி விருத்தம்

ஆண்டனர்புவிதிரி மூன்றினுமோரின்ங்
கூண்டனர்க்குலமெனக் குலாவிவைந்தரும்
தாண்டியவோர்குடை தாங்குருவலயம்
மூன்றிலும்ஓர்மொழி முகுந்தன்வாள்ந்தனர்

விருத்தம்

பருதியுமதியெனப் பவந்துசேவனர்
கருதியுமுகமனுங் கமழ்ந்துகைமலர்
அருதியும்மல்ர் மகிழணிந்துபூவினர்
சுருதியுமுறை வழித்தூக்கிவாள்ந்தனர்

விருத்தம்

பொன்முகவருளது பொருமியாவியே
அன்முகமதிலும் மமர்ந்துபுகுந்திரு
இன்முகமதிலு மிருந்துலாவியே
பொன்முகவைந்தர் புயத்தில்வாள்ந்தனர்

விருத்தம்

முதமுகவானவர் மூன்றெனவொன்றினர்
சதயிதகாலெனச் சமைந்துவாள்ந்தனர்
உதவெனமன்மு மூனந்துலாவியே
நிதநீவளர்வரு நிரந்துவாள்ந்தனர்

விருத்தம்

சீரணியுமையாள்பங்கா சிவமகிழ்ந்தினி தாய்வாழ
நாரணர்திதுவும்வாழ நான்முகவேதன்வாழ
வாரணவானலோக மாதவரெல்லாம்வாழ
காரணக்கன்னியான கமலப்பூமாதுவாழ

விருத்தம்

பூமாதுவானபகவதியும்வாழ பொன்மாதுசரசுவதியும்
புரிந்துவாழ
நாமாதுவானபூமடந்தைவாழ நாகரீகதேவியர்கள்நலமாய்வாழ
பொர்மாதுவானமாகாளிவாழ பொன்னுலகத்தர்மபதி
பொருந்திவாழ
சீர்மாதுகொண்டபுகழ்ச்சான்றோர்வாழ சிவவைந்த
ராசருமேசிறந்துவாழ

விருத்தம்

மாதுதிருலெக்ஷிமியாள் மகிழ்ந்துபோற்றிமாயனுடமுகம்
நோக்கிமாதுதானும்
தீதகலும்நாயகமே சிறந்தமாலே தேசமதிலுமக்
கெதிரிதோன்றிற்றென்று
ஈதுமுடன்றோன்றியங்கே யுகங்கடோறும்நிந்தனைகள்
படுவதெனக்கறியச்சொல்வீர்
ஈதுரைக்கமாயவள்க்கு மாயன்றானுமித்தனையுமெடுத்
துரைக்கயிசைவாள்பின்னும்

விருத்தம்

பின்னுமந்தநாதனுடவடிவைப் போற்றிப்பொன்மானே
யெனதுடையசீதேனேகண்ணே
இன்றுவரைக்குறேணியுயிர்தன்னை நீருமேழுபிறவி
செய்தவனையிசைந்துபார்த்தும்
நன்னியுள்ளுப்போலினிவுகாணுவண்ணம்ஞாயநடுக்
கேட்டவனைத் தன்னுல்க்கொன்னீர்
பின்னுமக்கெதிரியின்னமுண்டோ சொல்லும்பெரிய
குருவெனவணிந்துப்போற்றினாரே

விருத்தம்

போற்றுமடமயிலானச் சீதைப்பெண்ணின்பொன்முகம்
பார்த்தருள்புரிந்துபுகல்வாராயன்
ஏற்றுமெனக்கெதிரிவந்தவாறேதென்றுதானுரைத்தாய்
நீயறியத்தன்மையாக
கீர்த்தியுடனானுரைத்தேன் காண்டமாககிழிமொளியே
யினியெனக்குக்கீழுமேலும்
வேற்றுமொருயெதிரியுண்டோவென்று கேட்டமெல்லியிழ
மாமயிலனைழுமாதேகேண்மோ

விருத்தம்

மாதேநீகேளுயிரேழுபூமி மண்ணிலுவராழிவளர்வரைசூழ்தான
சீதேநீவ்வரையெனதுள்ளறியமாயச்செகவீரசாலமா
தெனக்குமுண்டு
பூதேயெனவெகுண்டுவர முகங்கள்தோறும்பிறக்கவே
நான்கேள்க்கபுரிந்தாரீசர்
வாதேயென்பகைஞர் வழிக்குலங்கள்மாய்த்து
மறுமஞ்ஞெதிரியில்லாவண்ணம்வாழ்வேன்

விருத்தம்

இனிமேலுமெனக்கெதிரியில்லைமானேயெமது
மக்களோடுகூடியிருந்துவாள்வோம்
மனுவோருமுனிவோரும் வானலோகமாலோருமென
வாக்குவளியேவாள்வார்
இனிவேறுபயமேதாயெனக்குயாதே யிலங்குபதி
மீதிலுனையிடமேவைத்து
பணிமாறுகாலம்வரைவரசேயாள்வோம்பதறமனம்
வேண்டாமெனபகர்ந்தாராயன்

விருத்தம்

மாயனுரைமனமதிலேமாது கேட்டுமகிழ்ந்து
முகமலர்ந்துவாய்புதைத்துநின்று
தீயனெனுமாகொடியவரக்கர் சேர்க்கைதிரையறுக்க
நீர்துணிந்துசென்றகாளே
நாயனெறிகாணுதவடிமைபோல நடுங்கிமனநிடைந்துவெகு
ஆயருமைநாயடியாளின்று கண்டேயகமகிழ்ந்தே [நாளே
னெனதுதுயரிளந்திட்டேனே

விருத்தம்

இகழ்ந்திட்டேனென்ற மடமயிலேமானேயென்றுவி
யிருகையால்மாதையாவி
புகழ்ந்திட்டமானமணிமேடை புக்கிபூவணைய
யிடமிருத்திபுகழ்ந்துவாழ
மகிழ்ந்திட்டமானமுறைநீதிவாழமறைவாழ
யிறையவரும்மகிழ்ந்துவாழ
உகந்திட்டமானமுறை நூல்போல்வாழவும்பர்
சிவமாதுலகமனுவோர்வாழ

விருத்தம்

மாதவள்க்குத்தானுரைத்த காண்டந்தன்னைவையகத்து
மனுவோர்களறியமாயன்
தாதணியும்தாமரையூர்பதியில்மேவித்தழைத்திருக்கும்
சான்றோரில்தர்மவாளன்

நாதனருள்மறவாதராமகிஷ்ணனுடனகமகிழ்ந்துபெற
நலமாய்வந்த
சீதகரிக்கோபாலன் மனதுள்ளோதுசெப்பனவே
நாதனுரைதொகுத்தவரே

விருத்தம்

வாருனகதைவகுத்தநாதன்வாழ வகுத்தெழுதிப்படித்த
குலமனுவோர்வாழ
வீருளதெய்வசத்திமடவார்வாழ வீரமுகலச்சுமியும்விரைந்து
நாராயணரருளால் படித்தோர்கேட்டோர்நல்லவுரை [வாழ
மிகதெளிந்துநவின்றுகற்றோர்
ஆருறும்பெற்றவர்களகமேகூர்ந்துமன்றாழிகால
மிருந்தாள்வார்திண்ணம்

அய்யா துணை

வாளி விருத்தம்

திண்ணமிந்தவகிலத்திரட்டம்மானை தன்னைத்திடமுடனே
மனவிருப்பமாகக்கேட்டோர்
யெண்ணமிந்தவினைதீர்ந்து ஞானமானயிறையவரின்
பாதாரத்துயல்பெற்று
வண்ணமிந்தர்மபதி வாள்வும்பெற்றுமக்களுடன்
இழைபெருகிமகிழ்ச்சையாக
கிண்ணமிந்தப்பார்மீதில்ச் சாகாவண்ணம்நீடுழிகால
மிருந்தாள்வரர்திண்ணம்

முற்றிற்று



கலைமகள் பிரஸ்
வடக்கன்குளம்